ALAGAPPA COLLEGE

KARAIKUDI

II Prize Awarded to H. Venkataraman

of III B. A. Class in the Sanskrit Essay

Competition.

1. 12. 1954

Principal

சுந்தர ராமாயணம்

12-00

ஆசிரியர்:

S. சுந்தரேச சாஸ்திரிகள்,

நேமத்தாம்பட்டி,

(செட்டிநாடு வழி.)

Printed at the
Sri Janardana Printing Works, Limited,
Town High School Road,
Kumbakonam.

1938.

உ

॥ श्रीः ॥

॥ श्री सुन्दररामायणे उपोद्घातः ॥

अर्थानप्यमितान्महाऽर्घसहितानन्तर्दधानात्परं
विद्वद्विष्णुसहायतोऽधिगमितान्सौलभ्यमप्यन्वहम् ।
वल्मीकप्रभवोक्तरामचरितक्षीरार्णवाद्विस्तृतात्
संक्षिप्तानुदधाहमश्रमजनप्रीत्यै महत्यै भृशं ॥ ॥ १ ॥

முகவுரை.

பண்டிதர்களாகிற விஷ்ணுவின் சகாயத்தால் சுலபமும் விலை மிகுதியுமான அளவற்ற பொருள்களை தினந்தோறும் மிகவும் உள்ளே தரித்த வால்மீகி ராமாயணமாகிற திருப்பாற்கடலிலிருந்து சிரமமடையாது ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தின் பொருட்டு பொருள்களைச் சுருக்கி எடுத்தேன்.

सौख्यं कुर्वदपीदमाततमिति स्वीकर्तुमप्यक्षमाः
गन्तुं सत्सरणौ स्वजन्मसफलं कर्तुं द्रुतं दुष्पथात् ।
मुक्ता आदृतमत्प्रबंधमणयः पाठाच्च तस्य श्रुतेः
सर्वे प्राणिन ईड्यरामशरणास्तुष्यन्त्वितीशं भजे ॥ ॥२॥

வால்மீகி ராமாயணம் சுகத்தைக் கொடுப்பினும் விரிவாயிருப்பதால் அதைக்கைக்கொள்ள முடியாமலும் நல்வழியில் நடக்காமலும் தன் ஜன்மாவின் பயனைப்பெற முடியாத எல்லா ஜீவராசிகளும் சீக்கிரம் துர்மார்க்கத்திலிருந்து விலகி என்நூலை ஆதரித்து அதைப் படிப்பதாலும் கேட்பதாலும் துதிக்கத் தகுந்த இராமனைச் சரணமடைந்து சந்தோஷமடைய வேண்டும் என்று ஈசுவரனை சேவிக்கிறேன்.

இங்ஙனம்,

நூலாசிரியர்.

श्रीसुन्दररामायणाभिमोदनपत्रिका ॥

भवदीय रामायणसंग्रहरूपग्रंथः मया दृष्टः । अतीव शोभनः व्युत्पित्सूनां बहुधा आवश्यक इति ज्ञायते, मुद्र्यतां ॥

சுந்தரராமாயணபிமோதனம்.

உம்முடைய ராமாயணசங்கிருகமென்ற கிரந்தத்தை நான் பார்த்தேன். மிகவும் அழகாயிருக்கிறது. படிக்க விரும்புவோர்களுக்கு பலவகையிலும் அவசியமென்று அறியப்பெற்றது. அச்சிடட்டும்.

(1)

गोकर्णाभिजनेन सुन्दरबुधा वाल्मीकिसंबोधित-
श्रीरामायणसंग्रहस्सुरचितो विद्वन्मनः कर्षति ।
बालानां सुखवोधकस्सुरुचिरोऽलंकारवृत्तादिभि-
स्सौशब्द्येन च कालिदासकवितासादृश्यमभ्यश्नुते ॥१॥

கோகர்ணக்ஷேத்திரத்திலிருக்கும் வித்வான் சுந்தரமியற்றிய வால்மீகி இராமாயண சங்கிருகமென்ற கிரந்தம் படிப்போர்களுக்கு சுகமாக அறிவைக்கொடுக்கும் அலங்காரங்கள் விருத்தங்கள் இவைகளால் அழகியது. நல்ல சப்தங்களால் காளிதாசனுடைய நூலுக்கு இணையாயிருக்கிறது. வித்வான்களின் மனதை வசம் செய்கிறது.

द्वैताद्वैतविशिष्टरूपसुमतत्रय्यन्तसंबोधक-
श्रीरंगार्यविपश्चितासु सुधियां शाणाश्मनेयं कृतिः ।
श्रीमन्नूतनसालदेशनृपतिश्रीराजगोपार्पित-
श्रीदानाधिकृतौ स्थितेन बहुधा संवीक्ष्य संमोदिता ॥२॥

த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்ற மும்மதங்களையுமறிந்த, கற்றறிந்தவர்களின் அறிவை உரைக்கும் சாணைக்கல் போன்ற, புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அரசரான ஸ்ரீராஜகோபால தொண்டமான் மன்னருடைய அரண்மனை தானதிகாரத்திலி

ருக்கும் வித்வான் (வங்கீபுரம்) ஸ்ரீரங்காசார்யரால் வெகுவிதமாக பார்த்து இந்த கிரந்தம் அபிமோதனம் செய்யப்பெற்றது. [2]

इत्थं मतत्रयनिरूपकः दानाधिकारी विद्वान् काळि रङ्गाचार्यः (पुदुक्कोट्टै 4—2—36.)

(2)

श्रीगोकर्णनगरीवास्तव्यसुब्रह्मण्यघनपाटिनां तनूजेन सुन्दरेशशास्त्रिवर्येण प्रणीय आनीतं सुन्दररामायणाख्यग्रंथविशेषं हस्तलिखितं तत्र तत्र स्थालीपुलाकन्यायेन अद्राक्षं । अत्र च श्रीरामायणे प्रतिसर्गं प्रदर्शिताः कथांशाः प्रायेण संगृहीताः । प्रसिद्धानि च पदानि संघटितानि । मधुरा च सरणी हृदयंगमा च वर्तते । स्वप्रणेतुः पाणिनीये साहित्ये च विशेषनैपुण्यं प्रकटयत्ययं ग्रंथः । स्वद्रष्टॄणां साक्षाद्रामायणदर्शनजदृष्टादृष्टफलानि जनयेदित्यत्र न कापि संशीतिः ।

திருக்கோகர்ணத்தில் வசித்த சுப்பிரமணிய கனபாடிகளின் புத்திரனான சுந்தரேச சாஸ்திரிகள் இயற்றிக் காண்பித்த சுந்தர ராமாயணம் என்ற நூலை கையெழுத்தில் அங்கங்கே (ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்ற நியாயத்தால்) பார்த்தேன். இதில் சர்க்கந்தோறும் கதைகள் விடாமல் சுருக்கி சொல்லப்பெற்றன. வார்த்தைகளும் பிரசித்தமானவை. எடுப்பும் இன்பமாகவும் மனதிற்கு போதகமாகவும் இருக்கிறது. இந்த கிரந்தம் தன்னை இயற்றியவருடைய இலக்கணத்திலும் அலங்கார சாஸ்திரத்திலும் உள்ள மிகுந்த அறிவை வெளியிடுகிறது. இது தன்னைப் பாராயணம் செய்பவர்களுக்கு இராமாயண பாராயணத்தினால் உண்டான இம்மை மறுமைப் பயன்களை உண்டுபண்ணும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

N. இராகவசாஸ்திரிகள், ஹெட்மாஸ்டர்.
மஹாராஜா வேதசாஸ்திர பாடசாலை, புதுக்கோட்டை.

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः

शुभमस्तुनित्यं ।

ओन्नमश्शिवाभ्यां ।

श्रीसुन्दररामायणे बालकाण्डः प्रारभ्यते

सर्गः श्लोकः

वन्दे तं मदवारणेन्द्रवदनं मद्भागधेयाऽऽकृतिं
शुण्डादण्डसुचालनेन जगतां मायाऽन्तरायाऽऽमयान् ।
विद्राव्य प्रणतिप्रसन्नहृदयो योऽनुक्त एव स्वयं
रक्षत्यन्वहमात्मनोऽति बिरुदं वैद्येशपुत्राभिधं ॥ १ ॥

கணபதி துதி.

நமஸ்காரத்தினால் மனங்களித்துப் பிறர் சொல்லாமலே தண்டம் போன்ற துதிக்கையை நன்றாய் அசைப்பதால் ஜனங்களின் அஞ்ஞானம் இடையூறு என்னும் ரோகங்களை யகற்றி வைத்ய நாதனின் புத்திரன் என்னும் புகழைத் தினந்தோறும் காப்பாற்றிக் கொள்பவரும் என் பாக்கியத்தின் உருவம்போல் விளங்குபவரும் மதயானையின் முகம் பெற்றவருமான விநாயகக் கடவுளை நமஸ்கரிக்கிறேன்.

स्तौमि त्वां वचनेश्वरि त्रिभुवनास्तोकप्रमोदाऽऽवह-
प्रख्यातक्षणदाचरप्रशमनाऽमेयास्त्रवीर्याऽऽलयं ।
स्तोतुं वीरधुरन्धरं रघुवरं देवि प्रवृत्तोऽस्मि मां
जिह्वाविष्टरमास्थिताऽधिगमय प्राचेतसस्याऽऽशयं ॥२॥

ஸரஸ்வதி துதி

ஏ வாகீசுவரி மூன்று உலகங்களுக்கும் அதிக சந்தோஷத்தைக் கொடுத்துப் பிரசித்தி யடைந்தவரும் அரக்கர்களை யழித்த அளவில்லாத அஸ்திர பலத்திற்கு இருப்பிடமானவரும் வீரசிகாமணியுமான ஸ்ரீராமனைத் தோத்தரிக்க முயலுகின்ற நான் உன்னைத் தோத்தரிக்கின்றேன். தாயே நீ என் நாவென்னும் ஆசனத்தில் அமர்ந்து வால்மீகியின் கருத்தை எனக்கு அறிவிக்கவேண்டும்.

वल्मीकापत्यगत्यन्तरमिह जगतां त्वां विना नेति जाने
क्षोणीपुत्रीशवृत्तामृतमतनुतनौ स्थातुमप्यप्रगल्भं ।
निर्गच्छत्स्वस्यवक्त्रात्स्वयमिव च बहिः प्रापितं येन भूमिं
मन्दप्रज्ञेषु लोकेष्वतिगुरुकृपया क्लेशराशिप्रशान्त्यै ॥३॥

வால்மீகியின் துதி.

ஸ்ரீ சீதாகாந்தனுடைய திவ்விய சரித்திரமாகிய அமிர்தம் அதிகமாய்ப் பெருகி சரீரத்துள் அடங்காமல் தானாகவே தன்வாய்வழியாய் வெளியில் வந்ததுபோல் அறிவற்ற ஜனங்களிடத்தில் மிக்க கிருபை புரிந்து அவர்களது துன்பங்களைத் தீர்க்கவேண்டி ஸ்ரீ ராம சரித்திரமென்னும் அமிர்தத்தை பூமி முழுவதும் பரவ வைத்த ஏ வால்மீகி மகரிஷியே! உலகங்கள் உஜ்ஜீவிப்பதற்கு உம்மைவிட வேறுகதியில்லையென்று நிர்ணயிக்கிறேன்.

श्रीरामाङ्घ्रिष्ठचेतस्तपनसुतभयापारवाराशिशोष-
प्रावीण्यैकाधिवासप्रबलरघुवराऽऽग्नेयदिव्यास्त्रवीर्य ।
सूर्यात्संप्राप्य विद्यास्त्वरिततरगतेः प्राप्तभूयिष्ठकीर्ते
धीमन्नित्यं हनूमन्कुरु पदविनतं मां समर्थं कवित्वे ॥४॥

ஆஞ்சநேயர் துதி

ஸ்ரீ ராமன் திருவடியில் மனதை வைத்தவரும் சுக்ரீவனது பயமாகிற கரையற்ற பெருங்கடலை வற்றவைப்பதில் திறமைபொருந்

தியபலமுள்ள ஸ்ரீ ராமனுடைய அக்கினியாஸ்திரத்தின் வலிமை பெற்றவரும் மிகவும் வேகத்துடன் செல்கின்ற சூரியனிடமிருந்து வித்தைகளைக் கற்று அதிக புகழ்பெற்றவரும் புத்திமானுமான ஏ அனுமானே! எப்பொழுதும் உன்பதத்தை வணங்கும் எனக்குக் கவிபாடுவதில் திறமைதரவேண்டும்.

श्रीमद्वाल्मीकिगीते रघुवरचरिते वाचकानां सुरद्रौ
यावान्सर्गस्तदुक्तं निखिलमपि मुदा संक्षिपन्तावतैव ।
श्लोकेनाहं प्रवृत्तो निगदितुमधुना स्वेष्टसिद्ध्यैमहान्तो
भूयांसं संप्रसादं कुरुत मयि नते मत्कृतेर्वीक्षणेन ॥ ५ ॥

அவையடக்கம்.

வாசிப்பவர்க்குக் கற்பகவிருக்ஷம் போன்றதும் ஸ்ரீ வால்மீகியினால் இயற்றப்பெற்றதுமான ராமாயணத்தில் உள்ள சர்கங்கள் எத்தனையோ அத்தனையும் அத்தனை சுலோகங்களால் அப்பொருள்களுடன் சுருக்கிச்சொல்ல இப்பொழுது விரும்புகிறபடியால் பெரியோர்களே என்னாலே பார்வையிட்டு வணக்கமுள்ள என்னிடத்தில் மிகவும் கருணைபுரியவேண்டும்.

१ वेत्ति ब्रह्म गुरुं गतस्तदितरो नैवेति मत्वा श्रुतिं
कोन्वस्मिन्निति पृच्छतेऽथ मुनये वाल्मीकये नारदः ।
संक्षेपात्समुपादिशत्स्वयमपि प्रध्याय यद्वृत्तकं
स्वर्लोकैकगतं सुधाऽधिकरसं रामं भजे तं सदा ॥ ६ ॥

நூல்.

குருவை யடைந்தவன் பிரம்மத்தை யறிகிறான் மற்றவன் அறிகிறதில்லை என்னும் சுருதியை நினைத்து எவன் குணவான் என்று வால்மீகி கேட்கும்பொழுது நாரதர் (பிரம்மத்தை யறியவிரும்பும் வால்மீகியின் வினாவிற்கிசைந்தது ஸ்ரீ ராம சரிதமேயென்று) தானும் நிதானித்து சுவர்க்கத்தில் மாத்திரம் அறியப்பெற்றதும் அமிர்தத்தி

னும் சுவையுள்ளதுமான அவ்விராமசரித்ரத்தைச் சுருக்கமாய் அவ் வால்மீகிக்கு உபதேசித்தபடியால் அவ்விராமனையே எப்பொழுதும் வணங்குகிறேன்.

२ मध्येऽह्नस्तमसातटे विनिहतं व्याधेन वीक्ष्य प्रियं
क्रौञ्चद्वंद्व उपद्रुतां च तरुणीं वल्मीकजो व्याहरन् ।
ऐच्छत्कर्तुमवाप्तधीर्विधिगिरा तस्मान्निषादेति च
श्लोकं यच्चरितं सरावणवधं तं राममेवाऽऽश्रये ॥ ७ ॥

நடுப்பகலில் தமஸாநதிக்கரையிலிருக்கும் கிரௌஞ்ச தம்பதிக ளில் ஆண்பறவையை வேடன் அடிக்க பெண்பறவை துக்கிக்க அதைக் கண்ணுற்ற வால்மீகி வியசனித்து வேடா காமமோகிதங் களான பக்ஷிகளில் ஒன்றைக்கொன்றதனுல் நீ மேன்மையடைய மாட்டாய் என்று சொல்லிப் பிரமனது அருளால் நூலியற்றுந் தன்மைபெற்று எந்த ராமசரிதத்தை ராவண வதம் வரை செய்ய விரும்பினரோ அவ்விராமனைச் சரணமாக அடைகிறேன்.

३ हंसाऽऽरूढवरप्रसादविदितत्रैकालिकार्थव्रजो
वल्मीकप्रभवस्स्पृशञ्जलमथ ध्यायन्गुरुं वाग्यतः ।
प्रागग्रं कुशमास्थितः प्रभविता राम त्वदीयं यथा
वृत्तं तद्वगवान्विवेद सकलं मामद्य संदर्शय ॥ ८ ॥

அன்னவாகனனுன பிரமன் திருவருளால் முக்காலத்தையுமு ணர்ந்த வால்மீகி முனிவர் ஆசமனஞ்செய்து கிழக்கு நுனியான தருப்பங்களில் மௌனமாக வீற்றிருந்து குருவைத் தியானித்து நடக்கப்போகிற ராமசரிதமெல்லாமுணர்ந்ததுபோல் ஏ ராமா! என க்கும் அதை இப்பொழுது அறிவிக்கவேண்டும்.

४ वाल्मीकिर्विरचय्य षड्रसयुतं काव्यं स रामायणं
तुष्टस्सस्भ्यकुशीलवौ कुशलवौ स्वग्राहयत्संमतौ ।
रथ्यायामभिवीक्ष्य गीतचरितौ भ्रातृन्वितो राघवः
प्रापय्य स्वसमीपमात्तसदनो वक्तुं न्ययुङ्क्ताथ तौ ॥ ९ ॥

வால்மீகி (சிருங்காரம், சோகம், ஹாஸ்யம், வீரம், பயானகம், ரௌத்ரம்) இவ்வாறுரஸம் பொருந்திய இராமாயண காவியம் இயற்றி ஸந்தோஷத்துடன் சபைக்குத் தக்கபடி பாடும் திறமையோடு தனக்கு இசைந்தவர்களான குசலவர்களுக்கு உபதேசித்தார். வீதிகளில் தன் சரித்திரம் பாடிக்கொண்டிருக்கும் அவ்விருவரையும் இராமன் பார்த்துத் தம்பிகளுடன் அழைத்துவந்து தன் ஸமீபத்திலிருத்திச் சரித்திரத்தைச் சொல்லும்படி உத்தரவுசெய்தார்.

५ आख्यानं शृणुताऽनसूयमनसा वक्ष्यावहे वोऽखिलं
तौ बालौ सदसि स्थितानवहितानित्यूचतुः प्रोच्चकैः ।
देशे कोसल नाम्नि सत्तमगुणा चासीदयोध्येति पूः
भूपः पङ्क्तिरथोऽतिविश्रुतबलस्तस्यामवात्सीत्सुखी ॥ १० ॥

புண்ணிய சரித்திரம் முழுவதும் மனதில் களங்கமில்லாமல் கேட்கவேண்டும், நாங்கள் சொல்லுகிறோம் என்று அச்சிறுவர்கள் ஸாவதானமாய்ச் சபையிலிருப்பவர்களை நோக்கி உரத்த சப்தமாய்க் கதைசொல்லத் தொடங்கினார்கள். கோசலமென்னும் தேசத்தில் உத்தமகுணம் பெற்ற அயோத்தி என்கிற நகரமிருந்தது. பலத்தில் பிரசித்தி பெற்ற தசரதனென்னும் அரசன் அதில் சுகமாய் வசித்து வந்தான்.

६ तथाऽशासील्लोकान्दशरथनृपो भूर्भगवती
मती धर्मान्नाणुच्यवनमुपगच्छेत्क्षणमपि ।
जनास्तत्तद्वर्णाश्रमनियमधर्मात्श्रुतिकृतात्
यथा त्रस्ता दोषाः खलविरचिता वाचकपदात् ॥ ११ ॥

தசரதன் செங்கோற்சிறப்பு.

பதிவிரதா தர்மத்திலிருந்து பூமிதேவியும், வேதோக்தமான தங்களுக்குரிய வர்ணாசிரம தர்மங்களிலிருந்து ஜனங்களும், தன் வாசகமான பதத்திலிருந்து துஷ்டர்கள் செய்யும் தோஷங்களும் பயந்துகொண்டு தங்களது ஸ்தானத்திலிருந்து நழுவாதிருக்கும்படி தசரதன் அரசுபுரிந்தான்.

७ तस्याऽऽम्नयपारदृश्वमतयो धृष्टयादयो मन्त्रिणः
चार्त्विक्सन् स वसिष्ठ आहितहितोऽभूद्वामदेवस्तथा ।
आत्माऽसून्प्रभवेददाङ्गिरमितप्रख्यातवीर्यैर्बलैः
युक्तो भूमिमपालयद्दशरथो देवेश्वरो द्यामिव ॥ १२ ॥

நீதி சாஸ்திரங்களின் கரைகண்ட புத்திமான்களான திருஷ்டி ஜயந்த விஜய சித்தார்த்த அர்த்தசாதக அசோக மந்திரபால சுமந்திர இந்த மந்திரிகளும் இதஞ்செய்யும் ருத்விக்குகளான வசிஷ்ட வாம தேவாதி மஹரிஷிகளும் அத் தசரதனிடமிருந்தனர். தன் உயிரையும் யஜமானனுக்காக யுத்தத்தில் தத்தம் செய்யும் பலிஷ்டர்களான ரத கஜ துரகபதாதிகளாகிற நான்குவித சைன்யங்களுடன் கூடியவனாய் அமராவதியில் இந்திரன்போல் பூமியில் அரசுபுரிந்தான்.

८ पुत्रार्थी हयमेधतो हरिमसौ यष्टुं विनिश्चित्य तत्
संभारान्गुरुशासनेन झटिति प्राप्तुं नियुंजन्स्वयं ।
स्वामात्यान् चतुरान्समीहितकृतौ गत्वाऽवरोधं नृपः
दीक्षां वेशयतिस्म जीवितसमाः पत्नीर्वदन्स्वाऽऽशयं ॥ १३ ॥

புத்திரனை விரும்பும் அவ்வரசன் குருவின் உத்தரவினால் ஹரி ப்ரீதிகரமான அசுவமேதயாகம் செய்ய நிச்சயித்து அதற்குரிய சாதனங்களை விரைவில் சம்பாதிக்கும்படி தன் விருப்பம் போல் செய்யும் திறமைபொருந்திய மந்திரிகளுக்கு உத்தரவளித்து தான் அந்தப் புரஞ்சென்று உயிர்போன்ற மனைவிகளிடம் தன் விருப்பத்தைத்தெரிவித்து யாகதீக்ஷைபெறச் செய்தான்.

९ अङ्गेशो व्यपनेतुमात्मविषये दुर्भिक्षयोगं भवं
स्वराज्यं च विभण्डकाऽऽत्मजमुनिं कन्यांप्रदायाऽऽनयत् ।
राजन् ते सविधास्यतीतितनयान्ब्रह्माऽऽत्मजेनोदितं
सूतः प्राह सुमंत्रधीर्दशरथं काले पुराविद्वचः ॥ १४ ॥

அங்கதேசாதிபதியான உரோமபாதமகாராஜன் தன் தேசத்திலுண்டான துர்பிக்ஷத்தை விலக்கும்பொருட்டுத் தன் மகளை விபண்டகரின் புத்திரரான ரிஷியசிருங்கமுனிவருக்குக் கொடுத்து அவரைத் தன் இராச்சியத்திற்கு அழைத்துவந்தான். ஏ அரசே! அம்முனிவர் அருளால் தங்களுக்குப் புத்திரர்கள் உண்டாகப் போகிறார்கள் என்று பிரம்மபுத்திரரான சனத்குமாரர் சொன்னதை முன் சரித்திரமறிந்த சுமந்திரன் அச்சமயம் தசரதரிடம் சொன்னான்.

१० सुस्वादूनि सुमोदकानि सुफलान्यादाय वाराङ्गनाः
गत्वा वीक्ष्य च ऋष्यशृङ्गमथ तं प्राशय्य तानि प्रियाः ।
संत्रस्तास्तु विभण्डकाद्गृहमथाऽऽनिन्युस्सुतां संददत्
तेनामोदत रोमपादनृपतिश्चेत्याह सूतो नृपं ॥ १५ ॥

(அவ்வரலாற்றைபறிய விரும்புகிறேனென்று, தசரதன் கேட்க,) அதிக ருசியுள்ள மோதகங்களையும் பழங்களையுமெடுத்துக்கொண்டு சென்று, பிரியத்துடன், தாசிகள், இரஷிய சிருங்கரைப்பார்த்து, அவைகளை உண்பித்து விபண்டகரிடத்தில் பயத்துடன், அவரை அரண்மனைக்கு அழைத்துவந்தார்கள். உரோமபாதமகாராஜன், தன் மகளை, இரஷிய சிருங்கருக்குங் கொடுத்து அவருடன் சந்தோஷமடைந்தான் என்று சுமந்திரன் கூறினான்.

११ श्रुत्वा सूतवचस्ततो दशरथो गत्वाऽङ्गराज्यं स्वयं
स्तुत्वा च प्रियरोमपादनृपतिं नत्वेष्टदैवं परं ।
कृत्वा शोभितमात्मनः पुरमिदं नीत्वा सशान्तं मुनिं
स्थित्वा स्त्रीभवने मुहुस्सुचरितं स्मृत्वा तुतोषाऽऽत्मनि ॥१६॥

சுமந்திரன் கூறியதை தசரதர் கேட்டு, பிறகு, தானே அங்கதேசஞ்சென்று, உரோமபாதமகாராஜனைத் துதித்து, தன் இஷ்ட தெய்வத்தை வணங்கி, தன் நகரத்தை மிகவும் அலங்கரித்துச் சாந்தையுடன் ரிஷியசிருங்கரை அழைத்துவந்து, அந்தப்புரஞ்சென்று அங்கிருந்து தன்பெருமையை அடிக்கடி நினைத்து மனதிற் சந்தோஷித்தான்.

१२ पुत्रीयन्स हयक्रतुरग्निसदने वृण्वन्वसिष्ठाऽऽदिमान्
यज्ञार्थं तुरगस्य मोचनविधौ संभारसंपादने ।
सन्दिश्यावहितान्समर्थसचिवान्काले शुभे स्वेष्टदे
विघ्नान्रोद्धुमिवावरोधमधिकप्रीतिप्रदं प्राविशत् ॥ १७ ॥

புத்திரனை விரும்பும், தசரதன், அசுவமேதயாகம் செய்ய விரும்பி, அக்கினிசாலையில், யாகத்தின் பொருட்டு, வசிஷ்டாதிகளை நியமித்து, பூப்பிரதக்ஷிணத்திற்குக் குதிரையை அனுப்பவும், யாகோபகரணங்களைச் சேகரிக்கவும், சாவதானமாய்க் காரியஞ்செய்யவும், மந்திரிகளுக்கு உத்தரவிட்டுத் தன் விருப்பத்திற்கிசைந்த, சுப முகூர்த்தத்தில், இடையூறுகளைத் தடுத்து, மனைவியரை அழைத்துவர, அந்தப்புறஞ்சென்றான்.

१३ भूपं तं गुरुरश्वमेधयजनं संप्रार्थितः कारयन्
तक्षाद्यैस्तदुपस्करांश्च कलयन्सूतेन दूतैर्नृपान् ।
स्वप्रत्यागमयन्क्रतुं निर्ऋतेस्संबाधतः पालयन्
वेश्माग्रेस्समवेशयत्सवनितं दीक्षामथाधारयत् ॥ १८ ॥

குருவான வசிஷ்டர், அரசனால் வேண்டப்பெற்று, அவ்வரசனுக்கு அசுவமேதயாகம் செய்விக்கத் துணிந்து, தச்சன் முதலியவர்களால் அதற்குரிய சாதனங்களைச் செய்வித்துத், தூதர்கள் மூலம் அரசர்களைத் தன்னிடம் வரும்படி சுமந்திரரால் அறிவித்து, இராக்ஷஸர்களின் துன்பமில்லாமல் வேள்வியைக்காத்துக்கொண்டு அரசனை மனைவிகளுடன் யாகசாலைக்கழைத்துவந்து யாகதீக்ஷை பெறச்செய்தான்.

१४ साम्राज्यांकनमश्वमेधहवनं पापापहं पार्थिवः
चक्रे कोसलवल्लभो द्रुहिणवद्यत्रर्त्विजां विप्लवः ।
नासीत्कर्मसु किंचिदप्यसुभृतां संतर्पणे वाऽर्थिनां
वांछापूर्तिविधौ स्वयाजकततेस्संमाननेऽस्य प्रभोः ॥ १९ ॥

கோசலாதிபதியாகிய தசரதன் யாககாரியங்களில் ரித்விக்கு களுக்கும், சந்தர்ப்பணையில் ஜீவகோடிகளுக்கும், விரும்பினதைப் பெறுவதில் யாசகர்களுக்கும், வெகுமானம் பெறுவதில் வைதிகர் களுக்கும், சிறிதும் குறைவின்றித் தன் பேராசிற்குத் தக்கபடி, பாபந்தீர்க்கும் அசுவமேதயாகத்தை, காஞ்சீபுரத்தில் பிரமன் யாகஞ் செய்ததுபோல், செய்து முடித்தார்.

१५ साकेतेश्वरपुत्रदेष्टिहवने शान्तेशसंपादिते
भागग्राहिदिवौकसस्स्वशरणान्लंकेश्वरोपद्रुतान् ।
वैकुण्ठाधिपतिर्भयात्शमयितुं कुर्वन् चतुर्धा तनुं
पुत्रीयत्फलदो जगज्जनयिता मेने स्वतातं नृपं ॥ २० ॥

ரிஷியசிருங்கர் செய்துவைக்கும் அயோத்தி மன்னரின் புத்திரகாம வேள்வியில் அவிர்பாகம் பெறவந்தவர்களும், இராவணனால் துன்பமடைந்து தன்னிடம் சரணம் புகுந்தவர்களுமான தேவர்களைப் பயத்திலிருந்து காப்பாற்ற புத்திரனை விரும்புவோர்களுக்குப் பயனளிக்கும், சகல உலகத்திற்கும் பிதாவான வைகுண்டாதிபதி, தன்னுருவை நான்கு கூறாக்கித் தசரதனைத் தன்பிதாவாகக்கொள்ளத் திருவுளமிசைந்தார்.

१६ पौलस्त्यं नरवध्यमाशुमनुजो भूत्वा निहन्यामिति
प्रीत्याऽऽश्रुत्य तिरोहिते मुरहरे वैश्वानरेणार्पितं ।
हैमामत्रगपायसं तनयदं गृह्णन्नृपः प्राशयत्
पत्नीस्तिस्र उपेत्यगोत्रहितदानीत्या विभज्यैव तत् ॥ २१ ॥

மனிதனால், மரணமடையும் வரம்பெற்ற இராவணனை சீக்கிரம் மனிதனாய் பிறந்து வதைக்கிறேன் என்று அன்புடன் சபதஞ் செய்த முராஹரி மறையவே, அக்கினிதேவன் தங்கப்பாத்திரத்திற்கொடுத்த புத்திரப் பிரதமான பாயசத்தை அரசன் பெற்றுத் தன்வம்சவிருத்திக்குரிய (கௌசல்யை, சுமித்திரை, கைகேயி) இம்மூன்று பனிவியரிடமுஞ் சென்று நியாயப்படி, $\frac{1}{2}$, $\frac{3}{8}$, $\frac{1}{8}$ வீதம், பங்கிட்டுக்கொடுத்துப் புசிப்பித்தார்.

१७ देवा ब्रह्मनियोगतो भगवतो मर्त्यस्ययावत्सतः
साह्यायाजनयन्सुतान्स्वसदृशान्वीर्यैर्गिरीन्द्राऽऽकृतीन् ।
गन्धर्वीषु च वानरीषु विविधस्त्रीष्वप्रमेयान्धियां
शार्दूलानपि शासतो गिरिवनाऽऽदासान्वृता तैः क्षितिः ॥

மனிதனுய் அவதரிக்கும் பகவானுக்கு உதவிசெய்யும்பொருட்டுத் தேவர்கள் பிரமனின் உத்திரவால் பலத்தில் தம்மைப்போன்றவர்களும் உருவத்தில் பருவதம் போன்றவர்களும் புத்தியில் நிகரற்றவரும் புலி முதலியவைகளை அடக்கிக் காடு மலைகளில் வசிப்பவருமான புத்திரர்களைக் கந்தர்வஸ்திரீகளிடத்திலும் வானரஸ்திரீகளிடத்திலும் பலஸ்திரீகளிடத்திலும் சிருஷ்டித்தார்கள். அவ்வானரக் கூட்டங்கள் பூமி முழுமையும் வியாபித்தன.

१८ निर्वर्त्यक्रतुमाप्तलोकमथस प्रापय्यतत्तत्पदं
पत्नीरेत्य कृषीवलोऽम्बुदमिव प्रापोन्मुदं गर्भिणीः ।
रामंकोसलजा शुभेऽह्न्यजनयल्लक्ष्मीपतेरंशजं
कैकेयीभरतं च लक्ष्मणरिपुघ्नौसासुमित्रा ततः ॥ २३ ॥

திருவவதாரம்.

அரசன் வேள்வியை முடித்து இஷ்ட ஜனங்களை இருப்பிடமனுப்பிப் பயிர் செய்பவன் மேகத்தைப் பார்த்துச் சந்தோஷிப்பது போல் கருப்பந்தரித்த மனைவியரைப் பார்த்து தசரதன் சந்தோஷித்தான். சுபதினத்தில் கௌசலை இராமனையும் கைகேயி, பரதனையும் சுமித்திரை லக்ஷ்மண சத்ருக்கினர்களையும் ஸ்ரீயப்பதியின் அம்சமாகப் பெற்றெடுத்தனர்.

पुत्रान्तान्चतुरो धनुस्सुचतुरान्प्राप्यप्रहृष्टोरहो
भूमीशस्सविचिन्तयन्ससचिवस्तद्दारकर्मैकदा ।
विश्वामित्रमुपागतं सतपसं संपूजयन्स्वागतं
पृष्ट्वाऽभ्यागतिकारणंतवमुने कुर्यामितिप्रार्थयत् ॥ २४ ॥

வில்வித்தையில் நிபுணர்களான நான்கு புத்திரர்களைப்பெற்ற அரசன் சந்தோஷித்து மந்திரிகளுடன் ஒரு நாள் புத்திரர்களுக்குத் திருமணஞ்செய்விக்க இரகசியமாய் ஆலோசிக்கும்பொழுது வந்த விசுவாமித்திர முனிவரைப் பூஜித்து நல்வரவுகூறி தேவரீர் வந்த காரணமென்ன? அதைச் செய்விப்பேன் என்று விண்ணப் பித்தான்.

१९ श्रुत्वा राजवचोऽब्रवीन्मुनिरिदं कंचित्क्रतुं भूपते
यज्ञेशप्रियवर्धनं स्वकरवं पापाऽऽकृतीभीषणौ ।
मारीचश्चसुबाहुरप्रतिभयौ तद्राक्षसेशौहतः
तौ हन्तुं दशरात्रमद्ययजेत मे देहि धीरंसुतं ॥ ॥ २५ ॥

தசரதன் கூறியதைக்கேட்ட விஸ்வாமித்திரர், "அரசே! யக்ஞேஸ்வரன் ப்ரீதியடைய ஒரு வேள்வியைச் செய்தேன். அதை பாபமே உருக்கொண்டதுபோல் பயங்கரமான மாரீசன் ஸுபாஹு என்றும் அரக்கர்கள் அழிக்கிறார்கள். அவர்களை அழிப்பதற்கு தைரியம்பெற்ற தங்கள் புத்திரனை என்னுடன் யாகத்திற்கு அனுப் வேண்டு"மென்று ஆக்ஞாபித்தனர்.

२० रक्षोराजमवार्यवीर्यं विहतक्रत्वादिकृत्यावलिं
तत्प्रेष्यौ हृदि ताटकेयदनुजौ कुर्वन् वियोगासहः ।
भीत्याऽऽतैश्च ननेतुमर्हसि सुतं मां वा न मे सैनिकान्
राजेति प्रवदन्मुनिं कुशिकजं प्राकोपयत्कोपनं ॥ २६ ॥

அடக்கமுடியாத பலத்தினல் யாகம் முதலிய நற்காரியங்களை அழித்துவரும் இராவணனையும் அவனது ஏவலாளிகளான தாடக புத்திரர்களையும் மனதில் நினைத்துப் பயந்த அரசன் புத்திரனைவிட்டுப் பிரியமனமில்லாதவராய்ப் புத்திரனும் நானும் என் சைனியங்களும் வரமுடியாதென்று சொல்லி கோபியாகிய விசுவாமித்திரரை மிகவும் கோபிக்கச்செய்தார்.

२१ पुत्रप्रेमजितं प्रतिश्रुतिकृतौ मुग्धं नृपं कोपनं
विश्वामित्रमवेक्ष्य भानुकुलजश्रेयोविधायी गुरुः ।
राजन् त्वत्सुतमङ्गलाय विदुरो नानाऽस्त्रशस्त्रावलेः
त्वामेषोऽर्थयते प्रदेहि तनयं द्रागित्यशात्शासकं ॥ २७ ॥

அரசன் புத்திரனிடத்தில் அன்புமிகுந்து தன் சபதத்தைக்கூட கைவிடவும் விசுவாமித்திரர் கோபிக்கவும் இதைப்பார்த்து சூரியவம்சத்தவர்களது பாக்கியத்தையே கருதும் குருவான வசிஷ்டர் அரசே! அநேக அஸ்திர சாஸ்திரங்களைக்கற்ற இம் முனிவர் உன் புத்திரனது க்ஷேமத்திற்காகவே உன்னிடம் யாசிக்கிறார். ஆகையால் சீக்கிரம் புத்திரனை அவருடன் அனுப்புவாயாக என்று உத்ரவளித்தார்.

२२ रामं लक्ष्मणमानयन्निजपदं साकेततः प्रस्थितः
सार्धंयोजनमागतश्चसरयूतीरेनिविष्टो मुनिः ।
विद्येमन्त्रयुतेबलामतिबलां क्षुत्तृड्जशोकापहे
वीर्योत्साहविधायके त्रिजगतां क्षेमायसोऽग्राहयत् ॥२८॥

விசுவாமித்திரர் இராம லக்ஷ்மணர்களை அயோத்தியிலிருந்து அழைத்துக்கொண்டு தன் தபோவனம் வரும்பொழுது ஒன்றரை யோஜனைதூரஞ் சென்றதும் சரயூநதிக்கரையில் உட்கார்ந்து பசி தாகங்களைப்போக்கி பல உற்சாகங்களைக்கொடுக்கும் மந்திரகலாபங்களோடுகூடிய பலை அதிபலை என்னும் வித்தைகளை மூவ்வுலக க்ஷேமத்தின்பொருட்டு அவர்களுக்கு உபதேசித்தார்.

२३ रामं प्रातरुपासिताऽऽह्निकमथस्वस्यानुगं सानुजं
गाधेस्सूनुरघापहं ससरयूभागीरथीसंगमं ।
अंगाऽऽख्यं विषयं सुकृत्यनिलयं प्रापय्यतद्वैभवं
विस्तारेण विबोधयन्मुनिनुतो रात्रिंसतत्राऽऽवसत् ॥२९॥

பாபந்தீர்க்கும் கங்கையில் சரயூசங்கமஸ்தானஞ் சென்று புண்ணியத்திற்கு இருப்பிடமான அவ்விடத்திலுள்ள அங்க தேசத்தை யடைந்து அவ்விடப்பெருமையை (மன்மதன் சிவபெருமானுக்குக் குற்றஞ்செய்து அங்கமிழந்ததை) விரிவாக உபதேசித்து முனிவர்களால் ஸ்தோத்தரிக்கப்பெற்று இரவை அவ்விடம் கழித்தார்.

२४ निर्गच्छन्स ततो नृपाऽऽत्मजयुतो नावातरन्स्वर्धुनीं
देशानेत्यकरूश संज्ञमलदान्देवेश्वरानुग्रहात् ।
पुष्टान्पूर्व समस्तपुष्पवनभान्याऽऽवृतान्दारुणैः
यक्षिण्यास्त इहातिवीर्य जहि तामित्यब्रवीद्राघवं ॥ ३० ॥

விசுவாமித்திரர் இராமலக்ஷ்மணர்களுடன் அவ்விடம் நீங்கி ஓடத்திலேறிக் கங்கையைத்தாண்டி, தேவேந்திரனது அனுக்கிரகத்தால் மிகவும் செழித்து முன் நந்தவனத்திற்கொப்பானதும் இப்பொழுது துஷ்ட ஜந்துக்களால் சூழப்பெற்றதுமான, கரூசம் மலதம் என்னும் தேசங்களுக்குச் சென்று, "இவ்விடத்தில் ஒரு யக்ஷிணி இருக்கிறாள். அதிக பலமுள்ள ஏ ராமா அவளை சம்ஹரிக்கவேண்டும்" என்று சொன்னார்.

२५ रामस्यातिकृपालुतां जननतास्सिद्धामहार्यां परैः
उन्माष्टुं स्त्र्यबलागतां बलवतीं सघस्समूलां मुनिः ।
यक्षिण्यावधि कुंभजातवरजं वीर्यं च दुर्वृत्ततां
व्याचख्यावसतीनिषूदनविधिं सद्धर्म्य सोदाहृतिं ॥३१॥

பெண்களிடத்தில் பிறர் விலக்கமுடியாத ஜன்ம சித்தமான இராமனது கருணையை அடியோடு மாற்ற நினைத்த விசுவாமித்திரர் பிரமன் அகஸ்தியர் முதலியோரது வரத்தால் மிகுந்த தாடகையின் பலத்தையும் துஷ்டத்தனத்தையும், துஷ்டஸ்திரீகளின் வதத்தால் புண்ணிய மேற்படுகிறது என்பதையும் உதாரணத்துடன் எடுத்துக்கூறினார்.

२६ श्रीरामो गुरुशासनेन विदधत्सज्यं धनु र्ज्यास्वन
श्रुत्यो त्क्षिप्य करौ वधाय सविधं प्राप्तां द्रुतं ताटकां ।
वर्षन्ती मभित श्शिलाः करपदे छिन्दन्सुमायाविनीं
बाणेन द्युसदां वनस्य हितकृद्दुर्वृत्ततोऽच्यावयत् ॥ ३२ ॥

ஸ்ரீராமன் குருவினது உத்தரவினால் வில்லைவளைத்து நாணேற்றி, டங்காரம்செய்ய அவ்வோசையைகேட்டுக் கைகளைத்தூக்கிக்கொண்டு கொல்வேனென்று எதிரில் வந்து மாயையினால் நாற்புறமும் கற்களை வாரிச்சொரியும் தாடகையைச் சீக்கிரம் பாணத்தினால் கைகால்களைச் சேதித்து தேவர்களுக்கும் அவ்வாரணியத்திற்கும் நன்மையின் பொருட்டு துஷ்டத்தனத்திலிருந்து விலக்கினார்.

२७ मारीचस्य सुवो वधेन मुदित श्शक्रादिभिः प्रेरितः
रामाय प्रबलाय भक्ति निधये प्रादा न्मुनिः कौशिकः ।
दिव्यास्त्राणि कृशाश्वजानि जगतां भीतेः प्रहर्तॄणितत्
मन्त्राधीश्वर देवता हृदयगा स्थेति प्रवक्त्रेमुहुः ॥ ३३ ॥

மாரீசனுடைய தாயை வதம் செய்ததால் சந்தோஷித்த விசுவாமித்திரர் தேவர்களது நியமனத்தால் அதிக பலத்தோடு மிகுந்த பக்தனும் முன்னிலையில்வந்து என்ன செய்யவேண்டும் என்று கேட்கும் மந்திர தேவதைகளை என் மனதிலிருங்களென்று அடிக்கடி சொல்லும் ராமனுக்கு உலகத்தின் பயத்தை விலக்கும் கிருசாச்வரிடம் பிறந்த திவ்வியாஸ்திரங்களை உபதேசித்தார்.

२८ अस्त्राणा मुपसंहृतिं भगवतो लब्ध्वा मुनेः राघवः
देवै रप्यसुरै रधर्षित बलो मध्याह्न मार्ताण्डवत् ।
गच्छन्भ्रातृयुतो महत्तरुकुलं दृष्ट्वाऽथ कस्याऽऽश्रमः
पुण्योऽयं यजनाऽऽलयः क्व भवतो वैरी क इत्यार्थयत् ॥

ஸ்ரீ ராமன் அஸ்திரங்களின் உபசம்ஹாரத்தை முனிவரிடமிருந்து அறிந்துகொண்டு நடுப்பகலிலிருக்கும் சூரியனைப்போல், தேவாசுரர்களாலும் எதிர்க்கமுடியாத பலம் பெற்றுச் சகோதரனுடன் போகும்பொழுது அதிகமரக்கூட்டத்தைக்கண்டு, "இது யாருடைய ஆசிரமம்? புண்ணியமான தங்கள் தபோவனமெங்கே? தங்கள் சத்துருக்கள் யார்? எங்கிருக்கின்றனர்?" என்று விசுவாமித்திரரை வினவினர்.

२९ यः पूर्वं बलि मर्थयन्वसुमतीं पादत्रय व्यापृतां
श्रीमान्वामन एव विश्ववपुषा शक्राय तृप्तोऽददात् ।
तस्यायन्तपसां फलस्यकरणात्सिद्धाश्रमो ह्याश्रमः
मेऽत्रैवेति स राजपुत्र सहितो यज्ञाऽऽलयं प्राविशत् ॥

முற்காலத்தில் யார் வாமனனாயிருந்து மகாபலியினிடம் பூமியில் மூன்று காலடி இடம் யாசித்து, உலகத்தைத் தன் சரீரமாக்கிக் கொண்டு மூவுலகங்களையும் இந்திரனுக்குக் கொடுத்தாரோ அவரது ஆசிரமம் இது. தவத்தின் பலனைக்கொடுப்பதால் சித்தாசிரமம் என்று பெயர்பெற்றது. எனது ஆசிரமமும் இவ்விடத்திலேதான் என்று சொல்லி விசுவாமித்திரர் இராஜகுமாரர்களோடு யாகசாலையில் பிரவேசித்தார்.

३० षड्रात्रं यजतो मुनेः कुशलदं रामो जुगोपाध्वरं
भ्रात्रा ऽधिज्यधनुस्स्वराज्यमिव भूपालोऽपनिद्रोऽस्त्रवित्
मारिचं स सुबाहुमप्यनुगतान्यज्ञस्य शत्रून्नयन्
वार्धिं मानवतो यमं हुतवहाद्वायव्यतोऽन्तंदिशां ॥२६॥

உலகக்ஷேமத்தின் பொருட்டு ஆறுநாள் யாகம்செய்யும் விசுவாமித்திரரது யாகத்தை, நாணேற்றியவில்லை எடுத்துக்கொண்டு அஸ்திரங்களை யறிந்த இராமன் தம்பியுடன் தூக்கமின்றி, மானவாஸ்திரத்தினால் மாரீசனைச் சமுத்திரத்திலும் அக்கினியஸ்திரத்தினால் சுபாகுவை எமலோகத்திலும், வாயுவஸ்திரத்தினால் மற்ற யாக சத்துருக்களைத் திசைகளிலும் விரட்டி, அரசன் தன்னிராச்சியத்தைக் காப்பதுபோல் பாதுகாத்தான்.

३१ तुष्ट स्सत्वविधानतो जिगमिषुः प्रालेयशैलं मुनिः
चापस्याध्वरकृद्विदेहनृपते रामं दिदृक्षुं नयन् ।
आयासं सहितो ऽनुयायिभि रथ प्राप्त स्स शोणातटं
तद्देशाधिपते श्चरित्र मथतत्प्राहास्तगे भास्वति ॥ ३७ ॥

யாகம் நிறைவேறியதால் சந்தோஷித்த விசுவாமித்திரர் தவத்தின் பொருட்டு இமயமலை செல்லவிரும்பி யாகஞ்செய்யும் ஜனக மகாராஜாவின் வில்லைப் பார்க்கவிரும்பிய இராமனை அழைத்துக் கொண்டு மிதிலை செல்பவராய்க் கூடவருபவர்களுடன் சோணநதிக் கரைக்கு வந்து சூரியன் அஸ்தமிக்கும்பொழுது பாபமற்ற அத்தேசத்தரசனது கதையைச் சொல்லத் தொடங்கினர்.

३२ ब्रह्मापत्य कुशाऽऽत्मजस्य च वसो र्देशः प्रवृद्धो ऽस्त्ययं
कन्या स्ताः कुशनाभजा श्शत मपि प्रेक्ष्य स्पृहाऽऽर्तोमरुत्
धिक्कारेण सकोपन स्त्वकलयत् तासां शरीरेष्भृशं
भंगं तेन सुदुःखिताः स्वपितरं प्राहु स्तनूपद्रवं ॥ ३८ ॥

பிரமபுத்திரான குசனுடைய புத்திரன் வசு. செழிப்பான இத்தேசம் அவருடையது. குசநாபனுடைய நூறு கன்னிகைகளையும் பார்த்து மோகித்துப் பிரார்த்தித்தும் அவர்கள அவமதித்த தாற் கோபங்கொண்ட வாயு அவர்களது சரீரத்தைத் துன்புறுத்த, அவர்கள் துக்கித்துத் தகப்பனிடம் இவ்விருத்தாந்தத்தை அறிவித் தனர்.

३३ श्रुत्वा तं कुशनाभ आशुगकृतं पुत्रीशतोपप्लवं
तत्कर्म प्रतिकार मात्महृदये क्षान्ति परां चिन्तयन् ।
कांपिल्याधिप चूलि तापससुते ता ब्रह्मदत्ताय सः
प्रादा न्मन्मथदा स्सुता स्सुरुचिरा स्संत्यक्त कुब्जोच्छ्रयाः ॥

குசநாபன் தன் புத்திரிகளுக்கு வாயு செய்த தீங்கைக் கேட்டும் மிகவும் பொறுமையையே அதற்குப் பிரதிகாரமாக மனதில் நினைத்து காம்பிலிய தேசாதிபதியும் சூளிமுனி புத்திரனுமான பிரம்மதத்தன் பொருட்டு, பிணிகள் நீங்கி அழகினால் காமத்தைக்கொடுக்கும் அப்பெண்களை மணஞ்செய்துவைத்தார்.

३४ पौत्री सिद्दि मथाऽऽचरन्जनयितु र्वाक्येन गाधिं सुतं
प्राप श्रीकुशनाभ आर्यसुधुरं तस्याऽऽत्मजौ द्वावहं ।
सत्पूर्वा भगिनी त्वृचीक दयिता स्वर्गा नदीरूपिणी
प्रालेयाचलगेति कात्थित कुल स्सो ऽस्वापय द्राघवं ॥

அக்குசநாபன் பிதாவின் உத்திரவினால் புத்திரகாமேஷ்டியைச் செய்து பெரியோரின் தன்மைபெற்ற காதியைப்புத்திரனாக அடைந்தான். அவனுக்கு நானும் என் மூத்த சகோதரியும் குழந்தைகள். ரிசீகரின் மனைவியான என் சகோதரி சுவர்க்கம் சென்று நதிரூபமாய் இமயமலையை அடைந்தாள் என்று தன் வம்சசரித்திரத்தைக் கூறி இராமனை நித்திரை செய்வித்தார்.

३५ तीर्त्वा शोण मथा ऽऽगत स्सुरनदीं तीरं विधायाऽऽप्लवं
मध्येऽह्नस्सुखितो मुनी रघुभुवा पृष्टोऽवदत्तत्कथां ।
कन्या युग्ममभू द्धिमोच्चयभृतो गंगेत्यपर्णेतिच
योसद्भ्यः प्रथमां ददाववरजां रुद्राय बद्धव्रतां ॥४१॥

விசுவாமித்திரர் சோணநதியைக் கடந்து கங்காதீரம் வந்து அதில் ஸ்நானம் செய்து சுகமாயிருந்துகொண்டு நடுப்பகலில் கங்கா சரித்திரம் வினவும் இராமனுக்கு அக்கதையைச் சொல்லத் தொடங்கினார். இமவானுக்கு கங்கையும் பார்வதியும் இரண்டு பெண்கள். அவ்விமவான் கங்கையைத் தேவர்களிடத்திலும், தவம்புரியும் பார்வதியை ருத்திரதேவனிடத்திலும் கொடுத்தான்.

३६ शंभु र्वल्लभया युतोऽतिमदनक्लिष्ट स्सुरै रर्थितः
शप्तैः पुत्रविनाकृतै र्गिरिजया तेजो धरन्स्तेजसि ।
वीर्यं स्वं गलितं भुवा च विधृतं वैश्वानरेणापि तत्
कृत्वा श्वेतगिरिं ततश्शरवणं देव्याऽथ चक्रे तपः ॥४२॥

(கங்கா சரித்திரத்தின் விரிவையும், இராமனுக்கு விசுவாமித்திரர் சொல்லுகிறார்) 'ஹே ராமா சிவபெருமான் அதிக மோகங்கொண்டு, கௌரியுடன் புணர்ந்து, தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கித் தன்வீரியத்தைத் தன்னிடமேயடக்கிக்கொள்ளக் கௌரி தேவர்களைப் புத்திரனில்லாதவர்களாகச் சபிக்க, சரீரத்திலிருந்து பெருகிய வீரியத்தைப் பூமிதேவி தாங்கித் (தரிக்கமுடியாமல்) அக்கினியினிடம் கொடுத்து, அது சுவேதமலையும், சரவணமுமாக, அப்புறம் சிவபெருமான், தேவியுடன் தவம்புரிந்தார்.

३७ सेनाऽध्यक्ष मुपैतु मीप्सितयुतै र्वह्निस्स नुन्नस्सुरैः
वीर्यं तद् व्यसृजद्वियत्सारिति सा गर्भं न धर्तुं पटुः ।
पादेतु प्रमुमोच कांचनमयं गौरीगुरोः, कृत्तिकाः
षट् स्तन्यै स्तमवर्धयन्सरिपुहा सेनापतिस्स्वर्गिणां ॥४३॥

தேவர்கள் சேனாதிபதியை விரும்பி, அக்னியைப் பிரார்த்திக்க, அக்னிபகவான் அந்தச் சிவவீரியத்தைக் கங்கையில்விட, கங்கை அதைத்தரிக்க முடியாமல், இமயமலையின் தாழ்வரையில் ஒதுக்க, கார்த்திகைப்பெண்கள் அறுவரும் அக்குழந்தைகளுக்குப் பால்கொடுத்து வளர்க்க, அக்குழந்தை தேவசேனாதிபதியாயிருந்து சூரபதுமன் முதலிய சத்துருக்களை வென்றான்.

३८ साकेते द्विकलत्रवान्स सगरो राजाऽभवत्केशिनी
पुत्रं वंशकरं बहूंश्च सुमतिः प्रासूत तस्यांगना ।
ज्येष्ठो वारिणि पातयन्पुरभवान्बालान्बहिर्यापितः
पौत्रेणांशुमता युतोऽन्यतनयै र्योवाजिमेधं व्यधात् ॥

அயோத்தியில் இரண்டு மனைவிகளுடன் சகரன் என்ற அரசன் இருந்தான். அவன் மனைவி கேசினி வம்சவிருத்திக்குக் காரணமான, ஒரு புத்திரனையும், சுமதி அனேககம் புத்திரர்களையும் பெற்றார்கள். மூத்த குமாரன் நகரவாசிகளின், குழந்தைகளைச் சலத்தில்போட, அதனால் அவனை விரட்டிவிட்டு, அவன் புத்திரனை, அம்சுமானோடும், மற்ற புத்திரர்களோடும், அரசன் அசுவமேதயாகம் செய்தார்.

३९ यज्ञाश्वं तमपाहरत्सुरपति र्मायाव्यदृष्टः क्षणात्
भूपेन व्यथितेन तेन यजता षष्टि स्सहस्रं सुताः ।
आज्ञप्ता द्रुत मानयेति तुरगं भित्वा नखाग्रैः धरां
पातालं विविशु र्निहत्य तलगान्भीतिं सुरा भेजिरे ॥

இந்திரன் மாயையால், பிறர் கண்களுக்குப் புலப்படாமல் யாகக் குதிரையை க்ஷணநேரத்தில் கொண்டுபோக, யாகம் செய்யு மரசன் வியசனமடைந்து, சீக்கிரம் குதிரையைக் கொண்டுவரும்படி உத்தரவளிக்க, அறுபதினாயிரம் புத்திரர்களும், நகங்களின் நுனியால் பூமியைப் பிளந்து பாதாளத்திலிருப்பவர்களைத் தேவர்களும் பயமடையும்படி வதைத்துப் பாதாளஞ் சென்றார்கள்.

४० ब्रह्मा तद्भवितव्यतामथ सुरान्प्राबोधयत्सागरान्
भित्वा ऽन्तः पृथिवीं दिशागज मपि प्रेक्ष्येशदिश्यश्वकं
तस्याभ्यर्णगतं मुनिं च कपिलं तिष्ठाश्वचोरेति तान्
स्वं हन्तुं समुपागता न्समदहद्धुंकारत स्तत्क्षणं ॥ ४६ ॥

பிரமன் தேவர்களுக்குச் சகரபுத்திரர்களின் விநாசத்தைக்கூற பூமியைப் பிளந்து உட்புகுந்து, பாதாளத்திலிருக்கும் திக்கஜங்களையும் ஈசான மூலையில் யாகக்குதிரையையும், அதன் சமீபத்தில் கபில முனிவரையும் பார்த்துக் குதிரைத் திருடியவனே, நில்லடாவென்று தன்னைக் கொல்லச் சமீபத்தில் வந்த, அந்தச் சகர புத்திரர்களைக் கபில முனிவர், அதேக்ஷணத்தில் ஹுங்காரத்தினால் சாம்பலாக்கினார்.

४१ आनीताश्व उपागते निजपितॄन्ज्ञात्वा निवृत्तेद्रुतं
कर्तव्यं प्रतिबोधिते च विनताऽपत्येन पौत्रेऽखिलं ।
शोचन्सन्सगर स्स्वकीय मनघो यज्ञं विनिर्वर्तयन्
त्रिंशद्वर्ष सहस्र मत्र निवसन्स्वर्गं जगामामरः ॥ ४७ ॥

பேரனை, அம்சுமான் பாதாளஞ்சென்று தகப்பன்மார்களின் நிலைமையையறிந்து, அவர்களுக்குச் செய்யவேண்டியதை, கருடன் மூலமுணர்ந்து, குதிரையை அழைத்துவரச் சகரமகாராஜன் வியசனமடைந்து, தன் யாகத்தை முடித்துப் பாபமற்றவனாய், முப்பதினாயிரம் வருஷம் பூமியிலிருந்து அரசுபுரிந்து, தேவத்தன்மையோடு சுவர்க்கம் சென்றார்.

४२ उद्धर्तुं स्वपितॄन्सकामइत्र तां स्वर्गाऽऽपगां भूतलं
त्वानेतुं सुरलोकगेऽम्शुमति तत्पुत्रे दिलीपे ततः ।
तत्पुत्रेण भगीरथेन विनुतो वेधा स्त्वदिच्छा यथा
गंगां धर्तु मुमापतिं वृणु भृशं शक्त स्स इत्यादिशत् ॥

அம்சுமானும்,அவன் புத்திரனை திலீபனும் தன்பிதருக்களுக்கு நற்கதியுண்டாகச் சுவர்க்கத்திலிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டுவருபவன்போல் சுவர்க்கம் செல்ல,திலீபனது புத்திரனாகிய பகீரதன், பிரமனைத்துதிக்கப் பிரமன், "பகீரதா உன் விருப்பம்போல் கங்கையைத் தாங்கி பூமியில் விடச் சிவபெருமான் மிகவும் வல்லவர் அவரை வேண்டிக்கொள்" என்றார்.

४३ सन्तुष्टेन महेश्वरेण तपसा ऽऽकाशात्पतन्तीं महा
पूरां गर्वभृतं कपर्द विपिने सद्य स्तिरोधापितां ।
कृत्वा सप्तविधां कृपाऽर्णवतया दत्तां तत स्ससप्तमीं
गंगां जह्नु विसर्जितां सनृपाति गंहन्भुवोऽधोययै ॥४८॥

தவத்திற்குச் சிவபெருமான் சந்தோஷமடைந்து, ஆகாயத்தி லிருந்து கருவங்கொண்டு அதிகப் பிரவாகத்துடன், கீழே விழுங் கங்கையைத் தன் ஜடாபாரத்தில் மறைத்துக்கருணையால் ஏழுவிதம் பங்கிட்டு, ஏழிலொருபாகங் கங்கையைப் பகீரதனிடம் கொடுக்க, அதை ஜன்ஹு முனிவர் சாப்பிட்டு, மறுபடியுங்கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்டு பாதாளஞ் சென்றான்.

४४ क्लिन्ने भस्मनि गंगया सगरजा स्सर्वे विमुक्तास्त्वघात्
दिव्याऽऽकारभृतो विमानवर मारुढा गतास्तेदिवं ।
धन्य स्सन्विधिशासनेन वितरन्तेभ्यो निवापांजलिं
गंगां स्वाऽऽत्मजयन्भगीरथनृपोहृष्टा ररक्षा वनिं ॥५०॥

கங்காதீர்த்தத்தினால் சாம்பலை நனைக்கச் சகரபுத்திரர்களெல் லோரும், பாபம் நீங்கித் திவ்விய ரூபந்தரித்து, விமானமேறிச் சுவ ர்க்கஞ்சென்றார்கள். பிரமன் தோன்றி "ஏ பகீரதா! நீ புண்யவான் சகரபுத்திரர்களுக்குக் கங்கையில் இப்பொழுது தர்ப்பணம் செய். உனக்குங் கங்கை பெண்ணாக இருக்கட்டும்" என்று சொல்ல அதே விதம் பகீரதன் செய்து சந்தோஷமாய் நகரம்வந்து அரசுபுரிந்தான்.

४५ तीर्त्वा स्वस्तटिनीं तदुत्तरदिशं प्राप्तायतद्वैभवं ।
रामायाऽऽहमुनिस्सुरान्दितिसुतान्मृत्युं विहन्तुंजरां
क्षीरोदंपरिमथ्नतो विषमुमानाथायदत्त्वासुधां ।
वीक्ष्यान्योन्यमुपद्रुतान्कपटविच्चक्रे सुजेतॄन्जितान् ॥५१॥

கங்கையைக் கடந்து அதின் வடபுறம் சென்ற, ஸ்ரீராமனுக்கு விசுவாமித்திரர், அந்த தேசத்தின் பெருமையைச் சொல்லத்தொட ங்கினார். தேவர்களும், அசுரர்களும், மரணம், கிழத்தனம் இவ்வி ரண்டையும் போக்கத் திருப்பாற்கடலைக் கடைந்து, சிவபெருமானு க்கு விஷத்தைக் கொடுத்து, அமிர்தத்தைக்கண்டு கலகஞ்செய்ய மாயாபுருஷன் தேவர்களுக்கு வெற்றியையும், அசுரர்களுக்குத் தோல்வியையும் கொடுத்தார்.

४६ स्वर्गेश स्स्वजिघांसयासतपसं शुश्रूषमाणोदितिं
मध्याह्ने पदयो श्शिरोविदधतीं प्रेक्ष्याशुचिं निद्रितां :।
तस्याःकुक्षिमथैत्य गर्भमसुहृतच्छिन्दन्खल स्सप्तधा
दैवेन प्रतिबोधितां द्रुतमतोनिर्गत्यचासांत्वयत् ॥ ५२ ॥

இந்திரன் தன்னைக் கொல்லவிரும்பித் தவஞ்செய்பவளும், நடுப் பகலில் கால்வைக்குமிடத்தில் தலையைவைத்து அசுத்தமாய் நித்திரைசெய்பவளுமான திதியைப் பார்த்துக் கெட்ட எண்ணத்துடன் பணிவிடை செய்து துஷ்டத்தனத்தினால் அவள் வயிற்றிற் புகுந்து அவளது கருப்பத்தை எழுதுண்டாக்கி, தெய்வவசமாய் அத்திதி தேவி விழித்துக்கொள்ளச் சீக்கிரம் அதிலிருந்து வெளியேறிச் சமாதானம் செய்தான்.

४७ वायूनामधिपान्स्वगर्भशकलान्शक्रेण कृत्वादितिः
सिद्धार्थेहसुराधिपश्च समभूद्योऽलंबुसेक्ष्वाकुजः ।
तस्येदं नगरं विशालनृपतेरित्यूचिवान्कौशिकः
तद्वंश्येन समर्चितस्सुमतिना तत्राऽऽवसद्यामिनीं ॥५३॥

திதிதேவி தன் கருப்பத்தின் துண்டுகள் ஏழையும், ஏழு வாயுக்களாக இந்திரனால் செய்வித்து, தானும், இந்திரனும் இவ்விடம், விரும்பிய பயன் பெற்றார்கள். இக்ஷ்வாகு, அலம்புசை இவர்களின் புத்திரனான விசாலனென்ற அரசனுடைய, நகரமிது என்று சொல்லி விசுவாமித்திரர் அக்குலத்திலுதித்த சுமதி பூபதியால் பூஜிக்கப்பெற்று அன்றிரவை அவ்விடம் கழித்தார்.

४८ सम्प्राप्तमिथिलापुरोपवनगोरामेण पृष्टोमुनिः
शून्यंवीक्ष्यतपोवनं तमवदद्दुर्वर्त्मगं गौतमः ।
कृत्वानिर्वृषणं वृषाणमनघोऽहल्यां सशल्यांशिलां
पूतां त्वत्पदरेणुनारघुपते तप्तुं हिमाद्रिंययौ ॥ ॥५४॥

காலையில் மிதிலாநகரத்தின் ஸமீபவனத்தில் சென்று மனிதஙளஞ் சாரமில்லாத தபோவனத்தைப்பார்த்து இதுயாருடையது? என்று ராமன் கேட்க விசுவாமித்திரர் சொல்லுகிருர் இது கௌதம முனியின் ஆசிரமம். இவ்விடத்தில் துர்மார்க்கத்தில் நடந்த இந்திரனை விருஷணமில்லாமலும், துக்கமடைந்த அஹல்யையை சிலையாக்கி, ஹேராமா! உன் திருவடியின் தூளியால் பரிசுத்தமாகும்படியும் சபித்து, கௌதமமுனிவர் தவம்புரிய இமயமலைக்குச் சென்ருர்

४९ मेषाण्डं पितृदैवतैरुपहृतं प्राप्यैवशक्रस्सुखी
श्रीमन्मानय गौतमस्यदयितां इत्युक्त एत्याऽऽश्रमं ।
पश्यन्रूपवतीं मलाऽऽवृततनुं पूजांचिराकांक्षितां
गृह्णन्तस्य सदारकस्य मिथिलांसर्षियंयौ राघवः ॥ ५५ ॥

இந்திரன் பித்ருதேவதைகளால் கொடுக்கப்பெற்ற யாகபசுவின் அண்டத்தைப்பெற்று சுகமடைந்தான். பாக்கியம்பெற்ற ஹேராமா! கௌதம மனைவியைச் சுகமடைவிக்கவேண்டுமென்று விசுவாமித்திரர் சொல்லவும் ராமன் கௌதமாசிரமம் வந்து அழுக்கடைந்த சரீரம்பெற்று ரூபவதியான அவர் மனைவியைப்பார்த்து பத்னீயுடன் வெகுகாலமாகச் செய்யவிரும்பிய அவருடைய அதிதி பூஜையைப்பெற்றுக்கொண்டு ரிஷிகளுடன் மிதிலைக்குச் சென்ருர்:

५० संप्राप्तं यजनाऽऽलयंकुशिकजं संशृण्वता मैथिल
क्षोणीशेन पुरोधसा सकुशलप्रश्नं विधायार्हणां ।
पृष्टःकाविहबालकावितिमुदा प्रत्यब्रवीत्सोऽनयोः
आत्मीयक्रतुरक्षणं खलदमंत्वच्चाप जिज्ञासुतां ॥ ५६ ॥

மிதிலாதிபதியான ஜனகமகாராஜன் தன்யாகசாலையில் விசுவாமித்திரர் வந்திருப்பதைக்கேட்டு, புரோஹிதரால் குசலபிரச்னத்துடன் அதிதிபூஜைசெய்வித்து, இவ்விடம் வந்த குழந்தைகள்யார் என்று வினவும்பொழுது விசுவாமித்திரர் தன்யாகத்தை ரக்ஷித்து துஷ்டர்களை சிக்ஷித்து உன் சிவதனுசைப்பார்க்க விரும்பி, இவ்விராம லக்ஷ்மணர்கள் வந்தார்கள் என்பதை சந்தோஷமாய் தெரிவித்தார்.

५१ माता मे पितरंगतेति मिथिलाऽऽचार्यो विजानन्मुदा
रामं प्रत्यवदद्गुरुस्तु भवतोराजाससैन्यः पुरा ।
भूमिंक्षत्रसरित्तपोवनयुतां सर्वामिमां संचरन् ।
रम्यंदाशरथेददर्श मुनिभिर्युक्तं वसिष्ठाऽऽश्रमं ॥ ५७ ॥

மிதிலையின் ஆசார்யரான சதாநந்தர் தன் தாயான அஹல்யை, தந்தையான கௌதமருடன் சேர்ந்ததை அறிந்து, மனமகிழ்ந்து ராமனிடம் தெரிவிக்கிறார். "ஹே தசரதமைந்தா ! உன் குரு விசுவாமித்திரர் முன்காலத்தில் அரசனாயிருந்து சேனையுடன் வயல் நதி தபோவனங்களுடன் கூடிய பூமி முழுவதும் ஸஞ்சரித்து ரிஷிகளுடன் கூடிய அழகிய வசிஷ்டாசிரமத்தைப் பார்த்தார்.

५२ ब्रह्मिष्ठोऽपि वसिष्ठ आगतमसु स्वीयाऽऽलयंकौशिकं ।
पृच्छन्तं कुशलं समर्च्य विधिवत्पृष्ट्वामुदाऽनामयं ।
सैन्यैस्तत्रनिमन्त्रयन्कथमपि स्वाद्यं च तं भोजनं
भोक्तुं भोजयितुंन्ययुङ्क्त तपसाकामप्रदां नन्दिनीं ॥५८॥

மிகவும் பெரியவரான வசிஷ்டர் தன் இருப்பிடம் வந்து க்ஷேம பிரச்னம் செய்யும் விசுவாமித்திரரை விதிப்படி ஆரோக்ய பிரச்னத்துடன் பூஜித்து சைனியத்துடன் அவ்விடத்தில் ருசியான உணவை உண்ணவும் உண்பிக்கவும் வேண்டிக்கொண்டு விரும்பினதைக் கொடுக்கும்படி நந்தினிக்குத் தவத்தினால் உத்திரவு செய்தார்.

५३ धेनुं कामदुहंबहुत्वातिरसं केनाप्यनास्वादितं ।
स्वस्मै सैनिकसंयुतायददतीमन्नं चतुर्धा द्रुतं ।
गाधेयोगगनाश्रयै रभिमता माहर्तुकामो मुनिं
साम्नानैव शशाक तं वशयितुं दानैरनल्पैरपि ॥ ५९ ॥

ஒருவரும் முன் சாப்பிடாததும், அதிகருசியுள்ள பக்ஷ்ய, போஜ்ய, லேஹ்ய, சோஷ்யமென்னும் நான்கு விதமான உணவை விரும்பிய அளவு தனக்கும் சைன்யங்களுக்கும் கொடுக்கும் தேவர்களும் விரும்பிய, காமதேனுவை சீக்கிரம் அபஹரிக்க நினைத்து, நல்லவார்த்தையாலும், அளவற்ற தானங்களாலும், விசுவாமித்திரர் வசிஷ்டரை வசமடைவிக்கமுடியவில்லை.

५४ आकृष्टा नृपकिंकरै स्सुरगवी ब्रह्मर्षिणा प्रेरिता
हुंभाऽऽरावसुतर्जिताहितकुलाहंभाव विद्रावका ।
म्लेच्छान्यानसृजत्क्षणादभयदान्तानात्मसैन्यद्रुहः
विश्वामित्र उपात्तबाणनिकरस्संक्लेशयामास सः ॥ ६० ॥

அரசனுடைய கிங்கரர்கள் பலமாக இழுக்கும்பொழுது, காமதேனு வசிஷ்டருடைய உத்திரவால் ஹூம் என்ற சப்தத்தால் சத்ருக்களை அதட்டி, அவர்களின் கருவத்தைக் குறைக்கும்படியும், அரசனது சைன்யத்தை அழித்து தனக்கு அபயமளிக்கும்படியும், எந்த மிலேச்சர்களை உண்டுபண்ணினதோ அவர்களை விசுவாமித்திரர் க்ஷணநேரத்தில் அம்புகளால் துன்பமடைவித்தார்.

५५ ब्रह्मर्षिं चगवाऽऽत्मनोऽतिबलिनस्सष्ट्वा किरातादिमान्
तै स्सैन्यं क्षपयन्तमात्मतनयान्दृष्ट्वा शतं हुंकृतेः
निक्षिप्याऽऽत्मधुरं शुचाकुशिकजःशिष्टेऽवशिष्टे सुते
सन्तुष्टात्तपसाहरादधिगतःशस्त्राण्यथा पीडयत् ॥ ६१ ॥

காமதேனுவால் அதிக பலமுள்ள கிராதர்களை உண்டுபண்ணி, அவர்களால் தன் சைனியங்களையும், ஹூங்காரத்தினால் தன் புத்திரர்கள் நூறு பேர்களையும் அழித்த வசிஷ்டரைப் பார்த்து விசுவாமித்திரர் யோக்கியனாய் மீதியிருந்த மைந்தனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்து, தவத்தால் சிவபெருமானை சந்தோஷமடைவித்து, சஸ்திரங்களைப்பெற்று பிறகு துன்பமடைவித்தார்.

५६ क्रुद्धं स्वाऽऽश्रम पीडनेन झटिति स्वब्रह्मदण्डंकरे
गृह्णन्तं सकलास्त्रमप्यतिबलं नित्यंग्रसन्तंभृशं
तिष्ठक्षत्रिय पांसनेति परुषं संतर्जयन्तं मुनिं
वीक्ष्य प्राप्तु मियेष स द्विजनितां भूपः प्रकुर्वन्तपः॥६२॥

தன் ஆசிரமத்திற்குத் துன்பம் செய்ததால் கோபமடைந்து, சீக்கிரம் எல்லா அஸ்திரங்களையும் எப்பொழுதும் மிகவும் பக்ஷிக்கும் தன்பிரம்மதண்டத்தைக் கையில் தரித்துக்கொண்டு, அதிக பலம் பெற்று, ஹே க்ஷத்ரியாதமா! நில்லடாவென்று கடோரமாய் அதட்டும் வசிஷ்டரைப் பார்த்து, விசுவாமித்திரர் அரசனயிருந்தும் தவம் செய்து பிராமணனாக இருக்கவேண்டுமென்று விரும்பினர்.

५७ ब्राह्मण्यार्थिनि कौशिके वरतपः कुर्वत्युपेतांगने
निर्विण्णे तनयाधिलाभइव सद्राजर्षिशब्दे विधेः ।
इक्ष्वाकुप्रभवस्त्रिशंकुनृपतिस्तन्वा यियासुर्दिवं
स्वाऽऽचार्येणनिराकृतो गुरुसुतानस्तौद्द्विधातुंक्रतुं॥ ६३ ॥

பிராமணத்தன்மையை விரும்பி விசுவாமித்திரர் மனைவியோடு கிடைத்த ஹவிஷ்யந்தன் முதலிய நான்கு புத்திர லாபத்திலும், பிரம்மா கொடுத்த ராஜரிஷி சப்தத்திலும், வெறுப்பைப்பெற்று, தவம் செய்யும்பொழுது, இக்ஷ்வாகு குலத்தில் உதித்த மூன்று பாபங்களை 3 மூனையாக முளைத்ததால் திரிசங்குவென்று பெயருள்ள திரிசங்கு அரசன் சரீரத்தோடு சுவர்க்கம் செல்ல விரும்பி, யாகம் செய்ய குருவால் அவமதிக்கப்பெற்று, குரு புத்திரர்களைத் துதித்தான்.

५८ वासिष्ठै र्गमितो गुरुध्रुगिति स क्रूरां सुचण्डालतां
विश्वस्यातनुसौख्यदं मकरुणं त्वन्वर्थसंज्ञंमुनिं ।
प्राप्य स्वं विनिवेदयन्शरणयन्नस्याहितं दुस्सहं
दुर्दैवंव्यपनीय कांक्षितमिदं कर्तव्यमित्यब्रवीत् ॥ ६४ ॥

குருத்துரோகி என்று வசிஷ்ட புத்திரர்களால் கொடிய சண்டாளத்தன்மையை அடைவிக்கப்பெற்ற அத்திரிசங்கு மன்னன் உலகங்களுக்குக் கருணையால் அதிக சுகத்தைக் கொடுத்து உலகமித்திரனென்று உண்மைப் பெயர் பெற்ற விசுவாமித்திரரை, சரணம் அடைந்து, பொருக்கமுடியாத தன் கஷ்டத்தைத் தெரிவித்து, துரதிருஷ்டத்தை விலக்கி என் விருப்பத்தைச் செய்யவேண்டுமென்று சொன்னன்.

५९ आर्तं प्राप्तनिजांघ्रिमूलममलं संत्यक्तगत्यन्तरं
भूपं तं परिरक्षितुं विरचयन्यज्ञं तदिच्छाकरं ।
सर्वानृत्विज आनयन्क्रतुविदस्स्वं निन्दतो दुर्हृदः
वासिष्ठान्समहोदयंमृतभुजोऽकार्षीन्निषादंखलं ॥ ३५ ॥

துன்பமடைந்து வேறுகதியில்லாமல், தன் காலடியில் வந்த குற்றமற்ற அந்தத்திரிசங்கு பூபதியைக் காப்பாற்றுவதற்கு அவன் விருப்பம் நிறைவேறும்படி யாகம் செய்ய முயற்சித்து யாக நிபுணர்களான எல்லா ருத்விக்குகளை வரவழைத்து, தன்னை நிந்திக்கும் வசிஷ்ட புத்திரர்களையும், அம்மகோதயனையும், பிணம்தின்பவர்களாகவும், துஷ்ட வேடனாகவும், விசுவாமித்திரர் செய்தார்.

६० आर्त्विज्यं यजनेमुनीन्कुशिकजो भीताऽऽगतान्कारयन्
आहूतानमराननागतवतो वीक्ष्यत्रिशंकुं नयन् ।
द्यां सद्यस्तपसाततो निपतितं मध्येनभस्स्थापयन्
नक्षत्राणि ससर्जदक्षिणदिशिक्षिप्रं मुनीन्सप्तच ॥ ६६ ॥

பயந்துவந்த ரிஷிகளை யாகத்தில், ருத்விக்குகளின் வேலையை செய்யச் செய்து தேவர்களைக் கூப்பிட்டும் வராமலிருந்ததைப் பார்த்து, விசுவாமித்திரர் தவத்தால் திரிசங்குவை சுவர்க்கத்திற்கு அனுப்பியும் அதிலிருந்து உடனே விழும் அவ்வரசனை ஆகாயத்தின் நடுவில் இருக்கவைத்து, தெற்குமார்க்கத்தில் வேறு நக்ஷத்திரங்களையும், ஸப்தரிஷிகளையும், சீக்கிரம் சிருஷ்டித்தார்.

स्रक्ष्यन्तं स्वगणान्स्वराजमपरं वीक्ष्यातिभीतास्सुराः
कुर्वन्तोऽनुनयैः प्रशान्तमनसं तद्वाक्यमन्वर्थकं ।
आस्तान्नित्यमवाक्शिरा स्सनृपतिर्वैश्वानरस्याङ्गनः ।
बाह्यास्त्वद्रचिता मुने त भभितस्तान्त्वित्यगु स्स्वाऽऽस्पदं

வேறு, தங்களுடைய கூட்டங்களையும், அரசனையும், விசுவாமித்திரர் சிருஷ்டிக்கப்போவதைப் பார்த்து பயந்து தேவர்கள், ஹே முனே! அவ்வரசன் தலைகீழாகவும், எப்பொழுதும் உன்னால் சிருஷ்டிக்கப் பெற்ற நக்ஷத்திரங்கள் அவ்வரசனுக்கு நான்கு புறமும், அக்கினி மண்டலத்திற்கு வெளியில் இருக்கட்டும் என்று நல்ல வார்த்தைகளால் அவருடைய வார்த்தையை உண்மையாகவும் அவர் மனதை கோபத்திலிருந்து நீங்கியதாகவும், செய்து தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

६१ विघ्नोऽत्रेति विसृज्यदक्षिणदिशं प्राप्ते मुनौ पश्चिमां
कुर्वत्युग्रतपोऽम्बरीषनृपतिर्यष्टुं दिनेशान्वयः ।
नष्टे यज्ञपशौ स तत्प्रतिनिधिं विक्रीयगोभि र्नरं
तस्याऽऽयान्निकटं त्वृचीकज शुनश्शेपं रथनाऽऽनयन् ॥

இவ்விடத்தில் இடையூறுவென்று தெற்கு திசையை விட்டு மேற்கு திசையை யடைந்து, விசுவாமித்திரர் கடோரமாய் தவம் செய்யும்பொழுது, சூரியகுலத்திலுதித்த அம்பரீஷ அரசன் யாகபசு காணாமற்போக அதற்கு பதிலாக ரிசிகரின் புத்திரனை சுனச்சேபனை அநேக பசுக்களைக் கொடுத்து யாகம் செய்வதற்காக, விலைக்கு வாங்கி ரதத்திலேற்றி அழைத்துக்கொண்டு, அம்முனியின் சமீபம் வந்தான்.

६२ स्वस्रीयं स विमोचयन्यममुखात्त्यक्तं पितृभ्यां मुनिः
भूपं प्रापयितुं च यज्ञफलं गाथे उभे इन्द्रगे ।
यूपं प्राप्य सुवाचयन्नतिमुदं कुर्वन्द्वयो स्स्वाऽऽत्मजान्
कोपं प्राप्य शपन्वचोऽकलयतोऽकार्षीच्चिरं सत्तपः ॥

தாய்தந்தைகளால் விடப்பெற்ற சகோதரியின் புத்திரனை எமனுடையவாயிலிருந்து விடச்செய்யவும், அம்பரீஷனுக்கு யாக பலனைக் கொடுக்கவும் கருதி விசுவாமித்திரர் இந்திரன், உபேந்திரன் இருவர்களைப்பற்றிய இரண்டு மந்திரங்களை யூபஸ்தம்பத்திலிருந்து சுனச்சேபனைச் சொல்லச் செய்து, அத்தேவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்து தன் வார்த்தையைக் கேட்காத தன் புத்திரர்களை (வசிஷ்டபுத்திரர்களைப்போல்) கோபித்து, சபித்து வெகுகாலம் மிகுந்த தவத்தைச் செய்தார்.

६३ प्राप्तेवर्षसहस्रके स ऋषितां स्रष्टाव्रतान्तेसरः
प्राप्तां मूर्तमिवान्तराय मतनुप्रेम्णाऽऽनयन्मेनकां ।
भुक्त्वा तां दशवत्सरान्स्वसदने स्मृत्वा मनस्यज्ञतां
श्रीमान् सत्तप आचरत्सुरभियं कुर्वन्महत्त्वप्रदं ॥ ७० ॥

ஆயிரவருஷம் சென்றதும், பிரம்மாவினிடமிருந்து ரிஷி என்ற பெயரைபெற்று தவத்தின் முடிவில் உருவங்கொண்ட இடையூறு போல் குளத்திற்கு வந்த மேனகையை அதிக அன்புடன் ஆலயத்திற்கு அழைத்து, பத்து வருஷம் சுகித்து, முட்டாள் தனத்தை மனதில் நினைத்து, விசுவாமித்திரர் மகாரிஷி என்ற பெயரைப்பெற்று, தேவர்கள் நடுங்கும்படி நற்றவம் செய்தார்.

६४ रंभां लोभयितुं स्व मात्ततपसं प्राप्तां हिमाद्रौ सुर
प्रेष्यांकोकिलरूपिणाद्युपतिनाकामेन चानुद्रुतां ।
कृत्वाब्राह्मणपावितां च दृषदंक्रोधं कुलघ्नं ततः
संत्यज्यश्वासितं चकारपरमं भीमंमहर्षिस्तपः ॥ ७१ ॥

ஹிமாசலத்தில் தவம் செய்யும் தன்னை, ஆசையை அடையும்படி செய்யவந்த குயிலின் உருவம் பெற்ற இந்திரனாலும், மன்மதனாலும் பின் தொடரப்பெற்ற இரம்பை என்ற தேவதாசியை, சிலையாகவும் வசிஷ்டரால் பரிசுத்தமாகவும், செய்து அதன் பிறகு குலத்தைக் கெடுக்கும் குரோதத்தையும் போக்கி மூச்சுவிடாமல் மிகவும் பயங்கரமான தவத்தை விசுவாமித்திரர் செய்தார்.

६५ यावद्वर्षसहस्र मुत्तमगुणं वाचंयमत्वं भजन्
त्यक्त्वोदग्दिशमास्थितोऽथहारितं प्राचीं तपस्यन्मुनिः ।
इन्द्रायार्थित ओदनं च स ददत्सक्षुत्सुरैः प्रापितः
ब्राह्मण्यं चिरकांक्षितं बहुमतो ब्रह्माऽऽत्मजेनाभवत् ॥

வட திசையைவிட்டுப் பிறகு கிழக்கு திசையை அடைந்து, மேலானமௌன குணம்பெற்று, ஆயிர வருஷம் தவம்செய்து, விசுவாமித்திரர் பசியால் வருந்தி இந்திரனால் வேண்டப்பெற்று அவன் பொருட்டு உணவை அளித்து, வெகுகாலமாய் விரும்பிய பிராமணத் தன்மையை தேவர்களிடம் பெற்று, வசிஷ்டராலும் வெகுமதிக்கப் பெற்றார்.

६६ राम त्वद्गुरु रेष वीर्यसदनं सर्वास्त्रवेत्तेति च
स्वाऽऽचार्यस्तुतवैभवं स मिथिलानाथो निबद्धांजलिः ।
त्वत्कीर्तिं भगवन्पिबन्नविरतः को नेति संप्रीणयन्
श्वोद्रक्ष्यामि विभातइत्यथ गृहं सप्रेम तं प्रापिपत् ॥

ஹேராமா! உன்குருவான விசுவாமித்திரர் பலத்திற்கு இருப்பிடம். எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவர் என்று தன் ஆசார்யரால் புகழ்ப்பெற்ற பெருமை வாய்ந்த அம்முனியை, மிதிலாதிபதி அஞ்சலி பந்தம் செய்து, ஹே சுவாமி! தங்கள் புகழைக்கேட்டு போதுமென்று திருப்தி அடைந்தவன் யார் என்று சொல்லி ஸந்தோஷமடைவித்துப் பிறகு நாளைக்காலையில் பார்க்கிறேன் என்று அன்புடன் வீட்டிற்கு அனுப்பினான்.

६७ त्वच्चापस्यादिदृक्षयादशरथ प्रेमाऽऽत्मजावागतौ
शीघ्रंदर्शय चापमित्यभिमिहित स्तं प्रत्यवादीन्नृपः ।
देवैरुद्रशरासनं स्वदयिते त देवरातेऽर्पितं
राज्ञां सन्निकषायितं बलवतां तद्वंशजैरर्च्यते ॥ ७४ ॥

ஹே அரசே! உன் வில்லைப் பார்க்க விரும்பி, தசரதமைந்தர்கள் வந்தார்கள். அவர்களுக்குச் சீக்கிரம் வில்லைக்காண்பிக்கவேண்டும் என்று சொல்லும் விசுவாமித்திரரைப் பார்த்து ஜனக மகாராஜன் பதில் சொல்லுகிறான். பலமுள்ள அரசர்களுக்கு உரைகல் போன்ற சிவதனுசை தேவர்கள் தங்களுக்குப் பிரியமான தேவராதனிடத்தில் கொடுத்தார்கள். அவனுடைய குலத்திலுதித்தவர்கள் அதைப்பூசிக்கிறார்கள்.

यज्ञार्थं कृषताऽवनिं हलमुखात्सीताऽधिलब्धा मया
कन्या सेयमयोनिजेति भगवन्वीरत्वशुल्का कृता ।
चापाऽऽकर्षण भग्नभूमिपतयः क्रुद्धाः खलानिर्जिताः
रामश्चेन्नमयेद्धनुर्ममसुतां तस्मै प्रदद्यामिति ॥ ७५ ॥

ஹே பகவானே! சயனயாகம் செய்ய பூமியை உழுகும் பொழுது கலப்பையினுடைய நுனியிலிருந்துக் கிடைத்த சீதையை அயோனிஜை என்று நினைத்து, பலப்பந்தயம் வைத்தேன். வில்லை வளைத்துத் தோர்வை அடைந்த அரசர்கள் கோபங்கொண்டு துஷ்டத்தனம்செய்ய, அவர்களை ஜயித்தேன். ராமன் இந்த வில்லை வளைத்தால், என் பெண்ணை அவனுக்குக் கொடுப்பேனென்று சொன்னான்

६७ पञ्चाशच्छतराजसेवकसमानीतां समुद्घाटयन्
मंजूषा मृषिशासनेन स धनुर्मध्ये गृहीत्वाद्रुतं ।
रामः पूरणकाम एव कुतुकादारोपयन्भंजयन्
व्यक्षीणान्नृपसाध्वसेन धरणेः पुत्रीं सदस्याऽऽशयं ॥७६॥

ராமன் விசுவாமித்திரருடைய உத்திரவால், ஐயாயிரம் சேவகர்கள் கொண்டு வந்த பெட்டியைத்திறந்து, சீக்கிரம்வில்லை நடுவில் பிடித்து,வளைக்கவேண்டுமென்று விரும்பி சந்தோஷமாய் அதில் நாணைப் பூட்டி ஒடித்து அரசனுடைய (மாப்பிள்ளை கிடைக்காத) பயத்தையும், சீதையையும், சபையோர்களின் மனதையும், ஆச்சர்யமாய் விலக்குவாங்கினார்.

रामाय क्षितिजां प्रदातुमनघां वीर्याऽऽर्जितां साऽऽशयः
त्वानेतुं ससुहृद्गणं दशरथं वैदेह आत्मांऽऽस्पदं ।
विश्वामित्र सहायता मुपगतिं तत्पुत्रयो र्ज्ञापयन्
चापत्रोटन माशुगान्स्वसचिवान्साकेतगान्प्राहिणोत् ॥

பலத்தால் கிடைத்த குற்றமற்ற சீதையை, ராமனுக்குக் கொடுக்கவிருப்பி ஜனக மகாராஜன் தசரதரிடத்தில் அவருடைய புத்திரர்கள் விசுவாமித்திரருடன் இவ்விடம் வந்திருப்பதையும், வில்லை முறித்ததையும் தெரிவித்து இஷ்டமித்திரர்களுடன் அவரை தன் இருப்பிடத்திற்கு அழைத்து வரும்படி, சீக்கிரகதிபெற்ற தன் மந்திரிகளை அயோத்திக்கு அனுப்பினர்.

६८ दूतैर्मैथिल भूपतेरभिमतं साकेतसंम्राड्विदन्
सामात्य स्सुमति प्रशस्तमनघं तस्यान्वयं चिन्तयन् ।
उद्वाहं चिरकांक्षितं विधिकृतं पुत्रस्य संश्रावयन्
श्वोयात्रेति वदन्जनान्पुरभवान्प्राहर्षय त्तत्क्षणं ॥ ७८ ॥

ஜனக மகாராஜனுடைய அபிப்பிராயத்தை அவனுடைய தூதர்களால் அறிந்து தசரதமன்னன் மந்திரிகளுடன், ஜனகவம்சத்தை வித்வான்கள் போற்றுகிறார்களென்று நினைத்து, வெகுகாலமாய் விரும்பினதும், தெய்வத்தால் கிட்டினதுமான புத்திரனுடைய விவாகத்தைக் கேட்கும்படி செய்து, நாளைதினம் விவாகயாத்திரை என்று சொல்லிபட்டணத்தின் ஜனங்களை அதேக்ஷணத்தில் சந்தோஷமடைவித்தார்.

६९ आदाय द्रविणंमहद्धनभृतः पुंसः पुरोयापयन्
सेनाभिश्चतुरंगिणीभि रमितो वीतो दशस्यन्दनः ।
संप्राप्त स्ससुहृद्रथेन मिथिलां तद्वल्लभेनार्चितः
तत्पुत्रीकरपीडनायसुखित स्तत्राध्यवात्सीन्निशां ॥ ७९ ॥

கஜானு வேலைக்காரர்களை மிகுந்த பொருளை எடுத்துக்கொண்டு முன்போகச்செய்து; நான்கு விதசேனைகளால் நான்கு புறமும் சூழப்பெற்று, தசரத அரசன் சினேஹிதர்களோடு ரதத்திலேறி, மிதிலை வந்து, ஜனகரால் பூஜிக்கப்பெற்று, அவன் பெண்ணின் கல்யாணத்திற்காக சுகமாய் அவ்விடத்தில் அன்றிரவைக் கழித்தார்.

७० वैदेहं सकुशध्वजं सामितिगं प्राप्तोरघूणांवरः
सप्रेयान्स्वकुलस्य शुद्धिममितां संवेदयिष्यन्निव ।
धर्म्यानामनुवंशजान्गुरुमुखादास्वाऽऽत्मजं व्याहरन्
आचख्यौ तनुजे प्रदेहि सुभगेस्वस्यात्मजाभ्यामिति ॥

குசத்வஜனுடன் சபையிலிருக்கும் ஜனகரை, தசரதர் சினேகிதர்களோடு அடைந்து, தன் குலத்தின் அளவற்ற சுத்தியைத் தெரிவிப்பவர்போல், மனுமுதல் தன் புத்திரர்கள் வரை தர்மத்திலிருந்து தவறுதவம்சத்தினர்களை, குருவின் மூலம் தெரிவித்து, உன்னுடைய பெணகளைத் தன் புத்திரர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று, சொன்னார்.

७१ वंश्यान्तान्निमिपूर्वजान्स्वपरजान्पुर्यामिथे राजनं
सांकाश्ये धनुषे सुधन्वविजयं तत्रानुजस्थापनं ।
उक्त्वाप्राह विदेहजो दशरथं गोदानकं पित्र्यभे
नान्दीकर्म ततस्तृतीयदिवसे वैवाहिकं कुर्विति ॥ ८१ ॥

நிமிமுதல் தான் வரையிலும், தன் குலத்திலுதித்தவர்களையும், மிதி என்ற அரசன் மிதிலையைச் சம்பாதித்ததையும், சாங்காச்ய தேசத்தில் சிவதனுசுக்காக சுதன்வா என்ற அரசனை ஜயித்து, அவ்விடத்தில் தம்பியை இருக்கவைத்ததையும் சொல்லி, ஜனகர், இன்றைக்கு மகாநக்ஷத்திரத்தில் சமாவர்த்தனமென்ற கோதானகர்மாவையும், நாந்தீசிராத்தத்தையும், இதிலிருந்து மூன்றாவது தினத்தில் விவாகத்தையும் செய்விக்கவேண்டுமென்று, தசரதரிடம்வேண்டினார்.

७२ स्वभ्रातुश्च कुशध्वजस्यतनये पुत्रान्तराभ्यां स्वयं
दातुं पूर्णमनोरथं कुशिकजब्रह्मात्मजाऽऽज्ञासितं ।
वैदेहं स तथाऽस्त्विति प्रतिवदन्गेहे पितॄन्प्रीणयन्
पुत्राणां स ऋषिश्चकारमुदितो गोदान मिक्ष्वाकुजः॥८२॥

வசிஷ்டர், விசுவாமித்திரர், இவர்களால் உத்திரவு செய்யப்பெற்று, தானே தன் சகோதரனுன குசத்வஜவனுடைய பெண்களை, மற்ற புத்திரர்களான பரதசத்ருக்னர்களின் பொருட்டு கொடுக்க நினைக்கும் ஜனக மகாராஜனை, அவ்விதமே ஆகட்டுமென்று சொல்லி தசரதர், ரிஷிகளுடன், கிருகத்தில் பித்ருக்களைப்ரீதிசெய்வித்து, சந்தோஷமாய் புத்திரர்களுக்கு சமாவர்தனமென்ற கோதானகர்மாவைச் செய்தார்.

७३ स्वस्रीयेक्षणवांछया द्रुतमुपायातं युधाजिन्नृपं
पूज्यंकेकय राजसूनुमजजे संपूजयत्यात्मजैः ।
संयुक्ते कृतकौतुकै र्जनकसंदिष्टे प्रविष्टे प्रपां
सेष्टे श्रेष्ट गुणेवासिष्ठ मुनिनाऽकारिक्रियौद्वाहिकी ॥८३॥

சகோதரியின் புத்திரனை பரதனைப் பார்க்கவிரும்பி சீக்கிரமாய் சமீபம் வந்த, பூசிக்கத்தகுந்த கேகயமன்னனின் மைந்தனை யுதாஜித் அரசனை, நற்குணம்பெற்ற தசரான் பூஜித்து,விவாகாங்கமாய் பிரதி சரங்கட்டிக்கொண்ட புத்திரர்களோடு, ஜனகருடைய உத்திரவால் இஷ்டமித்திரர்களுடன், கல்யாணமண்டபத்தில் பிரவேசிக்க வசிஷ்டமுனிவர் விவாக காரியம் செய்வித்தார்.

अग्रा वाज्यसमेधिते प्रमुदिते सीतोर्मिलामांडवीः
कन्या स्सश्रुतकीर्तिका इयमिति प्रीत्या स्वपित्राऽर्पिताः ।
रामाद्या स्सहजा उदूह्यविधिना भार्या गुरोस्संमताः
आनम्रा मुदमीयु रंबरगतै स्संमुक्तपुष्पै स्स्तुताः ॥ ८४॥

அக்கினி ஆஜ்யாஹூதியால் விருத்தியடைந்து, சந்தோஷம
டைய தங்கள் பிதாவால் கொடுக்கப்பெற்ற, சீதை, ஊர்மிளை, மாண்ட
வி, சுருதகீர்த்தி என்ற கன்னிகைகளை ராமன் முதலிய சகோதரர்
கள் விதிப்படி விவாகம் செய்துகொண்டு பெரியோர்களுக்கு ஸம்
மதமாக தேவர்களால் புஷ்பவருஷத்துடன் துதிக்கப்பெற்று,
வணங்கி, சந்தோஷித்தார்கள்.

७४ निर्वर्त्योत्सवमागते कुशिकजे प्रालेयशैलं द्रुतं
स्वीकृत्यातनुयौतकं दशरथः पुत्रै स्सभार्यै स्ततः ।
साकेतं प्रतिनिर्गतः कटुरुतां पश्यन्पतत्त्यावळिं
मार्गेसव्यगतीन्मृगांश्च गुरुणावेदाशुभंतद्वयं ॥ ८५ ॥

கல்யாணத்தை முடித்து, விசுவாமித்திரர் சீக்கிரம் இமயமலை
செல்லவும், தசரதர், மனைவிகளுடன் கூடிய புத்திரர்களோடு, மிதிலை
யிலிருந்து, அயோத்திக்குப் பிரயாணம் செய்து வழியில் கடோரசப்
தம் பெற்ற பக்ஷிகளின் கூட்டத்தையும், வலம் வரும் மிருகங்களை
யும் பார்த்து அசுபத்தையும் அதன் விலக்கையும், குரு மூலம் அறிந்
தார்.

भूमिं कंपयति प्रवाति पवने दिङ्मण्डलेऽन्तर्हिते
ध्वान्तैः कर्मविमोहितेऽखिलजने क्षत्रान्वयस्यान्तकः ।
अंसेतीक्ष्णधुरं दधच्च परशुं विद्युद्गण प्रोज्वलं
रामं कोसलजा सुतं भृगुसुतो रामो बभाषेक्रुधा ॥ ७६ ॥

பூமி நடுங்கும்படி காற்று வீச, இருளால் திசைகள் மறைய,
எல்லா ஜனங்களும் வேலைசெய்யத் தெரியாமல் இருக்க, அரசர்களி
ன் குலத்திற்கு எமன் போன்றவனும், மின்னல்களின் கூட்டம்
போல் விளங்கும் கூர்மையான நுனிபெற்ற கோடாளியைத் தோ
ளில் தரித்தவனும், பிருகுவின் புத்திரனுமான பரசுராமன், கௌசல்
யாராமனைப்பார்த்து சினந்து உரைத்தார்.

௭௫ त्वष्ट्रा निर्मित मात्तसारमखिल क्षेमंकरं शंकर
श्रीपत्यो र्धनुषो द्वयं विवदतो राद्यंहरे र्हुंकृतेः ।
भग्नंमैथिल हस्तगंयदधुना राम त्वयाखण्डितं
त च्चेदन्यदृचीकगामि भवता पूर्येत योत्स्येत्त्वया ॥८७॥

(பலத்தில்) விவாதம் செய்துகொள்ளும் சிவன், விஷ்ணு, இவர்களுக்கு எல்லா உலகங்களுக்கும் க்ஷேமமளிக்கும்படி, விசுவகர்மாவால் சிருஷ்டித்துக் கொடுக்கப்பெற்ற இரண்டு தனுசுகளில், சிவதனுசு, ஹரியின் ஹூங்காரத்தால் முறிந்து, ஜனகனுடைய கையிலிருந்து இப்பொழுது உன்னால் ஒடிந்தது. மற்றொரு விஷ்ணு தனுசோ, ரிசீகமுனியை அடைந்தது. (ஹேராமா!) அதை நீ வளைத்தால் உன்னுடன் யுத்தம் செய்வேன்.

௭௬ इत्युक्तिं भृगुनन्दनस्य परुषां श्रुत्वाऽऽर्य यत्त्वत्कृतं
क्षत्राणांनिधनं क्षमं पितृवध प्राप्तप्रकोपस्यतत् ।
किंवीर्येण विनाकृतोऽहमिति तद्धस्ताद्गृहीत्वा धनुः
शीघ्रं त द्विनमय्य तत्र च शरं रामोऽकरो त्सज्यकं ॥

இவ்விதம் கடோரமான பரசுராமனுடைய வார்த்தையைக் கேட்டு, கௌசல்யாராமன் ஹே அய்யா! தாங்கள் செய்த க்ஷத்ரிய சம்ஹாரம் பிதாவின்வதத்தால் உண்டான கோபத்திற்குத் தகுந்தது. நான் பலமற்றவனு என்று, அவருடைய கையிலிருந்து வில்லைப்பெற்று, சீக்கிரம் அதை வளைத்து, அதில் பாணத்தை நாண்கயிரோடு தொடுத்தார்.

विप्रत्वात्कुशिकाऽऽत्मजस्य भगिनी पुत्रात्मजत्वा न्नमे
वध्य स्त्वं मम मार्गणोनविफलः किं लक्ष्यमस्येति सः ।
रामेणाभिहितो भृगो स्तनुभवो लोकान्तपस्याऽऽर्जितान्
पश्यन्बाणहतान्जगाम तपसेतूर्णं महेन्द्राचलं ॥ ८९ ॥

"பிராமணனுயிருப்பதாலும், விசுவாமித்திரரின் சகோதரியின் பேரனுயிருப்பதாலும் உன்னை வதம் செய்யமாட்டேன். என் பாணமும் வீணாகாது. இதற்கு எது குறி"யென்று கௌசல்யா ராமன் சொல்லும்பொழுது, பரசுராமன் தவத்தால் சம்பாதித்த உத்தமலோகங்கள் ராமபாணத்தால் அடிபெற்றதைப் பார்த்து, தவம்புரிய மஹேந்திராசலத்திற்குச் சீக்கிரம் சென்றார்.

௭௭ विष्णवस्त्रं विजयप्रदं जलपतौ विन्यस्य भीतं पुनः
जातं तात मुपाऽऽनयन्सपृतनं हृष्टः प्रविष्टः पुरीं।
रामो भ्रातृभि रर्चितः पुरजनै राशंस्यमानोऽखिलैः
वृत्तै स्सन्महितै र्गुरून्सविनयः प्रारंजयद्वेश्मनि ॥९०॥

வெற்றி கொடுக்கும் விஷ்ணுவின் அஸ்திரத்தை, வருணனிடத்தில் வைத்து, பயந்து மறுபடி பிறந்த பிதாவைச் சைனியங்களுடன் அழைத்துக்கொண்டு, ராமன் சந்தோஷமாய் பட்டணத்தில் பிரவேசித்து, எல்லா ஜனங்களாலும் சிலாகிக்கப்பெற்றும், பூஜிக்கப்பெற்றும், தம்பிகளுடன் வணங்கி பெரியோர்கள் சிலாகிக்கும் நன்னடைகளால் அரண்மனையில் பெரியோர்களை பிரீதி அடைவித்தார்.

पित्रा केकयराजवेश्म भरते संप्रापिते सानुजे
राम स्सानुज आवहन्गुरुवचो मूर्ध्नौ प्रजारंजयन्।
सौधे सौख्यविधायके दयितया साकं चिरं संवसन्
राम स्तोषमदोषमन्त रतनो दन्योऽन्य वेद्यं रहः ॥९१॥

பரதன் பிதாவினுல் கேகயராஜனுடைய அரமனையைத் தம்பி சத்ருக்னனுடன் அடைய, ராமன் தம்பியான லக்ஷ்மணனுடன், பெரியோர்களின் உத்தரவைத் தலையால் தரித்து, ஜனங்களை ரஞ்சித்து சுகம் கொடுக்கும் உப்பரிகையில் பத்னியோடு, வெகு காலம் வசித்து, ரகசியத்தில் ஒருவருக்கொருவர் அறியத் தகுந்த ஆனந்தத்தைக் குற்றமற மனதில் அடைந்தார்.

विद्वन्मोदकरे रघूत्तम कृपा संदायके प्रापके
वांछार्थानतिदुर्घटान्करतलं रामायणे सुन्दरे।
पुण्यं बालचरित्र माशुपठतामज्ञत्वसंपादितं
पापं दूरगतं विधाय हृदये रामो विभात्यन्वहम् ॥ ९२ ॥

வித்வான்களுக்கு சந்தோஷமளிக்கும், ராமனுடைய கிருபையைக் கொடுக்கும், கிடைக்காத விரும்பிய பொருளையும் கையை அடைவிக்கும், சுந்தரராமாயணத்தில் புண்யமான பாலகாண்டத்தைப்படிக்கிறவர்களின் அறியாமல் செய்த பாபத்தைச் சீக்கிரம் தூரத்தில் விலக்கி, அவர்களின் மனதில் தினந்தோறும் ராமன் விளங்குகிறார்.

प्रासूत जानकी यं सा सुब्रह्मण्य कुटुंबिनी।
तत्कृते रामचरिते बालवृत्त मुदीरितम् ॥ ९३ ॥

சுப்பிரமணியனுடைய மனைவி ஜானகி ஈன்ற, சுந்தரம் இயற்றிய, சுந்தரராமாயணத்தில், பாலகாண்டம் பூர்த்தி அடைந்தது.

பாலகாண்டம் முற்றிற்று.

अयोध्याकाण्डः प्रारभ्यते

அயோத்தியாகாண்டம்.

१ प्राप्तो मातुलगेह मश्वपतिना संलालितः पुत्रवत्
शत्रुघ्नेन समान्वितोऽथ भरतो वृद्धं स्वतातं स्मरन् ।
पित्राऽस्मारि सुखोषितेन सततं वर्षीयसा प्रोषितः
सुप्रीतेन सुतेषु वीर्यनिलय श्रीरामजुष्टेनच ॥ ॥ १ ॥

பிறகு அம்மான் வீட்டுக்குச் சென்ற பரதன், சத்துருக்னனோடு கூட, கேகயராஜனால் புத்திரன்போல் லாலனை செய்யப் பெற்றும், வயது சென்ற தகப்பனாரை நினைத்து இருப்பதுபோல், வயது முதிர்ந்து சுகமாயிருப்பவரும், புத்திரர்களிடத்தில் அன்பு பெற்றவரும், பலத்திற்கு இருப்பிடமான ராமனால் பணிவிடை செய்யப் பெற்றும், தசரதர் அயலூர் சென்ற பரதனை எப்பொழுதும் நினைத்தார்.

२ वीक्ष्य प्रेम महत्तरं पुरभुवां ज्येष्ठे गुणावेष्टिते
पुत्रे स्वीय जरां विचिन्त्य नितरां भीदायकोत्पातकान् ।
रामाय स्ववसुन्धरां चिरभृतांदातुं निबद्धस्पृहः
सामन्तान्नरपुंगवा न्दशरथो द्रागानयत्स्वान्तिकम् ॥ २ ॥

பட்டணத்தின் ஜனங்களுக்கு நற்குணம் பொருந்திய மூத்த குமாரனிடத்தில் அதிக அன்பையும், தன் கிழத்தனத்தையும், பயத்தைக்கொடுக்கும் அபசகுனங்களையும் பார்த்து, ஆலோசித்து, வெகு காலமாக அரசு செலுத்திய தன் பூமியை ராமனிடம் கொடுக்க விரும்பி, தசரதமகாராஜன் சுற்றத்தாரசர்களையும், பெரிய மனிதர்களையும், சீக்கிரம் தன் சமீபத்தில் வரவழைத்தார்.

३ श्रीमान् कोसलनायको नगरजान् प्राप्तार्हणान्विष्टरं
प्रापय्य स्वचिकीर्षितार्थ मतनु प्रेम्णाऽखिलैर्वांच्छितं ।
न्याय्यं तन्निरवद्य मात्मकुलजैः प्राणानिव प्रीणितान्
सौमुख्येनानिवेदयन् द्विगुणित प्रीतीन्चकाराऽऽश्रितान् ॥

கோசல மன்னன் பட்டணத்தின் ஜனங்களே, மரியாதையுடன் ஆசனத்திலமர்த்தி, எல்லோர்களும் விரும்பினதும், அதிக அன்போடு தான் செய்யத் தீர்மானித்ததுமான குற்றமற்ற ராம பட்டாபிஷேகத்தை, நீதிக்கு அனுகுணமென்று தன் முன்னோர்களால் தங்கள் பிராணங்களைப்போல் பிரீதி அடைவிக்கப்பெற்ற அவர்களிடம், சுமுகமாய் தெரிவித்துத் தன் அபிமானிகளே இரண்டு பங்கு சந்தோஷமடைவித்தார்.

त्यक्त्वा मां विगतापराध मचिरं किं वांच्छथे त्यात्मजं
पृच्छन्तं प्रभु मात्मनः प्रकृतय श्चन्द स्स्व मित्यब्रुवन् ।
राजन् ते तनयो गुणौघ निलयो वीर्योच्छ्रयैकालयः
रामो ऽद्यैव विधीयतां नृपपदे माभू द्विलंबो ऽप्यणुः ॥

"குற்றமற்ற என்னே விலக்கி, என் புத்திரனே சீக்கிரம் ஏன் விரும்புகிறீர்கள்?" என்று வினவும், தங்கள் எஜமானனிடம் நகரவாசிகள், "ஹே அரசே! நற்குணங்களின் கூட்டத்திற்கு இருப்பிடமும், மிகுந்த பலத்திற்கு ஒரேயிடமும், தங்களின் புத்திரனுமான ராமனே இப்பொழுதே சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்யவேண்டும். கொஞ்சங்கூட தாமதம் வேண்டாம்," என்று தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

३ वाक्यं सांजलिबंध मात्मपुरगैः प्रोक्तं प्रियेणाऽऽददत्
संभारान्गुरुशासनेन नृपतिः पुत्राभिषेकोचितान् ।
प्रापय्याग्निगृहं जगत्कुशलदं रामं सुमन्त्रेणतं
स्वस्याभ्याश मुदारवृत्त मवदी दित्यात्मकामं रहः ॥ ५ ॥

அஞ்சலிபந்தத்துடன் தன் நகரவாசிகள் சொன்ன வார்த்தையைப் பிரியமாக அங்கீகரித்து, தசரதபூபதி குருவின் உத்திரவால் புத்திரனுடைய பட்டாபிஷேகத்திற்குரிய சாமான்களை, அக்கினிஹோத்திரசாலைக்கு அனுப்பி, உலகத்திற்கு க்ஷேமமளிக்கும் பெருந்தன்மை பெற்ற ராமனைச் சுமந்திரனால் தன் சமீபமடைவித்து, ரகசியத்தில் சொல்லப்போகிற வண்ணம் தன் விருப்பத்தை உரைத்தார்.

वत्सत्वं धुर मावहानवरतं भूमे धृतां पूर्वजैः ।
श्वः पुष्यान्वित वासरे सुकृतव न्नित्युक्ति मुर्वीपतेः ।
श्रुत्वा हर्ष मुपागता प्रियवचो वक्त्रे च रामप्रसूः
प्रदाद्भूरि धनानि पौरजनता स्वेष्टान्सुरान्प्रार्चयत् ॥ ६ ॥

"பாக்யம் பெற்ற ஹே குழந்தாய்! முன்னோர்கள் எப்பொழுதும் செய்த பூமி பரிபாலனத்தை, நாளை புஷ்ய நக்ஷத்திரம் கூடிய தினமுதல் நீ செய்யவேண்டும்" என்று அரசனுடைய வார்த்தையைக் கேட்டு ராமமாதாவான கௌசல்யை, சந்தோஷமடைந்து, பிரிய சமாசாரம் சொன்னவர்களுக்கு, மிகுந்தபொருளை சன்மானமளித்தாள். பட்டணத்தின் ஜனங்களும் தங்களின் இஷ்டதெய்வங்களை பூஜித்தார்கள்.

४ जन्मर्क्षं परुष ग्रहै रुपहतं जानन्निरीक्ष्याखिलान्
उत्पातान्महतीं विचिन्त्य विपदं रामं पुनश्चाऽऽनयन् ।
भूपस्त्वाकृतकृत्यतां प्रकथयन्तद्राज्यसेकादृते
विघ्नान्वारयितुं स्त्रियोपवसतिं रात्रौ चरेत्यन्वशात् ॥ ७ ॥

ஜன்ம நக்ஷத்திரத்தில் குரூர கிருகங்கள் பிரவேசிப்பதைத் தெரிந்து, அயோத்தியின் அரசன் எல்லா அபசகுனங்களைப் பார்த்து, மிகுந்த தீங்கை நினைத்து, ராம பட்டாபிஷேகம் நடக்காமலிருந்தால் ஜன்மஸாபல்யமில்லை என்று சொல்லி, ராமனை மறுபடியும் அழைத்துவந்து, இடையூறுகளைத் தடுப்பதற்கு மனைவியுடன் இரவில் உபவாஸம் இருக்கவேண்டுமென்று,உத்தரவிட்டார்.

पित्रादेश निवेदनाय सविधं प्राप्तो जनन्या सुत
क्षेमाया र्चितदेवया मुदितया स्वाशीर्भि रामोदितः ।
रामो वत्स ! भवत्सुखाय धरणीं प्राप्स्यामि तातादिति
व्याहृत्या परितोषयन्ननुजानिं वेश्माऽऽययौ सीतया॥ ८ ॥

பிதாவினுடைய உத்திரவைத்தெரிவிப்பதற்கு ராமன், தாயாரின் சமீபம் சென்று, புத்திரனுடைய க்ஷேமத்திற்காக தெய்வத்தைத் தொழுது, சந்தோஷம் அடைந்த அன்னவளின் ஆசீர்வாதம் பெற்று, ஆனந்தித்து, தம்பி லக்ஷ்மணனை, "ஹே குழந்தாய்! உனது சுகத்தின் பொருட்டு தரணியைத் தகப்பனிடம் பெறப் போகிறேன்," என்று சொல்லி, சந்தோஷமடைவித்து, மனைவியுடன் அரண்மனைக்கு வந்தார்.

५ वैदेही रघुनायकौ कुलगुरुं प्राप्त व्रतोपोषणौ
कृत्वा तं विधिव द्रुतं रथगतं रथ्या जनै रावृताः ।
संमृष्टा स्समलंकृता स्सलिल संसिक्ता विलोक्या ऽऽगतं
राजा प्रेक्ष्य सभाजयन्परिषदं मुक्त्वा ययौ स्त्रीगृहं ॥ ९ ॥

சீதைக்கும், ராமனுக்கும் விருதத்தின் உபவாசத்தை விதிப்படி நடத்திவைத்து, சீக்கிரம் ரதத்திலேறி, சுத்தம் செய்து, ஜலம் தெளித்து அலங்கரித்து, ஜனங்கள் சூழ்ந்த ரதமோடும், வீதிகளைப்பார்த்து, வந்த குலகுருவைப் பூஜித்து, சபையைக் கலைத்து, தசரதர் அந்தப்புரம் சென்றார்.

६ रामो जुह्व दघापहं हवि रथो दीप्ते कृशानौ शुचिः
तच्छिष्टं सह भार्यया प्रमुदितो भुंज न्निजां देवतां ।
ध्यायन्सन्कुशसंस्तरे च चरमे यामेनिशायास्तुतिं
श्रुत्वावन्दिकृतां चकार नियमं सांध्यं विधिज्ञ स्तदा ॥

பிறகு ராமன் பரிசுத்தமாயிருந்து, விதியைத்தெரிந்து, அக்னியை வளர்த்து, அதில் பாபந்தீர்க்கும் ஹவிசை ஓமம் செய்து, அதின் சேஷத்தை சந்தோஷமாய் பாரியையோடு புசித்து, தர்ப்பாசனத்தில் விற்றிருந்து, தன் தெய்வத்தை தியானித்து, நிசையின் கடைசியாமத்தில் துதிபாடகர்களின் தோத்திரத்தைக் கேட்டு, அப்பொழுது சத்யாவந்தனம் செய்தார்.

श्रुत्वोदन्त मिमं धरादिविषदां पुण्याह घोषं जनः
हृष्टो देवगृहेषु सौधशिखरेष्वभ्रंलिहेषु द्रुषु ।
बध्वा केतुपटान्मुहु र्दशरथं स्तुत्वा मिथोऽभाषत
श्रीरामो यदभूत्पति स्तदधुना भाग्यं निजं ह्यहिति॥११॥

இந்த சமாசாரத்தையும், பிராமணர்களின் புண்யாகவாசனத்தின் சப்தத்தையும் கேட்டு, ஜனங்கள் சந்தோஷமடைந்து, தேவாலயங்களிலும், உப்பரிகைகளின் சிகரங்களிலும், ஆகாயமளாவும் மரங்களிலும், துவஜவஸ்திரங்களைக்கட்டி, அடிக்கடி தசரதரைத் துதித்து, ராமன் அரசனுக ஆகப்போகிறதால் இப்பொழுது நமது பாக்கியம் சிலாக்கியம் என்று, ரகசியத்தில் பேசினர்கள்.

७ श्रुत्वा पौरजनस्य हर्षनिनदं प्रासाद मारुह्य सा
वीक्ष्या लंकृत पत्तनं निकटगां धात्रीं च तस्या मुखात् ।
ज्ञात्वाराज चिकीर्षितं विधिकृतामर्षा ऽवरुह्य क्रुधा
तस्मादेत्य शयान केकयसुतां इत्यब्रवीन्मंथरा ॥ १२ ॥

பட்டணத்தின் ஜனங்களின் சந்தோஷ சப்தத்தைக்கேட்டு, உப்பரிகையில் ஏறி, அலங்கரித்த பட்டணத்தையும், சமீபத்தில் வந்த ராமனுடைய உபமாதாவையும், பார்த்து, அவள் முகமாக அரசனுடைய தீர்மானத்தைத் தெரிந்து, தெய்வவசமாக பொறுமை அடைந்து, கோபமாய் அதிலிருந்து இறங்கி, படுத்திருக்கும் கைகேயினிடம் வந்து, மந்தரை சொல்லப்போகிற விதம் தெரிவித்தாள்.

किं मूढे समुपास्थिते निरवधावक्षय्यदुः खे सुखं
शेषे जागृहि मे वच श्शृणु सुतं स्वं पाहि मां संकटात् ।
भर्तांते स शठो वृथा ह्यनुनयै दूरेत्वपोह्य द्रुतं
सापत्नेय मतिप्रियं त मधुना राज्येऽभिषेक्ष्यत्यहो ॥१३॥

"ஹே அசடே! அழியாத துக்கம் எல்லையற்றதாய் கிட்டி இருக்கும்பொழுது, என் சுகமாய் தூங்குகிறாய்? விழித்துக்கொள், என் வார்த்தையைக்கேளு. என்னையும், தன்னையும், புத்திரனையும், கஷ்டத்திலிருந்து காக்கவேண்டும். உன் புருஷன் வஞ்சகன். வீண் சமாதானம் சொல்லி, உன் புத்திரனை தூரத்தில் விலக்கி, மிகவும் பிரியமான சக்களத்தியின் புத்திரனைச் சீக்கிரம், இப்பொழுதே பட்டாபிஷேகம் செய்விக்கிறான். ஆச்சரியம்."

८ श्रुत्वा प्रेमकरं वच श्चिरमतं रामाभिषेकान्वितं
हृष्टामाभरणं निजं च ददतीं दास्याह तां कोपना
उत्सृज्यैतदनर्घ मप्याधिगतं किं बालिशे हृष्यसि
स्वारातेः कुशले महाभयकरे त्रायस्व न स्त्वज्जनान्॥१४॥

வெகுகாலமாக விரும்பிய ராமபட்டாபிஷேகத்தோடு கூடிய சந்தோஷ சமாசாரத்தைக்கேட்டு, சந்தோஷம் பெற்று, தன் ஆபரணத்தையும் பெறச்செய்யும் கைகேயியைப் பார்த்து, கோபமடைந்து, கிடைத்த விலையற்ற ஆபரணத்தையும் அகற்றி, கூனி கூறுகிறாள். "ஹே முட்டாளே! அதிக பயத்தைக்கொடுக்கும் தன் சத்துருவின் சௌக்கியத்தால் ஏன் சந்தோஷமடைகிறாய்? உன் பந்துக்களான எங்களைக் காப்பாற்றவேண்டும்."

सौमित्र्योः प्रथम स्तदीयस्सुहृ त्त्वत्पुत्रगन्ता ऽन्तिमः
शिष्टो राज्यमना स्स एव भरत स्स्वस्याहित स्तं नयेत् ।
रामो राज्यगतो विदेश मपि वा लोकान्तरं वा स्वयं
दासी कोसल राजजां परिजनै स्सेविष्यसे तां चिरं॥१५॥

"சுமித்திரையின் புத்திரர்களில் மூத்தவன் சக்ரவர்த்தியின் புத்திரனுக்குச் சிநேகிதன். இளையவன் உன் புத்திரனை அடைந்தவன். மீதியிருக்கும் உன் புத்திரனே ராஜ்யத்தை விரும்புவதால், ராமன், தனக்கு சத்ருவென்று, ராஜ்யம் பெற்றதும், அவனை தேசாந்தரத்திற்காவது, பரலோகத்திற்காவது அனுப்புவான். வெகுகாலம் நீ தாசியாய், கோசல ராஜனின் மகளை, தன் பரிஜனங்களுடன் சேவிக்கப்போகிறாய்."

रामो मे प्रथम स्सुतोऽनुजसुहृत्कुब्जे वृथा तप्यसे
रामादन्वखिलं गमिष्यति सुतो नीत्येति तां भाषिणीं ।
वाण्याविष्टवचा अवोच दनघां कर्तुं स्ववश्यां पुनः
स्वामिन्यद्य तव स्नुषां व्यसनगां शोचामि संचिन्त्यतां ॥

"ராமன் என் மூத்த குமாரன். சகோதரவாஞ்சையுள்ளவன். ஹே கூனி! நீ வீணாய் வருந்துகிறாய். ராமனுக்குப் பிறகு, என் புத்திரனும் நியாயப்படி எல்லாவற்றையுமடையப்போகிறான்," என்று சொல்லும் குற்றமற்ற கைகேயியைப் பார்த்து, கூனி வார்த்தையில் வாணி என்ற, வாக்தேவியின் ஆவேசம்பெற்று, அக்கைகேயீ தனக்கு வசமாகும்படி, மறுபடியும் சொல்லுகிறாள். "ஹே எஜமானி! இப்பொழுது துக்கமடைந்த அந்த உந்தன் மருமகளை நினைத்து, வருந்துகிறேன்."

रामो राज्य मवाप्नुया द्यदि तत स्तस्याऽऽत्मज स्तत्सुतः
त्वत्पुत्रो न कदाऽप्युपैष्यति महीं नूनं भवेन्निर्धनः ।
मातुल्याय वियोजित श्चिर मसौ न प्रेमपात्रं भवेत्
राज्यं प्रापय धर्मत स्तमितरं कान्तार मद्य द्रुतं ॥१७॥

"ராஜ்யத்தை ராமன் பெற்றால் அவனுக்குப் பிறகு, அவனுடைய புத்திரனும், பேரனும், பூமியை அடையப்போகிறார்கள். ஒருநாளும் உன் புத்திரன் அடையப்போகிறதில்லை. நிச்சயமாய் பொருளற்றவனாய் ஆவான். வெகு காலமாக அம்மான் வீட்டிற்கு அனுப்பப்பெற்றதால், ராமனுக்கு அவன் அன்பனாகவும் ஆகமாட்டான். நியாயப்படி அவன் ராஜ்யத்தையும், சத்ருவை காட்டையும், இப்பொழுதே சீக்கிரம் அடைவிப்பாய்."

वाक्यं स्वीयं मनर्थदं हित मिति स्वीकृत्य मत्प्रेयसि
ब्रूहित्वं मतदाप्युपाय मिति ता माभाषिणीं स्वामिनीं ।
कुब्जा प्राह मनीषिणी शृणु पुरा प्रोक्तं त्वया प्रेमतः
त्वद्भर्ता त मनुष्यतांबरचरप्रीत्यै रिपुं शंबरं ॥ १८ ॥

"தீங்கைக் கொடுப்பினும் தன் வார்த்தையை பாங்காகப் பெற்று, என்னிடத்தில் அன்பு பெற்றவளே! உன் விருப்பம் நிறைவேறும்படி, உபாயத்தை உரைக்கவேண்டும்." என்று சொல்லும் எஜமானியைப் பார்த்து, புத்தி பெற்ற கூனி கூறுகிறாள். "முன் காலத்தில் நீ அன்போடு சொன்னதைக்கேளு. உன் புருஷன் தேவர்களின் பிரீதியின் பொருட்டு, சம்பராசுரனுடன் போர்புரிந்தான்."

संग्रामेऽथ निशाचरै र्विरचिते सारथ्य चातुर्यतः
रक्षन्त्या रिपुसंकटा द्रुत मसून्स्वस्य द्वि रानन्दतः ।
यत्प्रादायि वरद्वयं स्वपतिना काले तदात्मेप्सिते
स्वीकुर्या मिति तत्त्वया निपुणया विन्यस्तमास्तेऽद्य च ॥

"பிறகு ராக்ஷஸர்கள் செய்யும் யுத்தத்தில், தேரோட்டுவதின் திறமையால், சத்ருக்களின் சங்கடத்திலிருந்து, தன் பிராணன்களை இரண்டு தடவை சீக்கிரம் காப்பாற்றியதால், உன் புருஷன் சந்தோஷமாய் கொடுத்த இரண்டு வரங்களையும், தான் விரும்பிய காலத்தில் பெறுவேனென்று, நிபுணையான நீ இப்பொழுதும் அப்படியே வைத்திருக்கிறாய்."

तं सत्येन निबध्य मन्मथवशं सत्यं वदन्तं मुहुः
प्रोक्तार्थौ वृणुया स्तदन्यदखिलं नेच्छ प्रियाऽऽलापिनि ।
धैर्यं कुर्वधिकं मनस्यभिमत प्राप्तिं विनाऽऽनन्दना
माभूरित्युपदिष्ट बुद्धि रविश त्कोपालयं कैकयी ॥ २० ॥

“ஹே பிரியமாய் பேசும் திறமை பெற்றவளே! மன்மதனுக்கு வசமாக இருந்து, அடிக்கடி சமாதானம் சொல்லும் உன் புருஷனை, சத்யத்தில் இருக்கவைத்து, முன் சொன்ன இரண்டு வரங்களையும் பெற்றுக்கொள். அவைகளைத் தவிர மற்றவை எல்லாம் பெற விரும்பாதே. மனதில் அதிகமான தைர்யம் அடையவேண்டும். விருப்பத்தை அடையாமல் ஆனந்திக்காதே.” என்று புத்தி உபதேசம் பெற்ற கைகேயி, கோபகிருகத்தில் பிரவேசித்தாள்.

उत्सृज्या ऽऽभरणान्यनर्घशयनं कान्तेप्सितं स्वस्मितं
राम प्राप्त मरण्यभूमि मथवा मां प्राप्तलोकान्तरां ।
द्रक्ष्यस्यद्य जयो भवेद्यदि सुधी स्त्वां भूषयिष्याम्यहं
हेम्ना चे त्यभिधाय सेवकजनं राजस्त्र्यशेत क्षितौ ॥२१॥

விலையற்ற ஆபரணங்களையும், படுக்கையையும், புருஷன் விரும்பும் தன் புன் சிரிப்பையும் விலக்கி, “ராமன் வனம் சென்றதையாவது, நான் பரலோகம் சென்றதையாவது, ஹே புத்திசாலியே! இப்பொழுது பார்க்கப்போகிறாய். ஜயம் கிடைத்தால், தங்கத்தால் உன் அங்கத்தை, அலங்கரிக்கப்போகிறேன்.” என்று தாசியினிடம் சொல்லி, மன்னனுடைய மனைவி மண்ணில் படுத்தாள்.

राजा हर्ष महोदधौ निरवधौ मग्न स्सुधी दुर्विधेः
कैकेयीं मृगराडिवातिनिबिडं जालं दुराशां स्मरन् ।
श्रुत्वा भृत्यवचो धरा मथ शुचा प्राप्तां निरस्ताऽऽस्तरां
दृष्ट्वोद्विग्न उपेत्य सत्वर मतिप्रेम्णा ऽभिमृश्याब्रवीत् ॥२२॥

புத்திசாலியான அரசன் எல்லையற்ற சந்தோஷ சமுத்திரத்தில் முழுகி, துரதிருஷ்டத்தால் சிங்கம் மிகவும் நெருங்கிய வலையை நினைப்பதுபோல், துராசைபெற்ற கைகேயியை நினைத்து, பிறகு சேவகனுடைய வசனத்தைக் கேட்டு, துக்கத்தால் விரிப்பு அற்ற பூமியில் படுத்த மனைவியைப் பார்த்து, வருந்தி, வேகமாய் சமீபமடைந்து, மிகுந்த அன்பால் தடவிச் சொல்லுகிறார்.

रोगः किन्नु तनौ तव प्रियतमे शत्रुः करोति व्यथां
भैषज्येन निवारयामि भिषजां शौर्येण वा सांप्रतं ।
कस्मै राज्य मपि प्रदापयासि मां कस्मै प्रवासं रुषा
यद्वांछस्यपि तत्करोमि सुकृतै रामेण मे ते शपे ॥ २३ ॥

"ஹே அன்பு நிரம்பிய மனைவி! உன் சரீரத்தில் துன்பம் செய்வது ரோகமா? அல்லது சத்ருவா? இப்பொழுதே வைத்யர்களின் மருந்தாலோ, அல்லது பலத்தாலோ அதை விலக்குகிறேன். எவன் பொருட்டு என்னை ராஜ்யத்தைக் கொடுப்பிக்கிறாய்? எவன் பொருட்டு கோபத்தால் தேசாந்தர வாசத்தைக் கொடுப்பிக்கிறாய்? நீ எதை விரும்புகிறாயோ அதைச் செய்கிறேன்," என்று என் புண்யங்களாலும், ராமனாலும் உனக்குச் சபதம் செய்கிறேன்.

११ पथ्यं पत्यभिधान मात्तकुतुका श्रुत्वा ऽथ राज्याहतं
यद्दत्तं भवता पुरा वरयुगं राजन्वृणे तन्मुदा ।
शृण्वन्तु त्रिदशा इदं मम न चे द्द्याः प्रहास्याम्यसून्
राज्यं स्वं भरताय देहि जटिलं रामं त्वरण्यं नय ॥ २४ ॥

நன்மை செய்யும் மன்னனுடைய வார்த்தையைக் கேட்டு, பிறகு மகிழ்ந்த அரசன் மனைவி, அவரை நோக்கி, "ஹே அரசே! முன் காலத்தில் தான் கொடுத்த இரண்டு வரங்களைச் சந்தோஷமாய் வேண்டுகிறேன். தேவர்கள் இதைக் கேட்கவேண்டும். இதை எனக்குக் கொடுக்காவிட்டால், பிராணன்களைப் பரிகரிக்கப் போகிறேன். தன் ராஜ்யத்தை பரதனுக்குக் கொடுக்கவேண்டும். ராமனை ஜடைகளைத் தரிக்கச்செய்து, அரண்யத்திற்கு அனுப்ப வேண்டும்," என்று கூறினாள்.

१२ इत्युक्तिं पतिराप्रियस्य जननीमात्म प्रियाव्याहृतां
श्रुत्वावज्रहतो महीधरऽइव क्लिष्टः पतन्नप्यधः ।
संज्ञां प्राप्य चिरेण तामभिदधौ क्रूरे मतिंत्वीदृशीं
कोऽवादी त्तवगूढविप्रियकरोलोक प्रमोदापहां ॥२५॥

துன்பம் தரும், தன் இன்ப மனைவி இவ்விதம் உரைத்த வார்த்தையைக் கேட்டு, அரசன், வஜ்ராயுதத்தால் அடிபெற்ற மலைபோல் மனம் வருந்தி, மண்ணில் விழுந்து, வெகுநேரத்தில் நினைவுபெற்று, கைகேயியைப்பார்த்து கூறுகிறார். “ஹே துஷ்டே! உனக்கு மறைவாக துன்பமளிக்க கருதி, எவன் ஜனங்களின் ஸந்தோஷம் கெடும்படி, இவ்விதம் புத்தியுரைத்தான்?”

रामो मे भरतादपिप्रियतमश्शुश्रूषयोक्तैः कृतैः
इत्युक्तिश्च पुरातनी स्वकलिताव्यस्मारि किं मुग्धया ।
किंसाधुस्सचकारदुष्ट चरितं येनाद्य निर्वास्यते
कोब्रूयादहितं स्वदैवइवतत्तस्मिन्कृतघ्नं विना ॥ २६ ॥

“பணிவிடையாலும், சொல்லைக் கேட்பதாலும், இராமன் பரதனைவிட, எனக்கு அன்பில் மிகுந்தவன் என்று முந்திய உந்தன் சொல்லை ஹே முட்டாளே! நீ மறந்தாயா? காட்டிற்கு விரட்டும்படி அச்சாது, இப்பொழுது என்ன குற்றம் செய்தான்? தன் தெய்வத்தினிடத்தில் பிழை கூறுவதுபோல், அவனிடத்தில் பிழை கூற நன்றி மறந்தவனைத் தவிர எவன் துணிவான்?”

सस्यं वारि विनाभवेत्स्वमशनं त्यक्त्वा भवेत्प्राणभृत्
त्यक्त्वाराममहंमुहूर्तमपिनस्यां जीववान्पापिनि ।
त्वां राज्ञस्तनयेत्यहोकटु विषां स्वाभावदा माददे
मौर्ख्यात्पूर्वमबुद्धिवन्नाकि मये वैधव्यतो भीस्तव ॥ २७ ॥

“பயிர் ஜலமில்லாமல், உயிர் பிராணி உணவு இல்லாமல் இருக்கும், ஹே பாவி! இராமனில்லாமல் முகூர்த்த நேரங்கூட நான் உயிரோடு இருக்கமாட்டேன். தன்னைக் கொல்லும்படி கொடிய விஷம்பெற்ற உன்னை, முட்டாள்போல், மன்னன் மகளென்று, முன் மணம்புரிந்தேன். அடியே! உனக்கு விதவையின் தன்மையிலிருந்து பயமில்லையா?”

त्यक्तव्येय मनर्थदा खलमतिः प्राप्नोमि तेऽङ्घ्री गती
माभून्नः कुलजे कुलेऽप्ययपनयो निष्कल्मषे त्वत्कृतः ।
वर्षीयस्यधुना कृपा मशरणे प्राणप्रिये कुर्विति
प्रोक्ता प्राह गतत्रपा पतिमसौ वश्याऽतिवश्योच्चकैः ॥

"தீங்கை விளைவிக்கும் இந்த துர்எண்ணத்தைவிடு. உன் பாதங்களில் சரணமடைகிறேன். ஹே நற்குலத்தில் பிறந்தவளே! குற்றமற்ற நமது குலத்தில், உன்னால் கெட்டநடை வேண்டாம். வயது முதிர்ந்தவனும், கதியற்றவனுமான பிராண காந்தனிடத்தில் இப்பொழுது கருணைசெய்யவேண்டும்," என்று சொல்லும் புருஷனைப்பார்த்து, வேலைக்காரிக்கு வசமாயிருக்கும் அக்கைகேயி வெட்கத்தைவிட்டு, உரக்கக் கூறினாள்.

श्येनाय प्रददौ कपोतमवितुं मांसं स्वगात्रादपि
च्छिन्दन्शैब्यनृपो द्विजाय स ददौ नेत्रेत्वलर्को नृपः ।
अन्धायाऽऽदृतसत्य आत्मतनुजे तद्वंशजोत्याहितात्
गोप्त्रैः स्वस्य समर्पितं कथमिदं राजन्जहासि स्वयं॥२९॥

"புறுவைக் காப்பாற்றுவதற்கு, சைப்யனென்று மரசன் தன் சரீரத்திலிருந்து, மாமிசத்தைக்கூட அறுத்துக் கழுகுக்குக் கொடுத்தான். அலர்க்கனென்று மரசன் ஸத்தியத்தைக் காப்பாற்றுவதின் பொருட்டு, நேத்திரமற்ற பிராமணனுக்கு, தன் சரீரத்தில் பிறந்த கண்களையும் பிடுங்கிக்கொடுத்தான். ஹே அரசே! அவர்களின் வம்சத்தில் பிறந்த நீ, தன் மிகுந்த துன்பத்திலிருந்து, காப்பாற்றினவளுக்குக் கொடுத்த இவ்வரத்தை என் தானே கெடுக்கிறாய்."

त्यक्त्वा रामविवासनं कथमपि प्राप्स्यामि नाहं मुदं
धर्म्यं वाऽस्त्विद मन्यथेति नृपते पुत्रेण मे ते शपे ।
इत्युक्त्वा विरतां स्त्रियं शठधियं पश्यन्स दीनोऽवदत्
नाऽऽदद्याद्भरतोऽपि रामरहितं राज्यं सुधी र्दुर्भगे ॥३०॥

"ஹே அரசே! இராமனுடைய வனவாஸம் நீதியிலிருந்து வழுவாமலிருந்தாலும், நீதியற்றதாயிருந்தாலும் அதைத்தவிர, எவ்விதத்திலும் சந்தோஷமடையமாட்டேன், என்று என் புத்திரன் பேரில் சபதம் செய்கிறேன்," என்று சொல்லி ஒய்ந்த வஞ்சகியான மனைவியைப்பார்த்து, துயரமடைந்த தசரதர் சொல்லுகிறார், "ஹே துராசை பிடித்தவளே! புத்திசாலியான பரதன் இராமனற்ற இராஜ்யத்தைப் பெறமாட்டான்."

किं वक्ष्यासि मुदान्विता न्पुरजना न्रामोत्सवं प्रोत्सृजन्
कौसल्यां सगुणां निरस्य विगुणा यत्सेविता तत्फलं ।
प्राप्तं मे कृपणा विदेहतनया लोकान्तरं मां गतं
श्रुत्वा राम मरण्यगं व्यसनगा स्वासूंश्च हा हास्यति ॥

"ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தை நிறுத்திவிட்டு, ஸந்தோஷமுள்ள பட்டணத்தின் ஜனங்களிடம் என்ன சொல்வேன்? நற்குணம் பொருந்திய கௌசல்யையை வெறுத்து, குணமற்ற உன்னை ஆதரித்ததால், இப்பயனைப் பெற்றேன். துக்கிக்கத்தகுந்த சீதை, இராமன் வனம் சென்றதையும், நான் பரலோகம் சென்றதையும் கேட்டுத் துக்கித்து, தன் பிராணன்களையும் இழக்கப் போகிறாள். அந்தோ!"

गच्छ त्वं वनमुग्रमित्यभिहितो राम स्सपद्यास्त्विति
स्वीकुर्वन्शिरसा निदेश मथ स प्रयादरण्यं मुदा ।
यद्येष प्रवदेत्क्रुधा नतु वनं गच्छेय मित्युत्तरं
स्यादेतत्प्रियदं विशुद्धहृदयो नैवाभिजानीत तत् ॥ ३२ ॥

"பயங்கரமான காட்டிற்கு, நீ போகவேண்டும், என்று சொன்னதும், இராமன் உடனே அப்படியே ஆகட்டுமென்று உத்திரவை சிரமேற்கொண்டு, ஸந்தோஷமாய் கானகம் சென்றுவிடுவான். கோபத்தினால் காட்டிற்குப் போகமாட்டேன் என்று பதிலுரைத்தால், அது ஸந்தோஷமாகும். கபடமில்லாத நெஞ்சுள்ள அன்னவன் அதை அறியான்."

सौख्येनातनुना निनीय समयं रामो वनस्थोऽधुना
कन्दान्स क्षुधितोऽप्यद न्सुतृषितो वार्याविलं संपिबन् ।
निद्रा मेष्यति भूरुहोऽतिकठिने मूले सशय्योचितः
देव्यस्माद्विरम प्रसीद नितरां रामे मयाऽभ्यर्थिता ॥३३॥

"இராமன் அதிக சுகத்துடன் காலங்கழித்து, இப்பொழுது வனஞ்சென்று, பசியால் வருந்தி, கிழங்குகளையும் உண்டு, கலங்கிய ஜலத்தையும் மிகவும் தாகத்தால் குடித்து, படுக்கையில் படுக்கக்கூடியவனாயினும் மிகவும் கடினமான மரத்தின் வேரில் உறங்கப்போகிறான். ஹே அம்மணி! இவ்வெண்ணத்தைவிடு. என் வேண்டுகோளுக்கிறங்கி, இராமனிடத்தில் மிக்க கருணை புரியவேண்டும்."

श्रुत्वा रामविवासनं स भरत स्तुष्येद्ध्रुवं चेत्खलः
तद्दत्तं सतिलं निवापसलिलं लोकान्तरस्थोऽप्यहं ।
नाऽऽदद्यां पतिहान्त्रि भूरि गरळं भुक्त्वा त्रियस्वा धुना
कुर्यां नैव वच स्तवेति विलपन् कर्तव्य मूढोऽभवत् ॥

"இராமனின் வனவாஸத்தைக்கேட்டு மிகவும் துஷ்டனான அப்பரதன் ஸந்தோஷித்தால் அவன் கொடுக்கும் திலோகத்தை பிதுருலோகத்திலிருந்தும் நான் பெறமாட்டேன். ஹே புருஷனைக் கொன்றவளே! விஷத்தை மிகவும் உட்கொள், உயிர்துற, உன் வார்த்தையின்படி செய்யமாட்டேன்," என்று புலம்பி அரசன் ஒன்றும் செய்யத்தெரியாமல் திகைத்தார்.

किंदुष्टेन पतन्त्यध स्तव मुखा दन्तावदन्त्यागिरं
क्रूरां तूर्णमिति प्रतर्ज्य बहुधा तां सांत्वयित्वाखलाम् ।
व्यर्थं विक्ष्यनिजोद्यमं नरपती रात्रिं विषीदन्नयन्
प्रातर्वान्दिकृतं न्यवारय दसौ क्लेश प्रदं बोधनम् ॥३५॥

"ஹே துஷ்டே! கொடிய சொற்களைச் சொல்லும், உன் முகத்திலிருந்து, சீக்கிரம் பற்கள் ஏன் கீழே விழவில்லை"? என்று அத்துஷ்டையைப் பலவிதமாக அதட்டியும், ஸமாதானம் செய்தும், தன் முயற்சி வீணாகுவதை நினைத்து, வருந்தி, இரவைக் கழித்து, அதிகாலையில் துதிபாடகர்கள் செய்யும் துக்கத்தைக் கொடுக்கும் விழித்தலை, அரசன் நிறுத்திவைத்தார்.

१४ सत्यं मा जहि पुत्रवत्सलतया धीमन्निति त्रिः क्रुधा
प्रोच्यात्राऽऽनय राममित्यभिहिते राज्ञ्या ऽथराज्ञ प्रियं।
संभारा न्समुपस्थिता न्सविधिवद्रामाभिषेकोचितान्
कृत्वा राजगुरु र्नृपं त्वरयितुं राजालयायाऽऽययौ ॥३६॥

"ஹே புத்திசாலியே! புத்திரனிடத்தில் அன்பினால், ஸத்தியத்தைக் கைவிடாதே, என்று மூன்று தடவை கோபமாய் கூறி, இவ்விடத்தில் இராமனை அழைத்துவா"வென்று எஜமானியான கைகேயி, எஜமானனிடம் அப்பிரியமாய் தெரிவிக்கும் பொழுது, இராமபட்டாபிஷேகத்திற்குறிய சாமான்களை, சாஸ்திரப்படி சேகரித்து, அரசனிடம் துரிதப்படுத்துவதற்கு, அரசன் குரு அரண்மனைக்குவந்தார்.

दृष्ट्वा द्वारगत स्सुमन्त्र सचिव स्तत्प्रणुन्नो जवात्
गत्वाऽन्त नृपमेत्य विह्वलमतिं सुष्टूय कार्यं वदन्।
मा स्तुह्यानय राम मत्र जगतां तापघ्न मित्युर्वरा
पत्युक्तो मुदितो जनैः परिवृतं तद्वारमायाद्द्रुतं ॥ ३७ ॥

அரண்மனை வாயலிலிருக்கும், சுமந்திர மந்திரி அவ்வஸிஷ்டரால் ஏவப்பெற்று, வேகமாய் உட்சென்று, கலக்கமுற்ற அரசனை அடைந்து, ஸ்தோத்திரம் செய்து, காரியத்தைத் தெரிவிக்கும்பொழுது, "துதிக்காதே. உலகங்களின் தாபத்தைத் தீர்க்கும் இராமனை, இவ்விடம் அழைத்துவா"வென்று அரசனிடம் உத்திரவுபெற்று, ஜனங்கள் சூழ்ந்திருக்கும் அவ்வரண்மனை வாயலுக்கு வேகமாய் வந்தான்.

१५ नानोपायन धारिणः पुरजना ग्राजेक्षणाऽऽकांक्षिणः
पश्यन्तन्मतबोधनाय बहुश स्तत्प्रेरितो ऽन्तर्व्रजन् ।
भूपस्तुत्त्वमये वचोऽकरणतः किं मामवामन्यथाः
तेनेत्युक्त उपाऽऽययौ द्रुतगति स्सूतोऽथ रामाऽऽलयं ॥

பலவிதமான மங்கள திரவியங்களை, எடுத்துக்கொண்டு, அரசனைப்பார்க்க விரும்பும் பட்டணத்தின் ஜனங்களைப்பார்த்து, அவர்களின் விருப்பத்தைத் தெரிவிப்பதற்காக, பலதடவை அவர்களால் ஏவப்பெற்று, உள்ளே சென்று, அரசனைத் துதிக்க, 'ஹே சுமந்திரா! என் உத்திரவைக் கேட்காமல், என் அவமதிக்கிறாய்?'' என்று அவ்வரசன் கூறும்பொழுது, பிறகு சுமந்திரன் வேக நடையோடு, இராமனின் அரண்மனைக்குச் சென்றான்.

१६ दृष्ट्वा तातनियोज्य मात्मसविधं दौवारिकैः प्रापितं
राम स्संविदित प्रवृत्ति रथ तां संमानयन्जानकीं ।
साकं तेन विनिर्गतोभवनतोद्वारास्थितं लक्ष्मणं
शिष्टा ञ्शिष्टजनान्वचोऽमृतरसै स्संप्रीणय न्नप्यभूत् ॥३९॥

துவாரபாலகர்களால், தன் சமீபம் அடைவிக்கப்பெற்ற தகப்பனாரின் தாஸனைப்பார்த்து, இராமன், ஸமாசாரம் உணர்ந்து, ஸீதையை மகிழவைத்து, அச்சுமந்திரனோடு அவ்விடமிருந்து வெளியில் வந்து, வாயலில் இருக்கும் இலக்ஷ்மணனையும், சாதுக்களையும், அன்பர்களையும், வசனாமிருதங்களால் ஆனந்தமடைவித்தார்.

रामो नाथिर मस्तुभूपतिरयं तेनाद्य संलालिताः
सर्वे पुत्रवदीप्सितं चिरमतं लप्स्यामहे सन्ततं ।
सीता कोसलजा समात्तसुकृतायैनं पतिं नन्दनं
च प्रापेति नरैर्वधूभि रशृणोत्संकत्थितं स्वं यशः॥ ४० ॥

"வெகுகாலம்வரை இவ்விராமன் நமக்கு அரசனாக இருக்க வேண்டும். இவ்ரால் இப்பொழுது புத்திரர்கள்போல் ரக்ஷிக்கப் பெற்று, நாம் எல்லோரும் எப்பொழுதும் வெகுகாலமாய் விரும்பிய விருப்பம் பெறுவோம். இவரை புருஷனாகவும், புத்திரனாகவும் அடைந்த, சீதையும், கௌசல்யையும், புண்யம் செய்தவர்கள்" என்று புருஷர்களும், பெண்களும், புகழ்ந்துகொண்டு இருக்கும் தன் புகழை, இராமன் கேட்டார்.

१७ रामो राजपथे रथेन तरसा गच्छन्पुरीं सर्वतः
पश्यन्स्वस्य सुरामणीयक मतिप्रेम्णा जनान्पश्यतः ।
त्यक्ताऽऽहार विहार माशिष मदोदत्तां मुदैवाऽऽददत्
द्वारि स्वानुचरान्निवेश्य सययावन्तः पितुस्त्वो गृहं ॥४१॥

இராமன் ரதத்திலேறி, வேகமாய் ராஜவீதியில் செல்லும்பொழுது, நான்கு புறத்திலும் பட்டிணத்தையும், அதிக அன்போடு உணவையும், விளையாட்டையும் விட்டு, தன் அழகைப்பார்க்கும் ஜனங்களையும் பார்த்துக்கொண்டு, சந்தோஷமாய் அவர்களின் வாழ்த்தலை வாங்கிக்கொண்டே, தன்பின் வந்தஜனங்களை, வாயலில் நிறுத்தி, தகப்பனாரின் அந்தப்புரத்தில் உட்சென்றார்

१८ तातं वीक्ष्य नितान्ततान्त मथ तं दान्तोऽपि रामो गतः
वैक्लब्यं विनमन्विमातर मदस्सामीप्यगां चावदत् ।
देव्येष व्यथते किमस्त्यभिमतं किंवा ऽस्य देहाऽऽमयः
तूर्णं ब्रूहि सशोकमेन मधुना शक्नोमि नैवेक्षितुं ।४२॥

இராமன் மனோதைரியம் பெற்றும், மிகவும் துக்கமடைந்த பிதாவைப் பார்த்து, பிறகு மனங்கலங்கி, வணங்கி அவர் சமீபத்திலிருக்கும் இளைய அன்னையைப்பார்த்து, "ஹே அம்மா! இவர் ஏன் வருந்துகிறார்? இவருடைய விருப்பமென்ன? தேகத்தில் ரோகமா? சீக்கிரம் சொல். இப்பொழுது துக்கிக்கும் இவரைப் பார்க்கமுடியவில்லை".

पृच्छन्तं विनयेन शुद्धहृदयं प्रत्यब्रवी द्राघवं
धृष्टा क्रूरतराऽऽशया तव पिता प्रीतिप्रदं वाऽप्रियं ।
वांछत्येष कृतं त्वया किमपि तद्वक्तुं बिभेति स्वयं
कुर्याश्चेदविलंबितं ध्रुवमये वच्म्यस्य गूढाऽऽशयं ॥ ४३ ॥

வணக்கமாய் வினவும் கபடமற்ற இராமனைப்பார்த்து, மனதில் தைரியமும், கொடிய நெஞ்சும் பெற்ற கைகேயி, பதிலுரைத்தாள். “ஹே ராமா! உன் தந்தை, நன்மையையோ அல்லது தீமையையோ கொடுக்கக்கூடிய ஒரு காரியம் நீ செய்யவேண்டுமென்று விரும்புகிறார். அதைதான் சொல்லுவதற்கு பயமடைகிறார். தாமதமன்னியில் நீ அதைச் செய்தால், அவரின் மறைவான எண்ணத்தைச் சொல்லுகிறேன்!”.

दातर्यात्म कळेबरस्य पितरि क्रोधं न कुर्यां क्वचित्
कुर्यां तद्वच आत्महानिदमपि प्रीत्येति संभाषिणे ।
तस्मै साऽऽह तदर्पिते वरयुगे कान्तारयानं तव
श्रीप्राप्तिं भरतस्य चेत्यत इमं द्राक्सत्यवन्तं कुरु ॥ ४४ ॥

“தன் சரீரத்தைக் கொடுத்த, தந்தையிடம் ஒரு காலத்திலும் கோபம்கொள்ள மாட்டேன். தனக்குக் கெடுதலைக் கொடுப்பினும், அவர் வார்த்தையை அன்போடு செய்வேன்” என்று சொல்லும் இராமனிடம், கைகேயி சொல்லுகிறாள். “உன் பிதா கொடுத்த இரண்டு வரங்களில், ஒன்று உனக்கு வனவாஸம். மற்றொன்று பரதனுக்கு மகுடாபிஷேகம். ஆனதால் சீக்கிரம் இவரை சத்யம் பெற்றவராகச் செய்யவேண்டும்”.

१९ प्राणाऽऽघातसमं वचस्तदीय मनघः श्रुत्वा व्यपेतासुखः
राम स्तामवदत्तथैव करवै ब्रूहीदमक्रोधना ।
तातोयत्स्वमुखेन नावदादिदं किं मद्गुणान्संविदन्
त्वंवा देवितमप्रचोदयादिदंमां तापयत्युत्स्मृतं ॥ ४५ ॥

பிராணவேதனைக்கு சமமான, அக் கைகேயியின் வார்த்தையைக் கேட்டு, குற்றமற்ற இராமன் துக்கத்தைத் துறந்து, "ஹே தேவி! அவ்விதமே நான் செய்கிறேன். தாங்கள் இதை கோபமில்லாமல் சொல்லவேண்டும். என் குணங்களைத் தெரிந்த, தந்தை இதை தன் வாயினால் ஏன் சொல்லவில்லை? நீயும் அவரைத் தூண்டாமல், ஏன் சொல்லவில்லை? இதை நினைத்தால் மனம் வருந்துகிறது".

दुष्टाप्राह पुनस्तमिष्टहृदयं लोकप्रियस्याक्षमा
यद्वक्तुं त्रपते मनोगतमयं साधो नकिंचित्करं ।
ताताऽऽज्ञाप्रवणस्यते किमुचितोऽप्यल्पो विलंबोऽधुना
निर्गच्छत्वमितोऽन्यथातव गुरुर्नस्नातिनोभोक्ष्यति ॥४६॥

ஜனங்களின் சந்தோஷத்தைப் பொறுக்காத துஷ்டையான கைகேயி, மனதில் அன்புபெற்ற இராமனைப்பார்த்து, மறுபடியும் சொல்லுகிறாள். "ஹே சாதுவே! உன் பிதா மனதிலிருப்பதை சொல்லுவதற்கு வெட்கமடைகிறார். அது குற்றமல்ல. தகப்பனாரின் உத்திரவிற்கு வசமான உனக்கு, கொஞ்சம் தாமதமும் தகுதியா? இப்பொது இங்கிருந்து புறப்படவேண்டும். இல்லாவிடில், உன் தகப்பனார் ஸ்நானமும், போஜனமும் செய்யமாட்டார்".

विश्लेषादतिकातरोऽपिसपितुस्तद्वाकशाताडितः
धर्मेमेऽभिरतिर्नचैवविभवेवांछामिदेवि त्विदं ।
प्रीत्यैनं भरतोयथापरिचरेत्कुर्यास्तथा मत्कृते
रामस्तामितिसंवदन्निरसरन्नत्वाऽति तूर्णं ततः ॥ ४७ ॥

இராமன் பிதாவைவிட பிரியமில்லாமலிருந்தும், அக் கைகேயியின் வார்த்தை என்ற சாட்டையால் அடிபெற்று, "ஹே தேவி! நான் தர்மத்தை விரும்புகிறேன். பொருளை விரும்பவில்லை. பரதன் அன்போடு இவருக்கு பணிவிடை செய்யும்படி, எனக்காகச் செய்யவேண்டும். இதை விரும்புகிறேன்" என்று அக் கைகேயியிடம் சொல்லி, வணங்கி, மிகவும் வேகமாக அவ்விடமிருந்து, வெளியில் வந்தார்.

पश्यन्स्वीयसुख व्ययासुख भृशक्लिष्टान्स शोकाजनान्
रामोऽन्वागतलक्ष्मणो जनकृतं छत्राऽदि संवर्जयन् ।
मातु र्वेश्मययावथन्व्यसनगो लीयेत राजाऽऽसने
देव्यस्तानिखिलास्तथा निजपतिं चाऽऽचुक्रुशुश्चुक्रुशुः॥४८॥

இராமன் இலக்ஷ்மணனால் பின்தொடரப்பெற்று, தான் சுக மிழந்து துன்பமடைந்ததால் மிகவும் துயரமடையும் ஜனங்களைப் பார்த்து துக்கித்து, பரிஜனங்கள் பிடித்துவரும் குடை முதலிய வைகளைத்தடுத்து, அன்னையின் அரண்மனைக்குச் சென்றார். பிறகு அரசன் துக்கித்து, ஆஸனத்தில் மூர்ச்சையடையும்படி, அவரின் மனைவிகள் தன் புருஷனை அப்பொழுது நிந்தித்தார்கள். துக்கித்தார்கள்.

२० रामो मातरमाहित व्रतकृशां स्वश्रेयसे देवतां
अर्चन्तीं सतयाऽशनाय भृशमादिष्टोऽवदत्स्वाऽऽशयं ।
अंबात्याहितमागतं सुविपदां तत्कारकं यन्नृपः
साम्राज्ये भरतं न्ययोजयदसौ कान्तारयानेऽद्यमां ॥४९॥

தன் சுகத்திற்காக தெய்வத்தை பூஜிக்கும், விரதம் செய்வ தால் மெலிந்தவளுமான தாயினால் உணவின் பொருட்டு, மிகவும் உத்திரவுசெய்யப்பெற்ற இராமன், தன் எண்ணத்தை, அன்ன வளிடம் தெரிவிக்கிறார். "இப்பொழுது அரசன் பரதனுக்கு ராஜ்யாபிஷேகமும், எனக்கு வனவாஸமும், விதித்திருப்பதால் துன்பங்களைக் கொடுக்கும், மிகுந்த பயம் அம்மா! வந்திருக் கிறது."

वत्स्याम्यष्ट षडेव वत्सरगणान्तत्रेतिरामस्यतत्
श्रुत्वा वाक्यमथांबिका तमवद द्वत्सोन जायेतचेत् ।
दुःखं नेदृशमापतेन्ममतदावंध्या त्वमेवैककं
पत्युः पौरुषतोनमेसुखमभू न्नास्तित्वयाऽप्यद्यतत् ॥५०॥

"காட்டில் பதினைன்கு வருஷங்கள் வஸிக்கப்போகிறேன்," என்று இராமன் வார்த்தையைக்கேட்டு, கௌஸல்யை கூறுகிருள். "ஹே குழந்தாய்! நீ பிறக்காமலிருந்தால், மலடி என்ற ஒரே துக்கத்தைத்தவிர, இவ்வித துக்கம் எனக்கு வராது. புருஷனுடைய பலத்தாலும், இப்பொழுது உன்னாலும், எனக்கு சுகமில்லை."

श्रोष्येतान्यवरै र्वराऽप्यरिजनै रुक्तानि वाक्यान्यहं
स्त्रीणांदुःखमतः परं किमधिकं सामीप्यगेत्वय्यपि ।
भर्त्रैवंसुविमानिताऽस्मिक पुनः क्प्रोषितेस्यान्मृतिः
नूनंमेनलभेयमानमहितप्रेष्याऽधिलब्धं चयत् ॥ ५१ ॥

"உயர்ந்த குலத்தில் பிறந்தும், தாழ்ந்த சத்துரு ஜனங்களின் சொற்களை கேட்கப்போகிறேன். பெண்களுக்கு இதைக்காட்டிலும் மிருந்த துக்கம் என்ன? ஹே குழந்தாய்! நீயும் ஸமீபத்தில் இருக்கும்பொழுது, புருஷனால் இவ்விதம் அவமதிக்கப்பெற்றேன். நீ தேசாந்தரம் சென்றபொழுது, எந்த துயரம் வராது? சக்களத்தியின் வேலைக்காரியின் பெருமைகூட, எனக்கு கிடைக்காது. நிச்சயமாய் மரணம் நேரிடும்.

यस्सेवेत मुहुः प्रमोदभरितो मां सन्ततं सेवकः
सोपेक्षस्सभवेन्निरीक्ष्य भरतं संप्राप्तराजाऽऽसनं ।
कैकेयी मुखकन्दरं कटु वचः पंचाऽऽननै कास्पदं
दृष्वात्वद्रहिता कथं विगतभीः प्राणान्धरिष्येनिजान्॥५२॥

என்னை எப்பொழுதும் அன்போடு ஸேவிக்கும் பரிஜனமும், ஸிம்மாதனத்திலிருக்கும் பரதனைப் பார்த்து, என்னை அவமதிக்கப்போகிறது. சிங்கத்திற்கு இருப்பிடமான குகைபோன்றதும், கடுஞ்சொற்களுக்கு ஓர் இருப்பிடமான கைகேயியின் வாயைப் பார்த்து, எவ்விதம் நீயுமில்லாமல், பயத்தைவிட்டு, பிழைத்திருக்கப்போகிறேன்?

किंस्याद्वज्रमयंममवै हृदयं शोकेनसंवेष्टितं
यन्नै वाद्यसहस्रधा विघटितं किंनावकाशो मम ।
वस्तुंप्रेतपतेः पुरे व्यसनगां यन्माऽऽजिहीर्षत्यसौ
हित्वात्वां नजिजीविषा ममयदि स्वच्छन्दतःस्यान्मृतिः॥

துக்கத்தினுல் கலங்கின, என் மனம் இப்பொழுதே ஆயிரம் துணுக்காக சிதருமலிருப்பதால், வஜ்ரத்தினுல் செய்ததா? துக்க மடைந்த என்னை, எமன் கொண்டுபோக விரும்பாததால், எமபுரி யில் எனக்கு இருக்க இடம் இல்லையா? என் மனம்போல் மரணம் கிடைத்தால், ஹே இராமா! உன்னைவிட்டு பிழைத்திருக்க விருப்ப மில்லை.

कांक्षन्त्याव्यसनक्षयं सुगमिता जातस्यते वत्सराः
एकोऽष्टौद्विगुणी कृतास्सुत मयाप्राप्तातिदौर्भाग्यया ।
त्वं मोघैःपरिवर्धितो व्रतचयै स्सदेवताऽऽराधनैः
यन्मेदुःखमुपाऽऽगतं वनमहं यास्यामि साकं त्वया ॥५४॥

ஹே குழந்தாய்! நீ பிறந்து பதினேழு வருஷங்கள் ஆகின் றன. உன்னுல் துக்கம் விலகுமென்று, இவ்வளவு காலங்கழித் தேன். இவ்விதம் துக்கம் வந்ததால், மிகுந்த பாபஞ்செய்த நான், வீணை விரதங்களையும், தெய்வ பூஜைகளையும், செய்து, உன்னை வளர்த்தேன். உன்னுடன் வனத்திற்கு, நானும் வருவேன்."

२१ रामस्यानुज आह मातरमिदं वाचैवसंप्रीणयन्
नैतन्मेमतमार्यइज्यचारेतोराज्यं सुपूज्यं त्यजन् ।
यत्स्त्र्यादेश वशोगमिष्यति वनं जानाति किंकामुकः
वृद्धस्सोऽवनिपोऽन्यथा वरमतिर्ब्रूयात्प्रियं विप्रियं ॥५५॥

வார்த்தையால், சந்தோஷமடையும்படி, கௌஸல்யையைப் பார்த்து, இலக்ஷ்மணன் கூறுகிறான். "உயர்வான நடைபெற்ற அண்ணா, உத்தமமான இராஜ்யத்தைவிட்டு, பெண் புத்தியைக் கேட்டு, காட்டிற்குப்போவது எனக்கும் ஸம்மதமில்லை. வயது முதிர்ந்து, காமவிகாரம்பெற்ற அரசனுக்கு, என்ன தெரியும்? புத்திசாலியான அவ்வரசன் அவ்விதமில்லாவிட்டால், பிரியமான புத்திரனிடத்தில், விரோதமாக உத்திரவு செய்வாரா?"

कोवाऽस्याविनयः पुरादपिबहिर्येनैषनिर्वास्यते
किंदोषान्प्रवदेत्परोक्षमनघेचास्मिन्हतार्थोरिपुः ।
शास्ताम्यात्तधनुर्गुरुं विपथगं यावन्नजानात्ययं
लोकोऽर्थबलिना मयासमावितो राष्ट्रं स्ववशात्कुर्विदम् ॥

"பட்டணத்திலிருந்து வெளியில்விரட்டும்படி, இவர் என்ன குற்றம் செய்தார்? குற்றமற்ற இவரிடத்தில், காரியத்தின் கெடுதலைப் பெற்றப் பகைவர் கூட, மறைவிலாவது குற்றம் கூறுவாரா? துர்மார்க்கத்தில் செல்லும் பிதாவையும், வில்லை எடுத்து, நான் சிக்ஷிக்கிறேன். பலம் பெற்று, உன்னை ரக்ஷிக்கிறேன். ஜனங்கள் இந்த சமாசாரம் அறிவதற்குள், இராஜ்யத்தை தனக்கு வசமாக்க வேண்டும்".

यद्यार्योवनमेष्यति ध्रुवमितस्तत्पूर्वमेवाप्यहं
बिभ्रच्चापमधिज्यमाहितशरं राज्यं निजं भोक्ष्यति ।
तत्पार्श्वेनिवसेयमेनमतनु प्रेम्णाऽनुरक्तोऽस्म्यहं
भावेनेतिशपत्करस्थधनुषा सत्येन दानेनच ॥ ||५७||

"அண்ணன் இவ்விடமிருந்து, நிச்சயமாய் காட்டிற்குப்போனால், அவருக்கு முன்னமே, நாணேற்றி, பாணம்பூட்டி, வில்லை எடுத்துக்கொண்டு, நான் செல்வேன். தன் இராஜ்யத்தை, அநுபவித்தால், அவருடைய பக்கத்திலிருப்பேன். அவரிடம், மனமறிய, அதிக அன்பு பெற்றேன்" என்று இலக்ஷ்மணன் கையில் தரித்த வில்லாலும், ஸத்யத்தாலும், தானங்களாலும், சபதம் செய்தான்.

कौसल्याऽऽह निजं सुतं त्वदनुजप्रोक्तं वचोरोचते
तेचेत्कुत्यमनन्तरं कुरु मम श्रेयस्सपत्न्यास्तुमा ।
धर्मस्याऽऽचरणेभवेद्यदिमनो धर्मिष्ठ शुश्रूषमां
नित्यं काश्यपवत्पितेव भवता संपूजनीयाप्रसूः ॥ ॥५८॥

கௌஸல்யை தன் புத்திரனை இராமனைப் பார்த்துச் சொல்கிறள். "ஹே ராமா! உன் தம்பியின் வார்த்தை, உனக்குச் சம்மதமானல், அதைத் தாமதமில்லாமல் செய். என் நன்மையைக் கருதவேண்டும். சக்களத்திக்கு அவ்விதம் வேண்டாம். தர்மம் செய்பவனே! உனக்கு தர்மம் செய்ய, மனமிருந்தால், காச்யபர்போல், தினந்தோறும் எனக்குப் பணிவிடைசெய். தகப்பன் போல் உனக்குத் தாயும், உபசரிக்கத் தகுந்தவள்." (காசியபர் முற்பிறப்பில் மாதாவின் பணிவிடையால் பிரம்மபட்டம் பெற்றுர், என்று ஊஹிக்கவும்.)

कान्तारेतनयत्वयासहमम श्रेयस्तृणाऽऽस्वादनं
त्यक्ष्यस्यद्ययदिध्रुवं जनामिमं सप्रायमासिष्यते ।
लोकेविश्रुतमाप्स्यसेऽथनिरयं सुब्रह्महत्यामिवा
ऽऽत्रासोऽपामितिसप्रसूनिगदितस्तामाहवश्यःपितुः॥५९॥

"ஹே புத்திர ரத்தினமே! உன்னோடு கானகத்தில், புற்களைப் புசிப்பதும், எனக்கு நன்மை, இப்பொழுது என்னை நீ கூட்டிக் கொள்ளாவிட்டால், நிச்சயமாய் பிராயோபவேசமென்ற, உண்ணு விருதம் எடுப்பேன். பிறகு உலகத்தில் பிரசித்தமான நரகத்தை, ஸமுத்திர ராஜன், பிப்பலாதனுக்குத் துன்பம் செய்து, பிரம்ம ஹத்தியை அடைந்தது போல் நீயுமடைவாய்," என்று சொல்லும் தாயைப் பார்த்து, தகப்பனுக்கு வசமான இராமன் கூறுகிறுர்.

पित्रादिष्टमकार्यमप्यतिमुदाकृत्वाजगद्विश्रुतां
सत्कीर्तिं मुनयोऽगमन्स्वकुलजाधर्मश्चसत्यं वरम् ।
एकैकं किमुतद्वयं भुविनृणां नित्यं पुमर्थेऽधुना
यातुं तत्पथ आशिषाहितदयास्त्वांबानुजानीहिमाम् ॥६०॥

"தந்தையின் உத்திரவுபெற்று, பரசுராமன் முதலிய ரிஷிகளும், ஸகரபுத்திரர்கள் முதலிய நமது முன்னோர்களும், கெட்ட காரியங்களையும், மிகுந்த ஸந்தோஷமாக செய்து, உலகப் பிரஸித்தமான, நற்புகழைப் பெற்றார்கள். பூமியில் மனிதர்களுக்கு, தர்மம் முதலிய புருஷார்த்தங்களில், தர்மமும், ஸத்யமும் ஒவ்வொன்றும் மேலானது. இரண்டுமோ மேலென்பதில் ஐயமில்லை. ஹே என் தாயே! இப்பொழுது, அப்பெரியோர்களின் வழியில் நடக்கும்படி, நன்மை தரும் வாழ்த்தலால், எனக்கு அநுமதி தரவேண்டும்".

प्रत्यागत्यवनात्पुनस्तववचः प्रेम्णा करिष्येध्रुवं
शोकंस्वंहृदयेनियच्छनृपवागुल्लंघनं पाप्मने ।
अस्माकंतुभवेद्धृतं ममसतं सर्वैश्चसंमान्यतां
इत्युक्त्वाऽनुजमाहलक्ष्मणबलं स्नेहंचजानेपरम् ॥६१॥

"வனத்திலிருந்து, மறுபடியும் திரும்பிவந்து, அன்போடு ஹே அன்னையே! உன் சொற்படி நிச்சயமாய் நடக்கிறேன். தன் துக்கத்தை, மனதில் அடக்கிக்கொள். அரசன் சொல்லை, மறுத்தால், நமக்கு பாபம் ஏற்படும். என் விருப்பத்தை எல்லோர்களும் ஸம்மதிக்கவேண்டும்." என்று சொல்லி, இராமன் தம்பியைப் பார்த்துச் சொல்லுகிறார். ஹே லக்ஷ்மணா! உனக்கு, என்னிடத்தில், அன்பும், பலமும், மிகுதி என்று, நான் அறிந்தேன்."

संश्रुत्याद्यकरोमिचेति वचनं शक्नोमिनैवान्यथा
कर्तुंस्वस्यगुरौ वृथातपतिमेमातात्यजक्षत्रगाम् ।
सद्धर्म्यां मतिमाश्रयस्वपुरुषं मुक्त्वामयाऽन्वागातिं
सानैवार्हतिमास्त्वधर्मबहुळं सौख्यं न चेच्छामितत् ॥

"தன் குருவான தந்தையிடம், சொற்படி செய்கிறேன்," என்று, பிரதிக்ஞைசெய்து, இப்பொழுது, விரோதமாய் நடக்கவே முடியாது. என் தாய் வீணுக வருந்துகிறுள். க்ஷத்திரியர்களின் கடுமைபுத்தியைவிடு. பெரியோர்களின், தர்மத்திலிருந்து, தவருத புத்தியைப் பெறவேண்டும். தாய் தன் புருஷனை விட்டு, என்னோடு கூடவருவது, தகுதியல்ல. பாபச்செயல் மிகுதியான அச்சுகத்தை நான் விரும்பவில்லை."

कोपं वर्धनमुत्सृजाद्य सुमते केनापिनाऽऽगःकृतं
दैवं चिन्तयहेतुमत्रबलिनं यद्यन्यथाकैकयी ।
ब्रूयाद्विप्रियमात्मजात्प्रियतरे मय्येवलोभात्कथं
हृष्यत्वं चिरवांछनीयपितृसंतोषेणवर्षीयसा ॥ ॥६३॥

"ஹே புத்திசாலியே! வளரும் கோபத்தை, இப்பொழுது விடு. ஒருவரும் குற்றம் செய்யவில்லை. இவ்விதச் செய்கைக்கு, தெய்வமே பலமான காரணமென்று, நினைக்கவேண்டும். அவ்விதமில்லாவிட்டால், புத்திரனைக்காட்டிலும், அன்பு மிகுந்த என்னிடத்திலுமே, கைகேயி கெட்ட தீங்கை, அதிகமான ஆசையால் எவ்விதம் சொல்லுவாள்? வெகு காலமாக விரும்பக்கூடிய, மிகுந்த பிதாவின் ஸந்தோஷத்தால், நீ ஸந்தோஷமடையவேண்டும்".

सत्यस्वेष्ट विनाशजव्यसनसंतप्तस्वपित्रोर्मनः
सन्तुष्येदभिषेचनोपकरणान्युत्सृज्यसर्वाण्यपि ।
भ्रातस्तानि तथोपयापयवनं गन्तुंसमाहार्याणि यत्
तौनोपेक्षितु बुद्बुदनिभप्राणायवांछाम्यहम्॥ ॥६४॥

"ஸத்யமும், தன் விருப்பமும், நிறைவேருமல் துக்கமடையும் தாய், தந்தைகளின் மனம் களிப்படையும்படி, பட்டாபிஷேகத்திற்குரிய எல்லா சாதனங்களையும் அகற்றி, வனம் செல்லும் எனக்குத்தகுந்த கூடை, மண்வெட்டி முதலியவைகளை, என் ஸமீபம் அடைவிக்கவேண்டும். ஜலத்தின் குமிழிபோன்ற பிராணனுக்காக, அவ்விருவர்களை அவமதிக்க, ஹே தம்பி இலக்ஷ்மணு! நான் விரும்பவில்லை".

२३ मन्त्रैरुद्ध इवश्वसन्विषरदस्साचीकृतस्वेक्षणः
द्रागाबध्य कुटीं भ्रुवोस्स्वनिटिलेधून्वन्कराग्रंमुहुः ।
ग्रीवां संपरिचालयन्प्रकुपितोरामं सरामानुजः
प्राहस्वाभिमतं स्तुयादतिबलो दैवं कथं भीरुवत् ॥६५॥

மந்திரங்களால் கட்டப்பெற்ற, பற்களில் விஷம்பெற்ற, ஸர்ப்பம்போல் மூச்சுவிட்டுக்கொண்டும், சீக்கிரம் புருவங்களை நெற்றியில் நெரித்துக்கொண்டும், அடிக்கடி கைவிரல்களை அசைத்துக்கொண்டும், கழுத்தை நான்குபுறமும் அசைத்துக் கொண்டும், இலக்ஷ்மணன் கோபமடைந்து, இராமனைப்பார்த்துத் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறான் "மிகுந்த பலமுள்ளவன் பயந்தவன்போல் தெய்வத்தை எப்படித் துதிப்பான்?"

धर्माऽऽत्मन्किमिदं नवेत्सि सुमते पित्रोस्सु दुर्वृत्तयोः
स्वार्थस्याद्य जिहासया विरचितं धर्मोपधाऽध्वन्ययोः ।
पापं स्वाचरतोर्मतं सुजनता दूरीकृतं त्वन्यथा
चेत्प्राक्तन्नवृतं कथं न्व सुहृदा दत्तं न सत्याऽऽत्मना ॥

"தர்மத்தின் உருவம்பெற்ற, புத்திசாலியான ஹே அண்ணா! தர்மமென்னும் கபடமார்க்கத்தில் நடக்கும், கெட்ட நடையும், பாபமும்பெற்ற; தாய், தகப்பன்களின் எண்ணம், இப்பொழுது நமது காரியத்தைக்கெடுக்கவேண்டுமென்ற, விருப்பத்தால்வந்தது நல்ல ஜனங்களும் விரும்பாது. இதைத்தாங்கள் அறியவில்லையா? அப்படி இல்லாவிட்டால் சத்துருவான கைகேயி, இதை முன்னமே வேண்டமாட்டாளா? ஸத்திய சீலனான அரசனும், இதைக் கொடுத்திருக்கமாட்டாரா?"

शत्रू पित्रभिधौ तवाहितकरौ मा हर्षयाऽऽप्तस्मरौ
तद्दुर्दैवकृतं नमेत्त्वभिमतं वीरैस्सदोपेक्षितं ।
वीर्येणैवानिवर्तये वनपथं त्वद्वैरिणः प्रापये
नालं दिक्करतयो विजेतुमपिमां वृद्धः पिता किंपुनः ॥६७॥

"தாய், தகப்பன்களென்று பெயர் பெற்று, தங்களுக்குத் தீங்கைச் செய்யும், காமவிகாரம் பெற்ற, சத்ருக்களைத் தாங்கள் ஸந்தோஷமடைவிக்கவேண்டாம். வீரர்கள், திவாநிக்தம், அதிருஷ்டத்தின் செயல் என்பது, எனக்கு ஸம்மதமில்லை. பலத்தினலே அதை விலக்குகிறேன். உன் சத்ருக்களை, வனபூமிக்கத்தில் விரட்டுகிறேன். இந்திரன் முதலிய திக்பாலகர்களும், என்னை ஜெயிக்கமுடியாது, வயது முதிர்ந்த பிதாவா என்னை ஜயிக்கப் போகிறார்"?

कर्तुं ते वचनं स्थितोऽस्म्यपभयश्शाध्यार्यमां किंकरं
शस्त्राणां फलमस्तुहस्त विधृतेरायोद्धुमभ्यागतं ।
देवेन्द्रं नसहे सजीवमधुना राज्येऽभिषिंचस्वच
प्रेम्णाऽऽभाषिणमित्यघापहरणो रामोऽवदल्लक्ष्मणं ॥६८॥

"ஹே அண்ணு! பயமில்லாமல் உன்வார்த்தைப்படி நடக்க, நானிருக்கிறேன். இந்த சேவகனுக்கு, உத்திரவு அளிக்கவேண்டும், ஆயுதங்களைக் கையில் தரிப்பதற்கு, பிரயோஜனம் வேண்டும். யுத்தம்செய்ய, எதிரில்வந்த தேவேந்திரனும், பிழைத்துப் போக ஸம்மதிக்கமாட்டேன். இப்பொழுதே இராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துகொள்" என்று அன்போடு சொல்லும் இலக்ஷ்மணனைப் பார்த்து, பாபந்தீர்க்கும் இராமன் சொல்லத் தொடங்கினர்.

उन्मृज्याक्षि सशोकवारि बहुश स्सामोक्तिभिस्सांत्वयन्
पित्रादेशपथाधुनीनमनघं जानीहिमामित्ययं ।
माताऽवाचि पुरःकृपालु हरिवन्मृष्टान्नभुग्भिश्श्रुतः
सद्भूम्यां विपिनेकरिष्यासि मुदा त्वं वृत्तिमुंछैः कृतां ॥

" கண் ஜலத்தோடு கூடிய கண்களைத்துடைத்து, பலதடவை நல்ல வார்த்தைகளால், சமாதானம்செய்து, நான் தோஷமில்லாமல் தாய், தகப்பன்களின் உத்திரவு வழியில், நடக்கப்போகிறேன் என்று அறிந்துகொள்" என்று சொல்லும் இராமனைப் பார்த்து, மாதாவான கௌசல்யை கூறுகிறுள். "கருணையுள்ள ஈசுவரனைப்போல், உன்னை அண்டினவர்கள், பட்டணத்தில் ஆறு ரஸம்பொருந்திய மிருஷ்டான்னம் புசிக்கிறுர்கள். நீ காட்டில் ஸந்தோஷமாய், பெரியோர்களின் வழக்கத்திலிருந்து, தவராத உஞ்சமென்கிற கீழே சிதறிய தானியங்களால், ஜீவனோபாயம் செய்யப்போகிறுய்".

२४ रामस्तामवदद्वनेऽनु गमनं संप्रार्थयन्तीं भृशं
पत्युस्सेवनतः परत्रवनिता स्तुष्यन्ति नैवान्यथा ।
सर्वेषां पतिमेन मेवसततं सन्तोषयात्यादरात्
धर्माऽऽत्मा भरतोऽर्चयिष्यतिनते क्लेशस्सपत्नीकृतः ॥

"காட்டிற்குக்கூட வருவேன்" என்று பிரார்த்திற்கும் கௌஸல்யையைப்பார்த்து, இராமன் சொல்லுகிறார். "பெண்கள் புருஷனுடைய மிருந்த பணிவிடையால், பரலோகத்தில் சுகமடைகிறார்கள். வேறு விதத்தில் சுகமடையவில்லை. எல்லோர்களுக்கும், எஜமானனை அரசனுக்கே, எப்பொழுதும், அதிக அன்போடு பணிவிடைசெய். தர்மத்தின் உருவம்பெற்ற பரதன், உன்னை உபசரிப்பான். சக்களத்தியால், துயரம் உனக்கு இருக்காது".

मत्क्षेमायदिने दिनेऽर्चयसुरानिष्टान्हुताशार्चने
नित्यं जागृहिमोदकृत्ससमयस्तूर्णं समेयात्स्वयं ।
आनृण्यं जनकस्य वाक्यकरणा त्प्राप्तोजटालंशिरः
यत्राऽऽगत्य भवेयमीप्सितकरः पौरस्यलोकस्यते ॥ ७१ ॥

"என் க்ஷேமத்தின் பொருட்டு, தினந்தோறும் இஷ்டதெய்வங்களுக்குப் பூஜைசெய். தினமும் அக்னிஹோத்திரம் செய்வதில், ஸாவதானமாயிரு. தகப்பனாருடைய உத்திரவைச் செய்வதால், தலையில் ஜடைகளைத் தரித்துக் கடனைத்தீர்த்து, நான் உனக்கும், பட்டணத்தின் ஜனங்களுக்கும், ஸம்மதமான பட்டாபிஷேகத்தைச் செய்துகொள்ளும், ஸந்தோஷமளிக்கும், அக்காலம் சீக்கிரம் தானாக வந்துவிடும்".

२५ इत्युक्त्वा निजयाऽथकाननगतौ विज्ञाप्यभावंदृढं
दैवानुग्रहदा जनन्याभिहिता स्सर्वाऽऽपदुद्धारिणीः ।
स्वीकृत्याऽऽशिष आदरादनुमतेस्संदायिनीस्सत्वरं
तत्पाद प्रणतस्ततो निरगमद्वध्वायियासु र्गृहं ॥ ७२ ॥

இவ்விதம் தன் வார்த்தையால், வனம் செல்வதில் அழுத்தமாக மனமிருப்பதைத் தெரிவித்து, பிறகு தெய்வங்களின் அருளைக்கொடுத்து, எல்லா துன்பங்களையும் தீர்க்கும் வாழ்த்தல்களைத் தாயாரிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவள் திருவடியில் வணங்கி இராமன் மனைவியின் அரண்மனைக்குச் செல்லவிரும்பி, சீக்கிரம் அவ்விடமிருந்து, வெளியில்வந்தார்.

रथ्याऽऽसीनजनान्गुणै रभिमतस्संक्लेशयन्राघवः
स्वागारस्य सुमण्डनेन जनता हर्षेणसंलज्जितः ।
वैवर्ण्यस्य निरीक्षणेन वदने संकंपमानां प्रियां
पित्रादिष्टमबोधयन्नृपकुले कर्तव्यमप्यात्मनः ॥ ॥७३॥

நற்குணங்களால், எல்லோர்களுக்கும் பிரியமான இராமன், வீதியில் உட்கார்ந்திருக்கும், ஜனங்களை வருந்தும்படி செய்து கொண்டு, தன் அரண்மனை அலங்காரத்தினாலும், ஜனங்களின் ஸந்தோஷத்தாலும் வெட்கித்துக்கொண்டு, முகத்தில் நிறம் மாறினதால், நடுங்கிக்கொண்டிருக்கும் மனைவிக்கு, தகப்பனாரின் உத்திரவையும், தான் அரசன் அரண்மனையில் செய்யவேண்டிய கடமையையும், அறிவித்தார்.

श्रुत्वा भर्तृवचो प्रियंकरमथप्रेमप्रकोपाऽऽह सा
सर्वःप्रेष्यजनोभुनक्ति सुकृतं स्वंभर्तृजंत्वङ्गना ।
तत्कान्तारगतिस्तवैव मम चाऽऽदिष्टा पितृभ्यामयं
विश्लेषा सहनस्त्वयाऽऽर्यसुतचेत्त्यक्तोऽप्यसूंस्त्यक्ष्यति॥

பிறகு துக்கமளிக்கும், புருஷன் மொழியைக்கேட்டு, ஸீதை பிரணய கோபங்கொண்டு, சொல்லுகிறாள் "ஹே நாதா! எல்லா வேலைக்காரர்களும், தங்களின் புண்ணிய பாவங்களை, அனுபவிக்கிறார்கள். பெண்களோ, புருஷனுடைய புண்ணியபாவத்தை அனுபவிக்கிறார்கள். ஆனதால் மாதா, பிதாக்களின் உத்திரவு தங்களுக்குப்போல், எனக்கும் கிடைத்தது. பிரிவைப் பொறுக்காத என்னை, ஹே ஆர்ய புத்திரா! நீங்கள் கூட்டிக்கொள்ளாவிட்டால், பிராணனையும் விடுவேன்".

शुश्रूषां करवाणि ते वनतले न क्लेशयिष्याम्यहं
प्रासादे विपिनेत्वयाधिवसतिः प्रीत्यै न चत्वां विना ।
स्वर्गेऽपि क्षितिरक्षकस्य तव किं मद्रक्षणे स्याच्छ्रमः
सद्धर्मे प्रतिबोधितास्मि गुरुभिश्छायेव तेऽनुद्रुता ॥७५॥

“ஹேநாதா! காட்டில் உங்களுக்குப்பணி விடை செய்வேன். தங்களைத் துன்பமடைவிக்க மாட்டேன். காட்டில் தங்களோடு வாஸஞ் செய்தல், உப்பரிகையில் போல், பிரீதியைக்கொடுக்கும். தாங்களில்லாமல் சுவர்க்கத்திலும் பிரீதி இல்லை. பூமியை காக்கிறவனுக்கு, என்னைக்காப்பாற்றுவதில் பிரயாஸமா? பெரியோர்களிடம் பதிவிரதா தர்மம், உபதேசம் பெற்றிருக்கிறேன். நிழல் போல் தங்களைப் பின் தொடர்வேன்!”

२८ इत्युक्तो रघुनायको वनितया नेतुं त्वनिच्छन्वनम्
कान्तारस्य सुभीतिदत्वमतनु क्लेश प्रदत्वं खलैः ।
सत्वैः स्सन्तमसाऽऽवृतत्वमखिलैः कुक्षिंभरित्वं फलैः
मार्गाणां भुजगाऽऽवृतत्वमभितः कान्तां समज्ञापयत् ॥

ஸீதை இவ்விதம் சொல்லியும் வனத்திற்கு அன்னவளை அழைத்துப்போக மனமில்லாமல், இராமன், “காடு மிகவும் பயத்தைக்கொடுக்கும். துஷ்ட ஜந்துக்களால் அதிக துன்பத்தைக்கொடுக்கும். மிகுந்த இருள் சூழ்ந்திருக்கும். எல்லா பழங்களாலும் வயிறு வளர்க்க வேண்டும். வழிகள் நான்கு புறமும் பாம்புகளால் சூழப்பெற்றிருக்கும்,” என்பதை மனைவிக்குத்தெரிவித்தார்.

स्त्रीणां सत्तप आत्मभर्तृवचसस्त्यक्त्वाविशंकाकृतिः
कर्तव्यं हितमेव तेऽनिशमिति श्रेयस्त्वहं प्रब्रुवे ।
अंभोभिर्लवणायितैः स्सुकटुभिः कार्यः पिपासाशमः
कार्यं त्विस्त्वभिषेचनं प्रतिदिनं संतर्पणं सक्षुधाम् ॥ ७७ ॥

"பெண்களுக்கு மேலான தவம், தன் கணவன் சொல்படி தட்டாமல் நடப்பதே. ஹே அன்பு மிகுந்தவளே! எப்பொழுதும் உனக்கு நன்மை மாத்திரம் செய்ய வேண்டுமென்று கருதிச்சொல்லுகிறேன். காட்டில் கசப்பாயும், உப்பாயுமிருக்கும் ஜலத்தால் தாகம் தீர்க்க வேண்டும், தினந்தோறும் மூன்று தடவை, ஸ்நானம் செய்ய வேண்டும். பசியால் வருந்தும் பிராணிகளுக்கு, அன்னமளிக்க வேண்டும்."

२९ मैथिल्याह निजेष्टलाभसुमतिः प्रेयांसमीष्यां विना
श्रोतव्यं वचनं ममेदममृषा विप्रेण पित्रालये ।
प्रोक्ता मेवसतिर्वने विधिकृता मातुः पुरोभिक्षिणी
प्राहैतां विमला वनेप्रिययुता वांछामिवस्तुंत्वया ॥ ७८ ॥

தன் விருப்பம் பெறுவதில் புத்திசாலியான ஸீதை, புருஷனைப்பார்த்துச்சொல்லுகிறாள். "இதை அசூயை இல்லாமல் கேட்க வேண்டும். இது உண்மை. தெய்வ வசத்தால் வனவாசம் எனக்கு வருமென்று, பித்ரு கிரஹத்தில் பிராமணனும், தாயாரின் முன்பாக ஸன்னியாசியான அம்மணியும், சொன்னார்கள். ஆனதால் ஹே நாதா! உன்னோடு பிரியமாய், பாபமில்லாமல், காட்டில் இருக்க விரும்புகிறேன்."

त्यक्तुं नार्हसि धार्मिक स्वपितृभिर्दत्तां सुशीलां वधूम्
हिंस्रानाथवशंवदां तव मृगाः किं भीषयेयुर्वने ।
कर्तव्यं वचनं पितुस्तवतनो रर्धांशभाजामया
तन्मामानय कान्त काननमिति प्रीताऽतिरुष्टाऽब्रवीत् ॥

"தர்மத்தை அனுஷ்டிக்கும் ஹே நாதா! தன் தாய் தகப்பன்களினால் தத்தம் செய்யப்பெற்ற நன்னடையுள்ள மனைவியை தள்ளி விடக்கூடாது. காட்டில் உனக்கு வசமான என்னை, துஷ்ட ஜந்துக்கள் பயமடைவிக்க முடியுமா? உன் பிதாவின் உத்திரவை, உனது பாதி சரீரம் பெற்ற நானும், செய்ய வேண்டும். ஆனதால் என்னையும், காட்டிற்கு அழைக்க வேண்டுமென்று சொல்லி," பிரணய கோபத்துடனும் சொல்லுகிறாள்.

३० चेद्गन्ताऽसि वनं ध्रुवं खलवृतं त्यक्त्वाप्रियां शौर्यवन्
मन्येत्वैव वधूं पिता सजनकस्त्वामात्तपुंस्कंचुकाम् ।
लोकोवक्ष्यति शौर्यमार्यसुतते नास्त्येव किंचित्त्विति
प्राणानां विलयोभविष्यतिचमे कस्तेगुणस्स्यादतः॥ ८० ॥

"துஷ்டர்கள் சூழ்ந்த வனத்திற்கு, ஹே பலம் பெற்றவனே! மனைவியை விட்டு நீ நிச்சியமாய் போனல், என் பிதா, ஜனகர் புருஷனுடைய உடுப்பைப் பெற்ற பெண்ணுகவே உன்னை நினைப்பார். ஹே ஆர்ய புத்ரா! உன்னிடத்தில் கொஞ்சமும் பல மில்லை என்று, உலகமும் கூறப்போகிறது. என் பிராணன்களுக்கும் அபாயம் வந்து விடும். இதனல் உனக்கு என்ன நன்மை வரும்?"

आगस्तेकिमकार्षमद्ययदिमां सम्प्रार्थनां काननम्
गन्तुं मां विजहास्ययं कथमभूच्छोकोमदीयाऽऽगमे ।
अन्येभ्यः किमुयच्छसिप्रियतमां शैलूषवद्रूपिणीम्
विश्लेषः क्षणदुस्सहः किमुततेद्विस्सप्तवर्षाण्यहो ॥ ८१ ॥

"காட்டிற்கு செல்ல விரும்பும் என்னை, இப்போழுது விடும்படி உனக்கு என்ன குற்றம் செய்தேன்? நான் கூடவருவதில் என் துக்கம் வருகிறது? அன்பும், அழகும் பெற்ற என்னை, நட்டுவக்காரன் போல் பிறர்களின் பொருட்டு கொடுக்கிருயா? உன்னை விட்டு பிரிதல், க்ஷண நேரமும் பொறுக்க முடியாது பதினன்கு வருஷங்கள் எவ்விதம் பொறுக்க முடியும்? அந்தோ!"

वासस्स्वर्गतुलस्त्वयाचसहितो यत्रकत्रचित्त्वांविना
सस्यान्मेनिरयोपमोनभविता कश्चित्श्रमोमेपथि ।
गच्छन्त्यास्तवपृष्ठतस्सु विहतौ तल्पेयथाकण्टकि
द्रुस्तूलाजिनवद्भवेत्सुमृदुलः काशाः कुशास्स्युस्तथा ॥

“ஹே நாதா! உன்னுடன் எவ்விடத்தில் வசித்தாலும், சுவர்க்க வாஸத்திற்கு ஒப்பானது. உன்னை விட்டு எவ்விடத்தில் இருந்தாலும், நரக வாஸத்திற்கு ஒப்பானது. வழியில் உனக்கு பின்புறம், நான் செல்லும் பொழுது, நல்ல விளையாட்டிலும், படுக்கையிலும் போல், ஒரு விதக்களைப்பும் உண்டாகாது. முள்ளு மரங்களும், பஞ்சு போலும், மாந் தோல்போலும், மெது வாக இருக்கும். காசப்பில்களும், நாணல்களும் அவ்விதமே.”

वात्योद्धूतरजोमलयजाऽऽलेपस्स्थले शाद्वले
शेष्येत्वत्सहिता कुथाऽऽस्तरणगे तल्पे सुखंतात्किमु ।
पत्रं मूलफलैस्त्वदाहृतमहं भोक्ष्येऽमृतस्वादुतत् ।
नस्मर्ताऽस्मि पितुर्नमातुरपिमे सख्यानवावेश्मनः ॥ ८३ ॥

“ஹே நாதா! சுழல் காற்றால் உண்டான தூளிகள், எனக்கு சந்தனத்தின் பூச்சு ஆகும். புல் இருக்கும் தரையில் உன்னோடு படுப்பேன்— சித்திர வர்ணக்கம்பளிகள், நல்ல விரிப்புகள் இவைகளோடு கூடிய படுக்கையில், அச்சுகம் ஏது? நீ கொண்டு வந்த இலை’ பழம், வேர் இவைகளைப்புசிப்பேன் அவைகள் அமிர்தம் போல் மதுரமாயிருக்கும். என் தாய் தந்தைகளையும், தோழியையும், அரண்மனையையும் நினைக்க மாட்டேன்.”

इत्याकर्ण्यसबाष्पमुक्तवचनां आलिंगितस्वांगकां
भार्यामाह स सांत्वयन्रघुपतिः प्रेम्णाकृपालुर्भृशम् ।
स्वर्गं नाप्यभिरोचये प्रियतमेत्वां खेदयन्सर्वथा
सर्वेभ्योनबिभेम्यहं धृतशरोयुद्धेस्वयंभूरिव ॥ ८४ ॥

இவ்விதம் நிந்தித்துக்கொண்டு, கண் ஜலத்துடன் வார்த்தை சொல்லி தன் சரீரத்தைக்கட்டிக்கொண்ட மனைவியை, மிகவும் கருணை பொருந்திய இராமன், அன்போடு ஸமாதானம் செய்து, சொல்லுகிறார்“ஹே மிகுந்த அன்பு பெற்றவளே! எல்லாவிதத்திலும் உன்னை துன்பமடைவித்து, கிடைக்கும் சுவர்க்கத்தையும், நான் விரும்ப வில்லை. பிரமன் போல், நான் யுத்தத்தில் பாண மெடுத்தால், எல்லோரிடத்திலும், பயமடையமாட்டேன்.”

त्वद्भावंत्वविजानता बलवता नेया कथं काननम्
स्या देवित्वमरण्यवासमनसा स्रष्टाऽसिसृष्टाप्रिये ।
नत्वां त्यक्ष्यति मेमनश्चिरभृतां कीर्तिं यथासत्कृतम्
धर्मन्तंचतृतीयमेवकलये कुर्वन्पितुर्वाचिकं ॥ ८५ ॥

"ஹே தேவி! நான் பலமுள்ள வனுகினும், உன் மனம் தெரியாமல், உன்னை காட்டிற்கு, எவ்விதம் அழைத்து செல்லுகிறது? ஹே நாயகி! வன வாஸம் செய்ய வேணுமென்று மனம் பெற்று, பிரமன் உன்னைப்படைத்தார்— வெகு காலமாக தேடின புகழைப்போல், உன்னை விட மன மில்லை. பெரியோர்களால் புகழ்ப்பெற்ற, மூன்றாவதான, வானப்பிரஸ்த தர்மத்தை, பிதாவின் உத்திரவை, நடத்திக்கொண்டு செய்கிறேன்."

प्रस्वायद्वशता पितुश्चपरमो धर्मस्तमुल्लंघितुं
नेच्छामिस्वगुरुद्रुहंतदबलं दैवं परित्यक्ष्यति ।
स्वर्गंवा धनधान्यमप्यतितरां प्राप्नोति गुर्वीप्सितः
ब्रह्मानन्दमुपात्तपुण्यसुलभं सीतेऽनुगच्छाद्यमां ॥ ८६ ॥

"தாய் தகப்பன்களுக்கு, வசமாகுதல் பெரிய தர்மம். அதைக்கை விட விருப்ப மில்லை— தன் பெரியோர்களுக்குக்குற்றம் செய்தவனை, பலமற்ற தெய்வமும் கை விடும். பெரியோர்களின் அருள் பெற்றவன், சுவர்க்கம், தனம், தானியம், புண்ணியம் செய்தவர்களுக்கு சுலபமான மோக்ஷமிவைகளையும் அடைகிறான். ஹே ஸீதே! இப்பொழுது என்னுடன் கூடவா."

तत्प्रास्थानिकमारभस्वकुशलं देहिद्विजेभ्योद्रुतं
वासांस्यात्मविभूषणान्यभिमता स्तेभ्यश्चयेसेवकाः ।
इत्युक्ता जनकाऽऽत्मजास्वपतिना सद्योयियासुर्वनं
प्रादादर्थितमर्थिनेऽप्यभिमतं सर्वं प्रहृष्टाऽऽशया ॥ ८७ ॥

"ஆனதால் பிரயாண காலத்தில் செய்யவேண்டிய, நற்காரியங்களை செய்யத்தொடங்கு. இஷ்டமான பிராமணர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும், தன். வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், சீக்கிரம் கொடு," என்று இவ்விதம் தன் புருஷன் சொன்னதும், சீதை உடனே வனம் செல்ல விரும்பி யாசித்த பொருளை யாசகர்களுக்கும், விரும்பிய பொருள் எல்லாவற்றையும், ஸந்தோஷமாய் கொடுத்தாள்.

३१ संवादंत्वनयोर्निशम्यपरमं सौमित्रिराहाग्रजं
तत्पादौ प्रणमन्स्ववांछितकरौ सप्रेमबद्धांजलिः ।
रक्षिष्यामिधनुर्धरोविपिनगौ देवौयुवां भूभृतः
रंस्येथेसुचिरं तरुष्ववहितस्सर्वं करिष्यामिवां ॥ ८८ ॥

ஸீதை இவர்களுடைய உயர்வான ஸம்வாதத்தைக்கேட்டு, இலக்ஷ்மணன் தன் விருப்பத்தைக்கொடுக்கும், அண்ணனுடைய பாதங்களில் நமஸ்கரித்து, அன்புடன் அஞ்சலி பந்தம் செய்து அவரைப்பார்த்துச்சொல்லுகிறான்-- "ஹே தேவி! தேவ! நீங்கள் காட்டிற்குச்சென்று, மலைகளின் மரங்களில், விளையாடுவீர்கள். வெகு காலம் வில்லை வைத்துக்கொண்டு, உங்களைக்காப்பாற்றுவேன். ஸாவதானமாக நான் உங்களுக்கு எல்லா பணிவிடையும் செய்வேன்."

गन्तुं काननमादिशाऽऽर्यपुरतो मामात्तबाणासनं
त्यक्त्वात्वत्पदसेवनं सुखकरं नैन्द्रंपदंरोचये ।
दत्तामेवनमेतुमप्यनुमतिः किन्त्वद्यसावार्यते
ब्रूह्यागोरचितंमयेतिसशुचं प्राहानुजंराघवः ॥ ८९ ॥

"ஹே அண்ணா! முன்னால் வில்லை எடுத்துக்கொண்டு, காட்டிற்கு போகும்படி எனக்கு உத்திரவு கொடுக்க வேண்டும். சுகமளிக்கும் உன் திருவடி ஸேவை இல்லாமல், இந்திரனுடைய இருப்பிடமும், எனக்கு இஷ்டமில்லை. வனத்திற்கு வரும்படி கொடுத்த உத்திரவை இப்பொழுது ஏன் விலக்குகிறீர்கள்? நான் செய்த பிழையைச்சொல்ல வேண்டும்," என்று வருந்தும் தம்பியைப்பார்த்து, இராமன் கூறுகிறார்.

जानेतेमयिजन्मसिद्धममितं स्नेहं बलं विश्रुतं
क्लिष्टां मातरमेनरक्षितुमिहत्वां स्थापयामिप्रिय ।
इत्याभाषिणमग्रजं समवदच्चिन्ताऽन्वितोलक्ष्मणः
यस्या ग्रामसहस्रमस्त्यभिमतं रक्षेच्चसामद्विधान् ॥ ९० ॥

"ஹே நண்பனே! பிறவி முதல் உனக்கு என்னிடமிருக்கும் அளவற்ற அன்பையும், பிரஸித்தமான பலத்தையும், நான் அறிவேன். வருந்தும் தாயை ரக்ஷிப்பதற்காகவே, உன்னை இவ்விடம் இருக்க வைக்கிறேன்," என்று சொல்லும், அண்ணனை பார்த்துக்கவலை பெற்ற, இலக்ஷ்மணன் சொன்னான். "விரும்பக்கூடிய அநேககிராமங்களுக்கு அரசியான அன்னவள், என்னைப்போன்றவர்களைக்காப்பாற்றுவாள்."

त्वांसंचिन्त्यसुपूजयेत्सभरतस्त्वन्मातरं प्रीतिमान्
स्यांत्वत्सेवनतः कृतार्थजननः कोऽर्थस्तवैकाकिनः ।
कान्तारे विजनेखनित्रपिटकौ गृह्णन्पुरोदर्शयन्
मार्गंमूलफलानि दुर्गमवनादप्याहरिष्याम्यहं ॥ ९१ ॥

"ஹே அண்ணா! அந்த பரதன் ஸந்தோஷமாய், உன்னை நினைத்து, உன் மாதாவை உபசரிப்பான். உனது பணிவிடையால், நான் பிறவியின் பயனைப்பெறுவேன். ஜனங்களில்லாத கானகத்தில், துணையற்ற உனக்கு என்ன முடியும்? மண்வெட்டி, கூடைகளை எடுத்துக்கொண்டும், முன்னால் வழியைக்காண்பித்துக்கொண்டும், செல்ல முடியாத வனத்திலிருந்தும், வேர் பழங்களையும் நான் கொண்டு வருவேன்"

रामस्त्वाह सुमोदितस्तमनुजं गृह्णन्जलेशार्पितं
यद्यद्दीर्घवदस्त्रमप्यभिमतानापृच्छ्यचाऽऽयाहिभोः ।
विप्रानानय तं वसिष्ठतनयं दास्यामि यन्मामकं
वित्तंवत्ससमागतोऽसिसमयेसंकांक्षितेदैवतः ॥ ९२ ॥

இராமன் தம்பியைப்பார்த்து, சந்தோஷம் பெற்று, சொன்னார்—'ஜனகருடைய யாகத்தில், வருணன் கொடுத்த அஸ்திரங்களையும், பலமுள்ள அஸ்திரங்களையும், எடுத்துக்கொண்டு, ஹே லக்ஷ்மணா! அன்பர்களிடத்தில் சொல்லிக்கொண்டு வா. பிராம்மணர்களையும், வஸிஷ்ட புத்திரனையும், அழைத்துக்கொண்டு வரவேண்டும். என் பொருள்களை தானம் கொடுக்கப் போகிறேன். ஹே குழந்தாய்! விரும்பின ஸமயத்தில், தெய்வ வசமாமாக வந்தாய்''

३२ रामोऽभ्यर्च्य सुयज्ञमात्ततपसं स्वस्याङ्गनाया महा
रत्नैः कौशिककुम्भजाततनयौ संप्रीणयन्भूषणैः ।
वासोभिश्च गवांशतैः स्वजननीसंपूजितं तापसं
विप्रान्वेदविदस्स्वभृत्यनिकरानर्थैर्मुदाऽप्रीणयत् ॥ ९३ ॥

இராமன் தவம் பெற்ற சுயக்ஞ முனியை பூஜித்து, தன்னுடையதும், மனைவியினுடையதுமான இரத்னபரணங்களையும், அவரிடம் கொடுத்தும் விஸ்வாமித்திரருடைய புத்திரன், அகஸ்தியருடைய புத்திரன், கௌசல்யையை பூஜிக்கும் பிராமணன், வேதாத்யயனம் செய்த பிரம்மசாரிகள், தன் வேலைக்காரர்கள், இவர்களுக்கு வஸ்திரங்களையும், அநேக பசுக்களையும், பொருள்களையும், ஸந்தோஷமாய்க்கொடுத்தும், பிரீதி செய்வித்தார்.

रिक्तान्धर्मपथाऽऽहृतैरभिमतैर्वित्तैस्समप्रीणयत्
गार्ग्याया धनसत्तम त्रिजटिने तत्प्रेरितस्सोऽपतत् ।
दण्डोपलं च तावतीस्समददाद्गाः कांस्यसंदोहिनीः
रामस्सानुजभार्य आदरयुतस्स्वादत्तविप्राऽऽशिषः ॥

தர்ம மார்க்கத்தில் தேடிய விரும்பின பொருள்களை ஏழைகளுக்கும், கர்க கோத்திரத்தில் பிறந்த, ஏழைகளுக்குள் மேலான திரிஜடி யென்று மூன்று ஜடைகளை தரித்த, பிராமணனுக்கு (அவர் எறிந்த தண்டம் விழும்பூமிவரையுள்ளதும்,) வெங்கலப்பாத்திரம் நிறையும் படி, பால் கறக்கும் பசுக்களையும் கொடுத்து, இராமன் தம்பி, மனைவிகளுடன், அன்போடு பிராமணர்களிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

३३ सीताया अनुजस्यकानन गतिसंबोधयिष्यन्रघु
श्रेष्ठस्तत्संहितो नृपस्यभवनं बिभ्रद्धनुश्चाऽऽययौ ।
समंणैववयं व्रजेमविपिनं कान्तारकल्पांपुरीम्
कैकेयीचिरमेत्त्विवतिस्वजनतावाक्यं समाकर्णयन् ॥ ९५ ॥

ஸீதை லக்ஷ்மணன் வனத்திற்கு வருவதைத் தெரிவிப்பதற்கு இராமன் அவர்களுடன் வில்லை எடுத்துக்கொண்டு, வழியில் "இராமனுடன் நாங்கள் காட்டிற்குப் போவோம்" வனம்போன்ற பட்டணத்தில் வெகு காலம் கைகேயி இருக்கட்டும்" என்று சொல்லும் இஷ்டஜனங்களின் வார்த்தையைக்கேட்டுக்கொண்டு, அரசனுடைய அரண்மனைக்கு வந்தார்.

३४ राजासूतनिवेदिताऽऽगतिसुतस्सार्धैस्त्रिभिस्तैश्शतैः
युक्तस्त्रीभिरुपाऽऽनयन्स्वसविधं स्वस्याऽऽत्मजंसानुगं ।
तेनावाचिवृणेतवाप्रतिहतं सत्यं परत्रार्थदं
नैवान्यद्भरतायदेहि वसुधां शोकंत्यजानर्थकं ॥ ९६ ॥

அரசன் மந்திரி மூலமாக, இராமனுடைய வரவைத் தெரிந்து கொண்டு, முன்னூற்றைம்பது மனைவிகளுடன் கூடிக்கொண்டு, பின் தொடரும் ஸீதா, லக்ஷ்மணர்களுடன் கூடிய, இராமனைத் தன் சமீபத்தை அடைவிக்கும் பொழுது, இராமன் அரசனைப் பார்த்து கூறினன் "ஹே அரசே! பரலோகத்தில், பயனளிக்கும் தங்கள் ஸத்தியம் கெடாமலிருக்கும்படி, வேண்டுகிறேன். மற்ற வைகளை வேண்டவில்லை. பூமியை பரதனுக்கு, அளிக்கவேண்டும். வீண் துயரத்தை' விடவேண்டும்.

सीतालक्ष्मण एषनत्यजतिमामेष्यन्तमद्याटवीम्
अस्मभ्यं वितराऽऽशिषः कुशलदानिश्चिन्तयानिस्तरन् ।
सत्यां संविदमाशुते पुरमिदं भूयस्समेष्याम्यहं
रामस्योक्ति मिमांनिशम्यसकलाश्चिन्तां नजिग्युः परां ॥

ஸீதையும், இலக்ஷ்மணனும் இப்பொழுது என்னுடன் வனம் செல்ல, விருப்புகிறார்கள். தாங்கள் ஸத்தியப் பிரதிக்ஞை, நிறை வேறும்படி, கவலையில்லாமல், க்ஷேமமளிக்கும் ஆசீர்வாதங்களை, எங்களுக்குச் செய்யவேண்டும். மறுபடியும், தங்களின் பட்டணத்திற்குச் சீக்கிரம் வருவேன்" என்று இராமனுடைய சொல்லைக் கேட்டு, எல்லோர்களும் மிகுந்த கவலையை விட்டு நீங்க முடியவில்லை.

३५ कैकेयी मिदमाहराजसदसि प्रेक्ष्यप्रभोर्दुस्स्थितिं
वाग्वज्रेणतदीयमानसशिलांभिंदन्नभद्यांक्रुधा ।
सूतोऽस्माद्विरमाऽऽश्रिताहितकरात्स्वाकीर्तिदादाग्रहात्
रामंस्थापयराज्य आसनगतं देव्यस्सदानन्दना ॥ ९८ ॥

சுமந்திரன் ராஜஸபையில், அரசனுடைய துயரத்தைத் தெரிந்து கோபங்கொண்டு, பிளக்க முடியாத கைகேயினுடைய மனமாகும் கல்லை, வார்த்தையாகும் வஜ்ரத்தினால், பிளக்கும்படி, அன்னவளைப் பார்த்துச் சொன்னான். "ஹே தேவி! அண்டினவர்களுக்கு ஆபத்தைக் கொடுக்கும், தனக்கு, அபகீர்த்தியைக் கொடுக்கும், இந்தப் பிடிவாதத்திலிருந்து, ஒழியவேண்டும். நாங்கள் ஸந்தோஷமடையும்படி, இராமனை ஸிம்மாதனமடையும்படி செய்யவேண்டும்".

पुत्रात्कोटिगुणं पतिस्सुखकरो नार्यास्तुतद्वेषिणी
क्लेशानेवलभेतसा विधिकृतान्नित्यं वताचारितान् ।
मातुस्ते श्रुतमाभि जात्यमखिलैर्यज्ञाततिर्यग्रुतं
भर्तारं मृतिदित्सयैवहासितेपप्रच्छहेतुंप्रसूः ॥ ९९ ॥

"பெண்களுக்கு புருஷன் புத்திரனைவிட கோடி மடங்கு சுகம் கொடுக்கிறான். அப்புருஷனுக்கு விரோதமான பெண், தெய்வம் கொடுத்த, விலக்க முடியாத துன்பங்களை மாத்திரம் எப்பொழுதும் அடைவாள். பிராணிகளின் சப்தம் தெரிந்த புருஷனுக்கு மரணம் கொடுக்க நினைத்தே, சிரிப்பின் காரணத்தை, ஹேதேவி! உன் தாயார் அப்புருஷனை, வினவினாள். அன்னவளின் நன்னடை எல்லோர்களுக்கும் கேட்டுத் தெரியும்".

३६ वृष्टिं शैलइवाफलंव्यसनगस्सूतस्यतस्यां वचः
राजावीक्ष्यतमादिशत्स्वपृतनां युक्तां धनैर्धान्यकैः ।
रामायव्रजतेवनं नृरहितं संप्रेषयेतिक्रुधा
कैकेय्योच्यतराज्यमेतदधनं किंमेप्रादित्सस्यये ॥ १०० ॥

மலையில் பெய்த மழைபோல் கைகேயினிடம் சுமந்திரனுடைய வார்த்தை வீணாயிருப்பதை அறிந்து, தன் தானியங்களோடு கூடிய சைனியத்தை, மனிதனில்லாத, வனத்திற்குச் செல்லும் இராமனுக்குச் சீக்கிரம் அனுப்பும்படி, அச்சுமந்திரனுக்கு அரசன் உத்திரவு செய்ய, கைகேயி கோபத்தால், அன்னவனைப் பார்த்துச் சொன்னாள். "ஹே அரசே! பொருளற்ற ராஜ்யத்தை ஏன் எனக்குக் கொடுக்க விரும்புகிறாய்".

बध्वामां वररज्जुनाऽऽप्यति बलंकिं क्लेशयस्युन्मदे
सेनाप्रेषणवर्जनं प्रथमतः किंवावृतं बालिशे ।
भूपंद्रागितितर्जयन्तमवदद्भूयस्तरां क्रोधना
त्वद्वंश्यस्सगरोऽग्रिमंसुतमिव त्वंचाद्यनिर्वासय ॥ १०१ ॥

"அதிக பலம் பெற்ற என்னை வரமென்ற கயிற்றால் கட்டி, ஹே மிகுந்த மதம் பெற்றவளே! ஏன் துன்பமடைவிக்கிறாய்? ஹே துஷ்டே! ஸேனையை அனுப்பக் கூடாதென்று முன்னமே வேண்டிக்கொண்டாயா?" என்று சீக்கிரம் அதட்டும் அரசனைப் பார்த்து மிகவும் கோபம்பெற்று கைகேயி சொன்னாள், "உன் வம்சத்தில் பிறந்த ஸகரன் மூத்தபிள்ளையை இராஜ்யத்தைவிட்டு விரட்டினதுபோல் நீயும் இப்பொழுது விரட்டவேண்டும்."

सिद्धार्थश्चतुरोऽर्थसाधनविधौ प्राबोधयत्तांतदा
नादेयांबुनिपातयन्पुरशिशून्निर्वासितस्सागरः ।
रामोधर्मभृदाचचारदुरितं किं येन संपाद्यते
पीडाऽनागसउत्तमस्य विभवंत्वैन्द्रंचहिंस्यादिति ॥१०२॥

காரியங்களை முடிப்பதில் திறமைப்பெற்ற ஸித்தார்த்தன் என்ற மந்திரி, அப்பொழுது கைகேயியைப் பார்த்து, "ஸகரபுத்திரனை அஸமஞ்சஸ்பட்டணத்தின் குழந்தைகளை ஸரயூநதியின் ஜலத்தில் விழச் செய்ததால் வெளியில் விரட்டப்பெற்றான். தர்மங்களைச் செய்யும் இராமன் துன்பமடையும்படி என்ன குற்றம் செய்தான். குற்றமற்ற நல்லாருடைய துயரம் இந்திரனுடைய ஐசுவரியத்தையும் குன்றிவிடச்செய்யும்" என்று கூறினான்.

३७ त्यक्त्वा तत्सकलं खनित्रपिटकौ चीराणिसंत्रात्रछते
रामायप्रददौ च तान्यविमनास्साक्रूरचित्ताभृशं ।
स्वीकृत्याथकटौन्यवस्तसमुदास्वस्यानुजं धारयन्
सीतांचीरधृतेर्निवार्यसगुरुः प्राहक्रधाकैकयीम् ॥ १०३ ॥

அவைகள் எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, மண்வெட்டி, கூடை, மரையுருவி, இவைகளைமாத்திரம் விரும்பும் இராமன் பொருட்டு, மிகவும் கடும் நெஞ்சம்பெற்ற கைகேயி, மனம் வருந்தாமல், அவைகளைக் கொடுத்தாள். பிறகு இராமன் ஸந்தோஷமாக, அவைகளைப் பெற்றுக்கொண்டு, மரை யுருவிகளைத் தன் தம்பியைத் தரிக்கச்செய்து, இடையில் தானும் தரித்தார். குருவான வஸிஷ்டர், ஸீதையை, மரையுருவித் தரிக்கக்கூடாதென்று தடுத்து, கோபமாய்க் கைகேயியைப்பார்த்துக் கூறினார்.

कैकेयिस्वकुलघ्नि सत्यचरितंस्वंवंचयन्तीनृपं
किंदैवान्नबिभेषिराममहिषी राज्यं प्रशासिष्यति ।
साचेद्यास्यतिराघवेण विपिनं सर्वेऽनुयास्यन्ति च
श्रीमान्यत्रनतन्नराज्यमितरत्तस्मिन्वसैकाकिनी ॥ १०४ ॥

"தன் குலத்தைக்கெடுத்த ஹே கைகேயி! ஸத்திய ஸந்தனை தன் அரசனை ஏமாற்றிய உனக்கு தெய்வத்தினிடமும் பயமில்லையா? இராமனுடைய மனைவி இராஜ்யத்திற்கு அரசியாவாள். அவளும் இராமனுடன் வனஞ்சென்றால் எல்லோர்களும் கூடச்செல்லுவார்கள். லெக்ஷ்மீ கடாக்ஷம் பெற்ற அவ்விராமன் இல்லாதவிடம் இராஜ்யமில்லை. அது கானகம். அதில் நீ ஒருவளாக இருக்கவேண்டும்."

आर्यानीक्षणतस्त्वतस्समरतः कान्तारमेवैष्यति
द्राङ्ग्रांप्स्यति भूमिमप्यगुरुवाचपुत्रायकिंवाऽद्रुहः।
स्वीयैर्भूषयभूषणैरसदृशैर्हृष्टातदर्हांस्नुषां
नैतस्याश्च वृतावनेनिवसतिस्सुक्रूरभावेत्वया ॥ १०५ ॥

“அண்ணனைக் காணமல் அப்பரதன் இவ்விடமிருந்து சீக்கிரம் கானகத்திற்கே செல்வான். பெரியோர்களின் உத்திர வில்லாமல் பூமியைப் பெறவேமாட்டான். புத்திரனுக்கு என் குற்றம் செய்தாய். ஒப்பற்ற தன் ஆபரணங்களால் அதற்குத் தகுந்த அழகிய மருமகளுக்கு ஸந்தோஷமாய் அலங்கரிக்க வேண்டும். ஹே கடும் நெஞ்சம் பெற்றவளே! அவளுக்கும் வனவாஸம் நீ வேண்டவில்லை.”

३८ चीरस्याथ विधारणाद्गुरुजनैस्संवारिताज्जानकी
नोपारंस्तपतिव्रतप्रणयिनी सर्वैः कृतंधिग्रवं।
राजासोढु मशक्नुवन्यशसि सद्धर्मेनिजप्राणने
त्यक्ताऽऽशः प्रियदां स्वविप्रियकरीं दीनस्समाभाषत ॥

பிறகு ஸீதை புருஷனுடைய விருதத்தை அனுஷ்டிக்க விரும்பி, குரு ஜனங்கள் தடுத்தும், மரையுருவியைத் தரிப்பதி லிருந்து ஒழியவில்லை. எல்லோர்களுடைய நிந்தா சப்தத்தைக் கேட்டு, பொறுக்க முடியாமல், புகழிலும் நன்னடையிலும் தான் பிழைப்பதிலும் ஆசையற்று, அரசன் தனக்குத் துன்பத்தைக் கொடுக்க, இன்ப மனைவியைப்பார்த்து, தீன ஸ்வரத்துடன் கூறினார்.

दौर्जन्यैकपरायणे किमकरोत्सीतातपस्विन्यघं
मुग्धां कोमळ गात्रयष्टिमपितां चीरांबरां वांछसि।
रामस्याद्य विवासनंयदपितत्तद्दुर्नयस्सक्षमं
स्यादेतद्यदितेचिकीर्षि तमयित्वंदुर्गतिं प्राप्स्यसि। १०७॥

“ துஷ்ட நடைக்கு ஓர் இருப்பிடமான ஹே கைகேயி! குற்றம் செய்யத் தெரியாதவளும், மெதுவான சரீரம் பெற்றவளுமான ஸீதையும், மரையுருவி ஆடை அணியும்படி நீ விரும்புகிறபடியால் எல்லோர்களும் அன்பு செய்யத் தகுந்த அன்னவள் என்ன குற்றம் செய்தாள்? இப்பொழுது இராமனுக்கு விதித்த வனவாஸம் அவனுடைய துர்நடைக்குத் தக்கதாயினும், அவ்வனவாஸத்தை ஸீதைக்கும் விதிக்க நினைத்தால், நீ நரகமடைவாய்.”

शोकेनाऽऽर्तमवाङ्मुखं स्वपितरं भूयः प्रलापाऽऽवृतं
रामस्सानुनयं बभाणजननीं त्वद्भक्तियुक्तांमम ।
मान्यांमानयमत्प्रवाससततक्लिष्टां तथामत्कृते
प्राणान्न्यस्ययमाऽऽलयं नचविशेत्स्यां तुष्टएतेनच ॥१०८॥

“ துக்கம் பெற்று கீழ்முகமாய் புலம்பிக்கொண்டிருக்கும் தன் தந்தையைப்பார்த்து, இராமன் ஸமாதானமாக, தங்களிடத்தில் அன்பு பெற்றவளும், கௌரவம் பெறத்தக்கவளும், என் அயலூர் யாத்திரையால் வருந்தினவளுமான என் தாய், என்னை நினைத்து பிராணங்களை இழந்து, எமலோகம் செல்லாமலிருக்கும்படி எனக்காக கவனிக்கவேண்டும். இதனால் நான் ஸந்தோஷமடைவேன் என்று மறுபடியும் சொன்னார்.”

३९ श्रुत्वाराघववाक्यमात्महृदयेशोकंनधर्तुंपटुः
देहापाटवसंयुतोदशरथः प्रत्यब्रवीन्नैवतं ।
संज्ञांप्राप्यतदाव्यचिन्तयदहोगावो विवत्साः कृताः
बह्वः पूर्वतनेच जन्मनिमयादुःखंयदभ्यागतं ॥ १०९ ॥

இராமனுடைய வார்த்தையைக்கேட்டு அரசன் துக்கத்தை மனதில் பொருக்கமுடியாமல், சரீரத்தில் துன்பத்தை அடைந்து, அவ்விராமனைப் பார்த்து பதிலே உரைக்கவில்லை. பிறகு நினைவு பெற்று மனதில் நினைத்தார். “அந்தோ முன் பிறப்பில் பல பசுக்களை, கன்றைவிட்டு பிரித்ததால் இவ்வித துக்கம் எனக்கு வந்திருக்கிறது.”

कालस्याऽऽगतिमन्तरा नहि भवेज्जातस्य किंचिद्ध्रुवं
कैकेय्याः परिपीडितस्यनमृतिर्यन्मेऽधुनाऽभ्यागता ।
यद्रामं वरवस्त्रधारिणमिमंपश्यामि चीराऽऽवृतं
कापट्येनयदेकया विधिबलादक्लिश्यतायं जनः ॥११०॥

"பிறந்தவர்களுக்கு காலம் வராமல் சுகம் துக்கம் ஒன்றும் வராது நிச்சயம். கைகேயியால் துன்பமடைந்தும் எனக்கு இப்பொழுது மரணம் வரவில்லை. உயர்வான வஸ்திரம் தரித்த இராமன் மரையுருவி தரித்திருப்பதைப் பார்க்கிறேன். நான் பலவானுயிருந்தும் ஒரு பெண்ணின் கபடத்தால் தெய்வ பலத்தால் துயரமடைந்தேன்."

राजाप्राह सुमन्त्रमात्मवशगं स्वस्यौपवाह्यंरथं
युक्तंवाजिभिरानयद्रुतमिहाऽऽरामं गुणानामिमं ।
रामं प्रापयदेशतः परमितिक्षिप्रंतथैवाऽऽचरन्
सूतः प्राहरथस्समागतइतिव्यज्ञापयद्राघवं ॥ १११ ॥

"நான் ஏறும் குதிரைபூட்டிய இரதத்தை இவ்விடம் கொண்வா. நற்குணங்களுக்கு நந்தவனம்போன்ற இராமனை, சீக்கிரம் தேசத்திற்கு அப்புரம் அடைவிக்கவேண்டும்" என்று அரசன் தனக்கு வசமான சுமந்திரனுக்கு உத்திரவுசெய்ய, அன்னவனும் சீக்கிரம் அவ்விதமே செய்து "இரதம் வந்திருக்கிறது" என்று இராமனிடம் தெரிவித்தான்.

कोशागारनियुक्तमाह पुरुषं राजाशुचिं निश्चितं
क्षौमाण्याहर भूषणौघमितिस प्रादाच्चसंख्यापयन् ।
वर्षाण्यात्मभुवेऽवनेर्वररुचिर्व्यद्योततैतद्युता
श्वश्रूस्तांपरिरभ्य वत्सलतमा प्राबोधयत्सन्मतिं ॥११२॥

வெண்பட்டுக்களையும் ஆபரணக் குவியலையும் கொண்டு வரும்படி அரசன் கெஜானாவில் இருக்கும் நம்பிக்கை உள்ளவனாக நிச்சயம் செய்யப்பெற்ற வேலைக்காரனிடம், உத்திரவுசெய்து, வருஷங்களை கணக்கிட்டு பூமியின் புதல்வியின் பொருட்டு, அவைகளை அளித்தார். அவைகளைப் பெற்று விளங்கும் மருமகளைக் கட்டிக்கொண்டு, மிகவும் அன்புபெற்ற மாமியான கௌஸல்யை நற்புத்தி புகட்டினாள்.

प्राणैरप्यभिसत्कृता बहुधनैर्नित्यं कुशीलास्त्रियः
भर्तारंचपरित्यजन्त्यपधनं प्राप्तं परामापदं ।
साध्वीनां प्रबलंतुदैवमनिशं भर्तैवनातोऽधिकं
तद्वत्सेतनयं ममावसुचयं त्वंनावमन्यस्वतं ॥ ११३ ॥

"பிராணன்களாலும் மிகுந்த பொருள்களாலும் எப்பொழுதும் உபசரிக்கப்பெற்றும், துஷ்ட ஸ்திரீகள், பொருளை இழந்து மிகுந்த துன்பமடைந்த புருஷனைக் கைவிடுகிறார்கள். பதிவிரதைகளுக்கு எப்பொழுதும் புருஷனே தெய்வம், அவனுக்கு மேலானது ஒன்றுமில்லை. ஆனதால் ஹே குழந்தாய்! பொருளற்ற என் புத்திரனை நீ அவமதிக்காதே."

सा श्वश्रूं वदतिस्मसांप्रतमहं गण्यानदुर्योषितां
यच्चाऽऽर्याऽऽदिशति प्रशान्तमनसाकुर्वेतथैवाखिलं ।
स्त्रीणां प्रेमशताऽऽत्मजैश्चनतथापत्यायथा जायते
काप्राज्ञापरि खेदयेदमितदं भर्तारमभ्यर्हितम् ॥ ११४ ॥

ஸீதை மாமியாரைப்பார்த்து, "ஹே அம்மா! துஷ்ட ஸ்திரீகளோடு என்னை இப்பொழுது சேர்க்கக்கூடாது. அம்மாள் சொல்லுகிறதெல்லாம் அவ்விதமே மனதில் பொறுமையுடன் செய்கிறேன். பெண்களுக்கு புருஷனால் கிடைக்கும் சுகம் நூறு புத்திரர்களாலும் கிடைக்காது. புத்திசாலியான எவள் தான், அளவற்ற பொருளை அளிக்கும் பூஜிக்கப்பெற்ற புருஷனைத், துன்பமடைவிப்பாள்" என்று கூறினாள்.

सन्तापं विसृजप्रवासजनितं शीघ्रंगामिष्यत्ययं
स्वापस्यावसरोयथाससुहृदं तीर्णप्रतिज्ञाऽऽगतम् ।
संद्रक्ष्यस्यचिरेणमामितिवदन्नामन्त्रयन्मातरं
रामःप्राह पितुस्स्त्रियो विरचितं क्षन्तव्यमागस्त्विति ॥

"என் அயலூர் யாத்திரையால் உண்டான துக்கத்தை ஒழிக்கவேண்டும். இதன் காலம் நித்திரையின் ஸமயம் போல், சீக்கிரம் நீங்கிவிடும். பிரதிக்ஞையை நிறைவேற்றி நண்பர்களோடு நான் திரும்பி வருவதை சீக்கிரம் பார்ப்பாய்" என்று சொல்லி, இராமன் தாயினிடம் சொல்லிக்கொண்டு, பிதாவின் மனைவிகளைப் பார்த்து, "நான் செய்த பிழைகளைப் பொறுக்கவேண்டுமென்று கூறினார்."

४० माताबोधयतिस्वसौख्य जनकं सौभ्रात्रकंलक्ष्मणं
यत्ते भ्रातृनिषेवणं स्वकुलजं कीर्तिप्रदं श्रीकरं ।
तत्कालेकुरु चाप्रमत्तमनसामां तातमप्यास्पदं
सीतां राममरण्यमेवसततं विद्धिप्रहृष्टाऽऽशयः ॥ ११६ ॥

இலக்ஷ்மணனைப் பார்த்து, அவனுடைய அன்னையான சுமித்திரை "தன் குலத்தில் உதித்தவர்கள் செய்த, சுகத்தையும், புகழையும், ஐசுவரியத்தையும் கொடுக்கும் பிதாவின் பணிவிடையை அதற்குரியகாலத்தில், மனதில் ஸாவதானமாகசெய்ய வேண்டும். ஸீதையை அன்னையாகவும், இராமனைத் தந்தையாகவும், அரண்யத்தை அயோத்தியாகவும், மனதில் சந்தோஷம் பெற்று, எப்பொழுமே நினைக்கவேண்டும்" என்று ஸஹோதரவாஞ்சையை அன்னவனுக்கு உபதேசித்தாள்.

रामस्सूतकृतत्वरोजिगमिषुस्तत्काननंस्यन्दनं
स्वारोप्यप्रमदां सहोदरयुतश्चाऽऽरोहदव्याकुलः ।
अश्वान्सारथिरभ्यचोदयदमून्त्रध्यान्प्रवेगान्पुनः
राजापौरजनैः पदातिरपितान्नान्वेतुमप्याशकत् ॥११७॥

இராமன் சுமந்திரனால், தூண்டப்பெற்று, காட்டிற்குச்செல்ல விரும்பி, இரதத்தில் மனைவியை ஏற்றிவைத்து, ஸஹோதரனுடன் மனங்கலங்காமல் தானும் ஏறினார். அரசன் பட்டணத்தின் ஜனங்களுடன், கால்நடையாக மறுபடியும் பின் தொடராமல் இருக்கும்படி, இரதத்தின் குதிரைகளை மிகுந்த வேகமாய் சுமந்திரன் விரட்டினான்.

रामस्त्वेक्षण वांछिनो गुरुजनान्पौरान्समागच्छतः
दृष्ट्वासूतरथं शनैर्गमयभोरित्युक्तिमव्याजजां ।
शृण्वन्तद्गादितां भृशंसकरुणो धर्मेणबद्धोदृढं
नेच्छन्नप्यवलोकितुं तमनुदत्संप्रेरणे वाजिनां ॥ ११८ ॥

இராமன் தன்னைப்பார்க்க விரும்பி, கூடவரும் பெரியோர்களையும் பட்டணத்தின் ஜனங்களையும் பார்த்துப், "ஹே ஸாரதியே! இரதத்தை மெதுவாக நடத்தவேண்டும்" என்று கபடமில்லாத அன்னவர்களின் வார்த்தையைக்கேட்டும், மிகவும் கருணைப்பெற்றும், தர்மத்தால் பலமாக கட்டுண்டு, அவர்களைப் பார்க்கக் கூட விரும்பாமல், குதிரைகளை நடத்தும்படி அச்சுமந்திரனைத் தூண்டினார்.

४१ का नः काननगं विनारघुपतिं वेश्मस्थितानांगतिः
मत्वेथं नचकारकर्मानियतं पौरोजनाश्चिन्तया ।
सर्वेप्राणभृतोऽपिबन्नतुजलं स्वं भोजनं किंपुनः
शीतोवाति नमारुतोनशशभृन्नाहस्करस्तत्पुरे ॥ ११९ ॥

"வீட்டிலிருக்கும் எங்களுக்கு, காட்டிற்குச் சென்ற இராமனைத் தவிர வேறு கெதி ஏது?" என்று நினைத்து பட்டணத்தின் ஜனங்கள் கவலையால், நித்யகர்மங்களையும் நடத்தவில்லை. எல்லாப் பிராணிகளும், ஜலங்கூட குடிக்கவில்லை. தனது உணவைத் தேடுவார்களா, அயோத்யாபுரியில், குளிர்ந்த காற்றும் வீசவில்லை. சந்திரனும், சூரியனும் பிரகாசிக்கவில்லை.

४२ यावद्रामरथोत्थितं भुविरजस्संदृश्यते भूपतिः
तावद्धैर्ययुतोविलोक्यतदनुक्लिष्टः पतन्नप्यधः ।
रामांबाऽऽश्रितबाहु रात्मसविधेदृष्ट्वाशठांकैकयीं
तत्स्पर्शं परिवर्जयन्नभिदधौ स्वद्रोहलब्धश्रियम् ॥१२०॥

இராமனுடைய இரதத்தின் தூளி பூமியில் தெரியும்வரை அரசன் தைரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்து, பிறகு வருந்தி, கீழே விழுந்து, இராம மாதாவினால் கையில் பிடிக்கப்பெற்று, தன் ஸமீபத்தில் தனக்குத் துரோஹம்செய்து, இராஜ்யம்பெற்ற வஞ்சகியான, கைகேயியைப் பார்த்து, அவளின் ஸம்பந்தத்தை விலக்கி, அவளைப் பார்த்து, சொல்லத் தொடங்கினார்.

त्वत्संबन्ध मपित्यजाम्यवहितस्त्वत्पुत्रदत्तं पयः
स्वर्लोकस्थितलभ्यमप्यतितरामित्युक्तिभिर्दूरयन् ।
पुत्रस्यातिचिराऽऽत्तसत्सुखततेः कान्तारजंक्लेशनं
सीतायानृपतिस्स्मरन्नधिगतक्लेशः पुरंप्रापसः ॥ १२१ ॥

“நல்ல நினைவோடு, உன் ஸம்பந்தத்தையும், சுவர்க்கலோகத்திலிருப்பவர்களுக்கு, சுகமாய் கிடைக்கக்கூடிய உன் புத்திரன் கொடுக்கும் திலோதகத்தையும், முற்றிலும் நான் இழந்தேன்” என்று சொற்களால், அக்கைகேயியை விலக்கி, வெகு காலமாக நற்சுகத்தை நன்றாய்ப் பெற்ற, புத்திரர்களும், ஸீதையும் அடைந்த, துயரத்தை நினைத்துக்கொண்டு, அவ்வரசன் அயோத்தியை அடைந்தார்.

संत्यज्याऽऽत्मगृहं निरागमयता रामांबिकायागृहं
क्वासि प्रेयसि साधुमां स्पृशकराद्दृष्टिस्तु रामंगता ।
त्वत्पाणिस्सुखयिष्यतिव्यसनगं रामांगसंस्पर्शवत्
पत्येतिप्रतिपूजितापटुतयातंमोदयामाससा ॥ १२२ ॥

ஒளியற்ற தன் அரண்மனையை ஒழித்து, இராமனின் தயாரின் அரண்மனைச் சென்று புருஷனால், "ஹே அன்பு நிறைந்த அன்னமே! எங்கிருக்கிறாய்? என் கண்களோ; இராமனுடன் சென்றன. என்னைக் கையால் நன்றாகத் தொடவேண்டும். இராமனுடைய சரீர ஸம்மந்தம்போல், உன் கை துன்பமடைந்தவனுக்கு இன்பமளிக்கும்" என்று புகழப்பெற்ற கௌஸல்யை, திறமையால் அவ்வரசனை ஆனந்தமடைவித்தாள்.

४३ शोकाऽऽर्तापतिमाहरामजननीसा पन्नगीवाहितं
सत्पुत्रेप्रविधायनूनमधुनानिश्चिन्तयाऽऽसिष्यते ।
आगच्छेदपिकिं महान्स समयोयत्राऽऽत्मजस्सानुजः
पत्न्यापौरनुतस्समेष्यतिपुरीं तीर्णप्रतिज्ञाऽऽर्णवः ॥१२३॥

கௌஸல்யை துக்கத்தால் வருந்தி, புருஷனைப் பார்த்து, "அக்கைகேயி ஸர்ப்பம்போல், என் புத்திரனிடத்தில் துன்பத்தை செய்து, இப்பொழுது கவலையில்லாமல், நிச்சயமாய் இருக்கப் போகிறாள். என் புத்திரன் தம்பியுடனும், மனைவியுடனும், பிரதிக்ஞை என்ற கடலைக் கடந்து, பட்டணத்தின் ஜனங்களால் புகழப்பெற்று, பட்டணத்திற்குத் திரும்பிவரும் பெரிதான அந்த நற்காலம் வருமா?" என்று கூறினாள்.

४४ शोचन्तीमपि राममातरमति प्रेम्णासुमित्राऽब्रवीत्
आर्येधर्म्यपितृ प्रतिश्रवकृतं गुण्यं सुवीर्याऽऽलयं ।
पुत्रंशोचसि किं सएवपृथिवीं लक्ष्मीं च संप्राप्स्यति
श्रीरूपिण्यपिजानकी वरधनुः प्राप्नोतियं लक्ष्मणः ॥

துக்கிக்கும் கோசல மன்னனின் மகளைப் பார்த்து, அதிக அன்போடு சுமித்திரை உரைத்தாள். "ஹே அம்மணி! தர்மத்திலிருந்து தவராமல், பிதாவின் பிரதிக்ஞையை நிறைவேற்றும் மிகுந்த பலத்திற்கு இருப்பிடமும், நற்குணங்கள் பெற்றவனுமான, தன் புத்திரனைப் பற்றி, ஏன் வருந்தவேண்டும்? மஹாலெக்ஷ்மியின் உருவம் பெற்ற ஸீதையும், உயர்ந்த வில்லைப்பெற்ற இலக்ஷ்மணனும், பின் சென்றிருப்பதால், அவனே பூமியையும், ராஜ்யலக்ஷ்மியையும், அடையப்போகிறான்."

गच्छन्तं पथि कानने तवसुतं ग्रीष्मे निदाघांशुमान्
दृष्ट्वाऽभ्रेषु विलेष्यते वनभवस्सेविष्यते मारुतः ।
शैत्यंमान्द्यमथैत्यसौरभमपि व्याघ्रागजाभीषणाः
धाविष्यन्तिसुदूरमेव सभयाधीरस्यसर्वेवशाः ॥ १२५ ॥

'காட்டில் வழியில் செல்லும் உன் புத்திரனைப்பார்த்து, வேனல்காலத்திலும், வெய்யோன் மேகங்களில் மறைவான். குளுமை வாஸனை பெற்ற மெல்லிய காட்டிலிருக்கும் காற்று வீசப்போகிறது. பயமளிக்கும் புலிகளும், யானைகளும் பயம்பெற்று வெகுதூரத்திடுல ஓடிவிடும். தைர்யம் பெற்றவனுக்கு எல்லோர்களும் அடிமை ஆவார்கள்."

आसारैरिव वाहिता वनततिं मेघास्समाभाषितैः
शीतैरामगुणामृतैरखिलरुक्संहारकैस्सारगैः ।
प्रज्ञालक्ष्मणसूरजीवयदमूं रामांबिकां शोकतः
रामप्राभवचिन्तनेनमुदिता शोकंजहौसानिजं ॥ १२६ ॥

மேகங்கள் ஜலத்தால் காட்டின் கூட்டத்தை நெருப்பிலிருந்து பிழைக்கச் செய்வதுபோல், குளிர்ந்த வார்த்தைகளாலும், எல்லோர்களுடைய பிணியைத் தீர்க்கும் பலமான அமிருதம் போன்ற, இராம குணங்களாலும், அக்கௌஸல்யையை புத்திசாலியான சுமித்திரை துக்கத்திலிருந்து பிழைக்கச்செய்தாள். அக்கௌசல்யை இராமனுடைய பெருமையை நினைத்து, ஸந்தோஷமடைந்து, தன் துக்கத்தைத் துறந்தாள்.

४५ स्वान्मुक्त्वैव वनंगतंकथमपित्यक्तुंनशक्ताजनाः
पौराः प्रेमपतिं तदारघुपतिं प्रेम्णाऽन्वगच्छन्भृशं ।
आकृष्टानितरां तदीयगुणता सौरभ्यलोभेनते
रामोवारायितुं शशाकनचतान्क्षिप्रंपटुर्यद्यपि ॥ १२७ ॥

தங்களை விட்டு வனஞ்சென்றும், அன்புள்ள அரசனை இராமனை அவருடைய நற்குணங்களின் வாஸனையில் மிகுந்த ஆசையால், நன்ருய் இழுக்கப்பெற்று, விடமுடியாமல் அன்பினுல் பட்டணத்தின் ஜனங்கள் அவருடன் பின்தொடர்ந்தார்கள். இராமன் திறமை பெற்றிருந்தும், அந்த ஜனங்களைச் சீக்கிரம் தடுக்க முடியவில்லை.

सुप्रेमा कुलमानसाननुगतस्वस्यन्दनान्नागरान्
रामस्सानुनयंबभाणवचसासंप्रीणयन्स्वादुना ।
याप्रीतिर्मयिवश्चिरन्तुभरते निक्षिप्यतांसाऽधिकं
मद्भ्रातर्यपिमत्समेगुणतया मत्तोऽधिकेराजनि ॥१२८॥

அதிக அன்பினுல் மனங்கலங்கி, தன் இரதத்தைப் பின்தொடரும் பட்டணத்தின் ஜனங்களைப் பார்த்து, இராமன் இன்பமான வார்த்தையால் ஸமாதானத்துடன் ஸந்தோஷமடைவித்து, "ஹே ஜனங்களே! வெகுகாலமாக என்னிடத்தில் இருக்கும் அன்பை, என் ஸகோதரனும் குணங்களின் மிகுதியால் எனக்கு ஸமானமும், என்னைவிட அதிகமும், அரசனுமான பரதனிடம், அதிகமாய் செய்யவேண்டும்" என்று கூறினார்.

जात्या भो जवना हयारघुपतेर्वाहानिवर्तध्वमा
श्रान्तप्रार्थनया पुराद्वनमयं नैवापनाद्योऽधुना ।
वृद्धान्ज्ञानवयस्तपोभिरमितानार्तप्रलापान्द्विजान्
दृष्ट्वास्यन्दनतोऽवरुह्य तरसापद्भ्यां कृपाळुर्ययौ ॥ १२९ ॥

ஜாதியில் பிறந்ததுகளும் வேகம்பெற்று, "இராமனுடைய இரதத்தை வகிக்கும் ஹே குதிரைகளே! களைப்பைப் பெற்றவர்களின் வேண்டுகோளுக்கிறங்கி, திரும்பிவரவேண்டும். இராமனை இப்பொழுது பட்டணத்திலிருந்து, வனத்திற்குக்கொண்டுபோகக் கூடாது" என்று துயரமடைந்து புலம்பும், அறிவு, வயது, தவம் இவைகளில் மிகுதிபெற்ற அளவற்ற பிராம்மணர்களைப் பார்த்து, இராமன் இரதத்திலிருந்து, வேகமாய் இறங்கி கருணையுடன் கால் நடையாகச் சென்ருர்.

ब्राह्मण्योचितमार्जितं सुचरितं त्यक्त्वाऽऽत्मनः कर्म च
प्रीत्या त्वामनुयाति वैदिकततिस्त्वत्सेवन प्रेमतः ।
तत्पूर्तिश्च विना त्वदागमनतो नस्यात्सदा याचितः
ह्यागच्छेति धरासुरैस्स तमसां संप्राप रामो नदीं ॥ १३० ॥

பிராமண ஜன்மாவிற்குரிய தன் நித்திய கர்மாவையும், தவத்தையும் விலக்கி, வைதிக பிராமணர்களின் கூட்டம் "ஹே ராமா உன் ஸேவையில் விருப்பத்தால், உன்னைப் பின் தொடருகிறது. நீ திரும்பிவராதபோனால், எப்பொழுதும் எங்களுடைய நற்றவம் நிறைவேறாது. நீ வரவேண்டும்" என்று பிராமணர்களால் வேண்டப்பெற்ற இராமன் தமஸாநதியை அடைந்தார்.

तत्तीरे वृजिनापहे सुखकरे स्तूतो रथान्मोचयन्
अश्वान्संपरिवर्तनव्यपगतास्तोकाध्वजातश्रमान् ।
पीतस्वच्छजलान्सुजग्धहरितग्रासांकुरान्वारिभिः
संसिक्तान्बलदैस्तदीयपवनैस्संवीजितस्सोऽकरोत् ॥ १३१ ॥

பாபத்தை அகற்றி, சுகத்தை அளிக்கும் தமஸாநதியின் கரையில் இரதத்திலிருந்து குதிரைகளை அவிழ்த்து, பூமியில் புரளுவதால் மிகுந்த வழிநடந்த களைப்பை நீக்கி, சுவையுள்ள ஜலத்தைக் குடிக்கச்செய்து, பசுமையான இளம் புற்களை உண்ணச் செய்து, ஜலத்தால் நனையச்செய்து, பலமளிக்கும் அத் தமஸா நதியின் காற்றால் வீசப்பெற்ற ஸுமந்திரன், அக்குதிரைகளை இருக்கச்செய்தான்.

४६ रात्रिः पूर्वतनी वनाधिवसतेरेषा ह्युपोष्येति स
त्यक्त्वाऽऽहारमपो निपीय रचिते पर्णाऽऽस्तरे सुस्वपन् ।
निद्राढ्यानभिवीक्ष्य नागरजनान्मूले तरूणां घृणा
युक्तस्तान्परिमोचयन्व्यसनतो रामोऽब्रवीत्सारथिं ॥ १३२ ॥

"இன்றைக்கு வனவாஸத்தின் முதலாவது இரவு இதில் உபவாஸம் இருக்கவேண்டும்" என்று உணவைத் தள்ளி, ஜலத்தைக் குடித்து, இலக்ஷ்மணன் நிர்மாணம் செய்த இலை நிறைந்த படுக்கையில் உறங்கி, இராமன் மரங்களின் வேர்களில் உறங்கும் பட்டணத்தின் ஜனங்களைப் பார்த்து, கருணை பெற்று, அவர்களை அத்துயரத்திலிருந்து விடும்படிசெய்ய, ஸாரதியைப் பார்த்து கூறினார்.

यावत्पौर जनानजाग्रतिवनं गन्तव्यमेवाधुना
तत्संयोजयवाजिभीरथमिमेसंवंचनीयामया ।
किंचिच्चोत्तरादिङ्मुखेनगमयन्नायाहिवर्त्मान्तरात्
इत्यादिश्यससोदरोवनितयाऽऽरोहद्रथंराघवः ॥१३३॥

"பட்டணத்தின் ஜனங்கள் விழித்துக்கொள்ளுவதற்குள், வனம் போகவேவேண்டும். ஆனதால் இப்பொழுது இரதத்தில் குதிரைகளைப் பூட்டவேண்டும். இவர்களை ஏமாற்றவேண்டும். கொஞ்சம் வடக்கு திசையை நோக்கிச்சென்று, வேறுவழியில் வா" என்று உத்திரவுசெய்து, இராமன் தம்பியோடும், மனைவியோடும் இரதத்தில் ஏறினார்.

४७ रामेऽरण्यमुपाऽऽगते पुरजनास्सद्यः प्रबुद्धाद्रुतं
रामावीक्षणदुःखितारथगतिं दृष्ट्वाप्रणष्टां भृशं ।
रामस्यापिगुणान्विचिन्त्यमहतीं निद्रांचकालार्पितां
निष्कामानिजजीविते विरहिताऽऽनन्दांपुरीं प्राविशन् ॥

"இராமன் வனஞ்சென்றதும் பட்டணத்தின் ஜனங்கள் உடனே சிக்கிரம் விழித்துக்கொண்டு இராமனைக் காணமல் வருந்தி இரதத்தின் தடம் மிகவும் அழிந்திருப்பதைப் பார்த்து இராமனுடைய நற்குணங்களையும் துஷ்காலத்தில் வந்தமிகுந்த தங்களின் தூக்கத்தையும் நினைத்து தன் உயிர் தரிப்பதிலும் ஆசையற்று ஆனந்த மிழந்த அயோத்தியா புரியை அடைந்தார்கள்."

४८ भर्तॄन्प्रेक्ष्यसमागतान्प्रतिगृहं रामं विना दुःखिताः
वामाक्ष्योऽव्यलपन्सगर्हणरवाः पुत्रादिनैराश्यगाः ।
मूर्तिर्जीवविनाकृतेव भयदासन्त्यक्त रामापुरी
कैकेय्यानवशेवसेमविपिनं धन्यंसरामादिकं ॥ १३५ ॥

வீடுகள் தோறும் இராமன் இல்லாமல் புருஷன் வந்திருப்பதைப் பார்த்து, பெண்கள் துக்கித்து, புத்திரன் முதலியவர்களிடத்திலும் ஆசையற்று, நிந்தித்துக்கொண்டு, "இராமன் இல்லாத இராஜ்யம் ஜீவனில்லாத சரீரம்போல் பயத்தைக் கொடுக்கிறது. கைகேயிக்கு அடிமையாக நாங்கள் இருக்கமாட்டோம். இராமன் முதலியவர்கள் இருக்கும் வனமே மேன்மைவாய்ந்தது" என்று புலம்பினார்கள்.

४९ रात्रेश्शेषतआस्थितो जनपदान्तद्वासिनां भाषणं
शृण्वन्निन्दितराज केकयसुतं तीर्त्वाबहुस्यान्दिनीः ।
रामस्स्यन्दनगोऽप्यगस्त्यचरितामाशांययौवांछितां
भूयस्तांसरयूतटे सुमृगयांसंबोधयन्सारथिं ॥ १३६ ॥

அவ்விரவு விடிவதற்குள் இராமன் இரதத்திலேறிக்கொண்டு, அநேக தேசங்களை அடைந்து, அரசனையும் கைகேயியையும் நிந்திக்கும் அத்தேசவாஸிகளின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டும், அநேக நதிகளைத்தாண்டி, ஸரயூ நதிக்கரையில் மறுபடியும் வேட்டையாட விருப்பமிருப்பதை ஸாரதியிடம் தெரிவித்துக்கொண்டு, விரும்பப்பெற்ற அகஸ்தியர் இருக்கும் தென்திசைக்குச் சென்றார்."

देशान्कोसलसंज्ञकानभिगतोहृष्टाभिपुष्टैर्जनैः
युक्तान्त्रामउदीक्ष्यतत्स्वनगरं तद्वासिनीर्देवताः ।
आपृच्छेविनिवर्तयन्स्वकृणतस्तातंसमेष्यामितां
त्वामित्युक्तवचास्तदास्थितजनानामन्त्रयन्नत्यगात् ॥

ஸந்தோஷ மடைந்து செழித்திருக்கும் ஜனங்களைப்பெற்ற கோஸல தேசங்களை அடைந்து, இராமன் தன் பட்டணத்தைப் பார்த்து, அதிலிருக்கும் தெய்வங்களிடத்தில் "பிதாவைத் தன் கடனிலிருந்து விலக்கி, உன்னிடம் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டும், அத் தேசவாஸிகளான ஜனங்களிடத்திலும் சொல்லிக்கொண்டும், அப்புறம் சென்றார்.

५० गंगामाहितचन्द्रमौळिमकुटाऽऽसंगामभंगाऽऽवहा
नंगाऽऽसादितकश्मलापहजलां तुंगातिभंगाऽऽवहां ।
श्रीरंगायितमंगळातिघटकापांगामनंगारिजात्
संगामंगभवां गिरेस्त्रिदिवगां गाढाऽऽश्रिताब्धिंत्वगात् ॥

சிவபெருமான் தலை கிரீடத்தின் ஸம்பந்தம் பெற்றதும், குறைவற்ற காமத்தால் தேடின பாபங்களை அகற்றும் ஜலம் பெற்றதும், பெரிய அதிக அலைகளைப்பெற்றதும், லெக்ஷ்மீதேவியின் நர்த்தன கிருகம்போல் மங்களத்தைக்கொடுக்கும் கடாக்ஷம் பெற்றதும், சுப்பிரமணியரை மடியில் குழந்தையாக பெற்றதும், இமய மலையின் புதல்வியும், தேவலோகத்திலிருந்து கடலில் நன்றாய் கலந்ததுமான கங்கையை, இராமன் அடைந்தார்.

तत्तीरेऽथसशृंगिबेरनगरी सामीप्यगंत्विंगुदी
वृक्षच्छायमुपाऽऽवसद्रघुपतिस्तद्देशनाथेनच ।
सख्यास्वस्यगुहेनसप्रणमनं दत्तं नृपाश्वाशनं
भूरिप्रेमरसं विनाऽन्यदखिलं सांत्वेनैवाऽऽददे ॥१३९॥

பிறகு கெங்கைக் கரையில் ஸ்ருங்கிபேர பட்டணத்திற்கு ஸமீபத்தில் இருக்கும் இலுப்ப மரத்தின் நிழலில் இராமன் இருந்துகொண்டு, அத்தேசத்திற்கு அரசனும், தனக்கு சினேகிதனான, குஹன் நமஸ்காரத்தோடு கொடுத்த, அரசன் குதிரையின் உணவையும், மிருந்த அன்பையும் தவிர மற்றதை ஸமாதான வார்த்தையால், பெற்றுக்கொள்ளவேயில்லை.

संध्यांरामउपास्यतांसचरमां निष्पीयवार्याहृतं
सोदर्येणकृतेसुपर्णशयने सुष्वापपत्न्यासह ।
रामस्याथ गुणान्वदन्धृतधनुर्जाग्रत्सवृक्षाऽऽश्रितः
सौमित्रिस्समपालयत्स्ववहितः क्षत्रागुहेनान्वितः ॥१४०॥

இராமன் ஸாயம் ஸந்தியை உபாஸித்து, ஸஹோதரன் கொண்டுவந்த ஜலத்தைக் குடித்து, அன்னவன் செய்த இலைப் படுக்கையில் மனைவியுடன் உறங்கினார். பிறகு இலக்ஷ்மணன் இராமனுடைய குணங்களைச் சொல்லிக்கொண்டு, வில்லை தரித்து, விழித்து, மரத்தடியில் இருந்து, சுமந்திரனோடும் குஹனோடும் கூடி, மிகவும் ஸாவதானமாக காப்பாற்றினான்.

५१ क्लेशानामुचितोजनोऽयमतनुप्रेम्णाऽभिरक्षिष्यति
त्वंराजाऽऽत्मज विश्रमस्वसुचिरं तल्पे त्वदर्थं कृते ।
इत्युक्तश्शबराधिपेनदयितः प्रत्यब्रवील्लक्ष्मणः
रामक्लेश विचिन्तकस्यनानिशिस्वापोऽतिनैश्चिन्त्यजः ॥

“துன்பங்களை அனுபவிப்பதற்குத் தகுதியுள்ள நான், அதிக அன்பால் இராமனைக் காப்பாற்றுவேன். ஹே ராஜகுமாரா! உனக்காகச்செய்த படுக்கையில், நீ வெகு காலம் இளைப்பாற வேண்டும்” என்று வேடராஜனான குஹன் சொல்லும் பொழுது, அன்புபெற்ற இலக்ஷ்மணன் “இராமனுடைய துன்பங்களை நினைக்கும் எனக்கு, மிகவும், கவலை இல்லாமல் அனுபவிக்கும் உறக்கம் இரவிலும் இல்லை” என்று பதில் உரைத்தான்.

दुः खाधिक्यकरंनिशम्यवचनं सौमित्रिणाव्याहृतं
चिन्ताऽऽविष्टमनावनेचरपतीरामस्यांनिध्यायतम् ।
क्लेशंदुस्सहमागतं वरगुणान्मर्त्याऽऽकृतौदुर्लभान्
प्रेमैकास्पदमाशुतांसरजनीं निद्रांसमद्रावयत् ॥ १४२ ॥

மிகுந்த துக்கமளிக்கும் இலக்ஷ்மணனுடைய வார்த்தையைக் கேட்டு, அன்புக்கு ஓரிடமான வேடராஜன் மனதில் கவலைபெற்று, பொறுக்கமுடியாமல் வந்த இராமனுடைய துயரத்தையும், மனிதப் பிறவியில் கிடைக்காத அன்னவனுடைய நற்குணங்களையும் நினைத்து, அவ்விரவையும், நித்திரையையும் சீக்கிரம் விரட்டினன்.

५२ इच्छन्ततुंमथाऽऽपगांरघुपतिर्नावागुहाऽऽनीतया
प्रेम्णानाविकमक्षयेणनितरां संप्रीणयन्सारथिम्।
प्राहस्वानुसृतौ कृताऽऽदरमितः प्राप्स्यामएवांघ्रिणा
कान्तारंगहनं रथेननगरंगच्छाऽऽश्रयोर्वीपतिं ॥ १४३ ॥

இராமன் குஹன் கொண்டுவந்த ஓடத்தால், கெங்கையைத் தாண்ட விரும்பி, அளவற்ற அன்பால் அவ்வோடக்காரனை மிகவும் மனங்களிக்கச்செய்து, தன்னுடன் கூட வருவதில் அன்புபெற்ற ஸாரதியைப்பார்த்துக் கூறினர். "இவ்விடமிருந்து மரங்கள் நெருங்கிய வனத்திற்கு நாங்கள் கால்நடையாகவே செல்வோம். இரதத்தோடு நீ நகரம் செல்லவேண்டும். அரசனை அடைய வேண்டும்."

राजानंवदमाद्गिराभवनतोनापिच्युतेः कानन
प्राप्तेः क्लेशमवाप्नुयामभरतं राज्येऽभिषिंचद्रुतं।
नित्यंतत्सहितस्यते नतुभवेन्मत्त्यागजाताव्यथा
मातृरप्यनुवर्तयाद्यतामिति प्राहस्वसूतंपुनः ॥ १४४ ॥

"அரண்மனையிலிருந்து வெளியில் வந்ததாலும், காட்டில் இருப்பதாலும், நாங்கள் வருந்தவில்லை. பரதனுக்கு இராஜ்யாபிஷேகம் செய்யவேண்டும். எப்பொழுதும் அன்னவனேடிருப்பதால் தங்களுக்கு என்பிரிவால் துக்கம் உண்டாகாது. இப்பொழுது என் தாயை ஆதரிக்கவேண்டும் என்று நான் சொன்னதாக அரசனிடம் சொல்லவேண்டும்" என்று இராமன் மறுபடியும் சுமந்திரனிடம் கூறினர்.

त्वत्संत्यक्तपुरीगतावमनसं त्वत्सेवनैकप्रियं
मांत्रिध्दीतिवदन्तमात्मसुहृदं प्राहातिगुह्यं वचः ।
त्वांदृष्ट्वैवगतं रथेननगरंसाकेकयीविश्वसेत्
नूनंमेवनवासतोनिजपतेस्सत्यप्रतिज्ञाऽऽत्मतां ॥ १४५ ॥

"தாங்கள் இல்லாத நகரம் செல்வதில் எனக்கு மனமில்லை. தங்களின் ஸேவையில் மிக்க பிரியம் இருக்கிறது" என்று சொல்லும் தன் நண்பனான சுமந்திரனைப் பார்த்து இராமன் "இரதத்தோடு நகரம் சென்ற உன்னைப்பார்த்தே இவ்வன வாஸத்தால் தன் புருஷனுடைய பிரதிக்ஞை ஸத்தியமென்பதை அந்த கைகேயி நிச்சயமாய் நம்புவாள்" என்று மிகவும் இரஹஸ்யமாகச் சொன்னார்.

रामोमित्रगुहाऽऽहृतैर्वटतरोः क्षीरैर्विधायातनूः
मूर्ध्निस्वस्यसहोदरस्य चजटा नावाऽतरत्स्वर्धुनीं ।
मध्येपूरमवाप्यमैथिलजयासंप्रार्थयन्त्यामुदा
सन्तीर्णप्रतिसंविदः कुशलतःस्वस्यात्र भूयोगतिं ॥१४६॥

இராமன் நண்பனான குஹன் கொண்டுவந்த ஆலமரத்தின்பாலால், தான், ஸஹோதரன் இருவர்களின் தலையில் அதிக ஜடைகளைத்தரித்து, ஓடத்தில் ஏறிக்கொண்டு, நடுபிரவாஹத்தில்வந்து, "பிதாவின் பிரதிக்ஞையை நிறைவேற்றி, க்ஷேமமாக தான் இவ்விடம் மறுபடியும் வரவேண்டும்" என்று வேண்டிக்கொள்ளும் மனைவியோடு ஸந்தோஷமாக கங்கையைத் தாண்டினார்.

गंगायास्तटमेत्यदक्षिणमथप्रातिष्टिपल्लक्ष्मणं
पूर्वयोषितमन्वगेवतदनु प्रातिष्ठताऽऽर्यस्स्वयं ।
वत्सान्प्राप्यरघूद्वहोजनपदान्स्फीतान्क्रमेणाऽऽददत्
हत्वामेध्यमृगान्ययौ वसतयेसायंच कंचिद्द्रुमम् ॥१४७॥

பிறகு இராமன் கங்கையின் தென்கரை சென்று, முன்னால் இலக்ஷ்மணனையும், பின்னே ஸீதையையும் புறப்படச்செய்து, அதன் பிறகு தானும் பிரயாணம் செய்தார். வரிசையாக செழித்த வத்ஸதேசம் அடைந்து, பரிசுத்தமான வராஹம், ருச்யம், ப்ருஷதம், மஹாருரு என்ற மிருகங்களைக் கொன்று, அவைகளை எடுத்துக்கொண்டு, ஸாயங்காலம் வஸிப்பதற்கு ஒரு மரத்தடிக்குச் சென்றார்.

५३ कृत्वापाश्चिमसांध्यकर्मसततः प्रोवाचरामोऽनुजं
सीतारक्षणमप्रमत्तमनसात्वद्यप्रभृत्याचर ।
वृद्धस्यावनिपस्यमातुरमितक्लेशान्विचिन्त्यासकृत्
वैयर्थ्यंस्वबलस्यलक्ष्मणमतेर्दार्ढ्याद्बुवासापभीः । १४८ ॥

பிறகு இராமன் ஸாயம் ஸந்தியாவந்தனம் செய்து, தம்பியைப் பார்த்து, "இது முதல் நீ ஸாவதானமனதோடு ஸீதையைக்காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னார். வயது முதிர்ந்த தந்தைக்கும், தாய்க்கும் வந்த அளவற்ற துக்கத்தால், தன் பலம் வீணென்று அடிக்கடி நினைத்து, இலக்ஷ்மணனுடைய புத்தியை பரீக்ஷித்தும், தன்னுடன் இருப்பதில் திடமாயிருப்பதால் பயமில்லாமல் இருந்தார்.

५४ निर्गत्याथरघूद्वहः परदिनेदेशान्बहूनागतः
कालिन्द्याचभगीरथाऽऽत्मजधुनी संगच्छतेयत्रसा ।
प्राप्याह्नो विरतौ प्रयागमभितोधूमैर्वृतंपावितं
भारद्वाजतपोवनं मुनियुतं प्रापद्यत क्षान्तिमत् ॥ १४९ ॥

பிறகு இராமன் மறுநாள் அவ்விடமிருந்து பிரயாணம் செய்து, அநேக நாடுகளையடைந்து, யமுனையுடன் கங்கா நதி ஸங்கமமடையும் பிரயாக க்ஷேத்திரம் வந்து, நான்கு புறமும் புகை சூழ்ந்ததும், பரிசுத்தமாக்கப்பெற்றதும், பொறுமையுள்ளதும் ரிஷிகள் கூடியிருக்கும் பரத்வாஜ முனியின் ஆசிரமத்தை, ஸாயங்காலம் அடைந்தார்.

होमस्याथविरामएत्यसमुनिं स्वंवेदयन्नानतः
तत्पूजां प्रतिगृह्यसादरकृतां तं चित्रकूटंगिरिं ।
गोलांगूलनिषेवितं जिगमिषुस्सद्वानरर्क्षं शुभं
प्राप्तेस्योददतं व्यपानयदघप्रध्वंसकेक्षोनिशाम् ॥ १५० ॥

ஹோமத்தின் முடிவில் பாபம் தீர்க்கும் பார்வைபெற்ற இராமன் பரத்வாஜமுனியை அடைந்து, வணங்கி தங்களைத் தெரிவித்து, அன்போடு அவர் செய்யும் அதிதிபூஜையைப்பெற்றுக்கொண்டு, குரங்குகளும், கரடிகளும், கோலாங்கூலமென்ற வாலில்லாத வானரங்களும் வஸிக்கும், தன்னிடம் வந்தவர்களுக்கு சுபமளிக்கும் சித்திரகூடமலைக்குச்செல்ல விரும்பி, அன்றிரவை அவ்விடம் கழித்தார்.

५५ अन्येद्युर्मुनिनाकृताभ्यनुमतिस्सन्दर्शकेनाध्वनः
रामः प्राप्यकलिन्दजामतिजलां नावाचतीत्वाद्रुतम् ।
वैदेह्यानतयायुतोबहुतरांसंप्रार्थयन्त्याशिवं
न्यग्रोधं समवापतत्तटगतं यंपर्यगच्छत्प्रिया ॥ १५१ ॥

மறுநாள் சித்திரகூடபர்வதத்தின் வழியைக் காண்பிக்கும் பரத்வாஜமுனியிடம் உத்திரவு பெற்று இராமன், அநேகம் தடவை வணங்கி, மங்களத்தைப் பிரார்த்திக்கும் மனைவியோடு சீக்கிரம் ஓடத்திலேறி, அதிக பிரவாஹமுள்ள யமுனா நதியைத் தாண்டி, மனைவி வலம் வந்த அந்நதிக்கரையிலிருக்கும் ஆலமரத்தை அடைந்தார்.

रामः प्राप्यमहावनं सबदरीवंशैः पलाशैर्युतं
मध्येस्वस्यसहोदरस्य गमयन्कान्तां तदाकामितं ।
पुष्पं पल्लवमानयन्फलचयंतत्ताद्विशेषंब्रुवन्
हत्वासध्द्वारिणान्निशामगमयत्तांयामुनेकानने ॥ १५२ ॥

இலந்தை, மூங்கில், பொரசு இந்த மரங்களோடு கூடிய பெரிய வனத்தை அடைந்து, இராமன் தனக்கும், தம்பிக்கும் நடுவில் மனைவியைப்போகச்செய்து அவள் விரும்பும் புஷ்பம் துளிர் பழக்குவியல்களையும் கொண்டுவந்து கொடுத்தும், அந்தந்த அதிசயங்களை சொல்லிக்கொண்டும், நல்ல மிருகங்களைக் கொன்று யமுனா நதியின் காட்டில் அன்றிரவைக்கழித்தார்.

५५ सुप्रातोरघुनायकोऽथदयितांसंदर्शयन्किंशुकान्
पुष्प्यत्पुष्पनदन्मधुव्रतयुतान्स्वाऽऽवासयोग्यंगिरिं ।
वाल्मीकिंप्रणमन्वदोनिवसतिं तं वेदयन्स्वाऽऽगतिम्
तत्संदेशवशंवदस्स्ववसतिं ताच्चित्रकूटेऽकरोत् ॥ १५३ ॥

பிறகு நல்ல பொழுது விடிந்ததும், இராமன் புஷ்பித்த புஷ்பங்களில் வண்டுகள் சப்தித்துக்கொண்டிருக்கும் பொரசமரங்களையும், தான் குடியிருக்கத்தகுந்த சித்திரகூடமலையையும், மனைவிக்குக் காண்பித்து, அவ்விடத்தில் வஸிக்கும் வால்மீகி முனியை வணங்கி, அவருடைய உத்திரவிற்குக் கீழ்படிந்து தனக்கு இருப்பிடத்தை அம்மலையில் செய்துகொண்டார்.

प्रीतेनस्ववचः कृताविरचितेसौमित्रिणादारुभिः
गाढाऽऽबद्धलतेतृणैः परिवृतेपर्णोच्चयान्तर्हिते ।
निर्वातेनिलये विधायविधिवद्वास्तोश्शमंराघवः
पत्न्यासौख्यकरे प्रविश्यविजहौराज्यच्युतेर्दुःस्थितिं ॥

தன்வார்த்தைப் பிரகாரம் நடக்கும் இலக்ஷ்மணன், ஸந்தோஷமாக மரங்களால் செய்ததும், நெருக்கக்கொடிகளால் கட்டப்பெற்றதும், புற்களால் சூழப்பெற்றதும், இலைகள் கூட்டத்தால் மறைக்கப்பெற்றதும், காற்றில்லாததும், சௌக்கியத்தைக் கொடுக்கும் கிருஹத்தில் இராமன் பூதபிசாசம் முதலியவைகளைவிறட்டும் வாஸ்துசாந்தியை விதிப்படி செய்து, மனைவியோடு அதில் பிரவேசித்து இராஜ்யம் இழந்த துக்கத்தைத் துரத்தினர்.

५७ गंगायास्तरणं प्रयागगमनं श्रीचित्रकूटाचले
पर्णागारनिवासमप्यघहृतो रामस्यदूतैर्विदन् ।
क्षत्ताऽऽमन्त्र्यगुहं सुयोजितरथः प्राप्यद्रुतंपत्तनं
स्वाऽऽगत्याऽतिविषादयन्नगरजान्राज्ञोविवेशाऽऽलयं ॥

பாபத்தைத்தீர்க்கும் இராமன் கங்கையைக்கடந்து,பிரயாக க்ஷேத்திரம் சென்று, சித்திரகூட மலையில் குடிசையில் வஸிப்பதை தூதர்கள் மூலமறிந்து சுமந்திரன், குஹனிடம் சொல்லிக் கொண்டு இரதத்தைப் பூட்டி, சீக்கிரம் பட்டணத்திற்கு வந்து, தன்வரவால் அங்கிருப்பவர்களை விஸனமடைவித்து, அரசனுடைய அரண்மனையை அடைந்தார்.

दूतंदुष्करकारिणोऽभ्युपगतंदृष्ट्वाऽपि संमूर्छया
तूष्णीं भावमुपेत्यतंनिपतितोभूमौ नृपस्स्वाऽऽसनात् ।
कौसल्याप्रतिबोधितश्चिरमतां रामप्रवृत्तिंप्रियां
श्रोतुं सूतमुपाऽऽजुहावतरसा स्वस्थान्तरंगो भृशं ॥१५६॥

செய்யமுடியாத செய்கை செய்த இராமனுடைய தூதன் வந்திருப்பதைப் பார்த்ததும் அரசன் மூர்ச்சையால் மௌனமாயிருந்து, ஆஸனத்திலிருந்து பூமியில் விழுந்து, கௌசல்யையால் நினைவுபெற்று, வெகுகாலமாய் விரும்பிய பிரியமான இராம ஸமாசாரத்தைக் கேட்க மிகவும் சுவாதீனமனதோடு, வேகமாக சுமந்திரனை, ஸமீபத்தில் அழைத்தார்.

५८ सूतस्सांजलिबंध आहनृपतिं रामोऽब्रवीत्पादयोः
कृत्वासंनतिमुत्तमांगविहितां कर्तुंत्वदादेशकं ।
वत्सोऽहंन बिभीवउत्सृजशुचं सत्यात्ययोपार्जितां
श्रुत्वेमां चिरमाश्वकुप्यदनुज स्सीताशुशोचाप्यगीः

சுமந்திரன் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு அரசனைப்பார்த்து கூறினன். "இராமன் தங்களின் பாதங்களில் தலையால் வணங்கி, தங்கள் உத்திரவைச் செய்வதில் நானும், குழந்தை இலக்ஷ்மணனும் பயமடையவில்லை. தன் ஸத்தியத்தின் அபாயத்தால் வரும் துயரத்தை தூரவிலக்கவேண்டும் என்று உரைத்தார். இதைக்கேட்டு தம்பி சீக்கிரம் கோபித்தான். ஸீதை பதில் உரைக்காமல் வருந்தினள்".

५९ मामुत्सृज्यनिवृत्तपुण्यमनघो गंगातटे राघवः
कृत्वामूर्ध्निजटा अमर्त्यसारितं तीर्त्वा प्रयागंययौ
तन्मित्रेणवसन् गुहेन दिवसान्तत्रैवमामाह्वयेत्
इत्याशाविधुरोदिवोभुवमिवप्राप्तंत्वपुण्यः पुरीम् ॥ १५८ ॥

"பாபமற்ற இராமன் கங்கையின் கரையில் புண்ணியமற்ற என்னை விலக்கிவிட்டு, தலையில் சடைகளைத் தரித்து, கங்கையைத் தாண்டி, பிரயாகைக்குச் சென்றார். அவ்விராமன் என்னைக் கூப்பிடுவார் என்று அக்கங்கைக் கரையிலே இராமனின் சிநேகிதனை குஹனோடு அநேக நாட்கள் இருந்து, அவ்வாசை ஒழிந்து சுவர்க்கத்திலிருந்து புண்யமிழந்தவன் பூமிக்கு வருவதுபோல், நான் பட்டணத்திற்கு வந்தேன்."

राजन्रामवियोगतस्तवपुरीनाऽऽभातिदुःखार्दिता
कौसल्येवयथापुरं व्यपगतानन्देतिसूतोदितं ।
श्रुत्वाप्राहनृपो निजापनयजेमग्नेऽतिदुः खोदधौ
नेक्षयाद्यरघूत्तमंससुहृदं चेत्कालमेवाप्नुयाम् ॥ १५९ ॥

"ஹே அரசே! இராமனுடைய பிரிவால், தங்களின் பட்டணம் கௌஸல்யைபோல் துக்கத்தால் பீடிக்கப்பெற்று, ஸந்தோஷமிழந்து, முன்போல் விளங்கவில்லை", என்று சுமந்திரனுடைய வார்த்தையைக்கேட்டு அரசன், தன் குற்றத்தால் வந்த துக்கக்கடலில்முழுகி, "இப்பொழுது அன்பர்களோடுகூடிய இராமனைக் காணவிட்டால்,மரணத்தை அடைவேன்" என்றுகூறினர்.

६० धाराभिर्जलदोदवानलमिवस्फीतांशुचं नाशयन्
वाक्यैराहरघूत्तमस्यजननीं धीमान्सुमन्त्रश्शुभैः ।
त्वत्पुत्रोविजने चरिष्यतिवने वीरोविदेहाऽऽत्मजा
तद्बाहू अपिसंश्रिताभवनवत्स्तोलक्ष्मणेनावितौ ॥ १६० ॥

மேகம் மழையால் காட்டுத்தீயை அணைப்பதுபோல், நல்ல வார்த்தைகளால் கௌசல்யையின் அதிக துக்கத்தை அகற்றி அன்னவளைப்பார்த்து "ஹே அம்மணி! வீரனை உன் புத்திரன் ஜனங்களில்லாத வனத்தில் ஸஞ்சரிப்பான். ஸீதையும் அன்னவனின் கைபலம் பெற்றவள். அவ்விருவர்களும் அரண்மனையில் இருப்பதுபோல், இலக்ஷ்மணனால் காப்பற்ப் பெற்றிருக்கிறார்கள்" என்று புத்திசாலியான சுமந்திரன் கூறினன்.

६१ शोकाऽऽक्रान्तमना अभाषतपतिं रामस्यमाताक्रुधा
दातुस्सर्वजनेप्सितस्य करुणावार्धेः किमेतत्क्षमं ।
कृच्छ्रस्याऽऽत्मजयोः कृतिश्चिरकृता किंतेचकार स्नुषा
मत्पुत्रः प्रबलोनचाप्यवरजात्पश्चान्महीं प्राप्स्यति॥१६१॥

கௌஸல்யை மனதில் துக்கம் பெற்று, கோபமாய் புருஷனைப்பார்த்து கூறினாள். "எல்லா ஜனங்களுக்கும் விருப்பத்தை அளிக்கும் கருணைக்கடலான தாங்கள் என் புத்திரன் மருமகள் இவர்களுக்கு வெகுகாலம் அனுபவிக்கும் துன்பத்தைக்கொடுப்பது தகுதியா? மருமகள் தங்களுக்கு என்ன குற்றம் செய்தாள். அதிக பலம்பெற்ற என்புத்திரன், இளையவனிடமிருந்து வனவாஸத்திற்குப்பிறகும் பூமியைப் பெறமாட்டான்."

त्वंचैवंपति रात्मजोऽपिवनगः क्लिष्टाऽस्मि पौरास्त्वया
भार्यैकासुतएककः प्रसुखितोधर्मिष्ठनान्येत्विति ।
श्रुत्वाऽऽत्माप्रियया व्युदाहृतवचोराजापरंविप्रियं
शोकस्यास्यनिदानमप्याधिमनुस्मृत्वाऽऽथतामावदत् ॥

"புருஷனை தாங்களோ இவ்விதம் இருக்கிறீர்கள். புத்திரனும் வனம் சென்றான். தங்களால் நானும், பட்டணத்தின் ஜனங்களும், வருந்துகிறோம். மனைவி ஒருவளும்,, புத்திரன் ஒருவனும், சுகமடைந்தார்கள். தர்மம் செய்பவர்களே! மற்றவர்கள் அடையவில்லை" என்று தன் மனைவிசொன்ன அப்பிரியமான வார்த்தையைக்கேட்டு அரசன், இந்த துக்கத்தின் மூலகாரணத்தை மனதில் நினைத்து, பிறகு அன்னவளைப்பார்த்து கூறினார்.

कौसल्येतवशीलमार्यविनुतं जानामियावत्सला
चाक्रूरेतिपरेषुभर्त्रभिमतं दैवं स्त्रियास्तत्कृतिः ।
सोढव्याऽत्याहितप्रदेत्यवनतेभर्त्राऽपिसंप्रार्थिता
सातंप्राहतदंजलिं स्वशिरसाधृत्वानमन्तीपतिम् ॥ १६३ ॥

"ஹே கௌஸல்யே! பிறர்களிடத்தில் அன்புபெற்றவளென்றும், சாந்தகுணமுள்ளவளென்றும் பெரியோர்கள் போற்றும் உன் நன்னடத்தையை நான் அறிகிறேன். பெண்களுக்கு கணவனே பிரியமுள்ள தெய்வம். மிகுந்த துன்பத்தைக் கொடுப்பினும், அன்னவனின் செய்கையை பொறுக்கவேண்டும்" என்று வணங்கி பிரார்த்திக்கும் புருஷனை, கௌஸல்யை வணங்கி, அவருடைய கும்பிட்டகையை தன் தலையால் தரித்து கூறினாள்.

जानेतच्चरितं सतीविराचितं शोकाऽऽतुराऽवादिषं
वाक्यं तत्क्षमतामितिस्वदयितांदुःखं विमुच्याऽऽनतां ।
वीक्ष्यप्रेमगिरायुतां नरपतिस्सूर्येऽस्तशैलंगते
निद्रां प्राप्यमुहूर्तमात्रमथसप्राप्तप्रबोधोऽभवत् ॥ १६४ ॥

"பதிவிரதைகள் அனுஷ்டிக்கும் நன்னடையை நான் அறிகிறேன். துக்கத்தால் துன்பமடைந்து அவ்விதம் துர்வார்த்தை சொன்னேன். அதை பொறுக்கவேண்டும்" என்று துக்கத்தை விலக்கி வணங்கும் அன்பு மொழி கூறும் தன் இன்ப மனைவியைப்பார்த்து அரசன், ஸூரியன் அஸ்தமன மலையையடைந்ததும் ஒரு முகூர்த்தகாலம் உறங்கி பிறகு விழித்தார்.

६३ सप्राहप्रियभाषिणींप्रियतमां पूर्वंत्वदुद्वाहतः
ख्यातिं प्राप्यचशब्दवेधनकृतांमत्तस्सरय्वास्तटे।
वर्षायामभिवर्षके जलधरेरात्रौनिगूढः क्वचित्
व्यायामायसुपर्यटन्ततइतो वन्यान्मृगानाहनं ॥ १६५ ॥

அரசன் அன்பு மொழி கூறும் இன்ப மனைவியைப்பார்த்து கூறினார். "ஹே கல்யாணி! உன் கல்யாணத்திற்கு முன் சப்தத்தைக்கேட்டு, சப்தம் செய்தவர்களை அம்பால் அடிக்கும் புகழைப் பெற்று கர்வம்கொண்டு, ஸரயூநதிக்கரையில் மழை காலத்தில் மேகம் வர்ஷிக்கும்பொழுது, இரவில் ஓரிடத்தில் மறைந்திருந்து, வேட்டைக்காக அங்குமிங்கும் திரிந்து, வன மிருகங்களைக் கொன்றேன்."

कुंभान्तः प्रविशज्जलोत्थितरवं श्रुत्वाजलग्राहिणः
मत्वावन्यमृगान्ध्वनेर्दिशिमुदाहन्तुं शरंप्राक्षिपं ।
कोमामार्जितदुष्कृतस्समवधीदित्याकुलो भीतिदं
श्रुत्वाशब्दमथाऽऽगतः परिसरेखिन्नं त्वपश्यं मुनिम् ॥

"குடத்தில் உட்புகும் ஜலத்தின் சப்தத்தைக்கேட்டு, ஜலம் குடிக்கும் காட்டு மிருகமென்று நினைத்து, ஸந்தோஷமாய் சப்தத்தின் திசையில் பாணத்தைப் பிரயோகித்தேன். என்னைக் கொன்று பாபத்தைத் தேடினவன் யார்? என்று பயமளிக்கும் சப்தத்தைக் கேட்டு, மனங்கலங்கி, பிறகு ஸமீபத்தில் வந்து, வருந்தும் முனியைப் பார்த்தேன்.

मर्माऽऽविद्ध शरस्समामकथयद्राजन्किमागः कृतं
यन्मे प्राणमपाहर स्स्वपितरावन्धौ त्वयाऽभ्याहतौ ।
आहर्तुं जलमेतयोरहमिहाऽऽयातोमदाशायुतौ
तौ विज्ञापय मास्तु शापजभयं मत्स्थानगावर्तनी ॥१६७॥

மர்மஸ்தானத்தில் அம்பால் அடிபெற்ற அன்னவன் என்னைப் பார்த்து கூறினான். "ஹே அரசே! என் பிராணனைப் போக்கும்படி நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? நேத்திரமிழந்த என் தாய், தந்தைகளையும் வதைத்தாய் அவர்களுக்கு ஜலம் கொண்டு வருவதற்கு நான் இவ்விடம் வந்தேன். என்னிடம் அன்பு பெற்ற அன்னவர்களிடம் இதைத் தெரிவிக்க வேண்டும். சாபம் வருமென்று பயம் வேண்டாம். இவ்வொத்தடிப்பாதை என் இருப்பிடம் செல்கிறது."

शूद्रायां वणिजोऽभवंनतुभवेत्साब्रह्महत्यातव
क्रूरंमद्हृदयात्शरं व्यपनयद्रागित्यमुष्योदितं ।
श्रुत्वातस्यशुचं विसोढुमपटु र्बाणंह्युदस्थापयम्
द्रष्टुर्मेऽग्रतएव कर्मजतनुं तत्याजतांतापसः ॥ १६८ ॥

"வைச்யனுக்கு சூத்திரபெண்ணினிடம் பிறந்தேன். ஆனால் உனக்கு கடுமையான பிரும்மஹத்திவராது. என் நெஞ்சிலிருந்து கூர்மையான பாணத்தை சீக்கிரம் பிடுங்கவேண்டும்" என்று அம்முனியின் மொழியைக் கேட்டு, அன்னவனின் துயரம் பொறுக்கமுடியாமல் அம்பைப்பிடுங்கினேன். பார்த்திருக்கும் என் முன்னிலையிலே, அம்முனி கர்ம சரீரத்தைத் துறந்தான்."

६४ आदायांबुघटंतदुक्तपथतो गत्वातदीयाऽऽश्रमम्
तन्मातापितरावपश्यमगती वृद्धौपिपासाकुलौ ।
श्रुत्वामच्चरणध्वनिंसुतमतेः किं क्रीडितं वारिणि
त्वंसंविस्मरमत्कृतं यदहितं मातुस्तइत्युक्तिगौ ॥ १६९ ॥

"தண்ணீர் குடத்தை எடுத்துக்கொண்டு அம்முனி சொன்ன வழியாக அன்னவனின் ஆசிரமம் சென்று, என் காலடி சப்தத்தைக் கேட்டு பிள்ளை யென்ற நினைவால் ஹே குழந்தாய்! ஜலத்தில் விளையாடினாயா? நான் செய்த பிழையையும், உன் தாய் செய்த பிழையையும், பொறுக்கவேண்டும் என்று சொல்லும் தாகத்தால் வருந்தும் வயது முதிர்ந்து கெதியற்ற அவனுடைய தாய் தந்தைகளைப் பார்த்தேன்."

तावाहाहमभीतएव नभवत्पुत्रोऽपितुक्षत्रियः
हिंस्राणांहतयेमुदासमचरं धन्वीसरय्वास्तटे ।
कुंभस्यांभसिपूरणेरवमथ श्रुत्वागजभ्रान्तितः
मोहादाहत आत्मजस्तवमया पूज्यः प्रसीदत्विति॥१७०॥

"நான் தங்களின் புத்திரனில்லை. தவிர நான் க்ஷத்ரியன். துஷ்ட மிருகங்களின் வதத்தின் பொருட்டு, ஸந்தோஷமாய் வில்லை எடுத்துக்கொண்டு, ஸரயூநதிக்கரையில் ஸஞ்சரித்தேன். பிறகு ஜலத்தில் முழுகும் குடத்தின் சப்தத்தைக் கேட்டு, யானை என்ற பிரமத்தால் அறியாமல் தங்களின் புத்திரனைவதைத்தேன். பெரியார் அன்பு செய்யவேண்டும், என்று பயமில்லாமலே அவர்களைப் பார்த்து கூறினேன்."

वानप्रस्थ वधोऽधियाविरचितस्सूच्यावयेद्वज्रिणम्
स्थानाच्चे त्ववदेस्स्वयं स्वरचितं स्यात्त्वच्छिरस्सप्तधा ।
अज्ञानादपराधकृद्यदसि तज्जीवस्यमुं प्रापय
द्रागावामिति भाषिणौसमनयंपुत्रंतमस्पर्शयम् ॥ १७१ ॥

"புத்தியுடன் செய்த வானபிரஸ்தனின் வதம் இந்திரனை யும் இருப்பிடமிருந்து, விழச்செய்யும். தான் செய்த குற்றத்தை தானே சொல்லாமலிருந்தால், உன் தலை எழு துணுக்காகிவிடும். அறியாமல் நீ குற்றம் செய்ததால் பிழைக்கிறாய். எங்களை புத்திரனிடம் சீக்கிரம் சேர்க்கவேண்டும் என்று சொல்லும் கிழவர்களை புத்திரனிடம் சேர்த்தேன். அவனைத்தொடச்செய்தேன்."

किं कोपस्तववत्सयन्नजननीमां वाचनाऽऽभाषसे
किं शेषेभुवि किंनतेप्रियकरी मातानतां पश्यसि ।
कस्याधीतिरवं मनस्सुखकरं श्रोष्याम्युषस्यन्वहम्
राज्ञायन्निहतश्शरेणसततं पुण्यांगतिं प्राप्स्यसि ॥ १७२ ॥

"ஹே குழந்தாய்! தாய் தந்தைகளோடு பேசாமலிருப்பதால் உனக்கு கோபமா? பூமியில் ஏன் படுத்துக்கொண்டிருக்கிறாய்! உனக்கு தாய் பிரியமில்லையா? அவளை ஏன் பார்க்கவில்லை? மனதிற்கு சுகமளிக்கும் எவனுடைய வேதாத்தியன சப்தத்தை தினந்தோறும் காலையில் கேட்பேன்? அரசனுடைய அம்பால் அடிபெற்றதால் எப்பொழுதும் நற்கதியை அடைவாய்."

हन्तातेगतिमाश्रयत्वकुशला मित्याकुलं व्याहरन्
वृद्धस्तज्जनकोऽभ्यधायिदिवमारूढेन पुत्रेणच ।
युष्मत्सेवनताऽश्रितोऽसिपरमंस्थानं तदेवाऽऽप्स्यथः
प्रोच्यैवंतनयेगतेस्ववसतिं दत्तेस्मतैलोदकम् ॥ १७३ ॥

"உன்னைக் கொன்றவன் துன்பமடைவான் என்று வருந்தி, கூறும் வயது முதிர்ந்த தந்தையைப் பார்த்து, சுவர்க்கம் சென்ற புத்திரன் ஐயா! தங்களின் பணிவிடையால் நான் நற்கதி பெற்றேன். தாங்களும் அதையே அடைவீர்கள். இவ்விதம் சொல்லி, தன் இருப்பிடம் சென்றதும், அக்கிழவர் திலோதகம் கொடுத்தார்".

मत्पुत्रव्ययकृत्शरेणजहिमां नास्तिव्यथामेमृतौ
स्वीयांगान्यवितुं जराकबळितावावामशक्ताविह ।
मोहात्पुत्रहतेर्भवन्तमधुनाशप्स्यामि शोकप्रदं
राजन्कालमवाप्स्यासिव्यसनतः पुत्रस्यमद्वद्ध्रुवं ॥ १७४ ॥

"என் புத்திரனைக் கொன்ற பாணத்தால் என்னையும் கொன்றுவிடு. எனக்கு மரணத்தில் துக்கமில்லை. ஜரை சூழ்ந்துகொண்டதால் தன், சரீரத்தைக் காப்பாற்றவும் எங்களுக்கு இவ்விடத்தில் முடியவில்லை. அறியாமல் புத்திரனைக் கொன்றபடியால், துக்கம் வரும்படி உன்னை சபிக்கிறேன். ஹே அரசே" நீ என்போல் நிச்சயமாய் புத்திரசோகத்தால் மரணமடைவாய்.

शप्त्वैवं विलपन्चितामधिगतंद्वंद्वं समागादिवं
तद्वाल्ये कृतमप्यघं परिणतं त्यक्ष्याम्यसून्शोकतः ।
चक्षुर्भ्यां नविलोकयामि सुभगेत्वं साधु मां संस्पृश
क्षिप्रंमांत्वरयन्ति कालपुरुषा रामस्तु नाऽऽलक्ष्यते॥

"இவ்விதம் சபித்து புலம்பி, அந்த தம்பதிகள் சிதையிலேறி சுவர்க்கம் சென்றார்கள். பால்யத்தில் செய்த பாபமும் பயனளித்தது. துக்கத்தால் உயிர் துறக்கப்போகிறேன். ஹே பாக்கிடம் பெற்றவளே! கண்களால் உன்னைப் பார்க்கமுடியவில்லை. என்னை நன்றாகத் தொடவேண்டும். எம தூதர்கள் சீக்கிரம் துரிதம் செய்கிறார்கள். இராமனைக் காணவில்லை".

येपश्यन्ति नरारघूत्तममिमेधन्याः पुराभ्यागतम्
चित्तं सीदतिनेन्द्रियार्थमधुनाप्राप्नोमि दृग्लुप्यते ।
राम क्वासिममश्रमापनयनक्षेमंकरात्याहितात्
इत्याक्रुश्यगतेऽर्धरात्रसमये भूमिं जहौ भूमिपः ॥१७६॥

"மறுபடியும் நகரம் வந்த இராமனைப்பார்த்தவர்கள் பாக்கியசாலிகள். என் மனம் கலங்குகிறது. இப்பொழுது காது முதலிய இந்திரியங்களின் பயனை பரிகொடுத்தேன். கண் பஞ்சடைகிறது. என் துயரந்தீர்க்கும், மிகுந்த பயத்திலிருந்தும் க்ஷேமமளிக்கும், ஹே ராமா! எங்கே இருக்கிறாய்?" என்று ரோதனம் செய்து நடு இரவு சென்றதும், பூமியின் அரசன் பூமியைவிட்டு அகன்றான்.

६५ सूताः प्रातरवाप्य राजसदनं स्तोत्रैर्वरैरस्तुवन्
स्नानज्ञा हरि चन्दनोदकघटं सौवर्णमप्यानयन् ।
दक्षावर्षधरास्स्त्रियोऽप्यभिमता आजग्मुरासेवितुं
यावद्भास्करनिर्गमस्सकुतुकास्सर्वेनृपं वीक्षितुं ॥१७७॥

ஸ்துதி பாடகர்கள் நல்ல ஸ்தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டு, காலையில் அரண்மனையை அடைந்து, ஸ்தோத்திரம் செய்தார்கள். ஸ்னாநத்தின் விதியைத் தெரிந்தவர்கள், தங்கக் குடத்தில் செஞ் சந்தனத்தைக் கரைத்துக்கொண்டு வந்தார்கள். இஷ்டமான ஸ்திரீகளும், ஸாமர்த்தியம் பெற்ற கஞ்சுகிகளும், பணிவிடை செய்வதற்கு வந்தார்கள். சூரியோதயம்வரை எல்லோர்களும் அரசனைப்பார்க்க ஆவலாயிருந்தார்கள்.

कृत्वा कालविलंब मप्यवनिपे चानागते शंकिताः
चक्रुश्शंकितपापनिश्चयमथस्पृष्ट्वा विदग्धास्स्त्रियः ।
कौसल्यासुमित्रमेत्यमहतीन्निद्रामजानादिदं
श्रुत्वाऽऽक्रन्दितमूर्जितंद्विगुणितोद्वेगा चिरंप्रालपत् ॥

பிறகு அரசன் காலதாமதம் செய்தும், வராமலிருக்கும் பொழுது, ஸாமர்த்தியம்பெற்ற பெண்கள், அவருடைய பிராணனில் ஸந்தேகம்பெற்று தொட்டுப்பார்த்து பிராண,வியோகத்தை நிச்சயம் செய்தார்கள். கௌஸல்யை சுமித்திரையுடன் அதிகமாய் உறங்கி, பலமான ரோதனத்தைக்கேட்டு, அவ்விஷயம் தெரிந்துகொண்டாள். இரண்டு பங்கு துக்கம்பெற்று வெகுகாலம் புலம்பினாள்.

६६ कृत्वाऽङ्के व्यसनं गतां पतिशिरः कैकेयिहृष्टाभव
प्राप्याथावनिपंदशां च चरमां विद्राव्य रामं वने ।
गार्हप्येज्वलनं शुचोऽपनयनं पत्यासहेत्युद्रवां
कौसल्यामपनीयभूपमथतं तैलेऽक्षिपन्मान्त्रिणः ॥१७२॥

துக்கமடைந்து புருஷனுடைய தலையை மடியில் வைத்து, "ஹே கைகேயி! அரசனுக்கு மரணதசையைக்கொடுத்து இராமனை வனத்தில் விரட்டி ஸந்தோஷமாக இரு. துக்கத்தை விலக்கும் அக்னியில் புருஷனுடன் பிரவேசிக்கப்போகிறேன்" என்று உரக்க சப்திக்கும் கௌஸல்யையை விலக்கி, பிறகு, மந்திரிகள் அரசனை எண்ணெயில் போட்டார்கள்.

६७ राजस्त्रीपरिदेवनात्यसहना रात्रिर्यदाप्राद्रवत
राज्ञस्तेसचिवाः पुरोहितमुनिं त्राणायसर्वेऽवदन् ।
राज्याराजकतां विधूयसहसा सर्वाहितत्वप्रदां
राजत्वेऽप्यभिषिंच राजतनयं धीमन्तमार्येप्सितम् ॥

இராஜஸ்திரீகளின் அழுகையைப் பொறுக்கமுடியாமல், அன்றிரவு சென்றதும், எல்லா இராஜமந்திரிகளும், இராஜ்யத்தை ரக்ஷிப்பதின் பொருட்டு புரோஹித முனியிடம், இராஜ்யத்தில் அரசனில்லாமலிருத்தல் எல்லோர்களுக்கும் ஆபத்தை அளிக்கும்; அதை சீக்கிரம் விலக்கி, புத்திசாலியாயும் பெரியோர்களுக்கு விருப்பமான இராஜ குமாரனுக்கு முடிசூட்டவேண்டுமென்று சொன்னார்கள்.

६८ दूताः कर्मसु पण्डिताश्शिरसितत्कृत्वा मुनेश्शासनं
वाहैस्संजवनैः कथंचिदगमन्तान्केकयान्दूरगान् ।
रात्रौदूरपथं व्यतीत्यसुगुरुं चाहेडमाना स्सह
भ्रात्रातंभरतं च मातुलगृहादानेतु मात्तत्वराः ॥

வேலைகளில் நிபுணர்களான தூதர்கள், வஸிஷ்ட முனியின் உத்திரவைத் தலையால் வஹித்து, அலக்ஷ்யம் செய்யாமல் வேகமுள்ள குதிரைகளில் ஏறிக்கொண்டு, இரவில் மிகுந்த தூரவழியைக் கடந்து, சத்துருக்னனுடன் பரதனை மாதுல கிருகத்திலிருந்து அழைத்துவருவதற்காக, தூரத்திலிருக்கும் கேகய தேசங்களுக்கு சிரமத்துடன் வேகமாகச் சென்றார்கள்.

६९ यस्यां दूतसमागति स्सभरत स्तस्यां रजन्यां महत्
दुस्स्वप्नं तु विलोक्यदुःखजनकं सख्ये वदन्तं मुहुः
भ्रातुस्स्वस्यपितुः किमप्यगणितंत्वत्याहितं तर्कयन्
प्रातस्संसदि नन्दितोऽपिसखिभिर्नप्रापहर्षंकचित् ॥

தூதர்கள் வந்த இரவில், பரதன் துக்கமளிக்கும் அதிக துர்ஸ்வப்னம் கண்டு, அதை ஸ்நேஹிதனிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டு, தன் ஸஹோதரனுக்கும் பிதாவுக்கும் நினைக்காததும், சொல்லமுடியாததுமான துன்பத்தை நினைத்து காலையில் ஸபையில் ஸ்நேகிதர்களால் ஸந்தோஷிக்கப் பெற்றும், ஒருவிதத்திலும் ஸந்தோஷமடையவில்லை

७० दूताः प्रोचुरथाऽऽर्यशीलभरतं क्षेमं गुरुस्तेऽब्रवीत्
त्वां प्राहुस्सचिवास्तथा किमपि ते कार्यं द्रुतं निस्सर ।
इत्युक्तस्स निजाऽऽर्यकं च विनमन्नापृच्छ्य तेनार्पितं
संगृह्णन्सकलं धनं निरसरद्भ्राता बलैस्संयुतः ॥ १८३ ॥

பிறகு தூதர்கள் நன்னடைபெற்ற பரதனைப் பார்த்து, "உன்னுடைய க்ஷேமத்தை குரு வினவினர். மந்திரிகளும் அவ்விதமே வினவினர்கள். உனக்கு ஒரு காரியம் இருக்கிறது. சீக்கிரம் புறப்படவேண்டும்" என்று சொன்னார்கள். இவ்விதம் சொல்லவும் பரதன் பாட்டனை வணங்கி சொல்லிக்கொண்டு அவர் கொடுத்த எல்லா பொருளையும் பெற்றுக்கொண்டு, ஸஹோதரனுடனும் ஸைனியங்களுடனும் பிரயாணம் செய்தான்.

७१ आकर्षन्महतीं चमूमतिरयो देशानतीत्याचलान्
पुण्यास्तास्सरितो निजान्जनपदान्प्राप्यत्वनुज्ञाप्य सः ।
रात्रीस्सप्त च मार्ग एव गमयन्गच्छन्तथैवाष्टमी
रात्रौ प्रातरुपेत्य तां स्वनगरीं सूतं सुदूरेऽब्रवीत् ॥ १८४ ॥

பரதன் அதிவேகமாக திரண்ட ஸைனியத்தை அழைத்துக்கொண்டு, அநேக நாடுகளையும் மலைகளையும், புண்ய நதிகளையும் கடந்து, தன் கோஸலநாடு வந்ததும், மெதுவாகவரும்படி ஸைனியத்திற்கு உத்திரவுசெய்து, ஏழு இரவுகளை வழியில் கழித்து, எட்டாவதிரவிலும் நடந்து, காலையில் சீக்கிரம் தன் நகரம்வந்து, வெகு தூரத்தில் ஸாரதியிடம் கூறினான்.

यापूर्वं सुरपत्तनेन सुरुचा प्रास्पर्धतैषा पुरी
    निर्मानुष्यकयाऽद्य घोरविपिनश्रेण्यैव पास्पार्धिसा ।
हृष्टानां नशृणोमिशब्दमटतां किंचित्तिरश्चां नृणां
    स्वस्यात्राऽऽनयनादहेत्वशुभकंस्मृत्वाऽऽपपित्र्याऽऽलयं ॥

"முன்காலத்தில் மிகுந்த ஒளியால் தேவநகரத்தைப் பழித்த இந்நகரம், இப்பொழுது மனித ஸஞ்சாரமற்ற வனக்கூட்டத்தோடே, கலஹம் செய்கிறது. ஸந்தோஷமாக ஸஞ்சரிக்கும் பிராணிகள் மனிதர்கள் இவர்களின் சப்தம் கொஞ்சமும் கேட்கவில்லை". "என்னை இவ்விடம் காரணமில்லாமல் அழைத்துவந்ததால், துன்பம் வந்திருக்கிறது" என்றுநினைத்து பரதன் பிதாவின் அரண்மனையை அடைந்தான்.

७२ तत्रावीक्ष्यनिजं प्रवृद्ध पितरं मातुः प्रविश्याऽऽलयम्
    नत्वातां भरतोऽभिधायकुशलंतत्पृष्टमार्यस्य च ।
तातंवन्दितुमेव वांछातिमनो नैवेक्ष्यतेत्वद्गृहे
    कौसल्यासदनेऽस्ति वा तमधुना ब्रूहीत्यवोचद्द्रुतम् ॥

அவ்விடத்தில் வயதுமுதிர்ந்த தன் பிதாவைக் காணமல், தாயின் அரண்மனையில் புகுந்து, அவளை நமஸ்கரித்து, அவள் வினவும் தான் பாட்டன் இருவர்களின் க்ஷேமத்தைத்தெரிவித்து, "ஹே அம்மா! பிதாவை வணங்க மனம் விரும்புகிறது. உன் கிருஹத்திலும்காணவில்லை. இப்பொழுது அவர் கௌஸல்யையின் கிருஹத்தில் இருக்கிறாரா? சீக்கிரம் சொல்லவேண்டும்" என்று கூறினன்.

तातस्त गतिमुत्तमामलभत प्रारब्धकर्मक्षयात्
    इत्युक्तिंनिजमातुरार्तिजननीं श्रुत्वा विलप्यावदत् ।
हेतुंब्रूहि पितुर्मृतौ किमभवद्व्याधिर्महादुःखदा
    श्रोतुं तस्यवचस्तु पश्चिममहंवांछामि किंसोऽब्रवीत् ॥

"உன் பிதா பிராரப்த கர்மம் முடிந்ததால் நற்கதியடைந்தார் என்று துக்கத்தைக்கொடுக்கும் தாயின் சொல்லைக்கேட்டு, பரதன் புலம்பி தந்தையின் மரணத்தில், "தாயே! காரணம் கூறவேண்டும். மிகுந்த துக்கம் கொடுக்கும் வியாதி வந்ததா? அவருடைய கடைசிகாலத்தில் சொன்ன வார்த்தையைக் கேட்க நான் விரும்புகிறேன். அவர் என்ன சொன்னார்", என்று கூறினன்

हारामाऽऽश्रितरक्षकाऽऽपदपनुन्नामन्नवन्यात्मजे
हारामानुज पाहिमा मिति वदन्प्राणानपास्यात्पिता ।
कुत्रागाद्रघुनायकस्तु चरितः प्रायादसौदण्डकान्
किं पापंसचकार दुर्जनमतं नासौ किमप्या चरत् ॥

"அண்டினவர்களைக் காப்பாற்றும் துன்பங்களைத் தீர்க்கும் நாமம் பெற்ற ஹா இராமா! ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா! என்னைக் காப்பாற்றவேண்டும்," என்று சொல்லி உன் பிதா பிராணனை இழந்தார். நன்னடை பெற்ற இராமன் எங்கு சென்றான்? அவன் தண்டகாரண்யம் சென்றான். அவன் துஷ்டர்கள் விரும்பும்படி என்ன பாபம் செய்தான்? அவன் ஒன்றும் செய்யவில்லை.

रामस्याप्यभिषेचनं जनहितं श्रुत्वामया प्रार्थितः
तत्सन्दत्तवरद्वयप्रतिनिधी राज्याभिषेकस्तव ।
रामस्यैवविवासनंवितरमेद्रागित्यसौ ते पिता
तद्रामंवनमापयत्ससपदि भ्रात्राचपत्न्यासह ॥ १८९ ॥

"ஜனங்களுக்கு நன்மைகொடுக்கும் ராம பட்டாபிஷேகத்தைக்கேட்டு, உன் தகப்பனரிடம் அவர்கொடுத்த இரண்டு வரங்களுக்கு பதிலாக, உன் பட்டாபிஷேகத்தையும், இராமனுக்கே வனவாஸத்தையும் சீக்கிரம் எனக்காக கொடுக்கவேண்டும் என்று நான் பிரார்த்தித்தேன். அவர் உடனே இராமனை தம்பி மனைவி இருவர்களுடன் காட்டிற்கு அனுப்பினார்."

संस्कृत्यावनिपं वसिष्ठमुनिना राज्येऽभिषिक्तोमहीं
वत्सावोद्धृतशत्रु मित्यभिहिताऽऽलापां विमुक्तव्यथां ।
प्रस्वं वीक्ष्यनिजां पपातभरतो भूमौ निकृत्तद्रुवत्
प्रच्छाद्यस्वकरद्वयात्श्रुतियुगंसन्तप्तचित्तोऽब्रवीत् ॥

"ஹே குழந்தாய்! வஸிஷ்ட முனிவை அழைத்து, அரசனுக்கு ஸம்ஸ்காரம் செய்து, இராஜ்யாபிஷேகம் செய்துகொண்டு பகை வரற்ற பூமியைப் பரிபாலிக்கவேண்டும்," என்று துக்கமறச்சொல் லும் தன் தாயைப்பார்த்து, பரதன் வெட்டின மரம்போல் பூமி யில் விழுந்து, இரண்டு கைகளால் இரண்டு காதுகளைப் பொத்திக் கொண்டு, மனம் வருந்திக் கூறினன்.

७३ पित्रामेरहितस्य तत्प्रतिमसद्भ्रात्रा च राज्येन किं
यत्कुर्यास्त्वमसौख्यईदृगसुखंक्षारं प्रदत्तंव्रणे ।
नाशायस्वकुलस्यसाऽऽगतवतीत्वं कालरात्रिर्हता
त्वामंगारवदाश्लिषन्ममपिता मोहादवापव्यथां ॥ १९१॥

பிதாவையும் அவருக்கு ஸமமான ஜ்யேஷ்ட பிராதாவையும் விட்டுப் பிரிந்த எனக்கு இராஜ்யத்தால் என்ன பயன்? துக்கத் தைக் கொடுக்கும் தகப்பனரின் மரணத்தில், இராமனுடைய வனவாஸத்தால் இவ்வித துக்கம் செய்வித்தது, விரணத்தில் உப்பை வைப்பது போல் இருக்கிறது. நாசமளிக்கும் பிரளய கால இரவுபோல், நீ தன் வம்சத்தைக் கெடுக்கவந்தாய். என் பிதா அறியாமல், நெருப்பைப்போன்ற உன்னை அடைந்து, துன்பமடைந்தார்.

या यत्सूनुरपित्वयि प्रणयिनौदुःखंतयोर्निस्तुलं
कुर्वत्तेऽपदयंकठोरहृदयं किंनाबिभेत्पातकात् ।
भक्तिम्मे रघुनाथजां सुविदितां लोभेन किंव्यसरः
यद्दुष्कीर्तिमवापिथातिमहतीं सर्वैः कृतां निष्फलाम् ॥

"தன்னிடத்தில் அன்புபெற்ற கௌஸல்யை இராமன் இவர்களுக்கு, நிகரற்ற துன்பம் செய்த, தயவில்லாத கடினமான உன்மனம், பாபத்திலிருந்து பயமடையவில்லையா? உலகமறிந்த இராமனிடத்திலிருக்கும் என்னுடைய அன்பை. ஆசையால் மறந்தாயா? எல்லோர்களும் சொல்லும்படி வீண் அபவாதத்தை மிகுதியாக நீ அடைந்தாய்."

धुर्येणप्रधृतंक्वराज्यभरणं क्वाहं बलेनावरः
कुर्यांनैव तवेप्सितं सुजनताद्विष्टं भृशंसन्ततम् ।
नस्याच्चेत्त्वयि राघवस्य जननी बुद्धिर्दुराचारगाम्
त्वामद्यैव समुत्सृजेयमनघे वंशेकथंधी रियम् ॥१९३॥

"பாரத்தைச்சுமக்கும் திறமை பெற்றவர்கள்செய்வேண்டிய இராஜ்ய பரிபாலனத்தை, பலம் குறைந்த நான் செய்யமுடியுமா? ஸாதுக்கள் எப்பொழுதும் மிகவும் நிந்திக்கும் உன் விருப்பத்தை நான் செய்யமாட்டேன். இராமனுக்கு உன்னிடத்தில் தாயென்ற நினைவு இல்லாமலிருந்தால், துர்நடைபெற்ற உன்னை இப்பொழுதே விலக்கிவிடுவேன். குற்றமற்றவம்சத்தில் இந்த துர்புத்தி எவ்விதம் வந்தது?"

यत्ज्येष्ठस्य सुतस्य राज्यकरणं तत्सोदराणां सदा
तत्सेवाकरणं च धर्मपदवी संनिर्मिता पूर्वजैः ।
इक्ष्वाक्वन्वयजैश्चिराऽऽर्जितमदश्चारित्रशौण्डीर्यकम्
निश्शेषं विनिवर्तितं तदधुना सन्त्यक्तनीतेस्त्वया ॥

"மூத்த குமாரனுக்கு முடிசூட்டுதலும் அவன் ஸஹோதரர்கள் எப்பொழுதும் அவனுக்கு பணிவிடை செய்தலும்,இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த முன்னோர்கள் நடந்துவந்த தர்மமார்க்கம். அவர்கள் வெகுகாலமாக ஸம்பாதித்த நன்னடையால் வந்த பெருமை முழுவதும், ஹே நீதியற்றவளே! உன்னால் இப்பொழுது விலக்கப்பெற்றது.

राज्याऽऽशाहतयात्वया विरचितंलोकापवादाऽऽस्पदम्
यावत्प्राणमकीर्तिपुंजजनकं ज्येष्ठध्रुगित्यात्मकम् ।
पापंमेतनयस्यसंभृतमहो तं सोदरं काननात्
आनीयाऽऽसनमापयन्सुमनसा सेविष्यतेऽयंजनः ॥१९५॥

"இராஜ்யத்தில் ஆசைபெற்ற நீ, அண்ணனுக்கு துரோகம் செய்தவனென்று ஜனங்கள் நிந்திக்கும்படி அபகீர்த்தியான பாபத்தை பிராணனுள்ளவரை, புத்திரனை எனக்கு, சம்பாதித்துவைத்தாய். அந்தோ அண்ணனை அரண்யத்திலிருந்து அழைத்துவந்து ஸிம்மாஸனத்தை அடைவித்து நான் மனமார பணிவிடை செய்யப்போகிறேன்."

७४ त्यक्त्वा राज्यमपश्रमेणकरगंमात्राऽऽर्जितंपातकं
धर्मात्माभरतो विचिन्त्यनितरां संवृद्धकोपोऽब्रवीत् ।
राज्याद्भ्रंशमुपेहि संरुदिहि ते मातेवदोषाऽऽकृते
मातेभर्तृसलोकतास्तु नरकं गच्छाऽऽहतस्वान्वये ॥

சிரமமில்லாமல் கையில் கிடைக்கும்படி தாயார் தேடின இராஜ்யத்தை விலக்கி பாபத்தை, நினைத்து தர்மத்தின் உருவமான பரதன், மிகவும் அதிகம் கோபங்கொண்டு கூறினான். "பாபத்தின் உருவம் பெற்றவளே! உன் தாய்போல் இராஜ்யத்திலிருந்து நீங்கிவிடு. நன்றாய் ரோதனம் செய். உனக்கு புருஷனுடைய உத்தம லோகம் கிடைக்காது. வம்சத்தைக் கெடுத்தவளே! நரகம் அடைவாய்"

नाशस्त्वाधिपतेस्सुधर्मसुमतेः कन्या कुलध्वंसिनी
राक्षस्याहित धर्मकोसलसुतासंक्लेशनात्प्राप्स्यसे ।
कं लोकं निरयातिथेरघुपतेस्सत्शीलता विस्मृता
किं स्वांगप्रभवात्सुताच्चपरमो बन्धुः किमास्तेस्त्रियाः ॥

"நன்ருய் தர்ம புத்திபெற்ற கேகயராஜனுக்கு நீ பெண் இல்லை. தவிர குலத்தைக் கெடுக்க இராக்ஷஸி. தர்மம் செய்யும் கௌஸல்யைக்கு துன்பம் செய்ததால் எவ்வுலகம் அடைவாய். நரகலோகத்தின் விருந்தாளியே! இராமனுடைய நன்னடத்தையை மறந்தாயா? பெண்களுக்கு தன் சரீரத்தில் பிறந்த புத்திரனைத்தவிர மேலான பந்து இருக்கிருஞ?"

सन्तप्तासुरभिस्समीक्ष्यधरणौ पुत्रौहलाऽऽकर्षणौ
अह्नोऽर्धेरुदतीबलाहितकृता पृष्टास्वपुत्रार्दनात् ।
शोकोऽभूदतनोः कृषीवलकृतादित्याहचेद्रामसूः
सादुःखंत्रिषहेतपुत्रविरहादकाऽऽत्मजातत्कथं ॥

"பூமியில் நடுப்பகலில் கலப்பையை இழுத்துஉழுதபுத்திரர்களான காளைகளைப் பார்த்து, ரோதனம் செய்த காமதேனு இந்திரனல் வினவப்பெற்று, குடியானவன் உழுவதால் செய்த, அதிகமான தன் புத்திரர்களின் துன்பத்தால் துக்கம் வந்ததென்று சொல்லும்பொழுது, ஒரே புத்திரனைப்பெற்ற கௌஸல்யை புத்திரனைவிட்டு பிரிந்து,துக்கத்தை எவ்விதம் பொறுப்பாள்?"

आनृण्यप्रदमौर्ध्वदैहिकमहं निर्वर्त्यपूर्वं पितुः
चाऽऽनीयाऽऽस्पदमार्यसोदरमथ प्राप्स्यामितत्काननम् ।
त्वत्पापंनवहेयमश्रुनयनैः पौरैस्सदावीक्षितः
वह्निं वा प्रविशत्यजाद्य च तनुंनास्त्येवतेऽन्यागतिः ॥

"தன் கடனை நீக்கும் பிதாவின் ஸம்ஸ்காரத்தை முன்னல் செய்து, அண்ணனை அரண்மனைக்கு அழைத்துவந்து, பிறகு நான் அக்காட்டிற்குப் போகப்போகிறேன். கண்களில் கண்ஜலம் பெற்று பட்டணத்தின் ஜனங்கள் எப்பொழுதும் பார்த்து இருக்கும்படி நீ விரும்பும் பாபத்தொழிலைச் செய்யமாட்டேன். நீ அக்னியில் விழு. இப்பொழுது சரீரத்தையும் இழந்துவிடு. உனக்கு வேறு கதியே இல்லை"

शोकेनातनुमूर्छितं सभरतो गत्वाचिरं चेतनाम्
लब्ध्वादीन उदीक्ष्यमातरमपि प्राश्रीक्षणोऽकुत्सयत् ।
नैच्छं राज्यमहंकदाऽपिसुमहन्नामन्त्रयेमातरम्
नाजानाम्यभिषेचनंवनगतिं चाऽऽर्यस्य दूरस्थितः ॥

துக்கத்தால் பரதன் வெகுநேரம் அதிக மூர்ச்சையடைந்து நினைவுபெற்று, கண்களில் கண்ஜலம் அதிகரித்து வருந்தி, தாயையும் நிந்தித்தான். நான் ஒருநாளும் பெரிய இராஜ்யத்தை விரும்பவும் இல்லை. தாயினிடம் ரஹஸ்யமாய் ஆலோசிக்கவுமில்லை. அண்ணனுடைய பட்டாபிஷேகத்தையும் வனவாஸத்தையும் நான் தூரத்தில் இருந்ததால் அறியவில்லை.

कौसल्याभवनं समेत्यभरतो दृष्ट्वा चतां सानुजः
सूच्येवव्रण आहतः परुषया वाचा तयामर्मणि ।
राज्यप्रार्थक राज्यमेतदनयं कृत्वैव मात्राऽऽर्जितम्
भुंक्ष्वाद्विड्रहिताश्चिरादितिगतो मूर्छांपपातावनौ ॥ २०१ ॥

பரதன் தம்பியுடன் கௌஸல்யையின் அரண்மனையை அடைந்து, அவளைப் பார்த்து, "இராஜ்யம் வேண்டினவனே, அநீதியால் தாயார் சம்பாதித்த இராஜ்யத்தை சத்துருவில்லாமல் வெகுகாலம் அனுபவிக்கவேண்டும்", என்று புண்ணில் ஊசியால் குத்தினதுபோல் கடுஞ் சொற்களால் பிராண ஸ்தானத்தில் அவளிடமிருந்து அடிபெற்று, மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான்.

७५ संज्ञां प्राप्य विषादवाधितलगस्संवेदयामासताम्
स्वानिच्छां नितरामसंख्यशपथैरत्वेति भीरुस्त्वघात् ।
माशंकां कुरुमय्यनागसिभृशं दूरस्थिते प्रेयसि
प्रेमाऽऽर्येममतात्किमप्यविदितं कृच्छंतुतद्दैविकम् ॥ २०२ ॥

பாபத்திலிருந்து பயந்த பரதன், துக்ககடலின் கரையை அடைந்து, நினைவுபெற்று இராமனுடைய வனவாஸத்தில் தனக்கு விருப்பமில்லை என்பதை, கணக்கில்லாத சபதங்களால் கௌசல்யைக்குத் தெரிவித்தான். "குற்றமற்ற வெகு தூரத்திலிருந்த நண்பனை என்னிடம் ஸந்தேகிக்காதே. ஹே அம்பா! எனக்கு அண்ணனிடம் அளவற்றதாயிருக்கும் அன்பை மறந்தாயா? துன்பமோ தெய்வத்தால் வந்தது."

आर्यस्यानुमता गति र्वनतलेचेच्छास्त्रगासन्मतिः
माभूत्तस्य सपापिनामनु चरोमेहत्वथार्कंप्रति ।
गांसुप्तां सपदेनहन्तुसमहत्कृत्यंमुधाकारयेत्
भृत्यंरक्षितलोकभूमिपतये द्रुह्यत्वभीक्ष्णंसतु ॥ २०३ ॥

"அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன் சாஸ்திரங்களில் நற்புத்தியை இழப்பான். பாவிகளுக்கு ஸேவகனாயிருப்பான். சூர்யனுக்கு எதிர்முகமாக மலஜலத்தைக்கழிப்பான். உறங்கும் பசுவைக் காலால் வதைப்பான். வேலைக்காரனைமிகுந்த வேலையை வீணாகச் செய்விப்பான். உலகங்களைக் காப்பாற்றுமரசனுக்கு அடிக்கடி குற்றம் செய்வான்."

आदायैवबलिं यथाविधिजनान्भूपो नसंरक्षतु
क्रत्वंगं रचिताध्वरोऽपलपतु क्रूरस्स ऋत्विग्धनम् ।
तस्यस्यन्दनहस्तिसंकुलरणे स्यात्तत्परावर्तनम्
सोऽधीतं विसृजत्वमुत्रफलदं प्रादाद्गुरुर्यत्पुरा ॥ २०४ ॥

"ஜனங்களிடத்தில் விதிப்படி கப்பம்பெற்று அரசனாயிருந்தும் அவர்களைக் காப்பாற்றாமலிருப்பான். துஷ்டன் வேள்வியைச் செய்து யாகத்திற்கு அங்கமான வேள்வி செய்விக்கும் வைதிகர்களின் தக்ஷிணையைக் கைப்பற்றுவான். இரதம் யானை நிறைந்த போர்க்களத்தில் வெற்றியில்லாமல் திரும்புவான். முன்காலத்தில் குரு கற்பித்த பரலோகத்தில், பயனளிக்கும், படித்த வேதத்தை மறந்துவிடுவான்."

माद्राक्षीद्रघुनायकं नगरगं छागंचवा।निर्घृणः
सोऽश्नातु स्वयमन्यतां ससुगुरून्गां स्वांघ्रिणासंस्पृशेत् ।
नित्यंसस्वगुरून्स्वयंपरिवदेन्मित्रायसद्रुह्यतु
प्रेम्णातत्कथितं रहस्यवचनंव्यक्तिं सदुष्टोनयेत् ॥ २०५ ॥

"வனத்திலிருந்து பட்டணத்திற்கு திரும்பிவந்த இராமனைப் பார்க்க மாட்டான். மாம்ஸம் முதலியவைகளை, 'தெய்வங்களுக்கும் பித்ருக்களுக்கும் உபயோகிக்காமலும்.' சாஸ்திரத்தை மீறினதால் துன்பம் வருமென்று, தன்னிடத்தில் கருணை இல்லாமலும் விஞைக புஜிப்பான்".

"அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன் ஸத்குருக்களை அவமதிப்பான். பசுவைத் தன்காலால் தொடுவான். தன் குருவைத் தானே நிந்திப்பான். (அவரிடத்தில் குற்றம் சாற்றுவான்) அவன் சிநேஹிதனுக்கு குற்றம் செய்வான். அன்பினுல் சொன்ன இரஹஸ்யத்தை அத்துஷ்டன் வெளியாக்குவான்".

त्यक्त्वा प्रत्युपकारमेव कुमतिःकार्तज्ञ्य हीनोऽस्तुसः
त्यक्तस्साद्भिरथात्रपस्स भुवनेदारै स्सुतैर्वेश्मनि ।
एकोऽश्नातु समृष्टमन्नमवनावप्राप्यदारान्समान्
पुत्रान्कर्मच धर्म्यमेतु समृतिं प्राप्तोऽपिपूर्णं वयः ॥

"(அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன்) துர்புத்தியால் செய்த நன்றியைக்கூட மறந்து பதிலுபகாரம் செய்யாமலே இருப்பான். ஸாதுக்களால் விலக்கப்பெற்றும், உலகத்தில் வெட்கமில்லாமலிருப்பான். வீட்டில் மனைவிமக்களோடு ஒருவனுக நல்ல உணவை உண்ணுவான். பூமியில் நிறைந்த வயது பெற்றும், தகுந்த மனைவிமக்களையும், தர்மத்திலிருந்து தவராத நற்கர்மாவையும் அடையாமல் மரிப்பான்."

बालान्वृद्धवरांश्च राजललन हन्तुत्यजत्वाश्रितान्
लाक्षां लोहविषे पलं मधुसदा विक्रीयभृत्यानवेत् ।
संग्रामे सुपलायमानमनघंहन्तु द्विषद्व्यापृते
पृथ्वीं सोऽप्यटतात्कपालभरणश्चीरांबरोभिक्षया ॥

"(அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன்) சிறுவர்களையும் மிகவும் கிழவர்களையும் இராஜ ஸ்திரீகளையும் கொல்லுவான். அண்டினவர்களை கைவிடுவான். செம்மஞ்சி, இருப்பு விஷம், மாம்ஸம், தேன் இவைகளை எப்பொழுதும் விற்று பரிவாரங்களைக் காப்பாற்றுவான். சத்துருக்கள் நிறைந்த போர்க்களத்தில் குற்றமில்லாமல் ஓடுகிறவனைக் கொல்லுவான். மனையுருவி தரித்து கையில் கபாலமேந்தி பிக்ஷைக்காக பூமியில் திரிவான்."

स्त्रीष्वक्षेषुसमुत्सुकोऽस्तुमधुनिक्रोधाऽऽदिभिर्व्यापृतः
त्यक्त्वा धर्ममधर्ममाश्रयतुसद्रव्याण्यपात्रेऽर्पयन् ।
तद्द्रव्याण्यमितानितस्करगणैरप्या ह्रियन्तां द्रुतम्
संन्ध्येद्वे सशयीतनित्यमपितेदारान्गुरोर्गच्छतु ॥ २०८ ॥

"பெண்களிடத்திலும் பாசக் காய்களிலும், மத்யத்திலும், விருப்பங்கொண்டு காமக் குரோதாதிகளுக்கு வசமாயிருப்பான். பொருள்களை துஷ்டர்களிடத்தில் கொடுத்து தர்மத்தை இழந்து அதர்மத்தைக் கைப்பற்றுவான். அண்ணனுடையவனவாஸத்தை ஸம்மதித்தவனுடைய பொருள்களைத் திருடர்கள் சீக்கிரம் பிடுங்கிக்கொள்வார்கள். தினந்தோறும் இரண்டு ஸந்தியா காலங்களிலும் உறங்குவான். குருவின் மனைவியோடு புணருவான்".

वेश्मन्यग्निमयंददातुसुमनोमित्रायचद्रुह्यतु
प्रीणातु क्रतुभिर्नदैवतगणं श्राद्धैः पितॄन्सेवया ।
जीवन्तौ पितरौ सतांभुवनतस्संकीर्तनात्कर्मणः
क्षिप्रं भ्रश्यतुमातृसेवनमपित्यक्त्वात्वनर्थेऽस्तुसः॥१०९॥

"(அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன்) வீட்டில் தீயை வைப்பான். நல்ல எண்ணம் பெற்ற சினேஹிதனுக்குக் குற்றம் செய்வான். வேள்விகளால் தெய்வங்களுக்கும் சிராத்தங்களால் பித்ருகளுக்கும், ஸந்தோஷம் செய்யமாட்டான். ஜீவதசையிலிருக்கும் தாய் தந்தைகளை ஸேவிக்கமாட்டான், தான் செய்த புண்ணியகர்மாவைச் சொல்லி நல்லுலகத்திலிருந்து நழுவுவான். தாயின் ஸேவைவயயும் தள்ளி கெட்டகாரியங்களைச்செய்வான்."

भूयोभिस्तनयैर्युतोऽप्यपधनः क्लिष्टो ज्वराऽऽर्तोऽनिशम्
कुर्यादर्थिमनोरथं सवितथंमायारतो राजतः
भीतस्संपिशुनोऽस्त्वधर्मकरण श्शुद्धेर्बहिर्निर्गतः
भार्यामप्यतिवर्ततामृतुमतींदुष्टस्स्वसामीप्यगां ॥ २१० ॥

"(அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன்) அநேக புத்திரர்களைப் பெற்றும் பொருளில்லாமலும் ஜ்வரரோகத்தால் துன்பமடைவான். எப்பொழுதும் யாசகர்களின் மனதை நிறைவேற்றமாட்டான். மாயையில் விருப்பங்கொண்டு அரசனிடம் பயந்து பிறர்குற்றங்களைச்சொல்லி பாபத்தைச் செய்வான். (வாக்கு மனம் முதலியவைகளின் சுத்தியிலிருந்து நீங்குவான், ருதுஸ்னானம் செய்தவளும் தன் ஸமீபத்திலிருக்கும் மனைவியையும் துஷ்டனயிருந்து புணரமாட்டான்."

त्यक्तो धर्मधिया स्वधर्मललनां त्यक्त्वा परस्त्रींश्रयेत्
नष्टापत्यगणद्विजस्यदुरितं पानीयसंदूषणात् ।
दानादुग्रविषस्य यच्चदुरितं प्राप्नोतुमर्त्यस्स्वतः
पूजां विप्रमणे विहन्तु कलुषप्रज्ञो विधातुंमताम् ॥

"கர்மத்தில் புத்தியில்லாமல் தன் தர்மபத்தினியையும் தள்ளி பிறர் மனைவியை அடைவான். பெற்ற வெகு புத்திரகளை இழந்த பிராமணனுடைய பாபத்தையும், ஜலத்தைக் கொடுத்தவனுடைய பாபத்தையும், கடுமையான விஷத்தை பிறருக்குக் கொடுத்தவனுடைய பாபத்தையும், (அண்ணனுடைய வனவாஸம் ஸம்மதித்தவன்) அடைவான். பாபத்தைச் செய்யக்கருதி, தானுக உத்தம பிராமணனுக்குச் செய்யக்கருதிய பூஜையைக்கெடுப்பான்".

क्षीरंदोग्धु च गामजातरदतद्वत्सां सतृष्णावशः
हस्तस्थेऽम्बुनितृड्युतायनजलंदद्यात्सदा प्राणिने ।
मर्त्यानांयुगळे विवादबहुळे ब्रूयादनीतिंक्रुधा
यस्याऽऽर्योऽनुमतौ गतस्सइति तामाश्वासयन्सोऽपतत् ॥

"(அண்ணனுடைய வனவாஸத்தை ஸம்மதித்தவன்) பசுவி னிடம் அதன் கன்றுக்கு பல்முளைப்பதற்குமுன் பாலை அநியாயமாக பெற்றுக் கறப்பான். கையில் ஜலமிருந்தும் தாகமுள்ள பிராணி களுக்கு எப்பொழுதும் ஜலம் கொடுக்கமாட்டான். இரண்டு மனிதர்கள் வழக்குசெய்யும்பொழுது கோபத்தால் அநியாயம் சொல்லுவான்" என்று அப்பரதன் கௌஸல்யையை சமாதா னம் செய்து (மூர்ச்சையால்) விழுந்தான்.

कौसल्या भरतोक्तिमप्यवितथां श्रुत्वाऽथतं प्राहसा
प्राणान्स्थापयसि प्रियाद्यशपथैर्दूरंविनिर्गच्छतः ।
दिष्ट्यात्वं चलितो नधर्मपथत स्सल्लोक मित्याप्स्यसि
प्राप्य्यांकमपिस्वकीयमतनो दैवंसवीर्यंहृदि ॥ २१३ ॥

உண்மையான பரதனுடைய வார்த்தையை கௌஸல்யை கேட்டு, பிறகு பரதனைப் பார்த்து, "அன்பனே! என்னைவிட்டு வெகுதூரம் சென்ற பிராணன்களையும், இப்பொழுது சபதங் களால் இருக்கவைக்கிறாய். தர்மமார்க்கத்திலிருந்து தெய்வா தீனமாக நீ நழுவாமலிருந்தால் நல்லுலகம் அடைவாய்" என்று அவனை தன் மடியில் இருக்கவைத்து தெய்வம் பலமுள்ளதென்று மனதில் நினைத்தாள்.

७६ **सन्दिष्टो गुरुणा ततस्तुभरतस्तैला त्समुत्थापितम्**
राजानं पुरतोबहिश्शिबिकया निर्हृत्यमन्त्रान्जपन् ।
संस्कृत्यत्रिभिरग्निभिः कृतमखं दत्वासरय्वां जलं
नैवापं भवनंसमेत्य सकलैर्दुःखंदशाहं जहौ ॥ २१४ ॥

பிறகு பரதன் குருவின் உத்திரவால் யாகம்செய்த அரசனை எண்ணெயிலிருந்து வெளியில் எடுத்து பல்லக்கிலேற்றி பட்டணத் திற்கு வெளியில் கொண்டுவந்து மந்திரங்களை ஜபித்து மூன்று அக்னிகளால் ஸம்ஸ்கரித்து, ஸரயூ நதியில் திலோதகம் கொடுத்து எல்லோர்களுடன் அரண்மனையை அடைந்து, பத்து நாட்களில் துக்கத்தை அகற்றினான்.

७७ अह्न्येकादशआत्तशौचकरणो राजाऽऽत्मजोद्वादशे
घस्त्रश्राद्धविधिं विधाय विधिवत्प्रादाद्द्विजेभ्योधनं ।
अस्थ्नां शोधनकर्मणे पितृवने मूलंचितायागतः
भस्मप्रेक्ष्यपितुः कृतप्रलपनः कर्माऽऽचचाराखिलम् ॥

பதினொன்றாவது நாளில், பரதன் தீண்டலிலிருந்து சுத்தி பெற்று, பன்னிரண்டாவது நாளில் விதிப்படி சிராத்தம் செய்து, பிராமணர்களுக்கு தக்ஷிணைகொடுத்தான். அஸ்தி ஸஞ்சயனத்துக்காக மயானம்சென்று,பிதாவினுடைய சிதையின் அடியில்சாம்பலைப்பார்த்து புலம்பி, எல்லா கர்மங்களையும் செய்து முடித்தான்.

७८ निर्वर्त्याथतमौर्ध्वदेहिकविधिं तातस्यकान्तारगं
काकुत्स्थं सुविलोकितुं सकुतुकंरामानुजस्यानुजः ।
कैकेयी तनयं जगादकुपितोदुःखेगतिः प्राणिनां
रामस्सत्वसमन्वितोऽप्यबलया प्रव्राजितोयद्वनं ॥
तातंस्त्रीवश मुत्पथादपनयं पूर्वंनिगृह्याऽऽलयः
वीर्यस्यापिसलक्ष्मणोव्यसनतो नामोचयद्भ्रातरं ।
आश्चर्यं विधिनाकृतं द्वयमितिप्रव्याहरन्मंथरां
प्राग्द्वारे भवनस्यमण्डिततनुंदैवादपश्यत्खलां ॥ २१७॥

பிறகு பிதாவின் மரணைச் சடங்கை முடித்து, காட்டிலிருக்கும் இராமனைப் பார்க்க விருப்பமுள்ள பரதனைப் பார்த்து, சத்ருக்னன் "ஹே அண்ணு! பிராணிகளுக்கு துக்கத்திலும் சுகமளிக்கும் இராமன் பலம் பெற்றும், பலமற்ற பெண்ணுல் வனத்திற்கு விரட்டப்பெற்றதும்,

"நல்வழியிலிருந்து பெண்புத்தி கேட்டு, துர்மார்க்கத்திற்கு வந்த தந்தையை, முன்னமே அடக்கி, பலத்திற்கு இருப்பிடமான இலக்ஷ்மணன் சகோதரனைத் துன்பத்திலிருந்து விலக்காமலிருந்ததும்,இவ்விரண்டும் ஆச்சரியமான தெய்வத்தின்செய்கை" என்று கோபமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது,அரண்மனையின் கீழவாசலில் சரீரத்தை அலங்கரித்துக்கொண்ட துஷ்டையான மந்தரையை, தெய்வாதீனமாகப் பார்த்தான்.

आनीतां गृहरक्षकै रपदयं कृच्छ्रस्यमूलंत्त्विमां
जानन् तां बलवान्निगृह्य परुषैर्वाक्यैश्चं तद्वल्लभां ।
शीर्यद्भूषणमाविकृष्यसरवांहन्तुं प्रवृत्तोजवात्
कैकेयीसुतबोधितो निववृतेकोपाच्चतस्यावधात् ॥

அரண்மனைக் காவல்காரர்களால் கருணையில்லாமல் கஷ்டத் திற்குக் காரணமென்று, ஸமீபம் அடைவிக்கப் பெற்ற அம் மந்தரையைச் சத்ருக்னன் தெரிந்துகொண்டு, அக் கூனியையும், அவளின் எஜமானியையும் கடுஞ்சொற்களால் பலமாக அதட்டி, வேகமாக ஆபரணங்கள் சிதறிவிழும்படி இழுத்து, அலறும்பொழுதே வதைக்க முயற்சித்தும், பரதனுடைய நற்போதனையால் கோபத்திலிருந்தும் அவளின் வதத்திலிருந்தும் ஒழிவுபெற்றான்.

௭௯ प्रोक्तः प्रातरुपेत्यसप्रकृतिभी राजाभवेत्यादरात्
कैकेयीतनयोऽब्रवीत्कृतनतिश्चाऽनीयरामंवनात् ।
राज्यं ग्राहयिताऽस्मिनूनमतनुस्सेना च मे युज्यतां
पन्थामेक्रियतां सुशिल्पानिपुणैर्वीराः पुरोयान्त्विति ॥

காலையில் ஸமீபத்தில் வந்து "நீ அரசனாக இருக்கவேண்டும்", என்று அன்புடன் வேண்டும் மந்திரி முதலியவர்களைப் பரதன் நமஸ்கரித்து "இராமனை வனத்திலிருந்து நகரமழைத்துவந்து, நிச்சயமாக இராஜ்யம்பெறச் செய்யப்போகிறேன். அதிகமான சேனையைப் பின்வரச் செய்யவேண்டும். சில்பம் தெரிந்தவர்கள் வழிகளை சீர்செய்யவேண்டும். வீரர்கள் முன் செல்ல வேண்டும்" என்று பதிலுரைத்தான்.

௮௦ आज्ञप्ताभरतेनकर्मकुशलाः पन्थानमत्यायतम्
चक्रुर्वर्धकयोद्रुमान्चविभिदुष्टंकैश्चकेचित्शिलाः ।
वृक्षान्केचिदरोपयन्सुनिबिडान्कूपान्मरौ चाखनन्
निम्नानिप्रसमानिपांसुनिचयैरागङ्गमापत्तनम् ॥२२०॥

பரதனுடைய உத்திரவால், தச்சர்கள் (மரவேலைக்காரர்கள்) மரங்களை வெட்டினார்கள். சிலர் பாறைகளை உளிகளால் பிளந்தார்கள். தண்ணீர் இல்லாத இடங்களில், கிணறுகளைத் தோண்டினார்கள். நிழலுக்காக மரங்களை, நெருக்கமாக பயிர்செய்தார்கள். சிலர் பள்ளங்களை மண்களால் ஸமமாகச் செய்தார்கள். வேலைக்காரர்கள் அயோத்தியிலிருந்து கங்கா நதிவரை வழிகளை, மிகவும் விஸ்தாரமாகச் செய்தார்கள்.

८१ प्रातस्सूतकृतां स्तुतिंसभरतश्श्रुत्वा प्रबुद्धो द्रुतम्
नाहंभूपइतिब्रुवन्विरमयन्प्राहानुजं यापितुः
राज्यश्रीरपनायका भ्रमतितां पश्येतिकॢप्तांसभां
आनीतप्रकृतिंवसिष्ठमुनिनायुक्तस्सहष्टैर्ययौ ॥ २२१ ॥

காலையில் பரதன் ஸ்துதிபாடகர்கள் செய்யும் ஸ்தோத்திரத்தைக் கேட்டு, சீக்கிரம் விழித்துக்கொண்டு "நான், அரசனில்லை" என்று சொல்லி ஸ்துதியை நிறுத்தச்செய்து, தம்பியைப் பார்த்து, "பிதாவினுடைய இராஜ்யலெக்ஷ்மி நாதனில்லாமல் அலைகிறது பார்" என்று கூறி, வஸிஷ்டமுனிவர், மந்திரி முதலியவர்களை அழைத்துக் கூட்டிவைத்த ஸபைக்கு, அன்பர்களோடு சென்றான்.

८२ पित्रास्वर्निलयेन काननगृहभ्रात्राऽर्पितंतद्धत
द्विट्चक्रं सुचिरंप्रशाधि बलवान्नित्युक्तवाक्यंगुरुं ।
शोकाऽऽर्तोभरतोनिनिन्दसददौस्वाऽऽत्माचराज्यंद्वयम्
रामस्यैववशं यथामतिवनात्प्रत्यानयिष्यामितं ॥ २२२ ॥

"சுவர்க்கம் சென்ற தந்தையும், வனம் சென்ற ஸஹோதரனும், கொடுத்த பகைவரற்ற இராஜ்யத்தை வெகுகாலம் ஹே! பலமுள்ளவனே! ஆளவேண்டும்" என்று சொன்ன குருவைப் பார்த்து பரதன் துக்கத்தால் வருந்தி, "என் சரீரமும், இராஜ்யமும் இவ்விரண்டும் இராமனுக்கே வசம், புத்திக்குத் தெரிந்தவரை இராமனை வனத்திலிருந்து, திருப்பி அழைத்துவர போகிறேன்" என்று ஸபையில் நிந்தித்தான்.

३ वीक्षानिरीक्षुं भरतश्चाऽस्थायकाल्येरथम्
सद्रत्नं सचिवौ पुरस्तुसचिवा आरुह्यसत्स्यन्दनान् ।
देव्यस्तंशिबिकाभिरप्यनुययुस्सन्तोऽखिलास्सैनिकान्
गंगां प्राप्यतटेन्यवेशयदसौ पित्रेप्रदित्सुर्जलम् ॥ २२३ ॥

பரதன் இராமனைப் பார்க்கவிரும்பி, காலையில் நல்ல நவரத்தினங்களிழைத்த இரதத்தில் ஏறிக்கொண்டு, பிரயாணம் செய்தான். மந்திரிகள் நல்ல இரதங்களில் ஏறிக்கொண்டு, அப்பரதனுக்கு முன்னும், தேவிகள் பல்லக்குகளில் ஏறிக்கொண்டு அவனுக்கு பின்னும் சென்றார்கள். எல்லா சாதுக்களும் பின் சென்றார்கள். பரதன் கங்காநதியை அடைந்து பிதாவிற்குத் திலோதகம் கொடுக்கவிரும்பி, அந்நதிக்கரையில் ஸைனியங்களை நிறுத்தி, வைத்தான்.

८४ सेनां वीक्ष्यनदीमिवातिमहतीं दूरेऽनुमायाऽऽगतम्
शंकाऽऽक्रान्तमनागुहस्तुभरतं नौभिर्युतान्सेवकान् ।
नद्यास्संतरणायुक्तं समवितुं सन्दिश्यसोपायनः
दृष्ट्वाऽप्रीणयदाहितस्वकुशलो वाचास आतिथ्यतः ॥

கங்காநதிபோல் மிகவும் அதிகமான ஸைனியத்தை தூரத்தில் பார்த்து பரதன்,வந்ததாக ஊகித்து,குஹன் மனதில் பயந்து, ஓடங்களோடுகூடின ஸேவகர்களிடம் நதியைத்தாண்டி,அக்கரை செல்லும்வழியை ரக்ஷிக்கும்படி உத்திரவுசெய்து, தனக்கு ஸம்ரக்ஷணைத்தையும் செய்துகொண்டு, மங்களத்திரவியங்களை எடுத்துக்கொண்டு பரதனைப்பார்த்து, வார்த்தையாலும், அதிதி பூஜையாலும் (விருந்தாலும்) ஸந்தோஷமடைவித்தான்.

८५ यद्वांछसिमितंबलं स्ववशयितुं त्वद्भाषणादार्चिताः
सर्वेसोगुरुमित्रमेवदभरद्वाजाऽऽश्रमाभ्यागतिम् ।
इत्युक्त्वाविदिताऽऽर्यसोदररतिः प्रत्यब्रवीत्तं गुहः
कस्त्यक्ष्यत्यपिराज्य मात्मकरगं सुभ्रातरंत्वांविना ॥

அளவற்ற ஸைனியங்களுக்கு விருந்துசெய்ய நினைப்பதால், உன் வார்த்தையால் நாங்கள் எல்லோரும் விருந்துபெற்றோம். அண்ணனுடைய ஹே நண்பனே! பரத்வாஜாசிரமம் செல்லும் வழியை; எனக்குச் சொல்லவேண்டும், என்று பரதனுடைய சொல்லால் அண்ணனிடமிருக்கும் அன்பைத் தெரிந்துகொண்டு, குஹன் பரதனைப் பார்த்து "நற்சகோதரனான உன்னைத்தவிர, வேறுயார் கையில் கிடைத்த இராஜ்யத்தையும், கைவிடப்போகிறான்" என்று பதில் கூறினான்.

८६ रामप्रेम महत्समीक्ष्य भरते श्रीशृंगिबेरेश्वरः
सन्तृप्तो नितरां सदा दृढयितुं तल्लक्ष्मणस्याऽऽशयम् ।
आत्मज्ञातचरं शुभातिशयकृत्सौभ्रातृकैकाऽऽस्पदम्
रात्रौ जागरणं जटाविरचनं प्राहाम्बुसन्तारणम् ॥

சிருங்கிபேர நகரத்தின் அரசனான குஹன் பரதனுக்கு இராமனிடம் இருக்கும் மிகுந்த அன்பை அறிந்துகொண்டு, அதிக ஆனந்தம்பெற்று, அதை எப்பொழுதும் அழியாமலிருக்கச் செய்வதற்காக தான் முன் அறிந்த அதிக நன்மை கொடுக்கும் நற்சகோதரத் தன்மைக்கு, ஓரிடமுமான இலக்ஷ்மணனுடைய மனதையும், இராத்திரியில் கண்விழித்தலையும், ஜடைகளின் தரித்தலையும், கங்காநதியின் தாண்டுதலையும் கூறினான்.

८७ सोढुं रामवियोगदुःखमपटुं संवर्धमानं मुहुः
रामाऽऽलोकनलब्धभाग्यनिचयः प्रीत्याऽब्रवीत्तं गुहः ।
भद्रेऽश्नशनेऽप्युपोष्य रजनीं निद्रांगतं राघवं
सौमित्रिस्सररक्षतं सहबलै रिंगुधगस्थोऽप्यहं ॥ २२७ ॥

அடிக்கடி வளரும் இராமனுடைய பிரிவால் உண்டான துக்கத்தைப் பொறுக்கமுடியாத பரதனைப்பார்த்து, இராமனுடைய பார்வையால் மிகுந்த பாக்கியம்பெற்ற குஹன் "நான் உணவைக் கொடுத்தும், இரவில் உபவாஸமாயிருந்து உறங்கும் இராமனை, இலுப்பமரத்தடியில் இருந்து, இலக்ஷ்மணனும், நானும் ஸைனியங்களுடன் காப்பாற்றினோம்" என்று அன்போடு கூறினான்.

८८ श्रुत्वा गुह्यगुहोक्तिमप्यवितथां प्राप्येङ्गुदीपादपं
दृष्ट्वाऽऽर्यस्य सभार्यकस्य शयितं तस्यासुखंचोत्थितं ।
मत्वा तत्कलुषं विहन्तुमथ तत्कर्माऽऽचरिष्याम्यहं
राज्यं शास्तु ससानुजश्चिरमिति स्वादेवताः प्रार्थयत् ॥

ரஹஸ்யமாயும் உண்மையுமான குஹனுடைய வார்த்தையைக் கேட்டு பரதன் இலுப்பமரத்தடியில் வந்து, மனைவியுடன் அண்ணன் படுத்திருந்த இடத்தைப் பார்த்து, தன்னால் அவருக்கு உண்டான துன்பத்தையும் நினைத்து, அந்த பாபத்தை நீக்குவதற்காக பிறகு அவர் செய்யவேண்டிய வனவாஸமென்ற காரியத்தை, நான் தம்பியுடன் செய்யப்போகிறேன். அவர் தம்பியுடன் வெகுகாலம் இராஜ்யத்தை அரசு புரியவேண்டும் என்று தன் இஷ்ட தெய்வங்களை வேண்டினன்.

८९ प्रातस्सद्गुहदत्तनौभिरनघां सन्तीर्य दिव्यां नदीम्
सर्वं सैन्यमथाऽऽत्मनोऽपरतटं प्रापय्य नद्याद्रुतम् ।
ऋत्विग्भिर्भरतो विनीतिसहितः पद्भ्यां जगामाऽऽश्रमं
पश्यन्वृक्षसुमण्डितं मुनिभरद्वाजस्य चित्राऽऽस्पदं ॥

பரதன் காலையில் குஹன் கொண்டுவந்த நல்ல ஓடங்களில் ஏறி, கங்காநதியைத் தாண்டி, சீக்கிரம் தன் எல்லா ஸைனியங்களையும் நதியின் அக்கரையை அடைவித்து, மரங்களால் அலங்காரம் பெற்று, ஆச்சரியங்களுக்கு இருப்பிடமுமான பரத்வாஜ முனியின் ஆசிரமத்தைப் பார்த்து, யாகம் செய்விக்கும் ரிஷிகளுடன், வணக்கமாக கால்நடையாகச் சென்றான்.

९० सम्प्राप्तं भरतं वसिष्ठसहितं स्वस्यान्तिकं वीक्ष्य स
प्रेम्णाऽऽपृच्छ्य च निरामयं गुणवति भ्रातर्यदोषं मनः ।
रात्रिं मे निलयं समावस बलैरादाय पूजां कृताम्
इत्युक्तो मुनिना निवस्तुमनघस्तत्रा करोत्संमतिम् ॥

வஸிஷ்ட முனியுடன் தன் ஸமீபம் வந்த பரதனை பரத்வாஜ முனிவர் பார்த்து, ஆரோக்கியத்தையும், நற்குணம் பெற்ற அண்ணனிடத்தில் குற்றமற்ற மனதையும் வினவி, "ஹே பரதா! நீ ஸைனியங்களுடன், என் விருந்தைப்பெற்றுக்கொண்டு, இன்றிரவில் என் ஆசிரமத்தில் இருக்கவேண்டும்" என்று உத்திரவு செய்யும் பொழுது, குற்றமற்ற பரதன் அவ்விதம் செய்ய ஸம்மதித்தான்.

९१ सेनाकुत्रतवाऽऽनयात्रनृपते द्राग्भोजयिष्यामिताम्
इत्युक्त्वा तपसांनिधिर्हुतभुजोगत्वागृहंप्राह्वयत् ।
त्वष्टारंगृहकर्मणेसमवितुं दिक्पालकान्भूमिगाः
व्योमस्थाश्चनदीस्सुराऽमृतमयी र्गन्धर्वदेवाङ्गनाः ॥

"ஹே பரதமஹாராஜனே! உன் ஸைனியம் எங்கே? அதை இவ்விடம் அழைத்து வரவேண்டும். சீக்கிரம் அதற்கு உணவளிக்க போகிறேன்" என்று சொல்லி தவத்திற்கு இருப்பிடமான பரத்வாஜ முனிவர் அக்னிஹோத்ர கிருஹம் சென்று வீடுகளை நிர்மாணம் செய்ய விச்வகர்மாவையும், ரக்ஷிப்பதற்காக திக்குபாலர்களையும், பூமியிலும், ஆகாயத்திலுமிருக்கும் கள்ளு, அமிர்தம் நிறைந்த நதிகளையும், கந்தர்வப்பெண்களையும், தேவப்பெண்களையும் வரும்படி கூப்பிட்டார்.

वासो भूषणपल्लवद्धनपतिर्यत्तद्वनंस्त्रीफलम्
सोमोऽन्नानिचतुर्विधंदिशतुमेमांसानिमाल्यानिच ।
शिक्षासुस्वरसंयुतं सुतपसासमाह्वयत्प्राङ्मुखः
तस्याऽऽसन्नभिवाञ्छितान्युपददुर्मूर्त्यापुरोदेवताः ॥

"வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் இலைகளாகவும், பெண்களைப் பழங்களாகவும்பெற்ற நந்தவனத்தைக் குபேரன் கொடுக்கவேண்டும். நான்குவிதமான உணவையும், மாம்ஸங்களையும், மாலைகளையும் ஸோமன் கொடுக்கவேண்டும்" என்று சிக்ஷையின் ஸ்வரத்தோடு கிழக்குமுகமாயிருந்து, பரத்வாஜ முனிவர் நற்றவத்தால் கூப்பிடும்பொழுது, தேவதைகள் அவர் முன்னிலையில் உருவத்துடன் வந்தார்கள். விரும்பினதைக் கொடுத்தார்கள்.

वायुस्सौख्यकरोववौ मलयजः पुष्पाण्यवर्षन्नखात्
देवैर्दुन्दुभिरभ्यहन्यतमुदा देवस्त्रियोऽनर्तिषुः
गन्धर्वाः प्रजगुस्स्वरान्प्रमुमुचुस्स्वर्वैणिकाभारती
सेनाव्यैक्षतविश्वकर्मविहितां चित्रां समृद्धिंमुनेः ॥

ஸுகத்தைக் கொடுக்கும் தென்றல் காற்று வீசினது. ஆகாயத்திலிருந்து தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். துந்துபி வாத்தியம் முழக்கினார்கள். தேவப்பெண்கள் ஸந்தோஷமாய் நர்த்தனம் செய்தார்கள். கந்தர்வர்கள் கானம் செய்தார்கள். சுவர்க்கத்தில் வீணை வாசிப்பவர்கள் ஸ்வரங்களைப் பாடினார்கள். பரதனுடைய ஸைனியம் விசுவகர்மா சிருஷ்டித்த ஆச்சரியமான பரத்வாஜ முனியின் பெருமையைப் பார்த்தது.

भूमिर्योजनपंचकावधितृणैर्वृद्धैस्समाच्छादिता
बिल्वास्तत्रकपित्थबीजपनसाश्चूताः फलैस्सन्नताः ।
कौबेरंवनमाजगाम तटजैर्युक्ताऽखिला पूरगा
शालावारणवाजिनां सुधवळप्रासदहर्म्याणि च ॥

பூமி ஐந்து யோஜனை தூரம் வளர்ந்த புற்களால் மறைக்கப் பெற்றது. அதில் பில்வம், விளா, மாதுளை, பிலா, மா, மரங்கள் பழங்களால் மிகவும் வணங்கி இருந்தன. குபேரனுடைய நந்தவனம் வந்தது. கரையில் முளைத்த மரங்களோடு எல்லா நதியும் வந்தது. யானை குதிரைகளின் கொட்டகைகளும், மிகவும் வெளுப்பான அரண்மனைகளும், உப்பரிகைகளும் இருந்தன.

राज्ञो वेश्म सुमाल्यगन्धरुचिरैर्दिव्यांबरैर्भूषणैः
युक्तंनिर्मलभाजनैस्ससचिवस्सन्देशतस्सन्मुनेः ।
आविश्याथनृपाऽऽसनव्यजनसच्छत्राण्यितंराजवत्
संपूज्यप्रणतिं विधायसचिवस्थानेन्यषीदत्प्रभुः ॥ २३५ ॥

நல்ல மாலைகளாலும் வாஸனைகளாலும் அலங்காரமும் நல்ல உடைகளோடும், ஆபரணங்களோடும், பளப்பளப்பான பாத்திரங்களோடும் கூடிய அரண்மனையில் பரதன் பரத்வாஜ முனிவரின் உத்திரவால் மந்திரிகளோடு பிரவேசித்து, பிறகு, விசிரி வெண்குடையோடு கூடிய ஸிம்மாஸனத்தை அரசனைப் பூஜிப்பதுபோல் பூஜித்து, வணங்கி, அரசனுயிருந்தும் மந்திரிகளின் இடத்தில் உட்கார்ந்தான்.

सर्वेमन्त्रिपुरोहितास्तमभितश्चाऽऽसन्स्रवन्त्यःक्षणात्
सर्वाः पायसकर्दमाउदभवन्रम्याऽऽलयास्तत्तटे ।
आजग्मुस्सुरयोषितः कमलभू वित्तेशसंप्रेषिताः
गन्धर्वाभरतस्यतस्यपुरतो गीतानिसम्यक्जगुः ॥

எல்லா மந்திரிகளும் புரோஹிதரும் அந்த பரதனுக்கு நான்கு புறமும் இருந்தார்கள். பாயஸங்களை சேராகபெற்ற எல்லா நதிகளும் பிரவஹித்தன. நதிகளின் கரைகளில் அழகான வீடுகளும் இருந்தன. பிரமனும், குபேரனும் அனுப்பப் பெற்ற தேவப்பெண்கள் வந்தார்கள். அந்த பரதன் முன்னிலையில் கந்தர்வர்கள் நன்முய் பாடினர்கள்.

नृत्यन्तिस्मसुराङ्गनास्समभवन्मार्दाङ्गिका बिल्वकाः
अश्वत्थाश्चसुनर्तकाव्यरचयन्तालाऽऽरवंभीतकाः ।
कुब्जावामनकास्ततश्चतिलका स्तालाक्षयेराज्ञया
जम्बूरामलकी सुजातिरभवत्सीमन्तिनी रूपिणी ॥

பிறகு பரத்வாஜ முனியின் உத்திரவால் தேவஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள், பில்வமரங்கள் மிருதங்கக் காரனாகவும் அரசமரங்கள் நட்டுவக்காரனாகவும் இருந்தார்கள். பீதகமரங்கள் தாளசப்தம் செய்தார்கள். திலகமரங்கள் கூனல் பெற்றதாகவும், பனைமரங்கள் குள்ளன்களாகவும், நாவைமரங்கள் நெல்லிமரங்கள் ஜாதிக்கொடி பெண்ணின் உருவம்பெற்றும் இருந்தன.

सुन्दर्योभरतस्यसैनिकगणान्प्राहुस्सुरापास्सुराम्
प्रीत्यैवामृतपायसंसुपिबतस्वाद्यानिभक्ष्याणिच ।
भक्ष्यन्तामतिमेध्यमांसनिचयाइत्येकमेकन्नरम्
सप्ताष्टौ च नदीतटे सुतिलजैरुच्छाद्यचास्नापयन् ॥

பெண்கள் பரதனுடைய ஸேனையிலிருப்பவர்களைப் பார்த்து "ஹே களகுடிப்பவர்களே! ஸந்தோஷமாகவே கள்ளைக் குடியுங்கள். ருசியான பக்ஷணங்களையும் மிகவும் பரிசுத்தமான மாமிசங்களையும் உண்ணுங்கள்" என்று சொன்னார்கள். ஒவ்வொரு புருஷனுக்கும் ஏழு எட்டு பெண்கள் கெங்கா நதிக்கரையில் நல்ல தைலங்களைத் தேயித்து ஸ்னனம் செய்வித்தார்கள்.

आतृप्तेरशनानि चापरिमितान्यप्याशयन्तान्पुनः
वाहान्वाहनपास्तथैवविधिवत्संचोदयन्तोनवाः
राज्ञो वाहनपो नवेदमुदितोमत्तोनिजंवाहनम्
तृप्तस्सैनिक आहनैवनगरंयास्यामिनाहंवनम् ॥

பெண்கள் புருஷர்களை அளவற்ற உணவுகளை போதுமென்ற திருப்திவரை உண்ணச்செய்தார்கள். அப்படியே வாஹனங்களை புதிதான அதன் காவலாளிகள் முறைப்படி எவிக்கொண்டு உணவை சாப்பிடச் செய்தார்கள். அரசனுடைய வேலைக்காரன் மதம் பெற்று, ஸந்தோஷத்தால் தன் வாஹனத்தைக்கூட தெரிந்துகொள்ளவில்லை. பரதனுடைய சைனியம் திருப்திய டைந்து "நாங்கள் நகரத்திற்கும் வனத்திற்கும் போகவே மாட்டோம் என்று கூறினார்கள்.

नाशुक्लाम्बरधृत्क्षुधाव्यसनितोदीनो मलोभारते
संहृष्टा अपचिन्तकास्सुमनसस्स्रग्भूषिताश्चानदन् ।
अन्नानां निचयान्रसालदधिभिः पूर्णान्ह्रदान्शर्करा
राशीर्वीक्ष्ययथाऽऽगतंसुरगणा जग्मुर्निशान्तेदिवं ॥

பரதனுடைய ஸைனியத்தில் அழுக்கர்டை தரித்து பசியால் வருந்தின ஏழை இருக்கவில்லை. எல்லோர்களும் அன்னக்குவியல்களையும் பாடம்பண்ணின மோரும் தயிரும் நிறைந்த மடுக்களையும் சர்க்கரைக்குவியல்களையும் பார்த்து ஸந்தோஷமடைந்து, கவலையற்றவர்வர்களாய் புஷ்பமாலைகளால் அலங்கரித்துக்கொண்டு நல்லமனதோடு சப்தித்தார்கள். காலையில், தேவர்கள், வந்ததுபோல் சுவர்க்கம் சென்றார்கள்.

९२ आतिथ्येन सुतर्पितस्सभरतो नत्वाहुताग्निंमुनिं
सर्वत्रप्रियमात्मनो बलवतस्तंभाषमाणोऽचिरं ।
अध्वानंप्रवदन्तमार्यवसतेर्मातॄस्समावेदयन्
जानंस्तद्वचनात्स्वमातृगुणितां सैन्यैःप्रतस्थेततः ॥ २४१॥

பரதன், விருந்தால் ஸந்தோஷமடைந்து, அக்னிஹோத்திரம் செய்தவரும், சீக்கிரம் அண்ணனுடைய இருப்பிடத்திற்கு வழியைத் தெரிவிக்கும் பரத்வாஜ முனியை நமஸ்கரித்து தனக்கும் ஸைனியங்களுக்கும் தங்களின் விருந்தில் எல்லாவற்றிலும் ஸந்தோஷத்தைச் சொல்லி, தாயார்களைத் தெரிவித்து அம்முனியின் வார்த்தையால் தன் தாயின் நற்குணத்தைத் தெரிந்துகொண்டு, ஸைனியங்களுடன் அவ்விடமிருந்து பிரயாணம் செய்தான்.

९३ कान्ताराणि महान्त्यतीत्य सबलैर्वन्यान्मृगान्द्रावयन्
अन्विष्याभित एत्यधूममतनुं प्रत्यागतान्दूरतः ।
निश्चित्यात्ररघूत्तमस्यवसतिं स्वस्थापयत्सैनिकान्
सन्द्रष्टुंसमना स्सुमन्त्रगुरुभिर्युक्तोद्रुतंराघवम् ॥ २४२ ॥

பரதன் பெரிய காடுகளைத் தாண்டி, ஸைனியங்களால் காட்டுமிருகங்களை விரட்டி நான்கு புறமும் தேடி, வெகுதூரத்தில் அதிக புகையைக்கண்டுத் திரும்பிவந்த ஸைனியங்களை, இவ்விடத்தில் இராமனுடைய இருப்பிடத்தை நிச்சயித்து தான் சுமந்திரன் வஸிஷ்டர் இவர்களோடு சீக்கிரம் இராமனைப் பார்க்க மனங்கொண்டு, இருக்கவைத்தான்.

९४ श्रीरामोगिरिकाननप्रियतमस्स्वस्याप्रियायामनः
संहर्षं गमयन्सुहृद्विरहतो राज्यच्युतेर्दुस्थितिं ।
संजातांविनिवारयन्ननृणतां तातस्यकुर्वन्प्रियम्
भ्रातुश्चित्रसुकूटपर्वतवनं सीतां समालोकयत् ॥२४३॥

மலைகளிலும் காடுகளிலும் ஸந்தோஷம் பெற்ற இராமன் தன் மனைவியின் மனதிற்கு ஸந்தோஷம் வரும்படியும், நண்பர்களை விட்டுப் பிரிந்ததாலும், கிடைத்த இராஜ்யம் அகன்றதாலும்,உண்டான துக்கத்தை அகற்றியும், பிதாவின் கடனை விலக்கியும் பரதனுக்கு இன்பத்தைச் செய்துகொண்டும், அழகிய சிகரங்களைப் பெற்ற சித்திரகூட மலையின்காடுகளை ஸீதைக்குக் காண்பித்தார்.

९५ निष्क्रम्यावनिभृत्तटात्शुभजलां मन्दाकिनींदर्शयन्
वैदेहीं तदघापनोदन जलेनित्यावगाहान्मुनीन् ।
पुष्पैस्तत्तटभूरुहां निपतितैस्सं भूषणैस्तादृशीम्
स्नानंत्रीरचयन्तया स्वनगरीं प्रीतो विसस्मारसः ॥

ராமன் மலையின் தாழ்வரையிலிருந்து வெளியில்வந்து கீழே விழுந்த, கரைமரங்களின் அலங்காரமான புஷ்பங்களால், சித்திரகூடமலைபோல் மனதிற்குப் பிரியமான, புண்ணிய ஜலம்பெற்ற கங்கையையும், பாபம் தீர்க்கும் அதின் ஜலத்தில் தினந்தோறும் ஸ்நானம் செய்யும் முனிவர்களையும், ஸீதைக்குக் காண்பித்து அவளுடன் கங்கையில் மூன்றுதடவை ஸ்நானம்செய்து, ஸந்தோஷமடைந்து தன் பட்டணத்தையும் மறந்தார்.

९६ मांसेनप्रियदेन सस्वदयितां संछन्दयन्राघवः
श्रुत्वा निस्स्वनमप्यवेक्ष्यगगनंसंछादयद्भूरजः ।
कोवाऽऽयातिचपश्य तं द्रुतमिति प्रोक्तेनसौमित्रिणा
दुष्टोहन्तुमिहैतिनोसनिहतस्स्यादित्यवाचिप्रभुः ॥

பிரியத்தைக்கொடுக்கும் மாம்ஸத்தால் தன் மனைவியை வசம் செய்துகொண்டிருக்கும் இராமன், மிருந்த சப்தத்தையும் கேட்டு, ஆகாயத்தை மறைக்கும் பூமியின் தூளியையும் பார்த்து "யார் வருகிறுன் சீக்கிரம் அவனைப் பார்" என்று சொல்லும் பொழுது இலக்ஷ்மணன் "நம் இருவர்களையும் கொல்லுவதற்காக அத்துஷ்டனை பரதன் இவ்விடம் வருகிறுன். அவனைக் கொன்றுவிடுவேன்" என்று அண்ணனிடம் கூறினன்.

९७ सौमित्रिः कुपितस्ससान्त्ववचनैरित्यभ्यधायिश्रियः
पत्याकोसलवल्लभेन भरतेचापेनखड्गेनाकिम् ।
कृत्वा सत्यवचः पितर्युपगतं हत्वाचतं भ्रातरम्
किंराज्येनच सापवादगतिना सर्वंभवद्भ्योवृणे ॥ २४६ ॥

கோபமடைந்த இலக்ஷ்மணனைப் பார்த்து, லக்ஷ்மியின் புருஷனும், கோஸலதேசத்தின் மன்னனுன இராமன், ஸமாதான வார்த்தையால் பதில் கூறுகிறுர். "பரதனிடத்தில் வில்லும் கத்தியும் எதற்காக வேண்டும். பிதாவினிடத்தில் வனவாஸம் செய்வதாக ஸத்தியம் கூறி, வந்த ஸஹோதரனையும் கொன்று, அபவாதத்துடன் இராஜ்யத்தை ஸம்பாதித்து, என்ன பலன்? உங்களின் பொருட்டே எல்லா நன்மையையும் விரும்புகிறேன்.

सत्येनाऽऽयुधमालभे मम मही नित्यं नसादुर्लभा
वांछेयंनकदाचनाऽप्यमरतां कृत्वातुकर्माशुभम् ।
त्यक्त्वाभ्रातृगणं सुखंयदपि मे तद्दह्यतां वह्निना
मन्येमेपुरमागतस्सभरतो मांद्रष्टुमभ्यागतः ॥ २४७ ॥

"எனக்கு எப்பொழுதும் பூமி கிடைப்பது அரிதல்ல; ஒரு காலத்திலும் கெட்ட காரியம் செய்து தேவபதவியையும் நான் பெற விரும்புவதில்லை. ஸஹோதரர்களை நீக்கிக்கிடைக்கும் என் சுகத்தை அக்கினி பொசுக்கவேண்டும், என்று ஆயுதத்தைத் தரித்து ஸத்தியம் செய்கிறேன் பட்டணத்திற்கு வந்த என் பரதன் என்னைப்பார்க்க எதிரில் வருகிறுன் என்று நினைக்கிறேன்."

कैकेयीं परुषैः प्रभर्त्स्य वचनैस्तातं प्रसाद्य प्रियम्
दातुंमेसमुपाऽऽगतस्समनसा नैवाऽऽचरेदप्रियम् ।
किंतेविप्रियमाचचारसपुरा तंयेनसंशंकसे
चेन्निन्द्येतयदा कदासभवता नैतत्सहेयक्रुधा ॥ २४८ ॥

"கைகேயியைக் கடுஞ்சொற்களால் அதட்டி, தந்தையையும் வேண்டிக்கொண்டு, இராஜ்யத்தை எனக்குக்கொடுக்க அப்பரதன் வந்திருக்கிறான். அவன் மனமறிய குற்றம் செய்யவே மாட்டான். ஹே இலக்ஷ்மண! நீ ஸந்தேஹமடையும்படி அவன் உனக்கு முன், என்ன குற்றம் செய்தான்? எப்பொழுதாவது நீ கோபத்தால் அவனை நிந்தித்தால் அதை நான் பொறுக்க மாட்டேன்."

राज्यंतेयदि वांछितं तदपितं सन्दापयाम्यद्यतत्
हन्युर्वापितरंसुता स्सुविपदि भ्राताऽथवा भ्रातरम् ।
इत्युक्तिंसनिशम्य चाऽऽर्यगदितां कोपान्निवृत्तोद्रुमात्
तूर्णंसोऽप्यवरुह्यलज्जितमना स्तस्थौसमीपेभृशम् ॥ २४९ ॥

"உனக்கு அந்த இராஜ்யத்தில் விருப்பமிருந்தால் அதையும் இப்பொழுது அவனைக் கொடுக்கச்செய்கிறேன். மிகுந்ததுன் பத்திலும் புத்திரர்கள் பிதாவையும் ஸஹோதரர்களும் ஒருவர்க்கொருவர் கொல்லுவார்களா?" என்று அண்ணன் உரைத்த மொழியைக்கேட்டு இலக்ஷ்மணன் கோபத்தை விலக்கி மரத்திலிருந்து சீக்கிரம் இறங்கி, மனதில் மிகவும் வெட்கமடைந்து ஸமீபத்திலிருந்தான்.

९८ आर्यान्वेषणतत्परो वनतले कुर्वन्पदाभ्यां गतिम्
रामस्येक्षणतो वनेचरततेर्धन्यत्वमन्तस्स्मरन् ।
अद्रेस्सालमुपेत्य रामसदन प्रद्योतकाग्निध्वजम्
दृष्ट्वाऽत्राऽऽर्यइति खदुर्भगजनेर्मत्वा मुमोहाथसः ॥

பரதன் அண்ணனைத் தேடவிரும்பி காட்டில் கால் நடையாக நடந்து, இராமனைப்பார்த்ததால் வேடர்களின் கூட்டத்தையும், புண்ணியம் செய்ததாக, மனதில் நினைத்து சித்திரகூடமலையின் தெக்குமரத்தில் ஏறி இராமனுடைய இருப்பிடத்தை வெளியிடும் புகையைப் பார்த்து, தன் பாபப் பிறவியால் இவ்விடத்தில் அண்ணனிருக்கிறார் என்று நினைத்து பிறகு மூர்ச்சையை அடைந்தான்.

९९ सन्दिश्यस्वगुरुंस्वमातृनयनेगच्छन्पुरस्सानुजः
दृष्ट्वापर्णकुटींतपोवनमपिभ्रातुश्चतत्पार्श्वयोः ।
काष्ठानि प्रविदारितानिकुसुमस्तोमंकरीषाऽऽवलिम्
शुष्कामग्निविभासकां सभरतश्चक्रेतदानिश्चयम् ॥

பரதன் தன் தாயார்களை அழைத்து வரும்படி தன் குருவை வேண்டிக்கொண்டு, தம்பியுடன் முன்னால் சென்று, அண்ணனுடைய குடிசையையும், தபோவனத்தையும் பார்த்து, அதின் பக்கங்களில் பிளந்தகட்டைகளையும்,புஷ்பங்களின் குவியல்களையும், தீ எரிக்கும் உலர்ந்த விராட்டிகளையும், பார்த்து அப்பொழுது நிச்சயம் செய்தான்.

वेद्यामग्निमिवार्चिषां निवसतिं प्रेक्ष्याऽऽर्यमस्यानुजं
तच्चीराजिनसज्जटाधरणतः क्लेशंमहान्तंवहन् ।
आर्येतिप्रलपन्चिरंसभरतस्तत्पादयुग्मेऽपतत्
रामस्तौ स्वकरेणनित्यदयितौ संश्लिष्यचाहर्षयत् ॥

யாகவேதியில் ஜ்வலிக்கும் அக்னிபோல், ஒளிகளுக்கு இருப்பிடமான அண்ணனையும், அவருடைய தம்பியையும், பரதன் பார்த்து, அவர்கள் மரவுரியையும், மான்தோலையும் நல்ல ஜடைகளையும் தரித்ததால் அதிக துக்கமடைந்து, அண்ணா! வென்று வெகுகாலம் புலம்பி, அவருடைய இரண்டு திருவடிகளிலும் நமஸ்கரித்தான். எப்பொழுதும் நண்பர்களான அப் பரத சத்ருக்னர்களைத் தன் கையால் கட்டிக்கொண்டும், இராமன் ஸந்தோஷமடைவித்தார்.

१०० प्रेक्ष्यस्वप्रातिबिंबवान्निपतितंतंभ्रातरंमूर्धनि
स्वाघ्रायांकमथाधिरोप्यसुचिरंभक्तंचिरेणांक्षितम् ।
रामः पार्थिवनीतिमप्यतिदुरावेद्यां भृशंवेदयन्
कान्ताराऽऽगतिकारणंसकृपयातंपर्यपृच्छन्मुदा ॥

இராமன் தன் நிழல்போல் நமஸ்கரித்த, வெகு காலத்தில் பார்த்த, நண்பன் ஸஹோதரனுமான பரதனைப் பார்த்து பிறகு உச்சிமுகர்ந்து, வெகுகாலம் மடியில் வைத்து, மிகவும் அறிவதற்கு அரிதான இராஜநீதியை நன்றாய் அறிவித்து, தயவினால், வனம் வந்த காரணத்தை, ஸந்தோஷமாய் வினவினார்.

तातः कुत्रगतोभवानुपगतो यत्काननं जीववान्
सस्याद्यद्यधुनानचार्हसिवनंगन्तुंपितुर्वाञ्छितः ।
कच्चित्सौम्यनचाधिराज्यमाहितैर्बालस्यतेऽभ्याहृतं
कच्चित्सत्यपराक्रमंस्वपितरंशुश्रूषसेसौम्यतम् ॥

"சந்திரன் போல் இன்பமளிக்கும் ஹே பரதா! நீ வனம் வந்ததால் பிதா எங்கு சென்றார், அவர் பிழைத்திருந்தால் அவருக்கு இஷ்டமான நீ, வனத்திற்கு இப்பொழுது வரமாட்டாய். சிறுவனான உன்னுடைய இராஜ்யத்தைப் பகைவர்கள் கைப்பற்றாமலிருக்கிறார்களா? ஸத்தியத்தையுப் பலமாகப்பெற்ற தன் பிதாவிற்கு ஹே பரதா! பணிவிடை செய்கிறாயா?"

कच्चिद्राजमखाश्वमेधहवनान्यप्याहरद्भूपतिः
विद्वान्धर्मरतोद्विजःकुलगुरुःकच्चिद्भृशं पूज्यते ।
कच्चित्तेदयितः पुरोहितवरःकिंसत्कृतैरर्च्यते
कौसल्या चसुमित्रयाऽपिसुखिनी किंकैकयीनन्दति ॥

"அரசன் இராஜஸூயம் அசுவமேதவேள்விகளைச்செய்தாரா? தர்மத்தில் ஆசைபெற்ற வித்வானும் குலகுருவும் பிராமணனுமான வஸிஷ்டர் மிகவும் பூஜை அடைகிறாரா? இஷ்டமான உன் புரோஹிதர்மரியாதைப் பெறுகிறாரா. கௌஸல்யையும் சுமித்திரையுடன் சுகமாயிருக்கிறாளா? கைகேயி ஸந்தோஷிக்கிறாளா?"

कच्चित्ते विदितेङ्गिता मतियुताश्शूराः कृतामन्त्रिणः
मन्त्रस्तत्कृत आशु ते विजयकृत्किंसंवृतो राघव ।
किंकालेप्रविबुध्यसे विगतसान्निद्रोऽर्थतन्त्रंमहत्
कच्चित्चिन्तयसि प्रभातसमयेनैकोऽप्यनेकैर्नच ॥

"ரகுவம்சத்தில் பிறந்த ஹே பரதா! இங்கிதமறிந்து, புத்தியும், பலமும் பெற்ற மந்திரிகளை நீ பெற்றிருக்கிறாயா? அவர் யோஜித்த மந்திரம் மறைவாயிருந்து, உனக்கு சீக்கிரம் வெற்றி கொடுக்கிறதா? தூக்கத்தைத் துறந்து, ஸமயத்தில் விழிக்கிறாயா? விரிவான நீதி சாஸ்திரத்தை விடியற்காலையில் நினைக்கிறாயா? ஒருவனாகவும், வெகுஜனங்களுடனும் நீதியை நினைக்காமலிருக்கிறாயா?"

मन्त्रस्तेमतिमन्त्रयाति विषयं किंमन्त्रितस्सर्वदा
त्वर्थंवाऽऽरभसेद्रुतं बहुफलं किंस्वल्पमूलान्वितम् ।
किंकर्माणि विदुः कृतान्यवनिपा नित्यंनपूर्वंचते
त्यक्त्वा मूर्खसहस्रमप्याभिमतं किंपण्डितंवाञ्छसि ॥

"புத்திசாலியான ஹே பரதா! நீ ஆலோசித்த மந்திரத்தை ஜனங்கள் எப்பொழுதும் அறியாமலிக்கிறார்களா? அல்பகாரணமும், மிகுந்த பலமும் பெற்ற காரியத்தைச் சீக்கிரம் ஆரம்பிக்கிறாயா? சுற்றத்தரசர்கள் எப்பொழுதும் நீ செய்த காரியம் முடிந்ததற்கு பிறகு அறிகிறார்களா? அதன் முன் அறியாமலுமிருக்கிறார்களா? ஆயிரம் மூடர்களைத்தள்ளி, ஒரு பண்டிதனை இஷ்டமாக விரும்புகிறாயா?"

किंभृत्याश्चयथाऽर्हमेवमहतिव्यापार आयोजिताः
दण्डोद्वेजितसुप्रजास्सुमतिभिः किंवार्यसेमान्त्रिभिः ।
शूरंदूषकमप्युपायकुशलंकिंहन्सि राज्यार्थिनम्
सेनानीः कुलजोऽयमंगरचितोधीरोऽतिशूरश्शुचिः ॥

"பெரியகாரியங்களில் அந்தந்த காரியங்களுக்குத் தகுந்தபடி வேலைக்காரர்களை நியமிக்கிறாயா? நீ ஸாது ஜனங்களை சிக்ஷை பால[illegible]ம்படி செய்யும்பொழுது, புத்திசாலிகளான மந்திரிகள் உன்னைத் தடுக்கிறார்களா? ஸாமதான, பேத தண்டம் முதலிய உபாயங்களில் நிபுணனும், பலசாலியும், அந்தரங்கப னுஷ்யர்களை தூஷிக்கும் இராஜ்யம் விரும்புகிறவனை வதம் செய்கிறாயா? ஹே பரதா! நற்குலத்தில் பிறந்தவனும், கபட மற்றவனும், தைரியமும் பலமும் பெற்ற ஸேனைத்தலைவனைப் பெற்றிருக்கிறாயா?"

किंयोधाः प्रणयानुषक्तहृदयास्स्वस्वामिकार्येऽप्यसून्
युञ्जन्तितद्दीयवेतनमपि प्रादायिलंबंविना ।
कच्चिज्जानपदस्त्वया विरचितोदूतोयथोक्तंवदन्
शत्रूनप्यतिदुर्बलान्हतरिपोत्वंनावजानासि किं ॥

"மனதில் அன்புபெற்று தன் எஜமானனுடைய கார்யத்திற்காக தன் பிராணன்களையும் தத்தம் செய்யும் போர்வீரர்களுக்கு தாமதமன்னியில் அவர்களின் சம்பளத்தைக் கொடுத்தாயா? தன் தேசத்தில் பிறந்த சொன்னபடி சொல்லும் தூதனைப் பெற்றிருக்கிறாயா? சத்துருக்களை ஸம்ஹரிப்பவனே! மிகவும் பலமில்லாத சத்துருக்களையும் அவமதிக்காமலிருக்கிறாயா?"

कच्चिद्दुर्मतवत्सला नसुजनान्तान्तातनासेवसे
वीरैरध्युषितां चिरंकिमवसिस्त्वां सत्यनामांपुरीं ।
स्फीतोमेखलिभिर्युतो जनपदस्सौख्यंगतः किंमहत्
लोकास्त्वन्नगरस्थिताः किमविताराज्ञात्वयाधर्मतः ॥

"ஹே குழந்தாய், தூர்மதங்களில் அன்புபெற்ற துஷ்டர்களை நீ அனுஸரிக்காமலிருக்கிறாயா? வெகுகாலமாக பலசாலிகள் இருந்ததால் பிறர் யுத்தம் செய்து பிரவேசிக்கமுடியாதென்று உண்மை பெயர் பெற்ற நமது அயோத்தியா நகரத்தைக் காப்பாற்றுகிறாயா? ஐந்து லோகங்களுக்கும் இருப்பிடமான செழித்த நமது கோஸலநாடு மிகுந்த சுகம் பெற்றிருக்கிறதா? அரசனான நீ தர்மவழியில் இருந்து, உன் நகரவாஸி ஜனங்களைக் காப்பாற்றுகிறாயா?"

कच्चित्सांत्वयसिस्त्रियःकिमवसिप्रश्रद्धासित्विमाः
नैतागुह्यंवचो ब्रवीषिकरिणां किंगुप्यते काननम् ।
तृप्तिंनाप्ययसे सदा गणिकया किंकुञ्जरैर्वाजिभिः
कच्चिद्दर्शयसेनृणां निजतनुंपूर्वाह्णएवाऽऽसने ॥ २६१ ॥

"பெண்களை ஸமாதானம் செய்கிறாயா? அவர்களைக் காப்பாற்றுகிறாயா? அவர்களின் வார்த்தையை நம்பாமலிருக்கிறாயா? ரஹஸ்ய வார்த்தையை அவர்களிடம் சொல்லாமலிருக்கிறாயா? யானைகளின் காட்டைக் காப்பாற்றுகிறாயா? தாஸிகள், யானைகள், குதிரைகள் இவைகளில் எப்பொழும் போதும் என்ற திருப்தி அடையாமலிருக்கிறாயா? காலையில் ஸிம்ஹாஸனத்திலிருந்தே தன்னைப் பார்க்கும்படி ஜனங்களைச் செய்கிறாயா?"

प्रत्यक्षानविशंकयातुभवतस्सर्वेऽपिकर्मान्तिकाः
उत्सृष्टा नपुनस्त्वयाऽनुदिवसंकिंस्थीयतेमध्यतः ।
किंदुर्गाणिनिरन्तराणि धनतोधान्यैर्जलैरायुधैः
यन्त्रैश्शिल्पिधनुर्धरै स्समधिकस्त्वायोव्ययोऽल्पश्चाकिं ॥

"எல்லா வேலைக்காரர்களும், எப்பொழும் பயந்துகொண்டு உனக்கு எதிரில் வராமலும், வந்து கொண்டும் இல்லாமல், நடுத்தரமாக (தேவை இருக்கும்பொழுது) வருகிறார்களா? சுரங்கங்களில் பொருள், தானியங்கள், ஜலம், ஆயுதங்கள், யந்திரங்கள், ஸில்பிகள், வில்லாளிகள் நிறைந்திருக்கிறார்களா? வருமானம் அதிகமாகவும், ஸெலவு சுருக்கமாகவும் இருக்கிறதா?"

नापात्रेव्ययमेतिराघवनतेकोशः कदाचिद्द्विजे
पित्रभ्यागतयोधमित्रनिकरैर्दैवेच कच्चिद्व्ययः ।
आर्यः किंनचवध्यते मुषितकृत्सत्यंह्यपृष्ट्वाबलात्
किंप्राप्तोनाविमुच्यते धनधिया चोरोऽपिधीरस्त्वया ॥

"ரகுவம்சத்தில் பிறந்த ஹே பரதா! உன் கஜானுப் பொருள் ஒருகாலத்திலும் துஷ்டர்களிடத்தில் செலவாகாமலிருக்கிறதா? உன் பொருள், பிராமணர்கள், பித்ருக்கள், விருந்தாளிகள், போர் வீரர்கள், அன்பர்கள் இவர்களின் கூட்டத்தில் செலவாகிறதா? ஹே தைரியம் பெற்றவனே! உண்மை விசாரிக்காமல், பொருள் கிடைக்குமென்ற புத்தியால் ஸாதுவைத் திருடனென்று கொல்லாமலும், திருடின திருடனை பலாத்காரமாக கையில் பிடித்தும், வெளியில் விடாமலுமிருக்கிறாயா?"

कच्चिद्दुर्गतवित्तवद्विरचितेत्वन्मन्त्रिणःकर्मणि
त्यक्त्वाद्रव्यमतिंयथाऽर्थसरणिंपश्यन्ति किंनिस्पृहाः।
निर्हेतुव्यथिताजना अपधनास्स्वास्रैस्सुखङ्गायितैः
राज्ञोघ्नन्तिसुतान्पशून्चाभिषजंकिंमोदयस्यादरात् ॥

"ஏழைகளும் தனிகர்களும் செய்யும் வ்யவஹாரத்தில், உன் மந்திரிகள், பொருளில் புத்தியைவிடாமல் ஆசையற்று, உண்மை வழியை அறிகிறார்களா? காரணமில்லாமல் துன்பம் பெற்ற ஏழை ஜனங்கள், கத்திபோன்ற தன் கண் ஜலங்களால், அரசனுடைய புத்திரர்களையும், பசுக்களையும் கொல்லுகிறார்கள். வைத்தியர்களை அன்போடு ஸந்தோஷமடைவிக்கிறாயா?"

कच्चिद्वृद्धतमान्नमस्यसिगुरून्चैत्यान्चसद्ब्राह्मणान्
धर्मार्थौ नचबाधसेऽन्यतरगः काच्चिद्विभज्याखिलान्।
कामंवावरदाश्नुषेद्विजवरास्तेप्राज्ञशर्मान्वहम्
किंकांक्षन्तिसदापुरेजनपदेदूरीकरोषिक्रुधम् ॥

"வரங்கொடுக்கும் ஹே புத்திசாலியே! பெரியோர்களையும், குரு ஜனங்களையும், தெய்வங்கள் வசிக்குமிடங்களையும், உத்தம பிராமணர்களையும் நமஸ்கரிக்கிறாயா? தர்மம், அர்த்தம், காமம் இவைகளில் ஒன்றைக் கைப்பற்றி, ஒன்றை விடாமல் எல்லாவற்றையும் பிரித்து, ஸமயப்போல் அவைகளை அடைகிறாயா? பிராமணர்கள் பட்டணத்திலும், நாட்டிலும் உன் க்ஷேமத்தை விரும்புகிறார்களா? கோபத்தை அகற்றுகிறாயா?"

किंवेदास्सफलीकृताः क्रतुकृतैर्भोगेनदानैर्धनम्
दारास्तैरतिसत्सुतैश्श्रुतमपिप्राग्र्येचणशीलेनाकिं ।
यद्वृत्तिः प्रपितामहेचजनकेपथ्यां विधत्सेचतां
राजादण्डधरः प्रजाश्चसमवन्स्वर्गंययाप्राप्स्यति ॥

"(படித்த) வேதங்களை (அதில் கூறிய) வேள்விகளைச் செய்வதாலும், பொருள்களை தான் அனுபவித்தல், தானம் கொடுத்தல் இவைகளாலும், மனைவிகளை சுகபோகம் நற்புத்திரனைப் பெறுதல் இவைகளாலும், சாஸ்திரங்களை நன்னடைகளாலும், ஹே பரதா! நீ பயனடைவிக்கிறாயா? ஜனங்களையும் தண்டித்து, துர்மார்க்கத்திலிருந்துக் காப்பாற்றிய அரசர்களை, நல்லுலகம் அடைவிக்கும் நமது தந்தையும், பாட்டனாருடைய தந்தையும், நடத்திவந்ததும், நல்வழியிலிருந்து தவறாததுமான நற்செய்கையை, நீயும் நடத்தி வருகிறாயா?"

रामंप्रत्यवदत्सशोकभरतो राजत्वहीनस्यमे
किंकुर्याद्वनीभृतामभिमतोधर्मस्स्थितेज्यायसि ।
भ्रातुर्नैवकनीयसो नृपपदंचागच्छराज्यंनिजं
क्षेमायाऽऽत्मकुलस्यभूमिपतितादैवाऽऽत्मिकादुर्लभा ॥

பரதன் வருந்தி இராமனைப்பார்த்து பதில் கூறினான். "அரசனாக இல்லாத எனக்கு இராஜதர்மம் என்ன பயனளிக்கும்? அண்ணனிருக்கும்பொழுது, தம்பிக்கு இராஜபட்டமே இல்லை. தன் குலத்தின் க்ஷேமத்திற்காக, தாங்கள் தன் இராஜ்யத்திற்கு வரவேண்டும். தெய்வத்தின் உருவமான இராஜபட்டம் கிடைப்பது அரிது."

प्राप्तेकाननकेकयौत्वयिमयिस्वर्लोकमापप्रभुः
त्वांसंचिन्त्यससोदरावनिसुतंतातायदातुंजलम् ।
उत्तिष्ठाऽऽर्यसुदत्ततैलसलिलावावां प्रियस्त्वंपितुः
दत्तंयद्भवता परेतभुवनेस्वक्षय्यमाहुर्बुधाः ॥ २६८

"ஹே அண்ணா! தாங்கள் வனத்திற்கும், நான் கேகயதேசத்திற்கும் சென்றபொழுது, இலக்ஷ்மணன் ஸீதையுடன் தங்களை நினைத்து தந்தை ஸ்வர்க்கம் சென்றார். தந்தைக்குத் தர்ப்பணம் செய்ய தாங்கள் எழுந்திருக்கவேண்டும். நாங்கள் இருவர்களும் தர்ப்பணம் செய்துவிட்டோம். தாங்கள் தகப்பனாருக்கு பிரியமானதால், தாங்கள் கொடுக்கும் திலோதகமே பரலோகத்தில் அழிவற்றதென்று பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்."

१०२ श्रुत्वाभारतभारतींरघुवरश्शोकंमहान्तंगतः
गङ्गां प्राप्यससोदरोवनितयापित्रेप्रदायांबुना ।
पिण्याकेननवैङ्गुदेनबदरीमिश्रेणापिण्डान्रुदन्
सप्राप्याऽऽलयमागतान्पुरजनान्प्राहर्षयद्भ्रातृवत् ॥

இராமன் பரதனுடைய மொழியைக்கேட்டு, அதிக துக்கமடைந்து, இலக்ஷ்மண ஸீதைகளுடன் கங்கையை அடைந்து அழுதுகொண்டு, தகப்பனாரின் பொருட்டு தர்ப்பண திலோதகத்தோடு, இலந்தைக்கனியுடன் கூடிய புதிய இலுப்பப்புண்ணாக்கினால் பிண்டங்களைக் கொடுத்து, தன் இருப்பிடம் வந்து, தன்னிடம் வந்த பட்டணத்தின் ஜனங்களை, ஸஹோதரர்களைப்போல் ஸந்தோஷமடைவித்தார்.

१०३ आनीतागुरुणा नृपस्यदयिता गङ्गातटेचार्पितं
पिण्डंवीक्ष्यरघूत्तमेन विपुलंशोकंगताराघवम् ।
सौमित्रिं चसमीक्ष्यमैथिलसुतांतैर्वन्दितारराघवे
कैकेयीतनयेकृतस्वनयनानद्राक्षुरार्यान्जनान् ॥ २७० ॥

குருவான வஸிஷ்டரால் அழைத்துவரப்பெற்ற அரசனுடைய மனைவிகள், கங்கைக்கரையில் இராமன் பிண்டப்பிரதானம் செய்த இலுப்பப்புண்ணாக்கைப்பார்த்து, அதிக துக்கமடைந்து, ஸீதா, ராம, லக்ஷ்மணர்களைப்பார்த்து, அவர்களால் நமஸ்கரிக்கப் பெற்று, இராமனிடத்திலும், பரதனிடத்திலும் தன் கண்களைச் செலுத்திய பெரியோர்களையும், ஜனங்களையும் பார்த்தார்கள்.

१०४ हित्वा राज्यमिहाऽऽगतोऽसिजटिलश्चीराजिनाऽऽच्छादितः
किंवीरेतिरघूत्तमेन भरतः प्रोक्तोगृहीतांजलिः ।
प्राहाऽऽर्यंपरिवर्ज्यते जनयिता प्राप्तस्सलोकान्तरम्
मातामेचिरदुःखमेत्विदमहं संप्रार्थयामीप्सितम् ॥

தலையில் சடைகளையும், இடுப்பில்மரையுருவி, மாந்தோல்களையும் தரித்துக்கொண்டு "ஹே வீரா! இராஜ்யத்தைவிட்டு இவ்விடம் ஏன் வந்தாய்" என்று இராமன் வினவும்பொழுது, பரதன் கும்பிட்டுக்கொண்டு அண்ணனைப்பார்த்துச் சொன்னான். "தந்தைத் தங்களை பட்டணத்தைவிட்டு விலக்கி பரலோகம் சென்றார். என் தாயார் வெகுகாலம் துக்கமடையவேண்டும். சொல்லப்போகிற என் விருப்பத்தைச் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்."

राज्यं प्राप्नुहिमन्त्रिभिः पुरजनैस्संप्रार्थितोऽस्यात्मना
श्रुत्वेतिप्रियभारतीं भरतगां रामोऽब्रवीद्भ्रातरम् ।
दोषोनत्वयिजातुतेचजननीनार्हत्यसौगर्हणां
पुत्रेषुव्यसनंसुखं वितरितुंस्यात्कामकारोगुरोः ॥

"மந்திரிகளும், பட்டணத்தின் ஜனங்களும், நானும் வேண்டுகிறபடியால், தாங்கள் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று பரதனுடைய அன்புமொழியைக்கேட்டு, பரதனைப் பார்த்து இராமன் பதில் உரைத்தார். "ஒரு காலத்திலும் உன்னிடமும் குற்றமில்லை. உன் தாயாரையும் நிந்திக்கக்கூடாது. புத்திரர்களுக்கு துக்கத்தையும், சுகத்தையும் கொடுப்பதற்கு தந்தையின் விருப்பமே காரணமாகும்."

तातेगौरवमास्तियद्विधिमतंमातर्यपीदंध्रुवम्
गच्छारण्यमितिद्वयस्यचगुरोराज्ञाकथंवाऽन्यथा ।
कर्तव्या प्रविजानतापितृवचस्सर्वेश्वरस्येप्सितम्
हित्वातात्त्रिजगत्पातित्वमधुनानाहंवृणेप्रार्थितं ॥

"சாஸ்திர ஸம்மதமான தந்தையின் கௌரவம் தாயாரிடமு முண்டு. நிச்சயம். காட்டிற்குப்போகவேண்டுமென்று, அவ்விரு வர்களின் உத்திரவைத் தெரிந்தவன் எவ்விதம் தள்ளிவிடுவான். தாய், தந்தைகளின் உத்திரவு ஸர்வேசுவரனுடைய ஸம்மதம். அதை மீறி, வேண்டப்பெற்ற மூவ்வுலகங்களுக்கும் அரசனுயிரு த்தலேயும், இப்பொழுது நான் வேண்டவில்லை."

१०५ मातामेकृतसांत्वनायदपिमेतुभ्यं प्रदत्तंमया
राज्यंरक्षितुमप्यशक्तिरितितां श्रुत्वागिरंभारतीम् ।
तत्वार्थप्रविबोधनेनगमयन्दूरेशुचंचामिताम्
रामः प्राहससोदरंपटुमतिस्संग्राहयन्स्वांगिरं ॥

"என் தாயாரையும் ஸமாதானம் செய்தேன். என்னுடைய இராஜ்யத்தைத் தங்களுக்கு நான் கொடுக்கிறேன். இராஜ்யத் தை ரக்ஷிக்கவும் எனக்கு சக்தி இல்லை" என்று பரதனுடைய வார்த்தையைக்கேட்டு புத்திசாலியான இராமன், உண்மை ஸமா சாரத்தை அறிவித்தலால், தன் வார்த்தையை அங்கீகரிக்கச் செய்து, தம்பியையும், அவனுடைய அளவற்ற துக்கத்தையும் தூரத்தில் போகும்படி தம்பியைப் பார்த்துக் கூறினர்.

जन्तुस्स्वष्टवशंवदोनकुशलःकर्मण्ययंस्वेप्सिते
रोगाद्वार्धकतो मृतेरपिभयंसर्वस्य चावारितम् ।
स्वीयाऽऽयुःक्षयएवशोकविषयोगच्छन्तितेवासराः
नातीतस्तु पुनस्समेष्यति जरायावन्नवांछयंसुखम् ॥

"ஹே பரதா! பிராணிகள் எல்லோர்களும் கடவுளுக்கு சுவா தீனம். தான்விரும்பிய காரியத்தைச் செய்வதற்கு திறமையற் றவர்கள் பிணியிலிருந்தும், கிழத்தனத்திலிருந்தும், மரணத்திலி ருந்தும் பயம் எல்லோர்களுக்கும் விலக்கமுடியாது. தன் ஆயு ளின் முடிவைப்பற்றியே துக்கமடையவேண்டும். நாட்கள் செல்கின்றன. சென்றநாளோ மறுபடியும் திரும்புகிறதில்லை. உனக்கு கிழத்தனம் வருவதற்குள், சுகத்தை விரும்பவேண்டும்.',

संयोगोऽपिवियोजनंविधिकृतंकाष्ठद्वयस्याम्बुधौ
वातेनैवभवेन्नृणामितरथा कर्तुन्नतच्छौर्यवान् ।
एकोऽपीहयमाप्नुवन्चपितरस्सब्रह्मभूयंगतः
दीर्घाऽऽयुर्जनकोनशोकविषयोमद्वच्चतैर्विद्धिरम् ॥

"ஸமுத்திரத்தில் இரண்டு கட்டைகள் சேருவதும்,பிரிவதும் காற்றால்போல், ஸம்ஸாரத்தில் மனிதர்களுக்கும் அவைகள் கடவுளால் ஏற்படுகின்றன. அவைகளை வேறு விதமாகச் செய்வதற்கு ஒருவருக்கும் திறமைஇல்லை. முன்னோர்கள் அடைந்த பிரம்ம பதத்தை தீர்க்காயுளைப்பெற்ற நமது தந்தையும் அடைந்திருப்பதால், அவரைப்பற்றி துக்கமடையக்கூடாது அவருடைய உத்திரவை நான் செய்வதுபோல் நீயும் செய்யவேண்டியது"

१०६ आर्यं प्राहतमार्यशीलभरतःकोवाभवेत्त्वादृशः
यस्यप्रीतिकरंनसौख्यमसुखंक्लेशाऽऽकरंनाभवत् ।
त्वत्क्लेशंनसहेयमय्यधिगतेदेशान्तरंयत्कृतम्
मात्रापापमपापनत्वभिमतंमेऽद्यप्रसीदप्रभो ॥ २७७ ॥

நன்னடைபெற்ற பரதன் அண்ணனைப் பார்த்து பதில் கூறினான். "ஹே அண்ணா! தங்களுக்கு சுகம் சுகத்தையும் துக்கம் துக்கத்தையும் கொடுக்காததால் தங்களைப்போல் யார் இருப்பார்கள்? தங்களின் துக்கத்தை நான் பொறுக்கமாட்டேன். ஹே பாப மற்றவனே! நான் அயலூர் சென்ற பொழுது என் தாயார் செய்த தீங்கு எனக்கு ஸம்மதமில்லை. ஹே பிரபுவே!இப்பொழுது எனக்குத் தாங்கள் அருள் புரியவேண்டும்."

दण्डयां दण्डयितुं स्वमातरमहं धर्मेणबद्धोऽप्रभुः
तातंनिन्दितुमप्यमर्त्यगृहगंतातस्यजीवव्यये ।
बुद्धिस्सत्पथतश्च्युता विरचितंधर्मप्रमादं प्रियः
त्वंप्रत्याहरराज्यपालनकृतेमांपापतः पाहितौ ॥ २७८ ॥

" தண்டிக்கத்தகுந்த தாயாரைத் தண்டிக்கவும், சுவர்க்கம் சென்ற தந்தையை நிந்திக்கவும், தர்மத்திலிருந்து பயந்தஎனக்கு முடியவில்லை. இறக்கும் ஸமயத்தில் தந்தையின் புத்திகலங்கிவழியி லிருந்து தவறினாலும், [illegible] நடந்ததை அவருக்கு அப்பனை [illegible] ந்தை ஆளுவதால் தாய் தந்தையர்களையும், என்னையும் பாபத்திலிருந்துபாதுகாக்க வேண்டும்."

याचेत्वांशिरसा प्रणम्यकरुणां मय्याऽऽर्यसंवर्धय
त्वंचेद्यास्यसिमां विहाय विपिनंयास्यामि साकंत्वया
इत्युक्तौ चसहोदरस्यसुदृढां रामस्यदृष्ट्वाधियं
पौरः प्रापजनस्समंनिरवधिहर्षमहत्संकटम् ॥ २७९ ॥

"ஹே அண்ணு! தங்களைத் தலையால் வணங்கி, வேண்டு கிறேன். என்னிடம் அதிகமாய் கருணை புரியவேண்டும். தா ங்கள் என்னைவிட்டு காட்டிற்குப் போவதானல், தங்களுடன், நானும் வருவேன்" என்று ஸஹோதரன் சொல்லியும், இராம னுடைய புத்தி வனவாஸத்தில் திடமாய் இருப்பதைப் பார்த்து, பட்டணத்தின் ஜனங்கள் அளவற்ற ஸந்தோஷத்தையும், அதிக துக்கத்தையும் ஸமமாக அடைந்தார்கள்.

१०७ रामोभ्रातरमाहबन्धुसदसित्वन्मातरंतूद्वहन्
त्वन्मातामह एव तेनृपपदंयुद्धेचदैवासुरे ।
त्वन्मातर्यपिमद्वनाभिगमनंप्रादाद्गिराऽस्मपिता
तंसंमोचयितुंत्वृणाद्धापिवभ्रात्रासहक्ष्मामव ॥ २८० ॥

இராமன் பந்துக்களுடைய ஸபையில் பரதனைப் பார்த்து, "உன் தாயாரை எமது தகப்பனர் விவாஹம் செய்துகொள்ளும் பொழுது உன் மாதாமஹர் (பாட்டனர்) இடத்திலும், தேவாசுரர் களின் யுத்தத்தில் உன் தாயாரிடத்திலும், உனது பட்டாபிஷேக த்தையும் எனது வனவாஸத்தையும், வாக்கினல் கூறினர். அவ ரைக் கடனிலிருந்து விடும்படி செய்வதற்காக, என்போல் நீயும் தம்பியோடு தரணியை ஆளவேண்டும்" என்று கூறினர்.

१०८ चार्वाकस्यमतंसमेत्यरहितंधर्मेणजाबालिना
रामोऽवाचिनिरर्थिकामातिरियंमा भूत्तवाप्यज्ञवत् ।
मातातातइतिस्मृतिः प्रवसतो विश्रान्तिशालेवसा
भोगायक्षणमेवनत्वथततः किन्निर्गतश्चिन्तयेत् ॥ २८१॥

தர்மமில்லாத சார்வாகமதத்தை அனுஸரித்து ஜாபாலி முனிவர் இராமனைப் பார்த்துக்கூறினர். "தாயார் தகப்பனார் என்று இந்த வீண் புத்தி முட்டாளுக்கு இருப்பதுபோல், ஹே ராமா! உனக்கு வேண்டாம். அயலூர் போகிறவனுக்குத் தங்குமிடம் போல், மனிதர்களுக்குத் தாய் தந்தை என்ற நினைவுக்ஷணநேரம் சுகமனுபவிக்கும் பொருட்டே. பிறகு கிடையாது. அதைவிட்டு, வெளியில் வந்தவன் அந்த தங்குமிடத்தை நினைக்கிருனு?"

सौख्यं भुंक्ष्वसमेत्यराज्यमतनुक्लेशान्निवासाद्वने
किंलोकान्तरगस्यतेपितुरभूत्संप्रीणनेनात्रचेत ।
प्रीतिस्स्वर्गगतस्य गन्तुरभितोमातस्यपाथेयकम्
बन्धुः कस्यचकः पितृप्रियकृतिर्भुक्तेर्व्ययायैवसा॥

"ஹே இராமா! இராஜ்யத்தை அடைந்து சுகமனுபவிக்கவேண்டும். அதிக கஷ்டத்தைக் கொடுக்கும் உன்னுடைய வனவாஸத்தால் பரலோகம் சென்ற பிதாவிற்கு என்ன ஏற்படுகிறது. இவ்விடத்தில் ஸந்தோஷம் செய்வதால், சுவர்க்கம் சென்றவருக்கு ஸந்தோஷமிருந்தால், நான்கு புறமும் செல்கிறவனுக்குகட்டுசாதம் வேண்டாம். யாருக்கு யார் பந்து? பித்ருக்களின் ஸந்தோஷத்திற்காக சிரார்த்தம் செய்வது, சாதத்தின் செலவின் பொருட்டே."

१०९ जाबालेर्वचनंविधर्मपथगं श्रुत्वाऽब्रवीद्राघवः
यन्मेप्रीतिकृतेसमात्थवचनंतन्निन्दितंसाधुभिः ।
चारित्रंपुरुषस्यवेदयतितान्तस्यागुणान्सद्गुणान्
कोवामां बहुमंस्यतीहसुमतिस्त्वत्प्रोक्तदुर्वृत्तकम् ॥

அதர் மார்க்கத்தை அனுஸரிக்க ஜாபாலியின் வார்த்தையைக்கேட்டு, இராமன் பதில் உரைத்தார். "என்னைத் தோஷத்திற்[illegible] நீர் சொன்ன வார்த்தை ஸாதுக்கள் நிந்திக்கத்தக்கது. [illegible]னுடைய நடையே அவனுடைய துர்க்குணங்களையும் நற்குணங்களையும் அறிவிக்கிறது. நீர் சொன்ன கெட்ட நடை செய்பவனான என்னை, இவ்வுலகத்தில் புத்திசாலியான எவன் புகழுவான் ?."

किंस्यात्त्वादृशदुर्मतेस्सुरपुरीवासोऽर्थनीयोऽखिलैः
मांदुर्मार्गगतं विलोक्यसुजनाःकुर्युर्ममैवव्रतम् ।
सत्यंदैवपदेनवाच्यमखिलंसत्याऽऽश्रयाद्वर्तते
सत्याऽऽदेशमिमं विहान्मिकिमिहस्वीयेन पित्राकृतम् ॥

"உன்னைப்போன்ற துற்புத்தி பெற்றவனுக்கு,எல்லோரும் விரும்பக்கூடிய சுவர்க்கலோக வாஸம் கிடைக்குமா ? துர்மார்க்கத்தில் நடக்கும் என்னைப்பார்த்துக்கொண்டு ஸாதுக்களும் என் நடையைத்தானே செய்வார்கள். ஸத்தியமே தெய்வமென்ற வார்த்தையால் சொல்லத்தகுந்தது. ஸத்தியத்தின் பிடிப்பில் எல்லாம் இருக்கிறது. எந்தன் பிதா ஸத்தியமாகச் செய்த உத்திரவை, இவ்வுலகத்தில் நான் ஏன் கெடுக்கவேண்டும்."

नासत्येनसमंसुपातकमिह प्रावापुरार्याजनाः
कृत्वाकर्मशुभंसुखं निरवधित्वामग्रहीद्यात्पिता ।
तत्कर्मैवविनिन्दनीयमधुनात्वित्यात्तकोपंद्विजः
रामंप्राहनिवर्तनार्थमथते प्रोक्तंमयादुर्मतम् ॥ २८५ ॥

"இவ்வுலகத்தில் அஸத்தியத்திற்கு ஸமமான பாபம் வேறு கிடையாது. ஸாது ஜனங்கள் நற்கர்மாவைச்செய்து, அளவற்ற சுகமடைந்தார்கள். என் பிதா இவ்விதமிருக்கும் உன்னை, மந்திரியாக அங்கீகரித்ததைப்பற்றியே இப்பொழுது நிந்திக்கவேண்டும்" என்று கோபமடைந்த இராமனைப் பார்த்து ஜாபாலி, முனிவர் பிறகு "உன்னை பட்டணத்திற்குத் திருப்பி அழைப்பதற்காக, நான் இந்த சார்வாகமத்தைச் சொன்னேன்" என்று கூறினார்.

११० रामंक्रुद्धमसांत्वयत्कुलगुरुर्जानातिधर्मानयम्
राज्यंप्रापयितुंभवन्तमनयंप्राहेतिलोकाऽऽगतिम् ।
उक्त्वावंशपरंपराश्चतनयेज्येष्ठस्यराज्यक्रियाम्
भूमिंपालयपालितां स्वकुलजैरित्यात्मनस्तातवत् ॥२८६॥

"இந்த ஜாபாலி முனிவர் தர்மங்களை அறிந்தவர். உன்னை இராஜ்யத்திற்கு அழைத்துப் போவதற்காக அநியாயமான சார்வாகமதத்தைக் கூறினார்" என்றும், உலகங்களின் உற்பத்தியையும், வம்சபரம்பரையையும், புத்திரர்களில் மூத்தவனே இராஜ்ய பரிபாலனம் செய்துவந்ததையும், சொல்லி, "முன்னோர்கள் பரிபாலித்த பூமியை, ஹே இராமா! நீ பரிபாலிக்கவேண்டும்" என்று தன் தகப்பனார்போல் குலகுருவான வஸிஷ்டர் கோபமடைந்த இராமனை ஸமாதானம் செய்தார்.

१११ आचार्यस्यममेप्सितं स्वजननीसोदर्ययो र्वांछितम्
भूमेःपालनमेवकुर्विंतिगुरुंसप्रार्थनं प्राहसः ।
रामः पैतृकवाक्यमेवरचयन्पूर्वंकरिष्यामितत्
पश्चादत्र नचोपाधिर्बलवतः प्रायोनराज्ञस्स्मृतः ॥२८७॥

"ஆசார்யரான நானும், தாயாரான கௌஸல்யை, தம்பியான பரதன் இவர்களின் விருப்பமான பூமி பரிபாலனத்தைச் செய்யவேண்டுமென்று வேண்டும் குருவைப்பார்த்து இராமன் "முதலில் தந்தையின் சொல்படி செய்து, பிறகு உங்களின் விருப்பத்தையும் செய்யப்போகிறேன் இதில் பலமுள்ளவர்களுக்கு பதில் கிடையாது. க்ஷத்திரியனுக்கு பிராயோபவேசமும் விதிக்கவில்லை" என்று பதில் கூறினார்.

११२ भ्रातोःअतिमंसमागममथ प्रेक्ष्याऽऽगतास्तापसा
सिद्धास्स्वस्सदनात्समार्यभरतंप्राहुर्दशाऽऽस्यस्यच ।
वांछन्तस्त्वरितंवधंसकुतुकास्त्वंरामवाक्यंयथा
गच्छाऽऽवासमिहास्त्वयं स्वरनयस्तातोयुवाभ्यामिति ॥

அச்சஹோதரர்களின் ஒப்பற்ற சேர்க்கையைப் பார்த்து பிறகு முனிவர்கள், ஸித்தர்கள், தேவர்கள், வந்து சீக்கிரம் இராவணவதத்தை விரும்பி ஸந்தோஷமாக நன்னடைபெற்ற பரதனைப்பார்த்து இராமனுடைய உத்திரவுபோல் நீ இருப்பிடத்திற்குப் போகவேண்டும். இராமன் இவ்விடம் இருக்கவேண்டும். தந்தையான தசரதர் உங்கள் இருவர்களால் கடனில்லாமல் சுவர்க்கத்தில இருக்கவேண்டுமென்று கூறினார்கள்.

मद्याच्ञां कुरुराज्यरक्षणविधौ नाहंपटुर्ज्ञातयः
त्वामिच्छान्तिसुहृज्जनाइतिमुहुस्सप्रार्थनंसोदरम् ।
कृत्वाऽङ्केऽकथयन्महीं समवितुंशक्तोऽस्ययेकिंपुनः
युक्तो मन्त्रिभिराश्रुतिंजनयितुस्सत्यांनजह्यांसदा ॥

என் வேண்டுதலை நிறைவேற்றவேண்டும். இராஜ்யத்தை ரக்ஷிப்பதற்கு நான் திறமையற்றவன். ஞாதிகளும், சினேஹிதர்களும் தங்களை விரும்புகிறார்கள், என்று அடிக்கடி வேண்டும் பரதனை இராமன் மடியில் வைத்துக்கொண்டுக் கூறினார். "ஹே பரதா! பூமியை ரக்ஷிப்பதற்கு நீயும் வல்லவன், மந்திரிகளோடும் இருந்தால் என்னவேண்டும்? தந்தையின் ஸத்தியமான உத்திரவை எப்பொழுதும் கைவிடமாட்டேன்."

नित्यंपूजयमातरंस्ववहितोमाचिन्तयैतत्कृतम्
भद्रेत्युक्तगिरंस्वपादतलगेद्वेपादुकेसन्मणी ।
योगक्षेमविधायके च जगतोदत्वावितीर्णाऽऽशिषम्
नत्वाऽऽर्यंभरतोजगादवचनंविस्मापकंशृण्वतां ॥

"மங்களம்பெற்ற ஹே பரதா! ஸாவதானமாயிருந்துத் தாயாரைப் பூஜிக்கவேண்டும். அவள் செய்ததை நினைக்கக் கூடாது என்று உத்திரவுசெய்து உலகங்களின் யோக க்ஷேமத்தைச் செய்விக்கும் தன் திருவடியை அடைந்த, இரத்தினங்களிழைத்த இரண்டு பாதுகைகளையும் கொடுத்து ஆசீர்வசனம் கூறும் அண்ணனை பரதன் நமஸ்கரித்துக் கேட்கிறவர்களுக்கு ஆச்சரியம் வரும்படி வார்த்தை கூறினார்.

वर्षाण्यार्य चतुर्दशाजिनधरोवन्याशनस्सज्जटः
वांछन्नागमनंबहिस्तुनगरात्तेपादुकाभ्यां दिशन् ।
गुर्वीं राज्यधुरंनिवत्स्यतिजनः पूर्णेऽपिसंवत्सरे
त्वांवीक्ष्यायमनागतंहुतवहं प्राप्स्यत्यतिज्वालितं ॥

"பதினைந்து வருஷமும் நான் மான்தோலை அணிந்து கொண்டும், சடைகளைத் தரித்துக்கொண்டும், காட்டில் இருக்கும் கிழங்கு முதலியவைகளை சாப்பிட்டுக்கொண்டும், தங்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டும், பட்டணத்திற்கு வெளியில் இருந்து பெரிய இரஜ்யபாரத்தை தங்களின் பாதுகைகளிடம் ஒப்படைத்தும், இருக்கப்போகிறேன். ஹே அண்ணு! வருஷம் முடிந்ததும் தாங்கள் வராமலிருப்பதைப்பார்த்து மிகவும் ஜ்வாலை யான அக்னியில் விழப்போகிறேன்"

प्रेम्णाऽऽलिङ्ग्यचतत्तथाऽस्तुजननीं रक्षानिशंतांप्रति
द्वेषंमाकुरुसाधयेतिभरतः प्रोक्तस्स्ववर्षीयसा ।
आदायाऽऽर्यसुपादुकेगजपतेस्सम्प्रापयन्मस्तकम्
रामस्स्वस्यजनान्पुरीं चगमयन्भ्रात्राकुटींप्राविशत् ॥

இராமன் பரதனை அப்படியே ஆகட்டுமென்று அன்போடு கட்டிகொண்டு தாயாரை எப்பொழுதும் காப்பாற்றவேண்டும், அவளிடத்தில் துவேஷம் செய்யக்கூடாது, செல் என்று தன் அண்ணன் சொன்னதும் பரதன் அவருடைய பாதுகைகளைப் பட்டத்தின் யானையின் மஸ்தகத்தில் எற்றிவைத்தான். இராமன் தன் ஜனங்களை பட்டணத்திற்கு அனுப்பிவைத்து தம்பி இலக்ஷ்மணனோடு பர்ணசாலைக்குட் சென்றார்.

११३ शत्रुघ्नसमान्वितस्सभरतस्सर्वैस्ततः प्रस्थितः
प्राप्याऽऽश्चर्यनिधिंतपोधनभरद्वाजंनिवेद्याखिलम् ।
तस्मैनिष्कइशोदकंत्वयिमहत्शीलंत्विति श्लाघितः
तंचाऽऽमन्त्र्यचगुहंसमेत्यतरसासाकेतमापानुगैः ॥ २३९ ॥

பரதன் சத்ருக்கனோடுகூட அவ்விடமிருந்து பிரயாணம் செய்து ஆச்சர்யங்களுக்கு இருப்பிடமான பரத்வாஜ முனியை அடைந்து அவரிடம் எல்லாவற்றையும் தெரிவித்து பள்ளத்தில் ஜலம் தங்குவதுபோல் நன்னடை உன்னிடமிருக்கிறது என்று புகழ்ப்பெற்று அவரிடம் சொல்லிக்கொண்டு குஹனை அடைந்து சீக்கிரம் பின்வந்தவர்களுடன் அயோத்திமாநகரமடைந்தான்.

११४ गंभीराऽऽरवसद्रथेन भरतो गत्वात्वयोध्यां पुरीम्
त्यक्तां पौरजनैरुलूकनिवहैर्नित्यंविडालैर्वृतां ।
नूनंकाननमप्यगात्पुररुचिर्भ्रात्रासहेत्यावदन्
सूतं पित्र्यनिवेशनंरुचिरहर्म्यावासाऽऽलयंप्रापसः ॥

பரதன் கம்பீர சப்தம் பெற்ற நல்ல ரதத்திலேறி பட்டணத்தின் ஜனங்கள் விலகியதும், கோட்டான்கள், பூனைகள் எப்பொழுதும் சூழ்ந்திருக்கும் அயோத்தியை அடைந்து, பட்டணத்தின் அழகு அண்ணாவோடு அரண்யம் சென்றது நிச்சயம் என்று சுமந்திரனிடம் சொல்லி, தந்தையின் அரண்மனையின் அந்தப்புரம் சென்றான்.

११५ निक्षिप्याथदृढव्रतस्सजननी स्तत्रैवशोकाऽऽकुलः
प्राहस्वस्वगुरून्तमार्यविरहं सोढुंसमागम्यतम् ।
नन्दिग्राममघघ्नमार्यमनघो राज्यायवांछन्बहिः
पुर्यास्तत्रसमाश्चतुर्दशमुदा वत्स्यामिनिश्चिन्तकः ॥

பிறகு பரதன் பலமான விரதங்கொண்டு தாயார்களை அவ்விடத்திலே இருக்கச்செய்து, துக்கத்தால் கலங்கி, தன் பெரியோர்களைப் பார்த்து கூறினான். "அண்ணனுடைய பிரிவைப் பொறுப்பதற்கு நந்திக்ராமமடைந்து பாபந்தீர்க்கும் அண்ணனை இராஜ்யத்திற்காக எதிர்பார்த்து, பட்டணத்திற்கு வெளியில் அந்த நந்திக்ராமத்திலே கவலை இல்லாமல் ஸந்தோஷமாக இருக்கப் போகிறேன்."

दत्तेज्येष्ठसहोदरेणविधृतेसंन्यासवद्राजकम्
तद्रक्षिष्यतंएवहेमरचिते आर्यस्यसत्पादुके
धृत्वामूर्ध्निसमेत्यनन्दनपदं यावत्स्वरामाऽऽगतिः
तेसंरक्ष्यपुनस्तदङ्घ्रिकमलेसंयोजयिष्याम्यहम् ॥ २९६ ॥

"அண்ணனால் தரித்துக்கொண்டு வைத்திருக்கும்படி கொடுக்கப்பெற்ற அவருடைய சுவர்ண பாதுகைகளே, இராஜ்யத்தை ரக்ஷிக்கப்போகின்றன. அவைகளைத் தலையில் தரித்து, நந்திக் கிராமம் சென்று, தன் இராமன் வரும்வரைக் காப்பாற்றி மறுபடியும் அவருடைய பாதங்களில் சேர்க்கப்போகிறேன்."

इत्युक्त्वा भरतस्स्वमन्त्रिभिरथप्राप्याखिलैर्नन्दिनम्
ग्रामंतत्रशुभप्रदेसुसमये निक्षिप्यसिंहाऽऽसने ।
ते आर्यस्यसुपादुकेपरिजनैश्छत्रंसदाधारयन्
कृत्वाराज्यमदो निवेद्यमुदितस्ताभ्यांतमप्यावसत् ॥

என்று சொல்லிப் பிறகு பரதன் மந்திரிகளோடும், எல்லோர்களோடும் நந்திக்கிராமம் சென்று, அவ்விடத்தில் சுபமுகூர்த்தத்தில் அண்ணனுடைய பாதுகைகளை ஸிம்மாஸனத்தில் வைத்து, ஸேவக ஜனங்களால் எப்பொழுதும் குடைபிடிக்கச்செய்து, இராஜ்ய பரிபாலனம் செய்து, அதை அவைகளிடம் தெரிவித்து, ஸந்தோஷமாய்த் நந்திகிராமத்தில் வஸித்துவந்தான்.

१२६ रामश्चित्रगिरौवसन्नृषिगणानौत्सुक्यमभ्यागतान्
दृष्ट्वा भीतउपेत्यतत्कुलपतिंप्राहप्रबद्धांजलिः ।
मोहादाचरितं किमस्त्यपकृतंभ्रात्रामयासीतया
यन्मांवीक्ष्य तपोधनाभ्रुकुटिभिर्जल्पन्तिसाऽऽशंकितम् ॥

சித்திரகூடமலையில் வசிக்கும் இராமன், ரிஷிகள் ஏதோ சொல்லவேண்டுமென்று உத்ஸாகமடைந்திருப்பதைப் பார்த்து, பயந்துகொண்டு அவர்களின் குலபதியிடம் சென்று கும்பிட்டுக் கொண்டு "நானாவது, இலக்ஷ்மணனாவது, ஸீதையாவது அறியாமையால் குற்றம் செய்திருக்கிறோமா? என்னைப்பார்த்து ரிஷிகள் புருவங்களை நெரித்துக்கொண்டு, பயத்துடன் பேசுகிறார்களே" என்று சொன்னார்.

रामस्तद्वचसावबोधमहतीं रक्षःकृतामापदम्
तस्यागर्हितरावणानुजखरक्रोधं निदानं भृशम् ।
तत्स्वाऽऽश्रमसंस्थितिंचशिखरेभूभृत्यसौ परम्
स्वस्मिन्शौर्यकृतं निशाचरपतेस्तेषां गतिंचान्यतः ॥

இராமன் அந்த குலபதியின் வார்த்தையால், இராக்ஷஸர்கள் செய்யும் மிகுந்த துன்பத்தையும், அதற்குக் காரணமாக கர்வமடைந்த இராவணனுடைய தம்பியான கரனுடைய மிகுந்த கோபத்தையும், அதற்குக் காரணமாக சித்திரகூடமலையில் தானிருப்பதையும், தன்னிடத்தில் பலத்தால் இராவணனுக்கு இருக்கும் அதிக கோபத்தையும், ரிஷிகள் வேறு இடத்திற்குப் போவதையும் அறிந்தார்.

रूपैर्भीषयतो भयस्य जनकैरग्नीन्जलैस्सिञ्चतः
स्रुग्भाण्डानपविध्यतो गलवतस्संचिन्त्य ताञ्शाश्रमान् ।
भीतैस्संजहतो निकेतनमसौ स्थानान्तरं गच्छतः
संरोद्धुं त्वपटुर्मुनीन्कृतनतिः प्रापाऽऽलयं तान्विना ॥

பயத்தைக்கொடுக்கும் உருவங்களால் பயமடைவிப்பவர்களும், ஜலங்களால் அக்னிகளை அணைக்கிறவர்களும், ஸ்ருக் முதலிய பாத்திரங்களை உடைப்பவர்களும், பல்முள்ளவர்களுமான அந்த அரக்கர்களை நினைத்து பயத்தால் இருப்பிடத்தை விட்டு வேறு இடம் செல்லும் ரிஷிகளைத் தடுக்கமுடியாமல், நமஸ்காரம் செய்து இராமன், அவர்களைவிட்டு இருப்பிடத்திற்கு வந்தார்.

११७ यन्तॄणां स्मृतिमातनोत्यनुपदं शोकातिरेकप्रदाम्
देशोऽयं भरतानुगैः करिहयैस्सोपद्रवो मानुषैः ।
इत्यालोच्य विहाय तां निवसतिं रामः प्रियाभ्रातरौ
आनीयात्रिनिवेशनं समगमद्गृह्णंस्तदस्यार्हणाम् ॥

"பரதனுடன் பின்வந்த யானை குதிரை மனிதர்கள் இவர்களால் துன்பமடைந்த இந்த இடம் அடிக்கடி அதிக துக்கத்தைக்கொடுக்கும் பந்துக்களின் நினைவை உண்டு பண்ணுகிறது" என்று நினைத்து இராமன், அவ்விடத்தைவிட்டு மனைவி, தம்பி இவர்களை அழைத்துக்கொண்டு, அத்திரி முனியின் பூஜையைப் பெற்று, அவருடைய ஆசிரமத்தை அடைந்தார்.

वन्दित्वात्रिमुनिं तदीयवचसा जानन्स तस्य प्रियाम्
लोकक्षेमविधायिनीं सतपसं साध्वीकुलस्वामिनीम् ।
प्राप्त्यै श्रेयस ईप्सितस्य दयितां तां प्रेषयत्सेवितुं
पप्रच्छ प्रणतिं विधाय सुदती साऽनामयं सांजलिः ॥

இராமன் அத்திரி முனியை நமஸ்கரித்து, அவருடைய வார்த்தையால், அவருடைய மனைவியைத் தவம்பெற்று உலகங்களுக்கு க்ஷேமமளித்த பதிவிரதைகளின் கூட்டத்திற்கு எஜமானியென்று அறிந்துகொண்டு, விரும்பின நன்மைகளை அடைவதின் பொருட்டு, முனி பத்தினியை ஸேவிப்பதற்காக தன் மனைவியை அனுப்பினார். நல்ல பற்களைப்பெற்ற அந்த ஸீதை அனஸூயா தேவியை நமஸ்கரித்து, கும்பிட்டுக்கொண்டு ஆரோக்யத்தை வினவினாள்.

पातिव्रत्यमबोधयज्जनकजां तापसवर्या गिरा
भर्तुर्नित्यमुपासनेन वनितायास्तीह निःश्रेयसम् ।
नास्त्यस्मादितरत्परत्र सुखदं निस्स्वाच्च वा रोगिणः
यत्कान्तारगमात्मदैवमनघा धन्याऽसि चान्वव्रजः ॥

அனஸூயை ஸீதையைப்பார்த்து "பெண்கள் இவ்வுலகத்தில் எப்பொழுதும் புருஷனை ஸேவிப்பதால் மோக்ஷத்தை அடைகிறார்கள். பொருளில்லாதவனாயினும், ரோகமுள்ளவனாயினும் அந்த புருஷனைத்தவிர பரலோகத்தில் ஸுகங்கொடுக்கும் வேறு தெய்வம் கிடையாது. காட்டிற்கு வந்த தன் தெய்வமான புருஷனைப் பின் தொடர்ந்து வந்ததால் ஹே ஸீதே! நீ பாபமற்றவள். பாக்கியம் பெற்றவள்" என்று பதிவிரதா தர்மத்தை அஸூயையை அகற்றி போதித்தாள்.

११८ पुर्यान्निर्गमनेकृपाहृदयया श्वश्र्वा यदुक्तं पुरा
मत्पाण्यर्पणवासरे त्वभिहितं प्रस्वा प्रियं भर्तरि ।
अन्यूनं प्रियकामया भगवति प्रस्मारितं तत्त्वया
भर्तारं सगुणं त्यजेत्पटुमतिः कावेत्यवोचत्सुधीः ॥

"பட்டணத்திலிருந்து பிரயாணம் செய்யும்பொழுது, மனதில் அன்புபெற்ற மாமியாரும், என் விவாஹகாலத்தில் என் தாயாரும் சொன்னபடி, புருஷனிடத்தில் குறைவில்லாத அன்பு, ஹே அம்மணி! தங்களால் அன்புசெய்ய விரும்பி, நினைக்கும்படி செய்யப்பெற்றது. நற்குணம் பெற்ற புருஷனை, புத்திசாலியான எவள்தான் கைவிடுவாள்" என்று நற்புத்திபெற்ற ஸீதை சொன்னாள்.

त्वद्वाचोचितया विदेहतनये हृष्यामि सांतोषिकम्
दित्सामि प्रियमात्मनो वृणु तपस्संपादितं वर्तते ।
इत्युक्तेपि कृतं समस्तमिति तां प्रत्याहरन्तीं गिरम्
मूर्ध्न्याघ्राय मुनेर्वधूस्सुवसनैश्चाभूषयद्भूषणैः ॥ ३०५ ॥

"ஹே ஸீதே! உன்னுடைய உசிதமான வார்த்தையால் ஸந்தோஷமடைகிறேன். உனக்கு வெகுமதிகொடுக்க விரும்புகிறேன். உன் விருப்பத்தை வேண்டிக்கொள். தேடிவைத்த தவமிருக்கிறது" என்று சொல்லியும், "எல்லாம் கிடைத்திருக்கிறது" என்று சொல்லும் ஸீதையை, அத்திரிமுனியின் மனைவி, உச்சி முகந்து, நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரித்தாள்.

गन्धंमाल्यममूल्यमीप्सितदयादत्तंतयाऽऽदायसा
प्रीत्यारामवधूस्स्वयंवरकथां श्रुतेसातच्चोदिता ।
तापसींप्रणताकृतांजलिपुटासद्धर्मविन्मैथिलः
भूमिंलांगलतश्चकर्षमखविद्भूमेरभूवंतदा ॥ २०६ ॥

இஷ்டத்தைக் கொடுக்கும் முனிபத்தினி கொடுத்த விலைமிருந்த கந்தம், மாலைகளை ஸந்தோஷமாக பெற்றுக்கொண்டு, நல்ல தர்மங்களை அறிந்த ஸீதை, அனஸூயையால் ஏவப்பெற்று, அவளை நமஸ்கரித்து, கும்பிட்டுக்கொண்டு, கல்யாணக்கதையை சொல்லத் தொடங்கினாள். "யாகம் தெரிந்த ஜனக மஹாராஜன், கலப்பையால் பூமியை உழுதார். அப்பொழுது நான் பூமியிலிருந்து பிறந்தேன்."

मांप्रेक्ष्यावनिपांसुरूषिततनुंसंविस्मितस्सोऽप्रजाः
आरोप्यांकममानुषेणवचसामन्वान्निजामात्मजाम् ।
प्राप्तस्संपदमुच्छ्रितामवहितः पत्न्यामुदाऽपालयत्
प्राप्तायांमयियौवनंसुमहतीं चिन्तांप्रपेदेनृपः ॥ २०७ ॥

"பூமியின் தூளிகளால் அழுக்கடைந்த சரீரம் பெற்ற என்னைப்பார்த்து அந்த ஜனகர், அதிக ஆச்சர்யமடைந்து, குழந்தை இல்லாததால் மடியில் வைத்து, அசரீரி வார்த்தையால் தன் பெண்ணாக நினைத்து, அதிக ஸம்பத்தை அடைந்து, ஸாவதானமாக மனைவியோடு ஸந்தோஷமாய் என்னை வளர்த்தார். நான் யௌவன பர்வமடைந்ததும், அரசன் அதிக கவலை அடைந்தார்."

मामालोच्यसयोनिजन्मरहितांलब्धुंवरंमत्समं
पुत्र्यामेमतिमान्स्वयंवरमहंकर्तुंनृपानाह्वयत् ।
तानाहाम्बुपतिर्मखेप्रमुदितः प्रादाद्धनुर्यन्महत्
सज्यंतत्प्रविधायशौर्यनिलयः कन्यांमआप्नोत्विति ॥

"நான் யோனிப்பிறப்பு இல்லாமலிருப்பதால் எனக்குத் தகுந்த வரனை அடைவதற்காக, புத்திசாலியான ஜனகர், பெண்ணான எனக்கு சுயம்வரம் வைத்து, அரசர்களை அழைத்தார். 'யாகத்தில் வருணன் ஸந்தோஷமடைந்து எனக்குக் கொடுத்த பெரியவில்லை, நாணேற்றும் பலசாலி என் பெண்ணைப்பெற்றுக் கொள்ளலாம்'' என்று அரசர்களைப் பார்த்துக் கூறினார்.

दृष्ट्वातद्धनुरद्रिसन्निभमपि त्यक्ताशऽऽयान्स्थानतः
किंचिच्चालयितुंप्रणामकरणानुद्वीक्ष्यसर्वान्नृपान् ।
मत्तातस्यविषीदतोऽधिकमुदंकुर्वन्स आर्योऽग्रजः
विश्वामित्रनिदेशतोझटितितन्मध्येद्विधाऽभञ्जयत् ॥

"மலைபோன்ற அந்த வில்லைப்பார்த்து, இருப்பிடத்திலிருந்தும் அந்த வில்லைக் கொஞ்சங்கூட அசைப்பதற்கும் மனமிழந்து நமஸ்காரம் செய்யும் எல்லா அரசர்களையும் பார்த்து என் தந்தை வருந்தும்பொழுது அவருக்கு அதிக ஸந்தோஷத்தைக் கொடுக்கும்படி ஆர்ய புத்திரர் விசுவாமித்திரருடைய உத்திரவால் சீக்கிரம் அந்த வில்லை நடுவில் இரண்டாக முறித்தார்''

आदातुं वनितांविना पितृवचोरामायनैच्छत्तदा
तत्तातंद्रुतमिष्टलोकसहितंत्वानीयतत्सन्निधौ ।
दत्ताऽहंजनकेनमेऽप्यवरजा तस्मैचसौमित्रये
भर्तारंतमनुव्रताऽस्मि भगवत्येवंमहाधन्विनम् ॥ २१० ॥

"தகப்பனருடைய உத்திரவில்லாமல் இராமன், மனைவியைப் பெற்றுக்கொள்ள விரும்பாமலிருக்கும்பொழுது. அவருடைய தந்தையை இஷ்ட ஜனங்களுடன் அழைத்துவந்து, அவர் முன்னிலையில் என் தகப்பனார் இராமனுக்கு என்னையும், லெக்ஷ்மணனுக்கு என் தங்கையையும் கல்யாணம் செய்வித்தார். ஹே அம்மணி! இவ்விதம் பெரிய வில்லாளியான அந்த புருஷனை அனுஸரித்துக்கொண்டிருக்கிறேன்.''

११९. धर्मज्ञामुनिवल्लभा सुमहतीं श्रुत्वाकथामद्भुताम्
आश्लिष्यप्रणयाद्वधूमभिमता माघ्रायतन्मूर्धनि ।
संध्याकालउपाऽऽगतेचचरमेसंभूषितां भूषणैः
रामंप्रापयतिस्मवाञ्छितततेर्दात्रीर्विधायाऽऽशिषः ॥

தர்மங்களை அறிந்த அத்திரிமுனியின் மனைவியான அனஸூயை, ஆச்சர்யமான பெரிய கதையைக் கேட்டு, இஷ்டமான மருமகளை உச்சிமுகர்ந்து, ஸந்தோஷத்தால் கட்டிக்கொண்டாள். கடைசி ஸந்தியாகாலம் வந்ததும், ஆபரணங்களால் அலங்கரித்து, அந்த ஸீதையை விரும்பியவைகளை எல்லாம் கொடுக்கும்படி ஆசீர்வதித்து, இராமனை அடைவித்தாள்.

संहृष्टोरघुनायकस्स्वदयितां संवीक्ष्यसद्भूषणाम्
रात्रिंतत्रसहोदरेण गमयन्प्रातर्हुताग्नीन्मुनीन् ।
नत्वातद्वचसानरादरचितां जानन्परां हिंसनाम्
तस्यारक्षितुमात्तकार्मुकशरः प्रायाद्वनंदण्डकान् ॥

இராமன் நல்ல ஆபரணங்களை அணிந்த தன் மனைவியைப் பார்த்து, ஸந்தோஷமடைந்து, அவ்விடத்தில் தம்பியோடு இரவைக் கழித்து, காலையில் அக்னிஹோத்திரம் செய்த ரிஷிகளை நமஸ்கரித்து, அவர்களின் வார்த்தையால் ராக்ஷஸர்கள் செய்யும் மிகுந்த துன்பத்தைத் தெரிந்துகொண்டு, அதிலிருந்து காப்பாற்றுவதற்காக வில்லையும், அம்பையும் எடுத்துக்கொண்டு, தண்டகாரண்யம் சென்றார்.

भूपालार्पितपारितोषिककरेमूकायवाचां झरीम्
पीयूषस्यसहोदरींवितरतिश्रीप्रस्रवन्तीसमाम् ।
रामस्यायनईप्सितेमखभुजां यस्सुन्दरेदुर्यशः
मुक्त्वाकीर्तिमुपैति सद्भरतवत्साकेतकाण्डंवदन् ॥

அரசர்களின் ஸம்மானத்தைப் பெறச்செய்யும் ஊமை களுக்கும், ருசியில், அமிருதத்தோடு கூடப்பிறந்ததும், வேகத் தில் நதிக்கு ஸமானமான வாக்கின் பெருக்கை சீக்கிரம்கொடுக் கும், தேவர்கள் விரும்பும் சுந்தரராமாயணத்தில், அயோத்யா காண்டத்தைப் படிப்பவன், பரதன்போல் அபகீர்த்தியிலிருந்து விலகி, நற்புகழை அடைகிறான்.

प्रासूतजानकीयंसा सुब्रह्मण्यकुटुम्बिनी ।
तत्कृतेरामचरितेत्वयोध्यैवमवर्णिसा ॥ ॥ २१४ ॥

சுப்பிரமணியருடைய மனைவி ஜானகி என்ற, சுந்தரம் இயற்றிய சுந்தரராமாயணத்தில், அயோத்தியாகாண்டம் இவ் விதம் கூறப்பெற்றது.

அயோத்தியாகாண்டம் முற்றிற்று.

॥ आरण्यकाण्डः प्रारभ्यते ॥

ஆரண்ய காண்டம்.

१ श्रीनाथश्श्रियमीप्सितांकलयितुं प्रध्यायतामात्मन
श्चाऽऽवासंश्रुतिपाठपूतमनघं प्राप्यस्वयंराघवः ।
धृत्वा विज्यशरासनं वनगृहैस्संपूजितस्सानुगः
प्रीत्याऽऽदत्ततपस्विनामतिबलाऽऽधाना अभेद्याऽऽशिषः॥

லெக்ஷ்மியின் காதலன இராமன், தன்னை நினைப்பவர்களுக்கு விரும்பும் ஐசுவரியத்தை உண்டு பண்ணுவதற்காக, வேத மோதுவதால் பரிசுத்தமாயும், பாபமற்றதுமான அவர்களின் கிருஹத்திற்கு தானே சென்றுவில்லை நாணிலிருந்து கயற்றி கையில் எடுத்துக்கொண்டு, ஸீதை, இலக்ஷ்மணன் இவர்களுடன் கூட ரிஷிகளால் பூஜிக்கப்பெற்று, அதிக பலத்தைக் கொடுக்கும் முனிகளுடைய தள்ள முடியாத ஆசீர்வாதங்களை, அன்போடு பெற்றுக் கொண்டார்.

राजादण्डधरो गुरुस्समविता भीतेर्दिगीशाऽऽत्मकः
त्वनः्कानवासिनां रघुपतेत्वद्गर्भभूतावयम् ।
अक्रोधाविजितेन्द्रियास्तवधरामावासिनस्तापसाः
संरक्ष्याइति सांजलिस्स्तुतिवचस्तेषामगृह्णादयम् ॥ २ ॥

“ஹே இராமா! காட்டில் வஸிக்கும் எங்களுக்கு நீ பயத்திலிருந்து காப்பாற்றவும், சிக்ஷிக்கவும், குருவாகவும், திக்குபாலர்களின் உருவம்பெற்ற அரசனாயிருப்பதால் நாங்கள் உன்னுடைய குழந்தைகள். கோபத்தைவிட்டவர்கள். இந்திரியங்களை அடக்கினவர்கள். உன் பூமியில் வஸிப்பவர்கள். தவம்செய்யும் எங்களைக் காப்பாற்றவேண்டும்” என்று கும்பிட்டுக்கொண்டு ரிஷிகள் ஸ்தோத்திரம்செய்யும் பொழுது, இராமன் அதை அங்கீகரித்தார்.

२ आमन्त्र्योषसितापसान्रघुपतिः प्राप्तः करालंवनम्
सिंहव्याघ्रवृकान्मृगान्निहतानन्यानसज्याऽऽयसे ।
शूलाग्रेकरिणांशिरस्सदशनंवैयाघ्रचर्माऽऽवृतम्
नदन्तंपिशिताशनंयममिवप्राप्तंधरामैक्षत ॥ ३ ॥

காலையில் இராமன் ரிஷிகளிடம் சொல்லிக்கொண்டு, பயங்கரமான காட்டை அடைந்து, கொல்லப்பெற்ற ஸிம்ஹம், புலி, செந்நாய், இந்த மிருகங்களையும், தந்தத்தோடு கூடிய யானையின் மஸ்தகத்தையும், இரும்பு சூலத்தின் நுனியில் கோர்த்து, இடையில் புலித்தோலைக் கட்டிக்கொண்டு பூமியில் வந்த எமன்போல் சப்திக்கும் இராக்ஷஸனைப்பார்த்தார்.

आहृत्यावनिजां विनयपरुषं रक्षोऽवदत् कौयुवाम्
चापासी करयो र्जटाश्शिरसिवां स्त्रीयंकथं प्रोज्वला ।
हत्वावांमुनिदूषकौविरचिताधर्मौ विराधोप्रसन्
मांसान्यार्यजनस्यसाऽऽयुधइदानिर्भीश्चरिष्याम्यहम् ॥

ஸீதையைப்பிடுங்கிக்கொண்டு, கடோரமாக கர்ஜித்து "நீங்கள் யார்? உங்களுக்கு, கைகளில் வில்லும், கத்தியும், தலையில் சடைகள் அழகான இந்த பெண் ஏது? முனிகளைக்கெடுக்கும் பாபிகளான உங்களைக்கொன்று, பயமில்லாமல் ரிஷி மாம்ஸங்களை புசித்து விராதனை நான் ஆயுதத்தோடு இந்த காட்டில் ஸஞ்சரிக்கப்போகிறேன்" என்று இராக்ஷஸன் கூறினன்.

श्रुत्वारक्षसउक्तिमप्यपभयां दृष्ट्वाऽतिभीतांवधूम्
सीतायास्तु विराधसंग्रहणतस्संपश्यतोमेऽधुना ।
कैकेय्यास्तुमनोरथोऽतिफलितोयाप्रापयन्मांवनम्
राज्यप्रच्युतिरात्मनः पितृलयोनैवंव्यथाक्रन्मम ॥ ५ ॥

பயமில்லாத இராக்ஷஸனுடைய வார்த்தையைக்கேட்டும், ஸீதை அதிக பயமடைந்ததைப் பார்த்தும், "இப்பொழுது நான் பார்த்திருக்கும்பொழுது, விராதன் ஸீதையை எடுத்துக்கொண்டதால் என்னைவனத்திற்கு வரும்படி செய்த கைகேயியின் கருத்து பயனடைந்தது. கிடைத்த இராஜ்யம் தன்னிடமிருந்து நீங்கினதும், தந்தையின் மரணமும், தனக்கு இவ்விதம் துக்கம் கொடுக்கவில்லை."

स्वस्याग्रेकृतभाषितंव्यसनगं प्राहाऽऽर्यकंलक्ष्मणः
किंस्वामिन्परितप्यसेसधनुषिप्रेष्येमयिस्वान्तिके ।
आस्तांस्वस्थमनाभवान्चभरतेयोऽभूदपार्थःपुरा
तंमोक्ष्यामिवृषेववज्रमचलेकोपंविराधेद्रुतम् ॥ ६ ॥

தன் முன்னிலையில் துக்கமடைந்து, வார்த்தை சொல்லும் அண்ணனைப் பார்த்து, இலக்ஷ்மணன் "ஹே சுவாமி! வில்லோடு நான் ஸேவகனாக தங்களின் ஸமீபத்தில் இருக்கும்பொழுது என் வருந்துகிறீர்? முன்பு பரதனிடத்தில் வீணாக இருந்த கோபத்தை, இந்திரன் பர்வதத்தில் வஜ்ராயுதத்தைப் போடுவதுபோல், விராதனிடத்தில் சீக்கிரம் உபயோகிக்கப் போகிறேன்" என்று கூறினன்.

इक्ष्वाकून्वयसंभवौ नृपसुतौतौ ज्ञातृ कान्तारगौ
रक्षोलक्ष्मणपृष्टमस्यवचसाशातहृदेयंविधेः ।
आज्ञाया अमृतंतदायुधशतैर्जानन्जयस्याऽऽत्मजम्
मुक्त्वैनामिहधावतंत्विवितिवद्रामोऽभ्यकुप्यद्भृशम् ॥ ७ ॥

இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்த இராஜகுமாரர்களான இராமலக்ஷ்மணர்கள் வனத்திற்கு வந்திருப்பதை அறிந்தவனும், இலக்ஷ்மணனால் வினவப்பெற்றவனும், "இவ்விடத்தில் இந்த பெண்ணை விட்டுஓடுங்கள்" என்றுசொல்லும் இராக்ஷஸனை பிரமனுடைய வரத்தால் அநேக ஆயுதங்களாலும், மரணமில்லாதவனும், ஜயந்தன், சதஹ்ரதை, இவர்களின் புத்திரனாகவும், அவனுடைய வார்த்தையால் அறிந்து, இராமன் அவனிடத்தில் மிகவும்கோபமடைந்தார்.

सज्यंचापमथाऽऽरोप्यनिशिताग्रामेणतुङ्गान्शरान्
भित्वास्वस्यतनुं समीक्ष्यरुधिराऽऽदिग्धान्धरण्यागतान् ।
सीतांन्यस्यसराक्षसः प्रकुपितश्चाभ्यद्रवद्राघवम्
शूलंकालमिवामृताशनततेरुद्यम्यभीमंनदन् ॥ ८ ॥

பிறகு வில்லில் நாணேற்றி, இராமன்போடும் பாணங்கள் தன் சரீரத்தைப் பிளந்து, இரத்தத்தால், பூசப்பெற்று, பூமியில் விழுவதைப்பார்த்து, அந்த விராதன் ஸீதையைவிட்டு தேவர்களின் கூட்டத்திற்கு யமன்போன்ற சூலத்தை ஓங்கிக்கொண்டு, மிகவும் கோபமடைந்து, பயங்கரமாக கர்ஜித்துக்கொண்டு இராமனுக்கு எதிராக ஓடிவந்தான்.

बाणाभ्यांविदळय्यशूलमनलोद्भास्वत्सुखड्गाऽऽहतेः
दातारौ परिरभ्य तौ रघुसुतौ स्वस्कन्धयोरावहन् ।
गन्तुंप्राक्रमतद्रुमैर्निबिडितं भीमंवनंयात्वयम्
मार्गोऽस्माकमसौयथाव्रजतिसप्रीत्येतिगूढाऽऽशयौ ॥ ९ ॥

அக்னிபோல் பிரகாசிக்கும் சூலத்தை, இரண்டு பாணங்களால் பிளந்து, கத்திகளால் அடித்துக்கொண்டு, இவன்போகும் வழியே நமக்கும் வழி என்று மனதில் ஸந்தோஷமாய் நினைத்திருக்கும் இராமலக்ஷ்மணர்களை, அந்த இராக்ஷஸன் கட்டித் தன் தோள்களில் சுமந்துகொண்டு, மரங்கள் நெருங்கிய பயங்கரமான வனம் செல்ல ஆரம்பித்தான்.

४ श्रीरामेऽपिसलक्ष्मणे बलवतादूरेऽपनीतेत्वया
मामत्स्यान्तिमृगाहरात्रबलिनामुत्सृज्यरात्रिंचर ।
सीतायाइतिभाषितंव्यसनदंश्रुत्वातुतौ भ्रातरौ
बाहूचिच्छिदतुर्भयेनजगतां क्रुद्धौमनुष्यद्विषः ॥ १० ॥

"ஹே இராக்ஷஸா! பலமுள்ள நீ இராமனையும், இலக்ஷ்மணனோடு வெகுதூரம் தூக்கிக்கொண்டு போனால் மிருகங்கள் என்னை சாப்பிடப் போகின்றன. பலமுள்ள அவர்களை இவ்விடம்விட்டு என்னை எடுத்துக்கொண்டு போகவேண்டும்" என்று துக்கமளிக்கும் ஸீதையின் சொல்லைக்கேட்டு, விராதனுடைய கைகளை அந்த ஸஹோதரர்கள் கோபமடைந்து, உலகங்களின் பயத்தோடு அறுத்தார்கள்.

रक्षोमुष्टिभिरङ्घ्रिभिर्निपतितंनिष्पिष्यभूमौभृशम्
जीवोपेतमुदीक्ष्यतत्त्वधिगलंचाऽऽक्रम्यकण्ठेपदा ।
शस्त्रैरेषनहन्यतेवनतलेश्वभ्रंमहत्खन्यताम्
अत्रैनंनिखनेवहीतिसरघुश्रेष्ठोऽब्रवील्लक्ष्मणम् ॥ ११ ॥

இராக்ஷஸனை கீழே தள்ளி, கால்களாலும், முஷ்டிகளாலும் மிகவும் மிதித்தும், குத்தியும், ஜீவனோடிருப்பதைப் பார்த்து, அந்த இராக்ஷஸனைக் கழுத்தில் காலால் மிதித்துக்கொண்டு, "இவனை ஆயுதங்களால் கொல்லமுடியாது. காட்டில் பெரிய பள்ளம் வெட்ட வேண்டும். அதில் இவனைப் புதைப்போம்", என்று அந்த இராமன் இலக்ஷ்மணனைப் பார்த்து, கூறினார்.

रामंप्राहनिशाचरोरघुपतेज्ञातोऽसिसभ्रातृकः
सश्रीकोनिधिनायकेनविहितोरक्षोऽस्म्यहंतुंबुरुः ।
दुर्योनेरपिमोचितोऽद्यभवतास्वर्गंगमिष्याम्यहम्
रम्भारागकृतापराधगलितस्स्वस्त्यस्त्वमित्रघ्नते ॥ १२ ॥

இராக்ஷஸன் இராமனைப் பார்த்து கூறினான். "ஹே ராமா! உன்னையும், இலக்ஷ்மணனையும், ஸீதையையும் அறிந்துகொண்டேன். தும்புருவான என்னை குபேரன் இராக்ஷஸனாகச்சபித்தான். இப்பொழுது உன்னால் இராக்ஷஸப் பிறவியிலிருந்து விலகி, நான் சுவர்க்கம் செல்லப்போகிறேன். இரம்பையினிடம் மோஹத்தால் செய்த குற்றம் நீங்கியது. சத்துருக்களை ஸம்ஹரிப்பவனே! உனக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும்."

धर्मोऽऽत्माशरभङ्गनामकऋषिस्सोऽप्यर्धकेयोजने
सूर्याऽऽभस्तमुपेहिमङ्गलकृतेश्वभ्रेऽपिमां निक्षिप ।
रक्षोमोक्षकरोऽयमेवसुपथश्चेत्युक्तिमन्तंबलात्
निक्षिप्यावटउन्नतेनगिरिणा सञ्छाद्यसोऽमोदत ॥ १३ ॥

"ஸூர்யன்போல் ஒளிபெற்ற தர்மத்தின் உருவமான சரபங்க முனிவர் ஒன்றரை யோஜனை தூரத்தில் இருக்கிறார். க்ஷேமமடைவதின் பொருட்டு, அவரிடம் போகவேண்டும். என்னையும் பள்ளத்தில் தள்ளவேண்டும். இராக்ஷஸர்களுக்கு மோக்ஷமளிக்கும் நல்வழி இதுதான்" என்று சொல்லும் விராதனை பலத்தால் பள்ளத்தில் தள்ளி, பெரியமலையால் மூடி, அந்த ராமன் ஸந்தோஷமடைந்தார்.

५ रक्षः पीडनकर्शितां स्वसुदृशं संश्लिष्य संहर्षयन्
संप्राप्तश्शरभङ्गतापसगृहं प्रादर्शयत्सोऽद्भुतम् ।
रामोभ्रातरमीडितंसुरगणैर्भूमेरुपर्यास्थितम्
दिव्यंतन्निकटेरथंसुरपतिंछत्राऽऽदिभिर्भूषितम् ॥ १४ ॥

இராமன் இராக்ஷஸனுடைய துன்பத்தால், துயரமடைந்த தன் மனைவியை கட்டிக்கொண்டு, ஸந்தோஷமடைவித்து, சரபங்க முனிவரின் ஆசிரமமடைந்து, தேவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பெற்று, பூமிக்கும் ஆகாயத்திற்கும் நடுவில் இருக்கும் குடை முதலியவைகளால் அலங்கரிக்கப்பெற்ற இந்திரனையும், அவன் ஸமீபத்தில் தேவ ரதத்தையும் இவ்விதமான ஆச்சரியத்தை இலக்ஷ்மணனுக்கும், ஸீதைக்கும் காண்பித்தார்.

रूपंबिभ्रतिपञ्चविंशतिवयस्तेजास्विनस्तेनराः
मन्येऽमुंत्रिदिवेश्वरंतमधुनाज्ञास्यामितिष्ठक्षणम् ।
इत्यादिश्यसहोदरं जनकजां रामेसमीपंगते
पौलस्त्यस्यवधात्परं ध्रुवमयंदृश्योऽभिभाष्योमया ॥ १५ ॥

इत्यामन्त्र्यतपोधनंसुरपतौयातेऽनुगैस्स्वस्तलम्
रामंस्वान्तिकमागतंसमतपास्संपूज्यचाऽऽतिथ्यतः ।
मामानेतुमिहाऽऽगतस्सुरपतिर्ब्रह्माऽऽस्पदंतद्गिरा
त्वांविज्ञायसमागतंचिरमिहद्रष्टुंस्थितोऽस्म्यार्यभोः ॥१६॥

"ஒளியைப்பெற்ற இந்த மனிதர்கள் இருபத்து ஐந்து வயதைப்பெற்றிருக்கிறார்கள். ஆனதால் இவனை இந்திரனாக நினைக்கிறேன். இப்பொழுது அவனை அறிந்து வருகிறேன். க்ஷண நேரம் இருக்கவேண்டும்" என்று இராமன் தம்பிக்கும், மனைவிக்கும் உத்திரவு செய்து, ஸமீபத்தில் வரும்பொழுது, "இராவண வதத்திற்குப் பிறகு இராமனை நிச்சயமாய் நான் பார்க்கப்போகிறேன். பேசப்போகிறேன்."

என்று இந்திரன் முனிவரிடம் சொல்லிக்கொண்டு, ஸேவகர்களோடு சுவர்க்கம் சென்றதும், தவம்பெற்ற அம்முனிவர் தன் ஸமீபத்தில் வந்த இராமனுக்கு அதிதி பூஜைசெய்து, பூஜிக்கத் தகுந்த "ஹே இராமா! என்னை பிரம்மலோகத்திற்கு அழைப்பதற்காக, இந்திரன் இவ்விடம் வந்தான். அவனுடைய வார்த்தையால், நீ இவ்விடம் வந்திருப்பதைத் தெரிந்துகொண்டு, உன்னைப் பார்க்கவேண்டுமென்று நான் வெகுகாலமாக இருக்கிறேன்."

कायक्लेशसमार्जितंस्वसुकृतंगृह्णीष्वमत्साक्षितम्
सद्वृत्ताऽऽढ्यसुतीक्ष्णतापसमयेगच्छाऽऽशुकुर्यात्सुखं ।
तिष्ठात्वक्षणमार्ययावदनघोमुञ्चाम्यसूनादरात्
इत्युक्त्वाज्वलितेऽनलेतनुमसावुत्सृज्यदेवोऽभवत् ॥ १७॥

"நன்னடை நிறைந்த ஹே இராமா! சரீரசிரமத்தால் நான் ஸம்பாதித்த புண்ணியத்தைப்பெற்றுக்கொள். இப்பொழுது ஸுதீக்ஷண முனிவரிடம் செல். அவர் சுகத்தைச் செய்வார். பூஜிக்கத்தகுந்தவனே! இவ்விடத்தில் க்ஷணநேரம் நிற்கவேண்டும். பாபமில்லாமல் பிராணனை விடப்போகிறேன்" என்று சரபங்க முனிவர் சொல்லி, ஜ்வலிக்கும் அக்கினியினியில் சரீரத்தைவிட்டு, தேவனாக ஆனார்.

६ स्वर्लोकं शरभङ्ग एत्य भगवत्यम्भोजजेनार्चिते
तद्गेहस्थमुनीश्वरा रघुपतिं सर्वेऽभ्यगच्छन्नथ ।
ऊचुस्त्वं पृथिवीपतिः पितृरतस्संरक्षनस्तापसान्
रक्षोभ्यस्तपसः कृतस्य भवता ह्यर्धार्धमादीयते ॥ १८ ॥

பகவானை சரபங்க முனிவர் சுவர்க்கலோகம் சென்று, பிரம்ம தேவரால் பூஜிக்கப்பெற்ற பொழுது, அவருடைய ஆசிரமத்திலிருக்கும் ரிஷிகள் பிறகு இராமனுக்கு எதிரில் சென்று கூறினார்கள். "நாங்கள் செய்யும் தவத்தில் நாலில் ஒரு பாகம் நீ பெறுகிறபடியாலும், தந்தையினிடம் அன்புபெற்ற, தரணியின் அதிபதியான தாலும், தவம் செய்யும் எங்களை, அரக்கர்களிடமிருந்து காப்பாற்றவேண்டும்."

नास्त्येवेतरथा गतिस्सतपसां नस्त्वां विनेतीडितः
रामः प्रत्यवदन्मुनीन्वनमिदं प्राप्तोऽस्मि वो रक्षितुम् ।
पित्राज्ञाकरणच्छलेन मुनयो युष्मद्रिपून्हन्मि तान्
पश्यन्त्वद्य बलं सहोदरयुजो मेऽमुं च सर्वे जनाः ॥ १९ ॥

"தவம் செய்யும் எங்களுக்கு, உன்னைத் தவிர வேறு கதி இல்லை" என்று ஸ்தோத்திரம் செய்யும்பொழுது, இராமன் ரிஷிகளைப் பார்த்து "ஹே முனிகளே! தகப்பனாரின் உத்திரவைச் செய்யவேண்டுமென்ற வியாஜத்தால் உங்களைக் காப்பாற்றுவதற்காக கானகம் வந்தேன். உங்களின் சத்துருக்களை, வதம் செய்கிறேன். தம்பியுடன் சேர்ந்த என்னுடைய மிகுந்த பலத்தை, எல்லா ஜனங்களும் இப்பொழுது பார்க்கவேண்டும்" என்று பதில் கூறினார்.

सीतालक्ष्मणसंयुतो रघुपतिः प्राप्तस्सुतीक्ष्णाऽऽश्रमम्
नम्रस्तेन समभ्यर्चयार्थ मुनिना पृष्टाऽऽदरात्स्वागतम् ।
त्वत्सेवां तु विहाय देवसदनं मे नैव तद्राचते
स्वीकुर्वार्य महत्तरं स्वसुकृतं कृच्छ्रं मृगैरन्वते ॥ २० ॥

இராமன் ஸீதாலக்ஷ்மணர்களுடன் சுதீக்ஷ்ணாசிரமமடைந்து, முனியை வணங்கும்பொழுது, அவர் இராமனைப் பார்த்து, அன்போடு நல்வரவை வினவி "ஹே இராமா! உன் ஸேவையை விட்டு சுவர்க்கமும், எனக்கு ஸந்தோஷமாயிருக்கவே இல்லை மிகவும் மிகுந்த என் புண்ணியத்தைப் பெற்றுக்கொள். இவ்விடமிருந்தால், உனக்கு மிருகங்களால் துன்பம் ஏற்படும்" என்று கூறினார்.

रामः प्राहसुतीक्ष्णमार्यधनुषाहन्यांमृगानागतान्
उद्वेगः खलुतेभवेन्मृगहतौनेच्छामिवस्तुंत्विह ।
इत्युक्त्वामुनिनाप्रदत्तमशनंभुक्त्वादिनान्तेस्वयं
सन्ध्याकर्म विधायतत्ररजनीं प्रीतान्तरोऽयापयत् ॥

இராமன் சுதீக்ஷ்ண முனிவரைப் பார்த்து "ஹே சுவாமி! வந்த மிருகங்களை அம்பால் அடிப்பேன், மிருகங்களின் வதத்தால் தங்களுக்கு துக்கம் ஏற்படும் ஆனதால் இவ்விடம் வஸிப்பதற்கு விருப்பமில்லை" என்று கூறி, முனிவர் கொடுத்த உணவை புஜித்து ஸாயங்காலத்தில் ஸந்தியா வந்தனம் செய்து மனங்களித்து அவ்விடத்தில் அன்றிரவைக் கழித்தார்.

८ प्रातःकर्मविधायनित्यविहितं सूर्येमनागुत्थिते
रामस्सानुगतस्तपस्विनममुंनत्वागृहीत्वाऽऽशिषः ।
तस्यानिष्टनिवारिणीः प्रतपसांपर्णाऽऽलयान्वीक्षितुम्
भ्रात्राऽऽबद्धसुखड्गबाणशरधिस्तस्मात्प्रतस्थेस्त्रिया ॥ २२ ॥

இராமன் காலையில் நித்தியகர்மாவை முடித்து சூரியன் கொஞ்சம் உதித்ததும் அந்த சுதீக்ஷ்ண முனியை நமஸ்கரித்து கஷ்டங்களை விலக்கும் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு பாணம் வில் கத்தி இவைகளை எடுத்துக்கொண்டு ரிஷிகளின் ஆசிரமத்தைப் பார்ப்பதற்காக தம்பியோடும் மனைவியோடும் பின்வருபவர்களோடும் அவ்விடமிருந்து பிரயாணம் செய்தார்.

२ सीताकान्तमभाषतप्रणयतो धर्मोमुनीनामयम्
कर्तव्यः पुरुषेणयस्सनभवेन्मिथ्यावचो भाषणम् ।
अन्यस्त्रीपरतां विनेवरिपुतां रौद्रत्वमव्याहतम्
नत्वय्यार्यसुताऽऽदिमद्वयमिहत्वंमुंचतस्त्वन्तिमम् ॥ २३ ॥

ஸீதை அன்பினுல் கணவனைப் பார்த்து கூறினுள். "பொய் சொல்லுதல், பிறர் மனைவியிடம் விருப்பம், பகையன்றி தடுக்க முடியாத துன்பம் செய்தல் இவைகளை நீக்கிய புருஷன் முனி களின் தர்மத்தைச் செய்வான், "ஹே ஆர்ய புத்திரா! முன் சொல்லிய இரண்டும் தங்களிடத்தில் இருக்கவில்லை. கடைசி யானதைத் தாங்கள் இவ்விடத்தில் தள்ளிவிடவேண்டும்."

गोप्तुंदण्डककाननास्थितमुनी न्रक्षोवधस्संश्रुतः
यत्कान्तारमुपाऽऽगातोऽसि विजनं भ्रात्राधृतास्त्रव्रजः ।
वृत्तंतेत्वविरोध्यनिग्रहकरंनिश्श्रेयसंसन्ततम्
संचिन्त्यात्रतवाऽऽगतिर्न तुपतेमेरोचतेशृण्विदम् ॥

"ஹே நாதா! தண்டகாரண்யத்திலிருக்கும் ரிஷிகளைக் காப்பாற்றுவதற்காக இராக்ஷஸர்களின் வத்தைப் பிரதிக்ஞை செய்து அஸ்திரங்களின் கூட்டத்தை எடுத்துக்கொண்டு ஸஹோ தரனுடன் ஜனங்களில்லாத வனத்திற்கு தாங்கள் வந்திருக்கிறீர் கள். தங்களின் நடையோபகையற்றவர்களை பலிவாங்குவதில்லை. எப்பொழுதும் க்ஷேமத்தை நினைக்கும் எனக்கு இவ்விடத்தில் தங் களின் வரவோ ஸம்மதமில்லை. அதன் காரணத்தைக் கேட்க வேண்டும்."

यत्कान्तारगतान्विलोक्यनिखिलान्नूनंप्रमुश्चेश्शरान्
क्षत्राणामाधिकंबलंवितनुते चापोद्रुमोऽग्नेरिव ।
निस्त्रिंशंमघवत्प्रदत्तमनिशंसंधारयन्तापसः
रौद्रींस्वांमतिमादधन्नियमतो भ्रष्टोजगामासुखम् ॥ २५ ॥

"காட்டிலிருப்பவர்களைப்பார்த்து எல்லோர்களிடமும் தாங்கள் நிச்சயமாய் பாணம் விடுவீர்கள். மரங்கள் அக்கினிக்கு பலம் கொடுப்பதுபோல், வில் க்ஷத்திரியர்களுக்கு மிகுந்த பலத்தை உண்டுபண்ணுகிறது. இந்திரன் (வைத்திருக்கும்படி) கொடுத்த கத்தியை எப்பொழுதும் கையில் தரித்த ரிஷியும் துஷ்ட புத்தியைப் பெற்று, தவத்திலிருந்து நழுவி நரகமடைந்தான்."

प्रीतिंकुर्वतुलामिहश्वशुरयोर्धर्मस्यसंसेवनात्
धर्मादेवभवेत्पुमर्थइतरोनृणां जगत्तद्वशम् ।
राज्यंप्राप्यसशस्त्रकः कुरुपुनस्त्वंक्षत्रधर्मंभृशम्
स्त्रीबुद्धेरिदमुक्तमार्यसुततेयद्रोचतेतत्कुरु ॥ ॥ २६ ॥

"ஹே ஆர்ய புத்திரா! இவ்விடத்தில் தாங்கள் தர்மநடையால் மாமியார், மாமனார்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தைச் செய்யவேண்டும். தர்மத்தாலே மனிதர்களுக்கு மற்ற புருஷார்த்தங்களும் உண்டாகும். தர்மத்திற்கு உலகம் வசமாயிருக்கிறது. மறுபடியும் இராஜ்யத்தை அடைந்து, தாங்கள் ஆயுதங்களோடு கூட க்ஷத்திரிய தர்மத்தை நன்றாகச் செய்யவேண்டும். இதை பெண்புத்தியால் பிதற்றினேன். தங்களுக்கு எது சம்மதமோ அதைச் செய்யவேண்டும்."

१० रामः प्रत्यवदत्प्रियां जनकजां जानामितेसौहृदम्
मां सीतेशरणंगता नियमिनस्संपीडिता राक्षसैः ।
स्त्रातुं क्रतुसूदनान्शमयितुंमामर्थयन्ताथते
सद्यस्संश्रुतिरप्यकारिचतथाजह्यां प्रतिज्ञांकथम् ॥ २७ ॥

இராமன், மனைவியான ஸீதையைப்பார்த்து, பதில் கூறினார். "ஹே ஸீதே! என்னிடம் இருக்கும் உன் அன்பை நான் அறிகிறேன். ரிஷிகள் இராக்ஷஸர்களால் துன்பமடைந்து, தங்களைக் காப்பாற்றவும், வேள்விகளை அழிக்கும் அரக்கர்களை அழிக்கவும், என்னைச் சரணமடைந்து வேண்டினார்கள். உடனே அவ்விதம் பிரதிக்ஞையும் செய்யப்பெற்றது. அப்பிரதிக்ஞையை எவ்விதம் கைவிடுவேன்."

जह्यां जीवितमात्मनोऽनुजमिमंतत्सन्निभं प्रेयसि
प्राणेभ्यो भवतीं प्रतिश्रवमृतेसंखिद्यसेकिंवृथा ।
त्वद्वाक्यंचिरसौहृदेनजनितंश्रुत्वाऽनघे प्रीतिमान्
अस्म्येवंननियुज्यतेत्वदयितोमद्धर्मचारिण्यसि ॥ २८ ॥

"பிராணன்களைக்காட்டிலும் பிரியம் பெற்றவளே! தன் பிராணனையும், அதற்கு ஸமமான தம்பியையும், உன்னையும் கைவிடுவேன், பிரதிக்ஞையைக் கைவிடமாட்டேன். நீ விணுக ஏன் வருந்துகிருய்? வெகுகாலமாயிருந்த அன்பால் சொன்ன உன் மொழியைக் கேட்டு மகிழுகிறேன். ஹே குற்றமற்றவளே! அன்பு அற்றவர்களிடம் இன்பமாய் இவ்விதம் சொல்லமாட்டார்கள், அதனுல் என் தர்ம மனைவியாக இருக்கிருய்."

११ रामोऽग्रे प्रययौ ततोजनकजा सौमित्रिरात्तेषुधिः
शैलप्रस्थवनाऽऽपगास्सजलजंपश्यन्सरोऽरण्यजान् ।
सायंरम्यतटाकमच्छसलिलंगीताऽऽरवंतज्जले
श्रुत्वाधर्मभृतंत्वपृच्छदनघं तत्कारणं विस्मितः ॥ २९ ॥

"முன்னுல் இராமனும், பிறகு ஸீதையும், பிறகு வில்லை எடுத்துக்கொண்ட இலக்ஷ்மணனும், பிரயாணம் செய்தார்கள். மலைகளின் தாழ்வரைகளையும், வனங்களையும், நதிகளையும், ஜலஜந்துக்கள் தாமரை முதலியவைகளோடு கூடிய குளங்களையும், காட்டு மிருகங்களையும் பார்த்துக்கொண்டு ஸாயங்காலத்தில் சுத்தஜலமுள்ள அழகிய தடாகத்தைப்பார்த்து அதன் ஜலத்தில் கான சப்தத்தைக்கேட்டு இராமன் ஆச்சரியமடைந்து குற்றமற்ற அதன் காரணத்தை தர்மபிருத் என்ற முனிவரிடம் வினவினுர்"

तीव्रस्याऽऽचरणंमुनेः प्रतपसश्श्रीमाण्डकर्णेरिह
स्वर्गिप्रेषितपञ्चबाणमदकृत्पञ्चाप्सरोऽभ्यागतिं ।
अन्तर्वापिगृहंविधायमुनिना तत्क्रीडनंतत्कृतम्
भूषागीतरवंत्वहर्निशभवं रामो विवेदानुगात् ॥ ३० ॥

இவ்விடத்தில் மாண்டகர்ணி முனிவர் கடுமையாக மிருந்த தவம் செய்ததையும். இந்திரனால் அனுப்பப்பெற்ற மன்மதனுக்கு தங்கொடுக்கும் ஐந்து தேவப்பெண்களின் வரவையும், குளத்திற்குள் வீடு கட்டிக்கொண்டு அதில் அந்த ரிஷியோடு அப்பெண்களின் விளையாடுதலையும் அதனால் இராப்பகலாக உண்டான ஆபரணங்கள் கானங்கள் இவைகளின் சப்தத்தையும் இராமன் பின்தொடர்ந்துவரும் தர்மபிருத் முனிவரிடமிருந்து அறிந்தார்.

रामः प्राप्यतपस्विनांदयितया भ्रात्राऽऽश्रमानश्रमः
तैस्सर्वैरभिपूजितस्समवसत्पर्यायतस्तत्रसः ।
मासान्षट्चतुरः क्वचिद्दशतथा संवत्सरान्यापयन्
सन्नक्लिष्टतयासुतीक्ष्णसदनं भूयोऽभिपद्याब्रवीत् ॥३१॥

இராமன் தம்பியோடும், மனைவியோடும், சிரமமில்லாமல் ரிஷிகளின் ஆச்ரமங்களுக்குச் சென்று அவர்கள் எல்லோராலும் பூஜிக்கப்பெற்று அந்த ரிஷ்யாசிரமங்களில் வரிசையாக சிலவிடத்தில் ஆறுமாஸங்களையும் சிலவிடத்தில் நான்கு மாஸங்களையும் அப்படியே துன்பமில்லாமல் இருந்துகொண்டு பத்துவருஷங்களையும் கழித்து மறுபடியும் சுதீக்ஷ்ணருடைய ஆசிரமத்திற்கு வந்து அவரிடம் கூறினார்.

आस्तेऽगस्त्यमुनिर्वनेऽत्रसतपाइत्युच्यतेतापसैः
कुत्राऽऽस्तेभगवानितिप्रणतिभिस्संप्रार्थितस्याऽऽननात् ।
तस्याऽऽज्ञायमहापथंप्रचलितस्तूर्णंततःपिप्पली
कान्तारंसमुपेत्यराघवइदंप्राहानुजंहर्षतः ॥ ३२ ॥

இவ்விடத்தில் அகஸ்தியர் தவம் செய்துகொண்டு இருக்கிறார் என்று ரிஷிகள் சொல்லுகிறார்கள். அந்த பகவான் எங்கே இருக்கிறார்? என்று சுதீக்ஷ்ணரை நமஸ்கரித்து வேண்டி அவர் முகமாக வழியைத் தெரிந்துகொண்டு அவ்விடமிருந்து சீக்கிரம் பிரயாணம் செய்து பிப்பிலிவனத்திற்கு வந்து இராமன் ஸந்தோஷமாகத் தம்பியைப் பார்த்து கூறினார்.

वत्साऽगस्त्यसहोदरस्यनिलयस्त्वत्रेतिमन्येयतः
धूमः केतुरवेक्ष्यतेहुतभुजः प्रीतस्यहव्यैस्सदा ।
यद्भ्रातान्व्यपनीयमृत्युमखिलक्षेमायदिक्दक्षिणा
ऽऽक्रान्ताक्रूरमना अभूद्दितिसुतोवातापिनाचेल्वलः॥३३॥

"ஹே குழந்தாய்! எப்பொழுதும் ஹவிஸ்களால் ஸந்தோஷமடைந்த அக்கினியின் துவஜமான புகைத் தெரிகிறபடியால் இவ்விடத்தில் அகஸ்திய ஸஹோதரருடைய ஆசிரமம் இருக்கிறதென்று நினைக்கிறேன். இவருடைய ஸஹோதரரான அகஸ்தியர் துன்பங்களை நிவர்த்தி செய்து எல்லோர்களின் க்ஷேமத்தின் பொருட்டு தெற்குதிசையில் காலடிவைத்தார். குற்றமுள்ள மனம்பெற்ற வாதாபி, இல்வலி என்ற அசுரர்கள் இருந்தார்கள்."

भूदेवाऽऽकृतिमेत्यसंस्कृतगिरंविप्रानथाऽऽमन्त्रयन्
श्राद्धायाकरुणस्सहोदरममुंमेषायितंसंस्कृतम् ।
कृत्वा भोजयतिस्मतान्सविधिवद्वातापे आयाहिभोः
इत्युक्त्याविदळय्यतत्तनुमपिस्वस्यान्तिकंप्रापयत् ॥ ३४॥

பிறகு, அந்த இல்வலி ஸம்ஸ்கிருதம் பேசும் பிராமண வடிவம்பெற்று சிரார்த்தத்திற்காக பிராமணர்களை வரித்து தயவில்லாமல் ஸஹோதரனை வாதாபியை ஆடாகச் செய்து சமைத்து அந்த பிராமணர்களுக்கு விதிப்படி போஜனம் செய்வித்தான். ஹே வாதாபி! வாவென்று சொல்லால் அவர்களின் சரீரத்தைப் பிளக்கச்செய்து அவனைத் தன் ஸமீபத்திலும் வரவழைத்துக் கொண்டான்.

येनामर्त्यनुतेनपुण्यतनुनातस्मिन्मुदाभक्षिते
तस्यानिर्गमनेनकोपकलुषस्सोऽभिद्रवन्निल्वलः ।
निर्दग्धो निधनंगतोऽनलनिभस्वीयेक्षणेनद्रुतम्
विप्रानुग्रहवांछितेनरचितंकर्माखिलैर्दुष्करम् ॥ ३५ ॥

புண்ணிய சரீரம்பெற்ற அகஸ்தியர் 'தேவர்களால் ஆதிக்கப் பெற்று அந்த வாதாபியை ஸந்தோஷமாய் பக்ஷித்தபொழுது அவன் வெளியில் வராததால் இல்வலன் கோபத்தால் கலங்கி எதிரில் ஓடிவந்தான். அக்னிக்கு ஸமமான அகஸ்தியருடைய கண்பார்வையால் பொசுக்கப்பெற்று ஒழிந்தான். எல்லோர்களாலும் செய்யமுடியாத காரியத்தை பிராமணர்களுக்கு அருள் புரிய விரும்பி சீக்கிரம் அகஸ்தியர் செய்தார்.

सन्ध्यामस्तमुपाऽऽगते दिनकरेप्राप्तामुपास्तिमाम्
प्राप्यागस्त्यसहोदरस्यनिलयंरामोऽनुजेनानमत् ।
तद्दत्तानिफलान्यदन्नगमयद्रात्रिंप्रभातेमुनिम्
चाऽऽमन्त्र्याथविलोकितुंघटभुवंहृष्टः प्रतस्थेततः ॥ ३६ ॥

சூரியன் அஸ்தமனமடைந்தும் வந்த பின் ஸந்தியை உபாஸித்து இராமன் தம்பியோடு அகஸ்திய ஸஹோதரருடைய ஆசிரமத்தை அடைந்து முனியை வணங்கினர். அவர் கொடுத்த பழங்களைப் புஜித்து இரவைக் கழித்தார். பிறகு காலையில் அந்த ரிஷியிடம் சொல்லிக்கொண்டு ஸந்தோஷமாய் அகஸ்தியரைப் பார்ப்பதற்காக அவ்விடமிருந்து பிரயாணம் செய்தார்.

दृष्ट्वाकाननपादपान्कुसुमितान्वल्लीभिरालिङ्गितान्
निर्वैरानभितोमृगान्रघुपतिः प्राहानुजंविस्मितः ।
धूमप्रावृतकाननो घटभुवस्स्यादाश्रमोऽभ्यर्णगः
नाऽऽगच्छन्तिभयेनयंनिशिचरा अद्यापिसद्विक्रमाः ॥

கொடிகளால் சுற்றப்பெற்ற புஷ்பித்த காட்டு மரங்களையும், விரோதமில்லாத மிருகங்களையும் நான்கு புறத்திலும் பார்த்து இராமன் ஆச்சரியமடைந்து தம்பியைப்பார்த்து கூறினர். பலமுள்ள அரக்கர்களும் பயந்துகொண்டு இப்பொழுதும் இவ்விடத்தில் வராமலிருப்பதால் காடுகளில் புகை சூழ்ந்த அகஸ்தியாசிரமம் ஸமீபத்தில் இருக்கும்.

रोद्धुंभास्करमार्गमप्यतिबलो विन्ध्यः प्रवृद्धोगिरिः
यस्याऽऽज्ञांकलयन्स्वमूर्ध्निधरणीमग्नोऽभवत्सर्वदा ।
अस्मान्लोकहितस्सनेष्यतिमहान्निश्श्रेयसंसेवकान्
आराध्यात्रमुनिंवनाधिवसतेश्शेषंनिवत्स्यामितम् ॥ ३८ ॥

சூரியனுடைய வழியைக்கூட தடுப்பதற்காக மிகவும் வளர்ந்த அதிக பலம்பெற்ற விந்தியபர்வதம் இவருடைய உத்திரவை தலைமேல் வஹித்து எப்பொழுதும் பூமியில் புதைந்திருக்கிறது. உலகங்களுக்கு நன்மை செய்யும் அந்த மஹான் ஸேவகர்களான நமக்கும் அதிக நன்மை செய்வார். இவ்விடத்தில் இருந்து இவரை ஸேவித்து வனவாஸத்தின் மீதிகாலத்தைக் கழிக்கப் போகிறேன்.

एनान्नित्यमुपाऽऽसतेक्रतुभुजो जीवेन्नमिथ्यावचाः
दुर्वृत्तोऽत्रतपःकृतस्सुरपदंयान्त्युज्वलाङ्गाद्रुतम् ।
देवा अत्रतपस्यतामभिमतं प्रीताः प्रयच्छन्तितम्
सौमित्रेप्रविशाऽऽश्रमंमुनिपतेर्मां प्राप्तमावेदय ॥ ३९ ॥

"யாகத்தின் ஹவிஸ்ஸை புஜிக்கும் தேவர்கள் இவரை எப்பொழும் உபாஸிக்கிறார்கள். இவ்விடத்தில் பொய் சொல்பவனும், கெட்டநடை செய்கிறவனும் பிழைத்திருக்கமாட்டான். தவம் செய்தவர்கள் சீக்கிரம் தேவசரீரம் பெற்று சுவர்க்கம் செல்லுகிறார்கள். இவ்விடத்தில் தவம் செய்தவர்களுக்கு தேவர்கள் ஸந்தோஷமடைந்து விருப்பத்தைக் கொடுக்கிறார்கள். ஹே இலக்ஷ்மணா! அந்த அகஸ்தியருடைய ஆசிரமத்திற்குள் செல். நான் வந்திருப்பதைத் தெரிவிக்கவேண்டும்."

१२ रामस्याऽऽगतिमात्मनश्चिरमतां सौमित्रिसंचोदित
च्छात्रेणातनुहर्षतो निगदितां श्रुत्वाघटस्याऽऽत्मजः ।
वैदेहीरघुनायकौहृदयतो जीवेश्वरावागतौ
मन्वानस्स्वगृहान्तरंसमनयत्सेवाऽऽर्थिदेवैर्वृतम् ॥ ४० ॥

தான் வெகுகாலமாக விரும்பிய இராமனுடைய வரவை, இலக்ஷ்மணனால் தூண்டப்பெற்று அதிக ஸந்தோஷமாக சொல்லும் சிஷ்யனிடமிருந்து தெரிந்துகொண்டு அகஸ்தியர், ஸீதை, இராமன் இவர்களை மனதிலிருந்துவந்த ஜீவேசுவரர்களாக நினைத்து ஸேவையை விரும்பி தேவர்கள் சூழ்ந்திருக்கும் தன் ஆசிரமத்திற்குள் அழைத்துவந்தார்.

ब्रह्माऽऽदीनमरान्ससप्तदशतान्वीक्ष्योत्सुकोराघवः
कोट्यर्कांशुनिभप्रभंचरणयो र्जग्राहकुम्भोद्भवम् ।
पृष्टानामयमातिथेयमातिथेः पुष्पैः फलैः प्रीणनम्
दातारंहरिकार्मुकस्यविधिनादत्तस्यबाणस्यच ॥ ४१ ॥

பிரம்மா முதலிய (பிரம்மா, அக்கினி, விஷ்ணு, மஹேந்திரன், சூரியன், சந்திரன், பகன், குபேரன், தாதா, விதாதா, வாயு, அநந்தன், காயத்ரீ, வஸு, வருணன, கார்த்திகேயன், தர்மன், பதினேழு தேவதைகளைப் பார்த்து, இராமன் ஸந்தோஷமடைந்து, கோடி ஸூர்யர்களின் கிரணங்களுக்கு ஸமமான ஒளியைப் பெற்றவரும், ஆரோக்கியத்தை வினவினவரும், புஷ்பங்களாலும், பழங்களாலும் விருந்தாளிகளுக்கு ஸந்தோஷமளிப்பவரும், விருந்தாளிகளை உபசரிக்கும் தன்மைபெற்றவரும், விஷ்ணு தனுஸ்ஸையும், பிரம்மா கொடுத்த பாணத்தையும் கொடுக்கும், அகஸ்திய முனிவரின் திருவடிகளில் நமஸ்கரித்தார்.

तूणी अक्षयसायकौसुरपतेः खड्गंहिरण्याङ्कितम्
दत्वायेनहरिर्विजित्यदितिजान्प्रापासुरेभ्याश्श्रियम् ।
सूर्योऽस्ताचलमारुरोहभगवान्संध्यामुपास्स्वप
प्रीत्येत्यात्तनिदेशकोरघुपतिस्तत्रव्यनैषीन्निशाम् ॥ ४२ ॥

குறைவற்ற அம்புகளைப்பெற்ற இந்திரனுடைய இரண்டு அம்பு பெட்டிகளையும், நாராயணன் அசுரர்களை ஜயித்து, தேவர்களின் பொருட்டு ஐசுவரிய மளித்ததும், சுவர்ணத்தால் பூண் பிடித்ததுமான கத்தியையும் கொடுத்து, "சூரிய பகவான் அஸ்த

மனமடைந்தார். ஸந்தியா வந்தனத்தைச் செய்து, ஸந்தோஷ மாய் உறங்கவேண்டும்" என்று அகஸ்தியரிடம் உத்திரவுபெற்று, இராமன் அன்றிரவை அவ்விடத்தில் கழித்தார்.

पूर्वाह्णोचितमाचरन्रघुपतिस्सौस्नातिकंकुम्भजम्
प्रत्याहस्वपितुर्गृहेयदभवत्सौख्यंतदत्रेतिसः ।
पित्रादिष्टवनाधिवाससमयस्सन्तारितः प्रायशः
क्षेमेणव्यपनीयशेषमनघंतातंचरेत्युक्तिगम् ॥ ४३ ॥

இராமன் காலையில் செய்யவேண்டிய நித்தியகர்மாவைச் செய்து, நல்ல ஸ்னானத்தை வினவுகிறவரும், "தந்தை உத்திரவு செய்த வனவாஸத்தில் மிகுந்தகாலம் சென்றது. மீதி இருக்கும் காலத்தையும் க்ஷேமமாகக் கழித்து, தந்தையைப் பாபமற்றவராய் செய்யவேண்டும்" என்று சொல்லும் அகஸ்தியரைப் பார்த்துத் "தன் பிதாவின் கிருஹத்தில் இருக்கும் சுகம், தங்களின் கிருஹத்திலுமிருக்கிறது" என்று பதில் கூறினார்.

देशस्यास्य विनिर्गतां सुविपदंसम्पत्तिमभ्यागताम्
रामायाकथयन्निजाऽऽगमनतः कुम्भोद्भवस्तापसः ।
त्यक्तोदण्डकभूभृतैषविषयस्सूनोर्भृगोश्शापतः
हीनोवृक्षलताभिरुग्रकृतिभिस्सोपद्रवोराक्षसैः ॥ ४४ ॥

அகஸ்தியர் தன் வரவால் இந்த தேசத்திற்கு துன்பம் விலகி, ஸம்பத்தின் வரவை இராமனிடம் கூறினார். "இந்த தேசம் பிருகு புத்திரனுடைய சாபத்தால் தண்டக பூபதியால் கைவிடப்பெற்று, கொடி, செடிகள், மரங்கள் இல்லாமலும், பயங்கரமான உருவம் பெற்ற இராக்ஷஸர்களால், துன்பம் பெற்றும், இருந்தது."

दैवादत्रसमागतेनहिमवच्छैलान्मयात्रारिदाः
वर्षन्तिस्मयथेष्टमम्बुतपसाऽऽनीताद्रुमानन्दनात् ।
नद्यश्चामृतपाथसोदनुसुतास्त्वत्प्राप्तिरुष्टामुनीन्
हिंसन्त्यद्यनिराकुरुप्रशमितान्ब्रह्मक्रुधारक्षसः ॥ ४५ ॥

"தெய்வத்தின் செயலால் ஹிமயமலையிலிருந்து, நான் வந்து தவத்தால் மேகங்களை வரவழித்து, வேண்டியவரை ஜலத்தை வர்ஷிக்கச் செய்தேன். இந்திரனுடைய நந்தவனத்திலிருந்து,மரங்களையும்,அமிருதம் போன்ற ஜலம்பெற்ற நதிகளையும், வரவழைத்தேன். இராக்ஷஸர்கள் உன் வரவால் கோபமடைந்து, ரிஷிகளை ஹிம்ஸிக்கிறார்கள். ஹே இராமா! பிராமணர்களின் கோபத்தால் அழிவுபெற்ற அரக்கர்களை இப்பொழுது நீ சிக்ஷிக்கவேண்டும்."

१३ रामप्रीतिमुपाऽऽगतोऽसिभवतोभ्रात्रास्त्रियाऽभ्यागतेः
निश्शेषंकुरुमार्गखेदमनुगामत्राधिवासात्प्रियाम् ।
सौगुण्यैकनिधिंप्रहर्षयसतींवेद्मित्वदिष्टंतपे
वीर्याद्यान्निखिलोऽपिवेत्स्यति जनस्त्वंव्यक्तमत्रास्थितम् ॥

"ஹே இராமா நீ தம்பியோடும் மனைவியோடும் இவ்விடம் வந்ததால் நான் ஸந்தோஷமடைகிறேன். வழி நடந்ததால் வந்த சிரமத்தை விலக்கி விடு. பின் தொடர்ந்து வந்தவளும், நற்குணங்களுக்கு ஓரிடமும், அன்பு பெற்ற பதிவிரதையுமான ஸீதையை ஸந்தோஷமடைவிக்கவேண்டும் இவ்விடத்தில் இருக்கும் தன்னை, பிரகாசமாய் எல்லா ஜனங்களும் அறியப்போகிறார்கள் என்று உன் விருப்பத்தைத்தவத்தின் பலத்தால் அறிகிறேன்."

वृक्षैरन्वितईडितामभिगतो गोदावरींसौख्यदः
देशः पञ्चवटीति विश्रुतइतस्सोऽस्तिद्वययोजने ।
कान्तारंसमधूकवृक्षनिचयं तस्योत्तरेणव्रज
न्यग्रोधंस्थलमेत्यभोरुपगिरंतप्रीतिमानावस ॥ ४७ ॥

"மரங்களோடு கூடியதும், துதிக்கப்பெற்ற கோதாவரியை அடைந்ததும், சுகங்கொடுக்கும் பஞ்சவடி என்ற பிரசித்தமான தேசம் இவ்விடமிருந்து இரண்டு யோஜனை தூரத்தில் இருக்கிறது. மதூக வனத்திற்குச்சென்று, அதற்கு வடக்காக ஆலமரத்தை அடைந்து, போக வேண்டும்- (மேடான) பொட்டலையும் அடைந்து, மலையின் ஸமீபத்தில் அத்தேசம் சென்று, ஸந்தோஷமாய் அவ்விடத்தில் குடி யிருக்க வேண்டும்."

१४ रामोऽगस्त्यनिदेशतः प्रचलितोमध्येऽध्वतद्वेश्मनः ।
गृद्धं वीक्ष्यवटस्थमूर्जिततनुंमत्वा त्रिथामाचरम् ।
कोऽसीतिन्ययुनक्सखातवपितुर्नाम्नाजटायुस्सुतः
श्येन्यावत्सतवोपकारकरणस्तेनेत्यवाच्यादरात् ॥ ४८ ॥

இராமன் அகஸ்தியருடைய உத்திரவால், அவருடைய ஆச்ரமத்திலிருந்து, பிரயாணம் செய்து, நடு வழியில் ஆலமரத்தி லிருக்கும் பலமான சரீரம் பெற்ற கழுகைப்பார்த்து, இராக்ஷஸனாக நினைத்து, "நீ யார்" என்று வினவினர். "ஹே குழந்தாய்! நான் உன் தந்தையின் ஸ்னேஹிதன். கழுகின் புத்திரன். ஜடாயு என்று பெயர். உனக்கு உதவி செய்கிறேன்" என்று அது அன்போடு கூறினது.

१५ सीतां पालयितुंजटायुषमथप्रेम्णाऽऽदिशन्प्रेयसे
भ्रात्रेपञ्चवटीमुपत्यनिलयं कर्तुंवृतंपादपैः ।
नेदिष्ठानळिनीशिवाम्बुभरिता गोदावरीयस्यसा
दत्वाऽऽश्लेषमुवासतत्कृतनतीं रामस्ससीतस्सुखी ॥ ४९॥

ஸீதையைக்காப்பாற்றும்படி, ஜடாயுவுக்கு அன்பால் உத்திரவு செய்து, இராமன் பஞ்சவடிக்கு சென்று, தாமரைகளைப்பெற்றதும், புண்ய தீர்த்தம் நிறைந்ததுமான கோதாவரிக்கு ஸமீபத்தில், மரங்களால் சூழப்பெற்ற கிருஹத்தை நிர்மாணம் செய்த பிரியமுள்ள ஸஹோதரனைக்கட்டிக்கொண்டு, அவனால் வணங்கப்பெற்று, ஸீதையோடு சுகமாக வஸித்தார்.

१६ हेमन्तस्ससमाजगामसतपोविद्वेषिविध्वंसन
श्रद्धायारघुनायकायसमयंदातुंसचेताइव ।
तस्मिन्ब्राह्ममुहूर्तएवसययौ स्नानायगोदावरीम्
सस्त्रीकः परितोविलोकयघटभृद्भ्रात्रेत्थमाभाष्यत ॥ ५०॥

தவம் செய்யும் ரிஷிகளின் சத்ருக்களை ஸம்ஹரிக்க வேண்டுமென்கிற இராமனுடைய கருத்திற்கு சமயம் கொடுக்க வேண்டுமென்று மனம் பெற்றது போல் அந்த ஹேமந்தருது வந்தது. அந்த ஸமயத்தில் இராமன் மனைவியோடு பிராம்மமுஹூர்த்தத்திலே ஸ்நானம் செய்வதற்காக கோதாவரிக்குச்சென்றார். குடத்தை எடுத்துக்கொண்டு வரும் லக்ஷ்மணன் நான்கு புறமும் பார்த்து இவ்விதம் கூறினான்.

नीहारेणदिशोवृतास्तनुभृतां भीतिंगतानामिव
ज्ञायन्तेनमनाकृताग्रयणका अर्चन्तिसन्तः पितॄन् ।
भास्वान्यौवनमत्तया कबळितोवृद्धस्स्त्रियेवात्रन
प्राभातिद्विगुणः प्रवातिपवनश्शीतत्वतोऽद्याऽऽर्यसः ॥

"ஹே அண்ணா! திசைகள் பனியால் மூடப்பெற்று பயந்த மனிதர்களுக்குத் தெரியாமலிருப்பது போல் மனிதர்களுக்குக் கொஞ்சங்கூடத்தெரியவில்லை. பெரியோர்கள் ஆக்ரயண இஷ்டி செய்து பித்ருக்களுக்கு சிராத்தம் செய்கிறார்கள். யௌவனத்தால் மதம் பெற்ற பெண்ணின் வசமான கிழவன் போல் இக்காலத்தில் சூரியன் பிரகாசிக்க வில்லை. இப்பொழுது குளுமை இரட்டித்ததென்றால் காற்று வீசுகிறது."

धर्माऽऽत्मामरतः पुरेऽव्यसनवान्क्रूर्यात्तपस्त्वद्रतः
त्यक्त्वाराज्यसुखंतलेऽतिशिशिरे भूम्याश्शयीतानघः ।
प्रातश्शीततराम्भसिव्रतकरस्स्नायात्सरय्वाः कथम्
कैकेय्या अतिदुर्नयस्यवसतेर्मातुः खलत्वं जहौ ॥ ५२ ॥

"குற்றமற்ற தர்மத்தின் உருவமான பரதன் உன்னிடத்தில் அன்பு பெற்று துக்கத்தால் பட்டணத்தில் இராஜ்ய சுகத்தை விட்டு மிகவும் குளுமையான பூமியின் தலத்தில் உறங்குவான். விரதங்களைச்செய்து கொண்டு காலையில் குளிர்ந்த சரயூ நதியின் ஜலத்தில் எவ்விதம் ஸ்நானம் செய்வான்! அதிக கெட்ட நடைக்கு இருப்பிடமான தாயார் கைகேயியினுடைய துஷ்டத்தனத்தைத் துறந்தான்."

पत्यौसच्चरितेसुते कथमभूत्क्रूराऽऽशया कैकयी
सौमित्रौब्रुवतीत्यसोढजननीनिन्दोऽब्रवीद्राघवः ।
मुञ्चाम्बापरिवादमार्यभरतंस्तुह्यद्यमन्मानसम्
धीरंयच्चरितुंवनेभरतगंतद्दृश्यतेकातरत् ॥ ५३ ॥

"புருஷனும் புத்திரனும் நன்னடையாயிருக்கும் பொழுது கைகேயி எவ்விதம் கெட்ட மனம் பெற்றாள்" என்று இலக்ஷ்மணன் சொல்லும்பொழுது இராமன் தாயாருடைய நிந்தையைப் பொறுக்காமல் இலக்ஷ்மணனைப்பார்த்துக் கூறினார். "தாயாருடைய நிந்தையை விடவேண்டும். நன்னடை பெற்ற பரதனை ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். இப்பொழுது வனத்தில் ஸஞ்சரிப்பதற்கு தைரியம் பெற்ற என்மனமும் பரதனித்தில் சென்று பயமடைகிறது."

तद्वाक्यानिविचिन्तयामिसुधयातुल्यानिसभ्रातृकम्
तंपश्येयपुनः कदेति विलपन्सम्प्राप्यगोदावरीम् ।
स्नात्वादारयुतः पितॄनपिसुरान्सन्तर्प्यसूर्यन्नमन्
पत्नीभ्रातृयुतोव्यराजतहरस्साम्बोयथानन्दिना ॥ ५४ ॥

"அமிருதத்துக்கு ஸமமான அந்த பரதனுடைய சொற்களை நினைக்கிறேன். சத்ருக்னனோடு அவனை மறுபடியும் எப்பொழுது காணுவேன்" என்று புலம்பிக்கொண்டு இராமன் கோதாவரியை அடைந்து மனைவியோடு ஸ்நானம் செய்து சூரியனை வணங்கி சிவபெருமான் அம்பிகையோடும், நந்திகேஸ்வரனோடும், இருப்பது போல் மனைவி, தம்பி, இவர்களோடு விளங்கினார்.

१७ गोदावर्युदकेदिनाऽऽदिमविधिंनिर्वृत्यरामंगतम्
पर्णागारमुपाऽऽश्रितंनियमिभिर्भ्रात्राऽन्वितंसीतया ।
पुंसांमोहनरूपमापरजनीचर्युग्ररूपाबलात्
विद्धाशूर्पणखामनोभवशरैर्लङ्कापतेस्सोदरी ॥ ५५ ॥

கோதாவரி தீர்த்தத்தில் காலையில் செய்ய வேண்டிய கர்மாவை முடித்துக்கொண்டு பர்ணசாலைக்கு வந்து ரிஷிகளால் பூஜிக்கப்பெற்று தம்பியோடும் மனைவியோடும் கூடினவரும் புருஷர்களும் மோஹிக்கும்படி ரூபம் பெற்ற இராமனை பயங்கர உருவம் பெற்றவளும் முறம் போல் நகங்களைப்பெற்ற சூர்ப்பநகை என்ற இலங்கை வேந்தனுக்குத்தங்கையான இராக்ஷஸீ மன்மத பாணங்களால் பலமாக அடி பெற்று அடைந்தாள்.

राजन्यञ्जनसंयुतंजटिलकंपञ्चाऽऽननोर्जस्वलम्
रामंशूर्पणखाऽब्रवीत्सुवदनंभीमाऽऽननाराक्षसी ।
कस्त्वंतापसरूपभृत्सशरधिः प्राप्तः कथंराक्षसैः
देशंसेवितमेतमागतिभवंब्रूह्ययतेवाञ्छितम् ॥ ५६ ॥

இராஜலெக்ஷணம் பொருந்தியும் தலையில் சடைகளைத்தரித்து சிங்கம் போல் பலம் பெற்றவனும் அழகிய முகமுள்ள இராமனைப்பார்த்து, பயங்கரமான முகம் பெற்ற இராக்ஷஸீ, "ரிஷி ரூபம் பெற்று அம்பு பெட்டிகளோடு கூடிய நீ யார்? இராக்ஷஸர்கள் ஸஞ்சாரம் செய்யும் இவ்விடத்திற்கு எதற்காக வந்தாய். இப்பொழுது உன் வரவால் வந்த விருப்பத்தைச் சொல்ல வேண்டுமென்று கூறினாள்.

उक्त्वास्वस्यकथामशेषमपितां काऽसित्वमित्यादरात्
पृच्छन्तंमृदुभाषिणंतमवदत्क्रूरस्वनासाप्रति ।
स्वस्यभ्रातृबलंयथेष्टगतितां नित्यंनिवेद्यप्रियम्
कान्तक्रीडमयावधूंसहभ्रुवाद्राक्भक्षयिष्यामिते ॥ ५७ ॥

தன் கதையை மீதி இல்லாமல் சொல்லி அவளைப்பார்த்து "நீ யார்?" என்று அன்போடு வினவும் மெதுவாகப்பேசும் இராமனைப்பார்த்து பயங்கரமான சப்தம் பெற்ற அந்த சூர்ப்பணகை தனக்கு இருக்கும் ஸஹோதரர்களின் பலத்தையும் இஷ்டம் போல் ஸஞ்சாரம் செய்யும் திறமையையும் எப்பொழுதும் ஆசையையும் தெரிவித்து "ஹே நாதா! என்னோடு ரமிக்க வேண்டும். உன் மனைவியையும் தம்பியையும் சீக்கிரம் சாப்பிடப் போகிறேன்" என்று பதில் கூறினாள்.

१८ भार्यावानहमेतया तवभवेत्क्लेशस्सपत्नीकृतः
भद्रेत्वामयमर्हतिप्रियतमामेनंभजादारकम् ।
रामेणेति विबोधिता पिशितभुक्सौमित्रिमेत्याब्रवीत्
भर्तामेभवसञ्चराम्यपभयासर्वान्त्वयादण्डकान् ॥ ५८ ॥

“நான் இவளை மனைவியாகப்பெற்றிருக்கிறேன் ஹே பாக்கியம் பெற்றவளே! உனக்கு சக்களத்தியால் துன்பம் ஏற்படும். இவன் தாரமில்லாதவன். இவன் உன்னை மனைவியாக அடையத்தகுந்தவன். இவனை நீ அடைய வேண்டும்” என்று இராமனால் போதிக்கப்பெற்ற அந்த இராக்ஷஸீ இலக்ஷ்மணனிடம் வந்து “நீ எனக்கு புருஷனாக இருக்க வேண்டும். உன்னோடு எல்லா தண்டகாரண்யமும் பயமில்லாமல் ஸஞ்சரிக்கப்போகிறேன்” என்று கூறினாள்.

दासोऽस्याहमयंप्रभुर्ममचिरंकिंवाञ्छसिप्रेष्यताम्
त्वंराज्ञीभवसोदरंममगता भार्याभवास्यापरा ।
वृद्धांत्यक्ष्यतिपूर्वजामितिहतप्रज्ञाच्छलेनोदिता
त्यक्त्वाभ्रातरमन्तिमंप्रथमजंप्रापाऽऽश्रमान्तर्गतम् ॥५९॥

“இவர் எனக்கு வெகுகாலமாக எஜமானன். நான் இவருக்கு வேலைக்காரன். வேலைக்காரியின் தன்மையை விரும்புகிறாயா? என்னுடைய அண்ணனை அடைந்து நீ எனக்கும் எஜமானியாக இருக்கவேண்டும். கிழவியான மூத்தாளைத் தள்ளிவிடுவார்.” என்று இலக்ஷ்மணனால் கபடமாகச் சொல்லப்பெற்ற புத்தி கெட்ட இராக்ஷஸீ இலக்ஷ்மணனை விட்டு ஆசிரமத்திற்குள் இருக்கும் இராமனை அடைந்தாள்.

भार्यांप्राप्य विरूपिणीमसदृशींमामत्यजोयद्वराम्
खादित्वातवपश्यतोमनुजजां निर्वैरिणीस्यामिति ।
धावन्तीमभिमैथिलीमसुहृदंक्रुद्धामशात्तांप्रभुः
नासाकर्णनिकृन्तनेनतनुभृन्नाथोऽनुजेनद्रुतम् ॥ ६० ॥

தனக்குத் தகுதியில்லாமல் குரூபம் பெற்ற மனைவியை அடைந்து அழகான என்னைத் தள்ளினதால், நீ பார்த்திருக்கும் பொழுது இந்த மனிதப் பெண்ணை சாப்பிட்டு சத்துரு வில்லாமல் இருப்பேன், என்று ஸீதைக்கு எதிராக ஓடிவரும் கோபமடைந்த அந்த துஷ்டையை வலிமைபெற்ற அரசனான இராமன் சீக்கிரம் தம்பியால் மூக்கு காதுகளை அறுத்து சிக்ஷித்தார்.

साघोरस्वनिता विरूपिततनुस्संप्रद्रुता कानने
वीरंप्राप्यखरंनराशनवृतं भीत्याजनस्थानगा ।
रामंलक्ष्मणमैथिलीसहचरंकान्तारमभ्यागतम्
तेनस्वस्यविरूपणंसधनुषा तस्मा उवाचाखिलम् ॥ ६१ ॥

குரூபமான சரீரம் பெற்ற அந்த சூர்ப்பனகை பயங்கரமாக சப்தித்துக்கொண்டு பயத்தால் காட்டில் ஓடி, ஜனஸ்தானம் சென்று இராக்ஷஸர்கள் சூழ்ந்திருக்கும் வீரனை கரனை அடைந்து, இராமன் ஸீதாலக்ஷ்மணர்களோடு வனத்தில் வந்திருப்பதையும், வில்லாளியான இராமன் தன்னை ரூபபங்கம் செய்ததையும், எல்லாவற்றையும் அவனிடம் கூறினாள்.

१९ भ्रात्रा विक्रमतः खरेणसमरेसत्याभिधेनस्वसुः
चित्तंमानुषयोस्स्त्रियाश्चरुधिरंपातुंसकामंभृशम्
वीराः प्रीणयितुंचतुर्दशतदादिष्टाः पलादाद्रुतम्
जग्मुस्तत्रवराऽऽयुधानृपसुतौयत्रस्तइड्यौसुरैः ॥ ६२ ॥

பலத்தால் யுத்தத்தில் கடுமையாயிருப்பதால் கரன் என்று உண்மை பெயர் பெற்ற ஸஹோதரனால் இரண்டு மனிதர்கள் ஒரு பெண் இவர்களுடைய இரத்தத்தைக் குடிக்க மிகவும் ஆவலுள்ள தங்கையின் மனம் ஸந்தோஷமடைவதற்காக அப்பொழுது உத்திரவு செய்யப்பெற்று பதினான்கு இராக்ஷஸர்கள் நல்ல ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, தேவர்களால் துதிக்கத்தகுந்த இராமலக்ஷ்மணர்கள் இருக்குமிடத்திற்கு சீக்கிரம் சென்றார்கள்.

२० आलोक्याऽऽत्मसमीपगान्नरभुजोरक्षास्त्रियासंयुतान्
आदिश्याऽऽत्मवधूंसगोप्तुमनुजंरामोविमोक्ष्यन्शरान् ।
हन्तुंवोवनचारिणांवचनतः प्राप्तोऽस्मियोद्धुंमतिः
चेदायातखलानचेद्द्रुतमितोनिर्गच्छतेत्याहतान् ॥ ६३ ॥

சூர்ப்பனகையோடுகூட தன்சமீபத்தில் வந்த மனிதர்களை சாப்பிடும் இராக்ஷஸர்களைப் பார்த்து, இராமன் தன் மனைவியைக் காப்பாற்றும்படி தம்பிக்கு உத்திரவு செய்து பாணங்களை விடுவதற்கு முன், "ஹே துஷ்டர்களே! வனத்திலிருக்கும் ரிஷிகளின் உத்திரவால் உங்களை வதம் செய்ய நான் வந்திருக்கிறேன். யுத்தம் செய்ய விருப்பமிருந்தால் வாருங்கள். இல்லாவிட்டால் சீக்கிரம் இவ்விடமிருந்து புறப்படுங்கள்" என்று அவர்களைப் பார்த்து கூறினார்.

कृत्वाविप्रियमात्मनोऽधिपतये किंजीवितुंवाञ्छसि
त्यक्ष्यस्यद्यमयाहतस्स्वयमसूनित्युक्तवाक्यान्निजान् ।
बन्धून्रामशराऽऽहतान्सुरपदंप्राप्तान्विलोक्यासती
भूयः प्राप्यखरंविदीर्णहृदयासंज्ञांचिरेणाऽऽपसा ॥ ६४ ॥

"எங்களுடைய அரசனுக்கு விரோதத்தைச்செய்து பிழைப்பதற்கு விரும்புகிறாயா? எங்களிடம் அடிபெற்று இப்பொழுது தானாக பிராணனை விடப்போகிறாய்" என்ற வார்த்தை சொல்லும் தன் பந்துக்கள் இராமபாணங்களால் அடிக்கப்பெற்று சுவர்க்கம் சென்றதைப் பார்த்து, அந்த துஷ்டை மறுபடியும் கரனை அடைந்து, மனம் நொந்து, வெகு நேரத்தில் நினைவை அடைந்தாள்.

२१ सन्त्रस्ता पिशिताशनातमवदत्सोदर्यमात्मेप्सितम्
हानाथेतिविनद्यभीममहित्वत्क्रुद्धालुठन्तीक्षितौ ।
वीरास्तेपुरुषाश्शरै रभिहता रामेणतस्मादव
क्लिष्टांमां खरचेद्बलंतवमहन्मद्वैरिणंशाधितम् ॥ ६५ ॥

மாம்ஸம் ஸாப்பிடும் இராக்ஷஸீ பயந்து, அந்த ஸஹோதரனிடம் ஹே நாதா! கஷ்டம் என்று பயங்கரமாய் அலறி, ஸர்ப்பம் போல் கோபித்து பூமியில் புரண்டு கொண்டு "ஹேகரா! உன் வீரபுருஷர்கள் இராம பாணங்களால் அடிக்கப்பெற்ருர்கள். துன்பமடைந்த என்னை இராமனிடமிருந்து காப்பாற்றவேண்டும். உனக்கு அதிக பலமிருந்தால் என் சத்துருவான அந்த இராமனை சிக்ஷிக்கவேண்டும்" என்று தன் விருப்பத்தைக் கூறினுள்.

धिग्वीर्यंतवसोदरींव्यसनिनींयत्पश्यसिप्राभवे
नत्वंजातुतयोस्समोमनुजयोर्निस्सत्ववासः कथम् ।
तेऽस्मिन्दण्डककाननेत्वपसरक्षिप्रंजनस्थानतः
मोक्ष्यामिस्वयमप्यसूनितिरवा कुक्षिंकराभ्यामहन् ॥ ६६ ॥

"ஸாமர்த்தியம் இருக்கும் பொழுது ஸஹோதரி துக்கமடைவதை நீ பார்க்கிறபடியால் உன் பலத்தை நிந்திக்கவேண்டும். ஒரு காலத்திலும் அந்த இரண்டு மனிதர்களுக்கு நீ ஸமமில்லை. ஹே பல மற்றவனே! உனக்கு தண்டகாரண்யத்தில் வாஸம் எதற்காக. ஜனஸ்தானத்திலிருந்து சீக்கிரம் ஓடு. தானே என் பிராணன்களை விடப்போகிறேன்." என்று சப்தித்துக்கைகளால் வயிற்றில் அடித்துக் கொண்டாள்.

२२ आश्वास्याभिमतां स्वसारमतनुंस्वंसारमावेदयन्
युद्धायाभिमतान्चतुर्दशधनुर्वीरान्सहस्राण्यपि ।
सेनाऽधीश्वरदूषणेनपुरतोनिर्यापयन्शस्त्रभृत्
प्राप्यस्यन्दनमात्मनोगमयितुंसूतंनुनोदाथसः ॥ ६७ ॥

பிறகு கரன் பிரியமான தங்கையை ஸமாதானம் செய்து, அவளிடம் தன் மிகுந்த பலத்தைத் தெரிவித்து, தனக்கு ஸம்மதமான பதினுலாயிரம் வில் எடுக்கும் வீரர்களை யுத்தத்திற்காக ஸேனபதியான தூஷணன் மூலமாக முன்னுல் புறப்படும்படி செய்து, தான் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தன் இரதத்தில் ஏறி அதை நடத்தும்படி ஸாரதியை ஏவினுன்.

२३ उत्पातानहितप्रदानगणितान्वीक्ष्यापि मोहात्खरः
देवेभ्योनबिभेमि किंमृतिमतोमर्त्यादितिव्याहरन् ।
रामंप्रापबलाधिपैश्चसाचिवैस्तत्कालपाशाऽऽवृतः
तद्युद्धप्रदिदृक्षवोमुनिसुराः खरामशर्मैषिणः ॥ ६८ ॥

துன்பத்தைக் கொடுக்கும் எண்ண முடியாத அபசகுனங்களை ப்பார்த்தும், கான் நான் தேவர்களிடமும் பயமடைகிறதில்லை. மரணம் பெற்ற மனிதர்களிடத்தில் பயமடைவேனு? என்று அறிவில்லாமல் சொல்லிக்கொண்டு அந்த காலபாசத்தால் சுற்றப்பெற்று ஸேனைத் தலைவர்களோடும் மந்திரிகளோடும் இராமனை அடைந்தான். தேவர்களும் ரிஷிகளும் அவர்களின் யுத்தத்தைப் பார்க்க விரும்பி இராமனுக்கு க்ஷேமத்தையும் விரும்பிக்கொண்டு ஆகாயத்தை அடைந்தார்கள்.

२४ आलोच्याऽऽत्मजयंरिपोरपजयंरामोनिमित्तेक्षणात्
वत्सत्वंद्रुतमाश्रयाचलगुहां संरक्षसीतामिति ।
सन्दिश्यानुजमुत्सुकःकवचभृच्चापंविनम्यातनुम्
बाणानाददातनोद्धधिरिता आशादशज्यास्वनैः ॥ ६९॥

இராமன் சகுனங்களைப் பார்த்ததால் தனக்கு ஜயத்தையும், சத்துருவுக்கு அபஜயத்தையும் நினைத்து "ஹே குழந்தாய்! நீ சீக்கிரம் பர்வதத்தின் குஹைக்குச் செல்லவேண்டும். ஸீதையைக் காப்பாற்றவேண்டும்." என்று தம்பியிடம் உத்திரவு செய்து ஸந்தோஷமாக கவசத்தை தரித்துக்கொண்டு பெரியவில்லை வளைத்து, பாணங்களை எடுத்து, நாணின் சப்தத்தால் பத்து திக்குகளையும் செவிடாகச் செய்தார்.

एकोराघवउन्मदा निशिचरायुद्धंकथंस्यादिति
व्योम्निव्योमचरेषुसत्स्वभिहितंत्रैलोक्यभव्येषुतत् ।
दृष्ट्वाराक्षससैन्यमप्यतिबलान्विद्रावयत्श्वापदान्
आधात्क्रोधममेयमीश्वरइवप्रध्वंसकंरक्षसाम् ॥ ७० ॥

இராமன் ஒருவன்; அதிகமதம் பெற்ற இராக்ஷஸர்கள் பலர். எவ்விதம் யுத்தம் நடக்கும், என்று தேவர்கள் முதலியவர்கள் மூன்று உலகங்களுக்கும் க்ஷேமத்தை வேண்டிக்கொண்டு ஆகாயத்திலிருக்கும் பொழுது அதிக பலம் பெற்ற பிராணிகளையும் விரட்டிவிடும் அந்த இராக்ஷஸஸைனியத்தைப் பார்த்து ஈசுவரன்போல் இராக்ஷஸர்களை ஸம்ஹரிக்கும் அளவற்ற கோபத்தை இராமன் அடைந்தார்.

२५ वल्मीकादिव पन्नगा रघुपतेस्तूणीबिलान्निर्गताः
निस्संख्या इषवः खरस्य पृतनारात्रिञ्चरान्दुर्दमान् ।
स्वैश्शस्त्रैः परिजघ्नतोऽपि रभसाऽऽपीतासुवातान्द्रुमान्
चक्रुर्निष्पतितान्खगेन्द्रगरुतो वातैरिवोन्मूलितान् ॥ ७१ ॥

புற்றிலிருந்து ஸர்ப்பங்கள்போல், இராமனுடைய அம்புபெட்டியிலிருந்து கணக்கில்லாமல் வெளியில் வந்த பாணங்கள், அடக்கமுடியாத கரனுடைய ஸைனியத்திலிருக்கும் இராக்ஷஸர்கள், தன்னை ஆயுதங்களால் நான்கு புறத்திலும் அடித்துக்கொண்டிருந்தும், சீக்கிரம் அவர்களின் பிராண வாயுக்களைக் குடித்து, கெருடனுடைய இரக்கைக் காற்றுகளால் மரங்கள் வேர் பிடுங்கலாக விழுவதுபோல் விழும்படி செய்தன.

सेनान्या भृशसान्त्विताः खरचमूशिष्टा असृक्पायिनः
गान्धर्वास्त्रनिषूदितामितबलान्नाद्रक्षुरग्रेऽस्थितम् ।
बाणानाददतं पुनः प्रददतं भीमां मुहुर्ज्यां चलाम्
कर्षन्तं युगपद्भुवि प्रपतितान्सर्वान्स्वपश्यन्जनान् ॥ ७२ ॥

ஸேனாதிபதியான தூஷணனால் ஸமாதானம் பெற்ற கரனுடைய ஸைனியத்தில் மீதியுள்ள இரத்தபானம் செய்யும் இராக்ஷஸர்கள் தங்களின் அளவற்ற பலமும், காந்தர்வாஸ்த்திரத்தால் நாசமடையும் பொழுது, முன்னிலையில், இருந்த இராமன் பாணங்களை ஒரே காலத்தில் எடுப்பதையும், மறுபடியும் விடுகிறதையும், பயங்கரமாய் அசைந்து கொண்டிருக்கும்படி நாண்கயிற்றை அடிக்கடி இழுப்பதையும் பார்க்கவில்லை. பூமியில் எல்லா ஜனங்களும் விழுந்து கிடப்பதைப் பார்த்தார்கள்.

२६ रामोदूषणमार्यदूषणमथक्रुद्धः क्षुरेणाच्छिनत्
चापंतस्यहयान्चतुर्भिरिषुभिस्सूतोत्तमाङ्गंहरन् ।
विव्याधोरसिसायकैस्त्रिभिरमुंहस्तौ शराभ्यांहरन्
भूमौतंसमपातयद्दिविचरैस्संपूजितस्साध्विति ॥ ७३ ॥

பெரியோர்களை தூஷிக்கும் தூஷணனுடையவில்லை, இராமன் கோபமடைந்து க்ஷுரம் என்ற பாணத்தாலும், அவனுடைய குதிரைகளை நான்கு பாணங்களாலும், ஸாரதியின் சிரஸ்ஸை (அர்த்த சந்திர பாணத்தாலும்), அறுத்து, மார்பில் மூன்று பாணங்களால் அடித்து, இரண்டு பாணங்களால் கைகளை அறுத்து, தேவர்கள் நல்லது என்று புகழும்படி தூஷணனை பூமியில் தள்ளினார்.

त्रीन्सेनाऽधिपतीन्खरस्यविशिखैस्तान्दूषणप्रेयसः
कृत्वातस्यपदानुगान्दशशतान्यार्योऽकरोत्पञ्चतान् ।
याम्यस्याप्यतिथीन्गृहस्यनिधनंसंवाच्छतोद्वादश
श्रेष्ठान्सानुगतान्बलस्यदययाप्राप्तेप्सितानातनोत् ॥ ७४ ॥

கரனுடைய மூன்று ஸேனாபதிகளையும் அம்புகளால் தூஷணனுக்கு சிநேஹிதர்களாகவும் செய்து, அவனுடைய காலாட்படைகள் ஐயாயிரம் இராக்ஷஸர்களையும் இராமன் எமகிருகத்திற்கு விருந்தாளிகளாகவும், மரணத்தை விரும்பி வேலைக்காரர்களோடு வந்த பனிரெண்டு ஸேனாபதிகளையும் அவர்களின் விருப்பத்தை தயவால் அடைவித்தார்.

२७ युद्धोद्युक्तमविक्लबंत्रिशिरसंबाणैर्ललाटे त्रिभिः
स्वस्यक्लेशकमस्यसूत मिषुभिस्संपातयन्नष्टभिः
तद्वाहान्चतुरश्चतुर्भिरथतत्केतुंहरन्नुच्छ्रितम्
भिन्दन्त्रीनपिमूर्ध्न आहवपटुस्स्वर्लोकमावासयत् ॥ ७५ ॥

யுத்தத்தில் ஸமர்த்தனான இராமன், யுத்த முயற்சியோடு பயமில்லாமல் தன் வெற்றியில் துன்பம் விளைவிக்கும் திரிசிரஸ்ஸின் (மூன்று தலையுள்ளவன்.) ஸாரதியை எட்டுப் பாணங்களால் விழச் செய்து, அவனுடைய நான்கு குதிரைகளையும் நான்கு பாணங்களாலும், பிறகு உயர்ந்த கொடியையும், (பாணத்தால்) விழச்செய்து, மூன்று தலைகளையும் மூன்று பாணங்களால் அறுத்து, அவனை ஸ்வர்க்கலோகத்தில் வசிக்கும்படி செய்தார்.

२८ सैन्यंवीक्ष्यनिषूदितंबलपतीन्भीतिंत्विदंपूर्विकाम्
प्राप्तंक्रोधविवर्धिताभिधखरंविध्यन्तमुग्रेषुभिः ।
रामोवाञ्छिततद्वधो विनमिताच्चापाद्विमुञ्चञ्छरान्
अन्योन्येषुसमावृतोनविबभावर्कोऽभ्रकालेयथा ॥ ७६ ॥

ஸைனியங்களும், ஸேனாதிபதிகளும், நாசமடைந்ததைப் பார்த்து, இப்பொழுது புதிதாய் முதலில் வந்த பயத்தை அடைந்த கரன், கோபத்தால் கரன் என்று துஷ்டனென்கிற பெயரை வளர்த்துக்கொண்டு, பயங்கரமான பாணங்களாலடிக்கும் கரனை, இராமன் வதம்செய்ய விரும்பி, வளைக்கப்பெற்ற வில்லிலிருந்து பாணங்களை விடும்பொழுது, வருஷாகாலத்தில்போல் சூரியன் ஒருவருக்கொருவர்களின் பாணங்களால் மறைக்கப்பெற்று பிரகாசிக்கவில்லை.

छित्वास्वस्यशरंचचापममितंपाण्योर्बलंदर्शयन्
वर्माभेद्यममोघबाणदलितंकृत्वाखरोऽतिधूनन् ।
अश्रान्तेनगृहीतविष्णुधनुषा रामेणषण्मार्गणैः
बाह्वोर्मूर्धनिवक्षसिध्वजमधोनिष्पात्यचाहन्यत ॥ ७७ ॥

தன்னுடைய வில்லையும், பாணத்தையும், அறுத்து அளவற்ற கைபலத்தைக் காட்டி, பிளக்கமுடியாத கவசத்தையும், வீணில்லாத பாணங்களால் பிளந்து, மிகவும் சப்திக்கும் கரனை, இராமன் களைப்பில்லாமல் விஷ்ணு தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு, ஆறு பாணங்களால் அவனுடைய த்வஜத்தையும், கீழே விழச்செய்து, கைகளிலும், தலையிலும், மார்பிலும் அடித்தார்.

नाराचान्निशितांस्त्रयोदशकरेकृत्वायुगंवाजिनः
सूतंतस्यदृढंत्रिवेणुमलघुंचाक्षंधनुर्बाणगम् ।
छित्वावज्रसमेषुणायुधिखरंव्याविध्यरामोगदा
पाणिंभूमिगमातनोत्प्रमुदितैर्वैमानिकैः पूजितः ॥ ७८॥

இராமன் கூர்மையான பதிமூன்று நாராச பாணங்களை கையில் எடுத்து, கரனுடைய நுகத்தடியையும், குதிரைகளையும், ஸாரதியையும், கெட்டியான மூன்று மூங்கிலேயும், பெரிய அச்சையும் பாணம் பூட்டிய வில்லேயும் அறுத்து, வஜ்ரத்துக்கு ஸமமான பாணங்களால் யுத்தத்தில் கரனே அடித்து, தேவர்கள் ஸந்தோஷமடைந்து பூஜிக்கும்படி கதையைக் கையில் பெற்று, பூமியில் இருக்கச்செய்தார்.

२९ साधूनांवनचारिणां यदकरोरात्रिञ्चरक्लेशनम्
निर्हेत्वस्तकृपामितंफलमिदंतस्यानुरूपंत्वया ।
लब्धंतालफलंयथातवशिरस्संपातयिष्याम्यरे
सत्कृत्यस्यकुलाधमेत्यभिदधे रामः पदातिंखरम् ॥ ७९ ॥

"நற்காரியங்களுக்கு சத்ருருவாயும், குலத்தில் கீழாயும், தயவில்லாத ஹே இராக்ஷஸா! காட்டிலிருக்கும் ஸாதுக்களுக்குக் காரணமில்லாமல் துன்பம் செய்ததால், அதற்குத் தகுந்த பலன் உனக்குக் கிடைத்தது. பனம் பழத்தைப்போல் உன் தலேயை விழச் செய்கிறேன்" என்று இராமன் காலால் நிற்கும் கரனேப்பார்த்து கூறினர்.

हत्वादाशरथेऽनुगानपबलान्किंकत्थसेऽद्यस्वयम्
वीराणांप्रकृतिर्नचेयममलायावद्दिनेशोद्गतम् ।
त्वामाहत्यपुरात्वयात्वभिहतास्तेषां करोम्यश्रुणः
संमार्ष्टिंभवतोऽसृजेत्यभिदधच्चिक्षेपरक्षोगदाम् ॥ ८० ॥

"ஹே தசரதனைந்தனே ! பலமில்லாத வேலைக்காரர்களைக் கொன்று, இப்பொழுது தானாக, ஏன் புகழுகிறாய்.? இது வீரர்களின் சுத்த ஸ்வபாவமில்லை. ஸூரியன் இருப்பதற்குள், சீக்கிரம் உன்னைக்கொன்று, உன் இரத்தத்தால் முன் மரணமடைந்தவர்களின், கண்ணீரைத் துடைக்கிறேன்" என்று சொல்லி, கரன் கதையை எறிந்தான்.

३० कुर्वन्तीं ज्वलनेनभस्मचतरून्गुल्मान्गदामात्मनः
प्राप्तामन्तिकमन्तकाऽऽयुधसमा माच्छिद्यबाणैर्भृशम् ।
रामो धर्मपरोऽब्रवीद्यदपितेशौर्यंत्वयादर्शितम्
मद्बाणौघनिकृत्तकण्ठरुधिरं तेमूढ भूःपास्यति ॥ ८१ ॥

அக்னியால் மரங்களையும், புதர்களையும், சாம்பலாகச்செய்து கொண்டு தன் சமீபத்தில் வந்த எமனுடைய ஆயுதத்திற்கு, ஸமமான கதையை பாணங்களால், மிகவும் அறுத்து, தர்மத்தில் விருப்பமுள்ள இராமன் கூறினார். "உன்னுடைய வலிமையைக் காண்பித்துவிட்டாய். என் பாணங்களளின், கூட்டத்தால், ஹே முட்டாளே ! உன் கழுத்தை அறுத்து, அதன் இரத்தத்தை பூமி குடிக்கப்போகிறது."

त्वय्याप्तेयमगहेमत्रमुनयस्स्थास्यन्ति मुक्त्वाभियम्
कुर्वन्तोमखमित्युदीर्य सतरुंसन्दष्टदन्तच्छदम् ।
छित्वातत्तरुमागतं शरवरैर्मत्तं स्रवच्छोणितैः
दृष्ट्वाकिंचिदपासरन्मघवतो जग्राहजैत्रंशरम् ॥ ८२ ॥

"நீ எமலோகம் சென்றதும், இவ்விடத்தில் ரிஷிகள் பயமில்லாமல், யாகம் செய்துகொண்டு இருக்கப்போகிறார்கள்" என்று இராமன் கூறி மரத்தைத் தரித்துக்கொண்டும், உதட்டைக் கடித்துக்கொண்டும், பெருகும் இரத்தங்களால் மதம்பெற்றவனுமான (வெறிகொண்ட) கரனைப்பார்த்து, நல்ல பாணங்களால், அவனுடைய மரத்தை அறுத்து, கொஞ்சம் பின் விலகினார். இந்திரனுடைய வெற்றிபெற்ற, பாணத்தை எடுத்தார்.

तेनोरस्यभिताडितो रघुभुवा भूमावपप्तत्खरः
मृत्युश्श्वेतवनेयथा पुरभिदाहृष्टास्समेतास्सुराः ।
एतस्मैशरभङ्गगेहमगमच्छक्रो मुनीन्द्राइह-
त्वांरामद्रुतमानयन्विरचितंनः कार्यं मित्यब्रुवन् ॥ ८३ ॥

ரகுவம்சத்தில் பிறந்த, அந்த இராமனுல் கரன், அடிக்கப்பெற்று, திருவெண்காட்டில் எமன் சிவபெருமானுல் அடிக்கப் பெற்று, விழுந்ததுபோல், பூமியில் விழுந்தான். தேவர்கள் ஸந்தோஷமடைந்து, ஒன்ருகக்கூடி, "இதற்காக இந்திரன் சரபங்க ஆச்ரமத்திற்கு வந்தான். ரிஷிகளும் உன்னை இவ்விடத்திற்கு சீக்கிரம் அழைத்துவந்தார்கள். ஹே இராமா! எங்களின் கார்யம் செய்யப்பெற்றது" என்று கூறினர்கள்.

रामेणैवबलाऽऽढ्यराक्षसवरा बाणैर्मुहूर्तैर्हताः
अप्यर्धाधिकसंज्ञके दशचतुर्युक्तास्सहस्राणियत् ।
शौर्ये विष्णुसमोऽयमित्यभिहितोदेवैस्सुमैः पूजितः
रामः प्रापसुखं तपोवनगतस्सीतासमालिङ्गितः ॥ ८४ ॥

"பலம் பெற்ற பதினலாயிரம் இராக்ஷஸர்களும் ஒன்றரை முஹூர்த்தத்தில் இராமனுல் வதமடைந்தார்கள். ஆனதால் இராமன் விஷ்ணுவுக்கு, ஸமமான பலம் பெற்றவன்" என்று புஷ்பங்களை வர்ஷித்து, தேவர்களால் பூஜிக்கப்பெற்ற இராமன், ஆச்ரமத்திற்கு வந்து, ஸீதையால் ஆலிங்கனம் செய்யப்பெற்று சுகமடைந்தார்.

३१ श्रुत्वाऽकम्पनवक्त्रतो दशमुखोबन्धून्जनस्थानगान्
रामेणाभिहतान्बलं निरुपमंस्वाजय्यतां तस्य च ।
भार्याया अपहारतो विनिहतेः कर्तव्यतांतद्वचः
मत्वा सत्यमिदं विधातुमुषसि प्रातिष्ठताथक्रुधा ॥ ८५ ॥

ஜனஸ்தானத்திலிருக்கும் பந்துக்கள் இராமனால் வதமடைந்ததையும், இராமனுடைய அளவற்ற பலத்தையும், தன்னால் அவரை ஜெயிக்க முடியாதென்பதையும், அவனுடைய மனைவியை அபஹரித்தால் அவனைக் கொன்றுவிடலாம் என்பதையும், இராவணன் அகம்பனன் மூலமாக அறிந்து, அவனுடைய வார்த்தையை உண்மையாக நம்பி, பிறகு அதைச் செய்வதற்காக, காலையில் கோபத்தால் பிரயாணம் செய்தான்.

आरूढो रथमुत्तमंसुरपथेसंचारिणं रावणः
मारीचस्यगृहं गतोझटिति सप्रीतस्तदातिथ्यतः ।
सन्दिष्टेन समीहितस्य करणेसाह्यायतेनाऽदरात्
प्रावाच्यागतमात्मभर्तुरहितं बुध्वेच्छताऽपोहितुम् ॥ ८६॥

இராவணன் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் நல்ல ரதத்தில் ஏறிக்கொண்டு, மாரீசனுடைய வீட்டிற்கு சீக்கிரம் சென்று, அவனுடை விருந்தால் ஸந்தோஷமடைந்து, தன் விருப்பத்தைச் செய்வதில் உதவியின்பொருட்டு, உத்திரவு செய்யும்பொழுது, மாரீசன் தன் எஜமானனுக்கு வந்த துன்பத்தை அறிந்து, அதை விலக்குவதற்கு விரும்பி அன்போடு இராவணனைப் பார்த்துக் கூறினான்.

कस्तेबुद्धिमदादिमां त्वदमितक्षेमं नसेहेचयः
सीतां विद्धि निशाचरान्वयभियोदात्रीं तुकालक्षपाम् ।
मारसंहारिमात्तनिद्रमधुना संबोधयैतां धियम्
मुञ्चेत्युक्तउपागमत्पुरमरेर्विद्रावणो रावणः ॥ ८७ ॥

"ஹே இராவணா ! உன்னுடைய அளவற்ற க்ஷேமத்தைப் பொறுக்காமல் உனக்கு இந்த புத்தி சொன்னவன் யார் ? ஸீதையை இராக்ஷஸர்களின் குலத்திற்கு பிராணபயத்தைக் கொடுக்கும் பிரளயகால இராத்திரி என்று நினைக்கவேண்டும். தூங்கிக்கொண்டிருக்கும் இராமன் என்கிற சிங்கத்தை விழிக்கச் செய்யாதே. இப்பொழுது, இந்த புத்தியை விடவேண்டும்" என்று மாரீசனால் சொல்லப்பெற்று, சத்துருக்களை விரட்டும் இராவணன் பட்டணத்தை அடைந்தான்.

३२ बन्धून्वीक्ष्यखराऽऽदिमा नभिहतान्रामेणवीक्ष्यातनु
क्लेशाशूर्पणखाद्रुतंप्रकुपितालङ्केश्वरं प्रापसा ।
निध्यध्यक्षगपुष्पकापहरणंसत्कर्मणांवारणम्
देवेन्द्राऽऽहतवज्रजव्रणकिणंलोकाऽऽपदांकारणम् ॥ ८८॥

கரன் முதலிய பந்துக்கள், இராமனுல் அழிந்ததைப் பார்த்து, மறுபடியும் அதிக துக்கமடைந்த அந்த சூர்ப்பனகை மிகுந்த கோபத்துடன், குபேரனிடமிருந்து புஷ்பக விமானத்தைப் பிடுங்கினவனும், நற்காரியங்களைத் தடுப்பவனும், தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்தால் அடிபெற்று, புண்ணின் வடுவைப் பெற்றவனும், உலகங்களின் துன்பங்களுக்குக் காரணமுமான இராவணனை அடைந்தாள்.

ईशस्यापचितौ वराङ्गमखिलंनव्योपहारीकृतम्
येनाऽऽत्मीयममर्त्यवैरिदळनं चक्रं त्रिलोकीशितुः ।
यस्याऽऽभातिसदोरसि प्रविलसद्धारस्यहीरायितम्
चित्रंकन्दुकविभ्रमंतमकरोत्कैलासशैलेनयः ॥ ८९ ॥

எவன் தன்னுடைய தலை எல்லாவற்றையும் ஈசுவரனுடைய பூஜையில் பூஜாத்ரவ்யமாகச் செய்தானே தேவர்களின் விரோதிகளை ஸம்ஹரிக்கும் மூன்று உலகங்களுக்கும் அதிபதியான விஷ்ணுவின் சக்கிரமும், எவனுடைய மார்பில் எப்பொழுதும் விளங்கும் ஹாரத்திற்கு நடுநாயகமாக விளங்குகிறதோ. எவன் கைலாஸ மலையால் ஆச்சரியமான பந்து விளையாட்டைச் செய்தானே.

स्वर्गसौख्यनिकेतनंत्वाधिगता अन्तर्विचिन्त्यैवयं
शुष्यन्त्यात्मविशेषमप्यनुदिनं भीत्यामहत्यागुताः ।
हैमंपीठमुपाऽऽश्रितंससचिवंतंराक्षसी निर्भया
प्रोवाचेदमरातिना गुरुतरंसंप्रापितावैशसम् ॥ ९० ॥

சுகத்திற்கு இருப்பிடமான சுவர்ககத்தை அடைந்தவர்களும் எவனைமனதில் நினைத்தே நாள் தோறும் அதிகபயம் பெற்று மனம் வருந்தி (நிர்ஜீவமாய்) வற்றுகிறார்களோ. சுவர்ண ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் மந்திரிகளுடன் கூடிய அந்த இராவணனைப் பார்த்து, சத்துருவால் அதிக துன்பத்தை அடைந்த சூர்ப்பணகை பயமில்லாமல் மனதில் இருப்பதைச்சொன்னாள்.

३३ मत्तोयल्ललनावयस्यचरमेनित्यंस्थितास्सुन्दरीः
संक्षेचारमुखेनलोकचरितंदप्तोनवेत्स्यद्ययत् ।
एकेनैवपदातिनातवजस्थानस्थितंसंहृतम्
सैन्यंतत्पतयोनरेण विमते शीघ्रंविनंक्ष्यस्यये ॥ ९१ ॥

"ஹே புத்தியற்றவனே! மதமடைந்து யௌவன பர்வமடைந்த மங்கைகளை தினந்தோறும் அனுபவிப்பதாலும், நீ கர்வம் பெற்று உலகஸமாசாரத்தை இப்பொழுது சாரன்முகமாக அறியாமலிருப்பதாலும், ஜனஸ்தானத்திலிருந்த உன்னுடைய ஸைனியங்களும் ஸேனாபதிகளும் கால்நடை பெற்ற ஒரே மனிதனால் நாசமடைந்தார்கள். ஹே இராவணா! அதுபோல் நீயும் கிரம் நாசமடையப் போகிறாய்"

३४ वैरूप्यंप्रबलेकथंन्त्विदमिति क्रूराऽग्रजेनाथसा
पृष्टावेदयतिसवीर्यमतुलंरूपंनरश्रेष्ठयोः ।
पत्नीमप्यतिसुन्दरीन्तवबलंचेत्तौ विजेतुं चताम्
आहर्तुन्त्वरितं विनिस्सरगृहादित्यादिशत्तंस्वसा ॥ ९२ ॥

"ஹே பலமுள்ளவனே! இந்த உருவக்குறைவு எவ்விதம் வந்தது", என்று அண்ணனால் வினவப்பெற்றதுஷ்டையான சூர்ப்பணகை பிறகு இராஜகுமாரர்களின் ஒப்பற்ற பலத்தையும், அழகையும், மிகவும் அழகான மனைவியையும், தெரிவித்தாள். "உனக்கு பலமிருந்தால் அந்த மனிதர்களை ஜயிக்கவும், அந்தப் பெண்ணை அபஹரிக்கவும், வீட்டிலிருந்து சீக்கிரம் புறப்பட வேண்டும்" என்று தங்கை அண்ணனுக்கு உத்திரவு செய்தாள்.

३५ श्रुत्वाशूर्पणखावचोदशमुखः कर्तव्यमन्तस्स्मरन्
आरूढोरथमन्तरिक्षगमनं सिन्धोरनूपंययौ ।
तत्रस्थंवटपादपंयमभितश्शाखा श्शतेयोजने
विस्तीर्णाः प्रगृहीतकच्छपगजोयांवैनतेयोऽभनक् ॥ ९३ ॥

சூர்ப்பணகையின் வார்த்தையைக் கேட்டு, இராவணன் செய்ய வேண்டியதை மனதில் நினைத்து, ஆகாயத்தில் செல்லும் இரதத்திலேறிக் கொண்டு, ஸமுத்திரத்தின் ஜல ஸமீபப்பிரதேசத்தையும் அதில் கருடன், முதலை, யானை, இவைகளைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்து ஒடித்த நான்கு புறமும் நூறு யோஜனை தூரம் வளர்ந்த கிளைகளைப் பெற்ற ஆலமரத்தையும் அடைந்தான்.

शाखांयस्याविमर्दितां तदशनंगृह्णन्पदाभ्यां खगः
रक्षन्सच्चरितानधोनिवसतीन्भिल्लांस्तुतेषां द्विषः ।
आहत्यामितविक्रमान्सदनगान्गत्वा सुरेन्द्राऽऽलयम्
निर्मथ्याऽऽयसजालमन्तरगृहात्पीयूषमप्याहरत् ॥ ९४ ॥

கருடன் முறிக்கப் பெற்ற அந்த ஆலமரத்தின் கிளையையும், ஆகாரமான முதலை, யானை இவைகளையும் கால்களால் தூக்கிக் கொண்டு கீழே குடியிருக்கும் ஸாதுக்களைக் காப்பாற்றி, அளவற்ற பலம் பெற்ற வீட்டில் இருக்கும் அவர்களின் சத்துருக்களான வேடர்களை அடித்து, சுவர்கலோகம் சென்று இறும்பு வலையையும் அறுத்து, வீட்டிற்குள்ளிருந்து அமிருதத்தையும் அபஹரித்தான்.

मारीचस्यतपोवनं नियमिनश्चीरं जटाबिभ्रतः
प्राप्यैतेनसमर्चितस्सकुशलप्रश्नंनिजाभ्यागतेः ।
पृष्टः कारणमात्मनोऽभिलषितेसाहय्यकं प्रार्थयत्
दीनोयेवरदे विधातुवरितुं जिह्मोच्छवाभ्छान्निजाम् ॥

பிரம்மா வரங்கொடுக்க வந்திருக்கும்பொழுதும் தன் விருப்பத்தை வேண்டுவதற்கு வெட்கமடைந்த இராவணன், மரையுருவியையும் தரித்துக் கொண்டு தவம் செய்யும் மாரீசனுடைய ஆசிரமத்தை அடைந்து க்ஷேம பிரச்னத்துடன் அவனால் பூஜிக்கப்பெற்று வினவப்பெற்று தன் வரவின் காரணமான, விருப்பத்தில் உதவியை தீனஸ்வரத்துடன் வேண்டினான்.

३६ रामोमेभगिनींव्यरूपयदहोसेनां खराऽऽदिंत्वहन्
सौवर्णोरजतस्यबिन्दुनिकरैश्चित्रोमृगः क्रीडभोः ।
सीतायानिकटे गृहीतुमथतंयाचिष्यतेसापतिम्
तस्मिन्निर्गत आलयात्ससहजेतामाहरिष्येसुखी ॥ ९६ ॥

"இராமன் என் தங்கையை உருவபங்கம் செய்தான். கரன் முதலிய ஸேனையைக் கொன்றான். ஆச்சரியம்! ஹே மாரீசா! நீ வெள்ளியின் புள்ளிக் கூட்டங்களால் சித்திரவர்ணமான தங்கமானாக ஸீதையின் ஸமீபத்தில் விளையாட வேண்டும். பிறகு ஸீதை அதை பிடிக்கவேண்டும் என்று புருஷனை வேண்டப்போகிறாள். அந்த இராமன் தம்பியோடு வீட்டிலிருந்து வெளியில் வந்தபொழுது, நான் சுகமாக அவளை அபஹரிக்கப் போகிறேன்".

तंभार्याविरहानलप्रशमितस्वामेयवीर्यंरणे
जेष्यामीतिकृताऽऽशयंदशमुखंमारीच आहप्रति ।
श्रुत्वारामकथां सशुष्कवदनस्वौष्ठौसुशुष्कौलिहन्
नेत्रौर्निर्निमिषैर्निरीक्ष्यसमृतवत्क्लिष्टस्स्मरंस्तद्धितम् ॥

மனைவியின் அக்கினி போன்ற விரஹத்தால் தன்னுடைய அளவற்ற பலமும் அழிந்திருக்கும் பொழுது அந்த இராமனை ஜயிக்கப்போகிறேன் என்று மனதில் நினைத்த இராவணனைப் பார்த்து மாரீசன் இராம கதையைக் கேட்டு முகம் வரண்டு உலர்ந்த உதடுகளை நக்கிக்கொண்டு இமைக்கொட்டில்லாத கண்களால் பார்த்து, இறந்தவன் போல் துன்பமடைந்து, அந்த இராவணனுக்கு நன்மையை நினைத்து பதில் கூறினான்.

३७ शोकस्यापहरंवचश्श्रुणुममक्षेमङ्करन्तेऽनिशम्
रामोविक्रमवारिधिः प्रकुपितः कुर्याद्वधंरक्षसाम् ।
सीतायस्यवशंवदाऽतिमहितास्पर्धेतकस्तेनयत्
सातच्चापपरायणाकथमियंहार्याधियंमुञ्चताम् ॥ ९८ ॥

"துக்கத்தை விலக்கி உனக்கு எப்பொழுதும் க்ஷேமத்தைக் கொடுக்கும் என் வார்த்தையைக் கேள். பலத்திற்கு இருப்பிடமான இராமன் அதிக கோபமடைந்து அரக்கர்களை அழிப்பான். மிகவும் பெருமை பெற்ற ஸீதையை வசம் செய்துகொண்ட இராமனிடத்தில் யார் அசூயை செய்யமுடியும்? ஸீதை இராமனுடைய வில்லை கதியாக அடைந்திருப்பதால் அவளை எப்படி அபஹரிக்கமுடியும்? இந்த புத்தியை விடவேண்டும்".

रामोनापगुणस्त्वभूद्यदहितस्स्वेनापिपित्रा स्वयम्
निर्वास्येतपुरात्स्वतातभवितुंसत्याद्विमातुर्वशम् ।
राज्यंदत्तचरं विमुच्यदययायः प्रापतत्काननम्
तद्द्रोहस्तुनरोचतेशुभाधियोयेमान्त्रिभिश्चिन्तय ॥ ९९ ॥

தன்னுடைய தகப்பனாரும் தான் பட்டணத்திலிருந்து விரட்டி விடும்படியாக இரமன் துர்குணம் பெற்று விரோதியாயிருக்கவில்லை. சக்களத்தித்தாயாருக்கு வசமான தந்தையை ஸத்தியம் கெடாமல் காப்பாற்றுவதற்காக முன் கொடுக்கப் பெற்ற இராஜ்யத்தையும் தயவால் விட்டு, அந்த காட்டிற்கு வந்த இராமனுக்கு குற்றம் செய்யவோ எனக்கு ஸம்மதமில்லை. நற்புத்தி பெற்ற மந்திரிகளுடன் ஆலோசிக்க வேண்டும்.

यद्रामस्य पुरामया प्रविदितं वीर्यं यथाऽर्थं श्रुणु
प्राप्तो ब्रह्मवरात्सहस्रकरिणां शौर्यं चरन्दण्डकान्
भीतः कौशिक आहत्क्रतुमपि श्रीराममानीययम्
बालंतं परिभूयवेदि मगमंसंवर्षितु शोणितम् ॥ १०० ॥

"முன்காலத்தில் இராமனுடைய பலத்தை நான் உண்மை யாக அறிந்திருக்கிறேன். அதைக் கேட்கவேண்டும். பிரம்மா வின் வரத்தால் நான் ஆயிரம் யானைகளின் பலத்தைப் பெற்று, தண்டகாரண்யத்தில் ஸஞ்சாரம் செய்யும்பொழுது, பயத்தால் விசுவாமித்திரர் இராமனை அழைத்துவந்து யாகம் செய்யும் ஸம யத்தில், அவரை சிறுவனென்று அவமதித்து இரத்தத்தை வர் ஷிப்பதற்காக யாகவேதிக்குச் சென்றேன்."

तद्बाणेनकृपालुनात्वभिहतः क्षिप्तश्शतेयोजने
सिन्धोस्तीरमुपागमंमदितरेनिर्जीवतां प्रापिताः ।
संज्ञांप्राप्यचिरेण भीतहृदयोलंकां शनैरागमम्
मानाशं गमयाऽऽत्मनाऽतिमुदितान्सीताकृते बांधवान् ॥

"தயவுபெற்ற அந்த இராமபாணத்தால் அடிக்கப்பெற்றும், நூறுயோஜனை தூரத்தில் தள்ளப்பெற்றும், ஸமுத்திரத்தின் கரையை அடைந்தேன். என்னைத்தவிர மற்றவர்கள் ஜீவனை இழந்தார்கள். வெகுகாலம் கழித்து நினைவுபெற்று பயந்த மனமுடன் மெதுவாக இலங்கைக்கு வந்தேன். மிகவும் ஸந்தோ ஷமடைந்த பந்துக்களை ஸீதைக்காக உன்னோடு நாசமடை விக்காதே".

२९ किंतेनास्ति गृहेसुरूपयुवतिः स्वघ्नींयदेनांवृथा
वांछस्यद्यतनंचवृत्तमवचाश्शृण्वेकचित्तोमृगः ।
भूत्वादण्डककाननंसमचरंभक्षन्तपस्यन्मुनीन्
रक्षोभ्यां सहितोऽभ्यधावमभयोरामंस्मरन्तत्कृतिम् ॥

"உன்னைக் கொல்லும் ஸீதையை நீ விரும்புகிறபடியால் அழகு பொருந்திய பெண் உன் அரண்மனையில் இல்லையா? இப் பொழுது நடந்த ஸமாசாரத்தை பதில் சொல்லாமல் ஒரு மனமா கக்கேட்கவேண்டும். நான் இரண்டு இராக்ஷஸர்களுடன் மான் வேஷம் பூண்டு தவம் செய்யும் ரிஷிகளை ஸாப்பிட்டுக்கொண்டு தண்டகாரண்யத்தில் பயமில்லாமல் ஸஞ்சரித்தேன். இராமன் செய்த தீங்கை நினைத்து அவரிடம் எதிர்த்தேன்."

तन्मुक्तैस्त्रिभिराशुगैर्मदनुगावभ्याहतौदैवतः
मुक्तोभीतिमवारितामुपगतस्स्वप्नेऽपिसर्वत्रतम् ।
पश्यन्नत्नरथाऽऽदिशब्दनिवहंशृण्वन्निहप्रव्रजन्
अस्मित्वत्सहयानतोविनिहतस्स्यां गच्छराज्यंसुखी ॥

"அந்த இராமனால் விடப்பெற்ற மூன்று பாணங்களால் என்பின் வந்த இரண்டு இராக்ஷஸர்களும் நாசமடைந்தார்கள். தெய்வாதீனமாய் விடப்பெற்ற நான் ஸ்வப்னத்திலும் எல்லா விடங்களிலும் இராமனைப் பார்த்தும், ரத்தினப், ரதம் முதலிய சப்தங்களைக் கேட்டும் விலக்கமுடியாத பயத்தை அடைந்து ஸன்யாஸம் செய்துகொண்டு இவ்விடத்தில் இருக்கிறேன். உன் கூட வருவதால் எனக்கும் நாசம் ஏற்படும். சுகமாக இராஜ்யத் திற்குச் செல்லவேண்டும்."

४० दुर्वृत्तोऽभिहतः खरोऽपिविधिना रामः किमागोऽकरोत्
इत्युक्तिंसनिशम्यरावणइदंमारीचमाहानयम् ।
साहाय्यंनकरिष्यसिध्रुवमयेचेत्त्वां निहन्म्युन्मदम्
सन्दिग्धस्तवतत्रजीवविलयोयद्युक्तमत्राऽऽचर ॥ १०४ ॥

"துர்நடைபெற்ற கரனையும் தெய்வம் கொன்றது. இராமன் என்ன குற்றம் செய்தான்"? என்று மாரீசனுடைய வார்த்தையைக் கேட்டு இராவணன் மாரீசனைப் பார்த்து நீதி இல்லாமல் பதில் கூறினன். "ஹே மாரீசா! நீ எனக்கு உதவிசெய்யாமலிருந்தால் அதிக மதம் பெற்ற உன்னை நிச்சயமாய் கொல்லுகிறேன். இராமனிடத்தில் உன்னுடைய பிராணனுக்கு அழிவு ஸந்தேஹம். அவைகளில் எது தகுதியோ? அதைச் செய்ய வேண்டும்".

चित्रोराजतबिन्दुभिस्सकनकोभूत्वामृगः पर्यट
त्वांवीक्ष्यात्रनिजाग्रहीतुमनघासंप्रेषयेत्स्वंपातिम् ।
आनीयाधिकदूरमेवतमथव्याक्रोशहामैथिलि
प्रेमभ्रातरितिश्रुतध्वनिरसौमन्येतरामाऽऽपदम् ॥ १०५ ॥

"வெள்ளிப் புள்ளிகளால் சித்திரவர்ணமான தங்கமானாக நீ ஸஞ்சரிக்கவேண்டும். குற்றமற்ற அந்த ஸீதை உன்னைப்பார்த்துபிடிக்கும்படி தன் புருஷனை அனுப்புவாள். பிறகு அந்த இராமனை வெகுதூரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஹே ஸீதே! ஹே அன்பு ஸஹோதரா! என்று நீ பலமாக கத்தவேண்டும். ஸீதை அந்த சப்தத்தைக் கேட்டு இராமனுக்குத் துன்பத்தை நினைப்பாள்".

आर्यंपश्यविपन्नमित्यतिशुचातंदेवरंप्रेषयेत्
शून्यात्पर्णगृहाद्धरामिधरणेः पुत्रींकृतार्थस्ततः ।
राज्यार्धंप्रदिशामितेप्रमुदितो गच्छाग्र आयाम्यनु
प्राप्यस्यन्दनमित्यमुंखररवंमारीचआहप्रभुम् ॥ १०६ ॥

"துன்பமடைந்த அண்ணனைப் பார்க்கவேண்டும்" என்று ஸீதை மிகுந்த துக்கத்தால் அந்தக் கொழுந்தனை அனுப்புவாள். ஜனமில்லாத ஆசிரமத்திலிருந்து ஸீதையை அபஹரிக்கிறேன். அதனால் விருப்பம் நிறைவேறி உனக்கு பாதி இராஜ்யம் கொடுக்கிறேன். நீ முன்னால் செல்லவேண்டும். நான் பின்னால் ரதத்தில் ஏறிக்கொண்டு வருகிறேன்" என்று கடுமையாக சப்திக்கும் எஜமானனைப் பார்த்து மாரீசன் கூறினான்.

४१ कोराजन्सहतेनबुद्धिमतुलां तेबुद्धिमेवंददौ
आहृत्यावनिजांपुरंनयसि चेल्लंकाननत्वज्जनाः ।
नत्वंजातुभविष्यसित्वदहितोनन्दिष्यतित्वल्लये
त्वद्वैरिप्रहतोऽस्म्यथासिच तथायन्मेवचोनश्रुतम् ॥१०७॥

"ஹே அரசே! உன்னுடைய அளவற்ற க்ஷேமத்தைப் பொறுக்காமல் இவ்விதம் புத்தி சொன்னவன் யார்? ஸீதையை அபஹரித்து பட்டணத்திற்கு அழைத்துப்போனால், லங்கையும், நீயும், உன் பந்துக்களும் இருக்கப்போகிறதில்லை. உன்னுடைய துன்பத்தால் சத்துரு ஸந்தோஷமடையப்போகிறான். நீ என் வார்த்தையைக் கேட்காததால் உன் சத்துருவால் நானும் நாசமடைகிறேன். பிறகு நீயும் நாசமடையப் போகிறாய்".

४२ ओमित्युक्तागिरंप्रशस्यबहुधासंश्लिष्यतंस्यन्दनम्
प्रापय्याथसमेत्यरामवसतेरभ्यर्णमात्मेप्सिम् ।
कुर्वित्युक्तवचास्सतेनहरिणस्सौवर्ण आसीत्तदा
शृङ्गेरत्नमयश्चचारकदळीगेहेऽभिरामेक्षितः ॥ १०८ ॥

இராவணன் தன் விருப்பத்திற்கிணங்கி "ஓம்" என்று கூறின அந்த மாரீசனைக் கட்டிக்கொண்டு, பலவிதமாகத் துதித்து, ரதத்தில் ஏற்றிக்கொண்டு இராமாசிரமத்தின் சமீபத்தை அடைந்து அவனையும் அடைவித்து "என் விருப்பத்தைச் செய்யவேண்டும்" என்று சொல்லும்பொழுது மாரீசன் அப்பொழுது கொம்புகளில் இரத்தினமயமாகவும் பார்ப்பதற்கு அழகான தங்க மானாக இருந்து வாழைத்தோட்டத்தில் ஸஞ்சரித்தான்.

भावंछादयितुंमृगान्वनभवान्नाऽऽदत्स्वमाजिघ्रतः
गेहद्वारमुपेत्यसत्वरमसौमोदादुपैत्तान्पुनः ।
पुष्पाण्यप्यपचेतुमात्तकुतुका वृक्षान्गतामैथिली
दृष्ट्वाविस्मितमानसा स्वरमणंतंप्रैक्षयत्सानुजम् ॥ १०९ ॥

தன்னை முகருகின்ற வனத்திலிருக்கும் மான்களை மாரீசன் இராக்ஷஸ தன்மையை மறைப்பதற்காக ஸாப்பிடவில்லை. வேகமாக இராமாசிரமத்தின் வாயிலை அடைந்து மறுபடியும் அவைகளைக் குறித்து ஸந்தோஷமாகச் சென்றான். ஸீதை புஷ்பங்களைப்பறிப்பதற்கு ஸந்தோஷமாக மரங்களை அடைந்து அந்த மானைப்பார்த்து ஆச்சரியமடைந்து தன் புருஷனையும் கொழுந்தனையும் பார்க்கச்செய்தாள்.

४३ आर्यायंनमृगः प्रलोभनकरीमायातुमारीचजा
नैवंरूपमृगो भवेद्भुविवनेजाताऽभिहन्तुंकृता ।
इत्याभाषिणि सोदरेमृगमिमंकान्ताऽऽनयक्रीडितुम्
जीवन्नेवनलभ्यतेयदितदादेह्यस्याचित्राजिनम् ॥ ११० ॥

"ஹே அண்ணு! இது மான் இல்லை. காட்டில் இருப்பவர்களைக் கொல்லுவதற்காக மாரீசன் செய்த மாயை. பூமியில் இவ்விதமான மான் இல்லை" என்று இலக்ஷ்மணன் சொல்லும் பொழுது "ஹே நாதா! விளையாடுவதற்கு இந்த மானைப் பிடித்து வரவேண்டும். உயிரோடு இது அகப்படாவிட்டால் அப்பொழுது அதன் சித்திரமான தோலைக் கொடுக்கவேண்டும்."

इत्युक्तः प्रिययाप्रियप्रवणया रामोऽपितत्त्वंविदन्
दैवादागतविस्मय श्शशिगतोद्युस्थोमृगोऽयंवरौ ।
आदास्यमिसजीवमेनमथचेन्मायीहतस्याजिनम्
सीतांरक्षजटायुषास्ववहितस्स्याइत्यशाल्लक्ष्मणम् ॥१११॥

அன்புமிகுந்த இன்ப மனைவியால் ஏவப்பெற்ற இராமன் உண்மையை அறிந்தும் தெய்வாதீனமாய் ஆச்சரியமடைந்து "ஆகாயத்தில் சந்திரனிடமிருக்கும் மானும் இந்த மானும் இரண்டும் உயர்வுபெற்றது. இதை உயிரோடுபிடித்து வரப்போகிறேன். இது இராக்ஷஸனுயிருந்தால் கொன்று இதன் தோலையாவது கொண்டு வரப்போகிறேன். ஹே இலக்ஷ்மணு! நீ ஜடாயுவோடு ஸாவதானமாயிருக்கவேண்டும் ஸீதையைக்காப்பாற்றவேண்டும்" என்று இலக்ஷ்மணனுக்கு உத்திரவுசெய்தார்.

४४ वीक्ष्यैनंसकलापखड्गधनुषंस्वसानुगंसत्वरं
दूरंत्वाश्रमतोविकृष्यभयतस्सद्यस्समन्तर्हितम् ।
दृष्ट्वाहेममृगंविनिश्वसितक्रुद्धाणेनरामोन्यहन्
मुक्त्वामागतनुंपुनः प्रकृतिमानासीत्सतालोत्प्लुतः ॥

அம்புபெட்டி, வில்லு, கத்தி இவைகளோடு தன் பின்னால் வரும் இராமனைப் பார்த்து வெகுதூரம் ஆசிரமத்திலிருந்து வேகமாய் இழுத்துச்சென்று பயத்தால் உடனே மறைந்த தங்க மானைப் பார்த்து, இராமன் பெருமூச்சுபெற்று பாணத்தால் அடித்தார். அந்த மாரீசன் மான் சரீரத்தை விட்டு மறுபடியும் பனைமரம் வரை உயரக்குதித்து தன் சரீரத்தை அடைந்தான்.

सीताप्रेरितलक्ष्मणोद्रुतमिमंदेशंसगच्छेद्यथा
हासीतेऽनुजलक्ष्मणेत्यपिवदन्भूमौपपाताऽऽशरः ।
पत्नीभ्रातृहितप्रदंनिदितंश्रुत्वेदमन्तस्स्मरन्
तावेवाभिययौ जगद्भयहरोरामोतिभीतो गृहम् ॥११३॥

ஸீதையால் ஏவப்பெற்று இலக்ஷ்மணன் சீக்கிரம் இவ்விடத்திற்கு வரும்படியாக "ஹே ஸீதே! தம்பி இலக்ஷ்மணா! கஷ்டம்"! என்று சொல்லி இராக்ஷஸன் பூமியில் விழுந்தான். மனைவிக்கும் தம்பிக்கும் துன்பம் கொடுக்கும் இந்த சப்தத்தைக் கேட்டு அவர்களையே மனதில் நினைத்துக்கொண்டு உலகத்தின் பயத்தை விலக்கும் இராமன் மிகவும் பயந்து ஆசிரமத்தை நோக்கிச்சென்றார்.

४५ श्रुत्वा कोणपजल्पिताऽऽर्तानिनदंस्मृत्वातुभर्तुस्स्वरम्
सीतालक्ष्यणमादिशत्समवितुं सोदर्यमद्यैहितम् ।
तस्यानिर्गमनेनकोपकलुषादैवाऽऽहतादेत्ररम्
भर्तृप्रेमवशीकृताशुभमतिंस्निग्धंजगर्हेबहु ॥ ११४ ॥

இராக்ஷஸன் சொன்ன துக்கமான சப்தத்தைக்கேட்டு புருஷனுடைய சப்தமாக நினைத்து ஸீதை இலக்ஷ்மணனைப் பார்த்து "அண்ணனைக் காப்பாற்றுவதற்காக இப்பொழுது செல்ல வேண்டும்" என்று உத்திரவு செய்தாள். இலக்ஷ்மணன் வெளியேறாததால் ஸீதை கோபத்தால் கலங்கி, தெய்வத்தால் தூண்டப்பெற்று புருஷனிடம் உள்ள அன்பிற்கு ஈடுபெற்று, நற்புத்தி பெற்ற சினேஹமுள்ள கொழுந்தனை மிகவும் நிந்தித்தாள்.

भ्रातृव्योऽसिसगर्भ्यपत्युरहितंयद्वांछासित्वागतम्
मांप्राप्तुंस्वयमागतोऽसिभरतः किंप्रैषयत्त्वांखलः ।
किंस्यात्तेऽभिहतेऽग्रजेऽनयमया जानामिदुष्टाऽऽशयम्
प्रच्छन्नोऽसिसुहृद्वपुस्स्वहितकृत्किंलज्जतेकामुकः ॥११५॥

"புருஷனுடைய ஸஹோதரனே! புருஷனுக்கு வந்த துன்பத்தை நீ விரும்புகிறபடியால் அவருக்கு சத்துருவாக இருக்கிறாய். என்னை 'அடைவதற்காக தானாக வந்தாயா? துஷ்டனான பரதன் உன்னை 'அனுப்பினானா? ஹே நீதியற்றவனே! அண்ணன் அழிந்ததின் பிறகு என்றால் உனக்கு என்ன பலன்? உன்னுடைய கெட்ட எண்ணம் எனக்குத் தெரியும். துன்பம் செய்யும் நீ சினேஹிதனுடைய சரீரம் பெற்று மறைவாக இருக்கிறாய். காமமுள்ளவன் வெட்கமடைகிறானா?"

रामेप्रीतिरहेतुकाक्वनुगतायद्भ्रातरंनावसि
प्राणान्नैववहामितंप्रियमृते पास्यामिघोरंविषम् ।
यास्याम्याश्रयमाश्रयमाशमितितांदुःखोक्तदुर्वाक्यकाम्
जायांभ्रातुरदोषधीरनुनयन्नाह प्रणम्रस्सुधीः ॥ ११६ ॥

"ஸஹோதரனைக் காப்பாற்றாமலிருக்கிறபடியால் இராமனிடத்தில் காரணமில்லாமல் இருந்த அன்பு எங்கே சென்றது? அந்த நாதனில்லாமல் நான் பிராணனை வைத்திருக்கமாட்டேன். கொடிய விஷத்தை சாப்பிடப்போகிறேன். அக்கினியை சரணமடையப்போகிறேன்" என்று துக்கத்தால் துர்வார்த்தை சொல்லும் அண்ணனுடைய மனைவியான மதினியைப் பார்த்து குற்றமற்ற புத்திபெற்ற புத்திசாலியான இலக்ஷ்மணன் வணங்கி சமாதானம் செய்து கூறினான்.

शौर्यस्याऽऽलयमापदामाविषयं विद्ध्यार्यमार्येवयम्
रक्षोभिः प्रविरोधिनस्सकृतकैश्शब्दोऽयमन्यैः कृतः ।
सन्तापंत्यजतेपतिर्धृतमृगस्सद्रागिहाऽऽयास्यति
न्यस्तातेनमयित्वमत्रविजहन्नेकां नयाम्यन्यतः ॥ ११७ ॥

"ஹே மதினி! அண்ணா பலத்திற்கு இருப்பிடம். அவரிடம் துன்பம் அணுகாது" என்று நீ நினைக்கவேண்டும். இராக்ஷஸர்களோடு நாம் விரோதம் பெற்றோம். அண்ணனைத் தவிர மற்ற விஷமமுள்ளவர்களால் இந்த சப்தம் செய்யப்பெற்றது. துக்கத்தை விடவேண்டும். உன்னுடைய புருஷன் மானைப் பிடித்துக் கொண்டு இவ்விடத்தில் சீக்கிரம் வரப்போகிறார். உன்னைக் காப்பாற்றும்படி என்னிடத்தில் அவர் வைத்திருக்கிறார். இவ்விடத்தில் உன்னை ஒருவளாக விட்டு நான் வேறு இடத்திற்குப் போகமாட்டேன்".

दुर्वाक्यानिवदस्यनेकमितियत्साधोनाचित्रंत्विदम्
स्त्रीत्वंचंचलमानसं जानिगृहंनित्यंकलेः खल्विति।
श्रुत्वालक्ष्मणभाषितंद्विगुणितक्रोधाऽवदज्जानकी
दुष्टस्त्वंनचवेपतेतवमनो भ्रातुर्यदत्याहिते ॥ ११८ ॥

"நிலைமையற்ற மனம் பெற்ற பெண்ணின் தன்மை எப்போதும் கலஹத்திற்கு இருப்பிடமாயிருப்பதால் ஹே ஸாதுவே! நீ அநேக துர்வார்த்தைகளை சொல்வது ஆச்சரியமில்லை". என்று இலக்ஷ்மணனுடைய வார்த்தையைக் கேட்டு ஸீதை இரண்டு பங்கு கோபம்பெற்று கூறினாள். "ஸஹோதரனுடைய மிருந்த பிராணபயத்திலும் உன் மனம் நடுங்காததால் நீ துஷ்டனாக இருக்கிறாய்".

गंगायामथवा भृगौनिपतनात्स्वां शातयेयंतनुम्
रामंनानुसरेर्यदीत्यभिहितस्सप्राहतां प्रश्रितः
आर्येदैवतबुद्धिना तववचः क्षान्तन्तुरूक्षंमया
कर्णौभिदळयद्व्रजाम्यशरणांरक्षन्तुदेवाइमाम् ॥ ११९ ॥

"இராமனுக்குப் பின் துணையாக நீ போகாமலிருந்தால் கங்கையிலாவது, பள்ளத்திலாவது விழுந்து, என் சரீரத்தை நாசமடைவிப்பேன்" என்று ஸீதை சொன்னதும் அவளைப்பார்த்து இலக்ஷ்மணன் வணக்கமாய் கூறினான். "ஹே மன்னி! நீ தெய்வம் என்ற புத்தியால், காதுகளைப் பிளக்கும் கடுமையான உன் வார்த்தையைப் பொறுத்தேன். போகிறேன், துணையற்ற இந்த ஸீதையைத் தேவர்கள் காப்பாற்றவேண்டும்".

४६ इत्युक्त्वास्वसहोदरस्यसविधंयातेऽनघेलक्ष्मणे
स्वांसेदण्डकमण्डलूउपदधत्काषायवस्त्राऽऽवृतः।
आम्नायंप्रपठन्दशाऽऽननउपैत्सीतांसएकाकिनीम्
संध्यां भास्करचन्द्रमोविरहितां ध्वान्तंनिगूढंयथा ॥

என்று சொல்லி குற்றமற்ற இலக்ஷ்மணன் ஸஹோதரனுடைய ஸமீபத்திற்குச் சென்றபொழுது இராவணன் தன் தோள்களில் தண்டம், கமண்டலம் இவைகளையும், இடையில் காவிவஸ்திரத்தையும், தரித்துக்கொண்டும் வேதம், ஓதிக்கொண்டும், ஒருவளாயிருக்கும் ஸீதையினிடம், சூரியனும், சந்திரனும் இல்லாத ஸந்தியா காலத்தில் இருள்போல் மறைவாக வந்தான்.

अंगानांसुकुमारतांवरगुणंरूपंवयः कांक्षितम्
स्तुत्वादुर्जनसंवृतेवनतलेसौधेनिवासंविना ।
एकस्याविनिवासहेतुमथतंपृच्छन्तमेतंद्विजम्
मत्वावेषविमोहिताखलतमंसीताऽऽतिथेय्यार्चयत् ॥

அவயவங்களின் அழகையும், நற்குணம் பெற்ற உருவத்தையும், விரும்பப்பெற்ற யௌவன பர்வத்தையும் துதித்து உப்பரிகையில் வஸிக்காமல் துஷ்டர்கள் சூழ்ந்த வனப்பிரதேசத்தில் ஒருவளாக வஸிப்பதின் காரணத்தை வினவும் மிகவும் துஷ்டனான இராவணனை பிராமணனென்று நினைத்து விருந்தாளிகளுக்கு விருந்து அளிக்கும் ஸீதை வேஷத்தால் மோஹித்து பிறகு பூஜித்தாள்.

४७ तत्पृष्टोविनिवेद्यसस्वचरितंतांप्रार्थयद्रावणः
लंकासौधमुपेहितत्रनिवसप्रेम्णाऽपराश्रीरिव ।
नब्रूयांयदिपृच्छतः प्रतिवचः क्रुद्धोऽतिथिर्माशपेत्
इत्यन्तस्सभयाजगादसकलां सीताप्रवृत्तिंनिजाम् ॥

அந்த ஸீதையால் வினவப்பெற்ற இராவணன் தன் சரித்திரத்தைத் தெரிவித்து “இலங்கையின் உப்பரிகையை அடைய வேண்டும். அதில் வேறு இராஜ்ய லெக்ஷ்மிபோல் அன்போடு குடிஇருக்கவேண்டும்” என்று ஸீதையைப்பார்த்து வேண்டினன். வினவும் இவருக்கு நான் பதில் உரைக்காமல் இருந்தால் விருந்தாளி கோபமடைந்து என்னை சபித்துவிடுவார்; என்று ஸீதை மனதில் பயந்து தன் எல்லா ஸமாசாரத்தை உரைத்தாள்.

श्रुत्वारक्षसउक्तिमप्यनुचितां सीताजगर्हेक्रुधा
यत्प्राप्तोषिनरर्षभावपनयन्दूरेतिभीतोऽद्यमाम् ।
ज्ञातंतेप्रबलाबलंसनृहरिस्तद्वस्ततस्तद्वधूम्
जम्बूकस्त्वमपाहराऽऽशुमृतयेमांविद्धचसुघ्नांविषम् ॥

இராவணனுடைய தகுதியற்ற வார்த்தையையும் ஸீதைக் கேட்டு ஹே பலமுள்ளவனே! அரசர்களான இராம லக்ஷ்மணர்களை தூரத்தில் விரட்டி நீ பயந்துகொண்டு இப்பொழுது என்னிடம் வந்திருப்பதால் உன்னுடைய பலக்குறைவு தெரிந்தது. இராமன் நரஸிம்மன். அவனுடைய மனைவியை அவனிடமிருந்து நரிபோல் நீ சீக்கிரம் மரணத்தின் பொருட்டு எடுத்துச்செல். பிராணனைக் கொல்லும் விஷமாக என்னை நினைத்துக்கொள். என்று கோபத்தால் நிந்தித்தாள்.

४८ स्वीयं विक्रममक्रमैकशरणस्स्वर्गौकसां त्रासनम्
लंकाराज्यजवैभवं धनदतस्तत्पुष्पकस्याऽऽहृतिम् ।
तेनाकुण्ठितमन्तरिक्षगमनं विज्ञाप्यनिस्स्वंपतिम्
त्यक्त्वामामाधिकर्द्धिमेहिनमयातुल्यस्सइत्याहताम् ॥

அக்கிரமத்திற்கு முக்கிய இடமான இராவணன் தேவர்களுக்கு பயமளிக்கும் தன் பலத்தையும் இலங்கா ராஜ்யத்தின் பெருமையையும் குபேரனிடமிருந்து அவனுடைய புஷ்பக விமானத்தைப் பிடுங்கினதையும் அதனால் ஆகாயத்தில் தடையில்லாத ஸஞ்சாரத்தையும் தெரிவித்து பொருளற்ற புருஷனை விட்டு அதிக ஐசுவரியம் பெற்ற என்னிடம் வரவேண்டும். அந்த இராமன் எனக்கு ஸமமில்லை. என்று ஸீதையிடம் சொன்னான்.

४९ इत्युक्त्याऽप्यवशीकृतामवनिजांरूपंनिजंदर्शयन्
क्रन्दन्तीमनिमेषदृष्टिमभितोवीक्ष्याऽऽर्यपुत्रेतिताम् ।
रक्षस्सानुनयंप्रगृह्यकरयोरारोहयत्स्यन्दनम्
वेगेनोदपतत्पयोधरइवस्वांकेदधद्विद्युतम् ॥ १२५ ॥

இவ்விதமான வார்த்தையாலும் வசபாகாதவளும் இமைக்கொட்டு இல்லாத கண்களைப்பெற்று நான்கு புறமும் பார்த்து ஆர்ய புத்திரா! என்று கதறும் ஸீதையை இராவணன் தன் உருவத்தைக் காண்பிவித்துக் கைகளில் தூக்கி நல்ல வார்த்தையோடு இரதத்தில் ஏற்றிவைத்தான். மேகம் தன் மடியில் மின்னலை தரித்து ஆகாயத்தில் செல்வதுபோல் வேகமாய் பிரயாணம் செய்தான்.

सीतामाहरतिक्षपाचरइतिक्षिप्रंवदन्त्वादरात्
रामायेत्यभिवादयेतनुभृतः कान्तारमासादितान् ।
इत्याक्रुश्यजटायुषंतरुगतंवीक्ष्याबदत्सातदा
रामंज्ञापयवृत्तमेतदखिलंवृद्धस्त्वमेषोऽकृपः ॥ १२६ ॥

"இராவணன் ஸீதையை அபஹரிக்கிறான் என்று சீக்கிரம் இராமனிடம் அன்போடு சொல்லவேண்டும்" என்று காட்டில் இருக்கும் பிராணிகளை நமஸ்கரிக்கிறேன். என்று ஸீதைக் கதறி மரத்தில் இருக்கும் ஜடாயுவைப் பார்த்து அப்பொழுது "இந்த எல்லா ஸமாசாரத்தையும் இராமனிடம் தெரிவிக்கவேண்டும். நீயும் கிழவன், இவனும் கருணையற்றவன்." என்று கூறினாள்.

५० इत्युक्तस्सतयाजटायुरनयंधर्मंसतांबोधयन्
प्राहप्रश्रयपूर्वकंनिशिचरप्राग्र्यान्यदाराऽऽहृतिः ।
नन्याय्यातवराघवोऽप्यचिरतोहन्यात्प्रवृद्धोरणम्
यावत्प्राणमिहाऽऽचराम्यपभयो नैषाऽपनेयात्वया ॥ १२७॥

இவ்விதம் ஸீதையால் சொல்லப்பெற்ற ஜடாயு நீதியற்ற இராவணனைப்பார்த்து பெரியோர்களின் தர்மத்தை அறிவித்து வணக்கமாய் கூறினான். ஹே இராக்ஷஸ சேரக்கவும் ராஜனே! பிறர் மனைவியை அபஹரித்தல் உனக்கு நீதியில்லை. இராமன் சீக்கிரம் வதம் செய்வான். நான் கிழவனாயினும் பயமில்லாமல் பிராணன் இருக்கும் வரை இவ்விடத்தில் யுத்தம் செய்கிறேன். இவளை நீ கொண்டுபோகக் கூடாது.

५१ इत्याभर्त्स्यवराऽऽयुधंभृशबलंवक्त्राऽऽयुधोऽभिद्रवन्
पक्षीराक्षसमात्मपक्षबलतोव्याधूयतस्याऽऽशुगान् ।
छिन्दन्स्यन्दनवाहनान्यपिभुजान्कुर्वन्पदातिंसतद्
खड्गाऽऽघातविलूनपक्षचरणोभूमाववीर्योऽपतत् ॥

என்று முகத்தை ஆயுதமாகப் பெற்ற ஜடாயு நல்ல ஆயுதங்களையும் மிகுந்த பலத்தையும் பெற்ற இராவணனை அதட்டி எதிர்த்து தன் இறக்கை பலத்தால் அவனுடைய பாணங்களை விலக்கி இரதம் குதிரைகளையும் அறுத்து காலாளாக நிற்கும்படி செய்து அவனுடைய கத்தியின் அடியால் இறக்கைகளும் கால்களும் அறுபட்டு பலமில்லாமல் பூமியில் விழுந்தது.

५२ दृष्ट्वोपद्रुतमात्मबंधुमतनुक्लेशांविदेहाऽऽत्मजाम्
रामत्राहिहरत्यसाविति चिरंव्याक्रुश्यवृक्षान्मुहुः ।
श्लिष्यन्तींसहसाप्रगृह्यनिधनंवांछन्कचेरावणः
व्योमागाहततत्पथाऽऽस्थितततेस्संभीषणस्साहसी ॥

தன் பந்துவான ஜடாயுவும் துன்பமடைந்ததைப் பார்த்து அதிக துக்கம் பெற்று "இராவணன் என்னை அபஹரிக்கிறான். ஹே இராமா! காப்பாற்றவேண்டும்" என்று வெகுகாலம் அழுது அடிக்கடி மரங்களைக் கட்டிக்கொள்ளும் ஸீதையை பிடிவாதம் பெற்ற இராக்ஷஸன் மரணத்தை விரும்பி சீக்கிரம் மயிரில் பிடித்து ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்களும் பயமடையும்படி ஆகாசத்தில் சென்றான்.

सीतांवीक्ष्यनिशाचरेणनभसाभीतिंविसृज्याऽऽहृताम्
ब्रह्माऽमोदतनाकिनामभिमतंसंपूर्णमासीदिति ।
सीताक्लेशमिमंविचिन्त्यहननंदुष्टस्यरक्षःपतेः
शोकंहर्षमवाप्नुवन्तऋषयोद्वेएकदादुर्लभे ॥ १३० ॥

இராவணன் பயத்தைவிட்டு ஆகாயமார்க்கமாய் ஸீதையை அபஹரித்ததைப் பார்த்து தேவர்களின் விருப்பம் நிறைவு பெற்றது. என்று பிரம்மா ஸந்தோஷித்தார். ஸீதையின் இந்த துயரத்தையும் துஷ்ட இராவணனுடைய மரணத்தையும் நினைத்து அந்த ரிஷிகள் ஒரு காலத்தில் அடையமுடியாத துக்கம் ஸந்தோஷம் இரண்டையும் அடைந்தார்கள்.

पुण्यस्त्रीहरणंमहादुरितकृत्संपश्यतामित्ययं
मध्येव्योमतिरोऽदधाद्दिनमणिस्साक्षीस्वयंकर्मणाम् ।
रक्षोऽत्याहितसूचनायभुवनंध्वान्तंमहद्व्यानशे
सद्धर्मस्यफलंनवेत्यतितरांदेवा अखिद्यन्तते ॥ १३१ ॥

புண்ணியம் செய்த பெண்ணை அபஹரித்தல் பார்ப்பவர்களுக்கு பாபமளிக்கும். என்று ஸூர்யன் தான் கர்ம ஸாக்ஷியாயிருந்தும் ஆகாயத்தின் நடுவில் மறைந்தான். இராக்ஷஸர்களின் மிகுந்த பயத்தை வெளிப்படுத்துவதின் பொருட்டு அதிகமான இருள் உலகத்தில் வியாபித்தது. பெரியோர்களின் தர்மத்திற்கு பலன் இல்லையா? என்று அந்த தேவர்கள் மிகவும் வருந்தினார்கள்.

सीतायामणिनूपुरंचरणतस्स्वर्गादिवाभाग्यवान्
भुव्यस्रंसतरक्षसोयशइवस्रस्तोगुणोमौक्तिकः ।
कण्ठात्केशकलापतस्तुकुसुमंव्योम्नोयथोडुव्रजः
तामात्मव्यसनायसाश्रुनयनां रामाज्जहाराऽऽशरः ॥

ஸீதையின் காலிலிருந்து இரத்தினச் சிலம்பும் கழுத்திலிருந்து முத்துஹாரமும் மயிர் கூட்டத்திலிருந்து புஷ்பமும் நழுவி, சுவர்க்கத்திலிருந்து பாக்கியமில்லாதவன் போலும், ஆகாயத்திலிருந்து நக்ஷத்திரக்கூட்டம் போலும், இராவணனுடைய கீர்த்திபோலும், பூமியில் விழுந்தது. கண்களில் ஜலம் பெற்ற அந்த ஸீதையை இராக்ஷஸன் தன் நாசத்தின் பொருட்டு இராமனிடமிருந்து அபஹரித்தான்.

५३ सीतारोदनरोषताम्रनयनारक्षोऽङ्कगातंतृणम्
मत्वाऽगर्हतचौर्यमेतदनयंकुर्वन्नलज्जेतकः ।
हित्वात्वांयदिदृक्पथंनृवरयोर्गच्छेस्सुपश्येर्यमम्
घोराऽकारमितिप्रवीक्ष्यपरितस्त्रासगत्यत्ययात ॥

அழுகையாலும் கோபத்தாலும் சிவந்த கண்களைப் பெற்ற இராவணனுடைய மடியில் இருக்கும் ஸீதை அவனைக் துரும்பாக நினைத்து "உன்னைத்தவிர எவன் நீதி இல்லாமல் திருட்டுத் தனத்தைச்செய்து வெட்கமடையாமலிருப்பான். நீ இராம லக்ஷ்மணர்களின் கண்களில் தோன்றினால் பயங்கர உருவம்பெற்ற யமனைப் பார்ப்பாய் என்று நிந்தித்தாள். நான்கு புறமும் பார்த்து துணையில்லாமையால் பயந்தாள்.

५४ पंचोद्वीक्ष्यनगोत्तमांगवसतीन्त्रासाङ्गनामर्कटान्
वस्त्राऽऽबद्धविभूषणान्यनिदितंरक्षोऽधिपेनामुचत् ।
शंसेयुर्यदिराघवायतदिदंदैवादितिप्रत्ययात्
तेऽद्राक्षुर्गगनाध्वनीनयुवतिंरामाभिधावादिनीम् ॥

ஸீதை பர்வதத்தின் சிகரத்தில் வசிக்கும் ஐந்து குரங்குகளைப்பார்த்து இவர்கள் தெய்வவசத்தால் இராமனிடம் இதைத் தெரிவிப்பார்கள் என்று நம்பிக்கையால் வஸ்திரத்தில் கட்டின நகைகளை இராவணனுக்குத் தெரியாமல் தள்ளினாள். அந்த குரங்குகள் இராம நாமம் சொல்லும் ஆகாய வழியில் நடக்கும் பெண்ணைப் பார்த்தார்கள்.

कान्ताराणिनदीरतीत्यचगिरीन्पाथोनिधिंसत्वरम्
लंकामेत्यदशाऽऽननस्स्वसदनंसीतांनिनीयोज्ज्वलम् ।
एतांरक्षतनित्यमत्यवहितानैकोऽपिपश्येद्यथा
यद्वांछत्यपिदीयतांतदचिरादित्यादिशत्सोऽनुगाः ॥

அந்த இராவணன் காடுகளையும், நதிகளையும், மலைகளையும், ஸமுத்திரத்தையும் தாண்டி வேகமாக இலங்கைக்குச் சென்று ஸீதையை அழகான தன் அரண்மனைக்கு அழைத்துவந்து இவளை எப்பொழுதும் ஒருவனும் பார்க்காமலிருக்கும்படி மிகவும் ஸாவதானமாகக் காப்பாற்றவேண்டும். இவள் எதை விரும்புகிறளோ அதை சீக்கிரம் கொடுக்கவேண்டும் என்றும் வேலைக்காரிகளைப் பார்த்து உத்திரவு அளித்தான்.

अष्टावात्मवशंवदान्निशिचरान्ज्ञातुंजनस्थानगम्
रामस्यैवचिकीर्षितंरहसितान्प्रस्थाप्यपङ्क्त्याननः ।
शोकस्योपशमंखरादिनिहतेर्जातस्यशत्रोर्जयात्
वांछन्स्वस्यकृतार्थताममनुतप्राऽऽवेदनाऽऽत्माऽऽपदम् ॥

ஜனஸ்தானத்தில் இராமன் விரும்பும் செய்கையை அறிவதற்காக இராவணன் தனக்கு வசமான எட்டு இராக்ஷஸர்களைப் பிரயாணம் செய்வித்து கரன் முதலியவர்களின் வதத்தால் உண்டான துக்கத்தை சத்துருவின் ஜயத்தால் விலக்க விரும்பி தன்னை பாக்கியம் பெற்றவனாக நினைத்தான். தன்னுடைய துன்பத்தை அறியவில்லை.

५५ दर्श्यंस्वस्यगृहंप्रदर्श्यकथमप्युद्विग्नसीतांखलः
मूर्ध्नाऽऽनम्यजितारविन्दपदयोस्संवेदयन्पुष्कलाम् ।
लक्ष्मींतत्पतितांचिराप्रतिहतांदेवाद्यजय्याऽऽत्मताम्
रामंविस्मरमांभजेत्यभिदधत्सप्राऽऽर्थयत्प्रेष्यवत् ॥

துஷ்டனான அந்த இராவணன் துக்கமடைந்த ஸீதைக்குப் பார்க்கும்படி அழகுபெற்ற தன்னுடைய அரண்மனையைப் பிரயாஸத்துடன் காண்பிவித்து தாமரையை ஜயித்த அவளுடைய திருவடிகளில் தலையால் வணங்கி நிறைந்த தன் ஐசுவரியத்தையும் வெகுகாலமாக அழிவற்ற, ஸம்பத்தின் எஜமானனாயிருத்தலையும், தேவர் முதலியவர்களாலும் ஜயிக்கமுடியாத சரீரம் பெற்றிருப்பதையும் அறிவித்து இராமனை மறக்கவேண்டும், என்னை அடையவேண்டும் என்று சொல்லி வேலைக்காரன்போல் வேண்டினான்.

५६ शक्यानाहमनार्यलब्धुमितररामाऽऽश्रितामेहृतिः
त्वांहन्तुंविधिनाकृतेत्यपभयंप्रत्याहरन्तींगिरम् ।
सीतांशोकपरामशोकवनिकांप्रापय्यतांराक्षसीः
रक्षस्त्वादिशदात्मनोवशायितुंपूर्येतयावच्छरत् ॥ १३८ ॥

ஹே துஷ்டா! நான் இராமனை அடைந்தவள். என்னை மற்றவர்கள் அடையமுடியாது. உன்னை கொல்லுவதற்காக தெய்வம் என்னை அபஹரிக்கச் செய்தது. என்று பயமில்லாமல் வார்த்தை சொல்லும் துக்கத்தை விரும்பும் ஸீதையை அந்த அசோகவனத்திற்கு அழைத்து வருஷம் நிறம்புவதற்குள் தனக்கு வசமாக்கும்படி இராவணன் இராக்ஷஸிகளுக்கு உத்திரவு செய்தான்.

प्रक्षिप्तस्सर्गः

शक्रंवीक्ष्यसमागतंविधिगिरानिद्राप्यसर्वान्रिपून्
सीतावीतभयातदर्पितमतिप्रीत्यास्वभर्त्रेऽमृतम् ।
क्षुत्तृष्णाऽऽहरनिवेद्यमुदिताश्रुत्वाप्रवृत्तिंतयोः
प्राश्नादुःखमथाऽऽत्मनोऽपिविजहौस्मृत्वापतिंसानुजम् ॥

பிரம்மாவின் உத்திரவால் எல்லா சத்துருக்களையும் தூங்க வைத்து வந்த இந்திரனை ஸீதை பார்த்து பயமில்லாமல் அவன் கொடுத்த பசிதாகத்தின் தாபத்தைத் தீர்க்கும் அமிருதத்தை மிகவும் ஸந்தோஷமாக தன் புருஷனுக்கு நிவேதனம் செய்து தன் புருஷனையும் அவருடைய தம்பியையும் நினைத்தும் அவர்களின் ஸமாசாரத்தைக் கேட்டும் ஸந்தோஷமடைந்து பிறகு அமிருதத்தை சாப்பிட்டாள். தன் துக்கத்தையும் விலக்கினாள்.

५७ सौवर्णन्तुमृगंविलोक्यनिहतंसंप्राप्तरक्षस्तनुम्
नैराश्याद्वितथश्रमोनिववृतेरामस्स्वनात्तस्यच ।
गोमायोरनुकूजनेनदयितांसंचिन्त्यरक्षोहताम्
तूर्णंलक्ष्मणमाससादविमनाः प्राप्तंस्वमध्येपथम् ॥

தங்கமான் அடிபெற்று இராக்ஷஸ சரீரம் அடைந்ததைப் பார்த்து இராமன் ஆசையற்று வீண் பிரயாஸமடைந்து திரும்பினர். பின்னல் நரி சப்திப்பதாலும் அந்த இராக்ஷஸனுடைய சப்தத்தாலும் மனைவி இராக்ஷஸனல் நாசமடைந்ததாக நினைத்து துக்கித்து சீக்கிரம் தன் வழியின் நடுவில் வந்த இலக்ஷ்மணனை அடைந்தார்.

௫௮ भ्रातः क्वत्वममप्रिया त्रिभुवनश्रीर्नेप्सितायां विना
तामुत्सृज्यवृथात्वदागतमिहश्रुत्वारुतंरक्षसः ।
मांद्रष्टुंप्रहितस्तयाकिमतिभीस्त्वंदातितादैवतः
दुःखेशत्रुचिकीर्षितेत्वयमिति श्रीशोऽज्ञवत्प्रालपत् ॥

ஹே தம்பி! என்னுடைய மனைவி எங்கே? அவள் இல்லாமல் மூன்று உலகங்களின் ஐசுவரியத்தையும் நான் விரும்பவில்லை. அவளை விட்டு நீ இவ்விடம் வந்தது வீணயிற்று. இராக்ஷஸனுடைய சப்தத்தைக் கேட்டு அவளால் ஏவப்பெற்று அதிக பயத்துடன் என்னைப் பார்க்கவந்தாயா? சத்துருக்கள் செய்ய விரும்பின துக்கத்தில் நம்மை தெய்வம் விழச்செய்தது என்று இலக்ஷ்மீபதியான இராமன் மூடன்போல் புலம்பினர்.

௫௯ रामोवीक्ष्यनिमित्तमप्यशुभदंसीतावियुक्तंगृहम्
शोकात्क्षुत्तृडुपार्जितव्यसनतः क्लिष्टोविगर्ह्यानुजम् ॥
तद्वाग्बाणहतोव्यमुंचमितितांक्रुद्धंभृशंबोधयन्
दैवस्यातिबलिष्ठतांतमवदद्रक्षस्तथाऽरौदिति ॥ १४२ ॥

கஷ்டத்தைக் கொடுக்கும் அபசகுனங்களையும் ஸீதை இல்லாத ஆசிரமத்தையும் இராமன் பார்த்துத் துக்கத்தாலும் பசிதாகத்தின் துன்பத்தாலும் வருந்தி, தம்பியை நிந்தித்து, “அவளுடைய அம்பு போன்ற வார்த்தையால் அடிபெற்று அவளைவிட்டேன்” என்று கோபிக்கும் லெக்ஷமணனுக்கு தெய்வம் பலமுள்ளது என்பதை மிகவும் தெரிவித்து இராக்ஷஸன் அவ்விதம் கத்தினன். என்று கூறினர்.

६० प्राणप्रेमनिकेतनंरघुवरस्सीतामनालोकयन्
उन्मादंपरमंगतश्चिदचितौपश्यन्समौसर्वतः ।
जिज्ञासुस्तदुदन्तमिष्टमखिलान्पृच्छन्नगान्प्राणिनः
क्वासिप्रेयसिमांजहासिकिमितिप्रोच्चैर्वदन्नभ्रमीत् ॥

பிராணனிடத்தில் இருக்கும் அன்புக்கு இருப்பிடமான ஸீதையைப் பார்க்காமல் இராமன் மிகுந்த பைத்தியம் பெற்று எல்லாவிடங்களிலும் அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும் ஸமமாக நினைத்து இஷ்டமான ஸீதையின் ஸமாசாரத்தை அறிய விரும்பி எல்லா மரங்களையும், மலைகளையும், மிருகங்களையும் வினவி, ஹே பிரியமுள்ள மனைவி! நீ எங்கே இருக்கிறாய்? என்னை ஏன் விடுகிறாய் என்று பலமாகச் சொல்லித்திரிந்தார்.

६१ माशोचाऽऽर्यवनानिसंविचिनुवस्सिष्णासयापूरगाम्
गच्छेन्नौपटुतांबुभुत्सुरगमेष्वन्तर्दधीतेतितत् ॥
श्रुत्वास्निग्धसहोदरस्यवचनंसीतांविचित्याभितः
नैवाऽऽसाद्यवधूंसवीर्यनिलयस्त्वाक्रोशदुच्चैस्तदा ॥

ஹே அண்ணு! வருந்தாதே காடுகளில் தேடுவோம், ஸீதை ஸ்னானம் செய்ய விரும்பி கோதாவரி நதிக்குச் சென்றிருப்பாள். நமது ஸாமர்த்தியத்தை அறிய விரும்பி மரங்களில் மறைந்திருப்பாள், என்று அன்புபெற்ற தம்பியின் வார்த்தையைக் கேட்டு பலத்திற்கு இருப்பிடமான இராமன் நான்கு புறமும் மனைவியைத்தேடி அவளை அடையாமல் அப்பொழுது பலமாக மிகவும் வருந்தினார்.

६२ रामः प्राणगरीयसींनिजवधूंनिश्चित्यरक्षोहताम्
तित्यक्षन्स्वतनुंश्रिताऽऽर्तिहरणांगत्वापुरींसत्वरम् ॥
कर्तव्यंसमुपादिशद्वचसनतोधीरंतदालक्ष्मणम्
सक्लेशैरनिवारितैर्गुरुतरैर्भ्रातुस्सदक्षोयथा ॥ १४५ ॥

பிராணனைக் காட்டிலும் அருமையான தன்மனைவி இராக்ஷஸர்களால் நாசமடைந்தவளாக நிச்சயித்து இராமன் அண்டினவர்களின் துன்பத்தை விலக்கும் தன் சரீரத்தையும் துக்கத்தால் விட விரும்பி சீக்கிரம் பட்டிணத்திற்குச் சென்று செய்யவேண்டியதை தைர்யம் பெற்ற இலக்ஷ்மணனிடம், அவனும் விலக்கமுடியாத மிகவும் அதிகமான துக்கத்தால் அண்ணனுக்கு ஸமமாக ஆகும்படி, தெரிவித்தார்.

६३ वैदेहीविरहेणदुःखिततरोरामस्स्मरन्विस्मृतम्
राज्यप्रच्युतिमात्मनः पितृलयंसर्वासदक्ततांपराम् ।
संभाव्येतरतोगतिंस्वसुदृशस्तद्वचत्ययंस्वंविना
निश्चिन्वंश्चनराशनाशनतया प्राखिद्यतोच्चैस्तराम् ॥

இராமன் ஸீதையின் வியோகத்தால் மிகவும் துக்கமடைந்து மறந்த தன்னுடைய இராஜ்யம் தவறினதையும் தகப்பனுடைய நாசத்தையும் தான் மிகவும் எல்லோர்களைக் காட்டிலும் தகுதி இல்லாமலிருப்பதையும் நினைத்து வேறுவிடங்களில் ஸீதையின் போக்குதலையும் தான் இல்லாமல் போகமாட்டாள் என்பதையும் ஊஹித்து இராக்ஷஸர்களுக்கு உணவாயிருப்பதை நிச்சயித்து அதிகமாக துக்கித்தார்.

६४ सीतोदन्तमियंत्वयाचसुधियापृष्टाऽपिगोदावरी
नाऽऽचष्टेत्विमईक्षणेनसुहृदोनौवीक्ष्ययाम्यांदिशम् ।
ऊर्ध्वाऽऽस्याहरिणावदन्तिसजलैर्नेत्रैरिवाऽऽयामितः
गच्छावेत्यनुजोक्त आशुहरितंरामोऽभ्यगाद्रक्षसः ॥

ஸீதையின் ஸமாசாரத்தை புத்திசாலியான நீவினவியும் இந்த கோதாவரி சொல்லவில்லை. இந்த மான்களோ நல்ல மனம் பெற்று முகத்தை உயர வைத்துக்கொண்டு நம்மையும் தெற்கு திசையையும் கண்ணீர் விட்டுப்பார்ப்பதால் ஸீதையைச் சொல்லுகிறதுகள் போலிருக்கின்றன. இவ்விடத்தில் போவோம், என்று தம்பியால் சொல்லப்பெற்ற இராமன் நிருருதி திக்கில் சென்றார்.

रामोऽधः पतितंनिरीक्ष्यकुसुमंसप्रत्यभिज्ञंवदन्
सीताशीर्ष्णिमयाप्रदत्तामितितंशैलंनदींभर्त्सयन् ।
सीतांचेन्नददासियद्यशनिवच्छेत्स्यामिबाणैश्शितैः
त्वांगोदावरिशोषयेयमितितत्सीतापदंप्रैक्षत ॥ १४८ ॥

இராமன் கீழே விழுந்த புஷ்பத்தைப் பார்த்து "இது ஸீதையின் தலையில் என்னால் வைக்கப் பெற்றதென்று" நினைவோடு கூடச்சொல்லி "ஸீதையைக் கொடுக்காமலிருந்தால் வஜ்ராயுதம் போல் கூர்மையான பாணங்களால் உன்னைப் பிளப்பேன்" என்று மலையையும் "ஹே கோதாவரி! உன்னைவற்ற வைப்பேன்" என்று நதியையும் அதட்டி அந்த ஸீதையின் காலடியைப் பார்த்தார்.

नदीयांसमनुष्यराक्षसपदंदृष्ट्वाविभग्नंरथम्
छत्राश्वाऽऽदिकमाविकर्षणमथाऽऽक्लिष्टंस्त्रियोरक्षसा ।
युद्धंनिर्भरमेतदर्थमुभयोर्निश्चित्यदेवाइदम्
भाषेरन्नयदिक्रुधाजगदिदं धक्ष्यामिबाणाग्निना ॥

ஸீதையின் காலடிக்கு ஸமீபத்தில் இராக்ஷஸனுடைய காலடியையும் முறிந்த இரதம் குதிரை, குடை முதலியவைகளையும் பார்த்துபிறகு இராக்ஷஸன் ஸீதையை இழுத்துத் துன்பமடைவித்ததையும் ஸீதைக்காக இரண்டு புருஷர்களுடைய பலமான யுத்தத்தையும் நிச்சயித்து தேவர்கள் இதைச் சொல்லாவிட்டால் கோபத்தால் அம்புகளாகிற அக்கினியால் இந்த உலகத்தைப் பொசுக்கப் போகிறேன்.

६५ सन्धायाऽऽत्मशरासनेविनमितेबाणंसमीक्ष्याभितः
क्रुद्धंराममिवानलंशिशिरयन्सान्त्वोक्तिभिर्वारिभिः ।
सौमित्रिस्समयेऽब्रवीन्नयपथेत्वधुन्यतेनक्षमम्
सर्वस्याऽऽर्यनिरागसोनिहननंयोऽद्रुह्यदाजौजहि ॥

விளக்கப்பெற்ற தன் வில்லில் பாணத்தைத் தொடுத்து நான்கு புறமும் பார்த்து அக்கினிபோல் கோபித்த இராமனை ஜலம் போன்ற ஸமாதான வார்த்தைகளால் குளிரச் செய்து இலக்ஷ்மணன் ஸமயத்தில் கூறினான். நீதி மார்க்கத்தில் வழி போக்கன்போல் நடக்கும் ஹே அண்ணா! குற்றமற்ற எல்லோர்களைக் கொல்லுவது தங்களுக்குத் தகுதி இல்லை. குற்றம் செய்தவனை யுக்தத்தில் கொல்லவேண்டும்.

६६ यत्प्राग्जन्मनिदुष्कृतंविरचितंसंलभ्यतेतत्फलम्
जन्मन्यद्यतनेऽखिलैर्ध्रुवमिदंलीनाश्शतंवासरे ।
एकस्मिन्मुनयोवसिष्ठतनयाग्रस्तौनिशाऽहर्पती
कोवाऽत्येतुमलंभवेद्विधिकृतंसंवेपतेयत्स्थिरा ॥ १५१ ॥

முற்பிறப்பில் செய்த வினையின் பயனை இப்பிறப்பில் எல்லோர்களும் அடைகிறார்கள்; இது நிச்சயம். வஸிஷ்ட புத்திரர்களான நூறு ரிஷிகளும் ஒரு நாளில் நாசமடைந்தார்கள். சூரியனும் சந்திரனும் விழுங்கப் பெற்றார்கள். அசையாத பூமியும் நடுங்குகிறது. எவன் தான் விதியின் பயனை மீளமுடியும்?

किन्नापप्तदधो दिवोनहुषजस्स्वीयानयात्प्रागिति
प्राज्ञोमांयदबोधयत्पुनरयंसंस्मारयत्यार्यतत ।
प्रापत्वांजनकश्चिराऽऽत्तसुकृतैस्स्वर्गंत्वयासत्यवान्
क्रुद्धंत्वामनुनेष्यतित्रिभुवनेकस्तेऽधिकस्स्याद्गुणैः ॥

முன் காலத்தில் நஹுஷனுடைய புத்திரன் யயாதி (பூமியில் தானே தர்மிஷ்டன் என்று இந்திரனிடம் சொன்ன) தன் குற்றத்தால் சுவர்க்கத்திலிருந்து கீழே விழவில்லையா? என்று புத்திசாலியான தாங்கள் எனக்குப் போதித்ததை மறுபடியும் நான் தங்களை நினைக்கச்செய்கிறேன். தந்தை வெகுகாலம் செய்த புண்யத்தால் தங்களைப் புத்திரனாக அடைந்தார். தங்களால் ஸத்தியம் நிறைவேறி சுவர்க்கம் சென்றார். கோபமடைந்த தங்களை மூன்று உலகங்களில் எவன் ஸமாதானம் செய்யப் போகிறான்? நற்குணங்களால் எவன் தங்களைக் காட்டிலும் மேலாக இருப்பான்?

६७ गृह्णन्सर्ववरोद्रुतंत्ववरजप्रोक्तंवचस्सारवित्
कान्ताऽन्वेषणतत्परोनिपतितंसंवीक्ष्यगृद्ध्रंगुरुम् ।
सीताभक्षणरक्षइत्यपभयोयंहन्तुमभ्यद्रवत्
तेनावाचितवाप्रियामदसवो रक्षोहृतेद्वेइति ॥ १५३ ॥

எல்லோர்களுக்கும் மேலான ஸாரம் அறிந்த இராமன் சின்னவனுடைய சொல்லையும் சீக்கிரம் அங்கீகரித்து மனைவியைத் தேடுவதில் ஆசைபெற்று விழுந்த பெரிய கழுகைப் பார்த்து ஸீதையைப் பக்ஷித்த இராக்ஷஸன் என்று பயமில்லாமல் கொல்லுவதற்கு எதிர்க்கும்பொழுது "உன் மனைவி என் பிராணன் இரண்டையும் இராவணன் அபஹரித்தான்" என்று, இராமனைப் பார்த்து கழுகு கூறினது.

विज्ञायैनमनेनसंस्वशुदशस्संरक्षकंवैरिणा
लूनच्छत्ररथाऽऽदिकेनबलिना खड्गाऽऽहतंपक्षतौ ।
पश्यंतंतु हिरण्मयान्क्षितिरुहो रामः प्रभूतासुखः
संश्लिष्योज्झचापआपचाभियं दुःखंस्मरन्विस्मृतम् ॥

இராமன் இந்த கழுகைக்குற்றமில்லாததாகவும் தன் மனைவியைக் காப்பாற்றினதாகவும், குடை, இரதம் முதலியவைகள் அழியப்பெற்ற பலமுள்ள சத்துருவால் இறக்கைகளின் அடியில் கத்தியால் அடிக்கப்பெற்று மரங்களைத் தங்கமயமாக பார்க்கிறதாகவும் தெரிந்து அதிக துக்கம்பெற்று வில்லை எறிந்து அதைக் கட்டிக்கொண்டு மறந்த துக்கத்தை நினைத்து பயமடைந்தார்.

६८ प्राप्तप्राणभयं वयोबहुवयो रामेणसंप्रेरितम्
वक्तुं योषिदपाऽऽहृतिं प्रकथयद्रक्षोऽहरत्तामिति ।
तच्छेषंत्वभिधातुमप्यचतुरं वक्त्राद्वमच्छोणितम्
साधुत्राणजपुण्यतस्सदुरितं सद्यश्शरीरं जहौ ॥ १५५ ॥

பிராண வேதனையை அடைந்த அதிக வயது பெற்ற பறவை இராமனால் மனைவியின் அபஹாரத்தைச் சொல்லுவதற்கு ஏவப்பெற்று "அந்த ஸீதையை இராவணன் அபஹரித்தான்" என்று சொல்லி அதன் மீதி ஸமாசாரத்தைச் சொல்லவும் முடியாமல், வாயிலிருந்து இரத்தத்தைக்கக்கி பதிவிரதையைக் காப்பாற்றின புண்ணியத்தால் பாப சரீரத்தை உடனே விட்டது.

तातब्रूहि कथाऽवशेषमितितंरामोमुहुः प्रार्थयन्
प्रेक्ष्यापासुमवाप्य शोकममितं दित्सुर्मृतायामृतम् ।
युद्धाग्नावजुहोत्स्वकार्यसुघृतप्रद्योतितेऽसून्हविः
यस्तस्मैपितृसंनिभायसुतवत्कर्तव्यमप्याचरत् ॥ १५६ ॥

"ஹே அப்பா! கதையின் மீதியைச் சொல்லவேண்டும்" என்று,இராமன் ஜடாயுவை அடிக்கடி பிரார்த்தித்து அது ஜீவனை இழந்திருப்பதைப் பார்த்து அளவற்ற துக்கமடைந்து தன் காரியமாகிற நல்ல நெய்யால் மிகவும் பிரகாசிக்கப்பெற்ற யுத்தமாகிற அக்கினியில், பிராணன்களாகிற ஹவிஸ்ஸை ஹோமம் செய்தவனும், பிதாவிற்கு ஸமமான இறந்த ஜடாயுவின் பொருட்டு மோக்ஷமளிக்க விரும்பி, புத்திரன் போல் செய்யவேண்டிய விதியையும் செய்தார்.

आयुष्मन्नचिरात्समेष्यसिवधूं कीर्त्येतरालभ्यया
विन्दोनाम मुहूर्त आहृतधनं तत्स्वामिनं प्रापयेत् ।
तंमोदादविजानताऽप्युपहृतंनस्थास्नुतस्मिन्निति
प्रत्येत्यैववचः खगस्यनिरगाद्रामस्ततस्सानुजः ॥ १५७ ॥

"தீர்காயுளைப்பெற்ற ஹே குழந்தாய்! திருட்டுத் தனமாகக்கொண்டு போன பொருளையும் அதன் எஜமானனிடம் சேரச் செய்யும் 'விந்தம்' என்கிற, முஹூர்த்தத்தை இராவணன் அறியாமல் ஸந்தோஷமாக ஸீதையை எடுத்துப் போனதால்" அவனிடத்தில் அவள் இருக்கமாட்டாள். மற்றவர்கள் அடையாத புகழோடு மனைவியைச் சீக்கிரம் அடைவாய்", என்று ஜடாயுவின் வார்த்தையை நம்பியே இராமன் தம்பியுடன் அவ்விடமிருந்து பிரயாணம் செய்தார்.

६९ रामःक्रौञ्चवनंव्यतीत्यगहनंक्रोशैः प्रमीतंत्रिभिः
तादृक्काननमन्यदप्यधिगतोदर्यास्तुनेदीयसीम् ।
वीक्ष्यायोमुखराक्षसीं प्रसभतः पाणिग्रहस्यार्थिनीम् ।
भ्रात्राखड्गकरेणशूर्पणखयाक्रुद्धस्समानांव्यधात् ॥ १५८ ॥

மூன்றுக்ரோசம் (   ) தூரம்பெற்ற மரங்கள் அடர்ந்த க்ரௌஞ்சவனத்தையும் அது போன்ற மற்றொரு வனத்தையும் தாண்டி குஹையின் ஸமீபத்தில் வஸிப்பவளும், பலாத்காரமாக விவாஹத்தை விரும்புவளுமான அயோமுகி என்னும் இராக்ஷஸியை இராமன் பார்த்துக் கோபமடைந்து கத்தியைக் கையில் பெற்ற ஸஹோதரனால் சூர்ப்பனகைக்கு ஸமமாகச் செய்தார்.

उत्पातेक्षणतस्सभीरवहितोभ्रात्राभृशंकानने
वात्यामूलदिदृक्षयोदरमुखंदृष्ट्वाकबन्धाऽऽकृति ।
रक्षोभक्षितसत्वमायतभुजंतद्बाहुपाशाऽऽवृतः
रामोधीरतरोऽभ्यधाय्यगातितः क्लिष्टेनसौमित्रिणा ॥

ஸாவதானமாய் காட்டில் சுழல் காற்றினுடைய காரணத்தை அறிய விரும்பி, தலையில்லாத முண்டத்தின் உருவமும் வயிற்றில் முகமும் நீண்ட கைகளையும் பெற்று பிராணிகளை பக்ஷிக்கும் இராக்ஷஸனைப் பார்த்தும் கயிர்போன்ற அவனுடைய கைகளால் கட்டப்பெற்றும் மிகவும் தைர்யம் பெற்ற இராமனும் பயம் அடையும்படி அபசகுனங்களின் பார்வையாலும் துணையில்லாலும் துன்பமடைந்த இலக்ஷ்மணன் கூறினன்.

मामार्यप्रादिशन्बलिंबलिभुजेजीवन्नवाप्यप्रियाम्
राज्यस्थस्स्मरमामितिप्रलपितंत्रस्नुंनिरीक्ष्यानुजम् ।
भक्षौमेक्षुधितस्यकाविहकथंप्राप्तौयुवांदुर्धियौ
इत्यज्ञेनसभर्त्सितोनरभुजाधैर्यंनिजंनाजहात् ॥ १६० ॥

“ஹே அண்ணா! இராக்ஷஸன் பொருட்டு என்னை பலிகொடுத்து தாங்கள் பிழைத்து மனைவியை அடைந்து இராஜ்யத்தில் இருக்கும் பொழுது என்னை நினைக்கவேண்டும்” என்று புலம்பி, பயமடைந்த தம்பியைப் பார்த்தும், பசியால் வருந்தும் எனக்கு உணவாகவந்த தூர்புத்திபெற்ற நீங்கள் யார்? எவ்விதம் வந்தீர்கள்?” என்று முட்டாளான, மனிதர்களை புஜிக்கும் இராக்ஷஸன் அதட்டியும், இராமன் தன்னுடைய தைர்யத்தைக் கைவிடவில்லை.

७० ध्यायन्दैवबलिष्ठतांसहभुवासंप्रेरितोराघवः
तद्बाहूअतिविस्तृतौचकदलीलावंविलूयासिना ।
दर्पाद्रेर्विनिपातयन्स्वचरितंसंजानतारक्षसा
स्मृत्वाशक्रवचोऽभ्यधाय्यतिमुदास्वस्वागतंपृच्छता ॥

தெய்வம் மிகவும் பலம் பெற்றிருப்பதை நினைக்கும் இராமன் தம்பியால் ஏவப்பெற்று மிகவும் நீண்ட அந்த இராக்ஷஸனுடைய கைகளையும் கத்தியால் வாழை மரத்தை அறுப்பதுபோல் அறுத்து மதமாகிற மலையிலிருந்து அவனை விழச் செய்து, இந்திரனுடைய வார்த்தையை நினைத்து தன் சரித்திரத்தை அறிந்து அதிக ஸந்தோஷமாக தங்களின் நல்வரவை வினவும் இராக்ஷஸனால் சொல்லப்பெற்றார்.

७१ रूपंसुन्दरमावहन्दनुसुतोऽप्यत्रासयंतापसान्
येनस्थूलशिरामुनिस्त्वगमयन्मामीदृशीमाकृतिम् ।
स्रष्टुर्दिष्टचिरायुषाऽप्यवमतश्शक्रोमयावज्रतः
कुक्षिंमेऽगमयत्ससक्थिचशिर क्रुद्धोनमामन्तकम् ॥

நான் அழகான உருவம் பெற்றவன். தனுவின் புத்திரன். இராக்ஷஸரூபத்தால் ரிஷிகளை பயமடைவித்ததால் ஸ்தூல சிரஸ் என்ற ரிஷி என்னை இவ்வித சரீரத்தை அடைவித்தார் நான் பிரம்மாவினிடமிருந்து தீர்காயுளைப்பெற்று இந்திரனை அவமதித்ததால் அவன் கோபமடைந்து வஜ்ராயுதத்தால் என் தலையையும் துடையின் மேல் பாகங்களையும் வயிற்றை அடைவித்தான். என்னை எமனிடமனுப்பவில்லை”

त्यक्त्वावक्त्रमयंकथंचिरवयास्स्यादित्यदान्मेमुखम्
कुक्षौयोजनविस्तृतावपिभुजौशापस्यमोक्षंपुनः ।
रामश्छेत्स्यातितेभुजौतनुमिमां प्रक्षिप्यगर्तेयदा
धक्ष्यत्याप्स्यसिरूपमात्मनइतित्वाञ्चिन्तयेहास्मिभोः ॥

"இவன் முகமில்லாமல் எவ்விதம் தீர்க்காயுளைப் பெறுவான் என்று இந்திரன் எனக்கு வயிற்றில் முகத்தையும் யோஜனை தூரம் நீண்ட இரண்டு கைகளையும், இராமன் எப்பொழுது உன் கைகளை அறுக்கப் போகிருனே, இந்த உன் சரீரத்தை பள்ளத்தில் தள்ளிப் பொசுக்கப் போகிருனே, அப்பொழுது நீ உன் உருவத்தை மறுபடியும் அடையப் போகிருய். என்று சாபத்தின் விடுதலையும் கொடுத்தான். ஹே இராமா உன்னை நினைத்துக்கொண்டு நான் இவ்விடம் இருக்கிறேன்."

धीसाचिव्यमहंकरोमियदिमेकुर्याः प्रियंव्याहृतम्
कान्तायाअपहर्तुरार्यविदुरंत्वांबोधयामिद्रुतम् ।
तं मित्रंकुरुशापतो भगवतोज्ञानंतुमेसंवृतम्
दुर्यानेरपिमोचयेत्यभिहितोरामोऽङ्गचकर्षीत्तथा ॥

"நான் சொன்ன விருப்பத்தைச் செய்தால் ஹே அண்ணு! உனக்கு புத்தியால் உதவி செய்கிறேன். மனைவியை அபஹரித்த சோரனை அறியும் புருஷனை உனக்குத் தெரிவிக்கிறேன். அவனை சீக்கிரம் சினேஹம் செய்துகொள். ஸ்தூலசிரஸ் என்ற முனிவரின் சாபத்தால் என் அறிவு மறைந்திருக்கிறது. துஷ்ட ஜன்மாவிலிருந்து என்னையும் விலக்கவேண்டும்" என்று கபந்தன் சொல்லும் பொழுது இராமன் அவ்விதம் ஸமமதித்தார்.

७२ गात्रेराघवमारुतेद्धहुतभुक्प्लुष्टेकबन्धाश्रिताम्
व्याधूयोत्थितउज्ज्वलाम्बरतनुर्हंसाङ्कयानंगतः ।
व्योमस्थोरघुनाथमाहबलवान्सुग्रीवआस्तेबली
तंमित्रंकुरुवह्निसाक्षिकमसौकान्तांतवज्ञास्यति ॥ १६५ ॥

சரீரம் இராமனுகிற காற்ருல் ஜ்வலித்த அக்கினியால் பொசுக்கப்பெற்றதும், சிதையை அசைத்துக்கொண்டு கபந்தன் எழுந்திருந்து விளங்கும் உடை. உடம்புகளைப்பெற்று அன்ன பக்ஷிகளை அடையாளமாகப்பெற்ற விமானத்தில் ஏறிக்கொண்டு, ஆகாயத்தில் இருந்து இராமனைப் பார்த்து கூறினன். "ஹே பலமுள்ளவனே; சுக்ரீவன் பலம் பெற்ற இருக்கிருன். அவனை அக்கினி ஸாக்ஷியாக சினேஹம் செய்துகொள். அவன் உன் மனைவியை அறியப் போகிருன்."

आत्वाऽपद्रुतउज्झिताऽऽत्मनिलयः क्लिष्टोवियुक्तास्त्रिया
त्वद्वद्रामतदीप्सितंकुरुबलात्त्वत्कामिनीमाहृताम् ।
पौलस्त्येनरसातलेवियतितामान्विष्ययोवानरैः
आनेष्यत्यचिरात्तवान्तिकमविज्ञातंकिमस्तिक्षितौ ॥

"ஹே இராமா! உன்போல் சுக்ரீவனும் ஸஹோதரனுல் விறட்டப்பெற்று தன் இருப்பிடத்தை விட்டு துன்பமடைந்து மனைவியை விட்டுப் பிரிந்திருக்கிருன். அவனுடைய விருப்பத்தை நீ பலத்தால் செய்யவேண்டும். இராவணன் ஆகாயத்திலும் பாதாளத்திலும் பூமியிலும் அபஹரித்த உன் மனைவியை வானரங்களால் தேடி சீக்கிரம் உன் ஸமீபத்திற்கு அழைத்து வரப்போகிருன். அவனுக்குத் தெரியாத விஷயம் பூமியில் என்ன இருக்கிறது."

७२ पंथाएषयत्रऋश्यमूकमयतेवृक्षैः प्रवृद्धैर्वृतः
तानारुह्यनिपात्यवाव्रजततोरम्यंपरंकाननम् ।
अश्नन्तत्फलमीडनीयमखिलैर्देशान्गिरीन्काननम्
गत्वाऽनेकमथैष्यसिप्रियकृतंपंपांसपुण्योदकाम् ॥ १६७ ॥

"மிகவும் வளர்ந்த மரங்கள் சூழ்ந்ததும் ரிச்யமூகம் செல்லும் வழி இது. அந்த மரங்களை ஏறியாவது விழச்செய்தாவது போகவேண்டும். அதிலிருந்து வேறொரு காட்டிற்குச் சென்று அதில் இருக்கும் எல்லோர்களும் துதிக்கும் பழங்களைப் புசித்து அநேக தேசங்கள், மலைகள், காடுகள், இவைகளுக்குச் சென்று பிறகு பிரியத்தைக் கொடுக்கும் புண்ணிய தீர்த்தம் பெற்ற பம்பா நதிக்குப் போகப் போகிருய்."

तत्रस्थान्चपतत्रिणोजलचरान्संभक्षयन्नाहृतम्
भ्रात्रावारिनिपीयनिर्मलतरंद्रक्ष्यस्यगान्तत्तटे
शिष्याणां श्रमजाम्बुभिस्स्वतपसाऽपेतक्षयम्लानिसत्
पुष्पैस्तान्सहितान्रमतंगसुमुनेर्भीतैर्विमुक्तान्गजैः ॥१६८॥

அங்கு பம்பா நதியின் ஜலத்திலிருக்கும் பக்ஷிகளை சாப்பிட்டுக்கொண்டும், தம்பி கொண்டுவந்த சுத்தமான ஜலத்தைக் குடித்துக்கொண்டும், அந்த நதியின் கரையில், மதங்க முனியின் சிஷ்யர்களின் வேர்வை ஜலங்கள் அவர்களின் தவத்தால் வாடாமலும் அழியாமலுமுள்ள புஷ்பங்களாக இருக்கின்றன. அவைகளோடு கூடியதும் மதங்கமுனியிடம் பயந்த யானைகளால் விடப்பெற்ற மரங்களைப் பார்க்கப் போகிறாய்.

तत्राऽऽस्तेश्रमणीतपस्विशबरीत्वद्दर्शनैकार्थिनी
त्यक्तामर्त्यपदेप्सिता रघुवरप्रेक्षस्वतांमाचिरम्
पम्पायाः पुरतस्सुपुष्पिततरुस्सोऽस्त्यृश्यमूकोगिरिः
सर्वंस्वप्नगतंनरोऽधिलभेतजाग्रन्चयत्रस्थितः ॥ १६९ ॥

“ஹே இராமா ! உன்னுடைய பார்வையை முக்கியமாகக் கருதி சுவர்க்கத்திலும் ஆசையற்று ஸன்னியாஸியாய் தவம் செய்யும் சபரீ அவ்விடம் இருக்கிறாள். அவளை சீக்கிரம் பார்க்க வேண்டும். மனிதர்களுக்கு தூக்கத்தில் கிடைத்த எல்லாவற்றையும் விழித்தலிலும் கொடுத்தருளுர் புஷ்பித்த மரங்களோடு கூடிய ரிசியமூகபர்வதம் பம்பா நதியின் முன்னால் கிழக்கில் இருக்கிறது”

तत्रस्थंप्रहरान्तिदुष्टमसुरास्तंपान्तिकर्यर्भकाः
दुर्गम्याऽस्यगुहाशिलाऽतिपिहितातत्पूर्वतोऽस्ति ह्रदः
सुग्रीवस्सचतुर्भिरेवसखिभिस्तामावसत्यश्रमः
तेनावाप्स्यसिकामिनोमितिवदान्दित्यः प्रपेदीदवम् ॥

"அந்த ரிசியமூகமலையில் இருக்கும் துஷ்டர்களை அசுரர்கள் கொல்லுகிறார்கள். யானைக்குட்டிகள் அதைக் காப்பாற்றுகின்றன அல்லால் நன்றாக மூடப்பெற்று பிறர்கள் செல்லமுடியாத அதன் குகையும், அதற்கு முன்னால் மடுவும் இருக்கின்றன. சுக்ரீவன் பயமில்லாமல் நான்கு மந்திரிகளோடு அந்த குகையில் வஸிக்கிறான். அவனால் உன்மனைவியை அடையப் போகிறாய்" என்று சொல்லி தேவபுருஷன் சுவர்க்கம் சென்றான்.

७४ निर्गत्याथततस्समेत्यशबरीगेहंतयाऽभ्यर्चितः
रामःपृष्टसुखस्त्ववादिसदयत्वांप्राप्तचित्राऽऽलयम् ।
श्रुत्वाप्राप्तपदस्यतेऽभ्युपचितिंकृत्वासमायाहिभोः
इत्युक्तागुरुभिर्दिवंस्वधिगतैस्त्वांचिन्तयन्त्यावसं ॥

பிறகு இராமன் அவ்விடமிருந்து பிரயாணம் செய்து சபரியின் ஆசிரமத்திற்கு வந்து சுகத்தை வினவும்பொழுது அவரை பூஜித்து சபரி கூறினாள். "தயவு பெற்றவனே நீ சித்திரகூடபர்வதம் வந்திருப்பதைக் கேட்டு தன் இருப்பிடத்திற்கு வந்ததும் உனக்கு பூஜை செய்வித்து ஹே சபரி! நீ வரவேண்டும்" என்று சுவர்கம் சென்ற குருமூர்த்தியின் உத்திரவால் உன்னை நினைத்து நான் வஸித்து இருந்தேன்"

आरण्यंफलमार्जितंयदमृतस्वादुत्वतुभ्यंमया
रामस्वीकुरुमेप्रसीदगमयस्थास्न्वास्पदंमामिति ।
सांजल्युक्तागिरंसमीक्ष्यशबरींसंहर्षयन्राघवः
तत्सन्दर्शितमैक्षतापरिमितंचित्रंमतङ्गाऽऽश्रमे ॥ १७२ ॥

"ஹே இராமா! அமிருதம் போல் ருசியான காட்டில் இருக்கும் கனிகளை உனக்காக இவ்விடத்தில் ஸம்பாதித்து வைத்திருக்கிறேன். அவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக்கு அருள் புரியவேண்டும்-என்னை அழிவற்ற பதத்தை அடைவிக்க வேண்டும்" என்று கும்பிட்டுக்கொண்டு வார்த்தை கூறும் சபரியைப் பார்த்து இராமன் ஸந்தோஷம் அடைவித்து அவள் காண்பிவித்த அளவற்ற மதங்கமுனியின் ஆசிரமத்தில் உள்ள ஆச்சரியத்தைப் பார்த்தார்.

पुण्यंतीर्थमिहाऽऽनयन्सुगुरवोमेसप्तभिस्सिन्धुभिः
वेदिः पूजितदैवता विलसति प्रत्यक्स्थलात्तस्यसा ।
शुष्यन्त्यद्यनवल्कालानिकुसुमान्याद्रीणि तेषामिति .
प्रत्यक्षीकृतवैभवस्स्वमनसा रामेऽनयाऽमोदत ॥ १७३ ॥

என்னுடைய குருமூர்த்திகள் இவ்விடத்தில் எழு ஸமுத்திரங்களோடு புண்ணிய தீர்த்தங்களை வரவழைத்தார்கள். தேவதையை பூஜிக்குமிடமான (மேற்கு திக்கில் பள்ளமுமான) அவர்களின் பூஜை மேடை விளங்குகிறது. அவர்களுடைய நனைந்த மரவுரிகளும், புதிதான புஷ்பங்களும், இப்பொழுதும் உலருகிறதில்லை என்ற அதிசயங்களை இராமன் தன்னிடம் மனஞ்செலுத்தி தனக்குக் காண்பித்த சபரியால் ஸந்தோஷமடைந்தார்.

७५ हित्वाऽग्नौसजरांतनुंवरतनौ प्राप्तेप्सितायां रघु
श्रेष्ठः पुण्यजलावगाहनशुचिश्शीघ्रंततोनिर्गतः ।
सुग्रीवस्यदिदृक्षया शुभजलांपंपांचतत्काननम्
पश्यन्पापहरेमतंगसरसेस्नातोऽऽनुजेनाऽऽययौ ॥ १७४ ॥

சபரி கிழத்தனமடைந்த சரீரத்தை அக்கினியில் ஹோமஞ்செய்து தன் விருப்பம் பெற்றதும், இராமன் பாபம் போக்கும் மதங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாய் சுக்கிரீவனை பார்க்க விரும்பி சீக்கிரம் தம்பியோடு அவ்விடமிருந்து, பிரயாணம் செய்து புண்ணிய தீர்த்தம் பெற்ற பம்பா நதியையும் அதன் காடுகளையும் பார்த்துக்கொண்டு பம்பாநதிக்கு வந்தார்.

फलश्रुतिः

वृत्तेदाशरथेस्सतामभिमतेसंचिन्तितार्थप्रदे
स्वर्धेन्वासहयुग्धुनिश्रवणतोदेवेप्सितेसुन्दरे ।
निध्यायाऽनिशमाशयेरघुवरंसभ्रातृदाराऽऽदरम्
वृत्तंवन्यमवन्यधीश्वरसुस्वंदत्तेजनेभ्यास्त्विदम् ॥ १७५ ॥

ஸாதுக்களுக்கு ஸம்மதமாயும், நினைத்த பொருளைக் கொடுப்பதில் காமதேனுவோடு கலஹம் செய்யும், தேவர்களும் விரும்பும், சுந்தர ராமாயணத்தில், ஸஹோதரன் மனைவி இவர்களிடம் அன்பு பெற்ற இராமனை எப்பொழுதும், மனஸில் நினைத்து, ஆரண்ய காண்டத்தைக் கேட்பதால் இது ஜனங்களுக்கு அரசனுடைய சுகத்தைக் கொடுக்கிறது.

प्रासूतजानकीयंसा सुब्रह्मण्यकुटुम्बिनी ।
तत्कृतेरामचरिते वन्यंवृत्त मवर्ण्यत ॥ १८६ ॥

சுப்பிரமணியருடைய மனைவி ஜானகி ஈன்ற, சுந்தரம் இயற்றிய சுந்தரராமாயணத்தில், ஆரண்யகாண்டம் கூறப் பெற்றது.

ஆரண்யகாண்டம் முற்றிற்று.

किष्किन्धाकाण्डः प्रारभ्यते

கிஷ்கிந்தா காண்டம்.

१ श्रीरामोऽधिगतोनिरस्तदुरितांपंपांपयोजाऽऽवृताम्
दृष्ट्वातद्वनमुच्छ्रिताग्रतरुभिर्युक्तंलताऽऽलिङ्गितैः ।
पुष्प्यत्पुष्पपतन्मधुप्रमुदिताऽऽकूजत्पतङ्गाऽऽकुलैः
विभ्राजन्मधुनाविचिन्त्यदयितांवीरोऽपिधीरेतरः ॥ १ ॥

பாபம்தீர்க்கும் தாமரை சூழ்ந்திருக்கும் பம்பா நதியை இராமன் அடைந்து மலர்ந்த புஷ்பங்களிலிருந்து விழும் மதுவால் ஸந்தோஷமடைந்து சப்திக்கும் வண்டுகள் வியாபித்ததும் கொடிகள் சுற்றிக் கொண்டதும் உயர்ந்த நுனிகளைப்பெற்றதுமான மரங்களோடு கூடியதும், வஸந்தருதுவால் விளங்கும் பம்பாநதியின் வனத்தைப் பார்த்து மனைவியை நினைத்து வீரனாயிருந்தும் தைர்யத்தைத்துறந்தார்.

सोदर्यंसकदर्यवद्वरशरः पुष्पेषुणाऽभ्याहतः
वर्मप्रावृतमर्मणित्वसुखवान्दृष्ट्वामृगान्पक्षिणः ।
क्रीडालोलतमान्स्त्रियाविरहितोरामोऽन्यलापीन्नतत्
चित्रंप्राप्तबलंकरोत्यपबलंकालोबलीयान्यतः ॥ २ ॥

இராமன் நல்லபாணங்களைப் பெற்றும்,புஷ்பபாணம் பெற்ற மன்மதனால் கவசம் பூண்டமாரில் அடிபெற்று மனைவியை விட்டு பிரிந்ததால், விளையாட்டில் மிகவும் ஆசைபெற்ற மிருகங்களையும் பக்ஷிகளையும் பார்த்து அற்ப மனிதன்போல் வருந்தி தம்பியைப் பார்த்து புலம்பினார். "காலம் வலிமை பெற்று பலமுள்ளவனையும் பலமற்றவனாய் செய்வதால் அது ஆச்சரியமில்லை."

रम्येऽस्मिन्वनानिर्झरप्रमुदितोनत्यूहकः कूजति
श्रुत्वायंप्रणयिन्यमोदतमया पूर्वंतुतस्यस्वनम् ।
सोऽद्यप्रस्वनतो भृशंव्यथयतित्यक्त्वाप्रियांहाकथम्
जीविष्याम्यतिमारणेविरहिणांभ्रातर्मधौमादके ॥ ३ ॥

அழகான இந்த வனத்தின் அரிவியில் (நத்யூஹகம்) என்ற பக்ஷி ஸந்தோஷமாய் சப்திக்கிறது. முன் இதைக் கேட்டு மனைவி என்னுடன் ஸந்தோஷமடைந்தாள். இப்பொழுது சப்தத்தால் அந்த பக்ஷி என்னை மிகவும் வருந்தச் செய்கிறது. விரஹிகளை மிகவும் வதைக்கும் மதத்தைக் கொடுக்கும் வஸந்த காலத்தில் மனைவியை விட்டு ஹே தம்பி! எவ்விதம் பிழைக்கப் போகிறேன்.

कामप्रेमसखोमधुर्व्यथयतिभ्रातर्यथामामयम्
सीतांचेद्व्यथयेत्करिष्यतिचकिंनिर्भर्त्सिताशत्रुभिः ।
नृत्यन्तंशिखिनंविलोक्यमदनाक्लिष्टापनृत्यत्यसौ
केकिन्यङ्गनयापुमानपिबलात्कालेऽत्रसंश्लिष्यते ॥ ४ ॥

மன்மதனுக்கு அன்பு நண்பனான வஸந்தன், ஹே தம்பி! என்னைத் துன்பம் செய்வதுபோல் ஸீதையையும் துன்பம் செய்தால் சத்துருக்களால் அதட்டப்பெற்ற அவள் என்ன செய்வாள். நர்த்தனம் செய்யும் ஆண் மயிலைப் பார்த்து இந்த பெண் மயிலும் மன்மதவேதனை பெற்று ஸமீபத்திலிருந்து நர்த்தனம் செய்கிறது. இந்த காலத்தில் புருஷனைக் கூட மனைவி பலமாக கட்டிக்கொள்ளுகிறாள்.

योऽव्योम्निप्रणदन्व्ययोजयदसौमांसीतयावायसः
संहृष्टस्सतरुंगतोऽद्याविनदन्मांयोजयिष्यत्ययम् ।
कामोवामतया प्रणष्टसुदृशंसंस्मारयत्यन्वहम्
त्वित्यार्तस्सतुतत्तटेसमचरद्भ्रात्राऽतिधैरीकृतः ॥ ५ ॥

"இந்த காக்கை ஆகாயத்திலிருந்து சப்தித்து என்னை ஸீதையை விட்டுப் பிரியச் செய்தது. அதே இப்பொழுது மரத்திலிருந்து சப்திப்பதால் என்னை ஸீதையுடன் சேர்த்துவைக்கப் போகிறது. மன்மதன் விபரீதமாக காணாத ஸீதையை தினந்தோறும் நினைக்கச் செய்கிறான்," என்று துன்பமடைந்த இராமன் ஸஹோதரனால் மிகவும் தைர்யம் பெற்று அந்த பம்பாநதிக் கரையில் ஸஞ்சரித்தார்.

सुग्रीवस्सतुऋश्यमूकनिकटे भीतिंविनासंचरन्
दृष्ट्वातौवरसायकौत्रिजगतस्संत्रायकौभीतितः।
हन्तुंमामिहवालिनाऽप्यतिबलौसंप्रेषितावित्यथ
स्मृत्वाप्राप्तभयोन्यलीयतचिरंमुन्याश्रमेमन्त्रिभिः ॥ ६ ॥

சுக்ரீவன் ரிசிய மூகபர்வதத்தின் ஸமீபத்தில் பயமில்லாமல் ஸஞ்சரிக்கும் பொழுது நல்ல பாணங்களைப்பெற்று மூன்று உலகங்களையும் பயத்திலிருந்து காப்பாற்றும் இராமலக்ஷ்மணர்களைப் பார்த்து என்னைக் கொல்லுவதற்காக வாலியால் இவ்விடம் அனுப்பப்பெற்ற மிகுந்த பல சாலிகள் என்று நினைத்து பிறகு பயமடைந்து மதங்க முனியின் ஆசிரமத்தில் மந்திரிகளுடன் வெகுகாலம் மறைந்திருந்தான்.

२ पश्यन्नप्यभितोमुहुः प्रचलितोनैकत्रतिष्ठन्क्षणम्
प्रक्रामन्स्वजनैस्समंप्रतिगिरंकस्माद्बिभेष्यत्रभोः।
इत्यापृष्टइनाऽऽत्मजः पवनजंप्रत्याहवाल्यत्रन
प्राप्तस्तत्प्रणिधीइमौसकपटौजानेसचापाविति ॥ ७ ॥

சுக்ரீவன் நான்கு புறமும் பார்த்துக்கொண்டும், அடிக்கடி அசைந்து கொண்டும் ஒருவிடத்திலும் க்ஷண நேரங்கூட இராமலும் பந்துக்களோடு மலைகள் தோறும் ஓடிக்கொண்டும், "ஹே சுக்ரீவா! இவ்விடத்தில் ஏன் பயமடைகிறாய்", என்று வினவப்பெற்று ஹனுமானைப் பார்த்து கூறினான். "இவ்விடத்தில் வாலிவரவில்லை. வில்லை எடுத்துக்கொண்டு கபடமாய் வந்த வாலியின் சார புருஷர்கள் என்று இவர்களை நினைக்கிறேன்."

धीमन्प्राकृतवेषगोऽतिजवनोरूपेणवाचोङ्गितैः
जानन्भावमपेतदोषमनयोः पृच्छन्निहाभ्यागतेः ।
हेतुंसंस्तुहितौ विशुद्धहृदयौ विज्ञापयार्थंमिथः
मेप्रेम्णेतिनियुक्तआशुगसुतस्संपुप्लुवेयत्रतौ ॥ ८ ॥

"புத்திசாலியான ஹே ஹனுமானே! நீ எழை வேஷம் தரித்து மிகவும் வேகமாக உருவத்தாலும் வார்த்தையாலும் இங்கி தங்களாலும் குற்றமற்றதாக அவர்களின் மனதை அறிந்து இவ்விடத்தில் அவர்களின் வரவின் காரணத்தை வினவி களங்கமற்ற மனதைப்பெற்ற அவர்களை ஸ்தோத்திரம் செய்யவேண்டும். அவர்களிடம் என் காரியத்தை அன்போடு ரஹஸ்யமாய் தெரிவிக்கவேண்டும்" என்று சுக்ரீவன் உத்திரவு செய்யும்பொழுது ஹனுமான் இராமலக்ஷ்ணர்கள் இருக்குமிடத்திற்கு குதித்துச்சென்ருர்.

३ याथार्थ्यप्रविवित्सयारघुवरावाभाषतैत्याऽऽकृतिम्
भिक्षाकस्यविनीतिमान्सहनुमान्देवौप्रभावाद्युवाम् ।
मन्येऽलंक्रियतेऽवनिस्तुपदकैस्साम्राज्यसंसूचकैः
बाहूवांविनिवर्तयन्तिचजटाबुद्धिंत्विमांमूर्धजाः ॥ ९ ॥

ஹனுமான் உண்மையை அறிய விரும்பி ஸன்னியாஸியின் உருவம்பெற்று, வணக்கத்துடன் இராமலக்ஷ்ணர்களைப் பார்த்துக் கூறினன். "பெருமையால் உங்களைத் தேவர்களாக நினைக்கிறேன். இராஜ்யத்தின் எஜமானனுபிருத்தலை த்தெரிவிக்கும் திருவடிகளால் பூமி அலங்கரிக்கப்பெறுவதாலும் உங்களின் கைகளும், தலையில் இருக்கும், சடைகளும் (நீங்கள் தேவர்கள்) என்ற புத்தியை விலக்குகின்றன."

यस्माद्बिभ्यतिवानराअतिबलामूर्ध्नेयावहन्तोगिरम्
सोऽस्त्याकांक्षितयुष्मदीडचसखितस्सुग्रीवआर्यौ नृपः ।
वित्तंमन्त्रिणमित्यमुष्यहनुमत्संज्ञंचमांभिक्षुता
छन्नंवानरमावदन्नुपरतस्तद्बद्धिजिज्ञासया ॥ १० ॥

"மிகுந்த பலம்பெற்ற வானரங்களையும், பயந்து தன் உத்திரவைத் தலையால் வஹிக்கும்படி செய்யும் சுக்ரீவன் என்ற அரசன், ஹே பெரியோர்களே! உங்களின் உயர்வான சிநேகத்தை விரும்புகிறான். அவனுடைய மந்திரியும் ஹனுமான் என்று பெயர் பெற்ற வானரமுமான என்னை ஸன்னியாஸியின் உருவத்தால் மறைவு பெற்றவனாக அறியவேண்டும்," என்று ஹனுமான் கூறி அந்த இராமலக்ஷ்மணர்களின் மனமறிய விருப்பத்தால் மொழியை நிறுத்தினான்.

श्रुत्वारामउदीरितंहनुमतः प्राज्ञैः प्रशस्यं भृशम्
मन्वानः पटुतांतदङ्गनिचयेवेदेऽखिलेनिश्चलाम् ।
स्तुत्वेदृग्गुणमन्त्रियुक्तनृपतिंप्राहानुजंप्राश्रितम्
योऽन्विष्टोविपिनेश्रमादुपनतंब्रूहीतितन्मन्त्रिणम ॥ ११ ॥

வித்வான்களால் மிகவும் போற்றத் தகுந்த ஹனுமானுடைய வார்த்தையைக் கேட்டு இராமன் வேதங்கள், அதன் அங்கங்கள் உபாங்கங்கள் (ருக், எஜுஸ், ஸாம, அதர்வ, சிக்ஷை, வியாகரணம், சந்தஸ் நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பஸூத்திரம், தனுர் வேதம் ஆயுர் வேதம் கந்தர்வ வேதம் (ஸங்கீதம்) எல்லாவற்றிலும் அதிகமான அவனது திறமையை அறிந்து இவ்வித குணசாலியான மந்திரியைப் பெற்ற அரசனைத் துதித்து "காட்டில் சிரமத்துடன் நாம் தேடி வந்த சுக்ரீவனுடைய மந்திரி ஸமீபத்தில் வந்திருக்கிறான்; அவனுக்கு விடை கூறவேண்டும்" என்று வணங்கின தம்பியினிடம் கூறினார்.

विद्वन्त्वद्वचसागुणाः प्रविदितानौकांक्षितस्त्वत्पतिः
यद्वक्ष्येकरवावहेतदचिरात्तसख्यआकांक्षिते ।
इत्युक्तिसनिशम्यलक्ष्मणमुखान्निध्यायशत्रुंजितम्
सुग्रीवंसमवाप्तसंपदमपिप्राहृष्यदात्मन्ययम् ॥ १२ ॥

ஹே பண்டிதனே! உன் எஜமானனை நாங்கள் விரும்புகிறோம், அவனுடைய குணங்களை உன் வார்த்தையால் அறிந்தோம். நாங்கள் விரும்பும் அவனுடைய ஸ்னேஹத்தில் நீ சொல்லும் உதவியைச் சீக்கிரம் செய்கிறோம், என்று இலக்ஷ்மணனுடைய முகத்திலிருந்து வார்த்தையைக்கேட்டு வாலி தோல்வியையும் ஸுக்ரீவன் ஐசுவரியத்தையும் அடைந்தார்கள், என்று ஹனுமான் மனதில் நினைத்து ஸந்தோஷமடைந்தார்.

४ तस्मैपृच्छतआत्मनोवनगतिंतद्धेतुना प्रब्रुवन्
सौमित्रिस्तमबोधयद्रघुवरंसर्वार्थदंस्वार्थिनाम् ।
सन्त्यक्तेतरगत्यभीप्सितगतिंसुग्रीवसंरक्षकम्
भार्यास्थाननिवेदनाऽऽहरणयोर्दन्वात्मजप्रोक्तयोः ॥१३॥

இலக்ஷ்மணன் தங்களின் வனவாஸத்தைக் காரணத்துடன், வினவும் ஹனுமானிடம் சொல்லி "தன்னைவேண்டு வோர்களுக்கு எல்லாப் பொருளையும் கொடுப்பவரும் தங்களுக்கு இரக்ஷகனுக எல்லோர்களாலும் விரும்பப் பெற்ற வருமான இராமன் தனுகுமாரன் கூறின "மனைவியின் இருப்பிடத்தைத் தெரிவித்தல், அன்னவளை அழைத்து வருதல்" இவைகளில் வேறு கதியற்று சுக்ரீவனைத்துணையாக வேண்டுகிறார்" என்று தெரிவித்தான்.

दृष्ट्वात्वांहृदयस्थमीप्सितमपिद्राक्साधयिष्यत्ययम्
स्वाम्यस्माभिरितिप्रतोष्यहनुमान्प्रत्याययन्स्वांगिरम् ।
सोदर्यौमतिमानमायवपुषास्वस्यांसयोरादधत्
जंघालोगमनेकृतार्थइवसप्रीतः प्रतस्थेततः ॥ १४ ॥

எங்களின் எஜமானனுன சுக்ரீவன் உங்களைப் பார்த்ததும் உங்களின் மனதிலிருக்கும் விருப்பத்தைச் சீக்கிரம் எங்களால் பயனடைவிக்கப் போகிறுன் என்று புத்திசாலியான ஹனுமான் அந்த ஸஹோதரர்களை ஸந்தோஷமடைவித்து, தன் வார்த்தையை நம்பச் செய்துகபடமற்ற சரீரத்தோடு தன் தோள்களில் தரித்துக்கொண்டு காரியம் முடிவுபெற்றது போல் ஸந்தோஷமடைந்து நடையில் வேகம் பெற்று அவ்விடமிருந்து பிரயாணம் செய்தார்.

५ संप्राप्तौनगमृश्यमूकमभयोबिभ्रन्मनुष्याऽऽकृतिम्
सुग्रीवोमलयान्निजान्तिकगतौप्रेम्णा स्वयंराघवौ ।
संस्तुत्यानलमुज्वलंतमभितः प्रक्रम्यसख्यंपरम्
रामेणाऽऽरचयन्करेप्रविधृतोदृष्टोनतृप्तिययौ ॥ १५ ॥

சுக்ரீவன் பயத்தைவிட்டு மனித வேஷம் தரித்து மலயமலையிலிருந்து ரிசிய மூகபர்வதத்தை அடைந்து அன்போடு தானாக தன் ஸமீபம் வந்த அந்த இராமலக்ஷ்மணர்களைத் துதித்து நன்றாய் விளங்கும் அக்கினியை நான்கு புறமும் வலம் வந்து இராமனோடு மிகுந்த சினேஹத்தைச் செய்துகொண்டும் அன்னவரால் கையில் பிடிக்கப் பெற்றும் பார்க்கப்பெற்றும் ஸந்தோஷமடையவில்லை.

सख्यंतुल्यसुखासुखंस्वधिगतोरामासिमेयद्भयम्
शत्रोरच्युतमाहवेव्यपनुदप्रध्वंसनाद्वालिनः ।
बाणैरित्यतिसीदतस्स्वसुसखेरामोमनस्वीशुचम्
सुस्फीतामपार्जयन्नभिमतंतंप्रत्यजानाज्जयम् ॥ १६ ॥

"ஹே இராமா! நீ சுகதுக்கங்களை ஸமமாகப்பெற்ற என் சினேஹத்தை அடைந்தபடியால் பாணங்களால் யுத்தத்தில் வாலியை வதம் செய்து அழியாத சத்துரு பயத்தை விலக்கவேண்டும்" என்று மிகவும் துக்கிக்கும் தன் பிராணசினேஹிதனுடைய மிகவும் அதிகமான துக்கத்தை விலக்கும் கருணை மனம்பெற்ற இராமன், விரும்பிய வெற்றியைக் கொடுப்பதாக பிரதிக்ஞை செய்தார்.

लप्स्यामिप्रणयेनतेरघुवरप्रेष्टेस्वराज्यप्रिये
हस्तात्स्वस्यचिराच्च्युतेअपहृतेभ्रात्रेतिहृष्टेकपौ ।
सीतावालिनिशाचराधिपदृशोवामास्समंप्रास्फुरन्
हर्षस्याप्यनिवारितस्यमहतोदुःखस्यसंसूचकाः ॥ १७ ॥

"வெகுகாலமாக என் கையிலிருந்து நழுவினதும் ஸஹோதரனால் அபஹரிக்கப் பெற்றதும் மிகவும் விரும்பப்பெற்றதுமான தன் "இராஜ்யம் மனைவி" இவைகளை ஹே இராமா! உன் சினேஹத்தால் அடையப்போகிறேன்" என்று சுக்ரீவன் ஸந்தோஷமடையும் பொழுது. ஸீதை, வாலி, இராவணன், இவர்களின் இடது கண்கள் விலக்கமுடியாத மிகுந்த ஸந்தோஷத்தையும் துக்கத்தையும் காண்பிக்கும்படி ஒரு காலத்தில் துடித்தன.

६ सुग्रीवः परितोषयन्रघुपतिंप्राहेदमार्यप्रियाम्
आनेष्यामिचरक्षसातवहृतामन्विष्यभूमावधः ।
तेनासौविषभक्ष्यवज्जरयितुंशक्येतनेतिध्रुवम्
मन्येवस्त्रनिबद्धभूषणमपिप्राच्यावयद्यन्मयि ॥ १८ ॥

இராமனைப் பார்த்து "ஹே அண்ணா! ஸீதை வஸ்திரத்தில் கட்டின ஆபரணமுடிப்பை என்னிடம் நழுவச்செய்ததால் விஷம் கலந்த பக்ஷணத்தைப்போல் அவளை நிச்சயமாய் உட்கொள்ளமுடியாது" என்று நினைக்கிறேன். "உன் மனைவியை இராவணன் அபஹரித்திருந்தாலும் பூமியிலும் பாதாளத்திலும் தேடிக்கொண்டு வருகிறேன்" என்று அவர் ஸந்தோஷமடையும்படி சுக்ரீவன் கூறினான்.

कान्तायास्सविभूषणेसुवसनेसुग्रीवसन्दर्शिते
सन्दृष्टंत्विदमानतेनचमयायन्नूपुरंपादयोः ।
भ्रात्रेत्युदक्तमदोविलोक्यसहसासप्रत्यभिज्ञायतत्
सीतायाइदमित्युदश्रुनयनो रामोऽप्यधीरायत ॥ १९ ॥

சுக்ரீவன் காண்பித்த மனைவியின் ஆபரணங்களோடு கூடின பட்டு வஸ்திரத்தில் "நான் நமஸ்காரம் செய்யும்பொழுது ஸீதையின் கால்களில் இருக்கும் இந்தசிலம்பை ப்பார்த்தேன்" என்று ஸஹோதரன் சொல்லும் ஆபரணங்களைப் பார்த்து சீக்கிரம் இது ஸீதையினிடம் முன் இருந்தது என்று நினைவுபெற்று இராமனும் அதிகமாய் கண்களில் ஜலம் பெற்று துக்கித்தார்.

७ स्मृत्वात्रिप्रियमात्मनो विरचितंक्रुद्धोऽपिशत्रुः क्वमे
तंहन्म्ययद्यशितेषुणेतिसवचाजानेनवासंबलम् ।
शत्रोरामतवाऽऽनयामिदयितां शोकंत्यजेत्यर्थितः
मित्रेणप्रकृतिंगतोरिपुहतिंसप्रत्यजानीतताम् ॥ २० ॥

இராமன் தனக்கு சத்துரு செய்த தீங்கை நினைத்து கோப மடைந்து "என் சத்துரு எங்கே? அவனை கூர்மையான பாணத் தால் இப்பொழுது கொல்லுகிறேன்" என்று கூறியும், "ஹே இரா மா! உன் சத்துருவின் இருப்பிடமும் பலமும் எனக்குத் தெரியாது உன் மனைவியை நான் கொண்டு வருகிறேன், துக்கத்தைத் துலைக்க வேண்டும்" என்று சினேஹிதனால் வேண்டப்பெற்று இயற்கையை அடைந்து அந்த சத்துருவதத்தை சபதம் செய்தார்.

८ राज्यप्रेमजनच्युतिंबलवता स्वस्यापकारंकृतम्
सुग्रीवः परिचिन्त्यखिन्नहृदयश्चाध्यासितैकासनः ।
स्वन्मित्रस्यविनाशयाहितामितिद्राक्प्रार्थयन्प्रेयसा
सन्दिष्टोऽग्रजवैरकारणमपि प्रावोचदाप्तोमुदम् ॥ २१ ॥

சுக்ரீவன் இராமனுடன் ஒரு ஆஸனத்தில் அமர்ந்தும் பலம் பெற்றவன் செய்த தன்னுடைய துன்பத்தையும் இராஜ்யம் சினே ஹித ஜனங்கள் இவைகளின் பிரிவையும் நினைத்து மனம் வருந்தி "உன் சினேஹிதனுடைய துன்பத்தைச் சீக்கிரம் விலக்கவேண்டும்," என்று வேண்டி, சினேஹிதனை இராமனால் உத்திரவு செய்யப் பெற்று ஸந்தோஷமடைந்து அண்ணனுடைய விரோதத்தின் காரண த்தையும் கூறினான்.

९ वध्वर्थकृतवैरमप्यतिबलंमायाविनंमारयन्
वालीमेबिलमाप्तवान्सुगहनंतद्द्वारिमांस्थापयन् ।
वर्षातिक्रमणेऽप्यनागतइतिज्ञात्वैवतस्यात्ययम्
तच्छैलेनपिधायराज्यमरिपुः कर्तव्यकृत्प्राप्नवम् ॥ २२ ॥

பெண் விஷயமாக விரோதம் செய்த மிகுந்த பலம் பெற்ற மயனுடைய புத்திரனை மாயாவியைக் கொல்லுவதற்காக, செல்ல முடியாத குஹையின் வாயிலில் என்னை வைத்துவிட்டு அதற்குட் சென்றவாலி வருஷம் முடிந்தும் வராததால் அவனுடைய மரணத் தை நிச்சயித்தே குஹையின் வாயிலை மலையால் மூடி அவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து சத்துருவில்லாமல் நான் அரசுபுரிந்தேன்.

१० हत्वातं पिहितंनिरीक्ष्यचबिलंप्रोद्घाट्यतान्निर्गतः
वालीप्राप्यपुरंनिगृह्यसचिवान्क्रुद्धोमयावन्दितः ।
मध्येसर्वजनस्यदुस्सहतमंसंश्रावयन्दुर्वचः
क्लिष्टंमामकरोद्यथैकवसनस्स्यां प्रद्रवन्क्ष्मामिमाम् ॥

"வாலி அந்த மாயாவியைக் கொன்று குஹையின் வாயில் மூடி இருப்பதைப் பார்த்து அதைத்திறந்து அதிலிருந்து வெளி யேறி கிஷ்க்தாபுரம் வந்து கோபமடைந்து மந்திரிகளை சிக்ஷித்து என்னால் நமஸ்கரிக்கப் பெற்றும் எல்லா ஜனங்களுக்கும் நடுவில் பொறுக்க முடியாத துர்வார்த்தைகளைக் கேட்கச்செய்து ஒரு வஸ்திரத்தோடு இந்த பூமி முழுவதும் ஓடும்படி என்னைத் துன்பமடைவித்தான்."

तस्यागम्यमिमं विदन्नगवरंप्राप्तोऽस्मिनिर्भीतिकः
रामप्राप्तशरासनप्रियसखंपाहीतिदीनोवदन् ।
यावन्नेषुरवाप्यतेत्वदहितस्तावत्त्वितिव्याहृतिम्
श्रुत्वादाशरथेः कृतार्थहृदयस्सप्राहरामंकपिः ॥ २४ ॥

"இந்த பர்வதத்தில் வாலி வரமுடியாதென்பதைத் தெரிந்து கொண்டு பயமில்லாமல் இருக்கிறேன். வில்லைப்பெற்ற ஹே இராமா! அன்பு நண்பனைக் காத்தருளவேண்டும்" என்று பயத்துடன் கூறும் சுக்ரீவன், "என் பாணம் வராதவரை உன் பகைவன்" என்று இராமனுடைய மொழியைக் கேட்டு பயன் பெற்ற மனம்பெற்று இராமனைப் பார்த்துக் கூறினான்.

११ वालीपूर्वमिनोदयात्प्रतिदिनं कुर्याच्चतुर्ष्वब्धिषु
प्रातःकर्मसुभक्तसारविटपी शैलाग्रमुत्क्षिप्यच ।
कुर्यात्कन्दुकविभ्रमंसमबलंमत्तैस्सहस्रद्विपैः
दृप्तंदुन्दुभिमात्तकासरतनुंतंलीलयाऽमारयत् ॥ २५ ॥

"வாலி தினந்தோறும் நான்கு ஸமுத்திரங்களிலும் சூரியோதயத்திற்கு முன் ஸந்தியா வந்தனம் செய்வான். பலமுள்ள மரத்தைப் பிளப்பான். பர்வதத்தின் சிகரங்களை உயரத்தில் எறிந்து பந்து விளையாடுவான். மதம் பெற்ற ஆயிரம் யானைகளின் பலம்பெற்ற மஹிஷத்தின் உருவம்பெற்ற துந்துபிஎன்ற அசுரனை விளையாட்டாக வதம் செய்தான்."

तत्कायंतुलिताचलंबलवताक्षिप्तंनिरीक्ष्यान्तिके
तद्वक्त्रस्रुतशोणितौघपृषतान्क्रुद्धोमतङ्गोमुनिः ।
शापेनाश्रमतोनिरासयदतिक्रूरंचतंमन्त्रिणः
यस्सालेषुचसप्तसुद्रुपुबलादेकंसुनिष्पत्रयेत् ॥ २६ ॥

"ஏழு தேக்கு மரங்களையும் ஒரு காலத்தில் பலத்தால் (அசைத்து) இலைகளில்லாமல் செய்யக்கூடிய பலம் பெற்ற வாலி எறிந்த பர்வதத்திற்கு ஸமமான அந்த துந்துபியின் சரீரத்தையும் அவன் வாயிலிருந்து பெருகும் இரத்தத்திவலைகளையும் ஸமீபத்தில் பார்த்து மதங்கமுனிவர் கோபமடைந்து ஆசிரமத்திலிருந்து அந்த துஷ்டவாலியையும் அவனுடைய மந்திரிகளையும் விரட்டினார்."

तद्वीर्यंबहुशोऽनुभूतमतुलंत्वद्वीर्यमन्तार्हितम्
प्रत्येम्यार्यकथंन्विततिप्रचकितस्तद्दर्पकेराघवे ।
दुन्दुभ्याकृतिमुत्क्षिपत्यपिपदादूरंतदङ्गुष्ठतः
भूयस्सद्वलदुर्बलत्वविशयस्वीयाऽऽशयोऽभूत्कपिः ।२७॥

"அந்த வாலியின் பலம் அளவற்றது. பல தடவை என்னால் அனுபவிக்கப் பெற்றது. ஹே அண்ணா! உன் பலம் மறைந்திருக்கிறது. எவ்விதம் நம்புவேன்?" என்று சுக்ரீவன் பயமடையும் பொழுது அவனை ஸந்தோஷம்பெறச் செய்வதற்கு இராமன் துந்துபியின் சரீரத்தைக் காலாலும் அதன் கட்ட விரலாலும் தூரத்தில் உயரத் தூக்கி எறிந்தும் குரங்கானதால் மறுபடியும் பலா பல விஷயமாக மனதில் ஸந்தேஹம் பெற்றான்.

१२ सालान्सप्तविदारितान्गिरिभुवौबाणेनदृष्ट्वाऽघु
श्रेष्ठस्यार्कसुतोरिपुंविनिहतंनिश्चित्यहृष्टाऽऽशयः ।
तत्सन्दिष्टउपाह्वयन्नपभयोयुद्धायधीरोगतः
किष्किन्धामपिवालिनास्मृतधनुर्वीरोन्ययुध्यद्भृशम् ॥

இராமனுடைய பாணத்தால் ஏழுசேக்கு மரங்களும் பர்வதம் பூமி இவைகளும் பிளக்கப் பெற்றிருப்பதை சுக்ரீவன் பார்த்து சத்துரு அழிந்ததாக நிச்சயித்து மனதில் ஸந்தோஷித்து இராமனிடம் உத்திரவுபெற்று தைரியம் பெற்று பயமில்லாமல் கிஷ்கிந்தைக்கும் சென்று (வாலியை) யுத்தத்திற்கு அழைத்து வில்வீரனை நினைத்து அந்த வாலியோடு மிகவும் போர் புரிந்தான்.

रूपेणाऽऽकृतितः परस्परतुलांसंप्राप्तयोर्युध्यतोः
भ्रात्रोर्भेदमजानतास्वसुहृदाभीतेरमुक्तेशरे ।
सुग्रीवोरिपुताडितस्त्वपसृतस्स्वस्थानगस्सान्त्वितः
रामेणाऽऽङ्कयतकण्ठएवलतयासंदत्तकिष्किन्धया ॥ २९॥

உருவத்தாலும் அழகாலும் ஒருவருக்கொருவர் ஸமமாயிருக்கும் வாலி சுக்ரீவர்கள் யுத்தம் செய்யும் பொழுது சுக்ரீவன் தன் நண்பனால் பேதம் தெரியாமல் அம்புவிடப்படாமலிருக்கும் பொழுது, சத்துருவினிடம் அடிபெற்று ஓடி தன் இருப்பிடமடைந்து கிஷ்கிந்தையைக் கொடுக்கும் கொடியால் கழுத்திலே அடையாளம் செய்யப்பெற்றான்.

१३ सुग्रीवेनयुयुत्सुना सहसुवारामः कृतोमध्यतः
किष्किन्धागमनोनिरीक्षितवनस्सन्दृप्तगर्वादनः ।
दृष्ट्वासप्तजनाऽऽश्रमंकलरवंविज्ञाततद्वैभवः
श्रेयोऽर्थीप्रणातिंविधायसगतश्शत्रोर्जिघांसुः पुरीम् ॥

யுத்தம் செய்ய விரும்பும் சுக்ரீவனால் நடுவில் விடப்பெற்ற வரும் கர்வம் பெற்றவர்களின் மதத்தை அடக்கும் இராமன் இலக்ஷ்மணனுடன் கிஷ்கிந்தாபுரத்திற்குச் செல்பவராய் வனங்களைப் பார்த்துக்கொண்டும் மதுர சப்தம் பெற்ற ஸப்தஜனமென்ற ஏழு ரிஷிகளின் ஆசிரமத்தைப் பார்த்து அவர்களின் (சுவர்க்கத்துக்கு சரீரத்துடன் சென்றதால் பொருள்கள் அப்படியே இருக்கின்றன. நமஸ்கரித்தவர்களுக்கு அசுபம் கிடையாது) என்ற பெருமையை அறிந்து மங்களத்தை வேண்டி நமஸ்கரித்து சத்துருவைக்கொல்ல விரும்பி அவனுடைய பட்டணத்தை அடைந்தார்.

१४ रक्ष प्राग्राचितांस्वसंविदमरित्रासाच्चिराऽऽर्तंचमाम्
ऊर्जस्विन्नितिसार्थितोरघुभुवादत्ताभयस्सूर्यजः ।
संप्राप्तोरुबलोवृषानतिमदान्विद्रावयन्गर्जितैः
युद्धायाऽऽह्वयदप्रमत्तमरिषुत्यक्तप्रभीर्वालिनम् ॥ ३१ ॥

"முன் செய்த சபதத்தையும் சத்துருவின் பயத்திலிருந்து வெகு காலமாக துன்பமடைந்த என்னையும் ஹே பல சாலியே! காப்பாற்றவேண்டும்," என்று வேண்டும் சுக்ரீவன் இராமனிடம் அபயம் பெற்று அதிக பலம்பெற்று அதிக மதம்பெற்ற காளைகளையும் கர்ஜனையால் ஓடச்செய்து பயமில்லாமல், சத்துருக்களிடம் ஸாவதானமுள்ள வாலியை யுத்தத்திற்காக அழைத்தான்.

१५ सुग्रीवस्यसुगार्जितंत्वपभयंश्रुत्वासमात्तक्रुधं
तारावालिनमाहानिर्जिगमिषुंयुद्धायबद्धाऽऽदरा
मित्रंमित्रसुतंकुरुप्रबलतोहस्तावलंबंगतम्
रामोविक्रमवारिधिर्नभवताजय्यःश्रितस्वर्द्रुमः ॥ ३२ ॥

பயமற்ற சுக்ரீவனுடைய கர்ஜனையைக்கேட்டு கோபமடைந்து யுத்தத்திற்காக பிரயாணம் செய்ய விரும்பும் வாலியைப் பார்த்து தாரை "பலம் பெற்றவனிடமிருந்து கைபலம்பெற்ற சுக்ரீவனை சிநேகம் செய்து கொள்ளவேண்டும். அண்டினவர்களுக்குக் கற்பகத்தரு போன்ற வரும் பலத்திற்கு இருப்பிடமுமான இராமனை நீ ஜயிக்கமுடியாது" என்று அன்புடன் கூறினாள்.

१६ताराबोधनआगते वितथतां कालस्यपत्यौवशे
तांनिर्भर्त्स्यकृताऽऽहवस्सहभुवावालीसमालीगळे ।
बाणेनाभिहतस्स्ववक्षसिरणेधीरेणरामेणसं
दीनोऽऽधो यशसान्यपप्तदमितस्वोपार्जितेनाचिरात् ॥

தாரையின் நற்புத்தி போதனையும் எமனுக்கு வசமான புருஷனிடம் வீணாக இருக்கும் பொழுது கழுத்தில் மாலைபெற்ற வாலி தாரையை அதட்டி ஸஹோதரனுடன் யுத்தம் செய்து யுத்த வீரனான இராமனால் பாணத்தால் மாரில் அடிபெற்று மிகவும் வருந்தி அளவில்லாமல் தான் ஸம்பாதித்த புகழோடு பூமியில் சீக்கிரம் விழுந்தான்.

१७ मर्मण्याहितवर्माणि प्रदाळितेरामेषुणौजस्विना
मालेन्द्रस्यजहौनकाञ्चनमयीप्राणान्यियासून्बहिः ।
भूमिंपंकिलयन्तनोर्विसृमरैरक्तैः प्रशस्ताऽऽहति
क्लिष्टोऽप्याहविगर्हयन्रघुपतिंधैर्येणवालीबली ॥ ३४ ॥

பலமுள்ள இராம பாணத்தால் கவசம்பெற்ற மார்புபிளக்கப்பெற்றும் வெளியில் செல்லவிரும்பும் வாலியின் பிராணன்களை இந்திரனுடைய தங்கமாலை கைவிடவில்லை. சரீரத்திலிருந்து பெருகும் இரத்தங்களால் பூமியை சேருள்ளதாகச் செய்யும் பலமுள்ள வாலி நல்ல அடியால் துன்பமடைந்தும் தைரியத்தால் நிந்தித்துக்கொண்டு இராமனைப் பார்த்து கூறினன்.

तेजस्विन्सुकुलीन ते किमुचिताराजेन्द्रसूनो विना
हेतुंमेऽभिहतिर्निरागसइयंगुण्यस्ययात्वत्कृता ।
श्रुत्वासद्यशऊर्जितंभुवनगंसत्यंविदित्वाचतत्
तारोक्तिंत्वनुपाददाद्धितकरींमुग्धोन्ययौत्संपरैः ॥ ३५ ॥

"ஒளிபெற்றவனும் நற்குலத்தில் பிறந்தவனுமான ஹேஉத்த மராஜ குமாரா! நீ குற்றமற்ற என்னை காரணமில்லாமல் அடித்தது நற்குணம் பெற்ற உனக்குத் தகுதியா? உலகத்தில் பரவியிருக்கும் மிகுந்த உன் நற்புகழை உண்மையாக நினைத்து நன்மை கொடுக்கும் தாரையின் சொல்லையும் அங்கீகரிக்காமல் மூடனைப் பிறர்களோடு யுத்தம் செய்தேன்."

जानेऽवद्यकृतिंभवन्तमधुनाकूपंतृणैरावृतम्
तेतेपार्थिवसद्गुणा अनितरप्राप्याः क्वनैसर्गिकाः ।
आहुर्विग्रहकारणानिपृथिवींदुर्वृत्तहेम्नीबुधाः
किंमय्यस्तितथाविधंवनचरस्तुष्टः फलैर्यद्भुतः ॥ ३६ ॥

"கிணறு புற்களால் மறைக்கப்பெற்றிருப்பதுபோல் நீ குற்றமுள்ள செய்கையைப் பெற்றிருப்பதை இப்பொழுது அறிந்தேன். பிறர்களுக்குக் கிடைக்காததும் சுபாவத்தால் கிடைத்ததுமான உன்னிடமிருக்கும் அரசர்களுக்குறிய நற்குணங்கள் எங்கே? பூமி, வெள்ளி, தங்கம் இவைகளை விரோதத்திற்குக் காரணமாக வித்துவான்கள் கூறுகிறார்கள். வனத்தில் வஸிப்பவனும் பழங்களைப் புசிப்பவனுமான என்னை நீ கொன்றதால் அதற்குக் காரணமான அவ்வித பொருள்கள் என்னிடம் இருக்கிறதா?"

किंधर्मोपचितिर्नतेऽर्थनिचयेरामाऽऽस्तकामोभृशम्
किंतेनास्तिमनाग्भयंनिरयजंचर्मास्थधार्यंमम ।
मांसंमेनतुभक्ष्यमार्यसुमतं जातः कथंदुर्नयः
पुण्यात्पङ्क्तिरथाद्भवान्सदुरितस्सत्संगतः किंवदेः ॥ ३७ ॥

"தர்மத்தை ஸம்பாதித்தல் உனக்கு வேண்டாமா? பொருளின் கூட்டத்தில் மிகுந்த ஆசை இல்லையா? நரகத்திலிருந்து கொஞ்சங்கூட பயமில்லையா? என் தோலும் தரிக்கத் தகுதியற்றது. என் மாமிசம் சாப்பிடத்தக்கதாக பெரியோர்கள் ஸம்மதிக்கவில்லை. அநியாயமும் பாபமும் செய்யும் நீ புண்ணிய சாலியான தசரதனிடமிருந்து எவ்விதம் பிறந்தாய்? பெரியோர்களோடு சேர்ந்தபொழுது அவர்களுக்கு என்னவிடை கூறுவாய்?

वीर्यंविष्टपविश्रुतंरिपुततेर्हर्तर्यदालोकितम्
मय्यागोरहितेकृताऽऽगसिरिपौतन्नोपयुक्तंकथम् ।
प्रत्यक्षंमयिचेत्क्षिपेरसुहरंबाणंपरेताधिपम्
संपश्येरधुनायथाऽहमहहत्वां विश्वसन्नाऽऽहतः ॥ ३८ ॥

"சத்துருக்களின் கூட்டத்தை ஸம் ஹரிப்பவனே! குற்ற மற்ற என்னிடத்தில் உபயோகித்ததும் உலகத்தில் பிரஸித்தமு மான உன் பலத்தை குற்றம் செய்த சத்துருவினிடம் என் உப யோகிக்கவில்லே? உன்னை நம்பி நான் அடிபெற்றதுபோல், பிரா ணனைப்பிடுங்கும் பாணத்தை என்னிடம் நேரில் உபயோகித்தால் நீயும் இப்பொழுது எமனைப் பார்ப்பாய், கஷ்டம்."

हत्वामामपनीतिरामसहजंमेऽमित्रयोयत्कृते
पूर्वंतत्वानियोजयेः प्रबलचेदह्वाऽऽनयेयंप्रियाम् ।
न्यस्तामंबुनिधौरसातलगतां शत्रुंगृहीत्वागळे
सुग्रीवोऽवनिमेतुमन्निहननंयुक्तंयदि प्रोच्यताम् ॥ ३९ ॥

"பலம்பெற்ற ஹே இராமா! நீதி இல்லாமல் என்னைக் கொன்று என் தம்பியை சிநேஹம் செய்துகொண்டு பெறப் போகிற காரியத்தில் முன்னமே எனக்கு உத்திரவு செய்தால் ஸமுத் திரத்தில் வைத்திருந்தாலும் பாதாளத்திலிருந்தாலும் உன் மனை வியையும் சத்துருவைக் கழுத்தில் பிடித்தும் ஒரு பகலில் கொண்டு வருவேன். சுக்ரீவன் இராஜ்ய பூமியைப்பெறவேண்டும். என் னுடைய வதம் நியாயமானல் விடைகூறவேண்டும்."

१८ इत्युक्त्वाश्रुतिदारणींकटुगिरंवाचंयमत्वंगते
वालिन्यात्तविपत्तिमुग्धधिषणेचापल्यधौवानरे ।
गूढान्तर्हृदयस्थितान्धतमसध्वंसायुताकोंपमः
रामः प्रत्यवदाद्विबोधितमतिप्राज्ञोत्तमः पामरम् ॥ ४० ॥

பிராண வேதனையால் புத்தி கலக்கம் பெற்றவனும் பிறவியால் புத்தி நிலையற்ற குரங்குமான வாலி, காதுகளைப் பிளக்கும்படி இவ்விதம் கடுஞ் சொற்களை கூறிமௌனம் பெற்றதும், மனதிற்குள் மறைந்திருக்கும் அறியாமை என்றும் பெரும் இருட்டை விலக்குவதில் பதினாயிரம் சூரியனுக்கு ஸமமான பண்டித மன்னனான இராமன் பாமரனைப் பார்த்து புத்தி அறியும்படி பதில் உரைத்தார்.

धर्मादीन्प्रविदन्नलोकसमयं प्राज्ञैस्स्वयंवाकपे
मांयत्संपरिभाषसेसमवितोयेनस्वधर्मोमहान् ।
भूमिसाब्धिवनाचलां चनिखिला मिक्ष्वाकवश्शासति
त्वक्षीणायशसाचिरादसुभृतस्तान्निग्रहानुग्रहाः ॥ ४१ ॥

"ஹே குரங்கே! உயர்ந்த ஸ்வதர்மத்தைக்கைவிடாத என்னை நீ நிந்திக்கிறதால் தர்மம் முதலிய புருஷார்த்தங்களையும் உலக நடையையும் வித்வான்களிடமாவது தானாகவாவது நீ அறியவில்லை. கடல் காடு மலைகளோடு கூடிய இந்த எல்லா பூமியையும் இக்ஷ்வாகு குலத்தின் மன்னர்கள் இரக்ஷிக்கிறார்கள். அவர்கள் வெகு காலமாக அழிவற்ற புகழைப் பெற்றவர்கள். ஜீவராசிகள் அவர்களின் நிக்ரஹானுக்ரஹத்திற்கு (தண்டனை அருள், புரிதல், இவைகளுக்கு) வசமானவர்கள்."

धर्माऽऽत्माभरतः प्रशास्तिधरणींतस्याऽऽज्ञयाऽरण्यजान्
शास्तुंदुष्पथगामिनोवयमिहप्राप्तागृहीत्वाधनुः ।
भ्रातुस्तेसमपाहरोऽर्थवनिते आगस्विनोमोहतः
स्वस्थानात्परिचालितस्यबहुशोदीनस्यसख्युर्मम ॥ ४२ ॥

"ஹே குரங்கே தர்மத்தின் உருவமான பரதன் பூமியை பரிபாலிக்கிறான். அவனுடைய உத்திரவால் பாபம் செய்யும் காட்டிலிருப்பவர்களை சிக்ஷிப்பதற்காக வில்லை எடுத்துக்கொண்டு நாங்கள் இவ்விடம் வந்தோம். அறியாமல் குற்றம் செய்து வருந்தின என் சினேஹிதனை உன் தம்பியைத் தன் இருப்பிடத்திலிருந்து பல தடவை நழுவச் செய்து அவனுடைய பொருள் மனைவி இவைகளையும் நீ அபஹரித்தாய்."

धर्मस्सज्जनदुर्गमो भगवतासंवेदनीयः परम्
ज्ञातुंवानरशक्यतेकथमयंत्वन्मन्त्रिभिश्चत्वया ।
उक्तो ज्येष्ठसहोदरः पितृसमो भ्राताकनिष्ठस्सुतः
तस्मिन्जीवतितत्स्त्रियामभिरतो जायेतदुष्कर्मवान् ॥४३॥

"ஸாதுக்களும் அறிய முடியாததும், கடவுளால் மிகவும் காணத்தகுந்ததுமான தர்மத்தை ஹே வானரமே! நீயும் உன் மந்திரிகளும் எவ்விதம் அறிவீர்கள், மூத்த ஸஹோதரன் தந்தைக்கும் இளைய ஸஹோதரன் புத்திரனுக்கும் ஸமானமானவர்கள். அந்த இளைய ஸஹோதரன் பிழைத்திருக்கும் பொழுது அவனுடைய மனைவியிடம் ஆசை பெற்றவன் பாபமடைவான்."

सुग्रीवस्यवधूंरुमामुपगतंयज्जीवतस्त्वांकपे
दण्ड्यंमर्षयतेनधर्म्यभरतोनैवस्वतन्त्रावयम् ।
राजादण्ड्यमदण्डयन्सवृजिनंतस्याऽऽददातित्वघम्
राज्ञासंनिगृहीत आत्मदुरिताद्राङ्मुच्यतेपातकी ॥ ४४ ॥

"சுக்ரீவன் ஜீவித்திருக்கும் பொழுது அவனுடைய மனைவியான ருமையை ஹே வானரமே! நீ அடைந்ததால் தண்டிக்கத் தகுந்த உன்னை தர்மத்திலிருந்து தவராத பரதன் பொறுக்கவில்லை எங்களுக்கு சுவாதீனமில்லை. சிக்ஷிக்கவேண்டிய குற்றவாளியை அரசன் சிக்ஷிக்காமலிருந்தால் அவனுடைய பாபத்தை அடைகிறான். குற்றவாளி அரசனால் சிக்ஷிக்கப்பெற்று தன் பாபத்திலிருந்து சீக்கிரம் விடுதலை அடைகிறான்."

भ्रातातेसमवापसख्यमचलंतद्वैरिनिर्मूलनम्
वालिन्वानरसंनिधावभिहितंतत्स्यादुपेक्ष्यंकथम् ।
मन्युंमाकुरुमय्यजस्रममतेशाखामृगस्त्वंनाकिम्
राजानोऽभिमुखान्मृगान्चविमुखान्विध्यन्तिदुष्यन्तिन ॥

“ஹே வாலி! உன்னுடைய ஸஹோதரன் அழியாத சினேஹத்தை அடைந்தான். அவனுடைய சத்ருவின் ஸம்ஹாரம் வானரங்களின் முன்னிலையில் கூறப் பெற்றதால் அதை எவ்விதம் உபேக்ஷை செய்யமுடியும்? ஹே புத்தியற்றவனே! நீ கிளைகளில் இருக்கும் மிருகமான குரங்கு இல்லையா? அரசர்கள் மிருகங்களை நேரிலும் மறைவிலும் அடிக்கிறார்கள். அதனால் குற்றமடையவில்லை.”

देवाऽकारमुपेयुषोनरपतोर्निन्दातुतत्क्रोधदा
त्याज्येत्युक्तमतिस्सराममवदीत्तान्निन्दनाच्छंकितः ।
सद्यस्तस्यसुचिक्षमापयिषया तं सांजलिस्सान्त्वयन्
मूढंपाहिशरण्यमांदुरिततोधर्मज्ञकारुण्यवन् ॥ ४६ ॥

“தெய்வத்தின் உருவம்பெற்ற அரசனுடைய நிந்தை தெய்வத்தின் கோபத்தைக் கொடுக்கிறது. அதைத்தள்ளவேண்டும்” என்று புத்திபோதிக்கப் பெற்ற வாலி இராமனைப் பார்த்து அவருடைய நிந்தையிலிருந்து பயந்து அதைப்பொறுக்கும்படி செய்ய விரும்பிக் கும்பிட்டகையுடன் ஸமாதானம் செய்து கூறினான். “ரக்ஷிப்பதில் திறமைபெற்றவனும் தர்மங்களை அறிந்தவனுமான ஹே கருணைக் கடலே! மூட்டாளான என்னைப் பாபத்திலிருந்து பாது காற்கவேண்டும்.”

त्वत्प्रीतिस्सुरराज्यदेतिविदितातारावचोऽप्युत्सृजन्
वांछन्त्वद्वधमात्मनश्चिरमतंसर्वज्ञतेऽभ्यर्णगः ।
नाऽऽत्मानंतनयंयथाप्रियतमंशोचामिवीराङ्गदम्
सुग्रीवेनाविलोकयंतांसममयंप्रीतः प्रसीदाऽऽत्मनि ॥४७ ॥

“உன்னுடைய அன்பு இந்திரனுடைய அரசாங்கத்தையும் அளிக்கும் என்று தெரிந்து தாரையின் மொழியையும் துறந்து எல்லாமறிந்த எம்பெருமானே! உன்னிடமிருந்து நான் வதமடைய வேண்டுமென்று வெகுகாலமாக விரும்பி உன் ஸமீபம் வந்தேன். ஹே வீரா! அதிக அன்பு பெற்ற அங்கதனைப்பற்றி துக்கிப்பதுபோல் என் ஜீவனைப் பற்றி துக்கிக்கவில்லை. சுக்ரீவனிடம் அன்பு பெற்றிருப்பதுபோல் இவனிடம் அன்பு பெற வேண்டும். ஸந்தோஷமாய் என்னிடம் அருள் புரியவேண்டும்.”

इत्याबद्धगिरंशराऽऽर्तचकितं रामः कृपालुर्भृशम्
वीरंतंप्रतिवक्तुमप्यचतुरंवीक्ष्यप्रपन्नंमुहुः ।
द्राक्षामाक्षिकसोदरेणवचसा सर्वंकरोमीप्सितम्
माभैषीरितिपण्डितः प्रतिवदन्प्राहर्षयद्वालिनम् ॥ ४८ ॥

இவ்விதம் வார்த்தை கூறி பாணத்தால் வருந்தி பயந்தவனும் பதில் கூறுவற்கும் திறமையற்றவனும் சரணமடைந்தவனுமான வாலியை பண்டிதனான இராமன் அடிக்கடி பார்த்து மிகவும் கருணைபெற்று "உன் விருப்பமெல்லாவற்றையும் செய்கிறேன்" என்ற திராக்ஷைதேன் இவைகளுக்கு ஸமமான மொழியால் பதில் உரைத்து ஆனந்தமடைவித்தார்.

४९ श्रुत्वाभर्तृवधंविषादविवशातारागृहान्निर्गता
मध्येमार्गमुपाऽऽगतैस्तुहरिभिर्भीतैर्विनिर्वर्तिता ।
सन्त्यक्तेतरकामनास्मृतपती रामंविलोक्यास्त्रिणम्
निर्भीकानिपपातनीतिविदुषी पत्युर्हतस्याग्रतः ॥

புருஷனுடைய வதத்தைக் கேட்டு தாரை துக்கித்து அரண்மனையிலிருந்து வெளியில்வந்து நடுவழியில் ஸமீபம் வந்த பயந்த குரங்குகளால் திருப்பப்பெற்றும் வேறு விருப்பத்தைவிட்டு புருஷனை நினைத்து அம்புபெற்ற அந்த இராமனைப் பார்த்தும் நீதியறிந்து பயத்தைத் துறந்து, உயிர் இழந்த மன்னனுடைய முன்னிலையில் விழுந்தாள்.

२० तारातारखप्रणर्दितहरित्कल्याणदेनाऽऽहतम्
कान्तंवीक्ष्यविमूलितंनगमिवस्फीतंमहावात्यया ।
विश्लेषासहना विलप्यनितरां प्राणेषुमुक्ताऽऽदरा
साकंसर्ववधूभिरप्यमनुतप्रायोपवेशंहितम् ॥ ५० ॥

பலமான சப்தத்தால் திசைகளை சப்திக்கச் செய்யும் தாரை பெரிய சுழல் காற்றால் வேரோடு பிடுங்கப்பெற்ற பெரிய மரம் போல் க்ஷேமமளிக்கும் இராமனால் அழிவுபெற்ற புருஷனைப் பார்த்து தனித்திருக்க பொறுக்காமல் மிகவும் பிராணனிடத்தில் பிரியத்தை அகற்றி எல்லாப் பெண்களோடும் பிராயோபவேசத்தை (தினந்தோறும் உணவை ஒழிப்பதை) நன்மையாக நினைத்தாள்.

२१ जानीहिप्रबलंकृतान्तमबलान्सर्वान्तदन्यानिमान्
कर्माऽऽयत्तमसौमहान्कबळयेदस्मान्यथावालिनम् ।
शोच्यः कस्य च कस्सुतस्यविभवंपश्यप्रहृष्टेतिसा
वातापत्यविबोधिताऽप्यनुगतिंदध्यौस्वपत्युर्वराम् ॥ ५१ ॥

"எமனை பலமுள்ள வனாகவும் மற்றவர்களை பல மற்றவர்களாகவும் அறியவேண்டும். அந்த எமன் கர்மங்களுக்கு அதீனமாயிருந்து வாலியை விழுங்கினதுபோல் நம்மையும் நாசமடைவிப்பான். யார் யாரைக்குறித்து துக்கிக்கிறது, ஸந்தோஷமாய் புத்திரனுடைய பெருமையைப் பார்க்கவேண்டும்" என்று ஆஞ்சனேயன் அறிவித்தும் தாரை புருஷனுடன் விண்ணுலகம் செல்லுவதை சிலாக்கியமாக நினைத்தாள்.

२२ दोषंमामायिचिन्तयप्रकुपितोदैवेननोव्याहतम्
सौहार्दसुखमेकदातादितरत्कर्तुंपटुः कोभुवि ।
पुत्रंपालयमेऽङ्गदंसुचतुरंकार्येमनीषानिधिम्
तारांमानयराज्यमाप्नुहिमुदाहैमस्रजाश्रीदया ॥ ५२ ॥

"கோபம் பெற்று என்னிடத்தில் குற்றம் நினைக்காதே. நமது சிநேஹம் தெய்வத்தால் சேதமடைந்தது. சுகத்தையும் துக்கத்தையும் ஒருகாலத்தில் அனுபவிப்பதற்கு எவன் தரணியில் தீரன்? காரியத்தில் திறமை பெற்ற என் புத்திரனான அங்கதனைக் காப்பாற்றவேண்டும். புத்திக்கு இருப்பிடமான தாரையை மதிக்கவேண்டும். ஐசுவரிய மளிக்கும் தங்கமாலையோடு இராஜ்யத்தை ஸந்தோஷமாய்ப்பெற்றுக் கொள்ளவேண்டும்."

२३ इत्यादिश्यसहोदरंस्रजमपिप्रत्यर्प्यतथ्याभिधम्
सुग्रीवंप्रविधायमीलितदृशिस्वर्गंगतेवालिनि ।
विक्रान्तापहतारिगोलभकथंहात्वंहतोऽस्यद्यभोः
इत्युद्रावगिरोनिपत्यहरयो भूमौ विलेपुर्भृशम ॥ ५३ ॥

இவ்விதம் வாலி ஸஹோதரனைப் பார்த்து உத்திரவு செய்து மாலையையும் திருப்பிக் கொடுத்து அழகிய கழுத்தைப் பெற்ற சுக்ரீவனை உண்மை பெயர் பெற்றவனுகச் செய்து கண்களை மூடிக்கொண்டு சுவர்கலோகம் சென்ற பொழுது "பலம்பெற்ற வனும் விரோதியான கோலபனைக் கொன்றவனுமான ஹே வாலி! இப்பொழுது நீ எவ்விதம் எமலோகம் சென்றாய்?" என்று பலமான சப்தத்தோடு குரங்குகள் பூமியில் விழுந்து மிகவும் புலம்பினார்கள்.

२४ तारायाः परिदेवनेन परमंनैराश्यमाप्तोऽसुखी
सुग्रीवोरघुनाथमाहकरुणामूर्तेत्वयामेऽग्रजः ।
मद्वाक्येनहतस्तथाऽप्यमरतां नेच्छामिकिंवाभुवम्
योमेऽसूनवतिस्मतन्निहननात्पापान्नलज्जेऽधमः ॥ ५४ ॥

தாரையின் புலம்பலால் சுக்ரீவன் மிகுந்த வைராக்கியம் பெற்று வருந்தி இராமனைப் பார்த்து கூறினான். "கருணையின் உருவமான ஹே இராமா நீ என்னுடைய அண்ணனை என் வார்த்தையால் வதம் செய்தபோதிலும் தேவத் தன்மையையும் விருப்பாத நான் பூமியை விரும்புவேனு? என்னைக் கொல்லாமல் என் பிராணனைக் காப்பாற்றிய அண்ணனையும் கொன்ற பாபத்திலிருந்தும் கீழ்மைபெற்ற நான் வெட்கமடையவில்லை".

अस्तोकाग्रजसून्वभद्रकरणान्मेप्राप्तवंशाऽऽहतेः
स्वाहानाथमुपैतुमप्यनुमतिंकुर्वित्युपाऽऽदायतत् ।
सख्युर्वाक्यमुपाऽऽत्तशोकहृदयोरामोमृतेरर्थिनीम्
तारां विस्मृतदुर्दशामकलयद्वाक्यैस्सुधासन्निभैः ॥

“அண்ணனுக்கும் புத்திரனுக்கும் அதிக துன்பத்தைச் செய்ததால் குலத்தைக் கெடுத்த எனக்கு அக்கினியில் விழுந்து அழிவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்” என்று சினேஹிதனுடைய மொழியைக் கேட்டு இராமனும் மனம் வருந்தி மரணத்தை விரும்பும் தாரையை அமிருதத்திற்கு ஸமமான வார்த்தையால் துக்கத்தை மறக்கச் செய்தார்.

२५ सुग्रीवाऽऽद्यसुखार्णवेऽतिविततेतीरंविहत्याभितः
कालज्ञेनरघूत्तमेनकलशीपुत्रायितेनामुतः ।
सद्यस्तेविलयप्रदात्समवितास्तद्वाक्यतोवानराः
चक्रुः कर्मतदौर्ध्वदैहिकमतिप्राज्ञेप्सितंवालिनः ॥ ५६ ॥

“சுக்ரீவன் முதலியவர்களின் துக்கக் கடல் கரையை உடைத்துக்கொண்டு நான்குபுறமும் விருத்தியடைந்தபொழுது (அதைவற்றவைப்பதில்) அகஸ்தியர் போன்ற காலமறிந்த இராமனால் அழிவைக் கொடுக்கும் அக்கடலிலிருந்து காப்பாற்றப்பெற்ற வானரங்கள் வாலிக்கு அந்த இராமனுடைய உத்திரவால் வித்வான்கள் மிகவும் விரும்பும் மரணச் சடங்கை செய்தார்கள்.

२६ नग्रामंपुरमाविशेयमनघाद्वाक्याद्धनूमन्पितुः
वर्षेष्वद्यचतुर्दशस्विनसुतोराज्येऽम्बुभिस्सिच्यताम् ।
तारेयोऽपिसयौवराज्यउदकंप्राप्तेनिवृत्ते भृशम्
कालेऽस्मिन्नरिसूदनाययतभोरित्याहतंराघवः ॥ ५७ ॥

“ஹே ஹனுமானே! தோஷமற்ற பிதாவின் உத்திரவால் பதினான்கு வருஷங்களுக்குள் (அடங்கிய) இப்பொழுது கிராமத்திற்கும் நகரத்திற்கும் நான் வரமாட்டேன். சுக்ரீவனுக்கு மஹாராஜ பதவியிலும் அங்கதனுக்கு யுவராஜ (இளவரசன்) பதவியிலும் பட்டாபிஷேகம் செய்யவேண்டும். மழைபெற்ற (ஆவணி முதலிய நான்கு மாஸ) காலமும் நன்றாய் கழிந்ததும் சத்துரு ஸம்ஹாரத்திற்கு முயலவேண்டும்” என்று இராமன் ஆஞ்சனேயருக்கு ஆக்ஞைசெய்தார்.

सुग्रीवश्चिरकांक्षितंरघुपतेरादेशतोदुर्लभम्
राज्यंप्राप्यचिराऽऽत्तपुण्यचरितः कालेऽनुकूलेफलम् ।
तस्यैवाग्रजपुत्रमप्यतिगुणंतद्यौवराज्यंस्वयम
प्रापय्यप्लवगाभिवन्दितपदश्शक्रोयथाऽमोदत ॥ ५८ ॥

வெகுகாலமாக புண்ணியம் செய்தவன் அனுகூலமான காலத்தில் அதன் பலனை அடைவதுபோல் சுக்ரீவன் வெகு காலமாக விரும்பப் பெற்ற, கிடைப்பதற்கு அரிதான இராஜ்யத்தை இராமனுடைய உத்திரவால் அடைந்து மிகுந்த நற்குணம்பெற்ற அண்ணனுடைய புத்திரனை அங்கதனை அந்த யௌவராஜ்யத்தை தானே அடைவித்து வானரங்களால் திருவடிகளில் வணங்கப் பெற்று இந்திரன் போல் ஸந்தோஷமடைந்தான்.

२७ रामः प्रस्रवणंसमेत्यसगिरिं तस्याऽऽवसन्कन्दरम्
निर्वातंविततंतदन्तिकगतां स्वच्छोदकांवाहिनीम् ।
पश्यन्पक्षियुतैर्द्रुमैरभिवृतां विक्रान्तआसेवितः
भ्रात्राविक्रमसौहृदांबुनिधिना सिंहोऽस्यनन्दीद्यथा ॥

பலமுள்ள இராமன் பிரஸ்ரவண பர்வதத்தை அடைந்து காற்றில்லாததும் விஸ்தாரமுமான அதன் குஹையில் வஸித்துக் கொண்டு மலையின் ஸமீபத்திலிருக்கும், சுத்த ஜலம் பெற்றதும், பக்ஷிகளோடு கூடிய மரங்கள் சூழ்ந்ததுமான, நதியைப் பார்த்து பலத்திற்கும் அன்புக்கும் கடல் போன்ற தம்பியால் ஸேவிக்கப் பெற்றுசிங்கம் போல் ஸந்தோஷமடைந்தார்.

शैलेसंवसतांसुखस्यजनकेतास्मिन्स्थितोराघवः
रात्रौचिन्तितवल्लभोहिमकरंदृष्ट्वाऽप्यसौख्यंगतः ।
भ्रातुर्बुद्धिमतोगिराप्रकृतिजंधैर्यंत्वमुंचन्परम्
वांछन्नागममात्ममित्रशरदोत्वैषांममृष्यल्लक्ष्मी ॥ ६० ॥

இருப்பவர்களுக்கு இன்பமளிக்கும் பிரஸ்ரவண மலையில் இருக்கும் இராமன் இரவில் சந்திரனைப் பார்த்து மனைவியை நினைத்து துன்பமடைந்து புத்திபெற்ற இலக்ஷ்மணனுடைய மொழியால் இயற்கையால் இருக்கும் மிகுந்த தைரியத்தைவிடாமல் தன் ஸ்நேஹிதனை சுக்ரீவன் சரத்காலம் இவர்களின் வரவை விரும்பிக்கொண்டு பொருமைபெற்று வருஷாகாலத்தைப் பொருத்தார்.

२८ व्योमप्रेक्ष्यपयोधरैरभिवृतंविद्युत्समेतैर्दिशः
कुर्वाणैस्तिमिराऽऽवृताअविदिता विश्लेषिणां तर्जनैः ।
संयुक्तैरमितैश्चगर्जनरवैर्धाराऽभिषिक्तांमहीम्
वर्षाकालमुपाऽऽगतंरघुवरोमेनेसुहृन्मोदकः ॥ ६१ ॥

அன்பர்களை இன்பமடைவிக்கும் இராமன் மின்னல்களோடு கூடியதும் விரஹிகளை வேதனை அடையும்படி அதட்டும் அளவற்ற கர்ஜனை சப்தங்களோடு கூடியதும் இருள் சூழ்ந்து திசைகளை நிர்ணயம் செய்யமுடியாமலும் ஜலத்தின் தாரைகளால் பூமியை நனையும்படியும் செய்யும். மேகங்களால் ஆகாயம் சூழப்பட்டிருப்பதைப் பார்த்து வருஷாகாலம் வந்திருப்பதாக நினைத்தார்.

सीताऽन्वेषणशत्रुसंहणयोः कर्तव्ययोर्भूयसा
कालेनातिमहत्त्वमात्महृदयेकुर्वन्त्रघूणांवरः ।
हृष्टस्वाऽऽश्रितहर्षणेनरविजंराज्यंकपिंप्रापयन्
तस्यास्तोककृतज्ञतांचकलयन्वर्षामनैषीच्छनैः ॥ ६२ ॥

ஸீதையின் தேடுதல் சத்துருவின் ஸம்ஹாரம் இவைகள் அதிக நாட்களில் செய்யவேண்டியிருப்பதால் (அவைகளை) மிகவும் பெரிதாக மனதில் நினைத்து இராமன் தன்னை அண்டினவர்களின் ஸந்தோஷத்தால் ஸந்தோஷித்து சுக்ரீவனை இராஜ்யத்தை அடைவித்து அவனுடைய அளவற்ற நன்றியறிதலை நினைத்து வருஷாகாலத்தைமெதுவாகக் கழித்தார்.

२९ धर्मार्थौविसृजन्सदीप्सिततमौकामंत्वसत्सेवितम्
सुग्रीवोऽधिगतस्समीरणभुवासंस्मृत्यरामार्थकम् ।
आनेतुंस्वचमूंचपंचदशसुप्राप्तोनमांरात्रिषु
प्राणघ्नोऽस्तुसतस्यदण्डइतितंसेनेशमाज्ञापयत् ॥ ६३ ॥

ஸாதுக்கள் மிகவும் விரும்பும் "தர்மம் பொருள்" இவைகளை கைவிட்டு துஷ்டர்கள் விரும்பும் "காமத்தை" அடைந்த சுக்ரீவன் ஹனுமானால் இராமகாரியத்தை நினைத்து "பதினைந்து இரவுகளில் என்னிடம் வராதவனுக்கு பிராணனைக்கொல்லும் சிக்ஷை" என்று தன் ஸைனியங்களை அழைத்து வருவதற்காக ஸேனாபதிக்கு உத்திரவு செய்தான்.

३० वर्षामासचतुष्कमप्यपनयन्कृच्छ्रैर्महाद्रौगिरौ
रामस्स्वेप्सितकारिणींसशरदंदृष्ट्वाप्रहृष्टः कपेः ।
सुग्रीवस्यचिरादनागतिमपिस्मृत्वाप्रकोपोमदम्
तस्योन्मस्तकमाविधूतुमवदत्प्रेमाऽऽलयंलक्ष्मणम् ॥ ६४ ॥

வருஷாகாலம் நான்கு மாஸங்களையும் இராமன் பிரஸ்ரவண மலையில் மிகுந்த கஷ்டங்களால் கழித்து தன் விருப்பத்தைக் கொடுக்கும் சரத்காலத்தைப் பார்த்து ஸந்தோஷமடைந்து வெகு காலமாக சுக்ரீவன் வராமலிருப்பதை நினைத்து மிகுந்த கோபங் கொண்டு அவனுடைய அதிக மதத்தை விலக்குவதற்காக அன்புக்கு இருப்பிடமான தம்பி இலக்ஷ்மணனைப் பார்த்து கூறினார்.

वत्सभ्रातरवाप्यवानरपुरीं तद्वल्लभंराज्यगम्
मत्तंविस्मृतमित्रकार्यममतितंबोधयेर्मद्गिरा ।
वालीयेनगतः पथानविहतस्सोऽद्यापि दुर्वृत्ततः
माभूत्तेऽतिकुटुम्बिनोऽधिकसुखीमत्कार्यतस्याइति ॥

"குழந்தாய் ஹே தம்பி! வானரங்களின் நகரம் சென்று அவர்களின் அரசனும் இராஜ்யம் பெற்று மதங்கொண்டவனும் நன்பனுடைய நன்றியை மறந்தவனும் புத்தியற்றவனுமான சுக்ரீவனிடம், "வாலி சென்ற வழி இன்னும் அழியவில்லை. மிகவும் ஸம்ஸாரியான உனக்கு குற்றத்தால் அந்த துர்வழி வேண்டாம், எனக்கு உதவிசெய்து அதிக சுகம் பெறவேண்டும் என்று நான் சொன்னதாக அறிவிப்பாய்" என்று கூறினர்.

३१ सौमित्रिः कुपितस्स्वतोऽग्रजवचस्सन्धुक्षितक्रोधगः
सामैवार्कसुतेऽस्त्वितिप्रशमितक्रोधस्स्ववर्षीयसा ।
किंष्किन्धामधिगत्यवानरवृतां चापंदधद्भीषणम्
मांप्राप्तंवदमुक्तसत्यनृपताविन्त्याहतारासुतम् ॥ ६६ ॥

இயற்கையால் கோபம்பெற்ற லக்ஷ்மணன் அண்ணனுடைய வார்த்தையால் அளவற்ற கோபமடையும் பொழுது "சூரிய புத்திரனிடத்தில் ஸமாதான வார்த்தை மாத்திரம் இருக்கவேண்டும்" என்று தன்னுடைய அண்ணனால் கோபமடக்கப்பெற்று பயம் கொடுக்கும் வில்லை தரித்துக்கொண்டு வானரங்கள் சூழ்ந்த கிஷ்கிந்தாநகரம் சென்று "ஸத்தியம் கெட்ட அரசனிடம் நான் வந்திருப்பதைத் தெரிவிக்க வேண்டும்" என்று அங்கதனைப் பார்த்துக்கூறினன்.

सुग्रीवोऽङ्गदबोधितोऽपिविवशः पुष्पेषुनिद्रामदैः
जाग्रद्वानरभीतिजैः किलकिलाऽऽरावैर्विदन्मन्त्रिणोः ।
वाक्यैर्न्यायपथाच्युतैः कुशलदैः प्लक्षप्रभासाऽऽख्ययोः
संक्रुद्धस्यचलक्ष्मणस्यनगरेस्वस्याऽऽगतिंवेदताम् ॥ ६७॥

சுக்ரீவன் அங்கதனால் போதிக்கப்பெற்றும் காமம், தூக்கம், மதம் இவைகளால் பரவசமாயிருந்தும் குரங்குகளின் பயத்தாலுண்டான கிலகிலா சப்தங்களால் விழித்துக்கொண்டு நீதிமார்க்கம் தவராததும் சுகமளிக்கும், பிலக்ஷன், பிரபாஸன்" என்ற மந்திரிகளின் வார்த்தைகளால், இலக்ஷ்மணன் கோபமடைந்து தன் இராஜதானியில் வந்திருப்பதை அறிந்தான்.

३२ प्राप्तौप्रत्युपकारयोग्यशरदोनैवाऽऽगतस्त्वंमदात्
स्मृत्वेत्यार्यगिराऽऽगतोऽयमनुजस्तत्प्रीणनीमंजलिम् ।
कुर्वित्युक्तमबोधनेनझटितिप्राहर्षयत्सूर्यजम्
संत्रस्तंसकृतज्ञतंरघुपतौ धीमान्हनूमान्प्रभुम् ॥ ६८ ॥

"பதிலுபகாரத்திற்குத் தகுந்த சரத்காலம் வந்தும் மதத்தால் நீ வரவில்லை என்று நினைத்து அண்ணனுடைய உத்திரவால் தம்பி வந்திருக்கிறார். அவரை ஸந்தோஷமடைவிக்கும் நமஸ்காரத்தைச் செய்யவேண்டும்" என்று நற்புத்தியின் போதனத்தால், இராமனிடம் நன்றியறிவு பெற்றவனும் பயந்தவனுமான அரசனை புத்திசாலியான ஹனுமான் ஆனந்தமடைவித்தான்.

३३ दृष्ट्वेड्यानिगृहाणि वानरपुरेप्रीतस्सुमित्रासुतः
सुग्रीवस्यसमेत्यसौधममलंसप्तापिकक्ष्यास्तरन् ।
शृण्वन्नूपुरशिञ्जितानिसुदृशामेकान्तगोज्यास्वनं
संभ्रान्ताखिलमर्कटंबधिरयन्नष्टौ दिशस्सोऽकरोत् ॥६९॥

இலக்ஷ்மணன் கிஷ்கிந்தாபுரியில் துதிக்கத்தகுந்த வீடுகளைப் பார்த்து ஸந்தோஷமடைந்து சுக்ரீவனுடைய அழுக்கற்ற அரண்மனையை அடைந்து ஏழு கட்டுகளையும் தாண்டி பெண்களின் சிலம்பு சப்தங்களைக் கேட்டு தனிமையான இடத்தில் இருந்து கொண்டு எல்லா குரங்குகளையும் பயமடைவிக்கும் நாண் சப்தத்தை எட்டு திசைகளும் செவிடாகும்படி செய்தான்.

संत्रस्तेनकपीश्वरेणसुधियाताराऽपिसंप्रेषिता
मत्ताव्यंजितकामजेङ्गितशतासाऽसांत्वयद्राघवम् ।
नक्रोधस्स्वजनेविधेयइहतेसन्देशतः कामगे
सेनामानायितुंपुराऽप्यधिकृतादूतस्त्वइत्युक्तिभिः ॥ ७० ॥

பயந்தவனும் புத்திசாலியுமான சுக்ரீவனால் அனுப்பப்பெற்ற "தாரை" மதம் பெற்று காமத்தின் அநேக இங்கிதங்களை வெளிப்படுத்திக்கொண்டு இலக்ஷ்மணனைப்பார்த்து "தங்களின் உத்திரவால் காமத்தைக்கொண்டவனும் பந்துஜனமுமான சுக்ரீவனிடம் கோபம் கொள்ளக்கூடாது. ஸேனையை அழைத்துவரும்படி முன்னதாகவே அவன் தன் தூதனையும் அனுப்பி இருக்கிறான்" என்று வார்த்தைகளால் ஸமாதானம் செய்தாள்.

३४ स्त्रीणांवेश्ममहाऽऽर्हमप्यधिगतोरामानुजस्सत्वरः
तारऽऽहूतउपात्तविष्टरममुंपश्यन्वधूमध्यगम् ।
सुग्रीवंद्विगुणः क्रुधासमवदत्संचिन्तिताऽऽर्याहितः
मित्रध्रुङ्नृपतिः कृतघ्नइहनप्राप्नोतिवृद्धिंपराम् ॥ ७१ ॥

இலக்ஷ்மணன் தாரையால் அழைக்கப்பெற்று அதிக விலை பெற்ற அந்தப் புரத்தையும் வேகமாக அடைந்து பெண்களின் நடுவில் ஆஸனத்தில் அமர்ந்திருக்கும் சுக்ரீவனைப் பார்த்து அண்ணனுடைய துன்பத்தை நினைத்து இரண்டுபங்கு கோபம் பெற்று கூறினான். "சிநேஹிதனுக்குக் குற்றம் செய்தவனும் நன்றியறிவற்றவனுமான அரசன் இவ்வுலகத்தில் அதிக க்ஷேமமடையமாட்டான்."

रामेणाधिगतोदुरापनृपतिस्थानंभवान्व्यसरत्
सीतायाः परिमार्गणंशरादियत्कर्तव्यमाप्तोऽङ्गनाः ।
ब्रह्मघ्नस्यचनिष्कृतिर्विधिकृतानैषाकृतघ्नस्यते
वालीयेनगतः पथानविहतस्तंमाऽन्वगावानर ॥ ७२ ॥

"ஹே குரங்கே! அடைவதற்கு அரிதான அரசனுடைய ஆஸனத்தை அண்ணனால் அடைந்தும் நீ பெண்களுடன் கலந்து, சரத்காலத்தில் செய்யவேண்டிய ஸீதையின் தேடுதலை மறந்தாய். பிரம்மஹத்தி செய்தவனுக்கும் பிராயச்சித்தம் சாஸ்திரம் கூறுகிறது. நன்றியறிவற்றவனான உனக்கு கூறவில்லை. வாலி சென்றவழி அழியவில்லை. அதை நீ அடையவேண்டாம்."

३५ कोपंतस्यभयंकरंशमयितुंताराऽऽहरामानुजम्
रामस्योपकृतिंनविस्मरतिसक्रूरां गिरंनार्हति
कामस्तुप्रबलोऽखिलस्यनततोवेत्त्येषकालात्ययम्
नाऽऽवेद्यैवयथाऽर्थमण्वपिमहन्क्रुप्यन्तिनत्वादृशः ॥ ७३ ॥

பயமளிக்கும் இலக்ஷ்மணனுடைய கோபத்தைப் போக்குவதற்காக "தாரை" இலக்ஷ்மணனைப்பார்த்து கூறினாள். "சுக்ரீவன் இராமனுடைய உபகாரத்தை மறக்கவில்லை. அவன் கடும் சொற்களுக்குத் தகுதி இல்லை. எல்லோர்களுக்கும் காமம் மிகுதி ஆனதால் கால தாமஸத்தை இவன் அறியவில்லை. ஹே பெரியாரே! தங்கள் போன்றவர்கள் உண்மை தெரியாமல் கொஞ்சமும் கோபிக்கமாட்டார்கள்."

लंकामावसति द्विषद्दशमुखोयेनाऽऽहृताभूमिजा
निस्संख्यारजनीचरास्तदनुगाः कार्यस्तुतन्निग्रहः ।
रामेणान्वितसायकेनबलवान्नित्याहवालीसमाम्
त्वत्साहाय्यकृतेहरीन्हरिपतिर्वाञ्छन्चिरायत्यसौ ॥ ७४ ॥

"ஸீதையை அபஹரித்த இராவணன் இலங்கையில் இருக்கிறான். அவனுக்கு அதீனமான அரக்கர்கள் அளவற்றவர்கள். (1000000399600) லெக்ஷம்கோடியே மூன்றுலக்ஷத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து அறுநூறு. அம்புபெற்ற இராமன் அவர்களை அழிக்கவேண்டும்" என்று வாலி என்னிடம் சொன்னான் ஹே பலமுள்ளவனே! உனக்கு உதவி செய்வதற்காக சுக்ரீவன் குரங்குகளை விரும்பிக்கொண்டு தாமஸிக்கிறான்."

३६ रामस्याप्यतिमानुषामुपकृतिंतांनिग्रहीतुर्द्विपः
कर्तव्यत्वमथाऽऽत्मनोऽप्यनुगतस्सैन्यैस्सहोदीरयन् ।
सुग्रीवस्स्वकृतापराधसहनंसंप्रार्थयन्नादृतः
तेनप्रीतहृदाऽभ्यधायिपरुषागीः क्षम्यतांशोकजा ॥ ७५ ॥

"சத்துருவை ஸம்ஹரித்து மனிதர்கள் செய்யமுடியாத உதவியை இராமன் செய்ததையும் பிறகு ஸேனேகளோடு தானும் அவர் பின் செல்லவேண்டியதையும் சொல்லி சுக்ரீவன் தான் செய்த பிழைகளேப் பொறுக்கும்படி வேண்டும் பொழுது இலக்ஷ்மணன் மனங்களித்து "துக்கத்தால் கூறின கடுஞ்சொற்களேப் பொறுக்கவேண்டும்" என்று ஸந்தோஷமடையும்படி கூறினன்.

३७ आनेतुंहरिपुङ्गवानधिकृतेतत्स्वामिनावायुजे
दूतैः पूर्वनियोजितैर्हिमगिरिंप्राप्तैर्गृहीत्वैश्वरे ।
संभूतंयजनेमहागुणमपिस्फीतंस्वसंभाक्षितम्
प्राप्तास्त्वांहरयोनृपेतिवचसादत्तंसतुष्ट्याऽऽददे ॥ ७६ ॥

குரங்குகளே அழைத்து வரும்படி சுக்ரீவன் ஹனுமானுக்கு உத்திரவு செய்ததும் முன் அனுப்பப்பெற்ற தூதர்கள் ஹிமய மலையை அடைந்து அவ்விடத்தில் ஈசுவரனுடைய யாகத்தில் உண்டான நற்குணம்பெற்ற, தாங்களும் உண்ட மிகுந்த உணவுகளே எடுத்துக்கொண்டு "குரங்குகள் ஹே அரசே! உன்னிடம் வந்திருக்கிறார்கள்" என்று வார்த்தையோடு கொடுக்கும் உணவை அவ்வரசன் ஸந்தோஷமாய் அங்கீகரித்தான்.

३८ सुग्रीवोनृपलाञ्छनेनसविधंप्राप्तोनतोराघवम्
प्रीत्याबोधितनीतिमात्मपृतनासन्देशतोऽभ्यागता ।
भूमौदेवपथेविभोतववधूमन्विष्यचाऽऽनेष्यति
प्राप्तंमृत्युवशंनिहत्यसबलंतंशत्रुमित्यब्रवीत ॥ ७७ ॥

அரசர்களுக்குரிய அடையாளங்களோடு சுக்ரீவன் இராமனுடைய ஸமீபம் வந்து அன்பால் நீதியை போதிக்கும் அவரை வணங்கி அவரைப்பார்த்து "ஹே பிரபுவே! உத்திரவால் நேரில் வந்த என் ஸைன்யம் தங்களின் மனேவியை பூமியிலும் ஆகாயத்திலும் தேடிப்பார்த்து எமனுக்கு வசமான அந்தச் சத்துருவையும் ஸேனேயுடன் கொன்று தேவியை அழைத்துவரப் போகிறது" என்று கூறினன்.

३९ सूर्यस्याखिलभासकत्वमिवतेमित्रार्थसंसाधनम्
चित्रंनैवसखेसदेतिविनुतोरामेणहर्यग्रणीः ।
दृष्ट्वासूर्यनिरोधकंभुविरजस्सेनापदाऽऽघातजम्
सेनान्यस्स्वबलाऽऽवृतानुपगतान्संबोधयामासतम्॥ ७८ ॥

"ஸூரியன் எல்லோர்களுக்கும் பிரகாசம் கொடுப்பது போல் எப்பொழுதும் ஹே சிநேஹிதா ! நீ சிநேஹிதனுடைய காரியத்தை முடித்துவைப்பது ஆச்சர்யமில்லை" என்று இராமனால் ஸ்தோத்திரம் செய்யப்பெற்ற சுக்ரீவன் சூரியனை மறைக்கும் பூமியில் ஸைன்யங்களின் காலடியாலுண்டான தூளியைப் பார்த்து ஸேனாபதிகள் தங்களின் ஸைன்யங்களால் சூழப்பெற்று ஸமீபத்தில் வந்திருப்பதை இராமனிடம் தெரிவித்தான்.

४० आदेशंरघुनायकस्यशिरसास्वीकृत्यहर्युत्तमः
पूर्वस्थंविनतंसमादिशदिदंसेनाऽन्वितसैन्यपम् ।
सीतायत्रवसत्यरिर्दशमुखोदेशस्सविज्ञायताम्
आनेतुंचविनेतुमिन्द्रदिशिसागम्योदयस्याऽऽचलात् ॥

சுக்ரீவன். இராமனுடைய உத்திரவை தலையால் வஹித்து, முன்னாலிருக்கும் ஸைன்யங்களுடன் கூடிய "விநதன்" என்கிற ஸேனாபதியைப் பார்த்து, உத்தரவு செய்தான். "ஸீதையை அழைத்துவருவதற்கும் சத்துருவை சிக்ஷிப்பதற்கும் இருவர்களும் இருக்குமிடத்தை கிழக்கு திசையில் அறியவேண்டும்; அந்தத் திசையில் உதயபர்வதம் வரைப் போகலாம்"

आक्रान्तात्रिदशैस्तदूर्ध्वमत्रानिस्स्याद्दुष्प्रवेशेतरैः
नित्यंसन्तमसाऽऽवृतेतिसुवदन्मध्यस्थितंवैभवम् ।
पूर्तियांवदमुष्यसंभवतिसामासस्यतावच्चयः
नाऽऽगच्छेन्निकटं तदाऽस्यमृतिदोदण्डोऽस्त्वितिप्राब्रवीत्॥

"உதயபர்வதத்திற்கு அப்புறம் இருக்கும் பூமி தேவர்களால் ஆக்ரமிக்கப் பெற்றும் மற்றவர்கள் பிரவேசிக்க முடியாமலும் எப்பொழுதும் இருண்ட இருளால் சூழப்பெற்றிருக்கிறதென்று" நடுவில் இருக்கும் விசேஷங்களைக் கூறி "இந்தமாதம் முடிவதற்குள் என் சமீபத்தில் திரும்பி வராதவனுக்கு மரணம் கொடுக்கும் சிக்ஷை உண்டாகும்" என்று சுக்ரீவன் கூறினான்.

४१ सीताऽन्वेषणकामनोहरिपतिः प्रस्थापयामासतान्
विक्रान्तान्हनुमन्मुखान्यमदिशिक्षिप्रंविशेषंवदन् ।
मध्यस्थंचपरंमहेन्द्रगिरितोद्वीपस्सरक्षः पतेः
वासस्तत्रविचित्यतां सफलताचेत्सौख्यगस्सोऽस्त्विति ॥

சுக்ரீவன் ஸீதையைத் தேடவிரும்பி தெற்கு திசையில் நடுவில் இருக்கும் விசேஷங்களைக் கூறி "மஹேந்த்ர பர்வதத்திற்கு அப்புறம் இராவணன் வஸிக்கும் த்வீபம் அவ்விடம் ஸீதையைத் தேடவேண்டும். அதற்குப் பயன் கிடைத்தால் அவ்விதம் செய்தவன் சுகமடைவான்" என்று பலம் பெற்ற ஹனுமான் முதலிய வானரங்களைத் தெற்குதிக்கில் சீக்கிரம் அனுப்பினான்.

आलोकात्पितृवल्लभस्यसबलैर्गम्येयमाशाऽखिलैः
संवीतातिमिरैस्ततः परमियंभोक्तुंफलंकर्मणाम् ।
दुष्टानांयमकिङ्करैरधिगतास्त्रष्ट्राकृतादुर्गमा
हत्वागच्छतसत्वमातिक्रादितिप्रीतस्समाज्ञापयत् ॥

"பலமுள்ளவர்கள் எல்லோர்களும் தெற்கு திசையில் பிதுரு லோகம் வரை செல்லமுடியும். அதற்கப்புறம் இருள் சூழ்ந்து இருப்பதால் செல்லமுடியாமல் கடவுள் செய்திருக்கிறார். பாப கர்மாக்களின் பயனை அனுபவிக்கச் செய்வதற்காக எமகிங்கரர்கள் அவ்விடம் இருக்கிறார்கள். துன்பம் செய்யும் பிராணிகளைக்கொன்றுவிட்டுச் செல்லுங்கள்" என்று சுக்ரீவன் ஸந்தோஷமாய் உத்தரவு செய்தான்.

४२ सीताराक्षसवासमार्गणमनाः प्रत्याग्दिशंप्रापयत्
सुग्रीवस्संससुषेणकप्याधिपतीन्तत्ताद्विशेषंब्रुवन् ।
आस्थानंमहिमाऽऽस्पदंजलपतेर्दृश्यंतदस्ताचलात्
आगम्येतिततःपरंसतिमिरादुर्गाबलाऽऽढ्यैरपि ॥ ८३ ॥

சுக்ரீவன், "ஸீதை இராவணன் இவர்களின் இருப்பிடத்தைத் தேடுவதற்கு மனம்பெற்று மேற்குதிசையில் அந்தந்த விசேஷங்களேயும் பெருமைக்கு இருப்பிடமும் பார்க்கத்தகுந்ததுமான வருணனுடைய நகரத்தையும் மேற்குதிசையில் அஸ்தமன மலை வரை செல்லமுடியும்; அதற்கு அப்புறம் இருள் சூழ்ந்து இருப்பதால் பலம் பெற்றவர்களும் செல்லமுடியாது", என்று சொல்லி "சுஷேணன்" முதலிய வானர வீரர்களை மேற்கு திசையில் அனுப்பினன்.

४३ वैदेहीपरिमार्गणेशतबलिंदिश्युत्तरस्यांकपि
श्रेयानादिशदात्मसंमितबलं सेनेशमावेदयन् ।
मध्यस्थाचलनिम्नगाऽऽदिमहिमाऽऽसोमाचलात्साककुप
गम्याभूरिबलैस्ततःपरमियंदुर्गातमोगेतिच ॥ ८४ ॥

வானரர்களின் அரசனான சுக்ரீவன் "வடக்கு திசையில் ஸோமபர்வதம்வரை அதிக பலம் பெற்றவர்களும் செல்லலாம்; அதற்கு அப்புறம் இருளே அடைந்திருப்பதால் செல்லமுடியாது" என்றும் நடுவில் இருக்கும் மலை, ஆறு முதலியவைகளின் பெருமையையும் தனக்கு ஸமமான பலம்பெற்ற "சதபலி" என்ற ஸேனபதியிடம் தெரிவித்து ஸீதையைத் தேடும்படி உத்திரவு செய்தான்.

४४ वायोरात्मजमात्मवाञ्छितकृतौमत्वाप्रभुंप्रेयसः
वाक्येनामितचित्तवीर्यनिलयंरामस्स्मरन्तत्क्षणे ।
स्वाऽऽख्यामुद्रितमङ्गुलीयकमपिप्रेम्णाप्रदायानघा
सीताज्ञास्यतियेनतंनिजजनंद्रागित्यहृष्यद्भृशम् ॥ ८५ ॥

இராமன் தன் ஸ்நேஹிதனை சுக்ரீவனுடைய வார்த்தையால் ஹனுமானை அளவற்ற ஆச்சரியமான பலத்திற்கு இருப்பிடமாயும் தன் விருப்பத்தை பயன்பெறச் செய்வதில் திறமைப்பெற்றவனாகவும் நினைத்து அந்த ஸமயத்தில் குற்றமற்ற ஸீதை அந்த ஹனுமானை அன்போடு தன்பந்துவாக சீக்கிரம் அறியச்செய்யும், தன் பெயரால் முத்திரைசெய்யப்பெற்றதுமான மோதிரத்தையும் அந்த ஹனுமானிடம் கொடுத்து மிகவும் ஸந்தோஷமடைந்தார்.

४५ एवंभूमिसुतांविचेतुमनघामादिश्यदिक्ष्वाश्रितान्
रामः प्रस्रवणेजहर्षनिवसन्सुग्रीवआप्तमुदम् ।
तिष्ठन्तुप्रबलास्सुदूरमखिलाएकोहरिष्यामिताम्
भूपुत्रीमितिगर्जितानिरगमन्सर्वेततोवानराः ॥ ८६ ॥

இவ்விதம் குற்றமற்ற ஸீதையை திசைகளில் தேடும்படி வேலைக்காரர்களுக்கு உத்திரவுசெய்து சுக்ரீவன் ஸந்தோஷமடைந்தபொழுது இராமன் பிரஸ்ரவண மலையில் வஸித்துக்கொண்டு ஸந்தோஷமடைந்தார். "பலசாலிகள் எல்லோர்களும் வெகுதூரத்தில் இருக்கட்டும்; அந்த ஸீதையை நான் ஒருவன் கொண்டுவரப்போகிறேன்" என்று கர்ஜித்துக்கொண்டு எல்லா வானரங்களும் அவ்விடமிருந்து பிரயாணம் செய்தார்கள்.

४६ रामंप्राहसविस्मयंहरिपतिस्संवेदनेनक्षितेः
स्वस्याऽऽर्येणजिघांसुनाऽनुगतिनात्रस्तोऽभितोधावितः ।
संयुक्तस्सचिवैश्चतुर्भिरगतिर्धीमद्धनूमत्स्मृतम्
प्रापंभूधरमृश्यमूकमभयस्तत्रवालिदुर्गन्त्विति ॥ ८७ ॥

பூமியின் விசேஷங்களை அறிந்ததால் ஆச்சரியமடைந்த இராமனைப்பார்த்து சுக்ரீவன் "தன்னைக் கொல்ல விரும்பி பின் செல்லும் அண்ணனால் பயந்து நான்குபுறமும் ஓடும்படி செய்விக்கப்பெற்று கதியற்று நான்கு மந்திரிகளுடன் வாலி வரமுடியாதவிடமென்று புத்திபெற்ற ஹனுமான் நினைத்த ரிசியமூக மலையை நான் பயமில்லாமல் அடைந்தேன்" என்று கூறினான்.

४७ स्मृत्वावानरमुग्रशासनमथप्रत्यागतास्सैन्यपाः
निर्दिष्टेसमयेविहाययमदिग्यातान्समस्ताअपि ।
सुग्रीवायसराघवायविनतिंकृत्वाविदेहाऽऽत्मजाम्
स्वादृष्टांकथमप्यबाधितमतिंवाय्वात्मजंप्राब्रुवन् ॥ ८८ ॥

பிறகு சுக்ரீவனை கொடிய உத்திரவு பெற்றவனாக நினைத்து தெற்கு திசையில் சென்றவர்களைத் தவிர எல்லா ஸேனாதிபதிகளும் குறிப்பிட்டகாலத்தில் திரும்பிவந்து இராமனுடன் கூடிய சுக்ரீவன்பொருட்டு நமஸ்காரம் செய்து சிரமம் வஹித்தும், ஸீதையைத்தாங்கள் காணவில்லை என்றும் ஹனுமான் பயன் பெறுவதில் கெடுதலற்றபுத்தி பெற்றவனாகவும் கூறினார்கள்.

४८ गत्वादक्षिणदिश्यथैत्यगहनांविन्ध्येगुहांजानकीम्
अन्विष्याप्यकृतार्थकाअपभयाश्शप्तंवनंकण्डुना ।
निस्तोयंसमतीत्यरावणधियानक्तंचरंवालिनः
पुत्रेणाभिहतेतलेनकपयश्श्रान्तिंजहुस्तर्वधः ॥ ८९ ॥

பிறகு (ஹனுமான் முதலிய) வானரங்கள் தெற்குதிக்கில் சென்று பிரவேசிக்கமுடியாத விந்தியமலையின் குஹையை அடைந்து ஸீதையைத்தேடியும் பயனடையாமல் ஜலமில்லாமலிருக்கும்படி "கண்டு" முனி சபித்த காட்டைக்கடந்து பயமில்லாமல் இராக்ஷஸனை இராவணன் என்ற புத்தியால் அங்கதன் உள்ளங்கையால் அடித்ததும் மரத்தின் கீழே களைப்பை நீக்கினார்கள்.

४९. निर्विण्णाः क्षितिजामवीक्ष्याविचितांकालोऽतियातोनृप
प्रोक्तस्तीक्ष्णनिदेशकोहरिपतिस्सीतानदृष्टोरिपुः ।
निर्वेदस्तुननः क्षमोविचिनुमस्तौभूयइत्यादृताम्
तारयस्यागिरंनिशम्यकपयोहृष्टाव्यचिन्वन्पुनः ॥ ९० ॥

ஸீதையைத் தேடியும் காணுமல் வானரங்கள் ஒழிவுபெற்று "அரசன் கூறிய காலமோ சென்றது சுக்ரீவன் கடுமை உத்திரவு பெற்றவன், ஸீதையையும் சத்துருவையும் காணவில்லை. ஒழிவோ நமக்குத்தகுதியில்லை. அவ்விருவர்களையும் மறுபடியும் தேடுவோம்" என்று சொன்ன அங்கதனுடைய அன்புபெற்ற வார்த்தையைக்கேட்டு ஸந்தோஷமடைந்து மறுபடியும் தேடினுர்கள்.

५० विन्ध्याद्रेरभितोगुहामवनिजांतेमार्गयन्तः क्षुधा
संश्रान्ताश्वपिपासयात्रनगृहास्संचिन्त्यपाथोयुतम् ।
निर्गच्छत्पतगैस्तदृक्षबिलकंप्राप्तास्तमोव्यापृतम्
जग्मुर्योजनमन्तरंविमनसस्त्वन्योन्यमालिङ्गिताः ॥ ९१ ॥

வானரங்கள் விந்தியமலையின் குறையில் நான்குபுறமும் ஸீதையைத் தேடி பசியாலும் தாகத்தாலும் களைத்து வெளியில் வரும் பக்ஷிகளால் ஜலத்தோடுகூடி இருப்பதாக நினைத்து இருள் சூழ்ந்த "ருக்ஷபிலம்" என்ற குறையை அடைந்து ஒருவருக்கொருவர் கட்டிக்கொண்டு மனம்வருந்தி ஒருயோஜனை தூரம் உட்புறம் சென்றுர்கள்.

दूरेवीक्ष्यमहाप्रकाशममितान्मोदादुपेतेषुतम्
वस्तुप्रेमकरंहिरण्मयगृहंचित्राऽऽकरान्पादपान् ।
कांचिच्चीरमृगाजिनाम्बरधरांतेजोवतीन्तापसीम्
पश्यत्स्वागतविस्मयेषुकापिषुप्राज्ञोऽवदत्तांकपिः ॥ ९२ ॥

குரங்குகள் தூரத்தில் அதிக ஒளியைப்பார்த்து மிகுந்த ஸந்தோஷத்தால் அவ்விடம்சென்று ஆசைகொடுக்கும் பொருள்களையும் தங்கமயமான வீடுகளையும் ஆச்சரியத்திற்கு இருப்பிடமான மரங்களையும் மரைஉரி, மான்தோல் இவைகளை வஸ்திரமாக தரித்துக்கொண்டு தவம்செய்யும் ஒளிபெற்ற ஒரு மங்கையையும் பார்த்து ஆச்சரியமடைந்தபொழுது புத்திபெற்ற ஹனுமான் அவளைப்பார்த்து கூறினுர்.

५१ कैस्यतद्वनमुत्तमंवदमहाभागेक्षुधाऽऽर्तावयम्
प्रोक्तेत्याशुगसंभवेनमुदिताप्रत्याहतंतापसी ।
मायावान्समयोविरिञ्चिवरतोनिर्मायवेश्मेदशम्
सौख्येनन्यवसन्महेन्द्रनिहतोहेमारतोऽभूदथ ॥ ९३ ॥

"ஹே மிகுந்த பாக்கியம் பெற்றவளே! இந்த வனம் யாருடையது? சொல். நாங்கள் பசியால் வருந்துகிறோம்", என்று ஹனுமான் சொல்லும்பொழுது அந்த தவம் செய்யும் பெண் ஸந்தோஷமடைந்து ஆஞ்சனேயரைப் பார்த்து கூறினாள். மாயைபெற்ற "மயன்" என்ற அசுரன் பிரம்மாவின் வரத்தால் இவ்விதமான அரண்மனையை சிருஷ்டித்து சுகமாய் இருந்தான். பிறகு "ஹேமை" என்ற தேவப் பெண்ணினிடம் ஆசைபெற்று இந்திரனால் மறைந்தான்".

हेमायैविधिनाप्रदत्तमखिलंनृत्तेसुमत्यैभृशम्
तत्सख्यास्मिकृतावनाऽऽस्यसततंसावर्णिमेरोस्सुता ।
किंकर्तव्यमिहाऽऽगतिः कथमितिप्रोक्तान्कपीन्सक्षुधः
प्रीत्याभक्षयतिस्मपाययतिसाभोज्यानिपेयानि च ॥ ९४ ॥

"நர்த்தனத்தில் மிகவும் புத்திசாலியான ஹேமையின் பொருட்டு பிரம்மாவால் இது எல்லாம் கொடுக்கப்பெற்றது. அவளுடைய தோழியும் ஸாவர்ணிமேருவின் பெண்ணுமான நான் இதை எப்பொழுதும் காப்பாற்றுகிறேன். என்ன செய்ய வேண்டும்? இவ்விடத்தில் எவ்விதம் வந்தீர்கள்" என்று சொல்லி பசியோடுகூடிய குரங்குகளை அன்போடு உணவுகளை உண்ணும் படியும் குடிக்கத்தக்க பானங்களைக் குடிக்கும் படியும் செய்தாள்.

५२ प्राप्तोविक्रमदेहदार्ढ्यमामितंस्वायंप्रभाऽऽतिथ्यतः
मित्रैरन्वितआञ्जनेयइहतत्स्वीयाऽऽगतेः कारणम् ।
तांप्रीतेरधिवेदयन्नुपकृतिंसंचिन्तयन्वाञ्छितम्
ब्रूहीत्यर्थितयाऽभ्यधायिसतयाधर्मोमहान्मेऽस्त्विति ॥

ஹனுமான் சினேஹிதர்களோடுகூட அளவற்ற பலத்தையும் சரீரத்தின் திறமையையும் "சுவயப்பிரபையின்" விருந்தால் அடைந்து இவ்விடம் தங்களின் வரவின் காரணத்தை அன்போடு அவளிடம் தெரிவித்து அவளுடைய உதவியை நினைத்து விருப்பத்தைத் தெரிவிக்கும்படி வேண்டும்பொழுது அந்த பெண் "எனக்கு மிகுந்த தர்மம் இருக்கவேண்டும்" என்று பதில் உரைத்தாள்.

'५३ निर्दिष्टस्समयोयआत्मपतिनातस्यातिपातंप्रभोः
तीक्ष्णाऽऽज्ञत्वमुभेविचिन्त्यबिलतोद्राङ्निर्गमस्यार्थिनि ।
वातस्याऽऽत्मजआनिमीलितदृशस्तान्वानरान्विन्ध्यगान्
सन्दृष्टाम्बुनिधीन्विधायसुषिरंस्वंप्रापसातापसी ॥ ९६ ॥

"தங்களை வந்துசேரும்படி எஜமானன் குறிப்பிட்டகாலம் கழிந்ததையும் அரசன் கடுமை உத்திரவு பெற்றிருப்பதையும் இவ்விரண்டையும் ஹனுமான் நினைத்து குஹையிலிருந்து சீக்கிரம் வெளியில் செல்லவேண்டும்" என்று வேண்டும்பொழுது அந்த பெண், குரங்குகளைக் கண்களை மூடச்செய்து விந்தியமலையை அடைவித்து கடலைக் காணும்படியும் செய்து தன் குஹை சென்றாள்.

सुग्रीवस्यविचिन्त्यदण्डधरतामागस्विषुस्वात्ययम्
पुण्येवारिनिधेस्तटेऽधिकफलंनिश्चित्यवाल्यात्मजे ।
कर्तव्यंनिखिलान्प्रबोधयतिचेद्दासोबिलेऽर्थान्विते
सुग्रीवान्नतुराघवाद्भयमितिप्राहाथतारस्सुधीः ॥ ९७ ॥

"குற்றவாளிகளிடம் அரசன் கடும் சிக்ஷை செய்வதை நினைத்தும் புண்ணியமான கடற்கரையில் தங்களின் மரணம் மிகுந்த பயனளிக்கும் என்பதை உறுதிசெய்தும் அங்கதன் அக்காலம் செய்யவேண்டிய (பிராயோபவேசமென்ற உண்ணு விரதத்தை) எல்லோர்களுக்கும் அறிவிக்கும்பொழுது" பிறகு புத்திசாலியான "தாரன்" பொருள்களோடுகூடிய "ருக்ஷபிலம்" என்ற குஹையில் குடியிருந்தால் சுக்ரீவனிடமும் இராமனிடமும் பயமில்லை" என்று கூறினான்.

५४ तारस्योक्तममर्षयन्पवनजस्तद्वाक्यबद्धाऽऽदरान्
बुध्याऽऽलोच्यभविष्यदर्थमबुधान्ज्ञातीन्भृशंभेदयन् ।
सुग्रीवस्यगुणान्मृदूनितरदुर्लभ्यान्महाऽर्थाऽऽगतिम्
सौमित्रेश्शरविक्रमंस्वलघुतांप्राहाङ्गदंवेदयन् ॥ ९८ ॥

தாரன் கூறும் வார்த்தையைப் பொருக்காமல் ஹனுமான் வரப்போகிற காரியத்தை புத்தியால் அறிந்து, அதை அறியாமல் தாரன் சொல்லில் அன்புபெற்ற பந்துக்களை, மிகவும் பயமடைவித்து, மற்றவர்கள் அடையமுடியாத சுக்ரீவனுடைய நற்குணங்களையும் மிகுந்த பொருள்வரவையும் இலக்ஷ்மணனுடைய பாணத்தின் திறமையையும் தங்களின் பலக்குறைவையும் அங்கதனுக்கு அறிவித்துக்கூறினார்.

नूनंप्राप्तबलेनदुर्बलतमोनैवाऽऽचरेद्विग्रहम्
सौमित्रेरिषुभिर्मयस्यभवनंभिद्येतनोवाकथम् ।
अस्माभिस्तुसहाऽऽगतंहरिपतिस्त्वांराज्यआस्थापयेत्
त्वन्मातुः प्रियकृत्पितृव्यनिकटंगच्छाङ्गदाविक्लवः ॥

"பலம்பெற்றவனோடு பலமற்றவன் நிச்சயமாய் விரோதம் செய்யக்கூடாது. மயனுடைய வீடான ருக்ஷபிலமும் இலக்ஷ்மணனுடைய பாணங்களால் ஏன் பிளந்துபோகாது? ஹே அங்கதா! உன்னுடைய அன்னைக்கு இன்பம் செய்யும் வானரராஜன், எங்களுடன் திரும்பிவந்த உன்னை இராஜ்யத்தில் அரசனாகச் செய்வான். பயமற்றவனாய் சிறிய தந்தையின் ஸமீபம் வரவேண்டும்".

५५ आक्षिप्याक्षममाञ्जनेयवचनंसुग्रीवनिष्ठान्बहून्
दोषान्वालिसुतोवदन्कपिपुरस्तीरेमृतिंवारिधेः ।
मत्वाश्रेष्ठतमामशेतकुशगः प्रायोपवेशेरतः
शेषास्तंपरितस्तथाकृतधियः प्राहुर्मिथोनिर्भियः ॥ १०० ॥

வாலியின் புத்திரன் வானரங்களின் முன்னிலையில் தகுதியற்ற ஆஞ்சனேயருடைய ஆதரவு மொழியையும் ஆக்ஷேபித்து அந்த சுக்ரீவனிடம் இருக்கும் அநேக குற்றங்களைக்கூறி கடற்கரையில் இறப்பதை மிகவும் இழிவற்றதாக நினைத்து உண்ணுவிருதத்தில் விருப்பங்கொண்டு தர்ப்பங்களில் படுத்தான். மற்றவர்களும் அவ்விதம் புத்திகொண்டு அவனுக்கு நான்குபுறமும் அவ்விதம் படுத்தார்கள். பயமற்றவர்களாய் ஒருவருக்கொருவர் பேசினார்கள்.

रामस्याथवनाऽऽगतिंदशरथक्लेशंजनस्थानजम्
रक्षस्सङ्घजटायुषोश्चमरणंसीताहृतिंवालिनः ।
आघातंरघुनाथकोपममितांतांवानराणांभियम्
चान्योन्यंवदतांगिरिर्मुखरितश्शब्दैर्दिशांपारगैः ॥१०१॥

பிறகு இராமனுடைய வனவாஸத்தையும் தசரதருடைய மரணத்தையும் ஜனஸ்தானத்தில் அரக்கர் கூட்டமும் ஜடாயுவும் அழிந்ததையும் ஸீதையின் அபஹாரத்தையும் வாலிவதத்தையும் இராமனுடைய கோபத்தையும் வானரங்களின் அளவற்ற பிராணபயத்தையும் ஒருவருக்கொருவர் கூறும் குரங்குகளின், திசைகளின் கரைகடந்த சப்தங்களால் விந்தியமலை எதிர் ஒலிபெற்றது.

५६ निष्क्रान्तोगिरिगह्वराद्बहिरधोदृष्ट्वाशयानान्कपीन्
संपातिः परिभक्षितुंकृतमतिश्श्रृण्वन्जटायुर्वधम् ।
शैलादप्यवरोपयन्स्वमचिराद्भ्रातुर्विवित्सुःपरम्
रामेतस्यगुरौचसख्यमखिलंवक्तुंकपीन्प्रार्थयत् ॥ १०२॥

ஸம்பாதி விந்தியகிரியின் குஹையிலிருந்து வெளியில்வந்து கீழே படுத்திருக்கும் குரங்குகளைப்பார்த்து சாப்பிடவேண்டும் என்று புத்திகொண்டாலும், ஜடாயுவின் வதத்தைக்கேட்டு இராமனிடமும் அவருடைய தந்தையிடமும் இருக்கும் தம்பியின் மிகுந்த சினேஹத்தை அறியவிரும்பி தன்னை மலையிலிருந்து சீக்கிரம் இரக்கச்செய்து எல்லாவற்றையும் கூறும்படி வேண்டினது.

५७ शैलाग्रादवतार्यगृध्रमभयस्तारेयआहाथतम्
कान्तारेसहसीतयानिवसतिंरामस्यतांरक्षसा ।
तद्वध्वाहृतिमाहतिंखगपतेस्सुग्रीवराज्याऽऽगतिम्
वैदेहींपरिमार्गितुंचिरमिहप्राप्तिंनिजांदुस्स्थितिम् ॥ १०३॥

பிறகு "அங்கதன்" பயமில்லாமல் மலையின் நுனியிலிருந்து கழுகை இரக்கி, காட்டில் ஸீதையோடு இராமனுடைய வாஸத்தையும் இராவணனால் அவருடைய மனைவியின் அபஹாரத்தையும் ஜடாயுவின் மரணத்தையும் சுக்ரீவனுக்கு இராஜ்யத்தின் வரவையும் ஸீதையைத் தேடுவதற்காக இவ்விடம் வெகுகாலமாக தங்களின் வரவையும் துயரத்தையும் அந்த ஸம்பாதியிடம் தெரிவித்தான்.

५८ स्वीयंवीर्यमभीक्षितुंदिनकरंसंप्राप्तयोराववयोः
प्लुष्टाङ्गानुजरक्षकोनिरपतंनिर्दग्धपक्षोह्यधः ।
भ्रातुर्वैरविमोक्षणेनतुबलंनिष्पक्षवृद्धस्यमे
नूनंसांप्रतमित्युदीरितगिरंसंपातिमाहाङ्गदः ॥ १०४ ॥

"நாங்கள் இருவர்களும் எங்களுடைய பலத்தை பரீக்ஷிப்பதற்காக சூரியனிடம் செல்லும்பொழுது பொசுங்கின சரீரம் பெற்ற தம்பியைக் காப்பாற்றின நான் பொசுங்கின இறக்கைகளைப் பெற்று கீழே விழுந்தேன். இறக்கைகளை இழந்து கிழத்தனம்பெற்ற எனக்கு இப்பொழுது தம்பியின் துக்கத்தை விலக்குவதில் நிச்சயமாய் வலிமை இல்லை." என்று வார்த்தை சொன்ன ஸம்பாதியைப் பார்த்து அங்கதன் கூறினான்.

सीतायाअपिरक्षसोनिवसतिंगृध्राभिजानासिचेत्
आख्याहीतिसपृष्टआहजलधेर्लङ्कतरास्मिन्तटे ।
तस्यांस्तोजनकाऽऽत्मजातदहितौतल्लङ्घनेऽतित्वरम्
कर्तव्योऽस्तिमहानुपायइतितेवीराअहृष्यन्तदा ॥ १०५ ॥

ஹே கழுகே! "ஸீதை இராவணன் இவர்களின் இருப்பிடம் தெரிந்திருந்தால் சொல்லவேண்டும்" என்று வினவும்பொழுது

"ஸமுத்திரத்தின் அக்கரையில் இலங்கையும் அதில் ஸீதையும் அவளுடைய சத்ருவும் இருக்கிறார்கள். கடலைத் தாண்டுவதற்கு வெகு சீக்கிரம் பெரிய உபாயம் செய்யவேண்டும்," என்று ஸம்பாதி கூறினது. அம்பொழுது வானர வீரர்கள் ஸந்தோஷமடைந்தார்கள்.

गृद्धाणांगतिरम्बरेविरचितादैवेनसासप्तमी
तद्दूरस्थितदर्शनोजलनिधौभ्रात्रेप्रमीतप्रियम् ।
दित्साम्यंबुनिवापजंत्वितिगिरंसंपातिमानाय्यतम्
वार्धिंवानरपुङ्गवाः पुनरमुंस्वस्याऽऽस्पदंप्रापयन् ॥ १०६॥

நெல்லைத்தின்னும் சிட்டுக்குருவிகள் ஆகாயத்தில் பூமி ஸமீபத்திலும், காக்கைகள் அதற்கு மேல்படியிலும், நீர் காக்கை மூன்றாவது படியிலும், சியேனம் நான்காவது படியிலும், கிருத்ரம் ஐந்தாவது படியிலும், ஹம்ஸங்கள் ஆறாவது படியிலும் கருடன் ஏழாவது படியிலும் செல்கின்றன. கருடனுடைய அண்ணனான அருணனிடம் பிறந்த எங்களுக்கு ஏழாவது படியில் ஆகாயத்தில் ஸஞ்சாரத்தை தெய்வம் கொடுத்திருக்கிறது. ஆனதால் எனக்கு தூரத்தில் இருப்பதைப் பார்க்கமுடியும். பரலோகம் சென்றவர்களுக்குப் பிரியமளிக்கும் திலோதகத்தை ஸஹோதரனுக்கு ஸமுத்திரத்தில் கொடுக்க விரும்புகிறேன்" என்று சொல்லும் ஸம்பாதியை வானர வீரர்கள் கடலை அடைவித்து மறுபடியும் தன்னுடைய இருப்பிடத்தை அடைவித்தார்கள்.

५९ अद्रेः कन्दरमावसन्कथमिमांवेत्सिप्रवृत्तिंत्विति
प्राज्ञेजाम्बवतिप्रहर्षरचितप्रश्नेऽब्रवीद्गृद्ध्राट् ।
आहाराऽऽहरणस्सुतोऽधिजलधिद्योस्थस्समेतास्त्रियम्
सान्नाराक्षसआव्रजत्स्वयमितिप्रीत्यासुपार्श्वोऽवदत् ॥

"மலையின் குஹையில் இருக்கும் நீ இந்த ஸமாசாரத்தை எவ்விதம் அறிந்தாய்?" என்று புத்திசாலியான "ஜாம்பவான்" ஸந்தோஷமாக வினவும் பொழுது ஸம்பாதி கூறினான். "சுபார்

சுவன்" என்ற புத்திரன் ஸமுத்திரத்தில் ஆகாயத்திலிருந்து ஆஹாரங்களை கிரஹிக்கும் பொழுது இராக்ஷஸன் பெண்ணை கிரஹித்துக்கொண்டு தானாக ஸமாதானவார்த்தை கூறி சென்றான்" என்று ஸந்தோஷமாகச் சொன்னான்.

६० सूर्यप्लुष्टसुपक्षतौनगशिरःप्राप्तेऽपिषड्रात्रकम्
मुग्धेस्वस्मृतिमेत्यतन्निवसतिंकारुण्यवासंमुनिम् ।
प्राप्तेऽभ्यर्ह्यनिशाकरंसुशरणंस्वासिन्नवाच्युन्मुदा
तेनायंजनईदृशाविपदयेत्वांप्रापकस्मादिति ॥ १०८ ॥

நான் சூரியனால் பொசுக்கப்பெற்ற இறக்கைகளைப் பெற்று மலையின் நுணியை அடைந்தும் ஆறு இரவுவரை மூர்ச்சை பெற்று பிறகு தன்னுடைய நினைவைப்பெற்றுஅந்த மலையில் வஸிக்கும் பூஜிக்கத்தகுந்த, கருணைக்கு இருப்பிடமுமான "நிசாகர" முனியை சரணமடைந்ததும் மிகுந்த ஸந்தோஷம் பெற்ற முனிவர் என்னைப்பார்த்து, ஹே ஸம்பாதி! உனக்கு இவ்விதமான துன்பம் எவ்விதம் வந்தது?" என்று வினவினார்.

६१ वीराः प्रत्यवदंतपोनिधिममुंसभ्रातृकः खंप्लुतः
सङ्घर्षान्मिथआस्थितोमुनिपुरस्तूर्णंपणंभूगतान् ।
पश्यन्भूमिधरान्वनानिनगरंस्तोकानितंभास्करम्
गच्छन्तेनविदग्धपक्षतिरिहक्लिष्टोन्यपप्तंभृशम् ॥ १०९ ॥

"ஹே வீரர்களே! (கைலாஸவாஸிகளான) ரிஷிகளின் முன்னிலையில் "சூரியாஸ்தமனத்திற்குள் சூரியனிடம் போகிறது" என்றபந்தயம் செய்துகொண்டு நானும் ஸஹோதரனும் ஒருவருக்கொருவர் தோல்வி அடைவிக்க விருப்பத்தால் சீக்கிரம் ஆகாயத்தில் சென்று பூமியில் இருக்கும் மலைகளையும், வனங்களையும், பட்டணங்களையும் சிறிதாகப் பார்த்து சூரியனிடம் சென்று அவனால் பொசுக்கப்பெற்ற இறக்கைகளைப்பெற்று மிகவும் துன்பமடைந்து இவ்விடத்தில் விழுந்தேன்" என்று அந்த முனிவரைப்பார்த்து பதில் கூறினேன்.

६२ भ्रात्रापक्षबलेनहीनमवशंमांमर्तुकामंमुनिः
ध्यात्वाऽथक्षणमाहवानरगणारामाङ्गनाऽन्वेषकाः ।
एष्यन्त्यत्रविधायतान्नुपकृतेः प्रीतान्कृतेः प्राप्स्यासि
त्वंपक्षौप्रबलौव्रजामिसुरतांतिष्ठेतितच्चिन्तकः ॥ ११० ॥

ஸஹோதரனையும் இறக்கைகளின் திறமையையும் இழந்த நான் சரீர ஸ்வாதீனமில்லாமல் மரணமடைய விரும்பும்பொழுது பிறகு நிசாகர முனிவர் க்ஷணகாலம் தியானம்செய்து "இராமனுடைய மனைவியைத் தேடிக்கொண்டு இவ்விடம் வானரர்கள் வரப்போகிறார்கள், உதவிசெய்வதால் அவர்களை ஸந்தோஷமடைவித்து மிகவும் திறமைபெற்ற இறக்கைகளை நீ அடையப் போகிறாய். நான் விண்ணுலகத்திற்கு விஜயம் செய்கிறேன். அவர்களை நினைத்துக்கொண்டு நீ இருக்கவேண்டும்" என்று கூறினார்.

६३ वाञ्छन्तंसमयंमुनौसुरपदंप्राप्तेगतोऽद्रेश्शिरः
वोऽद्राक्षंकपिसत्तमाइतिगिरिप्राप्तेप्ररूढौपुनः ।
पक्षौसत्यवचोमुनेर्वचनतस्सिद्धिर्भवेद्वोऽचिरात्
इत्युड्डीनगतौखगेऽभिजितितेहृष्टाः पयोधिंययुः ॥१११॥

"நிசாகர முனிவர் அமரர்பதத்தில் அமர்ந்ததும் அவர் குறித்தகாலத்தை நான் விரும்பிக்கொண்டு மலையின் தலையை அடைந்து ஹே வானரத் தலைவர்களே! உங்களைக் கண்டேன்" என்று "ஸம்பாதி" கூறும் பொழுது மறுபடியும் முளைத்த இறக்கைகளைப்பெற்று "உண்மை மொழிபெற்ற அந்த முனிவருடைய உத்திரவால் உங்களுக்கும் காரியத்தின் பயன் சீக்கிரம் கிடைக்கும்" என்று ஆகாயத்தில் சென்றதும் அந்த இராம தூதர்கள் ஸந்தோஷமடைந்து 'அபிஜித்' என்ற முஹூர்த்தத்தில் ஸமுத்திரத்தை அடைந்தார்கள்.

६४ दृष्ट्वाऽम्भोनिधिमाततं जलचरैस्सत्वैस्तरङ्गैर्वृतम्
पश्यद्भीतिकरंविषादविवशांप्राहाङ्गदोवानरीम् ।
सेनांसागरलङ्घनेपटुतमः कोऽत्रास्तियोऽस्मान्भयात्
सन्त्रायेतमहत्तरान्नृपमतस्तंब्रूतमेभोरिति ॥ ११२ ॥

ஜலத்தில் இருக்கும் ஜந்துக்களாலும் அலைகளாலும் சூழப்பெற்று பார்ப்பவர்களுக்கு பயமளிக்கும் கடலைக்கண்டு துக்கத்திற்கு அதீனமான வானர ஸேனையைப்பார்த்து "அங்கதன்" "ஹே வீரர்களே! ஸமுத்திரத்தைத் தாண்டுவதில் அதிக திறமை பெற்றவனும் மிகுந்த பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறவனும் அரசனுக்கு அன்பனுமான எவன் இவ்விடத்தில் இருக்கிறான். அவனை எனக்கு அறிவிக்கவேண்டும்" என்று கூறினான்.

६५ अम्भोधेस्तरणेस्वशक्तिमहतामाभाषमाणेष्वथ
प्रख्यातेषुवलीमुखेष्वपटुषुप्राप्तुंशतंयोजनम् ।
पर्याप्तंमृतिशंसिनंयुवनृपंचाऽऽश्वासयन्जाम्बवान्
तिष्ठेतिप्रतिषिध्यकार्यघटनंसोऽचोदयद्वायुजम् ॥ ११३ ॥

ஸமுத்திரத்தைத் தாண்டுவதில் அழிவற்ற தங்களின் திறமையைச் சொல்லிக்கொண்டு புகழ்பெற்ற வானரங்களும் நூறுயோஜனை தூரம் போவதற்கு முடியாமலிருக்கும்பொழுது (அவ்வளவு போவதற்கு) சக்திபெற்றவனும் (திரும்பமுடியாமல்) மரணத்தைச்சொல்லும் இளவரசனை "ஜாம்பவான்" ஸமாதானம் செய்து "நிற்கவேண்டும்" என்று தடுத்து காரியத்தைச் செய்து முடிக்கும் ஹனுமானை ஏவினார்.

६६ एकान्तेस्थितआवहन्नतिबलंवायोस्सुतैतत्समम्
तूष्णींभूतउपेक्षसेकथमिमानस्मान्नृपाद्बिभ्यतः ।
शस्त्रैस्तेनमृतिः कृताविधिगिराशक्रार्पिताभीप्सितः
पाथोराशिमतीत्यरामदयितादर्शंभजास्मान्पुनः ॥ ११४॥

"ஹே வாயுமைந்தனே! நீ அதிக பலம் பெற்றும் மௌனமாய் இவர்களுக்கு ஸமமாய் தனிமையில் இருந்துகொண்டு அரசனிடம் பயந்த இந்த எங்களை ஏன் அலக்ஷியம் செய்கிறாய்? பிரம்மாவின் வரத்தால் உனக்கு அஸ்திரங்களால் அழிவு கிடையாது. இந்திரனால் விரும்பும்பொழுது அது கொடுக்கப்பெற்றிருக்கிறது. கடலைக்கடந்து ஸீதையைக் கண்டு மறுபடியும் எங்களை அடையவேண்டும்."

६७ इत्थंजम्बवदीडितस्सहनुमान्कृत्वाप्रवृद्धांतनुम्
स्वस्याब्धेश्शतयोजनस्यतरणेनैपुण्यमावेदयन् ।
मित्राणिप्रविहर्षयन्नभिमतस्वास्तोकवृद्धीनितत्
पाथोधेः प्रतितीर्षयाऽथबलवानारोहदैन्द्राचलम् ॥११५॥

இவ்விதம் ஜாம்பவானுல் ஸ்தோத்திரம் செய்யப்பெற்ற ஹனுமான் சரீரத்தை வளர்த்துக்கொண்டு நூறுயோஜனை தூரம் பெற்ற ஸமுத்திரத்தைத் தாண்டுவதில் திறமையைத் தெரிவித்து தன்னுடைய அதிக க்ஷேமத்தில் ஆவல்கொண்ட சிநேஹிதர்களே ஸந்தோஷமடைவித்து பிறகு ஸமுத்திரத்தைத் தாண்ட விருப்பத்தால் மஹேந்திர மலையில் ஏறினர்.

फलश्रुतिः

आपत्सन्तमसापहृत्यतिपटुप्राभाकराऽऽभायिते
सन्मैत्रीनिरवद्यवृष्टिविततेः कालाभ्रकालायिते ।
रामस्यायनआर्यसंस्तुततमेश्रीप्रापकेशृण्वताम्
किष्किन्धाचरितंसुखंमखभुजांकांक्ष्यंकरोत्यन्वहम् ॥११६

துன்பமாகிற இருண்ட இருளை விலக்குவதில் சூரியனுடைய ஒளிபோன்றதும் ஸாதுக்களின் சிநேஹமாகிற குற்றமற்ற மழைப்பெருக்குக்கு மழைகாலம் போன்றதும் பெரியோர்களால் மிகவும் ஸ்துதிக்கப்பெற்றதும் கேட்பவர்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுக்கும் சுந்தரராமாயணத்தில் கிஷ்கிந்தாகாண்டம் தேவர்களும் விரும்பும் சுகத்தை தினந்தோறும் கொடுக்கிறது.

प्रासूतजानकीयंसा सुब्रह्मण्यकुटुम्बिनी ।
तत्कृतेरामचरिते किष्किन्धैवमुदीरिता ॥ ११७ ॥

சுப்பிரமணியருடைய மனைவி ஜானகி ஈன்ற சுந்தரம் இயற்றிய சுந்தரராமாயணத்தில் இவ்விதம் கிஷ்கிந்தாகாண்டம் கூறப்பெற்றது.

கிஷ்கிந்தாகாண்டம் முற்றிற்று.

सुन्दररामायणे अथसुन्दरकाण्डः प्रारभ्यते

சுந்தர காண்டம்.

१ पौलस्त्येनसमाहृतांरघुपतेर्जायांदिदृक्षुः कपि
श्रेष्ठोदेवपथेनदक्षिणादिशंगन्तुंसकामोभृशम् ।
वर्षास्विववाहिनीसुमहतींवृद्धिंदधौतानवीम्
अब्धिलङ्घयितुस्सवीचिनिचयःसस्सस्याद्यथागोष्पदम् ॥ १ ॥

இராவணன் (ஆகாயமார்க்கமாக) அபஹரித்த இராமனுடைய மனைவியை ஹனுமான் பார்க்க விரும்பி தெற்கு திசையில் செல்லுவதற்கு மனங்கொண்டு அலைகளின் கூட்டத்தோடு கூடிய கடலும் தாண்டுகிறவனுக்கு மாட்டின் காலடியாக ஆகும்படி மிகவும் அதிகமான சரீரத்தின் வளர்ச்சியை வருஷா காலத்தில் நதிபோல் அடைந்தார்.

आक्रामत्प्रबलोलिलंघयिषयावार्धेर्महेन्द्राचलम्
श्रीमारुत्यतनुप्रतापमपट्वोढुंपृथिव्याअधः
सम्प्रापावनतिंतथाऽतिमहतींपूर्वंदिविस्पृग्गिरिः
पातालेऽप्यवकाशमेदातितनुंनैवप्रवेष्टुंयथा ॥ २ ॥

முன்காலத்தில் சுவர்க்கத்தைத்தொட்ட மஹேந்திர பர்வதமும் ஹனுமானுடைய அதிக பலத்தைப் பொருக்கமுடியாமல் பூமியின் கீழே பாதாளத்திலும் பிரவேசிப்பதற்கு கொஞ்சமிடத்தையும் அடையமுடியாமல் அதிக தணிவை அடையும்படி பலமுள்ள ஹனுமான் கடலைத்தாண்ட விருப்பத்தால் அந்த மலையை அமுக்கினார்.

शैलोऽप्यार्तरवं व्यमुंचदसकृत्सिंहैर्गतैः कन्दरम्
संक्रुद्धास्सविषा ददंशुरहयस्तं नैकधाऽदारयन् ।
देवानञ्जलिकृत्समीड्य मरुतस्सूनुः पुरस्थाऽऽननः
कुर्वन्रामहरिप्रियं सुरपथे द्रागुत्पपाताथ सः ॥ ३ ॥

குஹைகளில் இருக்கும் ஸிம்மங்களால் மஹேந்திர பர்வதம் தீன சப்தத்தை அடிக்கடி வெளியிட்டது. விஷத்தோடுகூடிய பாம்புகளும் அதிக கோபமடைந்து அம்மலையைக் கடித்தன. அம்மலையை அநேகம் துண்டுகளாக பிளக்கச்செய்தன. பிறகு வாயுபுத்திரன் கிழக்குமுகமாக தேவர்களைத் துதித்து இராமனுக்கும் வானரங்களுக்கும் நன்மை செய்வதற்காக சீக்கிரம் ஆகாயத்தில் உயரக்கிளம்பினார்.

रामप्रीतिविधित्सया प्रतपनो नैवातपन्मारुतिम्
गच्छन्तं दिवि निश्श्रमं सुखकरस्पर्शास्सिषेवे मरुत् ।
गन्धर्वा जगुरीडनीयचरितं वैमानिकास्तुष्टुवुः
यस्याऽऽतिथ्यकृतावचोदयदगं मैनाकमप्यम्बुधिः ॥ ४ ॥

அதிதிபூஜை செய்வதற்கு ஸமுத்ரராஜனும் மைநாககிரியை ஏவும்படி பெருமைபெற்று ஆகாயத்தில் களைப்பு இல்லாமல் ஹநுமான் செல்லும்பொழுது இராமனுக்கு நன்மைசெய்ய விரும்பி சூரியன் தபிக்கச் செய்யவில்லை. வாயு (காற்று) சுகம்கொடுக்கும்படி வீசிற்று. துதிக்கத் தகுந்த அவ்வீரனுடைய நடையை கந்தர்வர்கள் பாடினார்கள். தேவர்கள் துதித்தார்கள்.

अम्भोधिं ग्रसमानवत्स्वजवतो गच्छन्पुरस्थं नगम्
मत्वा विघ्नमधो निपात्य सहसा तत्प्रार्थनामाददत् ।
वाचाऽऽनन्दयदात्मतुष्टिकरणप्रीताद्धियं मोचयन्
शक्रादप्यमरस्तुतस्स हनुमान्तन्वितस्ततारम्बुधिम् ॥ ५ ॥

தேவர்களால் ஸ்தோத்ரம் செய்யப் பெற்ற அந்த ஹநுமான் தன் வேகத்தால் ஸமுத்திரத்தை ஸாப்பிடுகிறவன்போல் சென்று முன்னால் இருக்கும் மைநாக கிரியை இடையூராக

நினைத்து சீக்கிரம் அதைக் கீழே தள்ளி அதனுடைய வேண்டுதலைப் பெற்றுக்கொண்டு தனக்கு ஸந்தோஷம் செய்தலால் ஸந்தோஷமடைந்த இந்திரனிடமிருந்து பயத்தை, அதைவிடச் செய்து வார்த்தையால் அதை ஸந்தோஷமடைவித்தார். அக் கடலைக் கடந்தார்.

वीर्याऽऽलोकनकामनैः खसंदनै र्नागांबिकां चोदिताम्
व्यादायाऽऽननमात्मभक्षइतिचस्वंतर्जयन्तींहरिः ।
धीमान्सूक्ष्मतनुर्विगाह्यवदनं तस्यास्ततो निर्गतः
भेजेऽम्भोदवदम्बरं सविगताऽऽलम्बस्तयासन्नुतः ॥

பலத்தை பரீக்ஷிப்பதில் விருப்பம்பெற்ற தேவர்களால் ஏவப்பெற்று வாயைத்திறந்துகொண்டு எனக்கு ஆகாரம் என்று தன்னை அதட்டும் சுரஸையை புத்திசாலியான ஹனுமான் சிறு உருவத்துடன் அவளுடைய வாயில் பிரவேசித்து அதிலிருந்து வெளியில் வந்து அவளால் துதிக்கப்பெற்று பிடிப்பு இல்லாமல் மேகம்போல் ஆகாயத்தை அடைந்தார்.

वीर्यैस्वस्यगतेर्हते पवनजो वीक्ष्याभितोऽभीतिकः
छायाग्राहिकपीश्वरेणकथितंसत्वंविनिश्चित्यतत् ।
सूक्ष्माऽऽकारउपेत्यतन्मुखमथस्थूलोविभिन्दन्नखैः
वीरस्संहतसिंह्मिकोजलनिधेस्तीरंसएेदक्षिणम् ॥ ॥७॥

ஹனுமான் தன் நடையின் பலம் குறைந்திருக்கும்பொழுது பயமில்லாமல் நான்குபுறமும் பார்த்து நிழலைப்பிடிக்கும் சுக்ரீவன் சொன்ன பிராணியாக நினைத்து சிறு உருவம்பெற்று அதனுடைய வாயில் சென்று பெரிய உருவத்துடன் நகங்களால் அதைப் பிளந்து ஸிம்ஹிகையை ஸம்ஹரித்து வீரனாய் ஸமுத்திரத்தின் தென்கரைக்கு வந்தான்.

तत्रत्यं समवाप्यवायुतनयो वीरास्त्रिकूटाचलम्
दृष्ट्वातस्यशिरस्यपतेविविधगलानिस्सलंकापुरीम् ।

वापीरम्बुमतीरनोकहवृतं वीक्ष्यतदीयं वनम्
द्वारं प्राप्यतदुत्तरस्थमभयः कार्यंरहोऽचिन्तयत् ॥ ॥८॥

வீரனான ஹனுமான் களைப்பு இல்லாமல் அவ்விடத்திலிருக்கும் (மூன்று சிகரம்பெற்ற) திரிகூடமலையை அடைந்து அதனுடைய சிகரத்தில் இலங்கா நகரத்தையும் அதைச்சேர்ந்த ஜலம் பெற்ற நடைவாபி கிணறுகளையும் மரங்கள் சூழ்ந்து பார்ப்பதற்குத் தகுந்த அழகாயுள்ள நந்தவனங்களையும் பார்த்து அந்நகரத்தினுடைய வடக்குக் கோபுரவாயிலை அடைந்து பயமில்லாமல் ரஹஸ்யமாய் தன் காரியத்தை நினைத்தார்.

लंकासागरसंवृतादशमुखत्रातात्वजय्यासुरैः
किंकुर्युःकपिराघवाइहमहावीर्यारणेराक्षसाः ।
द्रष्टव्याजनकाऽऽत्मजानिशिमयासर्वैरदृष्टेनमे
वन्ध्यस्यान्नकथं श्रमोगुरुरितिद्राग्रात्रिमैच्छत्कपिः ॥९॥

"இலங்காபுரி, ஸமுத்திரத்தால் சூழப்பெற்றும் இராவணனால் காப்பாற்றப்பெற்றும் தேவர்களால் ஜயிக்க முடியாமலும் இருக்கிறது. இவ்விடத்தில் இராக்ஷஸர்கள் மிகுந்த பலசாலிகளாயிருப்பதால் குரங்குகளும் இராம லெக்ஷ்மணர்களும் என்ன செய்யமுடியும்? எல்லோர்களும் பார்க்காமல் இருக்கும்படி இரவில் நான் ஸீதையைத் தேடவேண்டும். என்னுடைய மிகுந்த சிரமம் வீணாகாமல் எவ்விதம் இருக்கும்?" என்று ஹனுமான் சீக்கிரம் இரவை விரும்பினார்.

३ दोषस्यापनुदः प्रदोषसमये लङ्कांविशन्मारुतिः
स्वामिन्यानगरस्यकस्त्वमितिसक्रोधात्तलेनाऽऽहतः ।
अन्वज्ञापितयास्वमुष्ट्याभिहतिप्रक्लिष्टयायैधसीम्
स्मृत्वावाचमुपद्रुतस्वजनतां स्वाभीप्सितं कर्विनि ॥१०॥

தோஷத்தை விலக்கும் ஹனுமான் பிரதோஷகாலத்தில் இலங்கையில் பிரவேசிக்கும் பொழுது அதன் எஜமானியான இலங்கிணியால் கோபத்தோடு உள்ளங்கையால் அடிக்கப்பெற்று தன் முஷ்டியின் அடியால் அதிக துன்பம் பெற்று தன் பந்து

ஜனங்களுக்குத் துன்பம் வந்ததைத் தெரிவிக்கும் பிரம்மாவின் வார்த்தையை நினைத்து "உன் விருப்பத்தைச்செய்" என்று அவளால் அனுமதிக்கப்பெற்றார்.

४ निश्शङ्कं निशितां निविश्यनगरीं रक्षःपतेरञ्जना
सूनुर्वेश्मविराजितं मणिगणैः पश्यन्निदेशाऽऽवहान् ।
निस्त्रिंशंदधतोऽप्यधीतनिगमान्वीरैश्चसंरक्षितम्
सर्वार्थाऽऽकरमाविवेशसुरभिं गन्धैस्तदन्तःपुरम् ॥ ॥११॥

அஞ்சனையின் புத்திரனான ஹனுமான் இரவில் பயமில்லாமல் இராவணனுடைய இராஜதானியில் பிரவேசித்து இரத்தினங்களின் கூட்டங்களால் விளங்கும் இராவணனுடைய அரண்மனையையும் கத்தியை தரித்தவர்களும் வேதாத்தியயனம் செய்யும் வேலைக்காரர்களையும் பார்த்து வீரர்களால் காப்பாற்றப்பெற்றதும் எல்லா பொருள்களுக்கும் இருப்பிடமும் வாஸனை திரவ்யங்களால் வாஸனை பெற்றதுமான அரக்கர்களின் அரசனுடைய அந்தப்புரத்தில் பிரவேசித்தார்.

५ व्योमालङ्करणेतुषारकिरणे मार्जाररूपंदधत्
मन्त्रीवानरनायकस्यसुदृशां निद्रांगतानांदृशः ।
पश्यन्नाभरणानिराक्षसपते रामाङ्गनाऽनीक्षणात्
दुःखोदन्वतिसागरस्यतरणेधीरोन्यमज्जद्भृशम्॥ ॥१२।

சந்திரன் ஆகாயத்தை அலங்கரித்திருக்கும்பொழுது வானர மன்னனுடைய மந்திரியான ஹனுமான் பூனையின் உருவம் பெற்று உறங்கும் இராவண மனைவிகளின் கண்களையும் ஆபரணங்களையும் பார்த்து இராம மனைவியைப்பார்க்காதலால் கடலைக்கடப்பதில் திறமை பெற்றும் துக்கக் கடலில் மிகவும் முழுகினார்,

६ रक्षोऽध्यक्षनिवेशनंमणिगणैः कीर्णंप्रहृष्टाङ्गनम्
वीरैरध्युषितंकलेनमुखरंनादेनवाद्यस्यच ।
लङ्काभूषणमाससादहनुमान्वेश्मप्रहस्ताऽऽदिम
न्यायामात्यविराजितंकुलिशभृद्वेश्मश्रियामास्पदम् ॥ १३॥

இரத்தின கூட்டங்களால் வியாபிக்கப்பெற்றதும் ஸந்தோஷம் பெற்ற பெண்களைப் பெற்றதும் வீரர்களால் வஸிக்கப் பெற்றதும் இனிமையான வாத்திய சப்தங்களால் சப்திக்கப் பெற்றதும் இலங்கைக்கு ஆபரணமான இராவணனுடைய அரண்மனையையும் தேவர்கள் தேவேந்திரன் இவர்களின் ஐசுவர்யங்களுக்கு இருப்பிடமான பிரஹஸ்தன் முதலிய நீதி மந்திரிகளின் வீடுகளையும் ஹனுமான் அடைந்தார்.

௭ अद्राक्षीद्दशकन्धरस्यसदने वालाऽऽयुधोभासुरे
रत्नैर्हैमनिवेशितैस्सुरुचिरं भूयोभिरालेख्यकैः ।
पुष्पाऽऽख्यंसुविमानमात्तसुकृतैरारूढमालोकितम्
यद्दृष्टुनपिविस्मयंनयनयोस्साफल्यमप्यानयेत् ॥ ॥१४॥

வாலை ஆயுதமாகப் பெற்ற ஹனுமான் சுவர்ணத்தில் இழைக்கப்பெற்ற இரத்தினங்களால் விளங்கும் இராவணனுடைய அரண்மனையில், அநேக சித்திரங்களால் அழகானதும் புண்ணிய சாலிகளால் ஏறப்பெற்றதும் பார்க்கப்பெற்று பார்ப்பவர்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தையும் கண்களின் பயனையுமடைவிக்கும் புஷ்பக விமானத்தைப்பார்த்தார்.

௮ यस्मिन्सर्जनपाटवं स्वमखिलंद्योतर्यधकिस्सोऽकरोत्
व्योमस्थंहृदयप्रियङ्करगतिस्फीतंदधानंजवम् ।
सन्दृश्यामिताचित्रकूटममितैःपुष्पैर्वृतं सन्तम्
यद्भूतानिवहन्तिकुण्डललसद्वक्त्राण्यसंख्यान्यपि ॥ १५ ॥

தேவ சில்பியான விசுவகர்மாவினுடைய சிருஷ்டித்தொழிலின் திறமை முழுவதும் விளங்கும்படி பெருமை பெற்றதும் ஆகாயத்தில் நின்று கொண்டும் மிகுந்த வேகம் பெற்றதும் மனதிற்கு இன்பமான நடை பெற்றதும் பார்க்கத்தகுந்த ஆச்சரியமான வெகு சிகரங்களைப் பெற்றதும் அளவற்ற புஷ்பங்கள் சூழ்ந்ததும் மிகவும் விரிந்ததும் குண்டலங்களால் விளங்கும் முகங்களைப்பெற்ற கணக்கற்ற பூதங்கள் சுமந்து கொண்டு இருக்கும் அவ்விமானத்தை ஹனுமான் பார்த்தார்.

९ ब्रह्माणंपरितोष्ययद्वरतपालेभेकुबेरस्ततः
तंशौर्येणविजित्यपङ्क्तिवदनोयत्स्वीयमेवाकृत ।
अभ्रस्पर्शिशिखंसुवर्णरचितैस्सोपानवातायनैः
युक्तंवेदिकयाविमानमभयोवर्ण्यध्यरुक्षत्कपिः ॥ ॥१६॥

உயர்ந்த தவம் பெற்ற குபேரன் பிரம்மாவை ஸந்தோஷமடைவித்து அவரிடமிருந்து பெற்றதும் இராவணன் பலத்தால் அந்த குபேரனை ஜயித்து தன்னைச்சேர்ந்ததாகவே செய்ததும் ஆகாயமளாவும் சிகரங்களைப்பெற்றதும் தங்கத்தால் செய்த படிகள் ஜன்னல்கள் மேடை இவைகளோடு கூடியதுமான புஷ்பக விமானத்தில் பிரம்மசாரியான ஹனுமான் பயமில்லாமல் ஏறினர்.

निष्पीताऽऽसवनिद्रितावरतनूः पश्यन्कपीरक्षसः
सुप्रीतारुचिराङ्गकारघुपतेर्दूतोविनाजानकीम् ।
हृष्येत्सचरितायदिक्षितिसुतारक्षोऽङ्गनावद्भवेत्
लङ्केशः कुशलीतदाहृतिकृतेनैवंसइत्यस्मरत् ॥ ॥१७॥

மத்யத்தைக்குடித்து உறங்கினவர்களும் மிகவும் ஸந்தோஷம் பெற்றவர்களும் அழகிய அவயவம் பெற்றவர்களுமான இராக்ஷஸ ஸ்திரீகளைப்பார்த்தவரும் ஸீதையைக்காணுதவருமான இராம தூதனை ஹனுமான் "நன்னடை பெற்ற ஸீதை இராக்ஷஸ பெண்கள் போல் ஸந்தோஷமடைந்தால் அன்னவளை அபஹரித்து வந்த இலங்கை வேந்தன் க்ஷேமமடைவான். அவ்விதமில்லாததால் அவனும் க்ஷேமமடைய மாட்டான்,, என்று நினைத்தார்.

१० तस्मिन्स्वास्तरणे महाऽर्घशयने रक्षोऽधिपंनिद्रितम्
कान्तास्तस्यतथानिरीक्ष्यपरितोवाद्यं करेबिभ्रतीः ।
तन्मध्येसुदृशं विभूषिततनुं मण्डोदरीं वानरः
निश्चिन्वन्रघुनायकप्रियतमां हर्षंजगामाधिकम् ॥

அவ்விமானத்தில் நல்ல விரிப்பைப்பெற்ற அதிக விலையுள்ள படுக்கையில் நித்திரை செய்யும் இராவணனையும் அவனுக்கு நான்கு புறமும் கையில் வாத்தியங்களைத்தரித்துக் கொண்டு உறங்கும் அவனுடைய மனைவிகளையும் அவர்களுக்கு நடுவில் நித்திரைபுரியும் அலங்காரமுள்ள சரீரம் பெற்ற மண்டோதரியையும் பார்த்து ஹனுமான் இராமனுடைய பாரியையாக நிச்சயித்து அதிக ஸந்தோஷமடைந்தார்.

११ नात्मानं परिमण्डयेत्सुचरितापत्याविवियुक्तात्वसौ
अन्येत्यात्तमतिस्सतासुमृगयत्रक्षोवधूषुद्रुतम् ।
विन्दन्नावनिजामघंपरवधूसन्दर्शनेनोत्थितं
नस्यान्मेनहिविक्रियातनुरितिप्रापस्त्यगारंपुनः ॥१९॥

"நன்னடை பெற்ற அந்த ஸீதை புருஷனை விட்டுப்பிரிந்து சரீரத்தை அலங்கரித்துக் கொள்ள மாட்டாள். இவள் வேறு பெண்" என்று புத்தி பெற்று ஹனுமான் அந்த ராக்ஷஸஸ்திரீகளில் ஸீதையை வேகமாய்த் தேடியும் அடையாமல் "எனக்கு விகாரம் கொஞ்சங்கூட இல்லாதபடியால் பரஸ்திரீகளைப்பார்த்த பாபம் வராது" என்று மறுபடியும் அந்தப்புரம் (பெண்களின் இருப்பிடம்) சென்றார்.

१२ अन्विष्यावनिजांकथंचिदाभितोनैवेक्षमाणःकपिः
निश्चिन्वन्विहतांनृपान्तिकगतिंबन्धूननिर्वेदतः ।
गच्छन्मारुतवाद्विशृङ्खलगतिश्चित्रक्षपावरिधाम्
वेश्मावेक्ष्यचनिष्फलं जलनिधेस्सन्तारमालोचत ॥२०॥

ஹனுமான் சிரமம் பெற்று நான்கு புறமும் ஸீதையைத் தேடியும் பார்க்காமலே அவளையும் அரசனுடைய ஸமீபத்தில் செல்லுதலையும் பந்துக்களையும் அழிந்ததுகளாக நிச்சயித்து ஆசை ஒழியாமல் காற்றுப்போல் தடையில்லாமல் சென்று சித்திரசாலைகளையும் சயனசாலைகளையும் (விளையாட்டு கிரஹங்களையும்) லதா கிருஹங்களையும் (கொடிகள் நிறைந்த வீடுகளையும்) பார்த்து சமுத்திரத்தின் தாண்டுதலை வீணாக நினைத்து ஆலோசித்தார்.

१३ सम्पातेर्वचनादिहव्याचिनवंनावेक्षिताजानकी
सोपेयाद्विवंशादशाऽऽस्यमबलाकिंपातितारक्षसा ।
भीतेनप्रबलाद्रघूत्तमशरादब्धौचाकिंभक्षिता
रक्षस्स्त्रीभिरबन्धुरार्तनिनदाक्वास्यार्यपुत्रेतिसा ॥५१॥

"ஸம்பாதியின் வார்த்தையால் இவ்விடத்தில் ஸீதையைத் தேடினேன். அவளைக்காணவில்லை. அவள் பலமில்லாமல் பரவசமாய் (பிறர்களுக்கு அதீனமாய்) இருந்து இராவணனைக்கூடி அடைந்தாளா? அதிக பலம் பெற்ற இராம பாணத்தினிடம் பயந்த இராவணனால் கடலில் தள்ளப்பெற்றாளா? உறவினர்கள் இல்லாமல் "ஹே! ஆர்ய புத்திரா! எங்கே யிருக்கிறாய் என்று அழுத ஸீதையை ராக்ஷஸப்பெண்கள் தின்றார்களா?"

गच्छेयंयदिवानराधिपपुरीं सीतामदृष्ट्वैवमे
व्यर्थंकर्मभवेत्सलक्ष्मणसखो रामोनहृष्येच्चिरम्
सर्वेभ्योव्यसनंप्रदातुमधुना नैष्यामिहव्याशनम्
प्राप्स्यामिज्वलितांचितामाधिगतोजीवामिभद्रेच्छया ॥२९॥

"ஸீதையைக் காணாமலே நான் கிஷ்கிந்தா நகரம் சென்றால் (ஸமுத்திரத்தின் தாண்டுதல் என்ற) என் காரியம் வீணாய் விடும். இலக்ஷ்மண சுக்ரீவர்களோடு கூடிய இராமன் வெகு காலம் ஸந்தோஷமடைய மாட்டார். எல்லோர்களுக்கும் துக்கத்தைக்கொடுப்பதற்காக இப்பொழுது நான் அவ்விடம் போகப் போகிறதில்லை. சிதையை (பிணத்தின் கீழ் இருக்கும் கட்டை) அடைந்து ஜ்வலிக்கும் அக்னியில் விழப்போகிறேன். க்ஷேமத்தை விரும்பி பிழைத்திருக்கிறேன்."

रामायोपहरामिवादशमुखंतंहान्मिवासानुगम्
लङ्कायांविचिनोमिवापुनरिमां यावल्लभेभूमिजाम् ।
आनीतोयदितामवीक्ष्यकुपितो धन्वीदहेद्राघवः
प्राप्स्यामिद्रुमगामशोकवनिकां देवादिशन्त्वीप्सितम् ॥

"இராவணனை இராமனிடம் நான் கொண்டு போகவா? அவனை பரிவாரங்களுடன் வதம் செய்யவா? ஸீதையையடையும் வரை இலங்கையில் மறுபடியும் தேடவா? இராமனை அழைத்துவந்தால் ஸீதையைக்காணாமல் கோபம்பெற்று வில்லைப் பெற்ற அவ்விராமன் பொசுக்கிவிடுவார். மரங்களை அடைந்த அசோகவனத்தை அடையப் போகிறேன். தேவர்கள் என் விருப்பத்தைக் கொடுக்கவேண்டும்".

१४ इत्यालोच्यकपिर्दशाऽऽननगृहात्प्राकारमस्याऽऽगतः
वृक्षानैक्षतपुष्पितान्द्विजगणान् संबोधयन्तद्गतान् ।
पुष्पाणिप्रविमोचयन्मणिमयीर्भूमीश्चरन्नम्बुमत्
वापीरम्बुधरोपमांक्षितिभृतंतत्स्यन्दिनीं वाहिनीम् ॥

ஹனுமான் இவ்விதம் ஆலோசித்து இராவணனுடைய அரண்மனையிலிருந்து அசோகவனத்தின் பிராகாரத்தில் குதித்து புஷ்பித்தமரங்களிலும் அதில் இருக்கும் பக்ஷிகளை விழிக்கச் செய்தும் புஷ்பங்களை விழச்செய்தும் இரத்தினமயமான பூமிகளிலும் ஜலம் பெற்ற நடைவாபிகளிலும் மேகத்திற்கு ஸமமான பர்வதத்திலும் அதிலிருந்துபெருகும் நதியிலும் ஸஞ்சரித்துக்கொண்டு அம்மரங்களைப் பார்த்தார்.

सौवर्णीमथशिंशुपां कपिवरः पश्यन्समारुह्यतां
किङ्किण्योघनिनादितां सकनकद्रुंवायुनाविजिताम्
सन्द्रक्ष्याम्यवनेस्सुतां वनरतांसन्ध्यांमुदोपासितुम्
नूनंसैष्यतिवाहिनीमितिमतीरामप्रियामैक्षत ॥ ॥२५॥

பிறகு ஹனுமான் தங்கமயமான சிம்சுபாமரத்தைப் பார்த்து சின்ன மணிகளின் கூட்டத்தால் சப்தம் பெற்றதும் தங்க மரங்களோடு கூடினதும் காற்றால் வீசப்பெற்றதுமான அந்த சிம்சுபாமரத்தில் ஏறி, "வனத்தில் ஆசைபெற்ற பூமியின் புதல்வியைப் பார்க்கப் போகிறேன். அவள் ஸந்தியா தேவியை உபாஸிப்பதற்காக ஸந்தோஷமாக நதிக்கு வரப்போகிறாள்." என்று புத்திபெற்று இராமனுடைய இன்பமனைவியைப் பார்த்தார்.

१५ सौन्दर्येणयदत्यशेतचवनेकौबेरदैवेश्वरे
प्राप्तानामपनीयदुःखममितंयद्धाति सत्याभिधम् ।
तस्मिन्नैक्षतमारुतिर्जनकजां रक्षोऽङ्गनासंवृताम्
तन्वीमप्युपवासतोऽतिमलिनां शुक्लाऽऽदिमेन्दुप्रभाम् ॥

அழகால் குபேரனுடைய (சைத்திரரதம் என்ற) இந்திரனுடைய (நந்தவனம் என்ற) உத்தியான வனங்களையும் பரிஹஸிக்கும் தன்மைபெற்றதும் தன்னை அடைந்தவர்களின் அளவற்ற துக்கத்தைவிலக்கி சுகத்தைக் கொடுப்பதால் (அசோகம் என்ற உண்மை பெயர்பெற்றதுமான அவ்வனத்தில், உபவாஸத்தால் இளைத்தும் அழுக்காடைபெற்றும் வளர்பிறை பிரதமை சந்திரனுடைய ஒளியைப் பெற்றவளும் இராக்ஷஸிகளால் சூழப் பெற்றவளுமான ஸீதையை ஹனுமான் பார்த்தார்.

दुःखाऽऽर्तां नयनाम्बुपूर्णवदनांत्यक्तप्रियामप्रियान्
याहन्तुंविदधातिभीतिजननीं वेणींचकृष्णाहिभाम् ।
सौख्यार्हांव्यसनानभिज्ञचरितांसीतेतितांतर्कयन्
रामोक्ताऽऽभरणानिशाखिविटपान्प्राप्तान्यपश्यत्कपिः ॥

துக்கத்தால் வருந்தினவளும் கண்ணீர் நிறைந்த முகம் பெற்றவளும் கணவனை விட்டுப் பிரிந்தவளும் பகைவர்களைக் கொல்லுவதற்காக கரும் நாகம்போல் பயமளிக்கும் பின்னலைப் பெற்றவளும் சுகத்திற்குத்தகுந்தவளும் துக்கமறியாத நடை பெற்றவளுமான பெண்ணை ஸீதை என்று ஊஹித்து இராமன் கூறிய ஆபரணங்கள் மரத்தின் கிளைகளில் இருப்பதை ஹனுமான் பார்த்தார்.

क्षौमाऽऽबद्धविभूषणान्यधिगिरिंक्षिप्तानितान्येतया
स्मृत्वैनांपरितापमेतिबहुधारामोऽपितंसाऽर्हति ।
दुष्कृत्यंसचकारयद्विरहितस्स्वांधारयत्याकृतिम्
शोकेनाविलयस्स्वयंप्रभुरितिद्राग्राममस्तौत्कपिः । २८ ॥

"பட்டு வஸ்திரத்தில் கட்டின ஆபரணங்களை பர்வதத்தில் இவள் போட்டாள். இவளை நினைத்து இராமனும் பலவிதமாக வருந்துகிறார். ஸீதை இராமனுக்குத் தகுந்தவள். இராமன் இவளைவிட்டுப் பிரிந்து துக்கத்தால் தானே அழியாமல் தன் சரீரத்தைத் தரித்திருப்பதால் செய்யமுடியாத செய்கையைச் செய்தார்" என்று ஹனுமான் இராமனை சீக்கிரம் துதித்தார்.

१६ रामंलक्ष्मणमाश्रिताऽऽर्तिशमनं याप्रापसीताऽपिसा
क्लिश्येच्चेद्दुरतिक्रमोऽधिकबलः कालस्स्वपत्युर्बलम् ।
विज्ञायातिशुचंनयातिदयितावाल्यादयस्संहृताः
सुग्रीवोनृपतिः कृतोजलनिधिर्येनाभवद्गोष्पदम् ॥ २९ ॥

வாலி முதலியவர்கள் அழியவும் சுக்ரீவன் அரசனாகவும் கடலும் மாட்டின் காலடியாகவும் செய்யும் திறமைபெற்றவரும் அண்டினவர்களின் துன்பத்தை விலக்கும் இராம லெக்ஷ்மணர்களை அடைந்த ஸீதையும் துன்பமடைந்தால் அதிக பலம் பெற்ற காலத்தை மீறமுடியாது. ஸீதையும் தன் புருஷனுடைய பலத்தை அறிந்ததால் அதிக துக்கமடையவில்லை."

लङ्केयंसमवापि राक्षसबलैर्गुप्तामयानिर्भिया
सीतायास्सकलंकलामपिगुणंनूनंत्विदंनाऽऽप्नुयात् ।
नैषापश्यतिराक्षसीः पुरइमानानोकहान्पुष्पिणः
भावेनैतिपतिंसदेतिहनुमान्नाश्रित्यवृक्षेऽवसत् ॥३०॥

("இராமனுடைய திறமையால்) இராக்ஷஸ ஸைனியங்கள் ரக்ஷிக்கும் இந்த இலங்காபுரியையும் நான் பயமில்லாமல் அடைந்தேன். இவ்வுலகமெல்லாம் ஸீதையின் பதினாறில் ஒரு பங்கைக் கூட அடையமுடியாது. நிச்சயம். இவள் முன்னால் இருக்கும் இராக்ஷஸிகளையும் புஷ்பித்த இந்த மரங்களையும் பார்க்கவில்லை. எப்பொழுதும் மனதால் கணவனை நினைக்கிறாள்" என்று நிச்சயித்து ஹனுமான் மரத்தில் வஸித்தார்.

१७ चन्द्रेव्योमविभासकेतमभितोवृक्षंकपिंशिंशुपाम्
पश्यन्राक्षसयोषितोऽतिविकृतामूर्तावधस्तस्यच

वैदेहीमनलङ्कृतामविमलां गात्रेऽम्बरेमूर्धजे
मुञ्चन्हर्षजमश्रुवान्दितरघुश्रेष्ठोऽभवत्संवृतः ॥ ३१ ॥

சந்திரன் ஆகாயத்தில் விளங்கும்பொழுது அந்த சிம்சுபா மரத்திற்கு நான்கு புறமும் சரீரத்தில் அதிக விகாரம் பெற்ற இராக்ஷஸப் பெண்களையும் அந்த மரத்தின் கீழே அலங்கார மில்லாமலும் சரீரம் வஸ்திரம் தலைமயிர் இவைகளில் அழுக்கைப் பெற்றவளுமான ஸீதையையும் ஹனுமான் பார்த்து இராமனை வணங்கி ஆனந்தக் கண்ணீரை சொரிந்து மறைந்து இருந்தார்.

१८ वैदेहीपरिमार्गकोऽनिलसुतश्शृण्वन्निशाऽन्तेकृतम्
रक्षोवेदरवंसुदृक्परिवृतंलङ्केश्वरंकामिनम् ।
दृष्ट्वोपान्तिकमागतंसनितरांतंसन्दिदृक्षुः पुनः
वृक्षाधोविटपेन्यलीयतमहापत्रेऽखिलैर्नेक्षितः ॥ ३२ ॥

ஸீதையைத்தேடும் வாயுபுத்திரன் விடியற்காலத்தில் இராக்ஷஸர்கள் கூறும் வேத சப்தத்தைக்கேட்டு பெண்களால் சூழப் பெற்று ஸமீபத்தில் வந்தகாமியான அந்த இராவணனை மறுபடியும் மிகவும் பார்க்கவிரும்பி எல்லோர்களும் பார்க்காமல் இருக்கும்படி அதிக இலைகளைப் பெற்ற மரத்தின் அடிக்கிளையில் மறைந்தார்.

१९ ऊरुभ्यामुदरंचबाहुलतयाप्रच्छाद्यवक्षोरुहौ
सन्त्रस्तामुपविष्टकम्पिततनुंसीतामथाऽऽत्मेक्षितेः ।
सद्रत्नाऽऽलयवासयोग्यवपुषंभूमेः परागैर्वृताम्
दुःखाऽऽर्तांस्ववधार्थिनींदशमुखः प्रापस्वयंदुर्भगः ॥ ३३ ॥

பிறகு இராவணன் துரதிருஷ்டம் பெற்று, தன் பார்வையால் பயந்து சரீரம் நடுங்கி உட்கார்ந்தவளும் துடைகளால் வயிற்றையும் கொடிபோன்ற கைகளால் ஸ்தனங்களையும் மறைத்துக்கொண்டு இருப்பவளும் உயர்ந்த இரத்தினங்கள் இழைத்த அரண்மனையில் வஸிப்பதற்குத் தகுந்த சரீரம்பெற்றும் பூமியின் தூளிகளால் சூழப்பெற்றவளும் துக்கத்தால் வருந்தி தன்னுடைய வதத்தை வேண்டுகிறவளுமான ஸீதையைத் தானாக அடைந்தான்.

२० वक्षोजोदरगूहनेनदयितेकिंमद्बिभेष्यञ्जसा
त्वामिच्छामिवराऽऽननेऽतिविभवंमांपश्यसीतेवरम् ।
भूशय्यांमलिनाम्बरोपवसती मुञ्चैकवेणीमिमाम्
राज्यंस्वीकुरुतेपतिर्नभवतीमीक्षेतकिंप्राप्स्यति ॥ ३४ ॥

"ஹே அன்பு நிறைந்தவளே! சீக்கிரம் ஸ்தனங்களேயும் வயிற்றையும் மறைத்துக்கொண்டு என்னிடம் ஏன் பயமடைகிருய்? அழகிய முகம் பெற்றவளே! உன்னை நான் விரும்புகிறேன். அதிக ஐசுவரியம் பெற்ற மேன்மைபெற்ற என்னைப் பார். ஹே ஸீதே! தரையில் படுக்கையையும் "அழுக்காடை" 'உபவாஸம்" (உண்ணுவிரதம்) இந்த (திரிக்காத) ஒரே பின்னல் இவைகளை விடவேண்டும் இராஜ்யத்தைப் பெறவேண்டும். உன்னை புருஷன் காணமாட்டான். உன்னை புருஷன் அடையப் போகிருஞ?"

२१ निर्लक्ष्मीकपतेर्निवर्तयमनस्स्पृक्ष्यामिनाकामुकीम्
अन्यस्त्रीविहृतिस्स्वधर्मइतिमेवैदेहि जानीहिभोः ।
लङ्केशाभिहितातृणंस्वपुरतः कृत्वाऽब्रवीत्साखलम्
साध्वीसद्गतिदायिनीपरवधूः प्राणाऽऽपदोदायिनी ॥३५॥

"ஹே ஜனகனுடைய பெண்ணே! ஐசுவரியமிழந்த புருஷனிடமிருந்து மனதைத் திருப்பவேண்டும். காமமற்றவளை நான் தொடப்போகிறதில்லை. பிறர் மனைவியிடம் விளையாடுதல் எனக்கு ஸ்வதர்மம் என்று அறிந்துகொள்ளவேண்டும்." (இவ்விதம்) இராவணனுல் கூறப்பெற்ற நற்கதிகொடுக்கும் பதிவிரதையும் பிராணபயம் கொடுக்கும் பிறர் மனைவியுமான ஸீதை துரும்பை தன் முன்னுல் வைத்து அந்த துஷ்டனுக்குப் பதில் கூறினுள்.

किंसन्तोऽत्रनसन्ति नानुसरसिप्राज्ञान्खलातेमतिः
दुष्टाऽऽचारगताऽऽश्रिताहितकृतेनाऽऽलम्बसेसन्मतिम् ।
शक्यालोभयितुंविभूषणधनैरामंत्रिनानेतरैः
अस्तिश्रेयसिवाञ्छितंयदिपतिंरक्षःपतेमित्रय ॥ ३६ ॥

"ஹே இராக்ஷஸ வேந்தனே! உன் புத்தி தோஷம்பெற்று விவேகமற்று துஷ்டநடை பெற்றிருப்பதால் இவ்விடத்தில் ஸாதுக்கள் இல்லையா? புத்திசாலிகளை நீ அநுஸரிக்கவில்லையா? அண்டினவர்களின் அழிவின் பொருட்டு நற்புத்தியை நீ அடைய வில்லையா? இராமனைத்தவிர மற்ற ஆபரணங்கள் பொருள்கள் இவைகளால் என்னைவசமடைவிக்க முடியாது. க்ஷேமத்தில் விருப் பமிருந்தால் புருஷனை சிநேஹம் செய்துகொள்ளவேண்டும்."

त्वत्तोमामपनेष्यतिप्रियतमोदीप्तांश्रियंकेशवः
दैत्येभ्योगुरुभिः क्रमैस्त्रिभिरिववत्वद्बलंविक्लव ।
रामस्यप्रबलानुजस्यचजनस्थानस्थरक्षोहरम्
वीर्यंदाशरथेर्नमोक्ष्यसइवस्थूलस्तरुस्सोऽशनेः ॥ ३७ ॥

"நாராயணன் பெரிய மூன்று காலடிகளால் அசுரர்களிட மிருந்து விளங்கும் ஐசுவரியத்தை அபஹரித்ததுபோல் என் புருஷன் என்னை உன்னிடமிருந்து அபஹரிக்கப் போகிறார். ஹே பயந்தவனே! உன் பலம் எங்கே? ஜனஸ்தானத்தில் இருந்த அரக்கர்களை அழித்த பலசாலியான தம்பியைப் பெற்ற இராமனுடைய பலம் எங்கே? பெரிய மரமும் வஜ்ராயுதத்தி லிருந்து விடுதலை அடையாமலிருப்பது போல் நீயும் இராமனிட மிருந்து விடுதலை அடையப்போகிறதில்லை."

२२ रामस्याङ्गनयाकठोरवचसासङ्गर्हितोरावणः
सीतांप्रत्यवदत्तवप्रतिगिरोयुक्तोवधोऽद्याबले ।
कामस्त्वय्यमितोरुणद्धिचरुषोवामस्तुमान्दण्डदात्
मासाभ्यांपरमिच्छयाविरहिता प्रातर्भवेर्मेऽशनम् ॥ ३८॥

இராமனுடைய மனைவியால் கடுஞ்சொற்களால் நிந்திக்கப் பெற்ற இராவணன், "ஹே பலமற்றவளே! இப்பொழுது உன்னு டைய பதிலுக்கு வதம் செய்தல் தகுதியாகும். உன்னிடமிருக் கும் அளவற்ற கெட்ட காமம் சிக்ஷை கொடுக்கும் கோபத்திலிரு ந்து என்னைத்தடுக்கிறது. இரண்டு மாஸங்களுக்குப் பிறகு நீ விருப்பமில்லாமலிருந்தால் எனக்கு காலை உணவாக இருப்பாய்" என்று ஸீதையைப்பார்த்து பதில் கூறினன்.

इत्युक्ताक्षितिजाऽऽहविंशतिभुजंचारित्रशौण्डीर्यगा
त्वन्निश्श्रेयसमिच्छतीहनजनोयस्त्वामघान्नारुणत् ।
नेत्रेऽनार्यकथंक्षितौनपातितेअद्यैवमद्दर्शने
रामान्मेहरणंविधिर्व्यरचयत्त्वांसंजिहीर्षन्बत ॥ ३९ ॥

இவ்விதம் சொல்லப்பெற்றவளும் பதிவிரதா தர்மத்தின் பலம் பெற்றவளுமான ஸீதை இருபது கைகளைப்பெற்ற இராவணனைப் பார்த்து "பாபகாரியத்திலிருந்து உன்னை இவ்விடத்தில் இருக்கும் ஜனங்கள் தடுக்காமலிருப்பதால் உன்னுடைய க்ஷேமத்தை அவர்கள் விரும்பவில்லை ஹே துஷ்டா! என்னைப் பார்க்கும் உன்னுடைய கண்கள் இப்பொழுதே ஏன் பூமியில் விழவில்லை? தெய்வம் உன்னைக்கொல்ல விரும்பி இராமனிடமிருந்து என்னை அபஹரிக்கச்செய்தது. கஷ்டம்!"

इत्युक्तिंसानिशम्यराघववधूप्रोक्तांदशाऽऽस्यः क्रुधा
हन्मित्वामितितर्जयन्नवनिजांवश्यांविधित्सुर्द्रुतम् ।
रक्षस्त्रीरपिसन्दिदेशमदनक्लिष्टस्तथाऽऽलिङ्गितः
प्रेयस्यानितरांप्रसादितउपैत्शुद्धान्तमप्रीतिमान् ॥ ४० ॥

இவ்விதம் இராமனுடைய மனைவி சொன்ன வார்த்தையை இராவணன் கேட்டு கோபத்தால் ஸீதையைப்பார்த்து "உன்னைக் கொல்லுகிறேன்" என்று பூமியின் புத்திரியை அதட்டி சீக்கிரம் அவளை வசம் செய்விக்க விரும்பி மன்மதனுல் வருந்தி இராக்ஷஸிகளிடம் அவ்விதம் (முன்சொன்னவிதம்) உத்திரவுசெய்தான். மனைவியால் ஆலிங்கனம் செய்யப்பெற்று மிகவும் ஸமாதானம் அடைவிக்கப்பெற்றும் மனம் வருந்தி அந்தப்புரம் அடைந்தான்.

२३ राक्षस्यःकुपिताः कठोरवचसस्तारावणस्यामितम्
वीर्यनिर्जितदेवराजममरैः प्रार्थ्यांश्रियंविश्रुताम् ।
वंशेविश्वसृजो विधूतदुरितेजन्मप्रजादुर्लभम्
भार्यात्वंप्रसमीडयभाग्यजानितंसीतामथाबोधयन् ॥ ४१ ॥

பிறகு இராக்ஷஸிகள் கோபமடைந்து கடுஞ்சொற்களால் இந்திரனை ஜயித்த இராவணனுடைய அளவற்ற பலத்தையும் தேவர்கள் வேண்டும் பிரஸித்திபெற்ற ஐசுவரியத்தையும் பாபமற்ற பிரம்மாவினுடைய வம்சத்தில் பிறப்பையும் ஜனங்களுக்குக் கிடைக்காததும் பாக்கியத்தால் கிடைத்ததுமான மனைவியாயிருத்தலைத் துதித்து ஸீதைக்கு அறிவித்தார்கள்.

२४ सीतेरावणमाश्रयस्वरमणंहस्तेवहन्तंश्रियम्
त्रैलोक्यस्यजहाहि निर्धनपतिमद्भाषणंसत्वरम्।
नाऽऽदद्यायदिशंसितस्वचरितात्वांभक्षयिष्यामहे
श्रुत्वाराक्षससुभ्रुवामितिगिरंपुत्रीरुरोदावनेः ॥ ४२ ॥

"ஹே ஸீதே! மூன்று உலகங்களின் ஐசுவரியத்தையும் கையில் தரித்துக்கொண்டிருக்கும் இராவணனை தன் புருஷனாக அடையவேண்டும். பொருளற்ற புருஷனை விடவேண்டும். தன் நன்னடையைத் துதித்துக்கொண்டு எங்களின் வார்த்தையை சீக்கிரம் அங்கீகரிக்காமல் இருந்தால் உன்னை சாப்பிடப்போகிறோம்" என்று இராக்ஷஸிகளின் வார்த்தையை ஸீதை கேட்டு அழுதாள்.

२५ रक्षस्त्रीभिरसौम्यवाग्भिरबलावित्रासितातर्जिता
वृत्तात्स्वस्यनविच्युताऽधिगमितादुःखंमहन्मैथिली !
आलम्ब्यातिसुमंत्वशोकविटपंनिध्यायभर्त्रादिकान्
नाकालेमृतिरत्रसेतिनितरांसाऽखिद्यतापस्पृहा ॥ ४६ ॥

பலமற்ற ஸீதை கடுஞ்சொற்களைப்பெற்ற இராக்ஷஸிகளால் பயமடைவிக்கப்பெற்றும் அதட்டப்பெற்றும் தன் நடையிலிருந்து நழுவாமலிருந்து அதிக துக்கம் அடைவிக்கப்பெற்று ஆசையற்று அதிக புஷ்பம்பெற்ற அசோக மரத்தின் கிளையைப் பிடித்து புருஷன் முதலியவர்களை நினைத்து "இவ்விடத்தில் அகாலத்தில் மரணம் இல்லை" என்று மிகவும் துக்கித்தாள்.

२६ मेदिन्यांवडवेवसाऽश्रुवदनासावेष्टमानामुहुः
सीताऽधोवदनाविनारघुपतिंदुःखान्विताप्रालपत्।

नस्पृक्ष्यामिनरावरंनिशिचरंवामाङ्घ्रिणावातनुम्
त्यक्ष्याम्यद्ययथेप्सितंकुरुतभोर्हन्याद्रिपूंश्राघवः ॥ ४४ ॥

ஸீதை முகத்தில் கண்ணீர் பெற்று பெண் குதிரைபோல் பூமியில் அடிக்கடி புரண்டு இராமனில்லாமல் துக்கித்து கீழ் முகமாய் புலம்பினாள். "மனிதர்களில் தாழ்ந்த இராக்ஷஸனை இடதுகாலாலாவது நான் தொடப்போகிறதில்லை. இப்பொழுது சரீரத்தை விடப்போகிறேன். ஹே இராக்ஷஸிகளே! இஷ்டம் போல் செய்யுங்கள் இராமன் சத்ருக்களைக் கொல்லுவான்."

सोऽप्यासीददयः किमात्मदुरिताद्योऽहन्जनस्थानगान्
सर्वान्दुर्हृदयान्विराधहरणः किन्नेतिभार्यांप्रियाम् ।
अत्रत्यांसतुमांनवेदखगतिर्मद्वर्तनज्ञोहतः
मद्वद्राक्षसकन्यकाप्रतिगृहंनूनंप्ररोदिष्यति ॥ ४५ ॥

"ஜனஸ்தானத்திலிருந்த எல்லா சத்ருக்களையும் வதம் செய்த விராதவிரோதியான இராமன் என்னுடைய பாபத்தால் தயவை இழந்தானோ? அவ்விராமன் அன்பு மனைவியை என் அடையவில்லை? நான் இவ்விடம் இருப்பதை அவர் அறியவில்லை. என்னுடைய இருப்பிடத்தைத் தெரிந்த பறவையும் மரித்தது. வீடுகள் தோறும் இராக்ஷஸப்பெண்கள் நிச்சயமாய் என்போல் அழுகப்போகிறார்கள்."

लङ्केयंभविताश्मशानसदृशीस्यांप्राप्तकामाद्रुतम्
येनादृश्यतदुर्निमित्तमतनुक्रूरानजानन्त्यघम् ।
रामंपश्यतियस्सधन्यजननस्तस्मा द्विनादुर्भगा
प्राप्ताराक्षसभूपतेरपिवशंत्यक्ष्याम्यसून्पापिनः ॥ ४६ ॥

"அதிக அபசகுனங்களைக் காணுகிறபடியால் இந்த இலங்கை மயானத்திற்கு ஸமமாக இருக்கப்போகிறது. நான் சீக்கிரம் விருப்பத்தைப் பெறப்போகிறேன். துஷ்டர்கள் பாபத்தை அறியவில்லை. புண்ணியம் செய்தவர்கள் இராமனைப் பார்க்கிறார்கள். நான் பாபம்பெற்று இராமனை விட்டு இராவணனுடைய அதீனமடைந்து பாபம்பெற்ற பிராணனையும் விடப் போகிறேன்."

२७ सीतायाअपसार्यराक्षसवधूस्स्वप्नार्थसंवर्णनात्
तत्पृष्टात्रिजटाऽभिधायचतुरास्वप्नेस्वदृष्टंभृशम् ।
शृण्वद्विस्मयदंदशाऽऽननवधंरामस्ययुद्धेजयम्
साम्राज्यंचविभीषणस्यभयतस्तां प्राऽऽर्थयद्राक्षितुम् ॥४७॥

புத்திசாலியான "திரிஜடை" ஸ்வப்ன ஸமாசாரத்தைத் தெரிவித்தலால் இராக்ஷஸிகளை ஸீதையிடமிருந்து விரட்டி அவர்களால் வினவப்பெற்று ஸ்வப்னத்தில் தான் கண்டதும் கேட்கிறவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் கொடுக்கும் இராவண வதத்தையும் யுத்தத்தில் ஸ்ரீ ராம ஜயத்தையும் விபீஷணனுடைய மகுடாபிஷேகத்தையும் சொல்லி பயத்திலிருந்து காப்பாற்றும்படி ஸீதையிடம் வேண்டச்செய்தாள்.

२८ स्याच्चेत्तथ्यमिदंमहाऽऽर्तितइमागोप्स्यामिनूनन्त्विति
ह्रीणाभर्तृजयश्रुतेर्जनकजा संस्मृत्यदुःखंमहत् ।
रक्षस्तर्जनतश्चिकीर्षितकृतंतद्भावदानेऽमनाः
निश्चित्याऽऽत्ममृतिंविनारघुपतेर्दृष्टिंबहुप्रालपत् ॥

"இது உண்மையாயிருந்தால் அதிக துன்பத்திலிருந்து நிச்சயமாய் இவர்களை ரக்ஷிக்கப்போகிறேன்" என்று ஸீதை புருஷனுடைய ஜயத்தைக்கேட்டதால் வெட்கமடைந்து இராக்ஷஸனுடைய அதட்டுதலாலும் அவன் செய்ய விரும்பின காரியத்தாலும் உண்டான அதிக துக்கத்தை நினைத்து அவனுடைய விருப்பத்தைக்கொடுப்பதில் மனமில்லாமல் இராமனுடைய தரிசனமில்லாதபோனால் தன் மரணத்தை நிச்சயித்து அதிகமாய் புலம்பினாள்.

छेत्स्यत्यद्यममाङ्गमप्यतिखलोव्यश्लेषयद्भर्तृतः
मांकालोमृगरूपभाक्त्वयिपतेप्रेम्णाविपद्याम्यहो ।
राज्यंप्राप्यच रंस्यसेवनितयासद्भाग्ययेत्यात्मनः
वेण्याऽऽबध्यजिहासयाकुसुमितांशाखांनगस्याऽऽययौ ॥

மிகவும் முட்டாளான இராக்ஷஸன் இப்பொழுது என்னு டைய அங்கங்களையும் வெட்டப்போகிருன். கஷ்டகாலம் மானின் உருவம்பெற்று என்னைப் புருஷனிடமிருந்து பிரியச் செய்தது. ஹே நாதா! உன்னிடம் அன்பால் நான் துன்ப மடைகிறேன். தாங்கள் இராயஜ்த்தையுமடைந்து நற்பாக்கியம் பெற்ற நாயகியோடு ஸந்தோஷமடையப்போகிறீர்கள். ஆச்சரி யம்!" என்று ஸீதை பின்னலால் தன்னைக் கட்டிக்கொண்டு உயிர்துறக்க விருப்பத்தால் புஷ்பித்த சிம்சுபா மரத்தின் கிளையை அடைந்தாள்.

२९ स्मृत्वास्वीयकुलंनिरस्तदुरितंसोढुंस्वदुःखंमहत्
क्लिष्टांमैथिलनन्दिनीमसुखयन्सद्योनिमित्तान्यपि ।
तस्यावाममराळपक्ष्मनयनं प्रास्पन्दतोरुस्तथा
रामोरक्षितुमग्रतास्स्थितइतिस्पष्टंसमाचष्टयत् ॥५०॥

பாபமற்ற தன் குலத்தை நினைத்தும் மிகுந்த தன் துக்கத் தைப் பொருப்பதற்கும் வருந்தும் ஸீதையை நற்சகுனங்கள் உடனே சுகமடைவித்தன. வளைந்த இமைமயிர்களின் கூட்டத் தால் சூழப்பெற்ற ஸீதையின் இடது கண்ணும், இடது தொடையும் இராமன் ரக்ஷிப்பதற்கு முன்னால் இருக்கிருர் என்று பிரகாசமாக சொல்லும்படி துடித்தன.

३० शृण्वन्सोऽन्तरचिन्तयत्त्रिजटयाप्रोक्तंवचस्सीतया
राक्षस्यामहताश्रमेणकपयोयांसंव्यचिन्वन्वने ।
सागूढंचरतारिपोरधिपुरंरामस्यकान्तामया
पुण्यैःपूर्वतनैरदर्शिनितरामाश्वासयिष्याम्यमूम् ॥ ५१ ॥

அந்த ஹனுமான் "திரிஜடை" "ஸீதை இராக்ஷஸிகள்" இவர் களின் வார்த்தையைக்கேட்டு மனதில் நினைத்தார். "வானரர்கள் அதிக சிரமத்தோடு காட்டில் தேடின இராம மனைவியை, சத்துருவின் நகரத்தில் மறைவாக நான் ஸஞ்சரித்து முற்பிறப்பில் செய்த புண்ணியங்களால் பார்த்தேன். இவளை மிகவும் ஸமா தானம் செய்யப்போகிறேன்."

गच्छेयंयदिराघवंसरभसंसीतामनाश्वास्यताम्
विन्दन्तीनंतुरक्षणंस्वयमसून्मुञ्चेदसौदुःखिता ।
आख्यास्यामियदिद्विजातिरिवतच्छ्रुत्वाभियासच्छलं
मत्वाराक्षसमाचरेत्प्ररुदितंरक्षस्समेयाद्बहु ॥ ५२ ॥

"அந்த ஸீதையை ஸமாதானம் செய்யாமல் நான் சீக்கிரம் இராமனிடம் சென்றால் அவள் துணை இல்லாமல் துக்கமடைந்து பிராணனைத் தானாக விடுவாள். பிராமணன்போல் நான் பேசினால் அதைக்கேட்டு பயத்தால் கபடம் பெற்ற இராக்ஷஸனாக நினைத்து பலமாக ரோதனம் செய்வாள். அதிக இராக்ஷஸர்கள் வருவார்கள்."

कुर्वन्तैः प्रबलैरणंयदिहतस्यामम्बुधिसन्तरन्
कोरामायवदेत्प्रियासुकुशलंधीरः प्रियप्रापकम् ।
हन्येतप्रभुकार्यमप्यविदुषोदोषान्नमेतत्कथम्
चेत्यालोच्यकपिर्मुदानिरचिनोत्तुष्येत्तुपत्यांतिसा ॥ ५३ ॥

"அதிக பலம்பெற்ற இராக்ஷஸர்களோடு யுத்தம் செய்து நான் மடிந்தால் எவன் தைரியமாய் ஸமுத்திரத்தைத்தாண்டி பிரியமான மனைவியின் க்ஷேமத்தை இராமனிடம் சொல்லுவான்? முட்டாளான வேலைக்காரனுடைய குற்றத்தால் எஜமானனுடைய காரியமும் நாசமடையும். அவ்வித குற்றம் எனக்கு எவ்விதம் வராமல் இருக்கும்?" என்று ஹனுமான் ஆலோசித்து "அந்த ஸீதை புருஷனால் ஸந்தோஷமடைவாள்" என்று ஸந்தோஷமாய் நிச்சயித்தார்.

२१ सीताप्रेमविधित्सयाश्रुतिसुखंप्रव्याहरन्मारुतिः
रामस्यार्ककुलेजनिंपितृगिराकान्तारवासंमुदा ।
दारस्याऽऽहरणंचराक्षसकृतंतन्मार्गणंवानरैः
तत्सन्दर्शनमद्यतीर्णजलधेस्स्वस्यैवतूष्णीमभूत् ॥ ५४ ॥

ஹனுமான் ஸீதைக்குப் பிரியம்செய்ய விரும்பி இராமனுடைய சூரியகுலத்தில் பிறப்பையும் பிதாவின் வார்த்தையால்

ஸந்தோஷமாய் வனவாஸத்தையும் இராக்ஷஸன் செய்த மனைவியின் அபஹாரத்தையும் வானரர்கள் அவளைத் தேடினதையும் தான் மாத்திரம் ஸமுத்திரத்தைத்தாண்டி இப்பொழுது அவளைப் பார்த்ததையும் காதுகளுக்கு இன்பமாகச் சொல்லி மௌனமாகஇருந்தார்.

३२ श्रुत्वैतांगिरमात्मनः प्रियकरीमुन्नम्यवक्त्रंमुहुः
सीतावीक्ष्यचाविस्मितास्मृतपतिस्साशिंशुपास्थंकपिम् ।
मत्वास्वप्नमिमंस्वभर्तृकुशलंसंप्रार्थयन्तीमुदा
स्वप्नाभावविनिश्चयेनतद्दतंस्यादित्यमर्त्याननौत् ॥ ५५ ॥

ஸீதை தனக்குப் பிரியமளிக்கும் இந்த வார்த்தையைக் கேட்டு ஆச்சரியமடைந்து முகத்தை உயரத்தூக்கி அடிக்கடி புருஷனை நினைத்துக்கொண்டு சிம்சுபாமரத்தில் இருக்கும் குரங்கைப்பார்த்து இதை ஸ்வப்பனமாக நினைத்துதன் புருஷனுடைய க்ஷேமத்தைவேண்டி “ஸ்வப்னம் இல்லை” என்பதை நிச்சயம் செய்து “அதுஉண்மையாகஇருக்கவேண்டும்” என்று ஸந்தோஷமாய்தெய்வங்களைத்துதித்தாள்.

३३ कात्वंदेव्यवलम्ब्यवृक्षविटपंतिष्ठस्यानिन्द्यैस्तुते
किंबाष्पाम्बुतवेक्षणाद्विसरतिप्राप्तश्शुचंकस्तव ।
सीतात्वंयदिभद्रमस्तुनितरामाचक्ष्वमेपृच्छतः
दैन्येनाप्यातिमानुषेणतपसामन्येतथेत्याहसः ॥ ५६ ॥

“நிந்திக்கத்தகாத பெரியோர்களால் ஸ்தோத்திரம் செய்யப் பெற்ற ஹே தேவீ! மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு நீ ஏன் நிற்கிறாய்? நீ யார்? உன் கண்களிலிருந்து கண்ணீர் ஏன் பெருகுகிறது? உன்னுடைய பந்துஜனம் யார் துக்கமடைந்தார்? நீ ஸீதையானால் வினவும் எனக்கு விடைகூறவேண்டும். மிகவும் க்ஷேமமுண்டாகும். மனிதர்களுக்குக் கிடைக்காத துக்கத்தாலும் தவத்தாலும் அவ்விதம் நான் நினைக்கிறேன்.” என்று ஹனுமான் சொன்னார்.

सीताप्रत्यवदत्कपिंदशरथज्येष्ठस्नुषाजानकी
वर्षान्द्वादशराघवस्यनिलयेभोगानभुञ्जीप्सितान् ।
कैकेयीकलुषान्तरङ्गनृपतेर्वश्यावनस्थावयम्
मांरक्षोऽपजहारमासयुगळेस्वप्राणमुक्ष्यामिति ॥ ५७ ॥

"நான் தசரதருடைய மூத்த மருமகள். ஜனகருடைய பெண். பனிரண்டு வருஷம்வரை இராமனுடைய அரண்மனையில் விரும்பின போகங்களை அனுபவித்தேன். கைகேயியால் கலங்கின மனம்பெற்ற அரசனுக்கு வசமாயிருந்து நாங்கள் காட்டில் இருந்தோம். என்னை இராக்ஷஸன் அபஹரித்தான். இரண்டு மாதங்களில் என் பிராணனை விடுவேன்", என்று ஸீதை ஹனுமானிடம் பதில் உரைத்தாள்.

३४ दूतोऽहंरघुनायकस्यकुशलीत्वांकौशलंसोऽब्रवीत्
भ्रातातस्यसखातथेतिवचनोदेवीमुपैन्मारुतिः ।
तंसीतापरिशंक्यरावणइतिस्वाऽऽनन्दनात्तांधियम्
मुक्त्वारामगुणानुकीर्तनविधौनुन्नस्तयासोऽवदत् ॥ ५८ ॥

"நான் இராமதூதன். இராமன் க்ஷேமம்பெற்று ஹே அம்மணி! உன் க்ஷேமத்தை வினவினர். அவருடைய ஸஹோதரனும், சினேஹிதனும் அவ்விதம் வினவினர்கள்." என்று சொல்லி ஹனுமான் ஸீதாதேவியின் ஸமீபம் அடைந்தார். ஸீதை அந்த ஹனுமானை இராவணன் என்று ஸந்தேஹித்து தன்னை ஸந்தோஷமடைவிப்பதால் அந்த துர்புத்தியை விலக்கி இராம குணங்களைக் கூறும்படி அவளால் ஏவப்பெற்று அவைகளைச் சொன்னர்.

३५ श्रुत्वारामगुणान्कपेस्सविशयाजानासिरामंकथम्
सौमित्रिंचतदङ्गलक्षणमपिब्रूहीतिसंचोदितः ।
सीतांतांसमतोषयत्कपिपतीरामंभृशंवर्णयन्
तत्सुग्रीवसखित्वमात्मनइहप्राप्तिंत्वदीक्षाऽर्थकाम् ॥५९॥

ஸீதை ஆஞ்சனேயரிடமிருந்து இராம குணங்களைக்கேட்டு ஸந்தேஹமடையும்பொழுது (ஹே வானரமே) "நீ இராம லக்ஷ்

மணர்களை எவ்விதம் அறிகிறாய்? அவர்களின் அங்கங்களின் லக்ஷணத்தையும் கூறவேண்டும்" என்று ஏவப்பெற்ற ஹனுமான் இராலக்ஷ்மணர்களை நன்றாய் வர்ணித்து அந்த சுக்ரீவ சிநேகத்தையும் இவ்விடம் தன் வரவையும் "ஹே தேவி! உன்னைப் பார்ப்பதற்காகவே" என்று கூறி அந்த ஸீதையை ஸந்தோஷமடைவித்தார்.

एतत्तेऽभिहितंसमस्तमपभीस्सुग्रीवसन्मान्त्रिणम्
दूतंदाशरथेर्हनूमदाभिधंमांविद्धचभिब्रूहिमाम् ।
गोकर्णंचगतस्यशम्बदितिजंहन्तुंसुराऽऽदेशतः
क्षेत्रेकेसरिणःप्रजातमनिलात्तत्सन्निभंविक्रमे ॥ ६० ॥

"(ஹே அம்மணி!) இதை எல்லாம் உனக்குச்சொன்னேன், தேவர்களின் (ரிஷிகளின்) உத்திரவால் (மால்யவான் என்ற பர்வதத்திலிருந்து) "சம்பஸாதனன்" என்ற அசுரனைக் கொல்லுவதற்காக கோகர்ண பர்வதம் சென்ற "கேஸரி" என்ற வானரத்தின் மனைவியிடம் வாயுவினிடமிருந்து பிறந்தவனும் பலத்தில் வாயுவிற்கு ஸமானமும் சுக்ரீவனுடைய முதல் மந்திரியும் இராமனுடைய தூதனும் "ஹனுமான்" என்று பெயர் பெற்றவனுமாக என்னை அறியவேண்டும். பயமில்லாமல் என்னிடம் பதில் கூறவேண்டும்."

३६ इत्युक्त्वाहनुमान्पुनर्दृढयितुंस्वस्मिन्चसत्प्रत्ययम्
रामाऽऽख्यायुतमङ्गुलीयकमिदंस्वीकुर्वितिप्राददात् ।
देव्यादायकरेणतत्प्रियकरंप्राप्तेवसद्यःपतिम्
सन्तुष्टाप्रशशंसतंवरमतिर्विक्रान्तइत्यादरात ॥ ६१ ॥

ஹனுமான் இவ்விதம் சொல்லி தன்னிடம் நல்ல எண்ணத்தையும் மறுபடியும் பலம் செய்வதற்காக "இராமனுடைய திருநாமம் பெற்ற இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று (ஸீதையிடம்) கொடுத்தார். தேவியும் பிரியமளிக்கும் அம்மோதிரத்தைக் கையால் பெற்று உடனே புருஷனை அடைந்தவள் போல் ஸந்தோஷமடைந்து அந்த ஹனுமானை "நற்புத்தி பெற்றவன் பலசாலி" என்று அன்போடு புகழ்ந்தாள்.

रामश्चेत्कुशलीकथंप्रकुपितश्शत्रून्नहन्त्युन्मदान्
इत्यापृष्टउदैरयत्पवनजस्सीतांभृशंहर्षयन् ।
नाजानात्तववल्लभस्स्थितिमिहत्वांचिन्तयन्निस्पृहः
गात्रेस्वस्यविदन्मदद्यभवतीमेष्यत्यरीन्संहरन् ॥ ६२ ॥

"இராமன் க்ஷேமமாயிருந்தால் அதிக கோபம் பெற்று மிகுந்த மதம்பெற்ற சத்துருக்களை ஏன் கொல்லவில்லை?" என்று வினவப்பெற்ற ஹனுமான் ஸீதையை மிகவும் ஸந்தோஷமடைவித்து "(ஹே அம்மணி!) இவ்விடத்தில் உன்னுடைய ஸ்திதியை புருஷன் அறியவில்லை. அவர் உன்னை நினைத்து சரீரத்தில் ஆசையற்றார். இப்பொழுது என்னிடமிருந்து உன்னை அறிந்து சத்துருக்களைக்கொன்று உன்னை அடையப்போகிறார்" என்று பதில் கூறினார்.

३७ श्रुत्वाराघवमात्मचिन्तकमतिक्लिष्टंकपेर्जानकीम्
दुःखंहर्षमुभेगताम्ममरिपूनुत्सार्ययुक्तोऽखिलैः ।
भर्तामान्नयतुस्वदेशमचिराद्यावन्नपूर्येततत्
मासस्यद्वयमित्युपात्तवचसंतामाहधीरःकपिः ॥ ६३॥

ஸீதை "தன்னை நினைத்துக்கொண்டு இராமன் அதிக துன்பமடைகிறார்" என்று ஹனுமாரிடமிருந்து கேட்டு சுகம் துக்கம் இரண்டையும் அடைந்து "இரண்டு மாதங்கள் நிறம்புவதற்குள் என் சத்துருக்களைக் கொன்று எல்லோர்களோடுகூட இராமன் என்னைத்தன் தேசத்திற்கு அழைத்துப்போகவேண்டும்" என்று சொல்லும் பொழுது தைரியம் பெற்ற ஹனுமான் பதில்உரைத்தார்.

त्वामद्यैववहन्नयामिसुभगेरामंसुतीर्णाम्बुधिः
रूपंपश्यममेतिभूमिधरवत्संवर्धमानाऽऽकृतिम् ।
दूतंसाप्रणयादुवाचमहिषीरामस्यहीयेततत्
शौर्यंमाममुतोनयेर्यदिपतिंमांप्रापयद्रागिति ॥ ६४ ॥

"ஹே பாக்கியவதி! நான் உன்னை சுமந்துகொண்டு ஸமுத்திரம் தாண்டி இப்பொழுதே இராமனிடம் சேர்க்கிறேன்

என்னுடைய உருவத்தைப்பார்" என்று மலைபோல் வளர்ந்த சரீரம் பெற்ற தூதனைப்பார்த்து "இவ்விடமிருந்து நீ என்னை அழைத்துச்சென்றால் இராமனுடைய அந்த பலம் குறைந்து விடும் சீக்கிரம் என்னை புருஷன் அடையும்படி செய்யவேண்டும்" என்று இராமனுடைய மனைவி அன்போடு பதில் கூறினாள்.

३८ सीतेत्वंयदभाषथा अधिगतात्वांस्यामधःपातिता
नस्पृक्ष्यामिनरान्तरंसहृदयादेवीतितत्तेक्षमम् ।
पत्न्यास्तस्यमहात्मनोवितरमेयेनप्रतीयात्प्रभुः
त्वद्दृष्टिंतदद: प्रबोधकमितिप्रोक्ताऽब्रवीत्साहरिम् ॥६५॥

"ஹே (வானர!) உன்னை நான் அடைந்தால் கீழே விழுந்து விடுவேன். நான் மனதோடு வேறு புருஷனைத் தொடப்போகிற தில்லை" என்று ஹே ஸீதாதேவி! உன் வார்த்தை பெருமை பெற்ற அந்த இராமனுடைய மனைவியான உனக்குத் தகுந்தது. உன் பார்வையை பிரபு நம்பும்படியான அடையாளத்தை எனக்குக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லப்பெற்ற ஜானகீ ஹனுமானைப் பார்த்து பதில் கூறினாள்.

चित्राग्रंगिरिमावयोश्चगतयोर्नाथत्वदङ्कस्थिताम्
मांकाकस्स्तनयोस्सुरेन्द्रतनयोयोमांमुखेनातुदत् ।
सुप्तोबोधितएवदुष्कृतकरंब्रह्मास्त्रतस्ताडयन्
हृत्वातस्यदृशंत्वपालयइतित्वंब्रूह्यभिज्ञामिमाम् ॥ ६६ ॥

"ஹே நாதா! நாம் இருவரும் சித்திரகூடமலையில் இருக்கும் பொழுது உன் மடியில் இருக்கும் என்னை தேவேந்திர புத்திரன் காகமாகவந்து முகத்தினால் ஸ்தனங்களில் துன்பம் செய்தான். நீ நித்திரைசெய்து விழித்துக்கொண்டதுமே பிரம்மாஸ்திரத்தால் அபராதம் செய்தவனை அடித்து அவனுடைய கண்ணைப் பிடுங்கிக்கொண்டுக் காப்பாற்றினாய் என்று இவ்வடையாளத்தைச் சொல்லவேண்டும்."

शत्रून्संहरपाहिमामसुहृदोनाथेत्यभीक्ष्णंवद
प्रेयांसंनतुमासतःपरमहंजीवेयमित्यावद ।

चूडारत्नमिदंप्रदेहिबलवन्रामाययेनप्रभुः
विश्वस्यांदितिवायुजायसमदात्सप्रत्यगृह्णान्मुदा ॥ ६७ ॥

"ஹே நாதா! சத்ருக்களை ஸம்ஹரிக்கவேண்டும். சத்துரு விடமிருந்து என்னை ரக்ஷிக்கவேண்டும் ஒரு மாதத்திற்கு அப்பால் நான் பிழைத்திருக்கமாட்டேன் என்று புருஷனிடம் அடிக்கடி கூறவேண்டும். பலம் பெற்ற ஹே ஹனுமானே! பிரபு நம்பும்படி இந்த சூடாமணியை அவரிடம் கொடுக்கவேண்டும்" என்று ஸீதை சூடாமணியை ஹனுமானிடம் கொடுத்தாள். ஆஞ்சனேயர் ஸந்தோஷமாய் அதைப் பெற்றுக்கொண்டார்.

२९. रामस्यान्तिकमेतुमुद्यतममुंनत्वाऽथसंप्रस्थितम्
सीताप्राहमहाकपेरघुवरौसुग्रीवमार्यान्कपीन् ।
प्रब्रूयाःकुशलंसपत्नजलधिमान्तारयप्रेयसा
वाराशिंचकथंतरेयुरबलाअन्येनरावानराः ॥ ६८ ॥

இராமனுடைய ஸமீபம் செல்லுவதற்கு முயற்சித்து நமஸ்கரித்து பிறகு பிரயாணம் செய்யும் ஹனுமானைப் பார்த்து "ஹே பெரிய வானரமே! இராம லெக்ஷ்மணர்களையும் சுக்ரீவனையும் வானரப்பெரியோர்களையும் க்ஷேமத்தை வினவவேண்டும் சத்துருக்களாகிற கடலை நாயகனால் தாண்டும்படி என்னை செய்யவேண்டும். பலமற்ற மனிதர்களும் குரங்குகளும் எவ்விதம் கடலைக் கடப்பார்கள்?."

सुग्रीवः कृतनिश्चयोऽतिबलवान्देवित्वदर्थेसखा
तत्सन्देशहरामहाऽऽकृतिधरास्सीदान्तिनैतेक्वचित् ।
सर्वेषामबलोऽहमेवसुमतेप्राप्तोऽत्रतेकिंपुनः
काकुत्स्थौममपृष्ठगौबलभृतौनिष्कण्टकावैष्यतः ॥ ६९ ॥

"ஹே தேவி! மிகவும் பலம்பெற்ற சினேஹிதனான சுக்ரீவன் உன்னை அழைத்து வருவதில் தீர்மானம் செய்திருக்கிறான். அவனுடைய உத்திரவைத் தலையால் வஹிக்கும் பெரிய உருவம் பெற்ற வானரங்கள் ஒருவிடத்திலும் துன்படைகிறதில்லை.

ஹே நற்புத்தி பெற்றவளே! எல்லோர்களுக்குள் பலமற்ற நானே இவ்விடம் வந்திருக்கிறேன். அவர்கள் வருவதில் கேட்க வேண்டுமா? பலம்பெற்ற இராமலக்ஷ்மணர்கள் என்முதுகில் ஏறிக்கொண்டு சத்துருக்களை வதைத்து வரப்போகிறார்கள்."

४० श्रुत्वावानरपुङ्गवस्यवचनंसाजानकीराघवम्
नाथंब्रूहिमनश्शिलामयतयामद्गण्डपार्श्वेत्वया ।
संजातंतिलकंस्मरप्रथमजेतास्मिन्प्रमृष्टेत्विति
प्राज्ञाज्ञापनवेदिनीकपिमतःप्रातिष्ठिपत्स्वाऽऽशिषा ॥

புத்திசாலியான ஸீதை ஹனுமானுடைய வார்த்தையைக் கேட்டு "முன்இருந்த திலகம் அழிந்தபொழுது என் கன்னத்தின் பக்கத்தில் நற்சங்கப்பொடியால் ஹே நாதா! நீ செய்த திலகத்தை நினைக்கவேண்டும் என்று இராமனிடம் சொல்ல வேண்டும்" என்று அடையாளம் தெரிவித்து ஹனுமானை தன் ஆசீர்வாதத்தோடு அவ்விடமிருந்து பிரயாணம் செய்வித்தாள்.

४१ विक्रान्तोऽपसृतोऽन्यतस्सहनुमान्ज्ञास्यन्बलंवैरिणः
दण्डंतत्रविधित्सुरेवसमरंवाञ्छन्परैर्नन्दनम् ।
कान्तारंमनसोदृशोरधिगतोभञ्जन्तरून्तद्गतान्
क्रीडावेश्मगिरीन्महातनुरभीरेकोऽगमत्तोरणम् ॥ ७१ ॥

பலம்பெற்ற ஹனுமான் வேறு இடம் சென்று சத்துருவின் பலத்தை அறியப்போகிறவராய் சத்துருவை சிக்ஷைசெய்ய விரும்பி சத்துருக்களோடு போர்செய்ய விரும்பியே, மனதிற்கும் கண்களுக்கும்சந்தோஷமளிக்கும்உத்தியானவனத்தை அடைந்து அதில் இருக்கும் மரங்களையும், விளையாட்டு வீடுகளையும், மலைகளையும் பெரிய உருவம்பெற்று பயமில்லாமல் ஒருவனாக ஒடித்து அதன் வெளிவாயிலை அடைந்தார்.

४२ श्रुत्वास्वप्रमदावनंकपिहृतंरक्षोवधूवक्त्रतः
लङ्केशोनिजिघृक्षुरात्मसदृशान्सप्राहिणोत्किङ्करान् ।
तान्सर्वान्हनुमान्प्रगृह्यपरिघंसन्ताड्यनिष्पातयन्
नामस्वस्यचकार्यमागमनजंप्राघोषयत्सर्वतः ॥ ७२ ॥

இலங்கை வேந்தன் தன்னுடைய நந்தவனம் குரங்கால் நாசமடைந்ததை • இராக்ஷஸிகளின் முகமாகக்கேட்டு சிக்ஷிக்க விரும்பி தனக்கு ஸமமான "கிங்கரர்கள்" என்கிற (எண்பதினாயிரம்) அரக்கர்களை அனுப்பினான். ஹனுமான் தோரணத்திலிருந்த "பரிகம்" என்ற நான்குபுறமிருப்பவர்களையும் கொல்லும் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் எல்லோர்களையும் அடித்து விழச்செய்து தன்னுடைய் பெயரையும் வந்தகாரியத்தையும் எல்லாவிடத்திலும் தெரிவித்தார்.

४३ स्वस्यास्तोकपराक्रमंप्रकटयन्नाप्लुत्यचैत्यंकपिः
प्रासादंपरिभेदयन्नतिगुरुंस्तंभंसमुत्पाटयन् ।
तत्रत्यंपरिघूर्णयन्परिदहन्तत्संभवेनाग्निना
निघ्नन्तत्परिपालकानतिबलान्सर्वान्क्रुधाऽभीषयत् ॥ ८३॥

ஹனுமான் தன்னுடைய மிகுந்த பலத்தை வெளியிட்டுக் கொண்டு பௌத்தாலயம் போன்ற உப்பரிகையில் குதித்துப் பிளக்கச்செய்து அதில் இருக்கும் மிகவும் பெரிய தூணைப்பிடுங்கிக் கொண்டு சுற்றி அதிலிருந்து உண்டான அக்கினியால் கொளுத்தி பலம்பெற்ற அதன் காவலாளிகள் எல்லோர்களையும் கோபத்தால் நாசம்செய்து பயமடைவித்தார்.

४४ रक्षोनाथनिदेशतोऽभ्युपगतंयोद्धुंप्रहस्ताऽऽत्मजम्
बाणैस्स्वप्रहितांशिलामपितरून्निर्भिद्यसंपीडकम् ।
भीमंतंपरिघंप्रगृह्यतरसासंभ्रामयन्वानरः
तेनाऽऽहत्यचजंबुमालिनमनुप्राप्तैरनैषीद्यमम् ॥ ७४ ॥

இராக்ஷஸ மன்னனுடைய உத்திரவால் போர் செய்வதற்கு ஸமீபத்தில் வந்து பாணங்களால் தான் அனுப்பிய பாறையையும் மரங்களையும் பிளந்து துன்பம்செய்யும் பிரஹஸ்தனுடைய புத்திரனை "ஜம்புமாலியை" ஹனுமான் பயங்கரமான அந்த "பரிகத்தை" எடுத்து பலமாகச் சுற்றி அதனால் அடித்து பின் வந்தவர்களோடுகூட எமனிடமனுப்பினார்.

४५ दृष्टान्पङ्क्तिमुखाऽऽज्ञयानिकटगान्योद्धुंहरिर्मन्त्रिणाम्
पुत्रान्सप्तचमोघयन्सतदिषून्व्योम्न्यभ्रवत्सञ्चरन् ।
पादैरप्यवधीत्तलेनकतिचिन्मुष्ट्याऽस्वयाऽदारयत्
क्रूराग्रैर्नखरैरथाश्वरथवहानस्त्रावयच्छोणितम् ॥ ७५ ॥

மதம் பெற்று யுத்தம் செய்வதற்கு இராவணனுடைய உத்திரவால் ஸமீபத்தில் வந்த "மந்திரி புத்திரர்கள்" ஏழுபேர்களையும் அவர்களின் அம்புகளையும் ஹனுமான் ஆகாயத்தில் மேகம்போல் ஸஞ்சரித்து வீணாக்கி சிலபேர்களைக் கால்களாலும் சிலபேர்களை உள்ளங்கைகளாலும் சிலபேர்களைத் தன் முஷ்டியாலும் கொன்றார். கூர்மை நுனிகளைப்பெற்ற நகங்களால் தேர்களையும் அதன் குதிரைகளையும் பிளந்தார். இரத்தத்தைப் பெருகச்செய்தார்.

४६ सन्दृष्टाःकपयः पुराऽपिशतशोवाल्यादयस्तद्बलम्
नैवंभीमतरंयथाऽयमहितस्संवर्धतेयोधने ।
स्वर्गस्थैर्विजितैर्मयाविरचितंभूतंकपिमूर्तिगम्
मन्येशिष्टतमित्यवाचिषततेभर्त्राचमूनायकाः ॥ ७६ ॥

"முன்காலத்தில் "வாலி" முதலிய வானரங்களைப் பார்த்திருக்கிறோம். இந்த சத்துரு, யுத்தத்தில் விருத்தி அடைவது போல் அவர்களின் பலம் இவ்விதம் பயமளிக்கவில்லை. என்னிடம் தோல்விபெற்ற தேவர்களால் சிருஷ்டிக்கப்பெற்று உருவத்துடன் வந்த பூதமாக அக்குரங்கை நினைக்கிறேன். அதை சிக்ஷிக்கவேண்டும்" என்று "ஸேனாபதிகள்" (ஐவர்கள்) எஜமானனால் கூறப்பெற்றார்கள்.

पश्चाऽऽस्येनसमेषुपंचसुहरिस्सस्यन्दनंदुर्धरम्
द्रागुत्पत्यसनिष्पतन्नुपरितंसालाऽऽहतेर्भेदयन् ।
यूपाक्षंचविरूपनेत्रमभयोहन्तिस्मागिर्यग्रतः
संक्रुद्धःप्रघसंसुरौघदमनंवीरश्चभासश्रुतिम् ॥ ७७ ॥

வீரனான ஹனுமான் அதிக கோபமடைந்து சிங்கத்திற்கு ஸமமான அவ்வைவர்களில் இரதத்தோடு கூடின "துர்தரனை"

சீக்கிரம் உயரக்கிளம்பி மேலே விழுந்தும் "யூபாக்ஷன், விருபாக்ஷன்" இவர்களைத் தேக்குமரத்தின் அடியாலும் தேவர்களின் கூட்டத்தை அடக்கும் "பிரகஸன்,பாஸகர்ணன்" இவர்களை மலையின் முடியாலும் பயமில்லாமல் பிளந்து வதைத்தார்.

४७ साश्वंस्यन्दनमेत्यराक्षसपतेरक्षंकुमारंरणम्
प्राप्तंमुक्तरथंविधायगगनात्तंपादयोर्वानरः
संगृह्णन्तरसाऽभिहत्यधरणौकुर्वन्प्रभग्नाङ्गकम्
रक्षोऽध्यक्षभयङ्करोजनलयेकल्पान्तगोऽभूद्यमः ॥ ७८ ॥

ஹனுமான் குதிரைகளோடு கூடிய இரதத்தில் ஏறிக்கொண்டு யுத்தகளத்தை அடைந்த இராக்ஷஸராஜனுடைய மைந்தனை அக்ஷகுமாரனைஇரதத்தை விடும்படிசெய்து ஆகாயத்திலிருந்து அவனைக்கால்களில் பிடித்து பலமாக பூமியில் அடித்து அங்கங்கள் ஒடியும்படிசெய்து இராவணனுக்கு பயம்கொடுத்து ஜனங்களின் அழிவில்பிரளயகாலத்தில் இருக்கும் எமன்போல் இருந்தார்.

४८ ब्रह्माऽऽराधनसंचितास्त्रनिचयोवीरोरणेरावणिः
निर्जित्यामरनाथमिन्द्रजिदितिप्राप्तोयथार्थाभिधाम् ।
निष्क्रान्तःपितुराज्ञयाभवनतोज्याशब्दतोहर्षयन्
दृष्ट्वावायुजमन्तरस्मरदमुंव्यर्थीकृतस्वेषुकम् ॥ ७९ ॥

பிரம்மாவின் ஆராதனத்தால் அஸ்திரக்கூட்டத்தை அடைந்தவனும் யுத்தத்தில் இந்திரனை ஜயித்து "இந்திரஜித்" என்று பெயர்பெற்ற வீரனுமான இராவணனுடைய புத்திரன் தந்தையின் உத்திரவால் அரண்மனையிலிருந்து பிரயாணம்செய்து நாணின் சப்தத்தால் (சத்ருவையும்) ஸந்தோஷமடைவித்து தன் பாணங்களை வீணாக்கும் வாயுபுத்திரனைப் பார்த்து மனதில் நினைத்தான்.

धीमान्शत्रुरवध्यएषइतिसस्मृत्वाऽस्यसान्निग्रहम्
ब्रह्मास्त्रेणभृशंनिबद्ध्यपतितंनिश्चेष्टितंराक्षसैः ।
आबद्धंशणवल्कलैश्चगळितंविध्यस्त्रतस्तंविदन्
भीतश्शीघ्रमुपानयत्स्वपितरंलङ्केशसूनुःकपिम् ॥ ८० ॥

"புத்திசாலியான இந்த சத்துருவைக் கொல்லமுடியாது. பிரம்மாஸ்திரத்தால் இவனைக் கட்டவேண்டும்" என்று இலங்கை வேந்தனுடைய மைந்தன் நினைத்து பிரமனுடைய அஸ்திரத்தால் நன்றாகக் குரங்கைக்கட்டி சேஷ்டை இல்லாமல் விழுந்ததும் சணக்கயிராலும் மரப்பட்டையாலும் இராக்ஷஸர்கள் கட்டும் பொழுது பிரமாஸ்திரத்திலிருந்து நழுவினதை அறிந்து பயந்து சீக்கிரம் தகப்பனரை அடைவித்தான்.

ब्रह्मेन्द्रानिलरक्षितंत्वपभयंसङ्क्षाक्षितस्वेक्षितम्
रक्षोभिर्विकृताऽऽननैस्ततइतस्संकृष्यमाणंश्रमात् ।
कोपाऽऽरक्तविलोचनोदशमुखोव्यैक्षिष्टपिङ्गाऽऽननम्
पृष्टंमन्त्रिभिरात्मनोरघुपतेर्दौत्यंवदन्तंमुदा ॥ ८१ ॥

இராவணன், பிரம்மா, இந்திரன், வாயு இவர்களால் ரக்ஷிக்கப்பெற்று பயமற்று தன்னைப்பார்க்க விருப்பம் பெற்றவனும் குரூபமான முகம்பெற்ற இராக்ஷஸர்களால் சிரமத்தோடு அங்குமிங்கும் இழுக்கப்பெற்றவனும் ஸந்தோஷமாய் "நான் இராமனுடைய தூதன்" என்பதைத் தெரிவிக்கிறவனும் சிவந்த முகம் பெற்றவனுமான ஹனுமானைக் கோபத்தால் சிவந்த கண்களைப் பெற்றுப் பார்த்தான்.

४९ रक्षोभिःपरिपीडितोऽपिहनुमान्हैमंमहाऽर्हाऽऽसनम्
स्वध्यासीनमुपाऽऽत्तादिव्यवसनंसद्भूषमास्यैर्युतम् ।
भीमैर्दष्टरदच्छदैश्चदशभिस्सन्मन्त्रिणंरावणम्
पश्यन्नस्मरदस्यनास्त्यपनयश्चेद्रक्षकस्स्यादिति ॥ ८२ ॥

ஹனுமான் இராக்ஷஸர்களால் துன்பமடைவிக்கப் பெற்றும் மிகுந்த விலைபெற்ற சுவர்ணமயமான சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவனும் நல்ல ஆடை ஆபரணங்களைப் பெற்றவனும் உதட்டைக் கடித்த பயங்கரமான பத்து முகங்களோடு கூடியவனும் நல்ல மந்திரிகளை அடைந்தவனுமான இராவணனைப்பார்த்து "இவனிடத்தில் அநீதி இல்லாமலிருந்தால் எல்லோர்களுக்கும் இரக்ஷகனாக இருப்பான்" என்று நினைத்தார்.

५० नन्दीस्यात्किमयंपुराविचलितेकैलासशैलेमया
यःकोपादशपत्सबाणइतिवाहृष्टाकपिंशंकितः ।
पृच्छन्तस्यसमागतेःफलमिहस्वामात्यतोरावणः
तेनावाचितवेक्षणायरणिनोमेभाषितंशृण्वये ॥ ८३ ॥

"முன்காலத்தில் நான் கைலயங்கிரியை அசைக்கும்பொழுது கோபத்தால் சபித்த நந்திகேசுவரனோ? அல்லது இவன் பாணாசுரனோ? என்று ஹனுமானைப்பார்த்து இராவணன் ஸந்தேஹம் பெற்று இவ்விடத்தில் அந்த ஹனுமானுடைய வரவின் பயனைத் தன் மந்திரிகளால் வினவும்பொழுது அந்த இராமதாஸனால் சொல்லப்பெற்றான். "ஹே அரசே! உன்னுடைய தர்சனத்தின் பொருட்டு (குற்றம் செய்து) யுத்தம் செய்த என்னுடைய வார்த்தையைக் கேட்கவேண்டும்."

५१ सुग्रीवस्यनिदेशमेकहृदयश्शृण्वार्यभद्रप्रदम्
धीमन्नन्यत्रधूमपायजननींसद्वृत्तनोपैषिभोः ।
रामस्यापनयंविधायभुवनेकःप्राप्नुयान्मङ्गळम्
रामायप्रतिदीयतांजनकजायावन्नहन्यात्शरैः ॥ ८४ ॥

"ஹே அண்ணா! சுக்ரீவனுடைய உத்திரவை ஒரு மனதாய் கேட்கவேண்டும். ஹே புத்திசாலியே! நன்னடை பெற்றவனே! துன்பத்தைக் கொடுக்கும் பரஸ்திரீயை (இன்பத்தின்பொருட்டு) அடையாதே. இராமனுக்குக் குற்றம்செய்து யார் உலகத்தில் க்ஷேமமடைந்தார்? அவர் அம்புகளால் அடிப்பதற்குள் அன்னையை அவரிடம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும்."

सद्वृत्ताचमयोक्षिताजनकजा॰श्वाऽऽननांपन्नगीम्
तांविद्धिप्रगृहीतवान्कथमिमांरक्षाऽऽत्मनोजीवितम् ।
तिर्यञ्चोऽपिनरास्त्वयाऽपहसितादैवैवरैर्बालिश
प्राप्तंधर्मफलंत्वयाऽधिकतरंप्राप्स्यस्यधर्मस्यतत् ॥ ८५ ॥

"நன்னடை பெற்ற ஸீதையையும் நான் பார்த்தேன். ஐந்துதலை நாகமாக அவளை நினைக்கவேண்டும். இவளை எதற்காக

எடுத்துவந்தாய்? தன்னுடைய உயிரைக் காப்பாற்றவேண்டும். பிரம்மதேவன் கொடுத்தவரத்தில் ஹே முட்டாளே! மனிதர்களையும் மிருகங்களையும் நீ பரிஹஸித்தாய். தர்மத்தின் பயனை நீ அடைந்தாய். அதர்மத்தின் மிகுந்த பயனையும் அடையப் போகிறாய்."

५२ ब्रह्माऽऽद्या अपि रामवध्यशरणे शक्ता न हीत्यप्रियम्
श्रुत्वा वानरभाषितं समादिशत्तन्मारणं रावणः ।
नाङ्गीकृत्य विभीषणोऽपि तदिदं प्राहाग्रजं सांत्वयन्
दूतस्याऽऽहननं त्वशास्त्रविहितं वैरूप्यकं कुर्विति ॥ ८६ ॥

"இராமனுடைய குற்றவாளியைக் காப்பாற்றுவதில் பிரம்மா முதலிய தேவர்களும் சக்தியற்றவர்கள்" என்று அப்பிரியமான ஹனுமானுடைய வார்த்தையை இராவணன் கேட்டு அவரைக் கொல்லும்படி உத்திரவு செய்தான். விபீஷணன் அதை அங்கீகரிக்காமல் "தூதனுடைய வதத்தை சாஸ்திரம் விதிக்கவில்லை. அவனுக்கு அங்கபங்கம் செய்யவேண்டும்" என்று அண்ணனை ஸமாதானம் செய்து அவரிடம் கூறினான்.

५३ रक्षोनायक आद्रियन्नययुतं वैभीषणं भाषणम्
कृत्वा सानलवालमेव परितो राष्ट्रं कपिं चारयन् ।
वाद्यप्रस्वनपूर्वकं पुरजनानावेदयत्सर्वतः
श्रुत्वाऽऽत्माऽऽहरणोपमं तदनलं सीतोपतस्थे मुहुः ॥ ८७ ॥

நீதியோடு கூடிய விபீஷணனுடைய மொழியை இராவணன் ஆதரித்து அந்த ஹனுமானை வாலில் அக்கினியோடு கூடவே பட்டணத்திற்கு நான்குபுறமும் வாத்திய சப்தங்களோடு இழுத்துச்செல்லசெய்து பட்டணத்தின் ஜனங்களுக்கு எல்லாவிடத்திலும் அறிவித்தான். ஸீதைத் தன் பிராணனின் அபஹாரத்திற்கு ஸமமான அவ்விஷயத்தைக்கேட்டு அக்கினியை அடிக்கடி துதித்தாள்.

सीताप्रार्थितशीतलं कपिवरो वाले निरीक्ष्यानलम्
मैनाकं सलिलाऽऽलये नगमिव प्राप्तः परं विस्मयम् ।

संक्षिप्याऽऽत्मतनुंक्षणेनमतिमान्संच्यावयन्बन्धनात्
स्वीकुर्वन्परिघंततोगिरिवपुस्त्वाहन्कपिस्स्वानुगान् ॥

புத்திசாலியான ஹனுமான் மைனாகமலையை ஸமுத்திரத்தில் பார்த்ததுபோல் வாலில் அக்கினி குளிர்ந்திருப்பதை அறிந்து அதிக ஆச்சரியமடைந்து உருவத்தை சுருக்கி கட்டிலிருந்து க்ஷணநேரத்தில் நழுவச்செய்து பரிகத்தை எடுத்துக்கொண்டு மலைபோல் சரீரம்பெற்று அவ்வாயுதத்தால் தன் கூடவந்தவர்களை அடித்தார்.

५४ लङ्कायाःप्रदिधक्षयापवनजोवैभीषणंवर्जयन्
वेश्मान्येषुगृहेषुवालदहनंप्रावर्तयन्निर्भयः ।
संयोगान्मरुतःप्रसार्यपरितोवैश्वानरोवर्धितः
सौवर्णानिगृहाणितत्रनिचितानर्थांश्चखादध्वनन् ॥ ८९॥

ஹனுமான் பயமில்லாமல் இலங்கையைக் கொளுத்த விரும்பி விபீஷணனுடைய வீட்டைத்தவிர மற்ற வீடுகளில் வாலின் அக்கினியை இருக்கச்செய்தார். அந்த அக்கினி காற்றின் சேர்க்கையால் நான்குபுறமும் பரவி வளர்ந்து சுவர்ணமயமான வீடுகளையும் அவைகளில் சேர்த்துவைத்த பொருள்களையும் சப்தித்துக்கொண்டு சாப்பிட்டது.

लङ्कामग्निसमावृतांनिशिचरादृष्ट्वाभयाऽऽर्ताःकपिम्
किंरक्षःप्रळयप्रदोविधिमुखस्वर्गिप्रकोपःकिमु ।
कप्याकारधरोभवेदितितदासंचिन्तयन्तोमुहुः
हातातेतिविचुक्रुशुर्हतबलास्स्वप्राणसंत्राणने ॥ ९० ॥

இலங்கை நகரம் அக்கினியால் சூழப்பெற்றிருப்பதையும் குரங்கையும் இராக்ஷஸர்கள் பார்த்து பயமடைந்து "பிரம்மா முதலிய தேவர்களின் மிகுந்த கோபம் இராக்ஷஸர்களுக்கு நாசத்தைக்கொடுக்கும்படி குரங்கின் உருவம்பெற்று வந்திருக்குமா?" என்று ஆலோசித்துக்கொண்டு தன் பிராணனைக் காப்பாற்றுவதில் பலமற்று அப்பொழுது 'ஹே அப்பா! கஷ்டம்" என்று அடிக்கடி கதறினார்கள்.

५५ स्वर्गस्थेडितविक्रमस्स्वदहनंनिर्वापयन्नम्बुधौ
दग्धांवीक्ष्यपुरींव्यचिन्तयदसौभीत्याऽऽवृतःकुत्सया।
विस्मृत्यात्रनिवासिनींजनकजांनिर्लज्जमाग्निप्रदम्
धिङ्मामर्थविघातकं यदिहता सीता विभुर्नंक्ष्यति ॥९१॥

சுவர்க்கத்திலிருக்கும் தேவர்களால் துதிக்கப்பெற்ற பலம் பெற்ற "ஹனுமான்" தன் வாலாக்கினியைக் கடலில் அணைத்துப் பட்டணம் எரிந்திருப்பதைப் பார்த்து பயம் நிந்தை இவைகளை அடைந்து நினைத்தார். "இவ்விடத்தில் ஸீதை இருப்பதை மறந்து வெட்கமில்லாமல் அக்கினியை வைத்து காரியத்தைக் கெடுத்த என்னை நிந்திக்கவேண்டும். ஸீதை அழிந்தால் பிரபுவும் அழியப் போகிறார்."

सीताराघवयोर्महामहिमतोवह्निर्नमांप्रातपत्
तांचारित्रवतींस्पृशेन्नदहनोनूनंबिभीयादिति ।
संचिन्त्यद्युगचारणप्रवचनात्सद्भिर्निमित्तैःकपिः
मत्वानिष्प्रळयांविदेहतनयामैच्छत्पुनर्वीक्षितुम् ॥ ९२ ॥

"ஸீதை" "இராமன்" இவர்களுடைய மிகுந்த பெருமையால் "அக்கினி" என்னை துன்பம் அடைவிக்கவில்லை. பதிவிரதா தர்மம் பெற்ற அந்த ஸீதையை "அக்கினி" தொடமாட்டான். நிச்சயமாய் பயமடைவான் என்று "ஹனுமான்" நினைத்து ஆகாயத்தில் இருக்கும் சாரணர்களின் வார்த்தையாலும், நற்சகுனங்களாலும் "ஸீதை" அழியவில்லை" என்று நினைத்து (அவளை) மறுபடியும் பார்ப்பதற்கு விரும்பினார்.

५६ सीतांप्राप्यसशिंशुपातरुतलेत्वामक्षतांदैवतः
पश्यामीतिवदन्तयाऽभ्यनुमतःपाथोनिधेरुत्तरम् ।
तीरंप्राप्तुमथाऽऽरुरोहहनुमान्शैलंत्वरिष्टंयुतः
हर्षेणेप्सितराजवीक्षणभुवा भूमेस्समत्वंनयन् ॥ ९३ ॥

"ஹனுமான்" சிம்சுபாமரத்தின்" அடியில் ஸீதையை அடைந்து "தெய்வாதீனமாய் அழிவில்லாமல் உன்னைப் பார்க்கிறேன்"

என்று சொல்லி அவளிடம் அனுமதிபெற்று பிறகு அரசனைப் பார்க்க விரும்பிய ஸந்தோஷத்தோடுகூடி ஸமுத்திரத்தின் வட கரையை அடைவதற்கு "அரிஷ்ட"மென்ற மலையை பூமிக்கு ஸம மாகச் செய்து அதில் ஏறினார்.

५७ आकाशेमरुतस्सुतःखगइवत्यक्तश्रमोवेगतः
गच्छन्नौरिववीचिमज्जलनिधिंनिस्तीर्यतन्मध्यगम् ।
मैनाकंसमुपस्पृशन्चविनदन्बन्धून्दिदृक्षुर्मुदा
लाङ्गूलंपरिकंपयन्निरपतत्तूर्णंमहेन्द्राचले ॥ ९४ ॥

வாயு புத்திரன் ஆகாயத்தில் பக்ஷிபோல் வேகமாய் களைப்பு இல்லாமல் சென்று ஓடம்போல் அலைகளைப்பெற்ற கடலைத் தாண்டி அதன் நடுவில் இருக்கும் மைனாக மலையைத் தடவிக் கொடுத்து பந்துக்களைப் பார்க்க விரும்பி சப்தித்து ஸந்தோஷத் தால் வாலை அசைத்துக்கொண்டு சீக்கிரம் மஹேந்திர மலையில் விழுந்தார்.

तुष्टानात्मसमागतेःकपिवरान्सोपायनान्सांजलीन्
वृद्धान्जांबवदादिमान्सविनमन्तैः पूजितोमारुतिः ।
अब्धेस्सन्तरणंविचित्रकरणं श्रोतुंसकामैश्शिलाम्
प्राप्तैरङ्गदसन्नुतःपरिवृतोदेवैरिवेन्द्रोऽभवत् ॥ ९५ ॥

ஹனுமான் தன் வரவால் ஸந்தோஷமடைந்து பழங்கள் புஷ்பங்கள் இவைகளைப்பெற்று அஞ்சலி பந்தம் செய்த (கும்பிட்டுக்கொண்ட) "ஜாம்பவான்" முதலிய பெரியோர்களை வணங்கி ஆச்சரியமளிக்கும் கடலின் தாண்டுதலைக் கேட்க விரும்பி சிலை யில் உட்கார்ந்த குரங்குகளால் சூழப்பெற்றும் பூஜிக்கப்பெற்றும் அங்கதனால் துதிக்கப்பெற்றும் தேவர்களால் சூழப்பெற்ற இந்தி ரன்போல் இருந்தார்

५८ पृष्टोजाम्बवतासुतोऽथमरुतश्शुश्रूषयाजानकी
सद्वृत्तस्ययदीक्षितंजलनिधौप्राप्तंचलंकापुरे ।
यत्स्वेनाऽऽचरितंविचित्रचरितंसर्वंवदन्सादरम्
यन्नाकारिमयेहतद्वरबलाः कर्तव्यमित्याहतान् ॥ ९६ ॥

ஸீதையின் நன்னடையைக் கேட்க விரும்பி "ஜாம்பவானுல்" வினவப்பெற்ற ஹனுமான் பிறகு ஸமுத்திரத்தில் பார்த்ததையும் இலங்காபுரியில் அடைந்ததையும் தான் செய்த ஆச்சரிய சரித்திரம் எல்லாவற்றையும் அன்போடு சொல்லி "மிருந்த பலம் பெற்றவர்களே! இதில் நான் செய்யாததைச் செய்ய வேண்டும்" என்று அவர்களைப் பார்த்துக் கூறினர்.

௫௯ उद्योगःकपिरामयोश्चसफलश्शीलंवरेण्यंभुवः
पुत्र्यास्सान्नियमोरिपुस्स्वतपसासीतांस्पृशन्नाहतः ।
नाऽऽनीतेति निवेदनंबलवतांमन्येनयुक्तंत्विमम्
हन्यांदुष्कृतकारिणंबलयुतैर्युक्तोऽधुनाकिंपुनः ॥ ९७ ॥

"சுக்ரீவன் "இராமன்" இவர்களின் முயற்சி பயனடைந்தது. ஸீதையின் நடை சிறந்தது. நற்றவம்பெற்ற சத்துருவான "இராவணன்" ஸீதையைத் தொட்டும் தன் தவத்தால் நாசமடையவில்லை. "ஸீதையை அழைத்து வரவில்லை என்று தெரிவிப்பது பலமுள்ளவர்களுக்குத் தகுதியில்லை என்று நினைக்கிறேன். பாபம் செய்த சத்துருவை நான் ஒருவனுகக் கொல்லுவேன். இப்பொழுது பலமுள்ளவர்களோடு சேர்ந்தால் கேட்க வேண்டுமா ?"

௬௦ पातिव्रत्यबलाद्विदेहतनयानाऽऽहन्तियत्सागसम्
भक्तिंभर्तरिसंप्रकाशयतिसाक्लिष्टेतिवाताऽऽत्मजः ।
यत्रावोचदिदंकुमारनृपतेरिष्टंपुनर्जाम्बवान्
आचिक्षेपेमतिर्यथारघुपतेराज्ञस्तथाकुर्विति ॥ ९८ ॥

"பதிவிரதாதர்மத்தின் பலம் பெற்ற ஸீதை துன்பமடைந்தும் குற்றம் செய்த இராவணனை சிக்ஷிக்காததால் புருஷனிடத்திலிருக்கும் பக்தியை வெளியிடுகிருள்" என்று குமாரராஜனான அங்கதனுக்கு ஸம்மதமாக ஹனுமான் சொல்லும்பொழுது "இராமன்" "சுக்ரீவன்" "இவர்களின் இஷ்டம்போல் செய்ய வேண்டும்" என்று அதை ஜாம்பவான் ஆக்ஷேபித்தார்.

௬௧ न्याय्यांजाम्बवदुक्तिमेवकपयस्संमान्यसंप्रास्थिताः
देवेन्द्राचलतोमुदारघुपतेरभ्यर्णमेतुंद्रुतम् ।

दृष्ट्वाराजमतंमहन्मधुवनंदध्याननेनावितम्
मध्वातृप्तिपपुस्समेत्यवनपानाक्रम्यचेष्टाऽन्विताः ॥ ९९॥

நீதியிலிருந்து தவருத ஜாம்பவானுடைய சொல்லை வானரங்கள் சிலாகித்து இராமனுடைய ஸமீபமடைவதற்கு சீக்கிரம் ஸந்தோஷமாய் மஹேந்திரமலையிலிருந்து பிரயாணம் செய்து அரசனுக்கு இஷ்டமும் ததிமுகனுல் இரக்ஷிக்கப்பெற்றதுமான பெரிய மதுவனத்தைப் பார்த்து அதை அடைந்து சேஷ்டைகளோடுகூட காவல்காரர்களைமீறி திருப்தி ஆகும்வரை மதுவைக் குடித்தார்கள்.

६२ त्रस्तान्मुक्तमधून्हनूमदभयान्प्राप्तान्पुनस्तान्वनम्
पालानांपरमेश्वरोदाधिमुखोविद्रावयन्द्रायुधः ।
तारेयेणतलाऽऽहतेर्व्यसनितोमुक्तःकथंचिद्बलैः
प्राप्यप्रस्रवणंरघूद्वहयुतंसुग्रीवमाहाऽऽनतः ॥ १०० ॥

பயந்து மதுவை விட்டவர்களும் ஹனுமானிடம் அபயம் பெற்று மறுபடியும் மதுவனத்தை அடைந்தவர்களுமான வானரங்களைக் காவல்காரர்களுக்கு அதிபதியான "ததிமுகன்" மரத்தை ஆயுதமாகப் பெற்று விரட்டி அங்கதனுடைய உள்ளங்கையின் அடியால் துக்கமடைந்து சிரமத்துடன் விடப்பெற்று ஸைனியங்களோடு பிரஸ்ரவணபர்வதமடைந்து இராமனுடன் கூடிய சுக்ரீவனை வணங்கிக் கூறினன்.

६३ राजन्तेवनपानतीत्यबालिभिर्मध्वाहृतंवानरैः
इत्युक्तिंसनिशम्यमैथिलसुतांनिश्चित्यसंवीक्षितां ।
हृष्टोराघवमोदनःकृतगिरस्तान्सापराधानपि
द्रष्टुंसंस्पृहयामिमर्षितमिदंद्राक्प्रेषयेत्यन्वशात् ॥ १०१ ॥

"ஹே அரசே! உன்னுடைய காவல்காரர்களை அவமதித்து பலம் பெற்ற வானரர்கள் மதுவை அபஹரிக்கிறுர்கள்" என்கிற வார்த்தையை சுக்ரீவன் கேட்டு ஸீதையைப் பார்த்ததாக நிச்சயித்து ஸந்தோஷமடைந்து இராமனை ஸந்தோஷமடைவித்து "உத்திரவை நடத்தின குரங்குகள் குற்றவாளிகளாயினும் அவர்

களைப் பார்க்க விரும்புகிறேன். இந்த குற்றத்தை மன்னித்தேன். சீக்கிரம் அவர்களை அனுப்பவேண்டும்" என்று உத்திரவு செய்தான்.

६४ सुग्रीवाभिहितेततोदधिमुखेहृष्टेद्रुतंनिर्गते
संप्राप्तेमधुकाननंनृपवचस्त्वावेदयत्यङ्गदम् ।
सर्वेसम्मिळितावनात्सरभसंवाताऽऽहताम्भोदवत्
प्रस्थायाऽऽरचिताऽऽरवाःप्रजवनास्तेराघवौप्राणमन् ॥

சுக்ரீவனால் கூறப்பெற்ற "ததிமுகன்" ஸந்தோஷமடைந்து சீக்கிரம் அவ்விடமிருந்து பிரயாணம் செய்து மதுவனம் வந்து அரசனுடைய வார்த்தையை அங்கதனிடம் தெரிவிக்கும்பொழுது அவர்கள் எல்லோர்களும் சேர்ந்து பரபரப்பாக காற்றால் அடிக்கப்பெற்ற மேகம்போல் கர்ஜித்துக்கொண்டு மிகுந்த வேகமாய் மதுவனத்திலிருந்து பிரயாணம் செய்து இராமலக்ஷ்மணர்களை வணங்கினார்கள்,

६५ आपृष्टोरघुनायकेनकपिभिस्संचोदितोमारुतिः
तस्माआहपयोनिधेस्स्वतरणंलङ्कापुरेदर्शनम् ।
वैदेह्याविकृताऽऽस्यराक्षसवधूसंगोपनंरावण
न्यक्कारंप्रणयंस्वगंकुशलितांप्रादादभिज्ञापकम् ॥ १०३ ॥

இராமனால் வினவப்பெற்றவனும் வானரங்களால் ஏவப்பெற்றவனுமான "ஹனுமான்" தான் கடலைத் தாண்டினதையும் இலங்கையில் ஸீதையைக் கண்டதையும் முகவிகாரம் பெற்ற இராக்ஷஸிகள் அவளை இரக்ஷிப்பதையும் அவள் இராவணனை அவமதித்து தங்களிடம் அன்பு காட்டினதையும் அவளின் க்ஷேமத்தையும் இராமன் பொருட்டுச் சொன்னார். அடையாளத்தையும் கொடுத்தார்.

६६ दृष्ट्वामूर्धमणिंप्रियाचिरधृतंरामोविधायोरसि
स्मृत्वाबन्धुमुदश्रुराहमरुतःपुत्रंमहाविक्रमः ।
तंदेशंनयमामपिप्रणयिनीयत्रेक्षितानक्षणम्
स्थास्यामिप्रिययाविनाविदिततद्वार्तोवदैतांगिरम् ॥ १०४ ॥

மிகுந்த பலம் பெற்ற இராமன் மனைவியால் வெகு காலம் தரிக்கப்பெற்ற சூடாமணியைப் பார்த்து மாரில் வைத்து பந்துவான ஸீதை, ஜனகன், அவருடைய மனைவி, இவர்களை நினைத்து அதிக கண்ணீர் பெற்று "மனைவியைப்பார்த்தவிடத்தில் என்னையும் அழைத்துச் செல்லவேண்டும். அவளின் வார்த்தையைத் தெரிந்து அவள் இல்லாமல் நான் க்ஷணங்கூட இருக்கப்போகிறதில்லை. அவளுடைய வார்த்தையைச் சொல்லவேண்டும்" என்று வாயு புத்திரனைப்பார்த்து கூறினார்.

३७ रामंप्राहतमंजनाप्रियसुतोब्रह्मास्त्रमुग्वायसे
शत्रोर्हस्तगतांकथंप्रणयिनींनावत्यरिघ्नःपतिः ।
इत्युक्तस्तवजाययारघुपतेप्रत्यब्रवंतांपुनः
मद्विज्ञायतत्रास्थितिंधृतमहाभागेपतिःप्राप्स्यति ॥ १०५ ॥

அஞ்சனையின் அன்பு மைந்தன் இராமனைப்பார்த்து கூறினார். காகத்தினிடத்தில் பிரம்மாஸ்திரம் பிரயோகித்தவரும் சத்துருக்களை ஸம்ஹரித்தவருமான புருஷன் சத்துருவின் கையில் இருக்கும் என்னை ஏன் காப்பாற்றவில்லை?" என்று ஹே இராமா! உன் மனைவியால் சொல்லப் பெற்று நான் மறுபடியும் அவளைப்பார்த்து ஹே மிகுந்த பாக்கியவதி! உன்னுடைய ஸ்திதியை என்னிடமிருந்து புருஷன் அறிந்து உன்னை அடையப் போகிறார். என்று பதில் உரைத்தேன்."

६८ सीताऽवोचदिदंवनादुपधिनारक्षोऽहरन्मांयथा
रामोनार्हतिमांतथैतुमचिरात्कुर्वन्बलैस्संकुलाम् ।
लंङ्कामैतुरघुप्रवीरातिलकस्तत्तस्यकीर्त्यैभवेत्
निस्तीर्याम्बुनिधिंकथंन्विहभवेद्रामःप्रियस्तस्यवा ॥ १०६॥

"இராக்ஷஸன் என்னைக்காட்டிலிருந்து மாயையால் அபஹரித்தது போல் இராமன் என்னை அவ்விதம் அடையக்கூடாது ரகுவீர திலகன் ஸேனைகளால் இலங்கையைக் கலக்கி சீக்கிரம் வரவேண்டும். அது அவருக்கு கீர்த்தியைக்கொடுக்கும்' இராமனும் அவருடைய சினேகிதனும் எவ்விதம் கடலைத்தாண்டி இவ்விடம் வருவார்கள்? என்று" ஸீதை சொன்னாள்.

इत्यापन्नभयांप्रभोतववधूमानन्दयन्नाहताम्
देव्यर्थेतववानरःकृतमतिस्सुग्रीवआस्तेबली ।
तस्याऽऽज्ञाकरणास्तरुप्रहरणास्सन्त्यद्यतेष्ठन्तिमः
प्राप्तस्स्यामिहसोत्प्लुतिर्भुजशिरस्स्वंप्रापयन्तौपुनः ॥

"ஹே பிரபுவே! இவ்விதம் பயமடைந்த தங்களின் மனை வியை ஸந்தோஷமடையும் படி நான் சொன்னேன். ஹே தேவி! உன் கார்யத்தில் "சுக்கிரீவன்" என்ற பலமுள்ள வானரம் மனம் வைத்திருக்கிறான். அவனுடைய ஸேவகர்கள் மரங்களை ஆயு தங்களாக பெற்றிருக்கிறார்கள். அவர்களில் கடைசியான நான் இராம லக்ஷ்மணர்களை என் தோள்களில் ஏற்றிக்கொண்டு இப் பொழுது மறுபடியும் குதித்து இவ்விடம் வந்து விடுவேன்."

अद्यद्रक्ष्यसिराघवंससहजंसुग्रीवमत्राऽऽगतम्
श्रोष्यस्यद्यरवंमहाकपिकृतंभीदायकंरक्षसाम् ।
उद्धृत्याहितमुर्वरामाधिगतंसाकेतगंत्वद्युतम्
स्वाऽऽर्यापत्यामितिप्रमोदवचसासीताजहर्षाधिकम् ॥१०८॥

"ஹே தேவி! இப்பொழுது இவ்விடம் வந்த தம்பியோடு கூடிய இராமனையும் சுக்ரீவனையும் பார்க்கப்போகிறாய். அரக்க ர்களுக்கு பயமளிக்கும் குரங்குகளின் பெரிய சப்தத்தைக்கே ட்கப்போகிறாய். சத்ருருவைக்கொன்று உன்னுடன் அயோத் தியை யடைந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டு பூமிபரி பாலனம் செய்யும் தன்னுடைய ஆரிய புத்திரனை பார்க்கப் போகிறாய், என்று ஸந்தோஷ வார்த்தையால் ஸீதை மிகவும், ஸந்தோஷமடைந்தாள்" என்று ஹனுமான் தெரிவித்தார்.

फलश्रुतिः

विद्यांविश्वविजृम्भितांविजपदांविद्वत्सदस्यन्वहं
सद्यानाऽऽगतिदामवद्यरहितांमद्याधिकस्वादिमाम् ।
वाचंदुर्धियईप्सितां वितनुतेरामायणेसुन्दरे
पाठनश्रवणेनसद्धनुमतोवृत्तंप्रियंरामयोः ॥ १०९ ॥

சுந்தர ராமாயணத்தில் ஸீதை இராமன் இவர்களுக்கு இஷ்டமான ஹநுமானுடைய உத்தம சரித்திரம் பெற்ற சுந்தர காண்டம் படிப்பதாலும் கேட்பதாலும், விரும்பப்பெற்றதும் உலகத்தில் விருத்தியடைந்ததும் வித்வான்களின் ஸபையில் வெற்றியளிக்கும், நல்ல வாஹனங்களால் நான்கு புறமும் நடை கொடுக்கும் குற்றமற்ற கல்வியையும் மத்யத்தை விட அதிக மதுரமான வார்த்தையையும் புத்தியற்றவனுக்கும் தினந்தோறும் வளரச் செய்கிறது.

प्रासूतजानकीयंसा सुब्रह्मण्यकुटुम्बिनी ।
तत्कृतेरामचरिते सौन्दरंवृत्तमीरितम् ॥ ११० ॥

சுப்பிரமணியனுடைய மனைவி ஜானகி என்ற சுந்தரம் இயற்றிய சுந்தர ராமாயணத்தில் சுந்தர காண்டம் (இவ்விதம்) கூறப்பெற்றது.

சுந்தர காண்டம் முற்றிற்று.

सुन्दररामायणेयुद्धकाण्डः प्रारभ्यते

யுத்த காண்டம்.

१ श्रुत्वामारुतिभाषितंमहितधीस्तुत्यंमनस्तोषकम्
रामोहर्षममेयमात्मनिवहन्शंसन्मरुन्नन्दनम्
सर्वस्वंकपिनायकस्यपुरतस्तस्माइदंप्राददाम्
योऽस्मानिष्टकृतेरजीवयदितित्रैलोक्यनाथोऽश्लिषत् ॥ १ ॥

நற்புத்தி பெற்றவர்களால் துதிக்கத்தகுந்ததும் மனதிற்கு ஸந்தோஷமளிக்கும் ஹனுமானுடைய வார்த்தையை மூன்று உலகங்களுக்கும் நாதனான இராமன் கேட்டு மனதில் அளவற்ற ஸந்தோஷமடைந்து வாயு புத்திரனை துதித்து, "இஷ்டத்தைச் செய்து எங்களைப் பிழைக்கச் செய்த ஹனுமானின் பொருட்டு எல்லாப்பொருளுமான இதைக் கொடுத்தேன்" என்று சுக்ரீவனுக்கு முன்னிலையில் ஹனுமானைக் கட்டிக்கொண்டார்.

सन्दष्टासुधियाममाप्रियतमासंहर्षितोदन्ततः
दुष्पारस्यमहाऽम्भसोजलनिधेस्तीरंकथंदक्षिणम् ।
प्राप्स्यन्त्यद्यवलीमुखास्सहृदयाइत्यात्ताचिन्तोमहा
चापोविक्रमवारिधीरघुपतिर्दध्यौभृशंभीतिभृत् ॥ २ ॥

"புத்திசாலியான ஹனுமான் என் மனைவியைப் பார்த்து ஸமாசாரத்தால் ஸந்தோஷமடைவித்தான். அதிக ஜலம்பெற்று கரையை அடைய முடியாத கடலின் தென்கரையை அன்பு பெற்றவானரங்கள் எவ்வித மடைவார்கள்?" என்று இராமன் பெரியவில்லைப் பெற்றும் பலத்திற்குக் கடல் போலிருந்தும் கவலையை அடைந்து மிகவும் பயந்து (தாண்டும் உபாயத்தை) நினைத்தார்.

२ शोचन्तं रिपुसूदनं तमवदत्संहर्षयन्मित्रजः
सन्मित्रं त्यज शोकमर्थहरणं धीमत्तरास्थानजम् ।
क्रोधं निर्भरमावहातिकुपितात्सर्वे भृशं बिभ्यति
क्षिप्रं सेतुमपां निधौ कुरु सखे शत्रुं हनिष्यस्यतः ॥ ३ ॥

துக்கிக்கும் சத்துரு ஸம்ஹாரகனுமான இராமனைப் பார்த்து நல்ல சிநேஹிதனான சுக்ரீவன் "மிகுந்த புத்திசாலியான ஹே சிநேஹிதா! அகாலத்தில் பிறந்து காரியத்தைக் கெடுக்கும் துக்கத்தை விலக்கவேண்டும். மிகுந்த கோபத்தை சீக்கிரம் பெற வேண்டும். அதிக கோபியிடம் எல்லோர்களும் அதிகமாய் பயமடைகிறார்கள். ஸமுத்திரத்தில் அணைகட்டவேண்டும். அதனால் சத்துருவை ஸம்ஹரிக்கப் போகிறாய்" என்று ஸந்தோஷமடையும்படி கூறினான்.

२ मित्रोद्धृतशुचाऽतिधीरमनसा निस्तारयाम्यम्बुधिम्
सर्वान्सेतुपथेन भूरितपसा संशोषणादम्बुनः ।
इत्याबद्धविनिश्चयो विविदिषुर्दुर्गाणि लंकापुरः
गुप्तिं भूतिमरातिजां पवनजं पप्रच्छ तज्ज्ञं प्रभुः ॥ ४ ॥

சிநேஹிதனால் துக்கத்தைத் துறந்து அதிகதைரியம் பெற்ற மனதோடு பிரபுவான இராமன் "ஸேதுவின் வழியாலாவது அதிகதவத்தாலாவது ஜலத்தைவற்றச் செய்தலாலாவது எல்லோர்களையும் ஸமுத்திரத்தைத் தாண்டச் செய்கிறேன்" என்று நிச்சயம் செய்து இலங்கா புரியின் (அடைய முடியாத) துர்கங்களையும் ஸம்ரக்ஷணத்தையும் சத்துருவின் ஐசுவரியத்தையும் அறிய விரும்பி அவைகளை அறிந்த ஹனுமானை வினவினார்.

रामायाऽऽहयथेक्षितं पवनजो लङ्कांगतं विस्तरात्
द्वारेषूपलबाणयन्त्रमहितघ्नं ताश्शतघ्नीर्गुरुम् ।
प्राकारं च हिरण्मयं सपरिखं यन्त्रान्वितान्संक्रमान्
रक्षोऽध्यासितवेदिकान्तदभितस्तत्स्थं युयुत्सुं रिपुम् ॥ ५ ॥

கோட்டைவாயில்களில் கற்களையும் பாணங்களையும் (வர்ஷிக்கும்) சத்துருக்களைக் கொல்லும் யந்திரத்தையும் வெகு ஜனங்

களைக் கொல்லும் பீரங்கிகளையும் அகழியோடு கூடிய பெரிய தங்க மதில்களையும் (அகழிக்குமேல் சத்துருக்களைக் கொல்லும்படி பலகைகளை உயரத்தூக்கும்) யந்திரங்களோடு கூடியதும் அதற்கு நான்கு புறமும் இராக்ஷஸர்கள் இருக்கும் மேடைகளைப்பெற்றதும் (பலகைகளால் செய்யப்பெற்ற) மார்க்கங்களையும் (வடக்கு) வாயிலில் யுத்தம் செய்யவிரும்பி இருக்கும் சத்துருவான இராவணனையும் இலங்கையில் இருக்கும் விசேஷத்தைப் பார்த்தபடி ஹனுமான் இராமன் பொருட்டு விரிவாய் தெரிவித்தார்.

त्यक्ताऽऽलम्बतयात्रिकूटशिखरेलङ्कास्थितिंवारिधिम्
तत्पार्श्वेऽप्यपनौपथंप्रतिदिशंरक्षाकृतोराक्षसान् ।
विक्रान्तानयुताऽऽदिमान्स्वरचितंतद्भङ्गमाश्चर्यदम्
लङ्कादाहमपिप्रबोध्यबलवन्प्रस्थापयास्मानिति ॥ ६ ॥

மூன்று சிகரங்களைப்பெற்ற திரிகூடமலையின் சிகரத்தில் இலங்கை பிடிப்பில்லாமல் இருப்பதையும் அதன் பக்கத்தில் ஓடத்தின் வழியற்ற ஸமுத்திரத்தையும் திசைகள் தோறும் ரக்ஷிக்கும் பலம்பெற்ற பதினாயிரம், லெக்ஷம், பத்துலக்ஷம், பத்துக்கோடி, இராக்ஷஸர்களையும் அவைகள் எல்லாவற்றையும் ஆச்சரியம் வரும்படி தான் அழித்ததையும் இலங்காபுரியைப் பொசுக்கினதையும் தெரிவித்து "ஹே பலமுள்ளவனே! எங்களைப் பிரயாணம் செய்விக்கவேண்டும்" என்று கூறினார்.

४ वीरोवांछितवैरिवर्गदळनोरामोऽप्यमोघेप्सितः
सुग्रीवन्निजगादपूष्ण्यधिगतेमध्यंमुहूर्तोजयः ।
प्राप्तोऽद्योत्तरफलगुनीपरिगतोमित्राभियामान्विताः
सैन्यैश्शत्रुहतिंवदत्यभिमतांप्राप्तांस्फुरन्तीदृक् ॥ ७ ॥

வீணாகாத விருப்பம் பெற்ற வீரனான இராமன் சத்துரு ஸம்ஹாரத்தை விரும்பிக்கொண்டு "சூரியன் ஆகாயத்தின் மத்தியில் இருக்கும் பொழுது விஜய முகூர்த்தம் உத்திர நக்ஷத்திரத்தோடு கூடியிருப்பதால் ஹே சினேஹிதா ! இப்பொழுது ஸைனியங்களோடு எதிர்த்துச் செல்லுவோம். விரும்பப்பெற்ற ஸீதை

யும் சத்துரு ஸம்ஹாரமும் கிடைக்கதாக, துடிக்கும் நேத்திரம் கூறுகிறது" என்று சுக்ரீவனைப் பார்த்துக் கூறினார்.

नीतिज्ञोरघुपुङ्गवोहरिबलंप्रस्थापयन्नग्रतः
वातापत्यमथाधिरुह्यशिबिकां प्राप्तेनवाल्यात्मजम् ।
सुग्रीवेणसहोदरेणसहितोनिष्क्रम्यऋश्याचलात्
प्रीतोवेक्षितसन्निमित्तनिचयस्तांदक्षिणाऽऽशामुपैत् ॥८॥

நீதியறிந்த இராமன் முன்னிலையில் வானரஸைனியத்தைப் பிரயாணம் செய்வித்து பிறகு ஹனுமான் பேரில் ஏறிக்கொண்டு பல்லக்கை அடைந்த சுக்ரீவனோடும் அங்கதனை அடைந்த தம்பியோடும் கூட ரிசியமூகமலையிருந்து பிரயாணம் செய்து அநேக நற்சகுனங்களைப் பார்த்து ஸந்தோஷமடைந்து தெற்கு திசையை அடைந்தார்.

सेनायाःकपिनायकस्यपुरतोनीलोऽध्वसंदर्शकः
भूभृत्तुल्यतनुर्गजश्चगवयः प्रायाद्गवाक्षस्तथा ।
पार्श्वत्राणनगन्धमादिऋषभौवेगेक्षणोजाम्बवान्
ऋक्षेशश्चसुषेणईड्यवचसाकुक्षिंमुदाऽपालयत् ॥९॥

மலைபோல் சரீரம்பெற்ற "நீலன்" "கஜன்" "கவயன்" "கவாக்ஷன்" இவர்கள் துதிக்கத்தகுந்த இராமனுடைய உத்திரவால் வானரஸைனியத்திற்கு வழிகாண்பித்துக்கொண்டு முன்னிலையில் சென்றார்கள். "கந்தமாதனன்", "ரிஷபன்" வானரஸைனியத்தின் இருபக்கங்களையும் "வேகதர்சி" "ஜாம்பவான்" கரடி ராஜனான ("ஜாம்பவானின் ஸஹோதரன்") "சுஷேணன்" அதன் நடுவையும் ஸந்தோஷமாகக் காப்பாற்றினார்கள்.

दृप्ताविक्रमतोनियोद्धुमनसोरक्षोगणैर्वानराः
आक्रम्यावनिभृन्नदीस्सविपिनास्संछादयन्तोऽवनिं ।
सह्याद्रिंमलयंव्यतीत्यसहसाभीदायकंपश्यताम्
पाथोधिंचनिरीक्ष्यतत्तटगतास्तुष्टान्यषीदन्नथ ॥१०॥

பலத்தால் மதம்பெற்ற வானரங்கள் இராக்ஷஸக்கூட்டங்களோடு போர் செய்வதற்கு மனங்கொண்டு பூமியை மறைத்துக்

கொண்டு "காடு மலை" நதிகளை ஆக்ரமித்து "ஸஹ்யமலை" "மலய மலை" இவைகளையும் வேகமாய்த் தாண்டிப் பார்ப்பவர்களுக்கு பயமளிக்கும் கடலைக்கண்டு அதன் கரையை அடைந்து பிறகு ஸந்தோஷமாய் உட்கார்ந்தார்கள்.

रामोवारिधिमेत्यवानरपतिंप्राहात्रसेनाऽखिला
संरक्ष्याविमताऽऽर्तितोऽधिकबलाश्छन्नाश्चरेयुश्चते ।
नेतःकोऽपिचलेद्यथेतरतटंगच्छेद्विनाऽऽयासतः
मन्त्रस्सोऽद्यविधीयतांपटुतरःकर्तव्यएवाऽऽदितः ॥११॥

இராமன் ஸமுத்திரத்தை அடைந்து "இவ்விடத்தில் அதிக பலம்பெற்ற அரக்கர்கள் மறைவாய் ஸஞ்சரிப்பார்கள். சத்துருக்களின் துன்பத்திலிருந்து எல்லா வானரஸேனையையும் காப்பாற்றவேண்டும். இவ்விடமிருந்து ஒருவனும் அசையக்கூடாது. ஸேனை சிரமமில்லாமல் அக்கரையை அடையும்படி முன் காலத்தில் தானே செய்யவேண்டிய பலமான மந்திராலோசனை இப்பொழுது செய்யவேண்டியது" என்று வானரவேந்தனிடம் கூறினார்.

५ दृष्ट्वाऽब्धेस्तटकाननंरघुपतिस्संवृद्धकामोऽर्थयन्
स्पर्शंतत्तनुजंमहालकृतंसंचिन्तयन्जानकीम् ।
शोकाम्भोधिनिमज्जनंविरचयन्सौमित्रिणाऽऽश्वासितः
धैर्यंप्राप्यदिनेश्वरेऽस्तगिरिगेसन्ध्याविधिंसोऽकरोत् ॥

இராமன் ஸமுத்திரத்தின் கரையில் இருக்கும் காடுகளைப் பார்த்து அதிககாமம் பெற்று ஸீதையை நினைத்து காற்றால் அவளின் சரீர ஸ்பர்சத்தைச் செய்யும்படி பிரார்த்தித்து துக்கக் கடலில் முழுகி இலக்ஷ்மணனால் ஸமாதானம் (தேர்தலை) அடையப்பெற்று தைரியம்பெற்று சூரியன் அஸ்தமனமலையை அடைந்த பொழுது ஸந்தியா வந்தன மனுஷ்டித்தார்.

६ दृष्ट्वाकर्महनूमताविरचितंलङ्कापतिर्लज्जितः
मन्त्रस्यप्रचिकीर्षयानिशिचरान्प्राहानुरक्तान्रहः ।

एकस्संकटमेवमाचरतिचेद्वैरीवृतोवानरैः
आयास्यत्युपरोद्धुमत्रसुहृदःकार्यंयदालोच्यताम् ॥ १३ ॥

ஹனுமான் செய்த காரியத்தைப் பார்த்து இலங்கேசுவரன் இலஜ்ஜையை அடைந்து மந்திராலோசனை செய்ய விரும்பி "ஒருவன் இவ்விதம் துன்பம் செய்தால், அனேக வானரங்களால் சூழப்பெற்ற சத்துரு தடுப்பதற்கு இவ்விடம் வரப்போகிறான். ஹே சினேஹிதர்களே! இப்பொழுது செய்யவேண்டியதை ஆலோசிக்கவேண்டும்" என்று அன்புபெற்ற அரக்கர்களிடம் ரஹஸ்யமாய்க் கூறினான்.

७ अज्ञात्वारिपुवीर्यमल्पमतयोरात्रिंचराराावणम्
प्रोचुस्तेसुमहद्वराऽऽकृतिचमूवीर्यंत्रिलोक्यामपि ।
विख्याताविजितास्त्वयातनुभुवाशक्रोगृहीतोहठात्
मुक्तोब्रह्मगिराविजेतुमधुनाशत्रून्तमाज्ञापय ॥ १४ ॥

நட்பமற்ற அற்பபுத்திபெற்ற அரக்கர்கள், சத்துருவின் பலமறியாமல், "வரம்" "சரீரம்" "ஸைனியம்" இவைகளின் பலம் (ஹே அரசே!) மூன்று உலகங்களிலும் உனக்கு அதிகம். புகழ்பெற்றவர்களை நீ ஜயித்திருக்கிறாய். உன் புத்திரன் இந்திரனை பலாத்காரமாய் பிடித்து பிரம்மாவின் வார்த்தையால் விட்டான். இப்பொழுது சத்துருக்களை ஜயிப்பதற்கு அந்த இந்திரஜித்துக்கு உத்திரவு செய்யவேண்டும்," என்று இராவணனிடம் கூறினார்கள்.

८ वित्रस्तंविबुधद्रुहंस्वविमतस्मृत्याविधायांजलिम्
सेनान्यस्तमबोधयन्नभिमतंदृप्ताःप्रहस्ताऽऽदयः ।
विश्वस्ताःपरिवंचिताहनुमतासर्वेरणेदुर्हृदः
हन्तुंमामधुनाऽऽदिशैकमपरेतिष्ठन्तुतुष्टाइह ॥ १५ ॥

தன் சத்துருவை நினைத்து பயந்ததேவ சத்துருவான இராவணனைப் பார்த்து மதம்பெற்ற "பிரஹஸ்தன்" முதலிய ஸேனாதிபதிகள் அஞ்சலிபந்தம் செய்து கொண்டு (கைகளைக் கும்பிட்டுக்கொண்டு) "நாம் எல்லோர்களும் நம்பிக்கையாயிருக்கும் பொழுது ஹனுமான் ஏமாற்றினான். இப்பொழுது யுத்தத்தில் சத்துருக்

களைக் கொல்லுவதற்கு எனக்கு ஒருவனுக்கு உத்திரவு கொடுக்க வேண்டும். மற்றவர்கள் ஸந்தோஷமாய் இவ்விடத்தில் இருக்க வேண்டும்” என்று அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்.

वामानेतुमिहाऽऽगतास्त्वदनुजोनःप्रैषथद्राघवौ
इत्युक्तावुपयास्यतश्चभरतंसेनांविहायामिताम् ।
अस्त्रैरश्मभिराहतंकपिबलंवीक्ष्यस्वयंत्यक्ष्यतः
प्राणान्बिभ्रतमर्त्यगात्रमितितंयोवज्रदंष्ट्रोऽब्रवीत् ॥ १६ ॥

“ஹே இராமலக்ஷ்மணர்களே! உங்களின் தம்பி பரதன் உங்களை அழைத்து வருவதற்காக எங்களை அனுப்பினன். நாங்கள் இவ்விடம் வந்தோம்” என்று சொல்லும் பொழுது அவர்கள் அளவற்ற ஸேனையை விட்டு பரதனிடம் போகப்போகிறார்கள். அஸ்திரங்களாலும் கற்களாலும் கபிஸைனியம் கஷ்டமடைந்தபொழுது அதைப் பார்த்து அவர்கள் தானுக பிராணன்களை விடப்போகிறார்கள் (ஹே இராக்ஷஸராஜனே! மனிதர்களின் உருவத்தை அடையவேண்டும்” என்று “வஜ்ரதம்ஷ்ட்ரன்” இராவணனிடம் கூறினன்.

९ उद्युक्तान्रिपुनिग्रहायझटितिक्रुद्धान्निकुंभाऽऽदिमान्
नीतिप्रज्ञविभीषणोऽञ्जलिकरस्सान्त्वोपवेश्याथतान् ।
प्राहभ्रातरमीडनीयचरितेदण्डोनिरर्थोरिपौ
यावज्जीवहरंविमुंचतिशरंतंप्रीणयेष्टंददत् ॥ १७ ॥

நிகும்பன் முதலியவர்கள் கோபமடைந்து சீக்கிரம் சத்துரு ஸம்ஹாரத்திற்கு முயலும்பொழுது நீதிசாஸ்திரத்தில் புத்தி பெற்ற விபீஷணன் அஞ்சலிபந்தம் செய்து அவர்களை சமாதான வார்த்தையால் உட்காரச்செய்து பிறகு “துதிக்கத்தகுந்த நடைபெற்ற சத்துருவினிடம் சிக்ஷை வீணாய்விடும். பிராணனைப் பிடுங்கும் பாணம் போடப்போகிறான். விருப்பத்தைக் கொடுத்து சத்துருவை ஸந்தோஷமடைவிக்கவேண்டும்” என்று அண்ணனிடம் கூறினன்,

१० क्षेमंप्रापयितुंप्रमत्तमपितंसौभ्रातृकैकाऽऽलयः
संचिन्त्यैवविभीषणस्स्वयमुपैत्तूर्णंपरेद्यव्यथ ।
मन्त्रिष्वन्तिकगेष्ववोचदमितंयद्दुर्निमित्तंपुरे
प्रादृश्यंस्यनिवृत्तयेवितरभोरामायसीतान्नमन् ॥ १८ ॥

ஸௌஹாதரனிடத்தில் இருக்கும் அன்புக்கு ஓர் இடமான விபீஷணன் பிறகு மறுநாளில் "தவறி நடந்த இராவணனையும் க்ஷேமமடைவிக்கவேண்டும்" என்று நினைத்தே தானாக சீக்கிரம் இராவணனிடம் சென்றான். "ஹே அண்ணா! பட்டணத்தில் காணும் அளவற்ற கெட்டசகுனங்கள் விலகுவதின் பொருட்டு இராமன் பொருட்டு வணங்கி ஸீதையைக் கொடுக்கவேண்டும்" என்று அண்ணனிடம் மந்திரிகள் ஸமீபத்தில் இருக்கும்பொழுது கூறினான்.

११ सीतांप्राप्स्यातिमन्नराघवइतिस्वभ्रातरंप्रोक्तवान्
वैदेहींपरिचिन्तकःकृशतनुर्मन्त्रंविधित्सुस्सभाम् ।
प्राप्तःपार्थिवलक्ष्मणोदशमुखस्सर्वान्समाकारयन्
निश्शब्दैस्स्वमुखेक्षणैरभिवृतःप्राभाद्दिवीन्द्रोयथा ॥ १९ ॥

"இராமன் என்னிடமிருந்து ஸீதையை அடையப்போகிறதில்லை" என்று இராவணன் தன் தம்பியிடம் சொல்லி ஸீதையை நினைத்து சரீரமிளைத்து மந்திராலோசனை செய்யவிரும்பி இராஜ லக்ஷணங்களோடு ஸபைக்கு வந்து எல்லோர்களையும் வரவழைத்து சப்தமில்லாமல் தன் முகத்தை நோக்கும் பரிவாரங்களால் சூழப்பெற்று சுவர்க்கத்தில் இந்திரன்போல் விளங்கினான்.

१२ रक्षायैनगरस्यराक्षसपतौयोधान्समादिश्यतत्
स्वेष्टंवारिधितीरगावसुहृदावत्याहितंतत्कृतम् ।
उक्त्वानिद्रितकुंभकर्णकतयापूर्वंतुमन्त्राकृतिम्
सौख्यंमेऽद्ययथोच्यतामितिगिरिप्राहाथकुंभश्रवाः ॥ २० ॥

இராவணன் பட்டணத்தை காப்பாற்றுவதின் பொருட்டு யுத்த வீரர்களுக்கு உத்திரவு செய்து தன் விருப்பத்தையும் சத்துருக்கள் கடலின் கரையை அடைந்திருப்பதையும் அவர்கள் செய்த மிகுந்த பயத்தையும் கும்பகர்ணனுடைய நித்திரையால்

முன் மந்திராலோசனே செய்யாமலிருந்ததையும் கூறி "இப்பொழுது சுகம் வரும்படி செய்யவேண்டும்" என்று சொல்லும் பொழுது பிறகு கும்பகர்ணன் கூறினன்.

राजन्मुक्तनयाविमर्शतइदंप्राप्तंस्वयंमन्त्रिभिः
भीमस्तेग्रसनादभक्ष्यविततोरोगोयथापुष्कलः ।
छिद्रेषुप्रहरेयुरप्यसुहृदोयद्दुर्बलास्सद्बलम्
वीर्येणातनुनौषधैर्भिषगिवत्वांसौख्ययेयंद्रुतम् ॥ २१ ॥

"நீதியை விட்ட ஹே அரசே! பத்திய (ஹித) மற்ற உணவால் பயங்கரமான பெரும் வியாதிபோல் தானுகவாவது மந்திரிகளோடாவது ஆலோசிக்காததால் உனக்கு இவ்வித துக்கம் வந்திருக்கிறது. பல மற்ற சத்துருக்களும் பலமுள்ளவனுக்கு துன்பங்களில் துக்கத்தைச் செய்வார்கள். வைத்தியன் நல்ல ஔஷதங்களால் சுகமடைவிப்பது போல் அதிக பலத்தால் சீக்கிரம் உன்னே சுகமடைவிப்பேன்.

१३ सीतांकुक्कुटवृत्तितोभजविभोकस्त्वान्नियन्तेहते
शत्रून्तौनिहनिष्यतोऽनुजसुतावुक्तिंमहापार्श्वजाम् ।
इत्यासाद्यदशाऽऽननोविधिकृतंशापंचवध्वाक्रमे
नाजानात्सुरभीषकंबलमरिर्मेयोत्स्यतीत्याहतान् ॥ २२ ॥

"ஹே பிரபுவே! கோழியின் செய்கை போன்ற பலாத்காரத்தால் ஸீதையை அடையவேண்டும் இவ்விடத்தில் உனக்கு தண்டனே விதிப்பவன்யார்? உன்னுடைய தம்பியும் புத்திரனும் அந்த சத்துருக்களே வதம் செய்யப்போகிருர்கள்" என்று மஹா பார்சுவனுடைய மொழியை இராவணன் கேட்டு பெண்களின் பலாத்காரத்தில் பிரம்மாவின் சாபத்தையும், தேவர்களுக்கு பயமளிக்கும் என்னுடைய பலத்தை சத்துரு அறியவில்லே. யுத்தம் செய்யப் போகிருன்" என்று அவர்களிடம் தெரிவித்தான்.

१४ धर्मंचलाघवदंविभीषणइदंप्राहश्रुतभ्रातृगीः
सीतांविद्ध्यहिमात्ममारणममूंप्राप्तांचदूरेत्यज ।

कल्याणायजगत्शरण्यमनघंरामंभजस्वाऽऽश्रितैः
यावत्तस्यशरोविशेतननतौतावत्प्रहस्तोबली ॥ २३ ॥

"தன்னைக் கொல்லும் பாம்பு என்று ஸீதையை நினைக்க வேண்டும். கிடைத்தவளையும் தூரத்தில் விரட்டவேண்டும். உலகத்திற்குச் சரணமளிக்கும் குற்றமற்ற இராமனை தன் பந்துக்களோடு க்ஷேமத்தின் பொருட்டு ஸேவிக்கவேண்டும். அவருடைய அம்பு சரீரத்தில் பிரவேசிக்காதவரை பிரஹஸ்தன் பலமுள்ளவன் என்று விபீஷணன் ஸஹோதரனுடைய வார்த்தையைக் கேட்டு தர்மத்திலிருந்து தவராததும் அவமதிப்பைக் கொடுக்கும் வார்த்தையைக் கூறினன்.

१५ वंशेविक्रमसन्ततत्रिभुवनेजातोवदेद्वेदृशम्
यद्भूतेऽवरजःपितात्रिदशजिद्यस्मारिकिंमेबलम् ।
इत्युक्तिंसविभीषणोऽग्रजसुतंप्राहाभकोमन्त्रवित्
नैवत्वंपितृघातकोयदकृतेर्नावारयस्त्वंगुरुम् ॥ २४ ॥

"பலத்தால் மூன்று உலகங்களிலும் பரவிய புகழ்பெற்ற புலஸ்தியவம்சத்தில் பிறந்தவன். இவ்விதம் சிறிய தகப்பன் சொல்லுவதுபோல் சொல்லுவானு? தேவர்களை ஜயித்த என்னுடைய பலம் மறக்கப்பெற்றதா?" என்று சொல்லும் அண்ணனுடைய புத்திரனைப் பார்த்து "நீ குழந்தை மந்திரா லோசனைக்கற்றறியாதவன். கெட்ட காரியத்திலிருந்து தன் தந்தையைத் தடுக்காததால் நீ பித்ருத்ரோஹி" என்று விபீஷணன் கூறினன்.

१६ ज्ञातिर्मेऽभ्युदयंपरंनसहसे शत्रुप्रियश्शत्रुवत्
त्याज्योभीषयसिस्तुतेरसुहृदश्चेदेवमन्योऽसुभिः ।
हीयेतापसरेत्सइत्यभिहितोराज्ञोत्पतन्खंचतुः
मन्त्रीप्राहविभीषणोऽग्रजामिदंतत्स्नेहपाशाऽऽवृतः ॥ २५ ॥

"என்னுடைய அதிக க்ஷேமத்தைப் பொறுக்காததால் நீ எனக்கு பங்காளி. சத்ருவைத் துதித்து என்னை பயமடைவிக்கிருய். சத்ருவினிடத்தில் அன்பு பெற்றவனைச் சத்ருவைப் போல் தள்ளவேண்டும். மற்றவன் இவ்விதமிருந்தால் பிரா

ணனை இழப்பான். அல்லது தேசாந்திரம் செல்லுவான்" என்று அரசனால் சொல்லப்பெற்ற விபீஷணன் நான்கு மந்திரிகளுடன் ஆகாயத்தில் பிரயாணம் செய்து அண்ணனைப் பார்த்து அவனுடைய சிநேஹ கயிற்றால் கட்டப்பெற்று கூறினான்.

राजन्ब्रूहियथेप्सितंपितृनिभोज्येष्ठोऽसिमेसोदरः
भ्रष्टोधर्मपथात्क्षमेय नवचः क्रूरंहितान्वेषिणः ।
वाक्यंमेनशृणोषिकालवशगःपथ्यंयदप्रीतिकृत्
वक्तातस्यचदुर्लभोरचयितास्यास्स्वस्तिमान्मांविना ॥

"ஹே அரசே! எனக்கு நீ தர்மமார்கத்திலிருந்து விலகினவனும் தந்தைக்கு ஸமமுமான மூத்த ஸஹோதரனாய் இருக்கிறாய். இஷ்டம்போல் சொல். கடும் சொல்லை நான் பொறுக்கவில்லை. நீ எமனுக்கு வசமாயிருப்பதால் நன்மை தேடும் என்னுடைய வார்த்தையைக் கேட்கவில்லை. அப்பிரியத்தைக் கொடுத்து நன்மை செய்யும் காரியத்தைச் சொல்லுகிறவனும் செய்கிறவனும் அரிது. நான் இல்லாமல் நீ க்ஷேமம் பெற்றவனாக இருப்பாய்"

१७ इत्युक्त्वाद्रुतमेत्यरामनिकटंखस्थोऽरिराहन्यताम् ।
इत्यात्मानमुदीक्ष्यवानरगणेतत्स्वामिनोदीरिते ।
निर्भीकोऽथविभीषणस्स्वचरितंप्रोच्चैर्निवेद्याऽऽहतान्
आर्याश्शंसतमामुपेतमगतिंरामायरक्षाऽर्थिनम् ॥ २७ ॥

என்று விபீஷணன் சொல்லி சீக்கிரம் இராமஸமீபம் சென்று தன்னைப் பார்த்து "ஆகாயத்தில் இருக்கும் சத்துருவைக் கொல்லுங்கள்" என்று வானரக்கூட்டத்தைப் பார்த்து அவர்களின் அரசன் உத்திரவு செய்யும் பொழுது பிறகு பயமில்லாமல் தன் கதையைத் தெரிவித்து ஹே பெரியோர்களே! "நான் கதியற்று ஸம்ரக்ஷணத்தை விரும்பி ஸமீபத்தில் வந்திருப்பதை இராமனிடம் தெரிவிக்கவேண்டும்" என்று வானரங்களைப் பார்த்து பலமாகக் கூறினான்.

वैरिभ्रातृपरिग्रहेऽथकपिषुप्रत्याहरत्स्वीप्सितम्
तद्वाक्यान्यपिपूर्वपक्षसरणावादायसिद्धान्तयन् ।

रामंविक्रमबाहुमाहहनुमान्व्याकृत्यधीतेस्सुधीः
स्वीकुर्वैतमपेतदोषमखलंजानेमनोऽस्याऽऽकृतेः ॥ २८ ॥

சத்ருவின் ஸஹோதரனை ஆட்கொள்ளுவதில் வானரங்கள் தங்களின் விருப்பத்தைத் தெரிவிக்கும் பொழுது அவர்களின் வார்த்தைகளையும் "பூர்வபக்ஷம்" (எதிராளியின் சொல்லால் நிலையற்றது) கோடியில் சேர்த்து "சித்தாந்தம்" (நிலைபெற்றது) முறையாககூறும் இலக்கணப்படிப்பால் நற்புத்தி பெற்ற ஹனுமான் பாஹுபலம் பெற்ற இராமனைப் பார்த்து தோஷமற்ற இந்த விபீஷணனை ஆட்கொள்ளவேண்டும். இவனுடைய உருவத்தால் இவனுடைய மனதைக்குற்ற மற்றதாக நினைக்கிறேன்" என்று கூறினார்.

१८ आवेद्यस्वमतंनयाऽऽगममथप्राचीनजाऽऽचारकम्
रामोनिश्चितधीरपेतविशयंकुर्वन्सखायंप्रियम् ।
कापोताऽऽचरितेनकण्डुवचसास्वामेयवीर्यःस्थितः
सर्वाभीप्सितसङ्गतिस्वशरणंतंचाङ्गचकार्षीत्तदा ॥ २९ ॥

பிறகு நிச்சய புத்திபெற்ற இராமன் தன்னுடைய (சரணமென்றவனை ஸம்ரக்ஷிக்கவேண்டும்) என்கிற அபிப்பிராயத்தையும் நீதி சாஸ்திரத்தையும் அவ்விதம் பெரியோர்களின் அனுஷ்டானத்தையும் தெரிவித்து மாடப்புறுவின் சத்ருவும் மனைவியைக் கொன்றவனுமான வேடன் தன் மரத்தடியில் வரும் பொழுது அவனுக்கு இரையாகவேண்டும் என்று அக்கினியில் தானுகக்குதித்துக் காப்பாற்றினது." என்ற செய்கையாலும் "துன்பமடைந்தவர்களை ரக்ஷிக்கவேண்டும். சத்ருவாகினும் சரணமென்றவனை ரக்ஷிக்கவேண்டும் பிராணனைப் பொருட்படுத்தக்கூடாது. அவ்விதம் செய்யாவிட்டால் வந்தவன் துன்பமடைந்து இருந்தவனுடைய பண்ணியத்தை அபஹரித்துச் செல்லுகிறுன்" என்கிற "கண்டு முனியின்" உபதேசத்தாலும். தனக்கு அளவற்ற பலம் இருப்பதாலும் பிரிய சினேஹிதனுன சுக்ரீவனுடைய ஸந்தேஹத்தை விலக்கி தன்னைச் சரணமடைந்த விபீஷணனை எல்லோர்களும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும்படி விரும்பும் பொழுது அப்பொழுது அங்கீகரித்தார்.

१९ रामादेत्यविभीषणोऽपभयदंहस्तावलंबंदिवः
हृष्टःप्राप्यधरांनमन्ननुगतैस्स्वस्याऽऽगतिंकीर्तयन् ।
तेनाऽऽज्ञप्तउदाहरन्नरिबलंरक्षोनिहत्याखिलम्
त्वांलङ्काऽधिपमातनोमिसुमनोभोरित्यवादिद्रुतम् ॥

விபீஷணன் இராமனிடமிருந்து பயத்தைத்தீர்க்கும் கைப்பிடிப்பை அடைந்து ஸந்தோஷமாய் ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்து வணங்கி பின் வந்தவர்களுடன் தன் வரவைத் தெரிவித்து அவரிடம் உத்திரவுபெற்று இராக்ஷஸர்களின் பலத்தைக் கூறும் பொழுது "எல்லா இராக்ஷஸர்களையும் கொன்று அன்புபெற்ற ஹே விபீஷண! உன்னை இலங்கை வேந்தனாகச் செய்கிறேன்" என்று சீக்கிரம் அவரால் கூறப்பெற்ருன்.

सौमित्रावभिषेचयत्यभिमतंवारान्निधेर्वारिणा
रामोविक्रमवारिधिर्विजयदोयस्साश्रितानांपरम् ।
सन्तर्तुंसलिलाऽऽकरंप्रियसखप्रोक्तांचिकीर्षुर्मुदा
भ्रात्रानीतकुशेष्वशेततटगस्सन्त्यक्तपानाशनः ॥ ३१ ॥

இலக்ஷ்மணன் அன்பனை விபீஷணனுக்கு ஸமுத்திர ஜலத்தால் அபிஷேகம் செய்யும் பொழுது பலத்திற்கு இருப்பிடமாயும் அண்டினவர்களுக்கு அதிக வெற்றியைக் கொடுக்கும் இராமன் ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு தன் சினேஹிதனுடைய சொல்லைச்செய்ய விரும்பி கடற்கரையை அடைந்து ஜலம் உணவு இவைகளைத் தள்ளி ஸஹோதரன் கொண்டு வந்த தர்ப்பங்களில் ஸந்தோஷமாய்ப் படுத்தார்.

२० सुग्रीवप्रतिगम्यतांस्वनगरींसैन्यैर्नरस्त्र्याहृतौ
किंतेवानरकिंसुराममपुरींपश्येयुरन्येकुतः ।
शार्दूलाद्विमतंनिशम्यबलिनंत्वस्तस्यरक्षःपतेः
इत्युक्तिंस्वविभेदिकांखगशुकःप्राबोधयद्वानरान् ॥ ३२ ॥

ஹே சுக்ரீவ! ஸைனியங்களுடன் உன்னுடைய நகரத்திற்குத் திரும்பிச்செல்லவேண்டும். ஹே வானரா! மனிதப் பெண்ணை அபஹரித்ததில் உனக்கு என்ன கெடுதி. தேவர்களும்

என் பட்டணத்தைப் பார்ப்பார்களா? மற்றவர்கள் எவ்விதம் பார்ப்பார்கள்? "சத்துரு பல முள்ளவன்" என்று சார்தூலனிடமிருந்து கேட்டு பயந்த இராவணனுடைய வார்த்தையை வானரங்களைப் பார்த்து அவர்களைப் பிரிக்கும்படி சுகன் ஆகாயத்தில் இருந்துகொண்டு கூறினான்.

अज्ञात्वायदमोघविक्रमनिधिंदूरेव्यपोह्याऽऽयकम्
तत्कान्तामहरोनिहत्यखगतिंद्रक्ष्यस्ययेतत्फलम् ।
त्वांहन्स्यामिसहाऽऽश्रितैरितिवदन्रक्षोऽधिपंसूर्यजः
संगृह्याऽऽशुशुकंनिपीडयहरिभीरामाऽऽज्ञयाऽमोचयत् ॥

"(ஹே இராவணா!) இராமன் பயன்பெற்ற பலத்திற்கு இருப்பிடம் என்று அறியாமல் அவரை தூரத்தில் விலக்கி ஜடாயு பக்ஷியையும் கொன்று அவருடைய மனைவியை அபஹரித்தாய். அதனுடைய பயனைப்பார்க்கப்போகிறாய். உன்னை பந்துக்களோடு கூடக்கொல்லப் போகிறேன்" என்று இராவணனைக்குறித்துச் சுக்ரீவன் கூறி வானரங்களால் சுகனை சீக்கிரம் பிடித்து துன்பமடைவித்து இராமனுடைய உத்திரவால் விடச்செய்தான்.

२१ अम्भोधावभिपूजितेत्रिदिनतोदर्पेणनोपागते
तत्संशोषणकामनोधृतधनुःक्रूरान्विमुंचन्शरान् ।
रामस्स्फीतमरुद्विचालितजलंकुर्वन्सधूमंभिया
भ्रात्राऽभाष्यवलंब्यचापममरैर्मामेतिखेतापसैः ॥ ३४ ॥

ஸமுத்திரராஜன் மூன்றுநாள் பூஜை செய்யப்பெற்றும் கர்வத்தால் வராமலிருக்கும்பொழுது இராமன் அதை வற்றவைப்பதில் மனங்கொண்டு வில்லை எடுத்து பயங்கரமான பாணங்களைப் பிரயோகித்து அதிக காற்றால் ஜலம் நன்றாய் கலங்கி புகை சூழும்படி செய்யும்பொழுது பயத்தால் வில்லைப்பிடித்துக்கொண்டு ஸஹோதரனாலும் ஆகாயத்தில் ரிஷிகளாலும் வேண்டாம் வேண்டாம் என்று தேவர்களாலும் கூறப்பெற்றார்.

२२ संशोष्यसरित्पतेतवजलंमूढत्राजिष्यन्तितम्
पारंपादतलेर्वानरवराधूळिमहान्स्यादिति ।

ब्रह्माऽस्त्रंस्वशरेऽभियोज्यबलवद्रामेभिरामेक्रुधा
सकर्षत्युपयातदुश्शकुनतस्सर्वेजनास्तत्रसुः ॥ ३५ ॥

"ஹே மூடா! நதிகளின் நாதா! உன்னுடைய ஜலத்தை வற்றவைத்து அக்கரையைக் குரங்குகள் காலால் அடையப் போகின்றன. அதிக தூளி உண்டாகும்" என்று பிரியமடைவிக்கும் இராமன் கோபத்தால் பிரம்மாஸ்திரத்தைத் தன் பாணத்தில் பூட்டி பலமாக இழுக்கும்பொழுது ஸமீபத்தில் வந்த அபசகுனங்களால் எல்லா ஜனங்களும் பயந்தார்கள்.

उत्थायांभसउज्वलाऽऽकृतिरपांराशिर्वधूसंयुतः
रामंसांजलिराहितंशरमपिप्रक्षेपयन्नौत्तरे ।
कान्तारेद्रुमकुल्यनाम्निमरुतामाहन्तुमाभीरजाम्
सेतुंत्वष्ट्रसुतःकरोत्वितिगिराप्रीणय्यसोऽन्तर्दधे ॥ ३६ ॥

ஸமுத்திரராஜன் அழகிய உருவம்பெற்று மனைவிகளோடு கூடி ஜலத்திலிருந்து எழுந்திருந்து அஞ்சலிபந்தம் செய்து, பூட்டிய பாணத்தையும் வடக்கு திசையில் இருக்கும் துருமகுல்லியமென்று பெயர்பெற்ற காட்டில் சூத்திரர்கள் பாபிகளாய் இருப்பதால் (அவர்களைத் தொடுவதற்கு மனமில்லாமல் ஜலம் விலகி) உண்டான ஜலமற்ற பூமியின் தோஷத்தை விலக்குவதற்கு விடச்செய்து விசுவகர்மாவின் புத்திரனான நளன் அணையைச் செய்யவேண்டும்" என்கிற வார்த்தையால் இராமனை ஸந்தோஷமடைவித்து மறைந்தான்.

आदिष्टारघुपुङ्गवेनहरयश्चाऽऽनिन्युरुर्वीरुहः
शैलान्तान्जगृहेनलोऽन्तरुदधेस्सेतुंव्यधाल्लीलया ।
अह्नयाद्येचचतुर्दशाधिकजवादाविंशतेरात्रयो
विंशत्यन्तकयोजनंक्रतुभुजोरामंमुदातुष्टुवुः ॥ ३७ ॥

குரங்குகள் இராமனால் உத்திரவு செய்யப்பெற்று மரங்களையும், மலைகளையும் கொண்டுவந்தார்கள். நளன் அவைகளை வாங்கினான். விளையாட்டாக முதல்நாளில் பதினான்கு யோஜனை தூரமும் இருபது யோஜனை முதல் இருபத்துமூன்று யோஜனைமுடிய (முதல்நாளில் 14, இரண்டாவது நாளில் 20,

மூன்றாவது நாளில் 21, நான்காவது நாளில் 22, ஐந்தாவது நாளில் 23 யோஜனை தூரம்) ஸமுத்திரத்தின் நடுவில் அதிக வேகமாய் அணைகட்டினான். தேவர்கள் ஸந்தோஷமாய் இராமனைத் துதித்தார்கள்.

२३ रामस्सेतुपथेनतेनजलधिंनिस्तीर्यसैन्यैःपुरः
वीक्ष्याभद्रनिमित्तमाशुरिपुभिर्निश्चित्ययुद्धंमहत् ।
प्रेप्सुस्सोदकभक्ष्यदेशमतनुंभ्रात्राचलङ्काऽन्तिकम्
प्राप्यस्वानुगयुद्धहर्षनिनदादात्मन्यहृष्यद्भृशम् ॥ २८ ॥

"கும்பகர்ணன்" சுக்ரீவனிடத்தில் பிரயோகித்த சூலாயுதத்தை "ஹனுமான்" தன் முழங்கால்களின் அடியால் ஒடித்ததும் மலை முடியின் அடியால் "சுக்ரீவன்" மூர்ச்சை அடைந்ததும் இவனை எடுத்துக்கொண்டு பட்டணத்தில் வரும்பொழுது சுக்ரீவன் சத்துருவின் சைத்யோபசாரத்தால் பிராணனைப்பெற்று அவனுடைய காது மூக்குகளை தன் நகங்களால் பிளந்ததும் யுத்தத்திற்கு எதிர்முகமாக வந்தான்.

सौमित्रिंत्ववमत्यवीरवचसाबालोऽयमित्यात्मनः
युद्धस्यार्थिनमाददद्धनुरदोज्यानादतःकोपयन् ।
ऐन्द्रेणेन्द्ररिपोश्शरेणकदलीलावंविलूयद्रुतम्
हस्ताङ्घ्रीनभिनद्गलेसुरभियार्तंरामआर्तप्रियः ॥ ११८ ॥

வீரவாதத்தால் "இவன் சிறுவன்" என்று இலக்ஷ்மணனை அவமதித்து தனக்கு யுத்தத்தை விரும்பும் கும்பகர்ணனை துன்பமடைந்தவர்களிடத்தில் அன்புபெற்ற இராமன் வில்லை எடுத்து அதன் நாண் சப்தத்தால் கோபமடைவித்து இந்திராஸ்திரத்தால் இந்திர சத்துருவின் கைகளையும் கால்களையும் வாழைமரத்தை வெட்டுவதுபோல் வெட்டி சீக்கிரம் தேவர்களின் பயத்தோடு கழுத்தில் பிளந்தார்.

शीर्षंव्योम्निसुदूरगंशरजवात्देवद्विषोऽधःपतत्
चर्यागोपुरवप्रगेहमतनुप्राभंजयत्सत्वरम् ।
कायोवारिधिमध्यगोजलचरान्संमर्दयन्शैलवत्
प्रापाधस्तलमन्तरिक्षसदनास्सन्तुष्टुवूराघवम् ॥ ११९ ॥

கும்பகர்ணனுடைய தலை பாணத்தின் வேகத்தால் ஆகாயத்தில் வெகுதூரம் சென்று கீழே விழுந்து பெரியமதில்களையும் அதன் ஸமீபப் பிரதேசங்களையும் கோபுரங்களையும் வீடுகளையும் சீக்கிரம் ஒடியச் செய்தது. அவனுடைய உடல் ஸமுத்திரத்தின் நடுவை அடைந்து மலைபோல் ஜல ஜந்துக்களை அழித்து பாதாளம் சென்றது. ஆகாயத்தில் இருக்கும் தேவர்கள் இராமனைத் துதித்தார்கள்.

६८ श्रुत्वाभ्रातरमाहतंदशमुखश्शोकाद्व्यलापीच्चिरम्
हावीराद्यविहायमांयमगृहंप्राप्तोऽसिकिंकोपतः ।
मच्छत्रूनविजित्यतेनकिमपिक्रूराहिवज्राऽऽहतिः
किंराज्येनाविनात्वयाऽवनिजयाप्राणैर्यदास्ताद्विषत् ॥

"இராவணன்" ஸம்ஹாரதனன. கும்பகர்ணன் வதமடைந்ததைக் கேட்டு, "ஹே வீரா! இப்பொழுது என்னைவிட்டு கோபத்தால் நீ எமகிருஹம் சென்றாயா? கடுமையான வஜ்ராயுதத்தின் அடியும் உனக்கு ஒன்றும் செய்யாமலிருந்ததால் என் சத்துருக்களை ஜயிக்காமல் ஏன் சென்றாய்? நீ இல்லாமல் இராஜ்யமும் ஸீதையும் எனக்கு எதற்கு? சத்துரு இருப்பதால் என் பிராணனும் எதற்கு? அந்தோ?" என்று துக்கத்தால் வெகுநேரம் புலம்பினான்.

६९ यद्धीमान्सविभीषणोऽप्यवमतस्तेनेदमाप्तंत्विति
प्रक्लिष्टंत्रिशिरास्तदादशमुखंसंहर्षयन्विक्रमी ।
कालेनेवसचोदितोरथगतःप्रायाद्युयुत्सूरिपून्
रक्षोभिस्सवरायुधैरनुगतस्तेचातिकायाऽऽदयः ॥ १२१ ॥

"புத்திசாலியான விபீஷணனை அவமதித்ததால் இந்த துக்கம் வந்தது" என்று துக்கமடைந்த இராவணனை ஸந்தோஷிக்கச் செய்யும் பலமுள்ள "திரிசிரஸ்" (மூன்று தலை பெற்றவன்) எமனால் ஏவப்பெற்றவன்போல் இரதத்தில் ஏறி யுத்தம்செய்ய விரும்பி நல்ல ஆயுதம்பெற்ற இராக்ஷர்களால் பின்தொடரப் பெற்று சத்துருக்களை அடைந்தான் "அதிகாயன்" முதலியவர்களும் அவ்விதமே.

युद्धेतत्रनरान्तकोदिविचरैस्संश्लाघितेवाजिग :
प्रासेनद्रुमवासिन : प्रविरळान्कुर्वन्प्रशीर्णेद्दढे ।
तस्मिन्वालिजवक्षसिप्रविहतेमुष्ट्याहतेऽश्वेक्रुधा
तत्पातेनविसंज्ञयन्तमपिमप्रापद्यतैतेनताम् ॥ १२२ ॥

தேவர்களால் சிலாகிக்கப்பெற்ற அந்த யுத்தத்தில் "நராந்தகன்" குதிரையில் ஏறிக்கொண்டுபிராஸாயுதத்தால்வானரங்களைக் குறையும்படிச்செய்து அவ்வாயுதமும் அங்கதனுடைய பலமுள்ள மாரில் அடிக்கப்பெற்று சிதறியபொழுது குதிரையும் முஷ்டியால் அடிக்கப்பெற்று நாசமடைந்ததும் கோபத்தால் முஷ்டியைவிழச் செய்து அங்கதனையும் பிரக்ஞையை விடச்செய்து அவனால் அந்த ஸ்திதியைத் தானும் அடைந்தான்.

७० नेत्रेद्वे अपिपातयन्तलहतेस्संरावयन्वारणम्
दन्तंतस्यविकर्षयन्सुरारिपुं तेनाङ्गदोऽक्लेशयत् ।
रक्षोभिः परितोवृतस्तदनुगौ मुष्ट्यामरुद्वाह्निजौ
शैलेनाथमहोदरंचादिविषन्मैत्रीं भृशंनिन्यतुः ॥ १२३ ॥

"அங்கதன்" இராக்ஷஸர்களால் சூழப்பெற்றும் உள்ளங்கையின் அடியால் யானையின் இரண்டு கண்களையும் விழச்செய்து அதையும் கத்தச்செய்து அதனுடைய தந்தத்தைப் பிடுங்கி அதனால் இராவண புத்திரனை "தேவாந்தகனை" துன்பமடைவித்தான். பிறகு அங்கதனைப் பின்தொடர்ந்து வந்த வாயு புத்திரனை "ஹனுமானும்" அக்கினி புத்திரனை "நீலனும்" முஷ்டியாலும் மலையாலும் தேவாந்தகனையும் இராவண ஸஹோதரனை "மஹோதரனையும்" தேவர்களிடத்தில் அதிக அன்பை அடைவித்தார்கள்.

आविद्धास्त्रिशिरश्शरैः पवनजस्तद्वाजिनोदारयन्
तीक्ष्णाग्रैर्नखरैर्हरिर्गजमिव प्राभंजयन्सद्बलः ।
शक्तिंतस्यमहाबलामुरसितत्खड्गाऽऽहतस्तंतलात्
आहत्याथतदुत्तमाङ्ग मखिलं खड्गीचकर्तद्रुतम् ॥ १२४ ॥

அதிக பலம்பெற்ற "ஹனுமான்" இராவண புத்திரனை "திரிசிரஸ்ஸின்" பாணங்களால் அடிக்கப்பெற்று அவனுடைய

குதிரைகளை கூர்மை நுனிபெற்ற நகங்களால் சிங்கம் யானையைப் பிளப்பதுபோல் பிளந்து அதிக பலம்பெற்ற அவனுடைய சக்தி ஆயுதத்தையும் ஒடித்து மாரில் அவனால் கத்தியால் அடிக்கப் பெற்று அவனை உள்ளங்கையால் அடித்து பிறகு கத்தியைப் பெற்று (அதனால்) அவனுடைய எல்லாத் தலைகளையும் சீக்கிரம் அறுத்தார்.

मत्तंस्वोरासितद्गदाऽभिहननं सोदृषभोवानरः
तद्धस्तात्प्रतिगृह्यतांचतरसातस्याध्युरोऽपातयत् ।
उन्मत्तं भृशचूर्णितक्षितिभृतं क्रुद्धो गवाक्षोगदा
घातातिव्यथितस्तलाऽऽहतिपतद्दन्तेक्षणं सोऽकरोत् ॥

(வருணனுடைய புத்திரனை) "ருஷபன்" மாரில் இராவண ஸஹோதரனை "மஹாபார்சுவனுடைய" கதையால் அடியைப் பொருத்துக்கொண்டு அவனுடைய கையிலிருந்து கதையை பலத்தால் பிடுங்கிக்கொண்டு அவனுடைய மாரில் அதை விழச்செய்து அவனையும் விழச்செய்தான். கவாக்ஷன் மலையை மிகவும் பொடியாகச்செய்த (இராவண ஸஹோதரனை) உன்மத்தனுடைய கதையின் அடியால் அதிகதுன்பமடைந்து கோபம் பெற்று உள்ளங்கையின் அடியால் அவனுடைய பற்களையும் கண்களையும் விழச் செய்தான்.

७१ दृष्ट्वाप्राप्तबलातिकायमबलेतत्कुंभकर्णभ्रमात्
दिक्षुप्रद्रवतिस्वसैनिकगणेवैभीषणाद्भाषणात् ।
प्राजानाद्विधिजाद्वरादतिबलं देवासुराजय्यताम्
रामस्तस्यविमुच्यवानरगणान्भीतान्स्वगस्याभियः ॥१२६॥

"இராமன்" பலம்பெற்ற இராவண புத்திரனை "அதிகாயனை"ப் பார்த்து தன் ஸைனியமான பலமற்ற வானரங்கள் அந்த கும்பகர்ணன் என்கிற பயத்தால் திசைகளில் ஓடும்பொழுது பயந்த வானரங்களை விட்டு பயமற்று தன்னிடம் வந்த அதிகாயனுடைய, பிரம்மாவின் வரத்தால் கிடைத்த மிகுந்த பலத்தையும் தேவாசுரர்களால் ஜயிக்கமுடியாமலிருத்தலையும் விபீஷணனுடைய மொழியால் அறிந்தார்.

वीरश्चेदिह मे रणं प्रदिश भो योत्स्यामि न प्राकृतान्
इत्युक्तं स निशम्य वीरवचनं रुष्टोऽहिवल्लक्ष्मणः ।
प्रत्याहाप्यतिकाय मार्जितबलश्चेद्दर्शयैतन्मयि
प्राप्तं मामपि विद्धि मृत्युमिति तौ युद्धं मिथश्चक्रतुः ॥१२७॥

"ஹே சத்துருக்களே! இவ்விடத்தில் வீரன் இருந்தால் எனக்கு யுத்தம் கொடுக்கவேண்டும். பலமற்ற வானரங்களோடு நான் யுத்தம் செய்யப்போகிறதில்லை' என்று சொன்ன வீர வாதத்தை இலக்ஷ்மணன் கேட்டு ஸர்ப்பம்போல் கோபித்து "நீ பலம் ஸம்பாதித்திருந்தால் அதை என்னிடம் காட்டவேண்டும். வந்திருக்கும் என்னை மிருத்யுவாக நினைக்கவேண்டும்" என்று அதிகாயனுக்கும் பதில் கூறினன். அவ்விருவர்களும் ஒருவருக் கொருவர் யுத்தம் செய்தார்கள்.

निर्भीकस्य रणे कृतप्रतिकृतेस्तस्यातिकायस्य तान्
सूताश्वान्नवरो निहत्य बलवान्मोघेष्विषुष्वात्मनः ।
तस्मिन्चिन्तितसन्ततः पवनतश्श्रुत्वेतरावध्यताम्
विध्यस्त्रेण विदार्य तस्य कवचं शीर्षं स्वहार्षीद्द्रुतम् ॥१२८॥

யுத்தத்தில் பயமற்று பதில்யுத்தம் செய்யும் அந்த "அதி காயனுடைய" குதிரைகளையும் ஸாரதியையும் பலமுள்ள இலக்ஷ் மணன் வதைத்து தன் பாணங்கள் வீணாக இருக்கும்பொழுது அவனிடத்தில் மிகுந்த கவலைபெற்று ("பிரம்மாஸ்திரம் தவிர) மற்ற அஸ்திரங்களால் அவனை வதம்செய்ய முடியாது" என் பதை வாயு பகவானிடம் கேட்டு பிரம்மாஸ்திரத்தால் அவனு டைய கவசத்தைப் பிளந்து சீக்கிரம் தலையையும் அறுத்தான்.

७२ बन्धूनां बलिनां वधात्स्वनगरीद्वारस्य संरोधनात्
नागास्त्रेण विबद्धयोरपि तयोर्मोक्षाद्भृशं दुर्लभात् ।
दुःखाऽऽर्तो दशकन्धरोऽतिमहितं नारायणत्वं स्मरन्
रक्षायै परितः पुरं निजचमूमादिश्य वेश्माविशत् ॥ १२९ ।

துக்கத்தால் வருந்தும் இராவணன் பலம்பெற்ற பந்துக்களின் நாசத்தாலும் தன் இலங்காபுரீவாயில்களின் தடுத்தலாலும் நாகாஸ்திரத்தால் கட்டப்பெற்ற அந்த இராமலக்ஷ்மணர்களின் மிகவும் அரிதான அதிலிருந்து விடுதலாலும் "அவர்கள் உயர்வான நாராயணனுடைய அம்சம் என்பதை நினைத்துபட்டணத்திற்கு நான்கு புறமும் காப்பாற்றுதலின்பொருட்டு தன் ஸைனியத்திற்கு உத்திரவுசெய்து அரண்மனை சென்றான்.

७३ मोहंसन्त्यज जीवतीन्द्रविजितिप्रद्वेषिणस्तातते
तद्बाणौघविभिन्नदेहविगलत्प्राणाः पतिष्यन्त्यमी ।
अद्यैवव्राजितुंसमादिशतुमामित्युक्तिभिः प्रीणयन् ।
संक्लिष्टं पितरंसुरेन्द्रविजयी योद्धुंसमायाद्रिपून् ॥१३०॥

"ஹே அப்பா! இந்திரஜித்து ஜீவிக்கும் அவனுடைய பாணக்கூட்டத்தால் சரீரம் பிளக்கப்பெற்று பிராணனை இழந்து உன்னுடைய சத்துருக்கள் விழப்போகிறார்கள். துக்கத்தைவிடவேண்டும் இப்பொழுதே போகும்படி எனக்கு உத்தரவு செய்யவேண்டும்" என்று வார்த்தைகளால் "இந்திரஜித்து" துக்கமடைந்த தகப்பனை ஸந்தோஷமடைவித்து யுத்தம் செய்வதற்கு சத்துருக்களை அடைந்தான்.

जुह्वन्मन्त्रविदध्वरेहुतवहं गृह्णन्चतस्माज्जयम्
विध्यस्त्रंस्वभिमन्त्र्यवासवजयीविष्णोः पदेऽन्तर्हितः ।
प्राप्तस्यन्दन आशुगैः कपिवरान्संमर्दयन्मोघयन्
तल्लक्ष्याण्यविलोकितोमरुदिवप्रापातयत्पादपान् ॥१३१॥

மந்திரங்களை அறிந்த "இந்திரஜித்து" யாகத்தில் அக்கினியில் ஹோமம்செய்து அக்கினியிடமிருந்து ஜயத்தைப்பெற்று பிரம்மாஸ்திரத்தை அபிமந்திரணம்செய்து ஆகாயத்தில் மறைந்து இரதத்தில் ஏறி பாணங்களால் வானரங்களைத் துன்பமடைவித்து கண்களுக்குப் புலப்படாமல் அவர்களின் குறிப்புகளை வீணாக்கி காற்று மரங்களை விழச்செய்வதுபோல் விழச்செய்தான்.

ब्रह्मास्त्रेणदशाननस्यतनयो वीरान्विधायाचलान्
अस्मानर्दयतिस्वयंभुवरतो जय्योनखेऽन्तर्हितः ।

तद्बाणान्प्रसहावहे इतितदासंगुप्तभावौतथा
कुर्वन्भूपतिलक्षणोनगरगः पित्रेजगादाखिलम् ॥ १३२ ॥

“இராவணனுடைய புத்திரனான “இந்திரஜித்து” பிரம்மாஸ்திரத்தால் வானரவீரர்களை (பிரக்ஞையற்று) அசையாமலிருக்கச்செய்து நம்மையும் துன்பமடைவிக்கிறான் பிரம்மாவின் வரத்தால் ஆகாயத்தில் மறைந்த இவனை ஜயிக்கமுடியாது. அவனுடைய பாணங்களைப் பொறுத்துக்கொள்ளுவோம்’ என்று அப்பொழுது மனதில் நினைவுபெற்ற இராமலக்ஷ்மணர்களை அவ்விதம் செய்து (குடை சாமரம் முதலிய) அரசனுடைய அடையாளம் பெற்று பட்டிணம்சென்று தகப்பனிடம் எல்லாவற்றையும் கூறினான்.

७४ निर्मुक्तव्यसनोविधातृवरतो वाताऽऽत्मजोमानयन्
तस्यास्त्रंसविभीषणोक्तिमुदितोब्रह्माऽऽत्मजस्याऽऽज्ञया ।
आनेतुं मृतजीवनींचकरणीं संधानसावर्ण्ययोः
वैशल्यस्यमहाबलः कृतमतिः व्योम्नि प्रतस्थेमहान्॥१३३॥

அதிக பலம்பெற்ற ஹனுமான் பிரம்மாவின் வரத்தால் துன்பத்திலிருந்து விலகி பிரம்மாஸ்திரத்தை பூஜித்து (இராமலக்ஷ்மணர்களுக்குக் கெடுதி இல்லை) என்று விபீஷணனுடைய வார்த்தையால் ஸந்தோஷமடைந்து பிரம்மபுத்திரனான ஜாம்பவானுடைய உத்திரவால் ம்ருதஸஞ்சீவினி (இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும்) ஸந்தானகரணி (வெட்டுப்பெற்றதுகளை ஒன்றாக சேர்த்துவைக்கும்) ஸாவர்ண்யகரணி முன் (இருந்த இரத்தத்தைக் கொடுக்கும்) வைசல்யகரணி (விரணங்களை ஆற்றும்) பச்சிலைகளைக் கொண்டுவருவதற்கு நினைத்துபெரிய உருவத்துடன் ஆகாயத்தில் பிரயாணம் செய்தார்.

नत्वाराममसुष्यबाणइवसद्रागम्बधीन्निस्तरन्
नीहाराचलमेत्यतत्रवसतः पश्यन्सुरान्तगृहम्।
कैलासस्यतथर्षभस्यनिकटेसर्वौषधीनांनगम्
प्राप्तस्तत्रमहौषधीर्व्यचिनुत प्रेम्णाऽभितः पर्यटन् ॥

"ஹநுமான்" இராமனை வணங்கி இராமபாணம்போல் வேகமாய் ஸமுத்திரங்களைத் தாண்டி ஹிமயமலையை அடைந்து அதில் வஸிக்கும் தேவர்களையும் அவர்களின் கிருகங்களையும் பார்த்து "கைலாஸம், ரிஷபம்" இந்த மலைகளின் ஸமீபத்தில் ஒஷதி மலையை அடைந்து அதில் நான்கு புறமும் ஸஞ்சரித்து உயர்ந்த பச்சிலைகளை அன்போடு தேடினார்.

तास्वन्तर्धिमुपागतासुझटिति प्रेक्ष्याऽऽगतं स्वार्थिनम्
यद्रामेकरुणा नतेनगममद्रक्ष्यस्यये त्विक्रमम् ।
इत्युक्त्वाशिखरं विलूयकदलीलावं तदीयंततः
निर्गत्याऽऽत्मकरेमहौषधिनगंबिभ्रत्स्वबन्धूनुपैत् ॥१३५॥

தங்களை விரும்பி வந்திருப்பதைப் பார்த்து அந்த பச்சிலைகள் சீக்கிரம் மறைந்தபொழுது "ஹே பர்வதமே! உனக்கு இராமனிடத்தில் கருணை இல்லாதலால் என்னுடைய பலத்தை அறியப் போகிருய்" என்று சொல்லி ஒஷதிமலையின் சிகரத்தைவாழை மரத்தைப்போல் ஒடித்து தன் கையில் தரித்து அதிலிருந்து "ஹநுமான்" பிரயாணம் செய்து தன் பந்துக்களை அடைந்தார்.

आनीतद्रुतमोषधिक्षितिधरेतद्वायुना निर्वृताः
वीरास्सप्तचषष्टिकोटिकपयः पूर्वप्रमीता अपि ।
प्राप्ताव्वृद्धिमपक्षयांसमनदन्तौराघवावाहताः
अंभोधौतुनिपातितानरभुजस्सोऽनीयताऽऽत्माऽऽस्पदम् ॥

ஒஷதி மலையைக்கொண்டு வந்ததும் அதன் காற்ருல் முன் இறந்த அறுபத்தேழுகோடி வானரங்களும் அந்த இராமலக்ஷ்மணர்களும் குறைவற்ற க்ஷேமத்தை அடைந்து கர்ஜித்தார்கள். அடிபெற்ற அரக்கர்களோ ஸமுத்திரத்தில் போடப்பெற்ருர்கள். ஒஷதிமலையை அதன் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

७५ पुत्रभ्रातृविनाशजव्यसनतोनाऽऽदेक्ष्यातिस्वानुगान्
योद्धूंरावणइत्यमर्षमधिकंसन्दित्सुनैवस्वयम् ।
सुग्रीवेणवनालयाअभिहिताउल्काभिरादीपयन्
लंकामुत्तमवस्तुराजितगृहांयुद्धेच्छवोनिर्भयाः ॥ १३७ ॥

"இராவணன் புத்திரர்கள் ஸஹோதரர்கள் இவர்களின் நாசத்தால் உண்டான துக்கத்தால் யுத்தம் செய்யும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்திரவு செய்யப் போகிறதில்லை" என்று அதிக கோபத்தைத் தான் கொடுக்க விரும்பியே சுக்ரீவனால் உத்திரவு செய்யப்பெற்ற வானரங்கள் யுத்தத்தை விரும்பி பயமில்லாமல் உயர்வான பொருள்களால் விளங்கும் வீடுகளைப் பெற்ற இலங்கையை எறித்த கட்டைகளால் கொளுத்தினார்கள்.

यद्यद्दिक्पतिभिःप्रगाढतपसासंपादितंकृच्छ्रतः
तत्सर्वंसमरेविजित्यविबुधानायासतोयोविना ।
आनैषीत्स्वपुरंसुधाऽशनततेर्दूतोहरीणांगिरा
तत्तत्स्वामिनमानिनीषुरिवतल्लंकामधाक्षीद्द्रुतम् ॥

திக்குபாலர்கள் அதிக தவத்தாலும் சிரமத்தாலும் ஸம்பாதித்த எல்லாப் பொருள்களையும் தேவர்களை யுத்தத்தில் ஜயித்து இராவணன் சிரமமில்லாமல் தன் பட்டணத்திற்குக் கொண்டு போனதால் தேவதூதனான அக்கினி வானரங்களின் வார்த்தையால் அந்தந்தப்பொருள்களை அவைகளின் எஜமானனிடம்சேர்ப்பிக்க விரும்பிகிறவன்போல் அந்த இலங்கையை சீக்கிரம் சாம்பலாக்கினான்.

शीर्षैर्व्योमगतागृहाश्शिखिशिखादग्धाविशीर्णाअधः
शैलावज्रहताइवातनुरवारक्षःकपीन्द्राश्शुचा ।
हर्षेणाथरघूद्वहौस्वधनुषातद्बाणनिर्भेदतः
लङ्कागोपुरमूर्ध्वगंदशमुखंनिन्युःप्रकोपंतदा ॥ १३९ ॥

பிறகு வஜ்ராயுதத்தால் அடிக்கப்பெற்ற மலைகள்போல் அக்கினி ஜ்வாலையால் பொசுக்கப்பெற்று சிதறி கீழே விழும் சிகரங்களால் ஆகாயமளாவும் வீடுகளும் துக்கத்தால் இராக்ஷஸர்களும், ஸந்தோஷத்தால் வானரங்களும், தங்களின் வில்லால் இராமலக்ஷ்மணர்களும் அவர்களுடைய பாணங்களின் பிளப்பால் உயரத்தில் சென்ற இலங்கையின் கோபுரங்களும் அதிக சப்தம்பெற்று இராவணனுக்கு அதிக கோபத்தை அப்பொழுது உண்டு பண்ணின.

रक्षोभिस्सहकुंभकर्णतनयःकुंभोनिकुंभोऽनुतम्
यूपाक्षाऽऽदय आगतारणभुवंमत्तैर्वनस्थैर्वृताम् ।
वीराअप्युभयेशिलातरुभृतःखड्गाऽऽदिनानाऽऽयुधाः
युद्धंचक्रुरलोलुपाअसुषुतेविस्रस्तकेशांबराः ॥ १४० ॥

இராக்ஷஸர்களோடு கும்பகர்ணனுடைய புத்திரர்களான "கும்பன்" நிகும்பன் இவர்களும் அவர்களுக்குப்பின் "யூபாக்ஷன்" முதலியவர்களும் மதம்பெற்ற வானரங்கள் சூழ்ந்த யுத்த பூமியை அடைந்தார்கள். இரண்டு பக்கத்தின் வீரர்களும் மலை மரங்களை எடுத்துக்கொண்டும் கத்தி முதலிய பலவித ஆயுதங்களை எடுத்துக்கொண்டும் பிராணனிடத்தில் பற்றுதலற்றவர்களாய் தலைமயிர் வஸ்திரம் நழுவும்படி யுத்தம் செய்தார்கள்.

७६ आघातंगदयारिपोर्गदयावीरोवहन्नंगदः
गिर्यग्रेणनिहत्यकंपनमपिप्रापातयत्कोपनः ।
मुष्ट्याऽऽघातदमात्मनोऽधिनिटिलंस्वीकृत्यतद्धस्ततः
खड्गंतेनचकारमूर्ध्नि तरसातंसप्रजंघंद्विधा ॥ १४१ ॥

வீரனான அங்கதன் ரோகத்தைக் கொடுக்கும் சத்ருவின் கதை என்ற ஆயுதத்தால் அடியைப்பெற்று கோபம்பெற்று மலையின் தலையால் (சத்ருக்களையும் நடுங்கச்செய்யும்) "கம்பனனையும்" விழச்செய்தான். தன் நெற்றியில் முஷ்டியால் அடித்த அந்த "பிரஜங்கனை" அவனுடைய கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு அதனால் அவனை சீக்கிரம் தலையில் இரண்டாகச் செய்தான்.

बाहुभ्यामभिपीड्ययूपनयनंमैन्दोविदार्याऽऽनने
रक्ताक्षंद्विविदःपिपेषबलवान्वीरोहरीणामिति ।
सेनांस्वस्यपराजितामपिपुनःकुंभोभृशंहर्षयन्
बाणैर्मर्मविभेदिभिर्व्यरमयद्युद्धात्धरीन्त्रासतः ॥ १४२ ॥

"வானரவீரனும் பலம்பெற்றவனுமான "மைந்தன்" கைகளால் "யூபாக்ஷனை" துன்பமடைவித்தும் "த்விவிதன்" ரக்தா

க்ஷணே" முகத்தில் பிளந்தும் பிசைந்தார்கள்" என்று தோல்வி அடைந்த தன் ஸைனியங்களும் மறுபடியும் அதிக ஸந்தோஷமடையும்படி "கும்பன்" மர்மங்களைப் பிளக்கும் பாணங்களால் வானரங்களை பயத்தால் யுத்தத்திலிருந்து ஒழியச் செய்தான்.

सोढातस्यशराऽऽहतिंहरिपतिर्बिभ्रत्करेपर्वतान्
तच्चापंप्रविभज्यवीरवचनैःकुंभंभृशंकोपयन् ।
आज्यैराग्निमिवेभमङ्कुशहतेर्द्वन्द्वाऽऽहवंनिर्भरम्
कुर्वन्तंनिरपातयद्गिरिनिभंसन्ताड्यमुष्ट्योरसि ॥ १४३ ॥

"சுக்ரீவன்" கும்பனுடைய பாணத்தின் அடியைப் பொறுத்து, கையில் மலைகளை தரித்து, அவனுடைய வில்லை ஒடித்து, ஆஜ்யாஹுதியால் அக்கினியையும், மாவிட்டியின் அடியால் யானையையும் கோபிக்கச் செய்வதுபோல் வீரவாதத்தால் மலை போன்ற அந்த "கும்பனை" மிகவும் கோபிக்கச்செய்து அதிகமான மல்லயுத்தம்செய்து மாரில் முஷ்டியால் அடித்துவிழச்செய்தான்.

७७ शत्रूणांभयदंप्रगृह्यपरिघंसंपातयन्तंदृढे
वक्षस्यात्मनआशुगस्यतनयस्तत्स्वीकृतोमोचयन् ।
आत्मानंचनिकुंभमप्यभिहतेमुंष्ट्याऽथनिष्पीड्यतम् ।
स्वीकृत्यास्यशिरोजहारपवनःपुष्पंस्ववृन्तादिव ॥ १४४ ॥

வாயுபுத்திரனை "ஹனுமான்" பகைவர்களுக்கு பயம் கொடுக்கும் பரிகம் என்ற ஆயுதத்தை கெட்டியான தன் மாரில் விழச்செய்த "நிகும்பனை" அவனால் பிடிக்கப்பெற்றும் முஷ்டியால் அடித்து துன்பமடைவித்து பிறகு தன்னை விடுவித்துக்கொண்டு காற்று புஷ்பத்தை அதன் காம்பிலிருந்து பிடுங்குவதுபோல் அவனுடைய தலையைப் பிடித்து பிடுங்கினான்.

७८ रक्षोभिर्मकराक्षआत्मनगराद्योद्धुंबहिःप्रस्थिते
रथ्यास्तस्यसमेऽस्खलन्सुचरणास्सूतप्रतोदस्तथा ।
वातिस्माचलमुत्क्षिपन्सुपरुषोवातोदृशावस्रगौ
युद्धान्नोपरतायमस्यवशगाअग्नेःपतङ्गाइव ॥ १४५ ॥

"மகராக்ஷன்" இராக்ஷஸர்களோடு தன் நகரத்திலிருந்து யுத்தத்திற்காக வெளியில் பிரயாணம் செய்ததும் அவனுடைய குதிரைகள் நல்ல கால்களைப்பெற்றும் ஸமபூமியில் இடறி விழுந்தன. ஸாரதியின் சவுக்கும் அவ்விதமே மலைகளை உயரத்தூக்கி எரியும் கடுமையான காற்று வீசினது. கண்கள் கண்ணீரைப் பெற்றன. அக்கினியிலிருந்து விளக்குவெட்டு பூச்சிகள்போல் எமனுக்கு வசமானவர்கள் யுத்தத்திலிருந்து ஒழியவில்லை.

७९ तातोमेनिहतस्त्वयेत्युपगतःक्रोधानलोवर्धनः
त्वद्दृष्ट्योज्वलितःप्रभूतमरुतादास्यत्ययेतफलम् ।
इत्युक्तोरघुसिंहआहखरजंवीर्यैखरस्यातिगम्
मांसंबाणहतस्यतेखगतयोभोक्ष्यन्तियद्वाक्खला ॥ १४६॥

"(ஹே இராமா!) நீ என்னுடைய தந்தையை வதம்செய்ததால் உண்டானதும் வளர்ந்ததுமான கோபமாகிற அக்கினி உன்னுடைய பார்வையாகிற பெருங் காற்றால் அதிகமாய் ஜ்வலித்து உனக்கு பலனைக் கொடுக்கப்போகிறது" என்று சொல்லப் பெற்ற "இராமன்" பலத்தில் கரனைவிட மேலானவனும் கரனுடைய புத்திரனுமான "மகராக்ஷனை"ப் பார்த்து "உன்னுடைய வார்த்தை கடுமையாயிருப்பதால் பாணத்தால் அடி பெற்ற உன்னுடைய மாம்ஸத்தைப் பக்ஷிகள் பக்ஷிக்கப் போகின்றன" என்று பதில் கூறினார்.

नाराचैरथनागवत्प्रकुपितोरामश्शरैरष्टाभिः
सूतंतस्यशरासनंरथहयान्प्रच्छिद्यशूलंत्रिभिः ।
अग्न्यस्त्रान्मकराक्षमात्मनिपरंभिन्दन्सतस्यानुगान्
आवासंगमयन्पुनस्त्रिदिवगान्प्राहर्षयद्विक्रमी ॥ १४७ ॥

பிறகு பலமுள்ள இராமன் யானைபோல் கோபித்து எட்டு நாராசபாணங்களால் மகராக்ஷனுடைய ஸாரதியையும் வில்லையும் ரதம் குதிரைகள் இவைகளையும் மூன்று பாணங்களால் சூலத்தையும் அறுத்து அக்கினியஸ்திரத்தால் மகராக்ஷனை மாரில் அதிகமாய் பிளந்து அவனைப் பின்பற்றியவர்களையும் மறுபடியும் அவனுடைய இருப்பிடத்தை அடைவித்து தேவர்களை ஸந்தோஷமடைவித்தார்.

८० पित्रादेशमुपाऽऽददत्सुरपतेर्जेताऽनलंप्रीणयन्
हव्यैरप्यमृतायितैर्वियतिचच्छन्नंरथंप्राप्तवान् ।
भीतिंभीमबलान्नयन्कपिवरान्बाणैरमोघैरघु
श्रेष्ठौतौव्यथयांचकारतादिषूनन्तर्हितोमोघयन् ॥ १४८ ॥

இந்திரஜித்து தந்தையின் உத்திரவைப்பெற்று அமிருதம் போன்ற ஹவிஸ்ஸுகளால் அக்கினியை ஆனந்தமடைவித்து ஆகாயத்தில் மறைந்த இரதத்தை அடைந்து பயமளிக்கும் பலம் பெற்ற வானரங்களை வீணில்லாத பாணங்களால் பயமடைவித்து மறைந்து இருந்து இராமலக்ஷ்மணர்களின் பாணங்களையும் வீணுக்கி அவர்களைத் துன்பமடைவித்தான்.

अन्तर्धाननियोधनेनकुपितंदेवेन्द्रजेतुभृशम्
ब्रह्मास्त्रेणविहन्तुमात्तमनसंतस्याखिलान्वंशजान् ।
तूष्णींकान्तारिताऽऽहतेर्नयपटूरामोनिषिध्यानुजम्
सद्यश्शक्रजितंशरैश्शमयितुंप्रत्यैक्षतास्येक्षणम् ॥ १४९ ॥

இந்திரஜித்தின் மறைவான யுத்தத்தால் மிகவும் கோபமடைந்து அவனுடைய வம்சத்தில் பிறந்தவர்களையும் பிரம்மாஸ்திரத்தால் வதம்செய்ய மனம்பெற்ற தம்பியான இலக்ஷ்மணனை நீதியில் சிறந்த இராமன் மௌனம் பெற்றவர்கள் மறைந்தவர்கள் இவர்களின் வதத்திலிருந்து தடுத்து இந்திரஜித்தை உடனே நாசம் செய்வதற்காக அவனுடைய பார்வையை எதிர்பார்த்தார்.

८१ संछन्नोऽपिविभीतआत्तधनुषोरामाद्रणेरावणिः
लिप्सुश्शत्रुविदारणास्त्रमनलंयष्टुंप्रवृत्तोविना ।
विघ्नैस्स्वाहितमोहनायकलयन्मायामयींजानकीम्
आदायस्वरथेपुरोहनुमतःकेशेष्वगृह्णाद्बलात् ॥ १५० ॥

இந்திரஜித்து யுத்தத்தில் மறைந்திருந்தும் வில்லைப்பெற்ற இராமனிடம் பயந்து சத்துருவைக் கொல்லும் அஸ்திரத்தை அடைய விரும்பி இடையூர் இல்லாமல் யாகம் செய்வதற்கு முயற்சித்து தன்னுடைய சத்துருக்களை மோஹிக்கும்படி செய்வதற்

காக மாயா ஸீதையை உண்டுபண்ணி தன் இரதத்தில் ஏற்றிக் கொண்டு ஹனுமானுக்கு முன்னிலையில் அவளைத் தலைமயிரில் பல மாகப் பிடித்தான்.

रामस्सुन्दवधूमिवाद्यललनांहन्यांविरोधाऽऽस्पदम्
पश्चाद्वःकपयस्तथेत्यभिदधत्प्रच्छिद्यखड्गेनताम् ।
संहृष्टोनिनदन्विवेशसबलंमत्वाऽऽत्मनस्सार्थताम्
प्राप्तादुःखमवेक्ष्यतंरणभुवस्तेवानराद्रुद्रुवुः ॥ १५१ ॥

"இராமன் சுந்தனுடைய மனைவியான தாடகையை வதம் செய்ததுபோல் விரோதத்திற்கு காரணமான இந்தப் பெண்ணை வதம்செய்கிறேன். ஹே வானரங்களே! உங்களைப் பிறகு அவ் விதம் செய்கிறேன்" என்று இந்திரஜித்து சொல்லி கத்தியால் அவளை வெட்டி ஸந்தோஷத்தோடு சப்தித்து தன்னை (விரும்பிய) காரியத்தின் பயனைப் பெற்றவனாக நினைத்து (தன்) ஸைனியத் தில் புகுந்தான் அந்த "இந்திரஜித்தை" வானரங்கள் பார்த்து துக்கமடைந்து யுத்த பூமியிலிருந்து ஓடினார்கள்.

८२ सान्त्वैस्स्वानुगयन्हरीन्प्रहरणंस्वंग्राहयन्मारुतिः
निर्मथ्यारिचमूंविचिन्त्यकदनंव्यर्थंविरोधावलेः ।
कृत्यंशक्रजितोविवक्षुरनुगैरामंययौरावणिः
संप्राप्तोऽथनिकुंभिलामयजतप्रीत्याऽऽशुहव्याशनम् ॥

"ஹனுமான்" ஸமாதான வார்த்தைகளால் வானரங்களைத் தன்னைப் பின் தொடரும்படி செய்தும் தங்களின் ஆயுதங்களை எடுக்கும்படி செய்தும் சத்துரு ஸைனியத்தை ஸம்ஹரித்தும் சத் துரு கூட்டத்தின் ஸம்ஹாரத்தை வீணாக நினைத்து "இந்திரஜித் தின்" காரியத்தை இராமனிடம் சொல்ல விரும்பி ஸைனியங்க ளோடு சென்றார். பிறகு "இந்திரஜித்து" சீக்கிரம் "நிகும்பிலை" என்ற காளியின் ஆலயம்சென்று ஸந்தோஷமாய் அக்கினியை ஆனந்தமடைவித்தான். (வேள்வி செய்தான்.)

८३ बुध्वावायुसुतात्प्रियानिहननंरक्षःकृतंराघवः
शोकेनातनुनानिपत्यधरणौसंमूर्छितामोचितः ।

क्लेशाद्वानरशीतलोपचरणैस्सौमित्रिणाऽऽलिङ्गितः
प्राणेनेवबहिश्चरेणसुहृदाप्रावाचिधीरेतरः ॥ १५३ ॥

இராமன் வாயு புத்திரனிடமிருந்து இராக்ஷஸன் செய்த நாயகியின் நாசத்தை அறிந்து பயந்து அதிக துக்கத்தால் பூமியில் விழுந்து மூர்ச்சை அடைந்து வானரங்களின் குளிர்ந்த உபசாரத்தால் துன்பத்தைத் துறந்து வெளியில் திரியும் பிராணன் போன்ற அன்புபெற்ற இலக்ஷ்மணனால் ஆலிங்கனம் செய்யப் பெற்று கூறப்பெற்றான்.

आर्यत्वांशुभवर्त्मगंविरचितोधर्मोनयद्रक्षति
स्वान्क्लेशान्प्रगुणीकरोत्यपथगंसंपोषयत्यप्यसन् ।
तन्नास्त्येषइतिध्रुवंव्यवसितंसर्वैरदृष्टोयतः
धर्मस्योपकृतिर्बलेनसुमतेतत्सेव्यतामेतरत् ॥ १५४ ॥

"ஹே அண்ணா! நல்வழியில் நடக்கும் உன்னை செய்த தர்மம் காப்பாற்றாமல் இருப்பதாலும் உன்னுடைய துன்பங்களை மிகுதியாகச் செய்வதாலும் தர்மம் இல்லாமல் இருந்தும் கெட்ட வழியில் நடப்பவனுக்கு சுகம்கொடுப்பதாலும் அதை எல்லோர்களும் பார்க்காமலிருப்பதால் அது இல்லை என்பது நிச்சயமான தீர்மானம் அந்த தர்மத்திற்கு பலம் உதவிசெய்கிறது. ஹே புத்திசாலியே! அதைக் கையில் கொள்ளவேண்டும். மற்றதை அகற்றவேண்டும்."

सत्यंचेन्मतमार्यतेऽनृतवचास्तातोनबद्धस्सकिम्
धर्मस्यार्थमवेहिमूलमनघाक्षिप्रंस्वराज्यत्यजा ।
तच्छिन्नंदुरितंकरोतिपुरुषस्तंप्राप्तुमात्तश्रमः
क्लेशोऽयंस्वसमार्जितोवनगतेश्शौर्याद्धरिष्यामितम् ॥

"ஹே அண்ணா! உனக்கு ஸத்தியத்தில் விருப்பம் இருந்தால் அஸத்தியம் சொன்ன பிதாவை ஏன் சிக்ஷிக்கவில்லை? ஹே குற்றமற்றவனே! பொருளை தர்மத்திற்கு மூலகாரணமாக அறியவேண்டும். நீ உன்னுடைய இராஜ்யத்தை இழந்ததால் தர்மத்தின் வேரை சீக்கிரம் வெட்டினாய். மனிதன் பொருளைப் பெறுவதற்கு

சிரமம் பெற்று பாபத்தைச் செய்கிறான். வனத்திற்கு வந்ததால் இந்த துன்பத்தைத்தானே ஸம்பாதித்தாய் அதை பலத்தால் நான் விலக்கப் போகிறேன்."

௮௪ रामंवीक्ष्यविभीषणोव्यसनिनंतत्कारणंलक्ष्मणात्
ज्ञात्वोवाचतमाश्रितप्रणयिनंजानामिरक्षःपतेः ।
भावंतांनहनिष्यतिक्रतुकृतेर्विघ्नंविनिश्चित्यवः
कृत्वैतत्कपटाज्जिगीषुरहितान्रक्षस्सुतोयक्ष्यते ॥ १५६ ॥

அண்டினவர்களிடம் அன்புபெற்ற துக்கமடைந்த இராமனை "விபீஷணன்" பார்த்து, அந்த துக்கத்தின் காரணத்தை இலக்ஷ்மணனிடமிருந்து அறிந்து கூறினான். இராவணனுடைய அபிப்பிராயத்தை நான் அறிகிறேன். அவன் ஸீதையைக் கொல்லமாட்டான். உங்களை யாகத்திற்கு இடையூராக நினைத்து இந்திரஜித்து மாயையால் இதைச் செய்து சத்துருக்களை ஜயிக்க விரும்பி யாகம் செய்யப்போகிறான்.

पूर्येतक्रतुरेषचेन्मृतिहरस्सर्वान्निहन्याद्बली
कर्तातस्यतमाहतंकुरुबलैःप्राज्ञाऽऽदिशस्वानुजम् ।
वीरश्चैत्यनिकुंभिलांसविशतुत्यक्त्वाविलंबंसह
प्राप्तोऽस्माभिरनुव्रजद्भिरहितंनूनंप्रहण्यात्शरैः ॥ १५७ ॥

மரணத்தை விலக்கும் இந்த யாகம் முடிவு பெற்றால் இதைச் செய்தவன் பலமடைந்து எல்லோர்களையும் கொல்லுவான். ஹே புத்திசாலியே! ஸைனியங்களால் அதை அழிக்கவேண்டும் தன் தம்பிக்கு உத்திரவு கொடுக்கவேண்டும். வீரனை இலக்ஷ்மணன் தாமதமன்னியில் "நிகும்பிலைக்கு" வரவேண்டும். பின் தொடரும் எங்களோடு கூடவந்து பாணங்களால் சத்துருவை நிச்சயமாய் ஸம்ஹரிப்பான்.

௮௫ संस्तभ्याऽऽत्मनिशोकमत्यवहितोरामोविदत्रावणेः
यज्ञापूर्तिनिकुंभिलाऽभ्यगातिजन्माश्चर्यदामाहातिम् ।
कर्तुंतांसविभीषणैःकपिवरैरन्वीयमानंमहा
धानुष्कंस्वसहोदरंकृतनतिंप्रातिष्ठिपत्स्वाशिषा ॥ १५८ ॥

இராமன் மனதில் துக்கத்தை அடக்கி மிகவும் ஸாவதானமாய், நிகும்பிலே செல்லாமலும் யாகம் நிறைவேறாமலுமிருப்பதால் உண்டான ஆச்சரியகரமான இந்திரஜித்தின் மரணத்தை அறிந்து அதை செய்வதற்கு விபீஷணனுடன் கூடிய வானர வீரர்கள் பின்தொடரும் வில்லில் தேர்ச்சிபெற்றவனும் தன்னை வணங்கினவனுமான ஸஹோதரனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

८६ रक्षस्सुक्षपितेष्वगैःप्रहरणैर्वायोस्सुतेनाभिया
यज्ञापूर्तिजयाक्रुधापरुषितंतत्साजिघांसावृतम् ।
इन्द्रस्यप्रजितंवियद्रथगतिंबाणैर्गतिंपश्चिमाम्
वैरिभ्योददतंविभीषणागिरासौमित्रिरालोकत ॥ १५९ ॥

"ஹனுமான்" பயமில்லாமல் மலை மரங்கள் இவைகளால் இராக்ஷஸர்களை அழிக்கும்பொழுது யாகம் நிறைவேறாத கோபத்தால் பயங்கரமாயிருந்து அவனைக் கொல்லவிரும்பி ஆகாயத்தில் இரதத்தால் ஸஞ்சரித்து பாணங்களால் சத்ருக்களை மரணமடைவிக்கும் "இந்திரஜித்தை', இலக்ஷ்மணன் விபீஷணனுடைய வார்த்தையால் பார்த்தான்.

८७ न्यग्रोधोपगतेःपुरास्वनिकटंयुद्धायसंप्रापितम्
सौमित्रिंचविभीषणंतदनुगंदृष्ट्वाऽनिनिन्दक्रुधा ।
किंतेनास्तिकृपापितृव्यतनयेन्याय्यंत्विदंकिंन्विति
प्रोक्तश्शक्रजितासआहवदभोस्तातस्यदुश्शीलताम् ॥

ஆலமரத்தை அடைவதற்கு முன் யுத்தத்திற்காக தன் ஸமீபத்தில் அழைத்துவரப்பெற்ற இலக்ஷ்மணனையும் அவன் பின்வந்த விபீஷணனையும் பார்த்து "இந்திரஜித்து" கோபத்தால் நிந்தித்தான். "ஹே சிறிய தகப்பனே! உனக்குப் பிள்ளையினிடம் தயவு இல்லையா? இது நியாயமா?" என்று சொல்லும் அவனைப் பார்த்து "விபீஷணன்" "அடே! பிதாவின் கெட்ட நடையைச் சொல்" என்று பதில் கூறினான்.

८८ वीराऽऽलापमथेतरेतरमुभौरामानुजोरावणिः
कृत्वाबाणकृताऽऽहतप्रातिहतौयुद्धंपरंचक्रतुः ।

प्राज्ञोयत्नानियुध्यतोरपाभियोर्नैकंविशेषंतयोः
प्राजानाद्बलिनोर्बलप्रवृतयोश्शस्त्रास्त्रनिष्णातयोः ॥१६१॥

"இலக்ஷ்மணனும்" "இந்திரஜித்தும்" ஒருவருக்கொருவர் விரவாதம்பேசி பாணங்களால் அடியையும் பதிலடியையும் செய்துகொண்டு மிகுந்த யுத்தம் செய்தார்கள். சரீர பலம் பெற்றும் ஸைனியங்களால் சூழப்பெற்றும் சஸ்திரங்களிலும் அஸ்திரங்களிலும் தேர்ச்சிபெற்று பயமில்லாமல் யுத்தம்செய்யும் அவ்விருவர்களில் புத்திசாலியும் ஒரு வித்யாஸமும் சொல்ல முடியவில்லை.

८९ वैवर्ण्यंवदनेविभाव्यसुमहाग्लानिंरणेरावणेः
प्रावेद्यत्वरयन्चलक्ष्मणमरेर्वर्मेषुभिःपाटयन् ।
वैमुख्यंश्रममुज्झतोरतिचिरंसंयुध्यतोस्तद्द्वयोः
आत्मीयस्याविभीषणोहितकृतेयुद्धेऽवतस्थेपुरः ॥ १६२ ॥

"இந்திரஜித்தின்" முகத்தில் நிறம்மாறி இருப்பதை "விபீஷணன்" பார்த்து யுத்தத்தில் அதிக களைப்பை இலக்ஷ்மணனுக்குத் தெரிவித்து சத்துரு ஸம்ஹாரத்தில் வேகம் செய்வித்து சத்துருவின் கவசத்தை பாணங்களால் பிளக்கச்செய்து, அவ்விருவர்களும் முகம் வாடாமலும் சிரமமில்லாமலும் வெகுகாலமாக யுத்தம் செய்யும்பொழுது இலக்ஷ்மணனுக்கு நன்மை செய்வதற்கு யுத்தத்தில் முன்னால் நின்றான்.

९० इच्छन्भ्रातृसुतस्यतस्यशमनंबाष्पाऽऽविलत्वाद्दृशोः
दक्षोनैवविभीषणोरचयितुंतान्प्राणुदद्वानरान् ।
वाक्यैर्हर्षबलप्रदैरिपुवधेतेवैरिणोऽघ्नन्नगैः
सूतंतस्यहयान्तथारघुवरःकुर्वन्पदातिंशरैः ॥१६३॥

"விபீஷணன்" ஸஹோதரபுத்திரனுடைய வதத்தை விரும்பியும் கண்களில் கண்ணீர் பெருகினதால் அவ்விதம் செய்ய முடியாமல் ஸந்தோஷத்தையும் பலத்தையும் கொடுக்கும் வார்த்தைகளால் சத்துருக்களை வதம் செய்யும்படி வானரங்களை

ஏவினுன். அவர்களும் மலை மரங்கள் இவைகளால் சத்துருக்களை வதைத்தார்கள். "இந்திரஜித்து" காலாளாக நிற்கும்படி அவனுடைய குதிரைகளையும் ஸாரதியையும் இலக்ஷ்மணன் பாணங்களால் வதைத்தான்.

९१ यःपश्यत्सुकपिष्वदृष्टइतरैःप्राप्तोऽपरंस्यन्दनम्
स्वाऽऽस्थानात्पुनरेत्यविस्मयकरोबाणैरमित्रानहन् ।
एकैकंकुपितोऽच्छिनद्रघुपतिश्चापंगृहीतंद्विषः
सूतंतस्यनिपातयन्निटिलगैरस्त्रैस्त्रिकूटाद्रिभाः ॥ १६४ ॥

"இந்திரஜித்து" வானரங்கள் பார்க்கும்பொழுது மற்றவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் ஆச்சரியம் வரும்படி வேறு இரதம்பெற்று தன் நகரத்திலிருந்து மறுபடியும் வந்து பாணங்களால் சத்துருக்களை ஸம்ஹரிக்கும் பொழுது "இலக்ஷ்மணன்" நெற்றியில் பிரவேசித்த அவனுடைய பாணங்களால் திரிகூடமலையின் ஒளியைப்பெற்று கோபமடைந்து அவனுடைய ஸாரதியை விழச்செய்து எடுக்கப்பெற்ற ஒவ்வொரு வில்லையும் அறுத்தான்.

आघातेनसुकोपितंस्वगदयाघ्नन्तंपितृव्यंहयान्
संरक्षन्विमतस्यजीवनहरादस्त्राद्बलीलक्ष्मणः ।
संत्रातोदिविजैरघूद्वहगुणान्शंसन्स्वसंरक्षकान्
ऐन्द्रास्त्रेणजहारवासवजितश्शीर्षंसुराणांभिया ॥ १६५ ॥

(சத்துருவின்) அடியால் கோபம்பெற்று தன்னுடைய "கதை" என்ற ஆயுதத்தால் குதிரைகளைக் கொல்லும் சத்துருவின் சிறிய தகப்பனுன விபீஷணனை, பிராணனைப் பிடுங்கும் அவனுடைய அஸ்திரத்திலிருந்து பலம் பெற்ற இலக்ஷ்மணன் காப்பாற்றி தேவர்களால் ஸம்ரக்ஷிக்கப்பெற்று ("இராமன் 'தர்மாத்மாவாகவும் ஸத்தியவானுகவும் பலத்தில் நிகரற்றவனுகவும் இருந்தால் ஹே பாணமே' இந்திரஜித்தை ஸம்ஹரிக்க வேண்டும்") என்று தன்னை இரக்ஷிக்கும் ஸ்ரீ ராமகுணங்களைத் துதித்து இந்திரனுடைய அஸ்திரத்தால் "இந்திரஜித்தின்" தலையை தேவர்களின் பயத்தோடு அறுத்தான்.

९२ आरोप्याङ्कमुपाऽऽगतंकरतलादामर्शयन्लक्ष्मणम्
रामोरावणिमर्दनप्रमुदितोमत्वाविहस्तांरिपुम् ।
संस्तुत्याथविभीषणाऽऽदिसुहृदोयुद्धाऽऽर्तितोमोचयन्
भैषज्येनसुषेणजेनकृपयातानातनोन्निर्वृतान् ॥ १६६ ॥

"இராமன்" இந்திரஜித்தின் வதத்தால் ஸந்தோஷமடைந்து ஸமீபத்தில் வந்த "இலக்ஷ்மணனை" மடியில் ஏற்றிவைத்துக் கொண்டு உள்ளங்கையால் தடவித் துதித்து சத்துருவான இராவணனை கையற்றவனாக நினைத்து பிறகு தயவால் "விபீஷணன்" முதலிய சிநேஹிதர்களை "சுஷேணனுடைய" வைத்தியத்தால் யுத்தத்தின் களைப்பிலிருந்து விலக்கி சுகமடைவித்தார்.

९३ पुत्रंप्राप्तसुराऽऽस्पदंदशमुखश्श्रुत्वाशुचाप्रालपत्
हा वत्सेन्द्रजितोऽपितेकथमियंजातादशामर्त्यतः ।
इत्यार्तोभ्रुकुटींमुखेषुविदधन्नेत्रेषुसंरक्तताम्
अक्रुध्यद्भृशदष्टदन्तवसनास्स्निग्धाविभीयुर्यतः ॥ १६७ ॥

புத்திரன் தேவலோகம் சென்றதை "இராவணன்" கேட்டு துக்கத்தால் புலம்பினன். "ஹே குழந்தாய்! இந்திரனை ஜயித்த உனக்கும் இவ்விதம் துன்பம் மனிதனிடமிருந்து எவ்விதம் வந்தது!" என்று துக்கித்து முகங்களில் புருவங்களின் நெரித்தலையும் கண்களில் அதிக சிகப்பையும் அடைந்து சிநேகிதர்களும் பயமடையும்படி நன்றாய் உதட்டைக் கடித்துக் கோபமடைந்தான்.

प्रीताद्द्रुघुजजन्मनस्स्वतपसासंपादितंकार्मुकम्
गृह्णन्तौनिजिघृक्षुरस्म्यसुहृदौनातोबिभीयामिति ।
प्रागल्भ्यादभिधायराक्षसकुलंशत्रोर्जिघांसुःप्रियाम्
प्राणेभ्योऽपिगरीयसींदशमुखस्तस्यास्समीपंययौ ॥१६८॥

"தன்னுடைய தவத்தால் ஸந்தோஷமடைந்த பிரம்மாவினிடமிருந்து ஸம்பாதித்த வில்லை எடுத்துக்கொண்டு சத்துருக்களை ஸம்ஹரிக்க விரும்புகிறேன். அவர்களிடமிருந்து பயமடைய

மாட்டேன்" என்று "இராவணன்" தைரியமாய் இராக்ஷஸர்களிடம்கூறி பிராணனைவிடப் பிரியமான சத்துருவின் மனைவியைக் கொல்ல விரும்பி அவளின் ஸமீபம் அடைந்தான்.

विज्ञायास्यचिकीर्षितंजनकजात्रस्तादशाऽऽस्यस्यसा
कुब्जांतांबहुधाव्यगर्हततदातत्स्वामिनींदुःखदाम् ।
कौसल्यांसमशोचदार्तवचनांतांवीक्ष्यधीमान्महा
पार्श्वोराक्षसनायकंव्यरमयद्योषिद्वधात्कुत्सितात् ॥१६९॥

"ஸீதை" "இராவணனுடைய" அபிப்பிராயத்தை அறிந்து பயந்து கூனியையும் துக்கத்தைக் கொடுத்த அவளின் எஜமானியையும் பலவிதமாக அப்பொழுது நிந்தித்தாள். "கௌஸல்யையை"க்குறித்து துக்கித்தாள். இவ்விதம் புலம்பும் ஸீதையை புத்திசாலியான "மஹாபார்சுவன்" பார்த்து நிந்திக்கத்தகுந்த ஸ்திரீவதத்திலிருந்து "இராவணனை ஒழிவுபெறச்செய்தான்.

९४ भीताद्रावणमूलसैन्यनिकरात्संयुध्यतोराघवः
तद्भीतंस्वकपीन्झषोऽम्बुधिमिवप्राविक्षदात्तेषुधिः ।
गन्धर्वास्त्रहतानराममरयोमोहादपश्यन्मिथः
मत्वाराममथाभिजघ्नुरमितानेकोऽपिशिष्येद्यथा ॥१७०॥

யுத்தம் செய்யும் இராவணனுடைய மூல ஸைனியத்தின் கூட்டத்திலிருந்து பயந்த தன்னுடைய வானர ஸைனியங்களை இராமன் காப்பாற்றுவதற்காக வில்லை எடுத்துக்கொண்டு ஸமுத்திரத்தில் மீன்போல் அந்த மூல ஸைனியத்தில் பிரவேசித்தார். சத்துருக்கள் கந்தர்வாஸ்திரத்தால் அடிக்கப்பெற்று மோஹத்தால் இராமனைப் பார்க்கவில்லை. பிறகு ஒருவருக்கொருவர் இராமனாக நினைத்துக்கொண்டு ஒருவன்கூட மிஞ்சாமலிருக்கும்படி அளவற்ற பேர்களும் அடித்துக்கொண்டார்கள்.

रामस्त्वासुहृदोरथान्ननननानाधारथान्वाजिनः
नानानानतनारनाक्रगणितान्तस्यप्रमत्तान्द्विपान् ।
नानानानखरूपचापगणितान्शूरान्चतस्याङ्घ्रिगान्
नानानाननादमाघयामितान्यामार्धमाजावहन् ॥ १७१॥

"இராமன்" யுத்தத்தில் தன் சத்துருவின் ஏழுகோடியே இருபத்தி ஒன்பது லெக்ஷம் இரதங்களையும், பத்துகோடியே இருபது லெக்ஷத்து அறுபதினாயிரம் குதிரைகளையும், பதிமூன்று கோடியே பன்னிரண்டு லெக்ஷத்து இருபதினாயிரம் மதங் கொண்ட யானைகளையும், நூற்று நாற்பத்தைந்து கோடியே எண்பது லெக்ஷம் பலம்பெற்ற காலாட்களையும் ஒண்ணரை மணியில் கொன்றார்.

யானைகளின் பதினாயிரத்தையும், லெக்ஷம் குதிரைகளையும், ஒண்ணரை கோடி இரதங்களையும், நூறுகோடி காலாட்கள் இவர்களின் ஸம்ஹாரத்தில் யுத்தத்தில் ஒரு முண்டம் (தலையற்ற உடல்) குதிக்கிறது. கோடி முண்டம் குதித்தால் இராமனுடைய வில்லின் மணி ஒரு ஸெகண்டு சப்திக்கிறது. இவ்விதம் ஒண்ணரை மணி நேரம் வில்லின் மணி சப்தித்தது என்றால் அவ்வளவு இராக்ஷஸர்கள் அழிந்தார்கள் என்று பெரியார் கூறுகிறார்.

एवंशात्रवमूलसैन्यममितंबाणैस्समाहत्यतत्
रामोऽबोधयदात्मबान्धवततेरानन्दसन्दायकम् ।
स्वास्त्रप्राभवमप्यवाङ्मानसगंरुद्रास्त्रवीर्याऽऽस्पदम्
प्रत्यक्षीकृतवैभवंत्रिभुवनंसन्मार्गगक्षेमदम् ॥ १७२ ॥

இராமன் இவ்விதம் பாணங்களால் சத்துருவின் அளவற்ற மூல ஸைனியத்தை ஸம்ஹரித்து தன் பந்துக்களின் கூட்டத்திற்கு ஆனந்தம் அளிக்கும் வாக்குக்கும் மனதிற்கும் அடங்காததும் ருத்திராஸ்திரத்தின் பலத்திற்கு இருப்பிடமும் மூவ்வுலகங்களாலும் நேரில் அனுபவிக்கப்பெற்ற பெருமை பெற்றதும் நல்வழியில் நடப்பவர்களுக்கு க்ஷேமம் கொடுக்கும் தன்னுடைய அஸ்திரத்தின் பெருமையை அறிவித்தார்.

९५ सङ्घीभूयनिशाचरेन्द्रसुहृदश्शोकार्दिताःप्रालपन्
वंशोऽयंक्षपितोऽद्यशूर्पणखयाकामेनदुर्वृत्तया ।
सर्वानत्स्यातिराक्षसान्जनकजारामस्यशौर्यंमहत्
जानीतेनचरावणोविधिहतोनोपैत्यमुंसद्गतिम् ॥ १७३ ॥

இராக்ஷஸப் பெண்கள் துக்கத்தால் வருந்தி கூட்டமாகக் கூடி புலம்பினார்கள். "காமத்தால் கெட்ட நடைபெற்ற சூர்ப்பணகை இந்த வம்சத்தை இப்பொழுது அழித்தாள்." "ஸீதை" எல்லா ராக்ஷஸர்களையும் ஸாப்பிடப்போகிருள் "இராவணனும்" தெய்வத்தால் அடிக்கப்பெற்றிருப்பதால் இராமனுடைய மிகுந்த பலத்தை அறியவில்லை, ஸாதுக்களுக்கு ஸம்ரக்ஷகனான இராமனை சரணமடையவுமில்லை."

९६ लङ्कायांपरिदेवितंस्वसुदतीरक्षोवधूनांमहत्
श्रुत्वारावणउक्तविक्रमकथःप्रस्थापयन्नग्रतः
रक्षांसिस्वयमारुरोहसधनुर्योद्धुंसकामोविधेः
सन्देशेनसदुर्निमित्तमखिलंभीदाय्यवज्ञायतत् ॥ १७४ ॥

"இராவணன்" இலங்கையில் தன்னுடைய ஸ்திரீகள் இராக்ஷஸ ஸ்திரீகள் இவர்களின் அதிக அழுகையைக் கேட்டு புஜபலத்தின் கதையைச் சொல்லிக்கொண்டு யுத்தம் செய்வதற்கு விரும்பி இராக்ஷஸர்களை முன்னால் பிரயாணம் செய்வித்து தெய்வத்தின் உத்திரவால் பயத்தைக் கொடுக்கும் எல்லா அபசகுனங்களையும் அவமதித்து தான் வில்லை எடுத்துக்கொண்டு இரதத்தில் ஏறினான்.

रक्षोनायकमन्वयुःकृतरणंकृत्तोत्तमाङ्गान्कपीन्
कुर्वन्तंव्यथितान्शरैरिपुहरैर्विस्मारिताऽऽयोधनैः ।
यत्रस्तोरघुनायकौबलनिधीद्वारेणतेनाऽऽगतम्
सैन्योपेतविरूपनेत्रकमहापार्श्वोदरास्सद्रथाः ॥ १७५ ॥

யுத்தத்தை மறக்கச்செய்து சத்ருக்களை ஸம்ஹரிக்கும் பாணங்களால் வானரங்களை தலைகள் அறுந்துவருந்தும்படி யுத்தம் செய்யும் பலத்திற்கு இருப்பிடமான இராமலக்ஷ்மணர்கள் இருக்கும் வாயிலால் வந்தவனுமான "இராவணனை" ஸைனியங்களோடுகூடி நல்ல இரதங்களைப்பெற்ற "மஹோதரன்" மஹாபார்சுவன்" விரூபாக்ஷன் இவர்கள் பின்பற்றிச் சென்றார்கள்.

९७ मुक्त्वास्यन्दनमास्थितस्यकारिणंसन्ताड्यतंभूरुहा
मुष्टिंवज्रसमांप्रसह्यकवचंसन्दीर्यखड्गेनतत् ।

मूर्छांस्वस्यवितन्वतोऽधिनिटिलंक्रुद्धस्तलाऽऽघाततः
वैरूप्यंपरितोऽकरोद्धरिपतिर्नेत्रेविरूपस्यतत् ॥ १७६ ॥

"சுக்ரீவன்" கோபமடைந்து, இரதத்தை விட்டு யானையில் ஏறிக்கொண்டு வஜ்ரத்துக்கு ஸமமான முஷ்டியின் அடியைப் பொறுத்து கத்தியால் கவசத்தைக் கிழித்து தனக்கு மூர்ச்சையைக் கொடுத்த "விரூபாக்ஷனுடைய" யானையை மரத்தால் அடித்து அவனுடைய நெற்றியில் உள்ளங்கையின் அடியால் கண்களில் இருக்கும் ரூபக்குறைவை சரீரம் முழுவதும் உண்டு பண்ணினன்.

९८ सुग्रीवोऽथमहोदरस्यपरिघादाहत्यशीघ्रंहयान्
युद्धंमुष्टिगदाकृतंविरचयन्शस्त्राऽऽहतिंव्यर्थयन् ।
खड्गेनास्यशिरस्त्रकुण्डलयुतंविच्छिद्यशीर्षंमुदम्
शोकंराघवरावणावुपनयन्नस्ताविविद्याधरैः ॥ १७७ ॥

பிறகு "சுக்ரீவன்" பரிகம் என்ற ஆயுதத்தால் "மஹோதரனுடைய" குதிரைகளை சீக்கிரம் அடித்து முஷ்டிகளாலும் கதை என்ற ஆயுதத்தாலும் யுத்தம் செய்து அவனுடைய சஸ்திரங்களின் அடியையும் வீணாகச்செய்து கத்தியால் அவனுடைய தலைப்பா குண்டலங்கள் இவைகளோடு கூடிய தலையை அறுத்து இராமனுக்கு ஸந்தோஷத்தையும் இராவணனுக்கு துக்கத்தையும் கொடுத்து வித்தியாதரர்களால் ஸ்துதிக்கப் பெற்றான்.

९९ क्रुद्धस्याऽऽहतवानरस्यसुतजश्शक्रस्यरथ्यान्महा
पार्श्वस्याचलशृङ्गकल्पशिलयानिष्पात्यसंमोहयन् ।
शीर्षत्रंपरिघादिषुंचगळयन्नाहत्यमुष्ट्योरसि
प्रक्रोधय्यदशाऽऽननंनिजकपीन्प्राहर्षयद्विक्रमी ॥ १७८ ॥

பலம் பெற்ற இந்திரனுடைய பௌத்திரனை "அங்கதன்" கோபம் பெற்று வானரங்களை வதம் செய்யும் "மஹாபார்சுவனுடைய" குதிரைகளை பர்வதத்தின் சிகரத்திற்கு ஸமமான சிலையால் விழச்செய்து மூர்ச்சையை அடைவித்து பரிகத்தால் அவனுடைய தலைப்பாவையும் பாணத்தையும் நழுவச்செய்து

முஷ்டியால் மாரில் குத்தி ராவணனை அதிக கோபமடைவித்து தன் வானரங்களை ஸந்தோஷமடைவித்தான்.

१०० स्मृत्वाबन्धुसमाहार्तिद्विगुणितक्रोधोदशाऽऽस्यःकपीन्
विद्राव्यत्ववमत्यसोदरमेरवीरोत्तमंस्वाग्रगम् ।
तस्येषून्प्रतिहत्यतावदिषुभीरामंबलेनाऽऽत्मनः
तुल्यंतेननियोद्धुमात्तकुतुकस्सोऽभ्याजगामक्रुधा ॥१७९॥

"இராவணன்" பந்துக்களின் நாசத்தை நினைத்து இரண்டு பங்கு கோபம் பெற்று வானரங்களை விரட்டி தனக்கு முன்னால் இருக்கும் வீரனை இலக்ஷ்மணனை அவமதித்து அவனுடைய பாணங்களை அவ்வளவு பாணங்களால் திருப்பி அடித்து பலத்தால் தனக்கு ஸமமான இராமனோடு யுத்தம் செய்ய ஸந்தோஷம் பெற்று கோபத்தால் அவருக்கு எதிரில் வந்தான்.

नाराचानपिरौद्रचापगलितान्रामोललाटेवहन्
रुद्रस्यास्त्रममोघमात्तविजयंदत्तंस्वविद्वेषिणः ।
वर्मण्यप्रहतेसमीक्ष्यवितथंतस्यास्त्रमप्यासुरम्
वह्न्यस्त्रेणनिरुद्धवेगमकरोत्तत्सन्तुतोषेप्सितैः ॥ १८० ॥

ருத்திர சாபத்திலிருந்துவந்த நாராசபாணங்களை இராமன் நெற்றியில் வஹித்து வெற்றியைக்கொடுக்கும் வீணாகாததும் தன் சத்துருவின் அழிவற்ற கவசத்தில் பிரயோகித்ததுமான ருத்திராஸ்திரமும் வீணாயிருப்பதைப் பார்த்து அவனுடைய அசுராஸ்திரத்தையும் அக்கினியஸ்திரத்தால் வேகமற்றதாகச்செய்தார் அன்பர்களோடு ஆனந்தித்தார்.

१०१ प्रत्यस्त्रेणनिहत्यवीर्यनिलयेरामेयदस्त्रंरिपोः
युद्धंकुर्वतिलक्ष्मणोनरशिरःकेतुंशिरस्सारथेः ।
चापंसप्तभिराशुगैस्समभिनद्रथ्यान्चनिर्मथ्नतः
प्राणघ्नींचविभीषणस्यशतधाशक्तिंतयाऽहन्यत ॥१८१॥

பலத்திற்கு இருப்பிடமான இராமன் சத்துருவின் அஸ்திரத்தை பதில் அஸ்திரத்தால் அடித்து யுத்தம் செய்யும்பொழுது இலக்ஷ்மணன் சத்துருவின் மனிதத்தலை என்ற துவஜத்தையும் ஸாரதியின் தலையையும் வில்லையும் குதிரைகளையும் கொல்லும் விபீஷணனுடைய பிராணனைக்கொல்லும் சக்தி ஆயுதத்தை ஏழு பாணங்களால் நூறு துணுக்காகப் பிளந்தான். அந்த சக்தி ஆயுதத்தால் அடிக்கப்பெற்றான்.

शक्त्याभिन्नभुजान्तरंनिपतितंरमोनिरीक्ष्यानुजम्
मग्नोऽपिव्यसनेकपीनवाहितस्सन्दिश्यतद्रक्षणे ।
निश्चित्यारिविनाशनं धृतशरस्संभीषयन्रावणम्
शौर्यंस्वीयमदीदृशत्पुरमगाद्भीत्याऽन्वपश्यन्यथा ॥१८२॥

சக்தியாயுதத்தால் மார்புபிளக்கப்பெற்று கீழே விழுந்த தம்பியான இலக்ஷ்மணனை இராமன் பார்த்து துக்கத்தில் முழுகியும் ஸாவதானமாக அவனை இரக்ஷிக்கும்படி வானரங்களுக்கு உத்திரவு செய்து பாணத்தை எடுத்து சத்துரு ஸம்ஹாரத்தை நிச்சயித்து இராவணனை பயமடைவித்து அவனும் பயத்தால் பின்புரம் பார்க்காமல் பட்டணத்திற்குப் போகும்படி தன்னுடைய பலத்தைக் காண்பிவித்தார்.

१०२ रामंशोकवशंविचिन्त्यबहुधा भ्रातुर्यदत्याहितम्
सोपेक्षंरिपुनिग्रहेऽपिपरमंधैर्यंसुषेणोनयन् ।
भ्रातृप्राणनिरीक्षणात्पवनजाऽऽनीततदोषधचगे
संक्षोदय्यसतांविशल्यकरणीमाघ्रापयल्लक्ष्मणम् ॥१८३॥

ஸஹோதரனுடைய பிராண பயத்தை பலவிதமாக நினைத்து துக்கமடைந்து சத்துரு ஸம்ஹாரத்திலும் உபேக்ஷை பெற்ற இராமனை "ஸுஷேணன்" அவருடைய ஸஹோதரனுடைய பிராணனைப் பார்த்ததால் அதிக தைரியத்தை அடைவித்து ஓஷதி மலையை ஹனுமான் கொண்டுவந்ததும் அந்த "விசல்யகரணியை"க் கசக்கி இலக்ஷ்மணனை முகரச்செய்தான்.

शौर्यंतस्यविनाविलंबमचलाऽऽनीतैःपरंमारुतेः
भैषज्यंचसुषेणजंकपिषुसंशंसत्सुमुक्तव्यथः ।
रामेणातिमुदाबलैकनिधिनासौमित्रिरालिंगितः
तंप्राहाथरिपुंजहिक्षितिसुतां तांसंविदंपालय ॥ १८४ ॥

தாமதமன்னியில் ஓஷதிமலையைக் கொண்டு வந்ததால் வாயு புத்திரனுடைய அதிகவலிமையையும் "சுஷேணனுடைய" சிலாக்கியமான வைத்தியத்தையும் வானரங்கள் வர்ணிக்கும்பொழுது இலக்ஷ்மணன் துன்பம் விலகி அதிக ஸந்தோஷம்பெற்ற பலத்திற்கு இருப்பிடமுமான இராமனுல் ஆலிங்கனம் செய்யப்பெற்று பிறகு ("அண்ணு!) சத்துருவைக் கொல்லவேண்டும். ஸீதையையும் (ரிஷிகளின் பொருட்டுச் செய்த) பிரதிக்ஞையையும் காப்பாற்றவேண்டும்" என்று அவரிடம் தெரிவித்தான்.

१०३ भूमिस्थस्यरथस्थितेननरणंन्याय्यंपरंध्यायता
शक्रेणप्रहितंसमातलिरथंसाश्वंसवर्मेषुधिम्
आरुह्यामरविद्विषोऽस्त्रमखिलंविध्यन्तदस्त्रैरकैः
केतौस्यन्दनवाजिभिः प्रतिहतेचुक्रोधरामोभृशम् ॥१८५॥

"பூமியில் இருப்பவனுக்கு இரதத்தில் இருப்பவனேடு யுத்தம் மிகவும் நியாயமில்லை" என்று நினைத்த இந்திரனுல் அனுப்பப் பெற்றதும் கவசம் வில்லு இவைகளோடு கூடியதும் குதிரைகளோடும் மாதலி என்ற ஸாரதியோடும் கூடியதுமான இரதத்தில் இராமன் ஏறிக்கொண்டு தேவசத்துருவான இராவணனுடைய எல்லா அஸ்திரங்களையும் அவைகளின் சத்துருக்களின் அஸ்திரங்களால் அடித்து தன்னுடைய த்வஜமும் இரதத்தின் குதிரைகளும் அடிபெற்றதும் மிகவும் கோபமடைந்தார்.

१०४ उत्पातेभुविजेऽन्तरिक्षजउरौलोकस्यभीतिप्रदे
वीरौद्वौचजयेतिदित्यदितिजेस्पर्धाऽऽकुलाऽऽशीःकरे ।
रक्षोनायकमुक्तशूलमतनून्बाणान्दहत्सारवत्
शक्त्येन्द्रस्यमहाबलोविदळयन्रामोऽरिमक्लेशयत् ॥

உலகத்திற்கு பயம் கொடுக்கும் அபசகுனங்கள் பூமியிலும் ஆகாயத்திலும் அதிகமாக உண்டாகும்பொழுது தேவர்களும் அசுரர்களும் ஸ்பர்த்தைகொண்டு "ஜய" என்று இரண்டு வீரர்களையும் ஆசீர்வதிக்கும்பொழுது அதிக பாணங்களைப் பொசுக்கும் இராவணன் பிரயோகித்த பலம்பெற்ற சூலாயுதத்தை அதிக பலம்பெற்ற இராமன் இந்திரனுடைய சக்தி ஆயுதத்தால் பிளந்து இராவணனைத் துன்பமடைவித்தார்.

१०५ रामोरावणबाणसङ्घदलितःपुष्यत्पलाशोपमः
धीरोवैरिणमाहतायदबलाचेत्सन्निधौमेबलात् ।
पश्येस्त्वंचखरंतदैवविधिनामद्दर्शनंप्रापितः
प्राप्नुह्यद्यफलंस्वकर्मणइतिक्रुद्धोजघानेषुभिः ॥ १८७ ॥

இராமன் இராவணனுடைய பாணக்கூட்டத்தால் பிளக்கப்பெற்று புஷ்பித்த பொரசமரத்திற்கு ஸமமாயிருந்து தைரியம் பெற்று சத்துருவைப் பார்த்து "என் முன்னிலையில் பலாத்காரமாய் மனைவியை அபஹரித்தால் அப்பொழுதே நீயும் கரனைப் பார்ப்பாய் இப்பொழுது தெய்வத்தால் என்நேரில் வந்தாய் தன்னுடைய கர்மாவின் பயனை அடையவேண்டும்" என்று கோபித்து பாணங்களால் அடித்தார்.

रामस्यस्मरतोऽपकारमखिलंक्रोधप्रवृद्धेबले
वज्रेणेवगिरौसविंशतिभुजेसार्थैर्विदीर्णेशरैः ।
प्रत्यस्त्रस्यविसर्जनेऽप्यचतुरेकर्तव्यमूढेभिया
सूतस्तस्यरथंरणादपनयन्नाश्वासयत्स्वप्रभुम् ॥ १८८ ।

(தனக்குச் செய்த) எல்லா தீங்கையும் நினைக்கும் இராமனுடைய பலம் கோபத்தால் விருத்தியடையும்பொழுது பர்வதம் வஜ்ரத்தால் பிளந்துபோவதுபோல் பயன்பெற்ற இராமபாணங்களால் இருபது கைகளைப் பெற்ற "இராவணன்" பிளக்கப்பெற்று பதிலஸ்திரம் பிரயோகிக்கவும் முடியாதவனாய் பயத்தால் வேலையற்று மூர்ச்சைபெற்றதும் அவனுடைய ஸாரதி இரதத்தை யுத்தத்திலிருந்து வேறு இடம் அடைவித்து தன் எஜமானனை நினைவுபெறச் செய்தான்.

१०६ शत्रौपश्यतिमेरथापवहनाद्वीर्यंयशोऽनाशितत्
कार्तघ्नयाद्द्विमतोपजापतइतिक्रोधेनसंभर्त्सितः ।
सूतस्सानुनयंप्रसाद्यभयतोवीरानुचिन्त्यश्रमम्
रथ्यानांतादितिप्रभुंरिपुमभिप्रातिष्ठिपत्तद्रथम् ॥ १८९ ॥

"சத்துரு பார்க்கும்பொழுது இரதத்தைத் திருப்பிக் கொண்டு போனதால் என்னுடைய பலம் கீர்த்தி இவைகளை அழித்தாய் அது செய்த நன்றியை மறந்ததால் வந்ததா? சத்துருக்களின் ரஹஸியமான மந்திராலோசனையால் வந்ததா?" என்று "இராவணன்" கோபத்தால் அதட்டும்பொழுது "ஹே வீரா! உன்னுடைய களைப்பையும் குதிரைகளின் களைப்பையும் நினைத்து அவ்விதம் செய்தேன்" என்று ஸாரதி எஜமானனை பயத்தோடு ஸமாதானத்தோடு ஸந்தோஷமடைவித்து அவனுடைய இரதத்தை சத்துருவுக்கு நேரில் வரும்படி செய்தான்.

भूयःप्राप्तमरिंनियोद्धुमभयंदृष्ट्वाश्रमाऽऽर्तोभृशम्
रामोऽगस्त्यमुनेरवाप्यजयदंचाऽऽदित्यहृत्तोषकम् ।
स्तोत्रंत्रिस्त्वजपत्शुचीरविरतःप्रीतोविदन्रक्षसः
नाशंसंत्वरशत्रुसूदनइतिद्रागन्वगृह्णान्मुदा ॥ १९० ॥

பயமில்லாமல் மறுபடியும் யுத்தம் செய்வதற்கு வந்த சத்துருவை இராமன் பார்த்து மிகவும் களைப்பால் வருந்தி ஜயத்தைக் கொடுக்கும் சூரியனுக்கு மனக்களிப்பைக்கொடுக்கும் (ஆதித்ய ஹிருதய) ஸ்தோத்திரத்தை அகஸ்திய முனிவரிடமிருந்து அடைந்து பரிசுத்தமாய் மூன்று தடவை ஜபித்தார். அதனால் சூரியன் ஸந்தோஷமடைந்து இராவணனுடைய அழிவை அறிந்து "சத்துரு ஸம்ஹாரத்தில் வேகம்செய்யவேண்டும்" என்று சீக்கிரம் ஸந்தோஷமாய் அனுக்கிரஹம் செய்தார்.

१०८ कुर्वंत्यात्मरथंरिपोरभिमुखंत्यक्त्वाऽपसव्यांगतिम् ।
सूतेदेवपतेर्धनुर्विनमयन्शत्रुंशरैरर्दयन् ।
रामस्स्वस्यारिपोर्जयापजयदंसद्दुर्निमित्तंरथे
प्रेक्ष्यारेर्विलयंविचिन्त्यमनासिप्रापोल्बणंविक्रमम् ॥

இந்திர ஸாரதியான "மாதலி" தன்னுடைய இரதத்தை அப்பிரதக்ஷிண கதியைவிட்டு சத்துருவுக்கு எதிர்முகமாக வைத்திருக்கும்பொழுது "இராமன்" இந்திரனுடைய வில்லை வளைத்து அவனுடைய பாணங்களால் சத்துருவை அடிக்கும்பொழுது தனக்கு ஜயத்தையும் சத்துருவுக்கு அபஜயத்தையும் கொடுக்கும் நல்ல சகுனங்களையும் அபசகுனங்களையும் இரதங்களில் பார்த்து சத்துருவின் நாசத்தை மனதில் நினைத்து அதிக பலத்தை அடைந்தார்.

१०९ युद्धेवानरराक्षसैःक्षितिखगैर्दृष्टेऽमरैर्विस्मितैः
पश्यत्संततिरोमहर्षजनकेनैकोविवेदान्तरम् ।
जेतव्यंरघुनायकोदशगळोमर्तव्यमित्युत्सुकौ
द्वौबाणैश्चमिथः कृतप्रातिकृतौकेतुंहयान्जघ्नतुः ॥ १९२ ॥

பூமியில் இருக்கும் வானர ராக்ஷஸர்களாலும் ஆகாயத்தில் இருக்கும் தேவர்களாலும் ஆச்சரியமடைந்து பார்க்கப்பெற்றதும் பார்ப்பவர்களின் கூட்டத்திற்கு மயிர் கூச்சலைக் கொடுக்கும் யுத்தத்தில் ஒருவனும் வித்தியாஸமறியவில்லை" ஜயம் அவசியம் கிடைக்கும்" என்று இராமனும் "மரணம் அவசியம் கிடைக்கும்" என்று இராவணனும் இருவர்களும் ஸந்தோஷமாய்ச் செய்ததிற்கு 'பதில்செய்து ஒருவருக்கொருவர் குதிரைகளையும் துவஜத்தையும் பாணங்களால் அடித்தார்கள்.

११० रामस्याथदशाऽऽननस्यचरथौसूतेनसंचोदितौ
युद्धेऽस्मिन्विविधाविधायतुगतीरास्तांपुरेवाभितौ ।
वीक्ष्याश्वान्दशकन्धरोऽप्यभिहतान्क्रुद्धःपरावर्तितान्
सन्ताड्यामरसारथिंरघुपतिंप्राक्रोधयत्सत्वरम् ॥ १९३ ॥

பிறகு இராமனுடைய இரதமும் இராவணனுடைய இரதமும் ஸாரதியால் ஓட்டப்பெற்று யுத்தத்தில் அநேகவித கதிகளைச்செய்து முன்போல் எதிராக இருந்தன. குதிரைகள் அடிபெற்று பின் செல்லுகிறதைப் பார்த்து இராவணன் கோபமடைந்து "மாதலியை" அடித்து இராமனை சீக்கிரம் அதிக கோபமடைவித்தான்.

युद्धंसंतुलितंद्वयोरपितयोरश्रान्तयोःकुर्वतोः
भीताव्योमचराधरासुरगवांसौख्यंभवत्वक्षयम् ।
रामोद्राग्जयताद्दशाऽऽननमितिस्वाभीप्सितप्रार्थकाः
घोवार्धीइवराममरावणरणंप्रोचुर्निरस्तोपमम् ॥ १९४ ॥

அவ்விருவர்களும் களைப்பு அடையாமல் ஏற்றக் குறைவு இல்லாமல் யுத்தம் செய்யும்பொழுது ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்கள் "பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் குறைவு இல்லாத ஸௌக்கியம் உண்டாகவேண்டும். இராமன் சீக்கிரம் இராவணனை ஜயிக்கவேண்டும்" என்று தங்களின் விருப்பத்தை வேண்டிக்கொண்டு இராம ராவணர்களின் யுத்தம் ஆகாயம்போலும் ஸமுத்திரம்போலும் உவமையற்றதாகக் கூறினார்கள்.

रामोविक्रमवान्त्रिपोरपिशिरस्सत्कुण्डलंप्राच्छिनत्
तस्यान्यन्मुखमैक्षतैकशतधाजातंतथासक्षुरः ।
मारीचाऽऽदिषुवीर्यवन्तइषवोमन्दाःकथंरावणे
दुर्वृत्तेचिरमेवामित्यतनुधातत्क्लेशितोऽचिन्तयत् ॥

பலம்பெற்ற இராமன் கத்தியோடு கூடி குண்டலங்களோடு கூடிய சத்துருவின் தலையையும் அறுத்தார். அவனுடைய வேறு முகத்தைப் பார்த்தார் நூற்றி ஒருதரம் முளைத்த அந்த முகத்தையும் அறுத்தார். "மாரீசன்" முதலியவர்களிடத்தில் பலம்பெற்ற பாணங்கள் இவ்விதம் வெகுகாலம் துர்நடைபெற்ற இராவணனிடம் என் பலத்தைக் காட்டவில்லை" என்று அவனால் துன்பமடைந்து அநேகவிதமாக நினைத்தார்.

१११ किंस्वामिन्ननुवर्तसेरिपुममुंमूढोयथाव्याहृतः
दैवैरस्यनरेणमृत्युरधुनाजह्यब्जजास्त्रेणतम् ।
प्रादात्तेघटसूनुरापविजयंशक्रोऽपियेनेतिसः
प्रोक्तोमातलिनातदस्त्रमहितघ्नंराघवेन्द्रोऽग्रहीत् ॥१९६॥

"ஹே சுவாமி! இந்த சத்துருவை நீர் என்மூடன்போல் அனுஸரிக்கிறீர் இவனுக்கு இப்பொழுது மனிதனால் மரணத்தை

தேவர்கள் கூறினார்கள். தங்களுக்கு அகஸ்தியர் கொடுத்ததும் இந்திரனுக்கு வெற்றியளித்ததுமான பிரம்மாஸ்திரத்தால் இவனை ஸம்ஹரிக்கவேண்டும்' என்று "மாதலியால்" சொல்லப் பெற்ற இராமன் சத்துருவைக் கொல்லும் அந்த அஸ்திரத்தை எடுத்தார்.

सन्धायैन्द्रशरासनेसतामिषुंरामोऽभिमन्त्र्याद्विषः
चिक्षेपोरसिवीर्यवान्पविरिवक्षोणीधरंतद्दृढम् ।
द्रागुत्पाट्यसभीमनादमवनिंनिर्विश्यभूयोऽविशत्
तूणींतस्यकरादधोनिरपतत्कायोऽथपूर्वंधनुः ॥ १९७ ॥

இராமன் இந்திரனுடைய வில்லில் அந்த பிரம்மாஸ்திரத்தை அபிமந்த்ரணம்செய்து சத்துருவின் மாரில் எறிந்தார். வஜ்ராயுதம் பர்வதத்தைப் பிளப்பதுபோல் அவ்வஸ்திரம் பயங்கர சப்தத்தோடு சீக்கிரம் கெட்டியான அவனுடைய மாரைப்பிளந்து பூமியில் பிரவேசித்து மறுபடியும் இராமனுடைய அம்பு பெட்டியை அடைந்தது. அவனுடைய கையிலிருந்து வில்லுமுன்னால் கீழே விழுந்தது. பிறகு அவனுடைய சரீரம் விழுந்தது.

रक्षांसिप्रहतानिवानरभटैरापुर्विनाथानिताम्
लङ्कामेवसमस्तुवन्रघुपतिंवैमानिकाहर्षतः ।
पुष्पाणिप्रववृषुरंबरतलाद्वाक्शुश्रुवेसाध्विति
प्रामोदन्तकपीश्वराव्यपगमत्तद्दुर्निमित्तंतदा ॥ १९८ ॥

வானர வீரர்களால் அரக்கர்கள் அடிக்கப்பெற்று நாதனில்லாமல் இலங்கையைத் தானே அடைந்தார்கள். விமானத்தால் ஸஞ்சரிக்கும் தேவர்கள் ஸந்தோஷத்தால் இராமனைத் துதித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பங்களை வர்ஷித்தார்கள் "நல்லது" என்று வார்த்தை கேட்கப்பெற்றது. வானர வீரர்கள் ஸந்தோஷமடைந்தார்கள். அந்த அபசகுனங்கள் அப்பொழுது விலகின.

११२ खिन्नंभ्रातृवधाद्विभीषणमुपप्राप्तंपुरायन्मया
प्रोक्तंमामवमन्यताकुमतिनाप्राप्तंत्वयावीरतत् ।

शोचाम्यत्रकमीप्सितामृतिरितिप्राप्तप्रलापंमृतेः
ऊर्द्ध्वमेनाविरोधइत्यतिकृपोरामोऽन्वशात्कर्मणे ॥ १९९ ॥

ஸஹோதரனுடைய வதத்தால் வருந்தி ஸமீபத்தில் வந்து "ஹே வீரா ! முன் நான் சொன்னதை, என்னை அவமதித்து துர் புத்திபெற்று நீ அடைந்தாய் இந்த விஷயத்தில் யாரைக் குறித்து வருந்துவேன் நீ மரணத்தை விரும்பினாய்" என்று புலம்பும் "விபீஷணனைப் பார்த்து அதிக கருணைபெற்ற இராமன்" "மரணத்திற்குப் பிறகு எனக்கு விரோதமில்லை" என்று மரணச் சடங்கை செய்யும்படி உத்திரவு செய்தார்.

११३ राक्षस्योविदितप्रियाप्रियकथाश्शुद्धान्ततोनिर्गताः
दृष्ट्वाप्राणपतिंरणेनिपतितंखिन्नाःप्रलेपुर्मिथः ।
मृत्योर्मृत्युकृतोविभीषणमतंचेदादृतंमानवात्
नस्यात्तेमहतीविपाद्विधिविधिंकोवासुधीर्लङ्घयेत् ॥ २०० ॥

இராக்ஷஸிகள் கணவனுடைய கஷ்ட ஸமாசாரத்தை அறிந்து அந்தப்புரத்திலிருந்து வெளியில் வந்து யுத்தத்தில் விழுந்த புருஷனைப் பார்த்து மனம்வருந்தி மிருத்யுவுக்கும் மரணத்தைக் கொடுத்த நீ விபீஷணனுடைய ஸம்மதத்தில் மனம்வைத்தால் மனிதனிடமிருந்து மரணம்வராது. புத்திசாலியான எவன்தான் விதியின் கட்டளையை தள்ளமுடியும்?" என்று ஒருவருக்கொருவர் புலம்பினார்கள்.

११४ कान्तंप्रेक्ष्यहतंविदीर्णहृदयामण्डोदरीप्रालपत्
भ्रातुस्तेनिहतेःखरस्यकपिनालङ्कापुरीप्लोषणात् ।
वार्धौसेतुकृतेमतिर्ममपतेरामोनरोनेतिच
श्रीनाथःकपिरूपिभिस्त्रिदिवगैस्त्वांहन्तुमासीन्नरः ॥

அடிபெற்ற நாயகனைப்பார்த்து "மண்டோதரீ" மனம்பிளந்து புலம்பினாள். "ஹே நாதா ! உன்னுடைய ஸஹோதரனை" "கரனை"க் கொன்றதாலும் வானரம் இலங்காபுரியைப் பொசுக்கினதாலும் ஸமுத்திரத்தில் அணைகட்டினதாலும் இராமன் மனிதன் இல்லை. ஸ்ரீபதியான பகவான் மனிதனாக வானரரூபம் பெற்ற தேவர்களோடு உன்னை வதம்செய்ய வந்தார்" என்று என்னுடைய எண்ணம்.

सौन्दर्येणकुलेनवाजनकजाप्रेम्णानतुल्यामया
तन्मोहात्सुमतिर्नवेत्थमृतयेतेऽजायतैषायतः ।
साध्वीनांविफलंनचास्रमितियत्सत्यंप्रवादस्त्वयि
त्वत्पत्न्येवमभूवमश्रुनयनाभूरेणुलिप्ताङ्गका ॥ २०२ ॥

"அழகாலும் நற்குலத்தாலும் அன்பாலும் "ஸீதை" எனக்கு ஸமமில்லை. அவள் உன்னுடைய மரணத்தின்பொருட்டு உண்டாயிருப்பதால் புத்திசாலியான நீ மோஹத்தால் அதை அறியவில்லை. உன்னுடைய மனைவியான நான் இவ்விதம் கண்களில் கண்ணீரையும் பூமியின் தூளிபடிந்த சரீரத்தையும் பெற்றதால் பதிவிரதைகளின் கண் ஜலம் வீணாகாது என்ற பழமொழி உன்னிடம் உண்மையாயிருக்கிறது."

खिद्येत्वामनुचिन्त्यनाथनतथापुत्रायनज्ञातये
क्रूराऽहंनविदीर्यतेमनइतिप्राप्तव्यथांतांस्त्रियः ।
वाक्यैर्नौभिरतारयन्नतिरयंदुःखोदकंराघवः
भ्रातुस्संस्कृतिमाचरापनयताइत्याहरक्षोऽनुजम् ॥

"ஹே நாதா! நான் பாபம் செய்தவள் என் மனம் பிளக்காமலிருப்பதைப்பற்றி வருந்துவது போல் உன்னை நினைத்தும் புத்திரனை நினைத்தும் பந்துக்களை நினைத்தும் அவ்வளவு வருந்தவில்லை" என்று துக்கமடைந்த "மண்டோதரியை" பெண்கள் ஸமாதான வார்த்தைகளாகிற ஓடங்களால் அதிகவேகம்பெற்ற துக்கமாகிற ஜலத்தைத் தாண்டச் செய்தார்கள்," அண்ணனுக்கு ஸம்ஸ்காரத்தை (மரணச் சடங்கை) செய்யவேண்டும். இவர்களை விலக்கவேண்டும்" என்று இராமன் விபீஷணனுக்கு உத்திரவுசெய்தார்.

आदेशेनविभीषणोरघुपतेर्लङ्कांप्रविश्याग्रजम्
यष्टारंविधिवद्द्विजैस्तदुचितंवस्त्वोघमाहृत्यतम् ।
संस्कार्यप्रदिशन्तिलांजलिमथद्राक्संनिवर्त्यान्तिमाम्
इष्टिंतत्सुहृदशोगृहंप्रगमयत्रामंययौहर्षतः ॥ २०४ ॥

"விபீஷணன்" இராமனுடைய உத்திரவால் இலங்கையில் பிரவேசித்து யாகம் செய்த அண்ணனை அவனுக்குத் தகுந்த ஸாமான்களைக் கொண்டுவந்து பிராமணர்களோடு சாஸ்திரப் பிரகாரம் ஸம்ஸ்காரம் செய்து பிறகு திலதர்ப்பணம் செய்து மரணச்சடங்கை சீக்கிரம் முடித்து அவனுடைய ஸ்திரீகளை அரண்மனையை அடைவித்து ஸந்தோஷமாய் இராமனை அடைந்தான்.

रामोरावणमर्दनप्रमुदितोदत्तंमहेन्द्रेणयत्
बाणंवर्मशरासनेस्वविधृतंशत्रोर्वधायातनुम् ।
कोपंचव्यसृजद्यथापुरमसौनैसर्गिकींसौम्यताम्
प्रापाग्न्यातपयोगतप्तमुदकंशीतंप्रकृत्यायथा ॥ २०५ ॥

"இராமன்" இராவணவதத்தால் ஸந்தோஷமடைந்து சத்துரு வதத்திற்காக இந்திரனால் கொடுக்கப்பெற்றதும் தான் தரித்துக்கொண்டதுமான பெரிய பாணம் கவசம் வில்லு மிகுந்த கோபம் இவைகளை விலக்கினர். அக்கினி வெய்யில் இவைகளின் சேர்க்கையால் சூடான ஜலமும் சுபாவத்தால் குளிர்ச்சியை அடைவது போல் பிறவியால் வந்த நற்குணத்தை அடைந்தார்.

११५ युद्धाऽऽलोकननिर्वृतादिविचरास्सौमित्रिमैत्रींवराम्
सुग्रीवस्यकृतज्ञतामुपकृतिंवैभीषणांभीषणाम् ।
सीतायाःपतिदेवतांपवनभूशौर्यंकपीनांप्रियम्
स्तुत्वारामबलंनिजाऽऽस्पदमगुर्देवेन्द्रसूतस्तथा ॥ २०६ ॥

தேவர்கள் யுத்தம் பார்த்ததால் ஸந்தோஷமடைந்து அதிகமான இலக்ஷ்மணனுடைய "அன்பையும்" சுக்ரீவனுடைய நன்றியறிவையும் "விபீஷணனுடைய பயங்கரமான உபகாரத்தையும். ஸீதையின் பதிவிரதா தர்மத்தையும் "ஹனுமானுடைய" பலத்தையும் வானரங்களின் அன்பையும் இராமனுடைய பலத்தையும் துதித்துக்கொண்டு தங்களின் இருப்பிடமடைந்தார்கள். இந்திரனுடைய ஸாரதியான "மாதலியும்" அவ்விதமே.

पुण्यैरंबुभिराहृतैःकपिवरैरामाऽऽज्ञयालक्ष्मणः
लङ्कायांचविभीषणंनृपपदेद्रागभ्यषिञ्चन्मुदा ।

साम्राज्येऽधिकृतोददौसमुदितःपौरार्पितोपायनम्
रामायाथसआददेतदखिलंभक्तप्रियोऽशंकितः ॥ २०७ ॥

“இலக்ஷ்மணன்” இராமனுடைய உத்திரவால் வானரங்கள் கொண்டுவந்த புண்ணிய தீர்த்தங்களால் இலங்கையில் அரசனுடைய இருப்பிடத்தில் “விபீஷணனை” சீக்கிரம் ஸந்தோஷமாய் அபிஷேகம் செய்தான். பட்டாபிஷேகம் பெற்ற “விபீஷணன்” ஸந்தோஷம் அடைந்து பட்டணத்து ஜனங்கள் கொடுத்த உபசார ஸாமான்களை இராமன் பொருட்டுக் கொடுத்தான். பிறகு பக்தர்களிடத்தில் அன்புபெற்ற இராமன் அவைகள் எல்லாவற்றையும் ஆக்ஷேபமன்றி பெற்றுக்கொண்டார்.

११६ आदिष्टोरघुपुङ्गवेनहनुमान्प्राप्तस्त्वशोकंवनम्
रामस्याथजयंदशाऽऽस्यमरणंसंश्रावयन्जानकीम् ।
संतुष्टाऽऽशययाऽभ्यधायिसतयानिर्वाक्ययाऽर्धक्षणं
त्वत्प्रोक्तस्यकपेप्रियस्यसदृशंवीक्षेनदेयार्थकम् ॥ २०८ ॥

இராமனால் உத்திரவு செய்யப்பெற்ற “ஆஞ்னேயர்” அசோகவனம் சென்று பிறகு இராமனுடைய ஜயத்தையும் இராவணனுடைய மரணத்தையும் ஸீதையைக் கேட்கச் செய்தும் அவள் அரைக்ஷணநேரம் பதில் கூறுமலிருந்து “ஹே வானரா நீ சொன்ன பிரிய ஸமாசாரத்திற்கு ஸமானமான கொடுக்கக்கூடிய பொருளை நான் காணவில்லை” என்று அந்த ஹனுமானுக்கு பதில் கூறினாள்.

यद्रामस्यनिरीक्षणंहतारिपोस्तन्मेऽखिलार्थाऽऽगतिः
देवित्वद्रिपुयोषितोभयकरीर्हन्म्यादिशेत्वार्थिनम् ।
सीताऽबोधयदाञ्जनेयमतिधीर्नार्हन्तिकोपंत्विमाः
दास्योऽन्यस्यममासुकृत्यतइदंतानस्वतन्त्राइति ॥ २०९ ॥

“சத்துரு ஸம்ஹாரம் செய்த இராமனைப் பார்ப்பதே எனக்கு எல்லாப்பொருள்களின் வரவு. ஹே தேவீ! உனக்கு பயத்தைச்செய்த இராக்ஷஸப் பெண்களை வதம்செய்கிறேன். உத்திரவு கொடுக்கவேண்டும்” என்று வேண்டும் ஹனுமானைப்

பார்த்து அதிக புத்திபெற்ற "ஸீதை" "இவர்கள் பிறருடைய வேலைக்காரிகள். இவர்கள் சுவாதீனமற்றவர்கள் இவர்கள் கோபத்திற்குத் தகாதவர்கள். அந்த துன்பம் என் பாபத்தால் எனக்கு வந்தது" என்று நற்புத்தி போதித்தாள்.

व्याघ्रायाहयदृक्षआश्रिततरुस्तच्छ्रुण्वधीधीप्रदम्
व्याधोमांविनिपातयन्नपिरिपूरक्ष्योगृहंमेगतः ।
साधुर्योऽपकृतेषुचोपकुरुतेतद्रक्षणीयाइमाः
नाथंमेऽस्मिदिदृक्षुरित्यभिहितोरामंहनूमान्ययौ ॥ २१० ॥

"மரத்திலிருந்த கரடி புலியின் பொருட்டு புத்தியற்றவர்களுக்கும் புத்தி கொடுக்கும்படி கூறின வார்த்தையை ஹே குரங்கே! கேட்கவேண்டும். சத்துருவாயிருந்தும் என்னைத் தள்ளியும் வேடன் என்னுடைய கிருஹத்திற்கு வந்ததால் காப்பாற்றத் தகுந்தவன். குற்றவாளிகளுக்கும் உபகாரகுணத்தைச் செய்கிறவன் ஸாது. ஆனதால் இந்த இராக்ஷஸிகளை நான் காப்பாற்ற வேண்டும். என்னுடைய நாதனை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று ஸீதை பதில் சொன்னதும் ஹனுமான் இராமனை அடைந்தார்.

११७ ज्ञात्वावायुसुतात्स्ववीक्षणरतिंवैदेहजायाभृशम्
चिन्ताऽऽतैंनविभीषणोऽप्यभिहितोरामेणतांस्नापिताम् ।
संप्राप्तांशिबिकां विभूषिततनुंसंरक्षितांराक्षसैः
आनेतुंनिकटंस्वकंचुकिगणैर्व्यद्रावयद्वानरान् ॥ २११ ॥

"இராமன்" ஸீதைக்கு தன்னுடைய பார்வையில் இருக்கும் ஆசையை ஹனுமானிடமிருந்து அறிந்து மிகவும் கவலைபெற்று விபீஷணனுக்கு உத்திரவு செய்ததும் அவன் ஸீதையை ஸ்நானம் செய்வித்து சரீரத்தை அலங்கரித்து பல்லக்கில் ஏற்றி இராக்ஷஸர்களால் காப்பாற்றி இராம ஸமீபத்தில் அழைத்து வருவதற்காக தன்னுடைய வேலைக்காரர்களின் கூட்டத்தால் வானரங்களை விரட்டினன்.

रामेणाऽऽत्मकपिप्रभर्त्सनकृतक्रोधेनसीतेहसा
ऽऽयातुस्वाङ्घ्रिगतानदुष्यातिवधूर्दृष्टाऽखिलैरापादि ।

प्राकारोऽपिमहान्नरक्षतिवधूंशीलंवरेण्यंयथा
प्रोक्तैवंसविभीषणानुसरणारामंप्रहृष्टेक्षत ॥ २१२ ॥

இராமன் தன்னுடைய வானரங்களை அதட்டினதால் கோபமடைந்து "இவ்விடத்தில் ஸீதை கால்நடையாக வரவேண்டும். துன்பத்தில் எல்லோர்களால் பார்க்கப்பெற்ற பெண்ணும் குற்றமடைவது இல்லை. நன்னடை பெண்களைக் காப்பாற்றுவது போல் பெரிய மதில் சுவரும் காப்பாற்றுகிறதில்லை" இவ்விதம் சொல்லும் பொழுது "ஸீதை" விபீஷணனால் பின் தொடரப் பெற்று ஸந்தோஷமடைந்து இராமனைப் பார்த்தாள்.

११८ सीतांपार्श्वगतांजगादकुपितोरामश्श्रुतेदाहकम्
यन्मेशत्रुवधाऽऽदिकंविरचितंस्वाकीर्तिनिर्मोचकम् ।
त्वल्लाभायमयानकिंचनकृतंत्वामन्यगेहोषिताम्
सीतेवाञ्छतिकिंकुलीनचरितोगच्छक्ववास्वेप्सिते ॥२१३॥

இராமன் கோபமடைந்து பக்கத்தில் வந்த ஸீதையைப் பார்த்து "நான் செய்த சத்துரு ஸம்ஹாரம் முதலியது தன்னுடைய அபகீர்த்தியை விலக்குவதின் பொருட்டு நடந்தது. ஹே ஸீதே உன்னை அடைவதற்காக ஒன்றும் செய்யவில்லை. பிறருடைய கிருஹத்தில் வாஸம் செய்த உன்னை நற்குலத்தில் பிறந்தவன் விரும்புவானா? தனக்கு விருப்பமுள்ள எவ்விடத்திலாவது செல்லவேண்டும்" என்று காதுகளைப் பொசுக்கும்படி கூறினார்.

११९ वैदेहीकटुभाषणैरभिहितापत्याविरक्त्यातनौ
जानन्मेचरितंचिरेणसुकृतंहानाथयत्शंकसे ।
चेतोनक्षणमार्यजादपसरेच्चेत्पावकःपातुमाम्
इत्युक्त्वाज्वलनंविवेशाविवशातंदेवरोद्धर्षितम् ॥ २१४ ॥

புருஷனுடைய கடுஞ்சொற்களால் ஸீதை சொல்லப்பெற்று சரீரத்தில் ஆசையற்று "ஹே நாதா! வெகுகாலமாக என்னுடைய நன்னடையை அறிந்திருந்தும் என் கஷ்டகாலத்தால் ஸந்தேஹம் அடைகிறாய். என் மனம் க்ஷணநேரங்கூட ஆரிய

புத்திரனிடமிருந்து விலகாமலிருந்தால் என்னை அக்கினி பகவான் காப்பாற்றவேண்டும்" என்று கூறி கொழுந்தனுல் (கணவனுடைய தம்பியால்) வளர்க்கப்பெற்ற அக்கினியில் பரவசமாகப் பிரவேசித்தாள்.

१२० नेदीयोभिरुदश्रुभिर्विरचितेहाहारवेराघवम्
धर्म्यंचिन्तितवन्तमेत्यहरितामीशैर्विधिश्शङ्करः ।
देवोपेक्षसआत्मगांकथमिमांसर्वंविदन्नज्ञवत्
किंनासीर्भगवान्श्रियःपतिरितिप्राबोधयत्तद्गुणान् ॥

ஸமீபத்தில் இருந்தவர்கள் அதிக கண் ஜலத்தைப்பெற்று ஹா ஹாகாரம் செய்யும்பொழுது தர்மத்திலிருந்து தவருமல் கவலையை அடைந்த இராமனைப்பார்த்து திக்குபாலர்களோடு வந்த "பிரம்மா"வும் "சிவபெருமானும்" "ஹேதேவா! நீஎல்லாம் அறிந்தும் அறியாதவன்போல் உன்னை அடைந்த ஸீதையை ஏன் உபேக்ஷை செய்கிருய்? நீ ஸ்ரீபதியான பகவானுக இருக்கவில்லையா?" என்று அவருடைய குணங்களை அறிவித்தார்கள்.

१२१ अङ्केनाऽऽददतासतीमवनिजांवैश्वानरेणाक्षताम्
स्वीकुर्वार्यमदाज्ञयाऽपदुरितांरक्षोऽधिपक्षोभणीम् ।
इत्युक्तोरघुपुङ्गवोभुवनगान्तद्वृत्तमावेदयन्
मान्यानांवचसाप्रगृह्यदयितां सोऽमोदतापेतभीः ॥२१६॥

பதிவிரதையாயும் அழிவற்றவளுமான ஸீதையை அக்கினி பகவான் மடியில் எடுத்துக்கொண்டு "ஹே அய்யா! பாபமற்றவளாயிருந்து இராவணனை அழிக்க இந்த ஸீதையை என்னுடைய உத்திரவால் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று இராமனைப் பார்த்துக் கூறும்பொழுது "இராமன்" உலகத்தில் இருப்பவர்களுக்கு அவளுடைய நடையைத் தெரிவித்து பெரியோர்களின் வார்த்தையால் பயமில்லாமல் மனைவியைப் பெற்றுக்கொண்டு ஸந்தோஷமடைந்தார்.

१२२ कार्यंयन्मखभोजिनांविरचितंपौलस्त्यसंमर्दनम्
मर्त्योद्रागभवोऽप्यभूरतिकृपःस्वीयाऽऽस्पदंप्राप्नुहि ।

इत्युक्तं भुवनस्रजा रघुपतिं कर्तव्यशेषं विदन्
प्राहेदं निटिलेक्षणः प्रविश भोस्साकेतमानन्दनः ॥ २१७ ॥

"ஹே அதிக கருணைபெற்றவனே! நீ பிறப்பற்றவனுயிருந்தும் சீக்கிரம் மனிதனுய் பிறந்தாய். தேவர்களின் கார்யமான இராவணவதத்தைச் செய்தாய். தன்னுடைய இருப்பிடமடைய வேண்டும்" என்று இராமனைப் பார்த்து "பிரம்மா" கூறும் பொழுது சிவபெருமான் கார்யத்தின் மீதத்தை அறிந்து கூறினர். "ஹே இராமா! நீ ஆனந்தமடைவித்து அயோத்தியா நகரம் அடையவேண்டும்."

बन्धून्प्रीणय शोचतो विरहतश्शाधि स्वराज्यं चिरम्
वंशं वर्धय मोदय क्रतुशतैर्यज्ञाशनानादृतः ।
रामैतं पितरं सुराऽऽस्पदगतं पश्येति सम्बोधितः
प्राणंसीत्सुरयानगं सुरतनुं सभ्रातृभार्यस्सतम् ॥ २१८ ॥

("ஹே இராமா!) விரஹத்தால் (பிரிவால்) துக்கமடைந்த பந்துக்களை ஸந்தோஷமடைவிக்கவேண்டும். வெகுகாலம் தன்னுடைய இராஜ்யத்தை ஆளவேண்டும். வம்சத்தை வளர்க்க வேண்டும். அநேக யாகங்களால் அன்போடு தேவர்களை ஸந்தோஷமடைவிக்கவேண்டும். தேவ சரீரம்பெற்று தேவ லோகம் சென்றவரும் விமானத்தில் வந்தவருமான பிதாவைப் பார்க்கவேண்டும்" என்று அறிவிக்கபெற்ற இராமன், மனைவி, ஸஹோதரன் இவர்களோடுகூட அந்த தந்தையை வந்தனம் செய்தார்.

संमानं सुरनायकस्य दिविषल्लोकं गतो नाप्यहम्
संहृष्यामि विना त्वया रघुवर त्वां वीक्ष्य जातस्सुखी ।
वत्स प्राप्य पुरीं गतो नृपपदं पाहि प्रजा मोदय
स्वीयानित्यनुशास्य राममितरावाबोध्य सोऽन्तर्दधे ॥२१९॥

"ஹே இராமா! நான் தேவலோகம் சென்று இந்திரனுடைய ஸம்மானம் பெற்றும் நீ இல்லாமல் ஸந்தோஷமடையவில்லை. உன்னைப் பார்த்து சுகமடைந்தேன். ஹே குழந்தாய்

நீ பட்டணம் சென்று மகுடாபிஷேகம் பெற்று ஜனங்களைக் காப்பாற்றவேண்டும். பந்துக்களை ஸந்தோஷமடைவிக்க வேண்டும்" என்று தசரதர் இராமனுக்கு உத்திரவுசெய்து "ஸீதை" "இலக்ஷ்மணன்" இவர்களுக்கும் புத்திபோதித்து மறைந்தார்.

१२३ कैकेयीतदपत्ययोस्स्वापितरंप्रीतिंपारिग्राहयन्
स्वर्गस्थैर्वृणुभोरभीप्सितमितिप्रीत्याऽर्थितोराघवः ।
छिन्नाङ्गाव्रणआहतानपिकपीन्संजीवयन्तद्गिरा
कर्तव्यंविनियुज्यतेषुनिलयंप्राप्तेषुपूर्णेप्सितः ॥ २२० ॥

"கைகேயி" அவளின் புத்திரனை "பரதன்" இவர்களிடத்தில் பிதாவை பிரீதி அடைவித்தவரும் "ஹே இராமா! விருப்பத்தை வேண்டிக்கொள்ளு" என்று தேவர்களால் பிரார்த்திக்கப்பெற்று யுத்தத்தில் அங்கங்கள் அறுக்கப்பெற்றவர்களும் அழிக்கப்பெற்றவர்களுமான வானரங்களை அந்த தேவர்களின் அனுக்கிரஹத்தால் பிழைக்கச் செய்தவரும், செய்யவேண்டிய காரியத்தை தேவர்கள் உத்திரவுசெய்து இருப்பிடம் சென்றதும் நிறைந்த விருப்பம் பெற்றவருமான இராமன் விளங்கினார்.

१२४ सुग्रीवाऽऽदिसुहृज्जनान्सुखयमेपट्टाम्बरालङ्कृतैः
नाऽऽदास्यामितदद्यधर्म्यभरतस्ताम्यत्यसौमत्कृते ।
गन्तव्यानगरीनिजोपकृतितस्तुष्यामिमाक्रुध्यभोः
इत्युक्तिंतसाविभीषणःकृतनतिःप्रत्याहरामंपुनः ॥ २२१ ॥

"ஹே விபீஷணா! "சுக்ரீவன்" முதலிய என்னுடைய சினேஹிதர்களை பட்டாடை ஆபரணங்கள் இவைகளால் சுகமடைவிக்க வேண்டும் தர்மத்திலிருந்து தவராத பரதன் எனக்காக வருந்துகிறான். ஆனதால் இப்பொழுது அவைகளை நான் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. என்னுடைய நகரம் செல்லவேண்டும். உன்னுடைய உதவியால் ஸந்தோஷமடைகிறேன். நீ கோபிக்க வேண்டாம்" என்று சொல்லும் இராமனைப்பார்த்து அந்த "விபீஷணன்" வணங்கி மறுபடியும் கூறினான்.

भ्रात्रामेदशकन्धरेणतरसानिर्जित्यवित्तेश्वरम्
तस्मादाहृतमास्तिपुष्पकमितिख्यातंमनोजित्वरम् ।

अह्नात्वांगमयामिराघवपुरींसाकेतमित्यादृतः
गत्वाशीघ्रमुपानयत्सुशिखरंदिव्यंविमानंसतत् ॥ २२२ ॥

"என்னுடைய அண்ணனை இராவணன் பலத்தால் "குபேரனை" ஜயித்து அவனிடமிருந்து கொண்டுவந்ததும் (வேகத்தால்) மனதை ஜயித்ததும் புஷ்பகமென்று புகழ்பெற்றது மான விமானம் இருக்கிறது. ஹே இராமா! அதனால் உன்னை ஒரு பகலில் அயோத்தியாபுரியை அடைவிக்கிறேன்" என்று விபீஷணன் அன்போடு (கூறி) (இலங்கைக்கு)ச் சீக்கிரம் சென்று அழகிய சிகரம் பெற்ற அந்த விமானத்தைக் கொண்டுவந்தான்.

वैडूर्यस्फटिकाङ्कितैर्वरतलैर्युक्तंसुवर्णाङ्कितम्
कूटागारसमावृतंसरजतच्छायंगवाक्षोज्वलम् ।
किङ्किण्योघसुशब्दितंविलसितंहर्म्यैर्यथेच्छाऽऽगतम्
दृश्यंवीक्ष्यविमानमप्रतिमभंरामोऽगमाद्विस्मयम् ॥२२३॥

வைடூர்யம் ஸ்படிகம் இவைகளால் அலங்கரிக்கப் பெற்ற நல்ல பூமியோடு கூடியதும் தங்கத்தால் அடையாளம் செய்யப் பெற்றதும் மண்டபங்களால் சூழப்பெற்றதும் வெள்ளியின் ஒளி போன்ற ஒளியைப் பெற்றதும் ஜன்னல்களால் அழகியதும் சிறிய மணிகளின் கூட்டத்தால் நல்ல சப்தம் பெற்றதும் உப்பரிகைகளால் விளங்கியதும் விருப்பப்படி ஸஞ்சாரம் பெற்ற தும் பார்க்கத்தக்கதும் ஒப்பற்ற ஒளியைப் பெற்றதுமான அந்த விமானத்தை இராமன் பார்த்து ஆச்சர்யமடைந்தார்.

१२५ हृष्टेनाथविभीषणेनकपिषुप्रेम्णाऽर्चितेष्वम्बरैः
रत्नार्थैश्चतदारुरोहदिविषद्यानंसआर्येप्सितः ।
अङ्कभूतनयांवहन्ससहजस्संप्राप्तुमात्माऽऽलयम्
सन्दिष्टैस्स्वसुहृद्भिरप्यनुगतिंतामन्वमंस्तार्थिताम् ॥२२४॥

பிறகு "விபீஷணன்" ஸந்தோஷமடைந்து அன்போடு வானரங்களை வஸ்திரங்கள், இரத்தினங்கள், பொருள்கள் இவைகளால் ஸந்தோஷமடைவித்ததும் பெரியோர்களால்

விரும்பப்பெற்ற இராமன் அந்த விமானத்தில் மடியில் ஸீதையை வஹித்துக்கொண்டு தம்பியோடுகூட ஏறினர். தங்களின் இருப் பிடத்திற்குச் செல்லும்படி உத்திரவு செய்யப்பெற்ற தன் ஸ்னே ஹிதர்கள் வேண்டும் கூடவருதலையும் ஸம்மதித்தார்.

१२६ गत्वोपाऽऽविविशुर्विमर्दरहितास्सर्वेभृशंनिर्वृताः
तस्मिन्गच्छतिदेववर्त्मनिमहावेगेविमानोत्तमे
रामोहृष्टउदैक्षयज्जनकजांमार्गेविशेषान्बहून्
लंकांयुद्धभुवंसमुद्रतरणंसेतुंमहेशार्चनम् ॥ २२५ ॥

எல்லா ஸைனியங்களும் நெருக்கமில்லாமல் மிகவும் சுகமாக உட்காரும்படி இடம் கொடுத்த அந்த விமானம் ஆகாயத்தில் அதிகவேகமாய் செல்லும்பொழுது இராமன் ஸந்தோஷமடை ந்து இலங்கையையும் யுத்த பூமியையும் ஸமுத்திரத்தின் தாண்டு தலையும் ஸேதுவையும் சிவபூஜயையும் வழியில் இருக்கும் அநேக விசேஷங்களையும் கூறி ஸீதைக்குக் காண்பித்தார்.

किष्किन्धांहरिवल्लभस्यवसतिंदृष्ट्वाकपिप्रेयसीः
आनीयैतदुपाश्रितानिजपुरंगच्छेयमित्यर्थितः ।
रामोवल्लभयाऽर्कजनेसुदृशस्ताःप्रापयन्नान्तिकम्
मध्यस्थंसमतीत्यपुण्यसरयूंसाकेतगामैक्षत ॥ २२६ ॥

சுக்ரீவனுடைய இருப்பிடமான கிஷ்கிந்தை நகரத்தைப் பார்த்து "வானரப் பெண்களை அழைத்து அவர்களால் சூழப் பெற்று தன் நகரத்திற்குச் செல்லவேண்டும்" என்று மனைவி யால் பிரார்த்திக்கப்பெற்ற இராமன் அந்தப் பெண்களை சுக்ரீவ னல் ஸமீபத்தில் அழைத்து வரச்செய்து நடுவில் இருப்பவை களைத் தாண்டி அயோத்தியை அடைந்த புண்ணிய ஜலம்பெற்ற ஸரயூநதியைப் பார்த்தார்.

१२७ ज्ञातीनांकुशलंमहद्भिविदिषुंस्वस्थानगंराघवम्
सर्वंतच्चरितंवदन्स्वतपसाज्ञातंसुहृत्सुस्थितिम् ।
श्वोगन्ताऽसिपुरीमितिप्रणयतःख्यातोभरद्वाजसन्
मौनीप्रार्थयदात्रसैतदतुलांपूजांप्रगृह्णन्निति ॥ २२७ ॥

பந்துக்களின் மிகுந்த க்ஷேமத்தை அறிய விரும்பி தன் இருப்பிடத்திற்கு வந்த இராமனிடம் தன் தவத்தால் அறியப் பெற்ற அவருடைய எல்லா சரித்திரத்தையும் பந்துக்களின் க்ஷேமத்தையும் கூறி "நாளை தினம் அயோத்திக்குச் செல்ல வேண்டும் இவ்விடத்தில் ஒப்பற்ற விருந்தைப்பெற்றுக்கொண்டு வஸிக்கவேண்டும்" என்று புகழ்பெற்ற பரத்வாஜ முனிவர் அன்பால் வேண்டினர்.

यावत्त्रीणिसयोजनानिपरितस्साकेतमुर्वीरुहः
शैलान्पुष्पफलाऽऽवृतान्मधुजलस्रोतोवहानाचरत् ।
संहृष्टावनवासिनोजितसुधासारंफलानांचयम्
खादन्तोऽमृतभोजनाइवयथास्युर्यावदात्मेप्सितम् ॥

அயோத்திக்கு நான்கு புறமும் மூன்று யோஜனை தூரம் வரை வானரங்கள் அமிருதத்தின் ருசியை ஜயித்த பழங்களின் குவியல்களை தன் விருப்பம்வரை ஸாப்பிட்டு அமிருதபானம் செய்த தேவர்கள்போல் இருக்கும்படி பூமியில் முளைத்தமரம் கொடிகளை புஷ்பங்கள் பழங்கள் இவைகளால் சூழப்பெற்றதாகவும் மலைகளை தேன்போன்ற ஜலம்பெற்ற நதிகளை அடைந்திருக்கும்படியும் பரத்வாஜமுனிவர் செய்தார்.

१२८ जिज्ञासोर्भरताऽऽशयंरघुपतेस्सन्देशतोवायुजः
शीघ्रंप्राप्यचशृङ्गिबेरनगरंवाचागुहंहर्षयन् ।
अध्वानंजवनःपितेवनितशंदूरंमुदालङ्घयन्
धर्मंमूर्तमिवैक्षताथभरतंचीरांबरंसज्जटम् ॥ २२९ ॥

பரதனுடைய மனதை அறிய விரும்பும் இராமனுடைய உத்திரவால் அனுமான் சிருங்கி பேரநகரம் சீக்கிரம்சென்று வார்த்தையால் குஹனை சந்தோஷமடைவித்து, தகப்பனான வாயு போல், சந்தோஷமாய் தூரவழியைக் கடந்து பிறகு உருவம் பெற்ற தர்மம்போன்ற மரயுரி சடைகளை தரித்த பரதனைப் பார்த்தார்.

आर्यस्यार्चितपादुकेअपिपुरस्कृत्यावनेश्शासकम्
युक्तंमन्त्रिभिरात्मनस्समतुलैस्तंक्रोशमात्रेस्थितम् ।

साकेतस्यससांजलीरघुपतेर्विज्ञापयन्नागतिम्
तेनार्चिष्टकृताऽऽदरेणबहुधावक्ताप्रियंभाषितम् ॥२३०॥

பூஜிக்கப்பெற்ற அண்ணனுடைய பாதுகைகளை முன்னால் வைத்து பூமியை பரிபாலிக்கிறவனும் தனக்கு சமமான மந்திரிகளோடு அயோத்திக்கு இரண்டு நாழிகை தூரத்தில் இருக்கிறவனுமான பரதனிடம் ராமனுடைய வரவை அஞ்சலிபந்தம் செய்து அறிவித்து பிரியமான வார்த்தையை பலவிதமாகக்கூறும் ஹனுமானைப் பரதன் அன்போடு பூஜித்தான்.

१२९ संपृष्टोऽप्यनवद्यरामचरितंजिज्ञासमानेनसः
प्रीतोऽन्तर्भरतेनतत्प्रकथनेमत्वाविधेस्तुष्टताम् ।
तस्मैप्राहपुरेभवंतदखिलंत्वज्ञातमारण्यकम्
द्रक्ष्यस्यार्यमविघ्नमागतममुंश्वःपुष्ययुक्तेदिने ॥ २३१ ॥

குற்றமற்ற இராம சரித்திரத்தை அறிய விரும்பும் பரதனால் வினவப்பெற்ற ஹனுமான் அந்த இராம கதையைச் சொல்லுகிற விஷயத்தில் தெய்வம் ஸந்தோஷமடைந்திருப்பதை மனதில் நினைத்து ஸந்தோஷமடைந்து பட்டணத்தில் நடந்ததும் வனத்தில் நடந்ததும் தெரியாததுமான எல்லா ராமசரித்திரத்தையும், "இடையூர் இல்லாமல் வந்த அண்ணனை பூச நக்ஷத்திரத்தோடு கூடிய நாளை தினம் பார்க்கப் போகிறாய்" என்றும் பரதன் பொருட்டுக் கூறினார்.

१३० सन्तुष्टोभरतोयथाऽर्थहनुमद्वाचाऽऽर्चयन्देवताः
शत्रुघ्नेनसकारयन्नगरतश्चाऽऽवासतस्सर्वतः ।
मार्गान्निम्नसमुन्नतत्वरहितान्वायुक्षितान्भूषितान्
प्रत्युद्यातुमतित्वरोरघुपतिंप्रास्थापयत्सैनिकान् ॥ २३२ ॥

உண்மையான ஹனுமானுடைய வார்த்தையால் பரதன் ஸந்தோஷமடைந்து தெய்வங்களைப் பூஜித்து இருப்பிடமிருந்து பட்டணம்வரை எல்லாவிடத்திலும் வழிகளை மேடு பள்ளமில்லாமலும் ஜலம் தெளித்தும் அலங்காரம்பெற்றதுமாக சத்ருக்னனால் செய்வித்து இராமனை எதிர்கொண்டு அழைப்பதற்கு மிகவும் வேகமாக ஸைனியங்களை பிரயாணம் செய்வித்தான்.

पौरैर्मन्त्रिभिरन्वितोद्विजानिभिर्भ्रात्रावधूभिस्सुते
कैकेय्यामुदितेपुरस्यसुषुमास्वर्गश्रियोजित्वरी ।
नन्दिग्राममुपैद्दिदृक्षुरिवसारामंसुरैस्सन्नुतम्
गृह्णन्नार्यसुपादुकेस्वशिरसाप्रत्युद्ययौसोऽग्रजम् ॥ २३३ ॥

பட்டணத்தின் ஜனங்களோடும் மந்திரிகளோடும் பிராமணர்களோடும் தம்பியோடும் பெண்களோடும் கைகேயியின் புத்திரனுன பரதன் ஸந்தோஷமடைந்ததும் சுவர்க்கத்தின் அழகை ஜயித்த பட்டணத்தின் அழகு தேவர்கள் போற்றும் இராமனைப் பார்க்க விரும்பியதுபோல் நந்திக் கிராமத்தை அடைந்தது. பரதன் அண்ணனுடைய பாதுகைகளைத் தன் சிரஸில் வஹித்து அண்ணனை எதிர்கொண்டு அழைத்தான்.

हेतुंरामाविलंबितस्यवदतिव्याकृत्यभिज्ञेवरम्
दृष्ट्वापुष्पविमानमात्तानिनदेस्वयियानुगौघेभृशम् ।
यानेभ्योऽध्यवरुह्यभूमिगमनेप्रेमाऽऽवृतेपश्यति
प्रेक्ष्यार्कंगिरिशृङ्गगंजनइवप्रावन्दताऽऽर्यंसुधीः । २३४ ॥

இலக்கண பண்டிதனுன ஹனுமான் இராமனுடைய தாமதத்தின் தகுந்த காரணத்தைக்தெரிவிக்கும்பொழுது புஷ்பகவிமானத்தைப் பார்த்து தன்னுடன் கூட வருபவர்களின் கூட்டம் மிகவும் சப்தித்து வாஹனங்களிலிருந்து இறங்கி பூமியில் நடந்து அன்போடு பார்த்திருக்கும்பொழுது உதயமலையின் சிகரத்தில் இருக்கும் சூரியனை ஜனங்கள்போல் புத்திசாலியான பரதன் அண்ணனை நமஸ்கரித்தான்.

रामेणत्वरयाभुवंगमयताचित्राऽऽकरंवाहनम्
स्वाऽऽदेशाद्भरतोनतोऽधिधरणिस्वारोपितोमोदितः ।
आश्लेषेणनिरंतरेणसुहृदालब्धेनसभ्रातृकः
सीतालक्ष्मणहर्षणोऽनुगमनानस्तौत्स्वसान्त्वोदितैः ॥

சித்திரங்களுக்கு இருப்பிடமான புஷ்பகவிமானத்தை இராமன் தன்னுடைய உத்திரவால் வேகமாய் பூமியை அடைவித்து பூமியில வணங்கின தம்பியோடு கூடிய பரதனை அதில் ஏறச்

செய்து சிநேஹிதன் பெற்ற பலமான ஆலிங்கனத்தால் ஸந்தோஷமடைவித்ததும் பரதன் ஸீதை இலக்ஷ்மணன் இவர்களை ஸந்தோஷமடைவித்து பின் வந்தவர்களை தன் ஸமாதான வார்த்தைகளால் துதித்தான்.

मातॄणांपदयोर्नतंपुरजनैरभ्यर्चितंस्वागत-
प्रश्नेनाभ्यदधान्मुदासभरतस्तत्पादुकेपूजिते ।
रामंतस्यसुयोजयन्चरणयोर्निर्यातितंरक्षितम्
राज्यंतेक्षितिनायकप्रगुणितंस्वीकुर्वभूवंकृती ॥ २३६ ॥

தாயார்களின் திருவடிகளில் வணங்கினவனும் பட்டணத்தின் ஜனங்களால் நல்வரவு வினவப்பெற்று பூஜிக்கப்பெற்றவனுமான இராமனை, பரதன், பூஜிக்கப்பெற்ற அவருடைய பாதுகைகளை அவருடைய திருவடிகளில் சேர்த்து, "பூமியின் அதிபதியே உன்னுடைய இராஜ்யத்தை வளரச்செய்து காப்பாற்றி ஒப்பிவித்தேன் அதைப்பெற்றுக்கொள்ள வேண்டும். நான் பாக்கியம்பெற்றேன்" என்று ஸந்தோஷமாய்க் கூறினான்.

एवंवाक्यमवेक्षितंकपिनिशाचारैर्भृशंविस्मितैः
आरोप्याङ्कमथानुजंरघुपतिस्सर्वैःप्रहृष्टोगतः ।
नन्दिग्राममदोविमानमतुलंदेवंधनेशंवह
त्वंप्रीत्येतिकृतानुमत्यगमयत्सत्पुष्पकंतत्प्रभुम् ॥ २३७॥

இவ்விதம் வார்த்தை கூறினவனும் மிகவும் ஆச்சரியமடைந்த வானர ராக்ஷஸர்களால் பார்க்கப்பெற்றவனுமான தம்பியான பரதனை இராமன் ஸந்தோஷமடைந்து பிறகு மடியில் ஏற்றிவைத்து எல்லோர்களோடு கூட நந்திகிராமம் சென்று ஒப்பற்றதும் புஷ்பங்களைப் பெற்றதுமான அந்த விமானத்தை "நீ அன்போடு குபேரனை வஹிக்கவேண்டும்" என்று அநுமதி கொடுத்து அதன் எஜமானனிடம் அனுப்பினார்.

१३१ आसीनस्यगुरोःपुरःकृतनतिंवीक्ष्याऽऽर्यमात्ताऽऽसनम्
स्निग्धोमूर्ध्निकृतांजलिस्सभरतःप्राहाखिलान्श्रावयन् ।
राज्यंमेयददामहत्स्वजननीप्रीत्यैददाम्यद्यते
स्वीकुर्वप्रतिगीर्बलिष्ठभवतोन्यूनोवहेयंकथम् ॥ २३८ ॥

உட்கார்ந்திருக்கும் குருவின் முன்னிலையில் நமஸ்காரம் செய்து ஆஸனத்தில் அமர்ந்த அண்ணனைப் பார்த்து அன்பு பெற்று பரதன் சிரமேற் கைகளைக் குவித்து எல்லோர்களும் கேட்கும்படி கூறினான் "என் தாயாரின் பிரீதியின் பொருட்டு என்னிடம் தாங்கள் கொடுத்த பெரிய இராஜ்யத்தை இப்பொழுது தங்களின் பொருட்டு நான் கொடுக்கிறேன். பதில் கூறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும் ஹே பலம்பெற்றவனே! தங்களைக் காட்டிலும் சிறியவனான நான் எவ்விதம் வஹிப்பேன்."

राज्यंशासितुमेवतेसुकृतवान्तातोऽप्यमोघाऽऽशयः
त्वांप्राप्याऽऽर्यमनीष्यमोदतभृशंतत्कामनांपूरय ।
बिभ्रत्तन्मकुटंस्वशीर्ष्ण्यधिगतोभूपाऽऽसनंभास्वरम्
प्राप्तस्स्यांसुखमप्रमेयमधुनासंमुक्तराज्यश्रमः ॥ २३९ ॥

ஹே அண்ணா! புண்ணியம் செய்தவரும் பயனடைந்த விருப்பம்பெற்றவரும் புத்திசாலியுமான தங்களின் தந்தை இராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காகவே தங்களை அடைந்து மிகவும் ஸந்தோஷித்தார். அவருடைய கிரீடத்தை தன் சிரஸில் தரித்து அழகிய ஸிம்மாஸனத்தில் அமர்ந்து அவருடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டும். இராஜ்யத்தால் வந்த சிரமத்தைத் துறந்து அளவற்ற சுகத்தை இப்பொழுது நான் அடைய வேண்டும்."

कामोऽयंचिरनिर्मितस्सुफलितोदैवादिदानीमिति
भ्रातर्यर्थयतिप्रभुस्सकरुणस्सोऽभाषताथौमिति ।
शत्रुघ्नेननियोजिताउपययुर्द्राक्श्मश्रुणोवर्धकाः
भ्रातॄन्त्रीन्जटिलाविशोधितजटास्स्नातामहाऽर्घाम्बराः ॥

"வெகு காலமாய் நினைத்த இந்த விருப்பம் தெய்வாதீனமாய் இப்பொழுது பயன்பெற்றது" என்று தம்பியான பரதன் வேண்டும்பொழுது ஸாமர்த்தியம் பெற்ற "இராமன்" கருணையோடு பிறகு "ஓம்" என்று அங்கீகரித்தார். சீக்கிரம் மீசை வளர்ப்பவர்கள் "சத்துருக்னனால்" ஏவப்பெற்று மூன்று ஸஹோதரர்களிடமும் வந்தார்கள். சடைபெற்றவர்கள் சடைகள் களை

யும்படி மயிர்களை அலங்கரித்துக்கொண்டார்கள். ஸ்நானம் செய்தார்கள். விலைமிகுந்த ஆடைகளை அணிந்து கொண்டார்கள்.

स्वप्रेयस्सुविभूषिताऽऽत्मतनुषुप्राप्तेषुसाकेततः
मन्त्रिष्वात्ममहाऽऽभिषेककरणव्यग्रेषुचाभ्यागतम् ।
आरूढस्ससुमन्त्रयन्तृकरथंरामोऽप्ययोध्यांययौ
छत्रंचव्यजनंतदाजगृहतुद्वौभ्रातरावुत्सुकौ ॥ २४१ ॥

"இராமனும்" தன்னுடைய சினேஹிதர்கள் தங்களின் அங்கங்களை அலங்கரித்துக்கொண்டதும் தனக்கு பட்டாபிஷேகம் செய்வதில் ஸாவதானமான மந்திரிகள் ஆஸ்தானமான அயோத்தியிலிருந்து வந்தபொழுது சுமந்திரனை ஸாரதியாகப் பெற்று வந்த இரதத்தில் ஏறிக்கொண்டு அயோத்திக்குச் சென்றார். இரட்டை ஸஹோதரர்கள் அப்பொழுது ஸந்தோஷமாக சாமரம் விசிறி இவைகளை எடுத்துக்கொண்டார்கள்.

रश्मीन्सत्वरमाददात्सभरतोरक्षःपुरोऽवीजयत्
देवावाद्यमघोषयन्कलरवंशत्रुंजयंकुंजरम्
आरुक्षत्कपिसत्तमोऽथकपयोमानुष्यवेषाअगुः
वादित्रैर्मधुरस्वनैस्सहबलैरामःपुरीमापसः ॥ २४२ ॥

"பரதன்" வேகமாக "கடிவாளங்களை"ப் பிடித்தான் "விபீஷணன்" முன்னால் வீசினன். தேவர்கள் வாத்தியங்களை மதுரமாய் சப்திக்கும்படி கோஷித்தார்கள். பிறகு "சுக்ரீவன்" சத்துருஞ்ஜயம்" என்கிறயானையில் ஏறினன். வானரங்கள் மனித வேஷம்பெற்று சென்றார்கள். இனிமையான சப்தம்பெற்ற வாத்தியங்களோடும் ஸைனியங்களோடும் இராமன் அயோத்தியா பட்டணத்தை அடைந்தார்.

मर्त्यास्स्वीकृतमङ्गलार्थनिचयारामस्यजग्मुःपुरः
पौरेभ्यस्सचिवेभ्य आहचारितंस्वीयंरघूणांपतिः ।
साकेतंससुहृत्समेत्यनगरंपित्र्यंनिवासाऽऽलयम्
प्राप्तोवन्दितमातृकःकपिवरंस्वीयंगृहंप्रापयत् ॥ २४३ ॥

மனிதர்கள் மங்கள திரவியங்களை எடுத்துக்கொண்டு மன்னனுக்கு முன்சென்றார்கள். இராமன் தன்னுடைய சரித்திரத்தை பட்டணத்தின் ஜனங்கள் மந்திரிகள் இவர்களின் பொருட்டுக் கூறினார். சிநேஹிதர்களோடு அயோத்தியை அடைந்து தகப்பனாருடைய அரண்மனைக்குச் சென்று தாயார்களை வணங்கி சுக்ரீவனைத் தனது அரண்மனையை அடைவித்தார்.

शत्रुघ्नेननियोजितःकपिपतिस्स्वैर्वानरैरानयत्
नादेयंजलमंबुधेस्ससुकृतंप्रत्यूषएवाऽऽशुतत् ।
सर्वंतत्त्वभिषेचनोचितमहासंभारमप्यानयन्
रामंतंस्वभिषेचयेत्यधिकृताऊचुर्वसिष्ठंमुनिम् ॥ २४४ ॥

சத்துருக்னனால் ஏவப்பெற்ற "சுக்ரீவன்" தன்னுடைய வானரங்களால் நதீ, ஸமுத்திரம் புண்ணிய தீர்த்தங்கள் இவைகளின் தீர்த்தங்களை சீக்கிரமாக காலையில்தானே கொண்டுவரச் செய்தான். அபிஷேகத்திற்குறிய பொருள்கள் எல்லாவற்றையும் அதிகாரிகள் கொண்டுவந்தார்கள். "இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும்" என்று வஸிஷ்ட முனிவரிடம் தெரிவித்தார்கள்.



ब्रह्मज्ञस्सवसिष्ठईडितकथंसद्रत्नपीठेरघु
श्रेष्ठंमाङ्गनमासयाद्द्विजवरैस्तन्मन्त्रिणोब्राह्मणाः ।
पुण्यैर्वाभिरसेचयन्नभिमतैस्तत्शीर्षआयोजयन्
प्रादाद्यन्मनवेविधिस्स्वकुलजामूर्ध्नाकिरीटंदधुः ॥

பிரம்மஞானியான "வஸிஷ்ட முனிவர்" பிராம்மணர்களோடுகூட துதிக்கப்பெற்ற கதையை அடைந்த ஸ்ரீராமனே மனேவியோடு இரத்தின பீடத்தில் உட்காரவைத்தார். அவருடைய மந்திரிகளும் பிராம்மணர்களும் விரும்பப்பெற்ற புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் செய்தார்கள். "பிரம்மா" "மனுவுக்கு"க்கொடுத்ததும் அவருடைய வம்சத்தின் அரசர்கள் தலையால் தரித்ததுமான "கிரீடத்தை" இராமனுடைய தலையில் சூட்டினார்கள்.

छत्रंपाण्डुरमाददाद्रिपुहरस्सुग्रीवरक्षःपती
बालंचव्यजनंददौसुरपतेर्हारंमरुन्मौक्तिकम् ।
गन्धर्वाजगुरंबरेप्रननृतुर्देवाङ्गनाराघवः
देयानिप्रददौद्विजेन्द्रततयेसंमानयन्स्वेप्सितान् ॥ २४६ ॥

"சத்துருக்னன்" வெண்குடையையும் "சுக்ரீவனும்" விபீஷணனும்" சிறிய விசிறியையும் எடுத்துக்கொண்டார்கள். இந்திரனுடைய முத்துமாலையை "வாயுபகவான்" கொடுத்தான். ஆகாயத்தில் கெந்தர்வர்கள் பாடினார்கள். தேவதாஸிகள் ஆடினார்கள். ஸ்ரீராமன் உத்தம பிராம்மணர்களின் கூட்டத்தின் பொருட்டு கொடுக்கக் கூடிய பொருள்களை தானம் செய்தார். தன்னுடைய நண்பர்களுக்கு வெகுமதி கொடுத்தார்.

भर्त्रादत्तममूल्यहारवसनंवाताऽऽत्मजायाददात्
सीतास्वप्रियपेटकायवचसापत्युः प्रहृष्टातदा ।
सर्वानादरपूर्वमप्यगमयत्स्वस्थानमभ्यर्चितान्
सुग्रीवश्चविभीषणस्स्वनगरींप्रापप्रभोराज्ञया ॥ २४७ ॥

ஸீதை புருஷனால் கொடுக்கப்பெற்ற விலையற்ற ஆடை ஆபரணங்களை புருஷனுடைய உத்திரவால் ஸந்தோஷமடைந்து தன்னுடைய அன்புக்குப் பெட்டியான ஹனுமான் பொருட்டு அப்

பொழுது கொடுத்தாள். (இராமன்) எல்லோர்களையும் அன்போடு பூஜித்து அவர்களின் இருப்பிடம் அடைவித்தார். "சுக்ரீவனும்" "விபீஷணனும்" பிரபுவின் உத்திரவால் தன் நகரம் சென்றார்கள்.

शासन्धर्मपथेनराज्यमखिलंनिर्वैरिकंराघवः
सौमित्रावनपेक्षकेसभरतंतंयौवराज्येऽकरोत् ।
श्रुत्युक्तंसकलंचकारविधिवत्सत्कर्मयज्ञाऽऽदिकम्
सर्वान्धर्मपथाधुनीनचरितान्लोकान्तथैवाऽऽत्मवत् ॥

இராமன் இராஜ்யம் முழுவதையும் சத்ருவில்லாமல் தர்ம மார்க்கமாக பரிபாலித்து இலக்ஷ்மணன் இளவரசு புரிவதில் பற்றுதலற்றவனாக இருக்கும்பொழுது அதில் பரதனை அபிஷேகம் செய்வித்து வேதத்தில் விதித்த யாகம் முதலிய நற் கர்மங்களை விதிப்படி செய்தார். தன்னைப்போல் எல்லா ஜனங்களையும் அவ்விதமே தர்ம வழியில் நடைபெற்றவர்களாகச் செய்தார்.

राज्यंशासतिराघवे नविधवाआसन्नचव्यालतः
भीतिर्नाऽऽमयतोनदस्युजभयंनानर्थमापुर्नराः ।
सर्वेधर्मप्रायणारघुवरंवीक्ष्यापकोपामिथः
सन्तुष्टाश्चिरजीविनःफलसुमैर्युक्तालताःपादपाः ॥२४९॥

இராமன் இராஜ்ய பரிபாலனம் செய்யும்பொழுது விதவைகளும் பாம்புகளிடமிருந்தும், பிணிகளிடமிருந்தும், திருடனிடமிருந்தும் பயமும் இருக்கவில்லை. ஜனங்கள் கஷ்டமடையவில்லை. எல்லோர்களும் இராமனைப் பார்த்து தர்மத்தை விரும்பியும் ஒருவருக்கொருவர் கோபமில்லாமலும் ஸந்தோஷமாகவும் தீர்காயுளைப் பெற்று மிருந்தார்கள். கொடிகளும் மரங்களும் பழங்களோடும் புஷ்பங்களோடும் கூடி இருந்தன.

एवंश्रीपतिरात्तराघवतनुर्धर्मान्चरन्कारयन्
लोकात्राज्यमपालयद्भुविमुदासंहर्षयन्जानकीम् ।
वर्षाणामयुतंसहस्रमपरंलैलोक्यगःख्यातितः
कारुण्याऽऽकृतिनासयेन सुकृतीवल्मीकजस्तापसः ॥२५०॥

இவ்விதம் இலக்ஷ்மீகாந்தன் ஸந்தோஷமாய் பூமியில் இராமாவதாரம் செய்து தான தர்மங்களைச் செய்தும் ஜனங்களை அவ்விதம் செய்வித்தும் ஸீதையை ஸந்தோஷமடைவித்தும் புகழால் மூன்று உலகங்களிலுமிருந்து பதினோராயிரம் வருஷம் 11000 இராஜ்ய பரிபாலனம் செய்தார். கருணையின் உருவமாயிருந்து வால்மீகி முனிவருக்கும் அனுக்கிரஹித்தார்.

रामाऽऽख्यानकमीप्सितार्थघटकंवक्तुश्चसंशृण्वतः
विघ्नानांशमनंसुरप्रियकरंनष्टार्थसंप्रापकम् ।
लीलांभागवतींसरोजवसतेरध्यास्पदंविश्रुताम्
योऽस्मत्कल्पलतांभुवंत्वगमयद्वल्मीकजंतन्नुमः ॥ २५१ ॥

சொல்லுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் விரும்பிய பொருளைக் கொடுக்கும் விக்கினங்களை விலக்கும் தேவர்களுக்குப் பிரீதியளிக்கும் நஷ்டமான பொருளைக் கையில் கிடைக்கவைக்கும் இராம சரித்திரமாக பிரம்மலோகத்தில் புகழ்பெற்றதும் நமக்குக் கற்பகத் தருபோன்றதுமான பகவானுடைய திருவிளையாடலை பூமியில் வரவழைத்த வால்மீகி முனிவரைத் துதிப்போம்.

मच्चित्तंनृपविष्टरंस्वधिवसन्क्रोधाऽऽदिकान्दुर्जनान्
शासन्तद्वसतीन्मुहुश्चसुजनान्धर्माऽऽदिकान्वर्धयन् ।
अक्षीणंप्रददत्सुखंनिरवधिस्यान्मेसदाराघवः
कान्ताभ्रातृहनूमदाश्रितइतिध्यायत्यजस्रंकविः ॥ २५२ ॥

"இராமன்" மனைவி ஸஹோதரர்கள் ஹனுமான் இவர்களோடுகூட என் மனமாகிற ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து அவ்விடமிருக்கும் கோபம் முதலிய துர்குணமாகிற துஷ்டர்களை சிக்ஷித்தும் தர்மம் முதலிய நற்குணமாகிற நல்லோர்களை வளர்த்தும் அழிவற்ற பிரம்மானந்த சுகத்தையும் எல்லையற்ற சுகத்தையும் எப்பொழுதும் எனக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கவேண்டும்" என்று கவியான நூலாசிரியர் எப்பொழுதும் இராமத் தியானம் செய்கிறார்.

संरक्षत्यपिमृत्युवक्त्रपतितंदीनंनिरस्तार्थकम्
वित्तेशातनुविस्मयप्रदमहालक्ष्मींसदानेतरि ।

दौर्भाग्यात्यपनोदकेसुखकरेरामायणेसुन्दरे
वर्ण्यंयुद्धसुवर्णनंबुधवराऽऽकर्ण्यंसुपूर्णंत्वभूत् ॥ २५३ ॥

மிருத்யுவின் முகத்தில் விழுந்து வருந்துகிறவனையும் இரக்ஷிக்கும் பொருளற்றவனுக்கும் குபேரனும் அதிக ஆச்சரியமடையும்படி மிகுந்த பொருளைக் கொடுக்கும் எப்பொழுதும் துரதிருஷ்டத்தை தூரவிலக்கும் சுகமளிக்கும் சுந்தர ராமாயணத்தில் வர்ணிக்கத் தகுந்ததும் வித்வான்களால் கேட்கத் தகுந்ததுமான யுத்தகாண்டம் பூர்த்தியடைந்தது.

प्रासूतजानकीयंसासुब्रह्मण्यकुटुंबिनी ।
तत्कृतेरामचरिते पूर्णंयुद्धसुवर्णनम् ॥ ॥ २५४ ॥

சுப்பிரமணியனுடைய மனைவியான ஜானகி ஈன்ற சுந்தரமியற்றிய சுந்தரராமாயணத்தில் யுத்தவர்ணனை நிறைவேறினது.

யுத்தகாண்டம் முற்றிற்று.

अथ सुन्दररामायणे उत्तरकाण्डः प्रारभ्यते

உத்தர காண்டம்.

श्रेयोवांछितमर्पयन्तादितरद्दूरेत्त्वपोह्यामितम्
त्रैलोक्यंसुखयन्विभोरघुपतेकारुण्यमूर्तेतव ।
धानुष्कस्याविलंवितंकिमुचितंमद्वांछितस्यार्पणे
त्रस्यत्यम्बुनिधिस्सवीचिनिचयोभीमस्त्वदाख्यानतः ॥

பிரபுவாயும் கருணையின் உருவமுமான ஹே இராமா! மூன்று உலகங்களுக்கும் விரும்பின விருப்பத்தைக் கொடுத்தும் அளவற்ற அமங்களத்தை தூரத்தில் விலக்கியும் சுகமடைவித்து வரும் அலைகளின் கூட்டத்தோடு கூடியதும் பயங்கரமுமான ஸமுத்திரமும் பயமடையும்படி வில்லைப் பெற்ற உனக்கு என்னுடைய விருப்பத்தைக் கொடுப்பதில் தாமதம் தகுதியா?

१ रामंनिर्जितनिर्जरारिनिकरंप्राप्ताक्षितीन्द्राऽऽसनम्
सन्तुष्टास्सुदिदृक्षयाऽथमुनयस्सर्वेऽप्यगस्त्याऽऽदयः ।
साकेतंसमुपेत्यसत्वरगतैर्दौवारिकैः प्रेमतः
नीतास्तत्सविधंयथाऽर्हमभितःप्रापुर्नताविष्टरम् ॥ २ ॥

பிறகு "அகஸ்தியர்" முதலிய ரிஷிகள் ஸந்தோஷமடைந்து தேவர்களின் சத்ருக்களை ஜயித்து ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் இராமனைப் பார்க்க விரும்பி "அயோத்தியை" அடைந்து வேக நடைபெற்ற காவல்காரர்களால் அன்போடு அவருடைய ஸமீபம் அடைவிக்கப் பெற்றும் அவரால் வணங்கப் பெற்றும் மரியாதைக்குத் தக்கபடி நான்கு புறமும் ஆஸனங்களில் அமர்ந்தார்கள்.

आचख्यूरघुनायकंसविनयंकोदण्डपाणेवयम्
प्राप्तास्सौख्यमपक्षयानुजवधूसैन्यस्यदृष्टेस्तव ।
शौर्यस्याऽऽकरतेकियद्दशमुखोयद्रावणस्संहृतिः
चित्रेत्युक्तगिरश्चतद्विविदिषुंप्राहुस्तदीयान्वयम् ॥ ३ ॥

வணக்கமுள்ள இராமனைப் பார்த்து "ரிஷிகள்" கூறினார்கள். "வில்லைக் கையில் தரித்தவனும் பலத்திற்கு இருப்பிடமுமான ஹே இராமா! தம்பி - மனைவி, ஸைனியம் இவர்களோடு கூட க்ஷேமமடைந்த உன்னைப் பார்த்ததால் நாங்கள் சுகமடைகிறோம். உனக்கு இராவணன் எவ்வளவு? இந்திரஜித்தின் வதமோ ஆச்சரியம்" என்று கூறி அதை அறியவிரும்பும் இராமனைப் பார்த்து இந்திரஜித்தின் வம்சத்தைக் கூறினார்கள்."

२ क्रुद्धस्स्वीयतपःक्षयाद्विधिसुतःकुर्वन्स्त्रियोगर्भगाः
दृष्टेस्स्वस्यपुलस्त्यइत्यथमुनिःपित्रार्पितांस्वेक्षिताम् ।
सद्भार्यांतृणबिन्दुजांसकरुणोगृह्णन्तयामोदितः
तज्जंविश्रवसंश्रुतिश्रवणतस्तुल्यंचकाराऽऽत्मनः ॥ ४ ॥

"பிறகு பிரம்மாவின் புத்திரனான" "புலஸ்தியர்" என்ற ரிஷி தன்னுடைய தவத்தின் குறைவால் கோபமடைந்து தன்னுடைய பார்வையால் பெண்களை கர்ப்பம் அடையப்போகிறவர்களாக சபித்து தன் பார்வையால் கர்ப்பம் தரித்தவளும் பிதாவினால் கொடுக்கப்பெற்றவளுமான "திருணபிந்துவின்" பெண்ணைக் கருணையுடன் மணந்துகொண்டு அவளால் ஸந்தோஷமடைவிக்கப்பெற்று வேதமோதியதைக்கேட்டதால் தனக்கு ஸமமான அவளின் புத்திரனை "விச்ரவஸ்" என்று பெயர் பெறச் செய்தார்."

३ कुर्वन्सत्तपआददद्विधिमतांपत्नींभरद्वाजजाम्
तस्यांवैश्रवणंत्ववापतनयंधर्मेरतंविश्रवाः ।
स्रष्टुर्वित्तपतित्वमेत्यतपसातुष्टात्तुरीयंदिशः
यानंपुष्पकमाधिपत्यमभवत्तातेनलंकाऽऽस्पदः ॥ ५ ॥

"விச்ரவஸ்" என்ற ரிஷி நற்றவம்செய்து சாஸ்திர ஸம்மத மான "பரத்வாஜருடைய" பெண்ணை மனைவியாக அடைந்து அவ ளிடம் கர்மத்தில் ஆசைபெற்ற "வைச்ரவணன்" என்ற புத்தி ரனை அடைந்தார் (அவன்) தவத்தால் ஸந்தோஷமடைந்த பிர ம்மாவினிடமிருந்து, பொருளுக்கு எஜமானனுயிருத்தலையும் நான் காவது திக்குபாலனுபிருத்தலையும் புஷ்பக விமானத்தையும் பெற்று தந்தையின் உத்திரவால் இராக்ஷஸர்களற்ற இலங்கை யில் வஸித்தான்.

४ लङ्कायांन्यवसन्पुराऽपिकिमितोनक्तंचरास्तेचके
किंवीर्याइतिविस्मितेनविभुनापृष्टोमुनिःप्राहतम् ।
सृष्ट्वाऽम्भोव्यतनोद्विधिस्समवितुंसत्वानिसक्षुन्तितत्
हीनान्यात्मगरक्षणाशनकृतेरक्षांसियक्षान्तथा ॥ ६ ॥

"இதற்கு முன் காலத்திலும் இலங்கையில் இராக்ஷஸர்கள் இருந்தார்களா? அவர்கள் யார்? என்ன பலம்பெற்றவர்கள்?" என்று இராமன் ஆச்சர்யமடைந்து வினவும்பொழுது, அகஸ்திய முனிவர் பதில் கூறினார். "பிரம்மா ஜலத்தை சிருஷ்டித்து அதைக் காப்பாற்றுவதற்கு பிராணிகளை உண்டுபண்ணி இரக்ஷிக் கச் சொன்னதில் பசியால் "ஸாப்பிடுவோம்" என்று சொன் னவைகளை யக்ஷர்களாகவும் பசியற்று "ரக்ஷிப்போம்" என்று சொன்னவைகளை இராக்ஷஸர்களாகவும் செய்தார்."

सोदर्यावकदर्यवीर्यनिलयौहेतिप्रहेत्याख्यकौ
अन्त्येधर्मरतेभयामुदवहत्कालानुजामादिजः ।
विद्युत्केशमवापनन्दनमतोजायांससन्ध्याऽऽत्मजाम्
लेभेसालकटङ्कटांसुतनयंप्रासूतसामन्दरे ॥ ७ ॥

"அதிக பலத்திற்கு இருப்பிடமான "ஹேதி" "பிரஹேதி" என்று பெயர்பெற்ற ஸஹோதரர்கள் இருவர்கள் (இருந்தார் கள்) கடைசியான "பிரஹேதி" தர்மத்தில் பற்றுதலாயிருக்கும் பொழுது முதல்வனை "ஹேதி" காலனுடைய தங்கை "பயை" என்றவளை மணம்புரிந்தான். அவளிடமிருந்து "வித்யுத்கேசன்" என்ற புத்திரனை அடைந்தான். அவன் "ஸந்த்யை"யின் பெண் "ஸாலகடங்கடையை" மனைவியாக அடைந்தான். அவள் "மந் தர பர்வதத்தில் மகனைப் பெற்றாள்."

पस्यासानिरगात्सुखप्रणयिनीत्यक्त्वाऽन्यतस्स्वार्भकम्
तस्याऽऽस्येकृतमुष्टिकस्यरुदतोदेवावुमाशङ्करौ ।
प्रादातांवरमोप्सितंसवयसंमात्रानिरस्ताशुभम्
व्योमस्थस्यपुरस्यनाथमथसोऽनन्दत्सुकेशस्तदा ॥ ८ ॥

"அவள் சுகத்தில் விருப்பங்கொண்டு தன்னுடைய குழந்தை யையும் விட்டு புருஷனோடு வேறு இடம் சென்றாள். மூடின கையை வாயில் வைத்துக்கொண்டு அழும் அக்குழந்தைக்கு தாயோடு ஸமவயதாகவும் அழிவற்றவனாகவும் ஆகாயத்தில் இருக்கும் பட்டணத்திற்கு அதிபதியாகவும் விரும்பப்பெற்ற வரங்களை பார்வதீ பரமேசுவரர்கள்" கொடுத்தார்கள். பிறகு அந்த "ஸுகேசன்" அப்பொழுது ஸந்தோஷமடைந்தான்."

५ भार्यांदेववतीमुदूह्यससुतांग्रामण्यआपाऽऽत्मजान्
तस्यांमालिसुमालिमाल्यवादितिख्यातान्हुताशाऽऽकृतीन् ।
सुप्रीतस्यविधेर्वरेणतपसासंपीड्यदेवान्सदा
त्वष्ट्रानिर्मितमावसन्सुरुचिरंलंकापुरंप्रेमतः ॥ ९ ॥

"சுகேசன்" "க்ராமணி" என்ற (கந்தர்வனுடைய) பெண்ணான "தேவவதியை" மணம்புரிந்து அவளிடம் "மால்யவான்" "ஸுமாலி" "மாலி" என்று பிரஸித்தி பெற்றவர்களும் தவத்தால் ஸந்தோஷமடைந்த பிரம்மாவின் வரத்தால் எப்பொழுதும் தேவர்களைத் துன்பமடைவித்து அக்னிபோன்ற உருவம்பெற்றவர்களுமான பிள்ளைகளை அடைந்தான். விசுவகர்மாவினால் சிருஷ்டிக்கப்பெற்ற அழகிய "இலங்காபுரி"யில் அவர்கள் ஆனந்தமாய் வஸித்து வந்தார்கள்."

कन्यानर्मदयाभगाधिपतिभेदत्तास्त्वगृह्णन्त्रयः
भार्यामाल्यवतोऽतिसुन्दरतनुः प्रासूतवज्राऽऽदिमान् ।
पुत्रानष्टचसानलान्दशसुतान्वीरान्प्रहस्ताऽऽदिमान्
राकाःकेतुमतीसुमालिदयिताकन्याश्चतस्रस्तथा ॥ १० ॥

"அந்த மூவர்களும்" "நர்மதை" என்ற கந்தர்வப் பெண்ணால் கொடுக்கப்பெற்ற (மூன்று) கன்னிகைகளை "பகனே" தேவ

தையாகப் பெற்ற உத்திர நக்ஷத்திரத்தில் மணந்துகொண்டார்கள். "மால்யவானுடைய மனைவியான "சுந்தரி" "வஜ்ரமுஷ்டி" "விரூபாக்ஷன்" "துர்முகன்" சுப்தக்னன்" "யக்ஞகோபன்" "மத்தன்" "உன்மத்தன், அனலை" என்ற பெண்ணுடன் கூடியவர்களுமான எட்டுபேர்களையும் பெற்றாள். "சுமாலியின் மனைவியான "கேதுமதீ" "பிரஹஸ்தன்" "அகம்பனன்" "விகடன்" காலகார்முகன் தூம்ராக்ஷன் "தண்டன்" "சுபார்சுவன்" "ஸம்ஹ்ராதி" "பிரகஸன்" "பாஸகர்ணன்" முதலிய பத்து புத்திரர்களையும் "ராகா" ("புஷ்போத்கடா" "கைகஸீ" "கும்பீனஸீ") முதலிய நான்கு கன்னிகைகளையும் பெற்றாள்.

गन्धर्वीवसुधाऽपिमालिदयितावीरानिलाऽऽद्यान्तथा
पुत्रान्तान्चतुरोऽपिकृत्यचतुरान्तेमाल्यवत्पूर्वकाः ।
पुत्रैरप्रतिमैर्बलेर्विधिवरान्मत्तैः प्रपीड्यामरान्
सत्कर्माऽऽचरणंनिषिध्यनितरांनित्यंत्वहृष्यन्त्रयः ॥ ११॥

"மாலியின்,' மனைவியான "வஸுதை" என்ற கந்தர்வப் பெண் "அனலன்" ("அனலன்" "ஹரன்" "ஸம்பாதி") முதலியவர்களும் காரியங்களில் நிபுணர்களுமான நான்கு புத்திரர்களை பெற்றாள். "மால்யவான்" முதலிய மூவர்களும் பலத்தில் ஒப்பற்றவர்களும் மதம் பெற்றவர்களுமான புத்திரர்களோடு பிரம்மாவின் வரத்தால் தேவர்களைத் துன்பமடைவித்து நற்கர்மங்களின் நடையை மிகவும் நிறுத்தி நித்தியம் ஸந்தோஷமடைந்தார்கள்."

६ शक्राऽऽद्यैरमृताशनैरभयदोविद्वेषिणामंबिका
जानिस्तान्ननिहन्मिमन्त्रमुचितंवक्ष्यामिनारायणम् ।
याचध्वंरिपुनिग्रहंसतुहितंकुर्यादितिप्रेषितैः
तैस्सप्रार्थितमादरादसुरहाद्रागङ्गचकार्षीन्मुदा ॥ १२ ॥

"சத்துருக்களுக்கு அபயமளித்த "அம்பிகாபதி" அந்த அரக்கர்களை நான் அழிக்கிறதில்லை. தகுந்தயோஜனை சொல்லப் போகிறேன். நாராயணனிடம் சத்துருக்களை ஸம்ஹரிக்கும்படி வேண்டுங்கள். அவரோ நன்மை செய்வார்" என்று (அவரால்)

அனுப்பப்பெற்ற இந்திரன் முதலிய அந்த தேவர்களால் வேண்டப்பெற்றதை அசுரர்களை அழித்து அமரர்களுக்கு அருள்புரியும் இலக்ஷ்மீ நாராயணன் அப்பொழுது அன்போடு சீக்கிரம் அங்கீகரித்தார்"

रक्षोभिर्विदितार्थकैस्सुरभृशक्रोधैर्बलाऽऽढ्यैः पुरः
जातं भीकरदुर्निमित्तमतं नुप्रेक्ष्याप्यभीतैर्विधेः ।
दुर्लङ्घ्यान्नियुयुत्सुभिर्विमनसो विज्ञाय विश्वंभरः
चक्राद्यायुधमाददत्खगरथो गोप्तुं सुरानाययौ ॥ १३ ॥

இராக்ஷஸர்கள் ஸமாசாரமறிந்து தேவர்களிடம் மிகுந்த கோபம் பெற்றும் பலம்பெற்றும் முன்னால் உண்டான பயமளிக்கும் அபசகுனங்களைப் பார்த்தும் வெல்ல முடியாத விதியால் பயமடையாமல் யுத்தம்செய்ய விரும்பின அவர்களால் தேவர்கள் துன்பமடைந்ததாக, உலகங்களை ரக்ஷிக்கும் "நாராயணன்" அறிந்து "சக்கிரம்" முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பறவை வாஹனம் பெற்று தேவர்களை இரக்ஷிப்பதற்கு வந்தார்.

७ रक्षोभिस्सवरास्त्रकोऽप्यभिहतो वीतोऽभितोऽभीतिकः
वल्मीकादिव पन्नगैरसुहरैर्बाणैश्च्युतैश्शार्ङ्गतः ।
विद्राव्यारिबलं सुमालिनि रणाद्रथ्यैर्बहिः प्रापिते
भ्रान्तैर्मालिन आजहार महितश्चक्रेण शीर्षं यशः ॥ १४ ॥

"அந்த பகவான் உயர்வான அஸ்திரங்களைப் பெற்றும் இராக்ஷஸர்களால் நான்கு புறமும் சூழப்பெற்றும் அடிக்கப்பெற்றும் பயமற்று புற்றிலிருந்து பாம்புகள் வெளிவருவதுபோல் "சாரங்கம்" வில்லிலிருந்து வெளிவரும் பிராணனைப் பிடுங்கும் பாணங்களால் சத்துரு ஸைனியத்தை விரட்டி "சுமாலியை" இரதத்தின் குதிரைகள் பயந்து போரிடத்திற்கு வெளியில்கொண்டு போனதும் (தேவர்களால்) பூஜிக்கப்பெற்று "மாலியின்" தலையையும் புகழையும் "சக்கிராயுதத்தால்" அபஹரித்தார்."

८ विश्वत्रायकशक्तिभिन्नकवचो गारुत्मतात्पक्षजात्
उद्धूतः पवनाद्विवेशसभयो लङ्कां बलैर्माल्यवान् ।

आतातस्सतथाहरिस्वहरणंस्मृत्वारसायास्तलम्
निर्भीकस्सुखमावसद्विजनकांलङ्कांकुबेरस्तथा ॥ १५ ॥

"மால்யவான்" உலகத்தை இரக்ஷிக்கும் லக்ஷ்மீபதியின் "சக்தி" ஆயுதத்தால் பிளக்கப்பெற்ற கவசத்துடன் "கருடனுடைய" இறக்கைக் காற்றால் உயரத்தில் எரியப் பெற்றும் பயம் பெற்றும் ஸைனியங்களோடு "இலங்கையை" அடைந்தான். அவனுடைய ஸஹோதரனான "ஸுமாலியும்" அவ்விதமே தங்களைக் கொல்லும் "புருஷோத்தமனை" நினைத்து (புண்ணிய ஜனமென்ற தங்களின் ஜனங்களுக்கு இருப்பிடமான) "பாதாளத்தில்" பயமற்று சுகமாய் வஸித்தான். ஜனமற்ற இலங்கையில் குபேரனும் அவ்விதமே.

९ ह्रीणाऽधोवदनानिरस्तवचनाध्यानेक्षितैतद्धृदा
क्रूरेकालउपाऽऽगतेस्तवसुताःक्रूरास्स्युरन्त्योमहान् ।
इत्युक्तामुनिनाव्रतप्रणयिनापङ्क्त्याननंपापिनम्
कुंभश्रोत्रमसूतशूर्पणखयासाऽभीषणंसन्मतिम् ॥ १६ ॥

"கைகஸீ வெட்கம் பெற்று கீழ்நோக்கிய முகமும் மௌனமும் பெற்றிருப்பதைப் பார்த்து தியானத்தால் அவளின் மனதை அறிந்து "பிரதோஷ காலத்தில் நீ வந்ததால் உனக்கு துஷ்ட புத்திரர்கள் உண்டாகுவார்கள். கடைசியான புத்திரன் நன்னடைபெற்றிருப்பான்" என்று தவத்தில் அன்புபெற்ற "விச்ரவஸ்முனியால் சொல்லப்பெற்று பாபியான பத்துத் தலை" இராவணனை"யும் "கும்பகர்ணனை"யும் "சூர்ப்பணகையை"யும் நற்புத்தி பெற்ற "விபீஷணனை"யும் பெற்றாள்.

"ஹே லெக்ஷ்மணு! கோபம் தமோகுணத்திலிருந்து பிறந்தது பலம் பெற்றது. எல்லோர்களையும் அடைந்தது. ஸத்துவகுணத்தி லிருந்து பிறந்த அந்த பொறுமை உலகத்தில் சிலவிடத்தில் இருக் கிறது. நஹுஷராஜனுடைய புத்திரனும் இருவர்களில் கடைசி களத்திரத்தினிடம் ஆசைபெற்றவனும் "சர்மிஷ்டையின்" புருஷனுமான "யயாதியை" முதலில் மணந்த "தேவயானி" என்ற மனைவி "யது" என்ற புத்திரனோடுகூடி தனக்கு இஷ்டமும் தந்தையுமான "சுக்கிரனிடம்" புருஷனுடைய அப்பிரியத்தைக் கோபத்தால் தெரிவித்து பிறகு கிழத்தன்மையை அடைவித்தான்.

५९ दत्वास्वंयुवभावमीप्सिततमंप्राप्तायगर्ह्यांजरां
भुंजानश्चिरभोगजंसुखमतोनिर्विण्णएवाऽऽददत् ।
आत्मीयांप्रियपूरवेनृपपदंभूमेर्ययातिःपतिः
क्रूरत्वंयदवेवचोऽकलयतेसंदायसोऽयाद्वनम् ॥ ८७ ॥

மிகவும் விரும்பப்பெற்ற தன்னுடைய யௌவன பர்வத் தைக்கொடுத்து நிந்திக்கத் தகுந்த கிழத்தனத்தைப் பெற்றுக் கொண்ட பிரியம் பெற்ற "பூரு" என்ற புத்திரன் பொருட்டு, "யயாதி" அரசன் வெகுகாலம் போக சுகத்தை அனுபவித்து அதிலிருந்து ஒழிவு பெற்றே தன்னைச்சேர்ந்த முதுமையைப் பெற்று அரசனுடைய பதத்தையும் வார்த்தையை நடத்தாத "யது" என்ற புத்திரன் பொருட்டு துஷ்டத்தனத்தையும் கொடுத்து வனம் சென்றான்.

प्रक्षिप्तसर्गाः

१ धर्मेऽतिस्पृहयाल्लुतामनितरप्राप्तामधर्माकृतौ
बिभ्राणेसशरासनेमदवनेमत्तादनेस्वाऽऽसने ।
कार्यस्यार्थिनईप्सयाबहिरथाऽऽयातोऽनुजःप्राहतम्
तृप्तान्निर्व्यसनान्जनानापिशुनानप्यागतिंतांशुनः ॥८८॥

மற்றவர்களால் அடையப்பெறாத, தர்மத்திலும் அதர்மம் செய்யாமலிருப்பதிலும் ஆசையைப் பெற்றவனும் வில்லோடு கூடியவனும் என்னை இரக்ஷிப்பவனும் மதம் பெற்றவர்களை ஸம்ஹரிப்பவனுமான இராமன் தன் ஸிம்மாஸனத்தில் இருக்கும் பொழுது காரியம் விரும்புகிறவர்களை அடைய விருப்பத்தால் பிறகு வெளியில் வந்த தம்பியான "இலக்ஷ்மணன்" அண்ணனைப் பார்த்து ஜனங்களை ஸந்தோஷ மடைந்தவர்களும் துக்கமற்றவர்களும் பிறருடைய குற்றமறியாதவர்களுமாகவும் விரும்பியபடி (காரியத்தை விரும்பி) நாயின் வரவையும் கூறினான்.

२ रामस्तस्यगिरंनिरागसइदंसर्वार्थसिद्धोयतिः
दण्डेनव्रणमाचरात्शिरसिमेदण्डःप्रदेयोयदि ।
तस्माअर्पयकौलपत्यमचिरात्कौलंचरेऽभिष्टुतम्
देवस्वापहृतेरितीदृगसुखंकौलेयकस्याकरोत् ॥ ८९ ॥

"குற்றமற்ற என்னுடைய தலையில் "ஸர்வார்த்த ஸித்தன்" என்ற ஸன்யாஸிதண்டத்தால் இந்த விரணத்தைச் செய்தான். அவன் பொருட்டு சிக்ஷை கொடுக்கவேண்டுமென்றால் துதிக்கப் பெற்ற "கௌலஞ்சர" கிராமத்தில் கோவில் மணியத்தை சீக்கிரம் கொடுக்கவேண்டும். தெய்வத்தின் பொருளை அபஹரித்ததால் இவ்வித கஷ்டம்" என்று அந்த நாயின் சொல்லை இராமன் செய்தார்.

३ गृद्ध्रंप्राप्तमुलूकगेहमभयंमेऽगारमित्युक्तिकम्
जानन्तद्वचसाऽपराद्धमतिधीस्तंब्रह्मदत्तंनृपम् ।
भोज्येगौतमतापसार्यपलदंतत्शापदग्धंस्वतः
मुक्तंनिस्तनुवाक्यतोरघुपतिस्तेनैड्यतश्रीमता ॥ ९० ॥

கோட்டானுடைய கிருஹத்தை அடைந்து பயமில்லாமல் "என்னுடைய வீடு" என்று சொல்லும் கழுகை புத்திசாலியான இராமன்" அதனுடைய வார்த்தையால் ("எவ்வளவு காலமாய் உன்னுடைய கிருஹம் இருக்கிறது" என்ற வினவிற்கு பூமியில் மனிதர்கள் இருக்கும் காலம் என்று கழுகு கூறியது. பூமியில் மரங்கள் இருக்கும் காலம் என்று கோட்டான் கூறினதால் மரங்களுக்குப் பிறகு மனிதர்கள் பிறந்தார்கள், என்ற நியாயத்தால்) குற்றவாளியாகவும் அசரீரி வாக்கியத்தால்" கௌதம முனிவருக்கு போஜனத்தில் மாம்ஸம் கொடுத்தவனும் அந்த முனிவருடைய சாபத்தால் இவ்வுருவம் பெற்றவனும் தன்னிடமிருந்து முக்திபெற்றவனுமான "பிரமதத்தன்" என்ற அரசனாகவும் அறிந்து அவ்வரசனால் துதிக்கப்பெற்றார்.

६० सर्वेवांछितपृष्टिमेवपुरतःतत्संगरंपृष्ठतः
कुर्वन्तिप्रबलाविभीयविबलादप्यर्थिनामार्थितात् ।
रामत्वंनतथाकरोमिवइतिप्राप्तप्रतिज्ञोयतः
वन्यैस्सच्यवनैरमान्यवनिपोमान्यैर्महानित्यतः ॥ ९१ ॥

"பலம்பெற்ற எல்லோர்களும் பலமற்ற யாசகர்களின் விருப்பத்திலிருந்தும் பயந்துகொண்டு முன்னிலையில் முதல் செய்கிறார்கள். ஹே இராமா! நீ உங்களின் காரியத்தைச் செய்கிறேன் என்று பிரதிக்ஞை செய்ததால் அவ்விதம் இல்லை. அதனால் நீ உயர்ந்தவன்," என்று வனத்திலிருக்கும் "சியவனரோடு" கூடிய பூஜிக்கத் தகுந்த பெரியோர்களால் அந்த அரசன் பூஜிக்கப் பெற்றான்.

६१ वेदान्तैर्विदितोविभुस्सविजयीवाक्यादवैद्भार्गवात्
उद्वृत्तंलवणंमधोःपुरभिदंप्रीणय्यसत्कर्मभिः ।
शूलंक्कालमनीप्सितस्य विधृतंमृत्योर्नृणांमारणम्
प्राप्तस्याऽऽत्मजमापदांचजनकंवध्यंस्वतोऽन्याहतम् ॥

வேதாந்தங்களால் அறியப்பெற்ற வெற்றி பெற்ற பிரபுவான "இராமன்" "பிருகு" முனியின் வார்த்தையால் "சிவபெருமானை" நற்கர்மங்களால் ஸந்தோஷமடைவித்து (அவரிடமிருந்து)

சத்துருக்களுக்கு எமனையும் தரிக்கப்பெற்று மனிதர்களுக்கும் மிருத்யுவுக்கும் மரணமளிக்கிறதுமான சூலாயுதத்தைப் பெற்ற "மது" என்ற அசுரனுடைய புத்திரனும் துர்னடை பெற்றவனுமான லவணசுரனை துன்பங்களுக்குக் காரணமாகவும் தன்னுல் கொல்லத்தகுந்தவனுகவும் பிறரால் கொல்லப்பெருதவனுகவும் அறிந்தார்.

६२ रामोऽङ्गीकृततापसाभिमतकस्तद्वैरिणोमारणे
कैकेयीजनियोजकोमयिसातिप्रेष्येपुरातेवचः ।
कुर्वन्नार्हतिसश्रमंभरतइत्यावेदयत्यन्तिमे
तंशत्रोर्हरणंतदीयनगरीराजत्वआवेशयत् ॥ ९३ ॥

"இராமன்" ரிஷிகளின் சொல்லை அங்கீகரித்து அவர்களின் சத்துருவைக் கொல்லுவதில் "கைகேயியின்" புத்திரனை ஏவும்பொழுது "வேலைக்காரனை நான் இருக்கும்பொழுது முன் காலத்தில் உன்னுடைய வார்த்தையை நடத்திய அந்த பரதன் கஷ்டத்திற்குத் தகுந்தவன் இல்லை" என்று கடைசியில் பிறந்த "சத்துருக்னன்" தெரிவிக்கும்பொழுது அவனை சத்துரு ஸம்ஹாரம் செய்யும்படி சத்துருவின் பட்டணத்திற்கு அரசனுய் இருப்பதில் இருக்க வைத்தார்.

६३ राज्यस्वीकरणेऽथतन्निरसनेत्यक्ताऽऽदरंसोदरम्
ज्येष्ठस्स्वेष्टमुदारवृत्तमुदितोरामोऽङ्कमारोपयन् ।
अस्त्रंशत्रुहरंप्रदायविमतंत्यक्ताऽऽयुधंतंबहिः
यातंद्वारिनिरुद्ध्यजह्यतिबलंहन्येतनैवान्यथा ॥ ९४ ॥

பிறகு இராஜ்யத்தைப் பெறுவதிலும் அதைத் தள்ளுவதிலும் விருப்பமற்ற ஸஹோதரனும் தனக்கு இஷ்டமுமான சத்துருக்னனை பெருந்தன்மை பெற்றவர்களிடம் ஸந்தோஷம் பெற்ற அண்ணனுமான அந்த இராமன் மடியில் உட்கார வைத்து சத்துருவைக் கொல்லும் அஸ்திரத்தைக் கொடுத்து ஆயுதத்தைக் கைவிட்டவனும் வெளியில் சென்றவனும் அதிக பலமுள்ளவனுமான அந்த "லவணசுரனை வாசலில் தடுத்து அந்த அஸ்திரத்தால் கொல்லவேண்டும்" வேறு விதமாகக் கொல்லப் பெறமாட்டான்.

६४ सेनांनिर्गमयाऽऽहवायपुरतः पश्चाद्नालक्षितः
याहिप्राप्तशरासनोमधुवनंहन्येततेनेक्षितः ।
ग्रीष्मापायउपागमेजलमुचांतंत्यक्तयुद्धंजहि
प्रोक्तोमासविलंबितोनिरसरद्रामात्सशत्रोर्हरः ॥ ९५ ॥

"முன்னால் யுத்தத்தின் பொருட்டு ஸைனியத்தை பிரயாணம் செய்விக்கவேண்டும். பின்னால் காணப்பெறாமல் நீ வில்லை எடுத்துக்கொண்டு மதுவின் வனம் செல்லவேண்டும். அவனால் பார்க்கப் பெற்றவன் கொல்லப்பெறுவான். கோடை நாளின் கடைசியில் மேகங்கள் வரும் காலத்தில் யுத்தத்தை கைவிட்ட அந்த லவணாஸுரனை ஸம்ஹரிக்கவேண்டும்" என்று இராமனால் சொல்லப்பெற்ற "சத்துருக்னன்" ஒரு மாஸம் தாமஸம்செய்து அவரிடமிருந்து பிரயாணம் செய்தான்.

६५ अध्युष्याध्वनियामिनीद्वयमरेर्हन्तैत्यवल्मीकजम्
सौदासस्यततोविवेदयजनक्षोणींगुरोरूपिणा
शप्तस्याथनिशाचरेणजलमप्यात्तंचशप्तुंप्रति
क्षान्त्योत्सृज्यपुनस्स्वकीयपदयोःकल्माषपादस्यतम् ॥

"சத்துருக்னன்" வழியில் இரண்டு இரவுகளை வஸித்து "வால்மீகி" முனிவரை அடைந்து அவரிடமிருந்து, புலியின் உருவம்பெற்று மிருகங்களைக் கொல்லும் இருவர்களில் ஒருவனைக் கொன்றதால் கோபம்கொண்டு யாகத்தில் மாம்ஸம்வேண்டிய "குருவான வஸிஷ்டரின் உருவம்பெற்ற இராக்ஷஸனால் (மாம்ஸம் ஸாப்பிடுகிறவனாக) சபிக்கப்பெற்றவனும் திருப்பி சபிக்க எடுக்கப் பெற்ற ஜலத்தையும் பொறுமையால் மறுபடியும் தன்னுடைய கால்களில் விட்டு (காலில் கருப்புபெற்றதால்) கல்மாஷபாதன் என்று பெயர் பெற்ற "சுதாஸனுடைய" புத்திரனை ("வீரஸஹன்") என்ற அரசனுடைய அந்த யக்ஞ பூமியை அறிந்தான்.

६६ सीतायास्सुतयोः प्रसूतिमथतां विज्ञायरात्रौमुनेः
जातांजातकृतिंतथाकुशलवौनामावनंभूततः ।
शत्रुघ्नोमुदितस्ततोऽप्यपसृतस्सन्सप्तरात्रोषितः
यातोयामुनतीरगान्वनगृहान्तत्रव्यनैषीन्निशाम् ॥ ९७ ॥

பிறகு "சத்ருக்னன்" இரவில் ஸீதையின் இரண்டு புத்திரர்களின் பிறப்பையும் முனிவர் செய்த "ஜாதகர்மாவையும்" அப்படியே "குசலவாள்" என்று நாமகரணத்தையும் பூதங்களிடமிருந்து காப்பாற்று தலையும் அவரிடமிருந்து அறிந்து ஸந்தோஷமடைந்து அவ்விடமிருந்து பிரயாணம் செய்து ஏழு இரவுகள் வசித்துக்கொண்டு யமுனை தீரத்தில் இருக்கும் ரிஷிகளை அடைந்து அவ்விடத்தில் இரவைக் கழித்தான்.

६७ शूलस्यानलवर्चसोविलयदंवीर्यंरिपोर्वेदसः
ख्यातंनिर्जितदुर्मदश्च्यवनतो मान्धातुरुर्वीजितः ।
युद्धायाप्यमरेश्वरंगतवतस्तद्वाक्यतोवाग्यतम्
यातुर्दूतयुतस्यतंचलवणंभस्माऽऽकृतिप्रापणम् ॥ ९८ ॥

மதம்பெற்றவர்களை ஜயிக்கும் அந்த "சத்துருக்னன்" பூமியை ஜயித்து இந்திரனையும் யுத்தத்தின் பொருட்டு அடைந்தவனும் அவனுடைய சுவர்க்கத்தை ஜயிக்க வரும்பொழுது பூமியில் லவணனை ஜயிக்கவேண்டும் என்ற வார்த்தையால், மௌனம் பெற்றவனும் சாம்பலின் உருவத்தை அடைவிக்கிறவனுமான "லவணாசுரனை" யுத்தத்தின் பொருட்டு தூதனோடு கூட அடைந்த "மாந்தாதா" என்ற அரசனுக்கும் அழிவைக் கொடுத்ததும் அக்கினியின் ஒளியைப் பெற்றதுமான சத்துருவின் சூலாயுதத்தின் வலிமையை "ச்யவன முனியிடமிருந்து" அறிந்தான்.

६८ अन्येद्यूरिपुसूदनोमधुपुरीमेत्याथतद्द्वारगः
स्वाहाराऽऽहरणंविनाप्रहरणंकान्तारगोन्मारणं ।
दैवात्तत्सरणौकृतावतरणंभीतेरपेतोरणम्
सद्यःकर्तुमनीप्सितंचलवणंनिर्भर्त्स्यसोऽकोपयत् ॥ ९९ ॥

பிறகு மறுநாளில் "சத்துருக்னன்" மதுபுரம் சென்று அதன் வாயிலை அடைந்து தன்னுடைய உணவை ஸம்பாதிக்கவனும் ஆயுதமற்று காட்டில் இருப்பவைகளை வதைத்தவனும் தெய்வாதீனமாய் சத்துருக்னனுடைய வழியில் இறங்கி வந்தவனும் உடனே யுத்தம்செய்வதற்கு விருப்பமற்றவனுமான "லவணாசுரனை பயமற்று அதட்டி கோபமடைவித்தான்.

६९ दुष्टाद्याभिहतेत्त्वयिप्रतपसोनष्टातिशंकाइति
स्वर्गस्थैर्विनुतंनियुद्ध्यसुचिरंतन्मूर्छितोानिर्मतिं
हेतिंप्राप्तुमथाऽऽमिषाभ्यवहृतिंभूयस्ससंज्ञोारिपुं
विष्णवस्त्रेणविभिद्यवक्षसिचतत्शूलंपतिंप्रापयत् ॥ १०० ॥

"ஹே துஷ்டா! இப்பொழுது நீ அடிக்கப்பெற்றதும் அதிக தவம்பெற்ற முனிகள் அதிக பயத்தைவிட்டவர்கள்" என்று தேவர்கள் துதிக்கும்படி வெகுகாலம் யுத்தம்செய்து அவனுல் மூர்ச்சை அடைவிக்கப்பெற்றும், பிறகு ஆயுதத்தை அடைவதற்கு புத்தியற்றவனும் மாம்ஸத்தை ஸாப்பிடுகிறவனுமான சத்துருவை மறுபடியும் "சத்துருக்னன்" நினைவுபெற்று விஷ்ணுவின் அஸ்திரத்தால் மாரில் பிளந்து அவனுடைய சூலத்தை அதன் எஜமானனை அடைவித்தான்.

७० शत्रुघ्नोलवणासुरप्रहणनप्रीतैस्सुरैरर्थितः
वृण्वात्मेप्सितामित्यभिष्टुतगुणांकृत्वाऽतिरम्यांपुरीम् ।
तैःकालेसशुभेबलंचनिखिलंस्वावासयन्सौख्यगः
तत्रद्वादशवत्सरानधिवसन्व्यैचिक्षिषद्राघवम् ॥ १०१ ॥

லவணாஸுரனுடைய ஸம்ஹாரத்தால் ஸந்தோஷமடைந்த தேவர்களால் "உன்னுடைய விருப்பத்தை வேண்டிக்கொள்" என்று பிரார்த்திக்கப் பெற்ற "சத்துருக்னன்" துதிக்கப் பெற்ற நற்குணம் பெற்ற அதிக அழகிய நகரமாக (அவ்விடத்தை) அவர்களால் செய்வித்து நற்சமயத்தில் எல்லா ஸைனியங்களையும் சுகமாக அவ்விடத்தில் இருக்கச் செய்து பன்னிரண்டு வருஷம் தானும் வஸித்து இராமனைப் பார்ப்பதற்கு விரும்பினுன்.

७१ अध्वन्यप्यतनून्यहानिगमयन्नेत्याथवल्मीकजम्
शत्रुघ्नो विदितार्थकेनविनुतस्तेनश्रुतिप्रीणनम् ।
शृण्वन्गीतसगीतरामचरितंस्वान्वागतैर्विस्मितैः
प्रीतः प्राप्तपिपृच्छिषोनिगदितस्तत्राभवन्निर्मतः ॥

பிறகு "சத்துருக்னன்" வழியில் அநேக நாட்களைக் கழித்து "வால்மீகி"யை அடைந்து ஸமாசாரமறிந்த அவரால்

துதிக்கப்பெற்ற காதுகளுக்கு இனிமையான, கானத்தோடுகூட சொல்லப்பெற்ற இராமாயணத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்து ஆச்சர்யமடைந்த தன் பின் வந்தவர்களால் அவரை வினவ வேண்டுமென்ற விருப்பத்தை அடையும்படி சொல்லப்பெற்றும் அதில் ஸம்மதமற்று இருந்தான்.

७२ निर्निद्रस्सनिशीथिनींविगमयन्नन्येद्युरामन्त्रयन्
आवासंतपसांतमेत्यसचिवैरामंनतः प्रश्रितः ।
वृत्तंस्वस्यनिवेदयन्सुदयितोभ्रातुर्गिरात्त्रावसन्
सप्ताहानिकथंचिदापमधुरांत्यक्त्वाविलंबंपुरीम् ॥ १०३॥

அந்த "சத்துருக்னன்" தூக்கமற்று இரவைக் கழித்து மறுதினத்தில் தவத்திற்கு இருப்பிடமான வால்மீகி முனிவரிடம் சொல்லிக்கொண்டு மந்திரிகளோடு கூடிய இராமனை அடைந்து நமஸ்கரித்து வணக்கமாக தன் ஸமாசாரத்தைத் தெரிவித்து அண்ணனுக்கு அன்பனாயிருந்தும் அவருடைய வார்த்தையால் ஏழு நாள் வஸித்து சிரமம்பெற்று தாமதமில்லாமல் மதுரா நகரமான இருப்பிடம் வந்தான்.

७३ वृद्धोजानपदोद्विजोनृपगृहद्वारेशुचाप्रालपत्
बालंप्राप्ताचिराऽऽयुषंस्वतनयंप्राप्तापमृत्युंरुदन् ।
गृह्णन्दोषमरक्षितुर्नरपतेस्तद्धेतुमन्तःप्रभो
नोचेज्जीवयसांगनोऽहमनुतंयास्यामिहेत्युच्चकैः ॥१०४।

நாட்டுப்புறத்தில் வசிக்கும் கிழப்பிராமணன் தீர்க்காயுளைப் பெற்றும் அபமிருத்யுவை அடைந்த தன்னுடைய சிறிய புத்திரனை எடுத்துக்கொண்டும் அழுதுகொண்டும் அதற்குக் காரணமாக காப்பாற்றாத அரசனுடைய குற்றத்தை மனதில் நினைத்து "ஹே அரசே! (புத்திரனை) பிழைப்பிக்காமலிருந்தால் நான் மனைவியோடுகூட அவனைப் பின்பற்றி செல்லப்போகிறேன். அந்தோ!" என்று அரண்மனை வாயிலில் துக்கத்தால் உரக்கப் புலம்பினான்.

७४ तस्यप्रेमकरंविधिंससुमतिस्संचिन्तयन्भूपतिः
खेदापोहकनारदाभिहिततो वेदाऽऽशुमोदाऽऽस्पदम्।
विप्राऽऽदेःक्रमशोयुगेषुतपसश्श्रेयस्करींसंस्कृतिम्
तेनानर्हकृतेनतांसुविपदंतात्शिक्षणंरक्षणम् ॥ १०५ ॥

புத்திசாலிகளோடு கூடிய இராம ராஜன் அந்த பிராமண னுக்கு பிரியமளிக்கும் காரியத்தை ஆலோசித்து துக்கத்தை விலக்கும் நாரதருடைய வார்த்தையால் 'கிருதம் திரேதா துவா பரம் கலி' இந்தயுகங்களில் வரிசையாக பிராம்மணர் முதலியவர் களுக்கு (பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுக்கு)க்ஷேம மளிக்கும் தவத்தின் செய்கையையும் தகுதியற்றவன் செய்த தவத்தால் அக்குழந்தைக்கு மிகுந்த துன்பத்தையும் அந்த தவம் செய்தவனுடைய சிக்ஷையால் குழந்தையின் ரக்ஷை என்ற ஸந் தோஷத்திற்கு இருப்பிடமான ஸமாசாரத்தை சீக்கிரம் அறிந்தார்.

७५ गोप्तुंतस्यतनुंनियुज्यसहजौरामोगतःपुष्पकम्
वारुण्याःक्रमशोदिशस्साविचरन्नन्वेषिषुस्सर्वतः।
याम्यांशैवलसत्सरस्तटगतंदृष्ट्वाऽऽचरन्तंतपः
स्वप्राक्षीत्तमधोमुखंचिरभृतंभावंचजातिंमुदा ॥ १०६ ॥

அந்த பிராம்மணப் பையனுடைய சரீரத்தைக்காப்பாற்றுவ தற்கு ஸஹோதரர்களை உத்திரவுசெய்து இராமன் புஷ்பக விமா னத்தில் ஏறிக்கொண்டு மேற்கு திசையிலிருந்து வரிசையாக குற்றவாளியைத் தேட விரும்பி எல்லாவிடத்திலும் ஸஞ்சரித்து தெற்கு திசையில் "சைவலமலையின்" தடாகத்தின் கரையில் இருந்து தலைகீழாக தவம் செய்யும் குற்றவாளியைப்பார்த்து ஸந்தோஷமாய் வெகுகாலமாய் பெற்ற அபிப்பிராயத்தையும் ஜாதியையும் வினவினர்.

७६ शूद्रंशंबुकनामकंस्ववपुषास्वर्गेच्छकंतन्मुखात्
विज्ञायाथरघूत्तमस्तमसिनाकण्ठेऽप्यकर्ताद्विधा।

देवेभ्योवरदेभ्यइष्टमवृणोद्बालस्यसंजीवितम्
तैःकुंभोद्भवमेत्यसत्रकरणंभूषांततोऽप्यादात् ॥ १०७ ॥

இராமன் தவம் செய்பவனை அவனுடைய முகமாக "சம்புகன்" என்று பெயர்பெற்றவனும் தன் சரீரத்தோடு ஸ்வர்க்கத்தில் விருப்பம் பெற்றவனும் சூத்திரனும் ஆகவும் அறிந்து பிறகு கத்தியால் கழுத்தில் இரண்டாக அறுத்தார். வரம்கொடுக்கும் தேவர்களிடமிருந்து விரும்பிய சிறுவனுடைய உயிரைவேண்டினார். (வெகுகாலம் செய்யவேண்டிய) ஸத்திர யாகத்தைச்செய்த அகஸ்திய முனிவரை தேவர்களோடு அடைந்து அவரிடமிருந்து க்ஷத்திரியனுயினும் இந்திரனுடைய அம்சம் பெற்ற அரசனுயிருப்பதால் ஆபரணத்தையும் பெற்றார்.

७७ रामंभूषणलाब्धिसंविविदिषुंकुंभोद्भवःप्राब्रवीत्
कान्तारेविजनेचरन्वरतपावीक्ष्याऽऽश्रमंचाश्रमम् ।
तत्राविक्रियपुष्टगात्रकशवंतद्भक्षणंश्रीयुतम्
दिव्याऽऽकारभृतंविमानपुरुषंतेनाभ्यधायिष्यहम् ॥१०८॥

ஆபரணத்தின் லாபத்தை அறிய விரும்பும் இராமனைப் பார்த்து கும்பத்தில் உதித்த முனிவர் கூறினார். "நான் மனிதனற்றவனத்தில் மேலான தவம்பெற்று ஸஞ்சாரம்செய்து அவ்விடத்தில் சிரமத்தைத் தீர்க்கும் ஆசிரமத்தையும் அதில் விகாரமற்று பெருமன்பெற்ற உருவமடைந்த பிணத்தையும் அதை பக்ஷிக்கும் ஒளிபெற்றவனும் தேவ சரீரம் பெற்றவனுமான விமானத்தில் வீற்றிருக்கும் புருஷனையும் பார்த்து அவனால் சொல்லப் பெற்றேன்."

७८ वैदर्भस्यसुदेवजस्तनयजश्शासन्प्रजास्सुप्रजाः
ज्ञातस्वीयवयावनेवरतपःकृत्वाऽवनेसोदरम् ।
प्राप्तब्रह्मतएत्यसुक्षुधिततांश्वेतोऽप्यदत्तार्थकः
खादामिस्वतनुंगृहाणमादितिप्रादादगादास्पदम् ॥१०९॥

"வைதர்பனு"டைய பேரனும் "சுதேவனுடைய" புத்திரனுமான "சுவேதன்" என்ற நான் நல்ல பிரஜைகளைப்

பெற்று ஜனங்களை இரக்ஷித்து என்னுடைய ஆயுளை அறிந்து இராஜ்யத்தில் ("சுரதன்") என்ற தம்பியை வைத்து வனத்தில் தற்றவம்செய்து பிரம்மாவின் தன்மையைப் பெற்றும் பொருளை பிறருக்கு கொடுக்காததால் அதிக பசிபெற்று என்னுடைய உடலை சாப்பிடுகிறேன். என்னிடமிருந்து பெற்றுக்கொள்ள" வேண்டும் என்று இதைக் கொடுத்தான் இருப்பிடம் சென்றான்.

७९ निष्प्राणित्वमुदाजहारवनगंतस्याथशुश्रूषवे
भूमेःपालनमप्यघात्समवनंप्राप्तोमनोस्तत्सुतः ।
सत्कृत्यैश्शतमात्मजानधिगतोदुष्कृत्यगंत्वान्तिमं
दण्डंदण्ड्यमवन्ध्यविन्ध्यधरणिंस्वावासयत्स्वामतम् ॥

பிறகு வனத்தில் பிராணி இல்லாமலிருத்தலை அதைக் கேட்க விரும்பும் (இராமன் பொருட்டு அம்முனிவர் கூறினார். பாபத்திலிருந்து ரக்ஷிக்கும் அரசு புரிவதை மனுவிடமிருந்து அவனுடைய புத்திரன் (இக்ஷ்வாகு) பெற்று நற்கர்மங்களால் நூறு புத்திரர்களைப் பெற்று துஷ்கர்மங்களைச் செய்யும் தண்டிக்கத் தகுந்த கடைசியான "தண்டன்" என்ற தனக்கு விருப்பமற்ற புத்திரனை வீணற்ற "விந்திய" மலையின் பூமியில் வீற்றிருக்கச் செய்தான்.

८० त्याज्यःपूज्यतमस्यसोऽप्युशनसोविप्रोषितस्याऽऽलये
कन्यांतामजरांनिरीक्ष्यमदनक्लिष्टोऽर्थयन्सांजलि ।
संत्रस्तांपितुरप्यभीरभिमतंकृत्वाप्रगृह्णन्बलात्
प्रापस्वम्मधुमन्तमाशुनगरंसाऽऽसीत्प्रभूतासुखा ॥१११॥

(பெரியோர்களால்) தள்ளத்தகுந்த அந்த "தண்ட" அரசன் மிகவும் பூஜிக்கத் தகுந்தவரும் அயலூர் சென்றவருமான "சுக்கிர" பகவானுடைய கிருஹத்தில் தந்தையிடம் பயந்த "அஜரை" என்ற அவருடைய பெண்ணைப்பார்த்து மன்மதனால் துயரமடைந்து கும்பிட்டுக்கொண்டு பயமற்று பலமாக பிடித்து விருப்பத்தை வேண்டி அதைச் செய்து "மதுமந்தம்" என்ற தன் நகரத்திற்கு சீக்கிரம் சென்றான். அந்த "அஜரை" அதிக துக்கம்பெற்று இருந்தாள்.

८१ शुक्रोवक्रगाविक्रमःप्रतपसादण्डस्यतंचाक्रमम्
ज्ञात्वेष्टैस्सहसप्तरात्रकालितांभस्मीकृतिंभीकृतिम् ।
अन्येषांविषयाद्बहिःप्रगमनंपांसुप्रवृष्टिंतदा
पुत्र्यास्सत्तपसःकृतिंविरचयन्क्रुद्धस्ततोऽपागमत् ॥११२॥

வக்கிரமான நடைபெற்றவர்களிடம் மிகுந்த தவத்தால் விக்கிரமத்தை உபயோகிக்கும் (பலத்தை) "சுக்கிரபகவான்" "தண்டனுடைய" அக்கிரமத்தை அறிந்து கோபம்பெற்று அவனுக்கு ஏழு இரவுகளில் அன்பர்களோடு பயமளிக்கும் சாம்பலாயிருத்தலையும் தேசத்திலிருந்து மற்றவர்களை வெளியில் செல்லச் செய்வதையும் அவ்விடத்தில் மண் மழையையும் பெண்ணை நற்றவம் செய்வித்தலையும் செய்து அவ்விடமிருந்து அகன்றார்.

८२ शृण्वन्कुंभमुनेःकथाअघहरीस्सन्ध्यामुपास्यान्तिमाम्
रामोवन्दिततापसस्तदशनंप्राश्नन्सुधास्वादिम ।
रात्रिंतत्रसमापयन्परदिनेनिर्वर्त्यपौर्वाह्णिकम्
तंचाऽऽमन्त्र्यसपुष्पको निजपुरंप्रायादपायापहृत् ॥११३॥

துன்பங்களை விலக்கி வைக்கும் "இராமன்" கும்பமுனியிடமிருந்து பாபமகற்றும் நற்கதைகளை சிரவணம் செய்து பின் ஸந்தியை உபாஸித்து முனிகளை நமஸ்கரித்து அமிருதத்தைவிட ருசிகரமான அவருடைய உணவை உண்டு அவ்விடத்தில் இரவைக் கழித்து மறுதினத்தில் காலைக்கடனை முடித்து அவரிடமும் உத்திரவுபெற்று புஷ்பக விமானத்தோடு தன் நகரம் வந்தார்.

८३ रामस्सोदरसाऽऽदरोभवनपाल्स्यान्तिकंतौनयन्
राजन्यप्रियराजसूययजनेसंवेदयन्नीप्सितम् ।
श्रेयान्सर्वजनस्यतल्लयकरंतत्तेकथंस्यादिति
त्वत्तस्याविशयाऽऽशयोऽप्यभिहितंतस्याऽऽददात्प्रेमतः ॥

ஸஹோதரர்களிடத்தில் அன்புபெற்ற இராமன் வீடு காவல்காரனால் அவர்களை தன்னுடைய ஸமீபத்தை அடைவித்து

இராஜாக்களுக்கு பிரியமான இராஜசூய யாகத்தில் விருப்பத்தைத் தெரிவித்து, 'எல்லா ஜனங்களுக்கும் நண்பனே அவர்களுக்குத் துன்பமளிக்கும் அந்த வேள்வி உனக்கு எவ்விதம் செய்ய முடியும்? என்று பயந்த ஸஹோதரனை பரதனுடைய வார்த்தையையும் ஸந்தேஹ மற்ற மனம்பெற்றும் அன்பினால் அங்கீகரித்தார்.

८४ धर्माऽऽधायककर्मकाममवदीन्मर्माभिविल्लक्ष्मणः
प्राज्ञःपावनवाजिमेधहवनंतंकारयन्सत्वरम् ।
वृत्रेपुत्रवितीर्णराज्यभरणेवर्यंतपःकुर्वति
त्रस्तुश्श्रीपतिमार्थयत्सुरपतिर्लोकावनंस्वावनम् ॥ ११५ ॥

தர்மம் கொடுக்கும் கர்மத்தில் விருப்பம்பெற்ற அந்த இராமனைப் பார்த்து அவருடைய மர்மம் தெரிந்த புத்திசாலியான இலக்ஷ்மணன் பாபமகற்றும் அசுவமேத யாகத்தை சீக்கிரம் அவரைச் செய்யச் செய்பவனாய் கூறினான். விருத்திராசுரன் புத்திரனிடம் இராஜ்ய காரியத்தைக் கொடுத்து உயர்ந்த தவம் செய்யும்பொழுது இந்திரன் பயந்து உலகங்களை இரக்ஷிக்கும் லெக்ஷ்மீபதியை தன்னை ரக்ஷிக்கும்படி வேண்டினான்.

८५ भक्तस्याप्यवनस्सुराऽऽर्तिशमनस्त्रेधाविधायाऽऽत्मनः
रूपंभूमिसुरेन्द्रवज्रगमनैर्वृष्णेप्सितंकारयन् ।
प्रक्लेशात्प्रारिराक्षिषुस्तमचिरात्तद्ब्रह्महत्याकृतात्
तत्श्रेयस्करवाजिमेधयजनंदेवान्सआवेदयत् ॥ ११६ ॥

விருத்திராசுரன் பக்தனாயிருப்பதால் அவனைக் காப்பாற்றுகிறவனும் தேவர்களின் துக்கத்தை விலக்குகிறவனுமான (பகவான்) தன் உருவத்தை மூன்றுவிதமாகச் செய்து பூமி இந்திரன் வஜ்ரம் இவைகளில் சென்று விரும்பிய விருத்திராசுரவதத்தை இந்திரனால் செய்வித்து அந்த பிர்ம்மஹத்தி செய்த துன்பத்திலிருந்து அவனை சீக்கிரம் காப்பாற்ற விரும்பி அவனுக்கு க்ஷேமமளிக்கும் அசுவமேத யாகத்தை தேவர்களை அறிவித்தார்".

८६ लोकक्लेशमवृष्टिजातमतनुंक्षिप्रंविहन्तुंसुराः
स्वाराजंसमयाजयन्मखवरंसोऽमोचिसद्यस्ततः ।

स्थानप्रार्थनमप्यघंत्वगमयन्योषिन्नदीभूमृषान्
स्वस्थानंपतिमस्तदोषामितिसज्यायांसमाहानुजः ॥ ११७ ॥

அனுவிருஷ்டியால் (மழையில்லாமையால்) உண்டான மிகுந்த ஜனங்களின் துன்பத்தை தேவர்கள் சீக்கிரம் விலக்குவதற்கு இந்திரனை அசுவமேத வேள்வியை செய்வித்தார்கள் அவன் அதனால் பிரம்மஹத்தியிலிருந்து உடனே விடுதலைப்பெற்றான். இருப்பிடத்தை வேண்டும் அந்த பாபத்தை யௌனவப் பெண்களிடம் மூன்று இரவுகளிலும் நதிகளில் மழைகாலம் நாலுமாதங்களிலும், பூமியிலும், பொய்யர்களிடமும் எப்பொழுதும் அடைவித்தும் பாபமற்ற அரசனை சுவர்க்கத்திலும் இருக்கச் செய்தார்கள்" என்று தம்பி லெக்ஷ்மணன் அண்ணனிடம் கூறினான்.

८७ बाह्लीकेशइलोनृपस्सुमृगयाकामोवनेपर्यटन्
यत्रस्त्रीतनुरंबिकामरमयद्देवश्शिवस्तद्गतः ।
सैन्यैःप्राप्यवधूतनुंप्रभुममुंपुंस्त्वेच्छयाप्रीणयन्
तस्यादातुरुपास्यवामगतनुंप्रापेप्सितंतद्वचयम् ॥ ११८ ॥

"பாஹ்லீக தேசத்தின் அரசனான இவன்" வேட்டையில் விருப்பம் பெற்றுவனத்தில் ஸஞ்சரித்து சிவபெருமான் பெண்ணின் உருவம்பெற்று பார்வதியை ஸந்தோஷமடைவித்த இடத்தை ஸைனியங்களுடன் அடைந்து அவ்வுருவம் பெற்று புருஷத்தன்மையில் பிரியத்தால் அந்த பிரபுவை பிரீதி அடைவித்து விருப்பமளிக்காத அவருடைய் இடதுபாகத்தின் உருவமான அம்பிகையை ஆராதித்து விரும்பிய புருஷபாவத்தையும் அதன் விலக்குதலையும் மாதங்களில், கிரமமாக அடைந்தான்.

८८ कन्दर्पास्त्रामिलांसुसुन्दरतनुंविस्मृत्यपुंस्त्वंनिजं
कान्तारेविहृतौरतामुपसरोवीक्ष्याप्सरोदेवता ।
किंस्यादित्यतिचिन्तितोविधुसुतोविज्ञाततद्भावकः
प्रेष्याः किंपुरुषीर्व्यधाद्गिरिगृहाःपत्यागतिप्रेप्सिताः ॥

அழகிய சரீரம்பெற்று தன்னுடைய ஆடவத்தனத்தை மறந்து வனத்தில் விளையாடுவதில் ஆசைபெற்ற, மன்மதனுக்கு

அம்புபோன்ற "இலை" என்ற பெண்ணை சந்திரனுடைய மைந்தனை "புதன்" பார்த்து இவள் அப்ஸரப் பெண்களின் அரசியான தெய்வமா? என்று அதிக கவலைபெற்று அவளின் அவர்களின் (கணவனிடம் காதல்கொண்ட) மனமறிந்து வேலைக்காரிகளை மலையில் வீடுபெற்று புருஷர்களான கிம்புருஷர்களின் வரவில் விருப்பம்பெற்று வீற்றிருக்கச்செய்தான்.

८९ एकाकीत्रिबुधोबुधोऽप्युपसरन्तांसुन्दरीमिन्दिराम्
रूपेपद्मविनाकृतामरमयन्मासंक्षणंयापयन् ।
पुंस्त्वेसैनिकचिन्तकंसुवचनैरावासयन्नन्तिके
मासेसानवमेप्रसूयतनयंस्वप्रेयसाऽमोदत ॥ १२० ॥

புத்திசாலியான "புதன்" ஒருவனாக, அழகில் தாமரை புஷ்பத்தை நீக்கிய இலெக்ஷ்மியான அந்த "இலையை" ஸமீபத்தில் சென்று மாஸத்தை க்ஷணநேரமாகக் கழித்து புருஷனாய் இருக்கும்பொழுது ஸைனியங்களை நினைக்கும் அவளை நல்ல வார்த்தைகளால் ஸமீபத்தில் இருக்கச்செய்து ஸந்தோஷம் அடைவித்தான். அவள் ஒன்பதாவது மாதத்தில் (புரூரவஸ்) என்ற புத்திரனைப் பெற்று தன் கணவனோடு மகிழ்ந்தாள்.

९० संवर्ताऽऽदिमुनीन्निरंतरमदः पुंस्त्वंचिकीर्षुर्बुधः
प्रापय्यान्तिकमश्वमेधहवनंतत्कर्दमेनोदितम् ।
ईशंप्रीणयदीप्सितंकरगयत्तंप्रीतितोऽकारयत
सप्रामोदतसाऽऽत्मजोनृपइति प्रोवाचरामोऽनुजौ ॥१२१॥

"புதன்" "இலனுக்கு" புருஷத்தன்மையை நித்தியமாகச் செய்ய விரும்பி "ஸம்வர்தர்" முதலிய முனிகளை ஸமீபத்தில் அழைத்துவந்து "கர்தம பிரஜாபதியால்" கூறப்பெற்றதும் சிவபெருமானுக்கு ஸந்தோஷமளிப்பதும் விருப்பத்தை கையில் கிடைக்கச்செய்வதுமான அசுவமேத யாகத்தை ஸந்தோஷமாய் செய்வித்தான். அந்த இலன் என்ற அரசன் புத்திரனுடன் ஸந்தோஷித்தான் என்று இராமன் தம்பிகளைப்பார்த்து கூறினர்.

९१ रामोनिश्चितवान्विधातुमनघंतंवाजिमेधंमखं
प्रेयोभिस्सचिवैःप्रधीभिरथतत्संभारसंपादने ।

ऋत्विक्तापसधर्मचक्रमंठधरादेवेष्टभूवल्लभान्
आनेतुंकपिरक्षसांपरिवृढौ प्राचोदयद्भ्रातरौ ॥ १२२ ॥

இராமன் பாபமற்ற அசுவமேத யாகத்தைச் செய்வதற்கு புத்திசாலிகளும் அன்பர்களுமான மந்திரிகளோடு ஆலோசித்து பிறகு அதற்குறிய ஸாமக்ரிகளை ஸம்பாதிப்பதற்கும் யாகம்செய்விக்கும் ரிஷிகளையும் தர்மத்திலிருந்து தவராத நற்கர்மங்களை அனுஷ்டிக்கும் பிராமணர்களையும் நண்பர்களான அரசர்களையும் வானர மன்னனுன சுக்ரீவனையும் அரக்கர்களின் அரசனுன விபீஷணனையும் அழைத்துவரும்படி ஸஹோதரர்களான பரத லக்ஷ்மணர்களுக்கு உத்திரவுசெய்தார்.

९२ रामोलक्ष्मणरक्षितंक्रतुहयंपर्याटिटन्मेदिनीम्
दत्तोपायनभूमिपान्सभरतःप्रानर्चविप्रान्मुनीन् ।
सुग्रीवोऽपिविभीषणोऽनुगयुतश्चक्रुर्नदेवायथा
पुण्येनैमिशकाननेहयमखंस्तुत्यंतथाप्राचरत् ॥ १२३ ॥

இராமன் இலக்ஷ்மணனுல் காப்பாற்றப்பெற்ற யாக குதிரையை பூமியை பிரதக்ஷிணம் செய்வித்தார். பரதன் உயர்ந்த திரவியங்களை கொடுத்த அரசர்களையும் சுக்ரீவன் பிராம்மணர்களையும் விபீஷணன் ரிஷிகளையும் பின்செல்லுபவர்களுடன் கூடி பூஜை செய்தார்கள். தேவர்களும் இவ்விதம் செய்யவில்லை என்று துதிக்கும்படி புண்ணிய பூமியான நைமிசாரண்யத்தில் அசுவமேத யாகத்தைச் செய்தார்.

९३ वाल्मीकिर्यजनंगतःकुशलवौस्वप्रेयसावादिशत्
पाठ्याविंशतिसर्गकाइहदिनेब्रूतंचरामायणम् ।
साधूनांसदसिप्रभुर्यदिनुदेद्विस्मृत्यवित्तेषणां
मत्शिष्यत्वनिवेदनेन मधुरंयन्नावमान्यस्सनः ॥ १२४ ॥

வால்மீகி முனிவர் யாகசாலையை அடைந்து தன்னிடம் அதிக அன்புபெற்ற "குசலவர்களை"ப்பார்த்து இராமாயணத்தை இன்பமாக ஸாதுக்களின் ஸபையில் சொல்லவேண்டும் இதில்

இருபது ஸர்க்கங்கள் ஒரு நாளைக்கு படிக்கவேண்டும் என்னுடைய சிஷ்யன் என்று தெரிவிக்கவேண்டும். அரசன் (சொல்லும்படி) ஏவினால் பொருளாசையை மறந்து கூறவேண்டும். அவன் (எல்லோர்களுக்கும் தந்தையானதால்) நாம் அவமதிக்கக் கூடாது" என்று உத்திரவு செய்தார்.

९४ संगीतस्वचरित्रकौस्वसदृशौदृष्ट्वासयज्वानृपः
बालौदत्तमहाधनेऽप्यमनसौ प्रापय्यविद्वत्सभाम् ।
प्राज्ञस्तन्मुखतःकृतिंसुकृतिनोनिष्पीयपीयूषवत्
विज्ञायाऽऽगतिमीप्सितांस्वयजनेमेनेस्वसद्भाग्यताम् ॥

யாகம் செய்யும் அரசனும் புத்திசாலியுமான அந்த இராமன் தன்னுடைய சரித்திரம் கூறுகிறவர்களும் தனக்கு ஸமமானவர்களும் கொடுக்கப்பெற்ற மிகுந்த திரவியத்திலும் மனமற்றவர்களுமான சிறுவர்களை வித்வான்களின் ஸபையை அடைவித்து அவர்களின் முகமாக புண்ணியவானுடைய நூலை அமிருதத்தைப்போல் நன்றாக பானம் செய்து தன்னுடைய யாகத்தில் விரும்பப்பெற்ற அந்த முனிவருடைய வரவை அறிந்து தான் அதிக அதிருஷ்டம் பெற்றிருப்பதை நினைத்தார்.

९५ श्रुत्वावृत्तमशेषमप्यनुदिनंज्ञात्वाऽथरामस्सुतौ
सीतायाश्चकुशीलवौकृतिकृतोवाक्येनशुद्धिप्रदम् ।
कर्तुंसत्शपथंमनोऽभिलषितंप्रेयोजनान्वेदयन्
अन्येद्युस्तदुपैतुमाव्रजतभोरित्युत्ससर्जाऽऽश्रितान् ॥

இராமன் சரித்திரம் முழுவதையும் தினந்தோறும் கேட்டு பிறகு கானம் செய்பவர்களை ஸீதையின் புத்திரர்களாக அறிந்து நூல் இயற்றியவருடைய வார்த்தையால் சுத்தியைக் கொடுக்கும் நற்சபதம் செய்வதற்கு விருப்பம்பெற்ற அன்னவளின் மனமறிந்து நண்பர்களான அண்டின ஜனங்களிடம் தெரிவித்து அதை அறிவதற்கு மறுதினம் ஹே ஜனங்களே! வரவேண்டும்" என்று இருப்பிடம் அனுப்பினர்.

९६ रामंप्राप्तसदस्सदांहिमकरंभानामिवान्तास्स्थितम्
वाल्मीकिस्सहसीतयाविधिरिवश्रुत्याऽन्वितोऽभ्यागतः
प्राहप्रश्रितईड्यवृत्तदयिताराजन्नचेत्सद्वृता
नप्राप्स्यामिफलंकृतस्यतपसश्शुद्धिंप्रदास्यत्यसौ ॥ १२७ ॥

நக்ஷத்திரங்களின் நடுவில் இருக்கும் சந்திரனைப்போல் ஸபையோர்களை அடைந்த இராமனை வேதத்தால் பின்தொடரப் பெற்ற பிரம்மாபோல் ஸீதையால் பின்தொடரப்பெற்ற "வால்மீகி முனிவர்" நேரில் அடைந்து, துதிக்கத் தகுந்த நடைபெற்ற ஹே இராமராஜனே! மனைவி நன்னடை பெருமலிருந்தால் செய்த தவத்தின் பயனை நான் பெறப்போகிறதில்லை. அன்னவள் சுத்தியை வெளியிடப் போகிறாள்" என்று வணக்கமாய் கூறினார்.

९७ शुद्धांवेद्मिसुरोक्तिभिश्चदयितांतस्यांजनश्शंकते
नेयःप्रत्ययमार्यशीलसइतिश्रुत्वास्वपत्युर्वचः ।
स्याच्चेत्सच्चरितंददातुविवरंमेभूरितिप्रार्थिता
सीतासर्वनिरीक्षितासुषिरजांसिंहाऽऽसनंस्वध्यगात् ॥

நன்னடைபெற்ற ஹே முனிவரே! தேவர்களின் மொழிகளாலும் மனைவியை கற்புக்கு அரசியாக அறிகிறேன். அவளிடம் ஜனங்கள் ஸந்தேஹமடைகின்றன. அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்கவேண்டும்" என்று ஸீதை தன் புருஷனுடைய வார்த்தையைக் கேட்டு, நன்னடை இருந்தால் எனக்கு பூமிதேவி இடம் கொடுக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டும் எல்லோர்களால் பார்க்கப்பெற்றும் பூமியின் வெளியிலிருந்து வந்த ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தாள்.

९८ सीताऽन्तर्धिंकृतोविभित्सुमवनेःकोदण्डिनंकोपनम्
विष्णुत्वंचपुरातनंमृगदृशःप्राप्तिंध्रुवंभाविनीम् ।
उत्कर्षंस्वगुणौघजंमुनिकृतेर्निश्श्रेयसंतत्श्रुतेः
शेषंतत्रभविष्यदप्यथविधिःप्रावेद्यचाश्रावयत् ॥ १२९ ॥

ஸீதையை மறையச்செய்த பூமியைப் பிளக்க விரும்பும் கோபம் பெற்ற கோதண்டராமனைப் பார்த்து பிரம்மா முன் விஷ்ணுவாயிருத்தலையும் மனைவியின் லாபம் நிச்சயமாய்க் கிடைக்கப் போவதையும் வால்மீகி முனியின் நூலுக்கு தன் குணங்களின் கூட்டத்தால் உயர்வையும் அதைக்கேட்பதால் அளவற்ற க்ஷேமத்தையும் அதில் நடக்கப்போகிற சரித்திரம் மீதமிருப்பதையும் தெரிவித்து பிறகு அதையும் கேட்கச் செய்தார்.

९९ उद्विग्नस्सुदृशंविनासधृतिमान्श्रुत्वाऽवशिष्टांकथाम्
निर्वर्त्याध्वरमीप्सितान्चविसृजन्प्राप्तःपुरींकाञ्चनीं ।
सीतामेत्ययजन्चिरंबहुमखैर्लोकस्यकुर्वन्सुखम्
मातृभ्यस्त्रिदिवंप्रदायसुमतंरामश्शशासाक्षितिम् ॥ १३० ॥

தைர்யம் பெற்ற இராமன் மனைவி இல்லாமல் வருந்தி மீதமுள்ள கதையைக் கேட்டு யாகத்தை முடித்து நண்பர்களை இருப்பிடமனுப்பி நைமிசவனத்திலிருந்து அயோத்யா நகரம் வந்து ஸுவர்ண ஸீதா பிரதிமையைப்பெற்று அநேக யாகங்களைச்செய்து உலகத்திற்கு சுகத்தைக் கொடுத்துக்கொண்டும் அன்னைகளுக்கு விரும்பப்பெற்ற சுவர்க்கத்தை அளித்தும் வெகு காலம் பூமியை அரசுபுரிந்தார்.

१०० गन्धर्वैः प्रबलैस्त्रिकोटिगणितैस्संरक्षितंसद्गुणम्
देशंसिन्धुतटोपगंपरिततंगार्ग्याद्युधाजिद्गुरोः ।
तस्यानन्यविजेयतांरघुपतिर्जानन्विजेतुंचतान्
तक्षंपुष्कलमात्मजौभरतजौप्रास्थापयत्सानुगौ ॥ १३१ ॥

அதிக பலம்பெற்ற மூன்றுகோடி கணக்கிடப்பெற்ற கந்தர்வர்களால் ஸம்ரக்ஷிக்கப்பெற்றதும் நற்குணம் பெற்றதும் ஸிந்து நதியின் கரைகளின் ஸமீபத்தில் இருப்பதும் நான்குபுறமும் விஸ்தீர்ணம்பெற்றதுமான தேசத்தையும் அது மற்றவர்களால் ஜயிக்க முடியாமலிருப்பதையும் இராமன் "யுதாஜித்" அரசனுடைய குருவான "கார்க்ய" முனிவரிடமிருந்து அறிந்து அந்த கந்தர்வர்களை ஜயிப்பதற்கு "தக்ஷ" "புஷ்கல" என்ற பரதனிடம் பிறந்த புத்திரர்களை ஸைனியங்களுடன் பிராயாணம் செய்வித்தார்.

१०१ गन्धर्वैरपराभवैरतिरवैर्वीरोयुधाजिद्युतः
संवर्तेनससप्तरात्रगरणोहत्वानिमेषान्तरे
कालास्त्रेणनिबद्धचतान्पुरवरेनिर्मायतत्राऽऽत्मजौ
आवासय्यवसन्चपंचशरदोगत्वाऽऽर्यमावेदयत् ॥१३२॥

வீரனான "பரதன்" யுதாஜித்தோடுகூட தோல்வையற்றவர்களும் மிகுந்த சப்தம் பெற்றவர்களுமான கந்தர்வர்களோடு ஏழு இரவுகளில் யுத்தம்செய்து "ஸம்வர்தம்" என்ற எமனுடைய அஸ்திரத்தால் கட்டி அரை நிமிஷத்தில் ஸம்ஹரித்து உயர்ந்த தக்ஷசிலா புஷ்கலாவதம் என்ற இரண்டு நகரங்களை உண்டுபண்ணி அவைகளில் புத்திரர்களை வஸிக்கச்செய்து ஐந்து வருஷங்கள் தானும் வஸித்து அண்ணனை அடைந்து நடந்ததை தெரிவித்தான்.

१०२ रामःकारुपथेविधायविषयेपुर्यौसुवर्येगुणैः
पुत्रौलक्ष्मणजौनयेऽप्यातिमतीतौचन्द्रकेत्वंगदौ ।
विश्लेषासहनौतुसोदरवरावावास्यद्वत्सरम्
तद्दार्ढ्यायपुनस्तदानतपदस्सुप्रीतआसीच्चिरम् ॥ १३३ ॥

இராமன் "காருபத" தேசத்தில் நற்குணங்களால் மிகவும் மேலான இரண்டு நகரங்களை உண்டுபண்ணி அவைகளில் இலக்ஷ்மணனிடம் பிறந்த "அங்கத" சந்திரகேது என்ற நீதி சாஸ்திரத்தில் அதிக புத்திபெற்ற புத்திரர்களையும் அவர்களின் உதவியின்பொருட்டும் ஒரு வருஷம் பிரிவதற்கு மனமற்ற ஸஹோதரர்களான பரதலக்ஷ்மணர்களையும் வஸிக்கச்செய்து மறுபடியும் ஸஹோதரர்களால் திருவடிகளில் வணங்கப்பெற்று வெகுகாலம் ஸந்தோஷமாய் இருந்தார்.

१०३ आर्थिस्वर्द्रुम मन्महर्षिवचनंद्वंद्वंशृणुश्रीपते
दण्ड्येतेतरईक्षितेतिमुनिनाप्राप्तान्तिकेनोदितः ।
सौमित्रिंसतथेत्युदीर्यभवनद्वारिप्रतिष्ठाप्यतम्
स्थित्वाऽन्तश्चनिवेद्यतांमतमितिप्राचूचुदत्प्रेमतः ॥१३४॥

"யாசகர்களுக்கு கற்பகத்தருபோன்ற இராஜ்ய லக்ஷ்மீ பதியே மஹரிஷியின் உத்திரவை என்னிடமிருந்து ரஹஸ்யமாய் கேட்கவேண்டும். மற்றவர்கள் பார்த்தால் சிக்ஷிக்கவேண்டும்" என்று ஸமீபத்தில் வந்த முனியால் சொல்லப்பெற்ற அந்த இராமன் "அப்படியே" என்று சொல்லி இலக்ஷ்மணனை அரண்மனை யின் வாயிலில் நிற்கவைத்து உள்ளே இருந்து "இஷ்ட"த்தைத் தெரிவிக்கவேண்டும்" என்று முனிவரை அன்பால் ஏவினார்.

१०४ राजन्विश्वसृजोवचश्शृणुहितंविश्वावनस्त्वंपुरा
पुत्रस्तेसइवाहमप्यखिलहादुर्वृत्तकान्दूरतः ।
कर्तुंमानुषजन्मनःकृतकृतेःकालोमहानत्यगात्
स्वंदेवान्चविलोकयेत्यभिहितस्तेनाङ्गचकार्षीत्सतत् ॥

"ஹே அரசே! நன்மை கொடுக்கும், உலகங்களைப் படைத்த பிரம்மாவின் வார்த்தையைக் கேட்கவேண்டும். நீ முற் பிறப்பில் உலகங்களைக் காப்பாற்றும் நாராயணன் அந்த பிரம்ம தேவன்போல் நானும் உன்னுடைய புத்திரன் எல்லோர்களையும் ஸம்ஹரிக்கும் ஸ்ரீருத்திரன் துர்நடை பெற்றவர்களை தூரத்தில் விலக்குவதற்காக மனிதப் பிறவியை அடைந்து (நினைத்த) காரியத்தை முடித்த உனக்கு வெகுகாலம் சென்றது. தேவர்களுக்கு உன்னுடைய தர்சனம் கொடுக்கவேண்டும் என்று ஸ்ரீருத்திர தேவனால் சொல்லப்பெற்ற அந்த இராமன் அதை ஒப்புக் கொண்டார்.

१०५ प्राप्तंवर्षसहस्रतोवरतपोरामायमामागतम्
ब्रूहिप्रक्षुधितंनचेत्सकुलजंधक्ष्यामिशापादिति ।
क्रुद्धंसोदरमुक्तमान्तिकगतंदुर्वाससंसेप्सितं
कृत्वानिर्वृतिमत्यवस्तुषुमहानासीदथाधोमुखः ॥ १३६ ॥

"ஆயிரம் வருஷங்களால் நற்றவம்பெற்று மிகுந்த பசியுடன் நான் வந்திருப்பதை இராமன் பொருட்டுக் கூறவேண்டும் இல்லாவிட்டால் குலத்தில் பிறந்தவர்களுடன் (உன்னை) சாபத்தால் பொசுக்கப் போகிறேன்" என்று கோபமடைந்தவரும் தம்பியால் விடப்பெற்று (தன்னுடைய) ஸமீபத்தில் வந்தவருமான "துர்

வாஸமுனிவரை" விருப்பமடைவித்துப் பொருள்களில் ஒழிவு பெற்று பிறகு அந்த பெரியார் கீழ்நோக்கிய முகமாக இருந்தார்.

१०६ सत्यंरक्षजगत्पतेसुखकरंजह्यार्यमांतेवशम्
श्रुत्वाभ्रातुरितीरितंसुवचनंनिश्चित्यसन्मान्त्रिभिः ।
त्यागंतस्यमहावधप्रतिनिधिंकर्तुंतदैच्छत्प्रभुः
सौमित्रिस्सरयूंविगाह्यसतनुश्शक्रार्चितोऽगात्पदम् ॥

"உலகங்களை இரக்ஷிக்கும் ஹே அரசே! சுகம்கொடுக்கும் ஸத்தியத்தைக் காப்பாற்றவேண்டும். ஹே அண்ணா உனக்கு வசமான என்னை ஸம்ஹரிக்கவேண்டும்" என்று சொல்லப்பெற்ற ஸஹோதரனுடைய வார்த்தையை அரசன் கேட்டு அவனுடைய அகற்றுதலை பெரிய வதத்திற்கு ஸமமாக நன்மந்திரிகளுடன் நிச்சயித்து அதை செய்வதற்கு விரும்பினார் "இலக்ஷ்மணன்" சரயூ நதியில் பிரவேசித்து இந்திரனால் பூஜிக்கப்பெற்று உருவத்துடன் இருப்பிடமடைந்தான்.

१०७ सीतालक्ष्मणचिन्तनोवनगतिंस्वस्याथसंश्रावयन्
पौराणांभरतस्यचानुगमनेप्रीतिंविजानन्पराम् ।
कातर्यंस्वावियोजने श्रितरतश्श्रीशोऽनुमन्याथताम्
पुत्रौकोसलउत्तरेनृपतयन्शत्रुघ्नमप्याह्वयत् ॥ १३८ ॥

பிறகு அண்டினவர்களிடத்தில் அன்புபெற்ற இலக்ஷ்மீ நாராயணன் ஸீதை இலக்ஷ்மணன் இவர்களை நினைத்துக்கொண்டு தன்னுடைய வன யாத்திரையை பட்டணத்தின் ஜனங்களுக்கும் பரதனுக்கும் தெரிவித்து தன்னுடன் பின்செல்லுவதில் அவர்களின் அதிக அன்பையும் தன்னுடைய பிரிவில் பயத்தையும் அறிந்து அந்த பின் செல்லுவதை ஸம்மதித்து கோஸலம் உத்தரகோஸலம் இந்த தேசங்களில் புத்திரர்களான செல்வர்களை அரசனாக்கி சத்துருக்னனையும் கூப்பிட்டார்.

१०८ तस्यभ्रातुरुदीक्ष्यकप्यधिपतेरात्मानुयानेमहत्
रामःप्रेमसुताङ्गदार्पितजनत्राणस्यसोऽमोदत ।

राज्यंपालयरक्षसेत्यभिदधौयावन्मदीयाकथा
तिष्ठात्रेतिचवायुजंविधिसुतंमैन्दौचयावत्कलिः ॥ १३९ ॥

(ஸுபாஹு சத்துருகாதி என்ற) புத்திரர்களிடத்தில் ஜனங்களின் காப்பாற்றுதலை ஒப்பிவித்த அந்த ஸஹோதரனை "சத்துருக்னன்" அங்கதனிடம் அதை ஒப்பிவித்த வானர வேந்தனை "சுக்ரீவன்" இவர்களின் தன்னுடன் பின் வருவதில் அதிக ஆசையை இராமன் அறிந்து ஸந்தோஷமடைந்தார். இராக்ஷஸனை "ஹே விபீஷண!" என்னுடைய கதை பூமியில் இருக்கும்வரை இராஜியத்தை இரக்ஷிக்கவேண்டும்" என்றும் அவ்வளவு வரை "பூமியில் இருக்கவேண்டும்" என்று ஹனுமானுக்கும் பிரம்மாவின் புத்திரனை "ஜாம்பவானையும் "மைந்தன்"" த்விவிதன் "இவர்களைப் பார்த்து" கலி "வரும் வரை பூமியில் இருக்கவேண்டும்" என்றும் கூறினர்.

१०९ काकुत्स्थंसुरलोककामनमथस्वाऽऽवासतोनिर्गतम्
प्रस्थानेविहितांविधायगुरुणातन्मानसाअन्वयुः ।
अस्त्राऽऽदीश्वरदेवतावसुमतीलक्ष्मीस्त्रयोवह्नयः
पौरास्स्थावरजंगमाभयकरीसाकेतभूस्स्याद्यथा ॥ १४० ॥

இராமன் சுவர்கலோகத்தில் விருப்பம்பெற்று பிரயாணத்தில் விதிக்கப்பெற்ற விதியை குருவினல் செய்து பிறகு தன்னுடைய இருப்பிடமிருந்து பிரயாணம்செய்ததும் அவரிடம் மனம் பெற்று அஸ்திரம் முதலியவைகளின் அதிஷ்டான தேவதைகளும் பூதேவியும் ஸ்ரீதேவியும் (கார்ஹபத்யம் ஆஹவநீயம் தக்ஷிணம்) இம்மூன்று அக்கினிகளும் பட்டணத்தில் இருக்கும் அசையும் அசையாப்பொருள்களும், அயோத்தியா பூமியும் பயங்கரமாய் இருக்கும்படி பின் சென்றன.

११० अध्यर्धंगतवान्सयोजनमथप्राप्तोऽतिपुण्योदकाम्
श्रीरामस्सरयूंविमानशतगैर्देवैर्विरिंचंवृतम् ।
सन्तानंनयलोकमप्यनुगतानित्यावदन्तज्जल
क्लिन्नोवैष्णवतेजएत्यनितरांतेजोमयोऽभासत ॥ १४१ ॥

பிறகு இராமன் ஒன்றரை யோஜனை தூரம்சென்று மிகவும் புண்ணிய தீர்த்தம்பெற்ற ஸரயூநதியை அடைந்து அநேக விமானங்களை அடைந்த தேவர்களால் சூழப்பெற்ற பிரம்மதேவனைப் பார்த்து என் பின் வந்தவர்களுக்கு ஸந்தானமென்ற உலகத்தை அளிக்கவேண்டும்" என்று உத்திரவுசெய்து ஸரயூ தீர்த்தத்தால் நனைந்து விஷ்ணு தேஜஸ்ஸை அடைந்து மிகவும் ஒளியின் உருவமாய் விளங்கினார்.

१११ वृद्धिंसाऋषभेप्रयास्यतिमुदाभूपेत्वयोध्येतितत्
वाल्मीकिस्सभविष्यदुत्तरयुतंरामायणंश्रृण्वताम् ।
गायत्र्यक्षरमिष्टदेष्वतिगुणंश्रेयश्चिकीर्षुर्ददौ
मर्त्येभ्यःकृपयाततोधरणिगास्स्वस्थान्सुखेनात्यगुः ॥

"ருஷபன்" என்ற அரசன் ஸந்தோஷமாய் பூமியை இரக்ஷிக்கும்பொழுது அந்த அயோத்தியாபுரியும் விருத்தியை அடையப்போகிறது என்று கேட்பவர்களுக்கு விருப்பமளிப்பவைகளில் மேலானதும் காயத்ரீயின் அக்ஷரங்களோடு கூடியதுமான இராமாயணத்தை இராமாபிஷேகத்துக்குபின் சரித்திரம் உத்தரம் ஸீதையின் பூமிபிரவேசம் முதலியது பவிஷ்யத் இவைகளோடு கூடியிருக்கும்படி (இயற்றி) தயவால் மனிதர்களின்பொருட்டு நன்மைசெய்ய விரும்பி வால்மீகி முனிவர் கொடுத்தார். அதனால் பூமியில் இருப்பவர்கள் சுவர்க்கத்தில் இருப்பவர்களையும் சுகத்தால் அதிக்கிரமித்தார்கள்.

प्राप्तोऽप्यास्पदमात्मनःप्रियतमंलक्ष्मीपतिःप्रेयसाम्
सन्तत्याधरणिस्थितान्प्रियजनानालोकनैकार्थिनः ।
विश्लेषासहनान्विमोक्तुममना आनन्दनेज्याऽऽकृतिः
कर्तुंमङ्गलमिष्टदारसहजैर्भूमिंप्रपेदेपुनः ॥ ॥ १४३ ॥

ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன் தன்னுடைய நண்பர்களோடு மிகவும் பிரியமான வைகுண்டத்தை அடைந்தும் பூமியில் இருக்கிறவர்களும் தன்னுடைய திவ்விய தர்சனத்தை முக்கியமாய் விரும்புகிறவர்களும் வியோகத்தைப் பொறுக்காதவர்களுமான பக்த ஜனங்களை கைவிட மனமில்லாமல் ஆனந்தமளிக்கும்படி

துதிக்கத்தகுந்த ஸ்ரீ ராம திவ்ய மங்கள விக்கிரஹத்தை தரித்துக்கொண்டு மனைவி ஸஹோதரர்கள் இஷ்டமித்திரர்கள் இவர்களோடு க்ஷேமத்தைச் செய்வதற்கு மறுபடியும் பூமியை அடைந்தார்.

சுபமஸ்து



फलश्रुतिः

श्रेयस्कारकसत्कृतेरपिकृतेःप्रत्यूहदेपापदे
कालेदुष्कालिनाऽवितेदुरितकृत्सौख्यप्रदेदुर्जये ।
चिन्तामास्तुभवाब्धिसंतरणजारामायणेसुन्दर
सौख्यंसान्तिममातनोत्यसुभृतांकाण्डोत्तरस्यश्रुतिः ॥

நன்மைகொடுக்கும் நற்கர்மாவின் செய்கைக்கு இடையூரைக் கொடுக்கிறதும் பாபத்தை அளிக்கிறதும் துஷ்டகலியால் இரக்ஷிக்கப்பெற்றதும் ஜயிக்கமுடியாததும் பாபம் செய்கிறவர்களுக்கு சுகமளிக்கிறதுமான இக்காலத்தில் ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவதில் கவலைவேண்டாம். சுந்தரராமாயணத்தில் உத்தரகாண்டத்தின் சிரவணம் பிராணிகளுக்கு கடைசி சுகத்தோடு கூடிய சுகத்தை கொடுக்கிறது.

प्रासूतजानकीयंसासुब्रह्मण्यकुटुम्बिनी ।
तत्कृतेरामचारितेकाण्डमुत्तरमीरितम् ॥ १४५ ॥

சுப்பிரமணியனுடைய மனைவி ஜானகி ஈன்ற சுந்தரம் இயற்றிய சுந்தரராமாயணத்தில் உத்தரகாண்டம் கூறப்பெற்றது.

உத்தரகாண்டம் முற்றிற்று.

कौशिककुलमणिदीपो द्विजआसीद्वेङ्कटेशइतिधीमान्कविवंशः।
गङ्गास्नानपवित्रः क्षीरफलाश्युत्सृजन्नशनमुक्तिम् ॥

கெங்கா ஸ்னானத்தால் பரிசுத்தமாயும் போஜனத்தைத் துறந்து பாலும் பழமுமுண்டவரும் கௌசிக குலத்திற்கு இரத்தின தீபம் போன்றவரும் புத்திசாலியுமான "வெங்கடேசுவரன் என்ற பிராம்மணோத்தமர் இருந்தார்.

तत्सुतयोर्यो ज्येष्ठश्श्रेष्ठगुणोपास्यराजगोपालः
पुत्रींपुत्रौलब्ध्वावान्तंमेनेपुनर्गृहिण्याप्तिम् ॥ २ ॥

பெண்ணையும் இரண்டு புந்திரர்களையும் பெற்று மறுபடியும் மனைவியை கக்கின பொருளைப்போல் நினைத்து மறு மணத்தைத் துறந்தவரும் அவருடைய புத்திரர்களில் மூத்தவரும் நற்குணம் பெற்றவர்களால் புகழத் தகுந்தவருமான "இராஜகோபாலன்" என்றவர் இருந்தார்.

सून्वोस्तस्यकनीयान्सुब्रह्मण्योधनेविरक्तमनाः ।
धनैर्निर्जितधनपालावैश्याआर्चन्नभिमतासिद्ध्यैयम् ॥ ३ ॥

அவருடைய புத்திரர்களில் இளையவரும் பொருளில் பற்றுதலற்ற மனம் பெற்றவரும் பொருளால் குபேரனையும் தோல்வி அடைவித்த தனவைசியர்களால் விருப்பமடைவதின் பொருட்டு பூஜிக்கப்பெற்றவருமான "சுப்பிரமணியன்" என்பவர் இருந்தார்.

श्रीवत्सगोत्रजातातत्पत्नी जानकी सतीवसती ।
व्याकृतिभाष्यव्याख्या कृद्वंश्यसुमातिसत्कन्या ॥ ४ ॥

வியாகரண மஹாபாஷ்யத்தின் உரை ஆசிரியரின் குலத்தில் பிறந்த புத்திசாலியின் புதல்வியும் ஸ்ரீவத்ஸகோத்திரத்தில் பிறந்தவளும் பார்வதிதேவி போல் பதிவிரதையுமான "ஜானகி" என்ற அவருடைய மனைவி இருந்தாள்.

गावःपिबन्तिसलिलंतृषिता यद्गृहसविधगता।नित्यम् ।
तत्पुत्रयोरवरजस्सुन्दरएतामकुरुतगुरुकृपया ॥ ५ ॥

பசுக்கள் தாஹத்துடன் தினந்தோரும் வீட்டின் வாசலில் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும்படி செய்தவனும் அந்த தம்பதிகளின் புத்திரர்களில் இளையவனுமான "சுந்தரம்" என்பவன் ஸத்குருவின் கருணையால் இதை இயற்றினன்.

சுபமஸ்து நித்தியம்,

Printed at The Sri Janardana Printing Works, Limited,
Town High School Road, Kumbakonam.

Registered No. M.

விளம்பரம்.

ஐயா,

இரண்டு, மூன்று வருஷங்களாக வால்மீகி ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து அதன் பாயிண்ட்களை சுருக்கி சுலோகம் இயற்றி அதற்கு மொழிபெயர்ப்பும் போட்டு மிகுந்த திரவியச் செலவால் அச்சிட்டிருப்பதால், ஆஸ்திகர்கள் அனைவரும் இதை ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வருஷ சந்தா ரூ. 3—0—0.
சஞ்சிகை 1 விலை 0—4—0.

வெளியூர் நண்பர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு $4\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

S. SUNDARESA SASTRIGAL,
Nemathanpatti,
(Via) Chettinad.

Printed by S. Kalyanasundaram, at The Sri Janardana Printing Works, Ltd
Town High School Road, Kumbakonam and
Published by S. Sundaresa Sastrigal, Nemathanpatti.
25—8—38.

Cudg
25183